வெளியீடு—23—10—1972]
Issued—23—10—1972]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை 1972 ஆகஸ்ட் 17**

**Thursday 17th August 1972**

**தொகுதி XXIV—எண் 1**

**Volume XXIV—No. 1**

©
*தமிழ் நாடு அரசு*
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

*சட்டப் பேரவைத் துறை*
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

D /
Y211,31 N72
31N72-2432

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம் இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி; ஆட்சி மொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், சிறை, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள்

61572



விடுதிகள், அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, [illegible] வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத்தொழில்கள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணிகள், பெரும்பாசனத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முஸ்லிம் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மைத் துறையின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் [illegible].

14. மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: [illegible] முன்னாள் இராணுவ அறக் கட்டளைகள், [illegible] வீரர்கள், [illegible].

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

### THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, News-prints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)—in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)—in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)—in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. எ. மதியழகன், பி.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. என். கணபதி.
திரு. என். [illegible]
திரு. [illegible]
திரு. கே. எ. [illegible]
திரு. நா. [illegible]
திருமதி த. ந. அனந்தநாயகி.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. [illegible], எம்.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. மா. [illegible], பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. [illegible], பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. க. [illegible] (பட்ஜெட் அதிகாரி).
திரு. கோ. [illegible].
திரு. வி. [illegible], பி.ஏ.
திரு. பெ. [illegible], பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராஜன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை... .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமை கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்.) | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 19 இராசகோபால்,[1] திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-11. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ.வ.). |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ.வ.). |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார் கோவில். |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 98 சீனிவாசன், திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. .. .. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. .. | ஹளூர் (செ. வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. .. | சத்யமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. ஏ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. ஏ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. ஏ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வி. .. .. | ஓமலூர் (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. கு. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. பி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், திரு. அ. பெ. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக்கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்றம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எம். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. ப. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மெ. கி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. .. | கனியம்பாடி. |
| 147 நடராசன், திரு ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. ஏ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. — .. | கரூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்.) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர், ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு மு.. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. பி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே.எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. தி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னாகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல், (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்.. |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வாலூர். (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திருவாடானை. |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல். திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம். (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தொடர் எண்ணும் பெயரும்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) நீத்தார் நினைவுக் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் திரு. எச். எஸ். டவுன் அவர்கள் மறைவு குறித்து

MR. DEPUTY SPEAKER: It is my painful duty to inform the House of the demise of Thiru H. S. Town on 23rd June 1972 in the United Kingdom. He was a former Member of the Legislative Assembly of the then Composite State of Madras from 1939 to 1947 representing Eurepean Commerce, the Madras Chamber of Commerce and the Madras Trades Association.

On behalf of the House, I will convey the condolences to the members of the bereaved family.

I request Hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed soul.

The Members stood in silence for a minute.

## (2) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 116 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நெல்லித்துறை குடிநீர் திட்டத்திற்கு உலக வங்கியிடம் அரசு ஏதேனும் நிதி உதவி கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், உலக வங்கி பணம் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதா?

[1972 ஆகஸ்ட் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) கோயம்புத்தூர், சிங்காநல்லூர், உட்பட 13 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க வகை செய்வதற்கான நெல்லித்துறை நீர்வழங்கு திட்டத்திற்காக உலக வங்கிக் குழுவினருடன் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு நீர்வழங்கு—கழிவுநீர் அகற்று வாரியம் திட்டத்தைக் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்ப வேண்டுமென்று உலக வங்கிக் குழு கோரியது. நீர்பகிர்வு முறையின் போதுமானம், திட்டத்திற்கான நிதியுதவி, திட்டத்தின் பொருளாதார ஊற்றம் போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளைப் பற்றிய விவரங்களை உலக வங்கிக் குழு கேட்டது. உலக வங்கிக் குழுவினரால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் திட்டத்தை வகுத்த பிறகு, இந்திய அரசின் மூலமாக இத்திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(இ) இது குறித்து திட்டவட்டமான பொறுப்பு எதையும் உலக வங்கித் குழுவினர் மேற்கொள்ளவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்து 1972-ம் ஆண்டுக்குள்ளாக ஒரு முடிவுக்கு வந்து, கோயம்புத்தூர், சிங்காநல்லூர், பல்லடம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்காகத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தந்தப் பேரூராட்சி மன்றங்கள் நிதி திரட்டிக்கொடுக்கின்ற சக்தி எவ்வளவு படைத்திருக்கின்றன என்பதையெல்லாம் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுகுறித்து உலக வங்கியினிடமும் தொடர்பு கொண்டிருக்கிறோம். உலக வங்கி இதற்கான சரியான பதிலையோ அல்லது திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அளவிலோ கூறிவிடுமானால், பிறகு எல்.ஐ.சி. மூலம் கடன் பெற நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

* 117 விஞ—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி குடிநீர்த்திட்டத்திற்கு வேண்டிய மின்சாரப் பம்புசெட்டு எந்த கம்பெனியில் வாங்கப்பட்டது?

(இ) அதற்கு உத்திரவாதம் ஏதும் அளிக்கப்பட்டிருக்கிறதா?



1972 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வந்தவாசி குடிநீர் வழங்கு திட்டத்திற்கான மின்சார விசையேற்றங்கள், சென்னை-1-ல் உள்ள, ஈசன் எஞ்சினீயரிங் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டன.

(இ) அந்த இயந்திரங்கள் இயங்கத் தொடங்கிய நாள் தொடங்கி, அதாவது 1970-ஜனவரியிலிருந்து ஓராண்டுக் காலத்தில் இயந்திரம் செயல்படுவதில் குறைபாடு எதுவும் நேர்ந்தால் நேர் செய்து தருவதாக அந்தக் கம்பெனியால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : உதவித் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்று எப்பொழுதும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கிறது. அந்தக் கம்பெனிக்காரர்கள் வந்து ரிபேர் செய்துகூட, சரியான நிலைக்கு வரவில்லை. ஆகவே, பழுதடைந்திருக்கும் ஒரு இயந்திரத்தை மீண்டும் மாற்றியமைத்துக் கொடுக்கும்படி அரசு அவர்களைக் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பழுது பார்க்கப்பட்ட இரண்டாவது பம்ப் செட்டு கம்பெனியாரால் பழுதுபார்க்கப்பட்ட பிறகு, அது சீர்கேடு எதுவும் இல்லாமல் நடந்துகொண்டிருப்பதாகத் தான் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மறுபடியும் சீர்கேடாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களானால், அதுபற்றி உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

* 118 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்தப் பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மணப்பாறைக்கு காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் இருந்ததே, அதில் எந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1972 ஆகஸ்ட் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவிரியிலிருந்தும், பொன்னியாற்றிலிருந்தும், தேக்குமலையாற்றிலிருந்தும், ஆக இப்படி மூன்று இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவர 88 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், அது அதிகப்படியான செலவு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொன்னியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர 78 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், ஆனால், அப்படிக் கொண்டுவருவதன்மூலம் ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மணப்பாறைக்கு 23 மைல் அருகாமையிலுள்ள தேக்குமலை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதைப்பற்றியும் பரிசீலிக்கப்படுகிறது. இந்தப் பரிசீலனை விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மத்திய அமைச்சகத்தில் இந்தி

* 119 வினா—திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அமைச்சர்களை இனிமேல் இந்தியில்தான் அழைக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1961-ம் ஆண்டு இந்திய அரசு விதிகளின் (அலுவல்களை ஒதுக்கீடு செய்தல்) முதல் விவர அட்டவணையிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக அவற்றிற்கீடான இந்தி சொற்களை அமைத்துக்கொள்ள வகை செய்து அவ்விதிகளைத் திருத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு, காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு இதற்கு முன் அளித்திருந்த உறுதிமொழிகளுக்கு முரணானது என்றும், 1968-ம் ஆண்டு 1-வது மத்திய சட்டத்தால் திருத்தப்பட்ட 1963-ம் ஆண்டு ஆட்சிமொழிகள் சட்டத்தின் விதித்துறைகளை மீறியதாகும் என்றும் முதலமைச்சர், மாண்புமிகு தலைமை அமைச்சருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் அவரது நாட்டத்திற்குக் கொண்டு வந்தார். அரசால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரும் மனக்கசப்பு இம்மாநிலத்தில் கிளர்ந்து பரவும் முன்னர், மேற்சொன்ன அறிவிப்பு திரும்பப் பெறப்படவேண்டும் என்றும் தலைமை



1972 ஆகஸ்ட் 17]

யமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. இங்கு எழும் மனக்குமுறலைப் போக்க வேண்டுமென்றால், இதற்கு விரைவில் பதில் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. தலைமை அமைச்சரிடமிருந்து மேற்சொன்ன நேர்முகக் கடிதத்திற்கு இதுவரையில் எந்தவித பதிலும் வரவில்லை.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்தியாவின் தலைமை அமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்குப் பதில் வராமல் இருக்கிறது. ஆனால், நேற்று முன்தினம் தரப்பட்ட தாமிரப் பத்திரங்களில் இந்தியில் மட்டுந்தான் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை அரசு அறியுமா? மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆனால், தாமிரப் பத்திரங்கள் இந்தியில் மட்டும் எழுதப்பட்டிருப்பது உள்ளபடியே நம்முடைய அதிருப்திக்குரிய ஒன்றுதான். தாமிரப் பத்திரத்தின் மொத்தத் தொகையே ஆயிரம் என்ற அளவுக்கு இருப்பதால் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சென்றிருக்கிற தியாகிக்கு அந்தந்த மாநில மொழியிலே அவர்கள் தாமிரப் பத்திரங்களை வழங்கியிருப்பார்களானால் மிகப் பொருத்தமுடையதாக இருந்திருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்திற்கு பதில் இதுகாறும் அனுப்பப்படவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கு ரிமைண்டர் ஏதாவது இந்த அரசு எழுதியிருக்கிறதா? அப்படி எத்தனை ரிமைண்டர்கள் எழுதியிருக்கிறார்கள் என்ற விவரத்தை அளிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கான ரிமைண்டர் அனுப்பப்படவில்லை. ஆனால், அதற்கிடையில் பாராளுமன்றத்தில் மாத்திரம் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தி எழுத்துக்களைப் போடாமல், இந்திச் சொற்களுக்கு ரோமன் லெட்டரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், அரசியல் சட்டத்தின்படி "ப்ரைம் மினிஸ்டர்" என்று குறிப்பிடப்படவேண்டும் என்று கருதுகிறேன். "ப்ரதான் மந்திரி" என்று குறிப்பிடக்கூடாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அரசின் கொள்கை இருமொழிக் கொள்கை என்பது இந்தச் சட்டப் பேரவையில் தீர்மானம் மூலமாக மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், அதனை மத்திய அரசு இதுவரையில் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மத்திய அரசு இந்த அரசின் இருமொழிக் கொள்கையினை ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கையினை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய மாநிலத்தில் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டாலே போதும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நம்முடைய அரசியல் சட்டத்தின் படியும், நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படியும் ஆங்கிலத்திலும் எழுதலாம் இந்தியிலும் எழுதலாம் என்று இருக்கிறது. இந்தச் சுற்றறிக்கையின் மூலமாக ஆங்கிலத்தில் எழுதுவது தடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் அது தடுக்கப் படக்கூடிய சூழ்நிலை இருந்த காரணத்தால் கடிதம் எழுதியனுப்பப் பட்டது. பிறகு அங்கே பாராளுமன்றத்தில் மாத்திரம் ஏதோ உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. ஆனல், நேரடியான பதில் எதுவும் வரவில்லை.

## அரசு கல்லூரி பேராசிரியர்கள்

* 120 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் கல்லூரிகளில் பணிபுரியும் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு தரும்போது முன்னுரிமை வழங்கப் படுகிறதா?

(இ) ஆம் எனில், தற்போது எத்தனை பிஎச்.டி. பட்டதாரிகள் அரசு கல்லூரிகளில் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. தமிழ்நாடு கல்விப்பணி தனி விதிகளில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு முன் உரிமை வழங்குவதற்கு தனிச் சலுகை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை.





(இ) அரசு கல்லூரிகளில் தற்போது பிஎச்.டி. பட்டம் பெற்ற 14 பேராசிரியர்களும் 10 உதவிப் பேராசிரியர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழைப் பாடமொழியாக ஏற்று பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. ஆனல் தமிழில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்களாகத்தான் நாம் கொள்ளவேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

## சென்னை நகராட்சி

* 121 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர எல்லையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: சென்னையைச் சுற்றியுள்ள சில புறநகர்ப் பகுதிகளையும் சென்னை நகரத்தோடு இணைத்து ஒரு பெருநகர் திட்டமாக உருவாக்கி மேலும் பல நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா? ஆமெனில் அதற்கான விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், தென் சென்னை புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் 134 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையுடன் சேர்க்கக் கோரி ஒரு திட்டத்தை அனுப்பியுள்ளார். இதனல் புறநகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர், வடிகால் திட்டம் முதலியன சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் விடப்பட ஏதுவாகும். பெசன்ட் நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர் இவை மூன்றும் தென் சென்னையைச் சார்ந்த பகுதிகள் ஆகும். இவைகள் சமீபத்தில் ஊரூர், கலிருன்றம், திருவான்மியூர் பகுதியில் உள்ளன.

[1972 ஆகஸ்ட் 17

வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பிலிருந்து தென் சென்னை புறநகர் பகுதியைச் சார்ந்த சுமார் 420 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையில் சேர்க்கப்படவேண்டியுள்ளது. கோடம்பாக்கம்புதூர், தென் சென்னை நகர்ப்புறம், மேற்கு சென்னை நகர்ப்புறம், கொரட்டூர் நகர்ப்புறம் இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவையான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கவேண்டிவரும்.

## ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு தனி முத்திரை

* 122 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு தனியானதோர் சின்னத்தை முத்திரையாகக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோவை மாவட்டத்தில் உள்ள சூலூர் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும், பெருந்தலைவருக்கும், தமிழக அரசின் கோபுரச் சின்னத்துடன் கூடிய பொதுவான முத்திரையை தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தக் கோரிக்கை எப்போது நிறை வேற்றப்படும்? அப்படி நிறைவேற்றப்படும்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுவதைப்போல் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் சின்னம் ஒதுக்குவது குறித்து அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் ஊராட்சி ஒன்றியம் பற்றி முடிவு எடுத்து விடுவோமானால் அதை நடைமுறைப் படுத்திய பிறகு ஊராட்சிமன்றங்களின் தேவை பற்றி பிறகு யோசிக்க லாம். ஊராட்சி ஒன்றியங்களுக்கு அப்படி முத்திரை வழங்குவது பற்றிய கருத்துத்தான் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும்.



1972 ஆகஸ்ட் 17]

திரு. கே. என். குமாரசாமி : இப்படி தனிச் சின்னம் வழங்குவது சம்பந்தமாக மற்ற ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஏதாவது தீர்மானங்கள் வந்துள்ளனவா? அப்படி தனிச் சின்னம் வழங்கு வதற்கு அரசாங்கம் உறுதியாக முடிவு எடுக்குமானால் மற்ற கிராம பஞ்சாயத்துக்கள் கூட தனிச் சின்னம் தங்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்குமே. இப்படி ஒவ்வொன்றுக்காக தனிச் சின்னம் வழங்குகிற நிலை ஏற்படுமானால் அது பெரும் நெருக்கடிக்கு கொண்டு விடும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். உறுப்பினர் கூறுகிற கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து அப்படிப் பட்ட முடிவு எடுத்தால் அதனால் நல்ல பலன் ஏற்படும் என்று கருதினால் அதற் கேற்ற முடிவு எடுக்கவேண்டியதுதான். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் இப்படி தனியாக ஒரு சின்னம் அமைக்கப்படுமே யானால் அவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் அதன்மூலம் வருகிற தபால் போன்றவை வருவதற்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று ஒன்றியத் தலைவர்கள் சிலசமயங்களில் எடுத்து தெரிவித்திருக் கிறார்கள். அதையொட்டி சூலூர் ஒன்றியம் கருத்து தெரிவித்திருக் கிறது. ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அதுபற்றி முடிவு எடுத்தால் அதற்குப் பிறகு அதைத் தழுவி மற்றைய முடிவுகளை நாம் பரிசீலனை செய்து எடுக்கலாம்.

## எழுத்தாளர்களுக்கு உதவி

* 123 வினா—திரு. . என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழம்பெரும் எழுத்தாளர்கட்கு உதவிப் பணம் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : இப்படிப்பட்ட பழம்பெரும் எழுத்தாளர் களுக்கு உதவிப் பணம் வழங்கும் திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த வகை யில் உருவாக்கப்பட்டிருக்கிறது? எப்போது முதல் அது செயல் பட்டு வருகிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 58 வயதுக்கு மேற்பட்ட கலைத்துறையில் உள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு உதவித் தொகை வழங்குகிற ஒரு ஏற்பாட்டினை 1961-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டுவர ஒரு திட்டம் வகுத்திருந்தது. ஆகவே, 58 வயது ஆகவேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய யாருமில்லாமல் இருக்கவேண்டும். அவர்களுக்கு வருமானம் வருகிற எந்தவித வசதிவாய்ப்பும் இருக்கக் கூடாது. இதையெல்லாம் கவனித்து உதவித் தொகை வழங்கலாம் என்றும் அதற்கு சங்கீத நாடக சங்கம் சார்பாக இருக்கிற குழுவினர் பரிந்துரை செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. அதில் மூன்றில் இரண்டு பகுதியை மத்திய அரசு தருவது என்றும் ஒரு பகுதியை மாநில அரசு ஏற்றுக்கொள்வது என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் 1971-ல் இந்தத் திட்டத்திற்கு இனிமேல் மத்திய அரசு உதவி செய்வதில்லை என்று அறிவித்து விட்டிருந்தாலும் ஏற்கனவே இங்கு ஓரளவு கொடுத்துக் கொண்டு வருவதால் இப்போது முழுத் தொகையையும் மாநில அரசு ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை இருக்கிறது. அதன்படி எழுத்தாளர்களைப் பொறுத்தவரையில் நாமக்கல் கவிஞருக்கு மாதம் 250 ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அடுத்து பரலி சு. நெல்லையப்பர் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வந்தது. மயிலை சீனி வெங்கடசாமி என்ற பழம்பெரும் எழுத்தாளருக்கும், பி. வி. ராமசாமி என்ற பழம்பெரும் எழுத்தாளருக்கும் ரூ. 75 மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : எழுத்தாளர் மந்திரிசபையாக இருக்கிற இந்த அரசிலாவது நாடு முழுவதும் இருக்கிற எழுத்தாளர்கள் யார் யார், "ஹூ ஈஸ் ஹூ" என்ற பட்டியலைத் தயாரித்து பயன்படக் கூடிய நூல்களை யார் யார் எழுதியிருக்கிறார்கள், அவர்களில் யார் யார் வறுமையில் இருப்பவர்கள் என்றதொரு பட்டியலைத் தயாரித்து அவர்களுக்கு நிதி உதவி செய்ய ஒரு நிரந்தரமான திட்டத்தினை அரசு தயாரிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 200 பேர்களுக்கு மேற்பட்டு இப்போது பலன் பெற்றுவருகிறார்கள். இந்த எண்ணிக்கையை வளர்த்துக்கொண்டே போனால் அதற்கேற்றபடி நிதித் தேவையையும் வளர்த்துக்கொண்டே போகவேண்டிவரும். ஆகவே ஆராய்ந்து அறிந்து பல ஆராய்ச்சி நூல்கள் மற்றவை வெளியிட்டிருக்கிற பெரும் எழுத்தாளர்கள்



என்று பெயர் பெற்றிருந்து இப்போது வயதுமாகி அவர்கள் வறுமையில் வாடும் நிலைமையினையொட்டி அவர்களுக்கு மட்டும் இப்போது உதவி அளிக்கப்பட்டு வருகிறது. எழுத்தாளர்கள் பட்டியல் தயாரிப்பது என்றால் பல துறைகளில் ஆயிரக்கணக்கில் செல்லக்கூடும். ஆகவே இத்திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர்களுக்கு தர இயலுமோ அவர்களுக்கு பொருள் உதவி செய்து தருகிற முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether this kind of assistance will be given to writers belonging to linguistic minorities also ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு கொடுக்கக்கூடாது என்று ஒன்றும் தடை இல்லை. அப்படி எழுத்தாளர்கள் இருந்தால், அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டால் முறைப்படி ஆராயப்பட்டு அவர்களுக்கு தகுதி அதற்கான காரணங்கள் இருக்குமானால் அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : பொதுவாக எழுத்தாளர்களுக்கு அவர்கள் வாழ்கிற நாட்களிலும் அவர்களது மறைவுக்குப் பிறகும் இந்த நாட்டில் பாதுகாப்பு இருக்கிறது என்று எடுத்துத் தெரிவிக்கிற வகையில் அரசு சில திட்டங்களை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனியாக ஆராய வேண்டும்.

திரு. கே. எ. வகாப் : புதுத் தலைமுறை எழுத்தாளர்களில் பல நல்ல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் உதவி செய்வது என்பது முடியாது என்றாலும் விஞ்ஞானத் துறையில் எழுத்தாளர்கள் மிகவும் அருகியிருப்பதால் அத்துறையில் இருப்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கிற வகையில் விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு நிரந்தரமான உதவி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அறிவியல் துறை போன்ற பல்வேறு துறைகளில் நாட்டுக்குத் தேவைப்படுகிற பல்வேறு துறை எழுத்தாளர்களுக்கு உற்சாகம் தருகிற முறை இப்போது இருந்துவருகிறது. சிறந்த நூல்கள் ஒவ்வொரு தலைப்பின்

கிழும் கொண்டுவரப்பட்டு அந்த நூல்களை எழுதியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டு வந்தது. அதைக் கூட சென்ற ஆண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதில் முதல் பரிசு பெறுகிறவர்களுக்கு—புத்தகம் எழுதுகிறவர்களுக்கு—இரண்டாயிரம் ரூபாய் என்றும் இரண்டாவது பரிசு பெறுகிறவர்களுக்கு ரூபாய் ஆயிரம் வழங்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆண்டுதோறும் 20, 25 நூல்களுக்கு அப்படி ஊக்கம் தருகிற வகையில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வழங்கும் திட்டம் இல்லை. நிரந்தரமாக வழங்குகிற திட்டம்தான் கலைஞர்களுக்கு,. எழுத்தாளர்களுக்கு என்றிருக்கிற வயது முதிர்ந்த, வருமானம் இல்லாதவர்களுக்கு என்ற அதன் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : இத்திட்டம் சமீபத்தில் சிறந்த இலக்கியங்களைப் படைத்து இறந்து போன குடும்பங்களுக்கு இது அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருக்கிறவர்களுக்குத்தான் அமல்படுத்தப்படுகிறது. இந்தப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் கூட அவர்கள் இறந்துவிட்டாலும் கூட சிறந்த புத்தகம் என்று தேர்ந்தெடுக்கும்போது அதற்காக வழங்கும் தொகை அவர்கள் குடும்பத்தினருக்குப் போய் சேரும்.

## நாதஸ்வர மேதைகளுக்கு விருதுகள்

* 124 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர மேதைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருதுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர கலைஞர்களுக்கு விருது வழங்கிவருகிறது.

திரு. என். கிட்டப்பா : பல்வேறு துறைகளைச் சார்ந்த சிறந்த இசை வல்லுநர்களுக்கு நம் அரசு சிறந்த பரிசுகளை ஆண்டுதோறும் வழங்கிவருவதாகத் தெரிகிறது. நாதஸ்வர இசையைப் பொறுத்த





வரையில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற நல்லதொரு இசைக் கருவியாகும் நாதஸ்வரம். எனவே அத்தகைய முறையில் நாயன இசை வாசிக்கும் சிறந்த வல்லுநர்களை ஆண்டுதோறும் அரசாங்கமே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர வித்வான்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்கி வருகிறது. அந்தத் திட்டம் இப்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

1964–65-ல் திரு. திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருதும், பட்டயமும் வழங்கப்பட்டது. 1965–66-ல் திரு. செம்பனார்கோயில் தட்சணாமூர்த்தி பிள்ளை அவர்களும், 1966–67-ல் திரு. பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்களும், 1967–68-ல் திரு. இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு பிள்ளை அவர்களும், 1968–69-ல் திரு. திருவிழிமழலை என். நடராஜசுந்தரம் பிள்ளை அவர்களும், 1969–70-ல் திரு. சிதம்பரம் எஸ். ராதாகிருஷ்ண பிள்ளை அவர்களும், 1970–71-ல் திரு. குளிக்கரை பிச்சையப்பா அவர்களும், 1971–72-ல் திரு. நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்திய அரசின் சார்பாக குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படுகிற அத்தகைய தேசிய விருதுகள் திருவாடுதுறை திரு. டி. என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களுக்கும், திருவீழிமழலை திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும், திருவடைமருதூர் திரு. பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

சிறந்த தவில் வித்வான்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்ட வகையில் 1961–62-ல் திரு. உத்தராபதி பிள்ளை அவர்களும், 1962–63-ல் திரு. திருக்கடையூர் சின்னையா பிள்ளை அவர்களும், 1963–64-ல் திரு. முத்துவீரு பிள்ளை அவர்களும், 1965–66-ல் கும்பகோணம் திரு. தங்கவேலு பிள்ளை அவர்களும், 1966–67-ல் திரு. கூறைநாடு கோவிந்தராஜ பிள்ளை அவர்களும், 1968–69-ல் மாயூரம் திரு. பி. பழனிவேல் பிள்ளை அவர்களும், 1969–70-ல் திரு. சி. பி. நாராயணசாமி பிள்ளை அவர்களும். 1970–71-ல் வலங்கைமான் திரு. ஏ. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்களும், 1971–72-ல் திருநகரி திரு. நடேச பிள்ளை அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பீடி, சுருட்டு தொழிலாளர்கள்

* 125 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்கான ஊதியக்குழு ஏதேனும் சமீபத்தில் நிறுவப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பரிந்துரைகள் செயலாக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம்.

(இ) குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, வட ஆற்காடு மாவட்டங்களில் 1000 தொழிலாளர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும், அவர்களுக்குப் போதுமான ஊதியம் அளிக்கப்படவில்லை என்பதும் இந்த அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த விவரம் தெரிந்துதான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இந்தக் குழுவின் அறிக்கை வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பீடித் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தினால்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்டபொழுதே குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தக் குழுவினுடைய அறிக்கை வெளியிடப்படும் என்று சொல்லப்பட்டதே? அந்தக் குறிப்பிட்ட காலம் என்ன ? எப்பொழுது இந்தக் குழுவினுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தக் குழு அமைக்கப்பட்டு 6 மாதத்திற்குள்ளாக இந்தக் குழுவினுடைய அறிக்கை தரப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. விரைவிலே அறிக்கையை அக் குழுவினர் தருவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



திரு. நா. வீராசாமி : இந்த பீடித் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட வேஜ் போர்டில் யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்? தொழிலாளர்களுடைய பிரதிநிதியாக ஒரு உறுப்பினர் இருக்கவேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்ததா ? அப்படியெனில் அரசாங்கம் தொழிலாளர்களுடைய பிரதிநிதி ஒருவரை வேஜ் போர்டில் நியமிப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்தக் குழுவில் தொழில் அதிபர்கள் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும், 6 பேர்கள் என்ற கணக்கில் 12 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

## *Industrial disputes.*

* 126 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the State Government has informed the Central Government that the responsibility for settlement of disputes even in respect of industries which now fall within the Central Sphere should be transferred to State Government;

(b) if so, whether any reply has been received; and

(c) the details thereof ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம்.

(இ) & (உ) இது பற்றிய முடிவு வந்து சேரவில்லை. அடுத்து நடைபெற இருக்கும் முத்தரப்புக் கூட்டத்தில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்று மைய அரசு பதிலளித்துள்ளது.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister as to what was the nature of correspondence that took ρlace between the Centre and State, whether it is not a fact that the Centre had asked the State Government to allow the jurisdiction of industrial disputes in Central Government establishments only to the Centre or the State Government is asking that it should be completely relegated to the State Government or State Government would like to be in the original position where both had the joint responsibility, viz. both Central and State Governments. May I know what exactly are the recommendations made by this Government to Centre ?

[1972 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சில தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் மாநில ஆட்சிப் பகுதியிடையே எழும் அதிகார எல்லையைக் குறித்த தகராறுகள் தேசியத் தொழிலாளர்கள் குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மத்திய அரசினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தாலும், சட்டம், அமைதி ஆகியவைகளை நிர்ணயிக்க வேண்டியது மாநில அரசின் பொறுப்பாக இருப்பதால் டெல்லியில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டில் மத்திய அரசிற்கு உட்பட்ட நிர்வாகத்தில் இருந்தாலும் கூட, இந்தப் பிரச்சினைகளை மாநில அரசு தீர்ப்பதற்கு அதிகாரம் தரவேண்டும் என்று கேட்கப்பட்டது. நேரமில்லாததால், விவாதிக்கப்பட்டதே தவிர எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படக்கூடும்.

DR. H. V. HANDE : Has the Government any objection for the Central Ministers discussing or helping the State Government in solving industrial disputes which come strictly under the State Government, like the Simpson & Co. ? Have the State Government any objection to Central leaders trying to help the State Government in industrial disputes ? If so will this Government let us know whether any such move was made by Central Ministers to solve this issue ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மத்திய அரசில் உள்ள அமைச்சர்களும் இங்கு இருக்கும்படியான வேறுபாடுகளை நல்ல எண்ணத்தோடு தீர்க்க முன்வந்தால் நிச்சயம் அதை வரவேற்கலாம். ஆனால் அந்தப் பிரச்னைகளில் நெருக்கடி உண்டாக்க வந்தால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிம்ப்ஸன் பிரச்னையைப்பற்றி மத்திய அரசு அமைச்சர்கள் திட்டவட்டமான எந்த ஒரு முடிவையும் எங்களிடத்திலே இது வரையில் பேசவில்லை.

*Staff of Marine Unit at Mandapam*

*** 127 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister** for Harijan Welfare be pleased to state :

(a) whether the Government have any information regarding the transfer of the Marine Unit staff at Mandapam in Ramanathapuram district to Cochin; and

(b) if so, the details thereof ?



1972 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) & (இ) மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடம் மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்பட்டதையொட்டி மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த சில பணியாளர்கள் மண்டபத்திலிருந்து கொச்சிக்கும் பிற இடங்களுக்கும் மாற்றம் செய்யப்பட்டு, அதன் விளைவாக இடர்ப்படுகின்றனர் என்பது அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இதைப்பற்றி மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்திற்கும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கும் எழுதிக் கேட்கப்பட்டது. இது குறித்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு நேர்முகக் கடிதம் எழுதப்பட்டது. பின்னர் அவர் சென்னைக்கு வருகைத் தந்த போது அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து அவரிடம் பேசினர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராலும், மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் முதுநிலை நிர்வாக அதிகாரியாலும் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது :

தமிழ்நாட்டைப் சேர்ந்த எவரும் அவருடைய விருப்பத்திற்கு மாருக வேறிடத்துக்கு மாற்றப்படவில்லை; மாற்றத்தினால் இன்னலுக்கு ஆளானதாக புகார் எதுவும் வரவில்லை; பெரும்பாலானவர்கள் பதவி உயர்வு பெற்றோ அல்லது உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டதனாலோ அவர்களின் விருப்பத்தின் பேரிலேயே வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுள்ளார்கள். மற்ற இடங்களிலிருந்தும் பலர் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளவர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் எந்தக் காரணத்தை ஒட்டி இந்த மாறுதல் ஏற்பட்டது என்று விளக்கவில்லை. மாற்றம் எந்தக் காரணத்தினால் ஏற்பட்டது என்று முன்கூட்டியே இந்த அரசுக்குத் தெரிவிக்கப்பட்டதா ? எந்தக் காரணத்தினால் மாற்றப்பட்டது ? அவர்கள் தந்திருக்கக்கூடிய விவரத்தைப் பார்த்து நம்முடைய அரசாங்கம் மறுப்பு தெரிவித்ததா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மக்கள் அவை மதிப்பீட்டு ஆய்வுக்குழு, இந்திய அரசாங்கம் அமைத்த குழு ஆகியவற்றின் பரிந்துரை மூலம்தான் இந்த மாற்றம் ஏற்பட்டது. மீனள ஆராய்ச்சி நிலையம் மாற்றப்படவில்லை. தமிழக அரசு அப்படி

[1972 ஆகஸ்ட் 17

மாற்றக்கூடாது என்று பலமுறை மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. மாநில முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும், நிலையம் மாற்றப்படவில்லை. அதிகாரிகள்தான் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் திருப்பித் திருப்பி கூறுகிறார்களே தவிர நிலையங்கள் இங்கேயே இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. சிற்சில சிப்பந்திகள்தான் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தரப்படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையில் இப்பொழுது அங்கே அந்த நிலையம் செயல்பட்டுக்கொண்டு தான் வருகிறது.

ஆரம்பாக்கத்தில் மீன் குளிர்பதன அறை அமைப்பு

* 128 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கத்தில் துவங்க இருக்கும் மீன் குளிர்பதன அறை அமைப்புத் திட்டம் காலதாமதமாவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செங்கற்பட்டு மாவட்டம், ஆரம்பாக்கத்தில் ஒரு மெட்ரிக் டன் கொள்திறனுள்ள குளிர்பதன அறையுடன் கூடிய இரண்டு மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுள்ள குளிர்பதனப் பொறியை அமைப்பதற்காக, 1971-ம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கட்டடங்கள் கட்டுவதற்கான வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்து அனுப்புமாறு, சைதாப்பேட்டைக் கோட்டப் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளரை, மீனளத்துறை இயக்குநர் கேட்டுள்ளார். அவரிடமிருந்து வரைப்படங்களும் மதிப்பீடுகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆரம்பாக்கம் கிராமத்தில் 350/1 சர்வே எண்ணில் உள்ள நிலத்தில் குளிர்ப்பதனப் பொறி—குளிர்ப்பதன அறையை அமைப்பதற்கு செங்கற்பட்டு மாவட்டம், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி மீனளத்துறைக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளார். இயந்திரங்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீனளத்துறை இயக்குநரால் முடிவாகப் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. அந்த விலைப் புள்ளிகளுக்கு மீனளத்துறையின் இயந்திர ஆலோசனைக் குழு



1972 ஆகஸ்ட் 17]

ஏற்பளித்த பிறகு, அவை அரசுக்கு வந்து சேரும். நடைமுறைகள் யாவும் கடைப்பிடிக்கப்பட்ட பிறகு, ஆரம்பாக்கத்தில் குளிர்ப்பதனப் பொறி—குளிர்ப்பதன அறை நிறுவப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த ஆரம்பாக்கம் ஆந்திராவின் எல்லைப் பகுதியில் இருக்கிறது. அங்கிருந்து சென்னைக்கு சுமார் 40 மைல் தூரம் இருக்கிறது. எனவே, ஆரம்பாக்கத்தில் இருந்து பிடிக்கப்பட்ட மீனை சென்னைக்கு கொண்டுவருவதற்குமுன் கெட்டுவிடுவதாக மீனவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 1971-ம் ஆண்டிலேயே அங்கு குளிர்பதன வசதி செய்து கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. இன்னும் அப் பணி நிறைவு பெறாமல், மீண்டும் மீண்டும் வற்புறுத்த வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஆகவே, அது எப்போது முடிவுபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். அரசு துரித நடவடிக்கை எடுக்க அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அதிகாரிகளும் துரிதமாக நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். அதனால் விரைவில் முடிவடையும்.

தொலைபேசி கருவிகள் உற்பத்தி

* 129 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் டெலிபோன் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட மத்திய அரசு முன் வந்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலையை தமிழகத்தில் அமைத்திடக் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) அன்று (இ) : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இத்தகைய தொழிற்சாலைகளை தமிழகத்தில், குறிப்பாக பின்தங்கிய நிலையிலுள்ள தஞ்சை மாவட்டத்தில் ... ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசின் நிதி உதவியைப் பொறுத்து அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

*Manufacture of Synthetic detergents*

* 130 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government of Tamil Nadu recommended the licence applied by Tata's for starting a synthetic detergents unit in Tamil Nadu; and

(b) if so, whether any letter of indent has been receievd from the Centre for such a licence ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) : சென்னையில் "சிந்தடிக் டிட்டர்ஜியண்ட்" தொழிற்சாலை ஒன்றை நிறுவ உரிமம் கோரி கீழ்க்கண்ட 5 நிறுவனங்கள் மத்திய அரசுக்கு மனுச் செய்து கொண்டன:

1. பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்.
2. அல்ட்ராமெரைன் அண்டு பிக்மெண்ட்ஸ் லிமிடெட்.
3. செஞ்சுரி ரேயான், பாம்பே.
4. டாடா ஆயில் மில்ஸ் லிமிடெட், பாம்பே.
5. டை. இச்சி. கார்காரியா (பி) லிமிடெட், பாம்பே.

தமிழக அரசு எல்லா மனுக்களுக்கும் உரிமம் வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. மத்திய அரசு அல்ட்ராமெரைன் அண்டு பிக்மெண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கியது. மற்ற மனுக்களை நிராகரித்து விட்டது.

*Mica Mines*

* 131 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that Mica Mines are available in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) ஆம். காக்காய்ப்பொன் சுரங்கங்கள் (மைக்கா) நீலகிரி மாவட்டம் கூடலூரர் வட்டத்தில் கூடலூரர், சேரம்பாடிக்கிடையில் அநேக இடங்களிலும், கோலப்பள்ளியைச் சுற்றிலும், சேரங்கோட்டிலும் இருக்ின்றன. சேரம்பாடி, கோலப்பள்ளி



கிராமங்களைச் சுற்றிலும் காணப்படும் பெக்மடைட் எனப்படும் பாறைகளில் நல்ல தரம் வாய்ந்த ரூபி காக்காய்ப்பொன் காணப்படுகிறது. தற்பொழுது, பயனீர், லக்ஷ்மிகுமார், பவன்குமார் என்ற மூன்று சுரங்கங்கள்தான் இயங்குகின்றன. இந்த மூன்று சுரங்கங்களிலிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு 75 மெட்ரிக் டன்கள் எடையுள்ள பயன்படுத்தப்படாத காக்காய்ப்பொன் எடுக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, பப்ளிக் செக்டாரில் இந்தத் தொழில் நடைபெறுகிறதா அல்லது பிரைவேட் செக்டாரில் இந்தத் தொழில் நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காக்காய்ப்பொன் வெட்டி எடுப்பதைப்பற்றிச் சொன்னேன். லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபடலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆந்திரா அருகில் உள்ள சோளிங்கர் பகுதியில் 100 ஆண்டுகளுக்கு மேலாக மைக்கா இருப்பதாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் நடத்திய சர்வேயில் பரிசீலனை செய்திருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது மீண்டும் சர்வே செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நம் மாநிலத்தில் ஏராளமாக மைக்கா இருப்பதாகச் சொன்னார்கள். இந்த மைக்காவைக்கொண்டு வேறு பொருட்கள் செய்வதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே வேறு தொழில்கள் செய்வதற்காகத்தான் அதிகமாக மைக்கா வெட்டி எடுக்கப்படுகிறது. என்னென்ன தொழில்கள் என்பதற்கு என்னிடம் தகவல் இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூரில் மைக்கா உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதை எடுக்க, அரசாங்கத் துறையில் சுரங்கங்கள் தோண்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது அந்த இடத்தில் யார் யார் தொழில் தொடங்க மைக்கா மூலப்பொருள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கு மைக்கா வெட்டி எடுக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

பெயின்டு உற்பத்திப் பொருள்கள்.

* 132 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பகுதியில் பெயின்டுகள் செய்வதற்கான தாதுப் பொருட்கள் கிடைப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். சிவகெங்கைக்கு அருகில் மஞ்சள் மாக்கல் பாறையும் சிவப்பு இரும்புக்கல்லும், மாக்கல் பாறையுடன் கலந்து 2.56 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கிடைக்கின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பெயின்ட் தொழிலுக்கான மூலப்பொருளைப் பயன்படுத்தி, அரசுத் துறையில் உடனடியாக ஒரு தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தொழில் தொடங்கக் கூடிய அளவுக்கு இல்லை—அங்கு எக்கனமிக் ஸ்கீமாக இருக்கிறது. தொழில் தொடங்க முடியுமா என்று அறிய மீண்டும் பரிசீலனைச் செய்யப்படுகிறது.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் சிற்றுண்டி விடுதி.

* 133 வினா.—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் தொழிலாளர் வசதிக்காக கான்டீன் (சிற்றுண்டி விடுதி) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர் வசதிக்காக சிற்றுண்டிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வசதியை முன்னிட்டு, அதை விரைவிலே தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டிலே 1½ லட்சம் ரூபாய் செலவில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பரிசீலனை செய்யப்படுகிறது. விரைவிலே அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

*Prevention of wastage of ground water.*

* 134. Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether this Government have received any communication from the Centre on the introduction of legislation by the State to prevent the wastage of ground water ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Thiru N. K. PALANISWAMY : May I know the details of the legislation, Sir ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசு அது குறித்து ஒரு மாதிரி சட்ட வரைவினை அனுப்பி வைத்துள்ளது. அந்த வரைவினை விவசாயத் துறையும், பொதுப்பணித் துறையும் பரிசீலித்து, வருவாய்த் துறைக்கு சில விளக்கங்கள் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறை பரிசீலித்து அறிக்கை அனுப்பியதும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

*New tank for Periavallikulam.*

*** 135 Q.—Thiru SOWDI S. SUNDARA BHARATHI : Will** the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to form a new tank at Periavallikulam village, Aruppukkottai taluk, Ramanathapuram district; and

(*b*) if so, when the work will be taken up for execution ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) (இ) இத் திட்டம் வருவாய் வாரியத்தின் (உணவு உற்பத்தி) பரிசீலனையிலுள்ளது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : இதை சற்று துரிதப்படுத்தி, சீக்கிரமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 1,37,000. அதுபற்றி ரெவின்யூ போர்டு பரிசீலனை செய்து வருகிறது. அறிக்கை வந்ததும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### வாகனவரி வசூல்

* 136 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருவத்திபுரம் அருகில் செய்யாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தைக் கடக்கும் வண்டிகளுக்கு எத்தனை ஆண்டுகளாக வாகன வரி வசூலிக்கப்படுகிறது ?

(இ) அது எப்போது முதல் நிறுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) 1962-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் வாகன வரி வசூலிக்கப்படுகிறது.

(இ) பாலம் கட்டுவதற்குச் செலவான தொகையான 14.40 லட்சம் ரூபாயும் அதன்மீதான வட்டியும் திரும்பக் கிடைக்கும் வரை வாகன வரி வசூலிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த வரி வசூலிக்கப்படுவது பற்றி பொதுமக்கள் மன சஞ்சலம் அடைந்திருக்கிறார்கள். சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் இந்த வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த வட்டி வீதத்தைத் தள்ளுபடி செய்து, கணக்கை ஒழுங்குபடுத்தி, அந்த வரி வசூலிப்பை அரசாங்கம் ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வாகன வரி வசூலிப்பதில் தள்ளுபடி செய்வதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. அரசாங்கம் 14 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது. திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இதுவரை இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் கூட வசூலிக்கப்படவில்லை.



திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்போது வாகன வரியாக, தினம் ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அடிக்கடி—அன்றாடம் அந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் "சீசன் டிக்கட்"—குறைந்த கட்டணம் வசூலித்தல்—வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுப்பவர்கள் வாகன வரி வசூலிக்கிறார்கள்.

### *Widening of road in Thiruvettar.*

* 137 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there was a proposal for the widening of the road on either side of the bridge across the river at Thiruvettar in Kanyakumari district; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த ரோட்டின் இரு பக்கமும் ஏகதேசம் 100 அடி ஆழமாக இருக்கிறது. பல தடவைகள் இந்த ரோட்டில் போகும் லாரிகளும், பஸ்களும் கவிழ்ந்து, உயிர் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ரோட்டை அகலப்படுத்த தேவையான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலையை அகலப்படுத்தவும், அந்த பாலத்தைப் புதுப்பிக்கவும் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Bridge across Paruthivakkal.

*138 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal for the widening and for the reconstruction of the bridge across Paruthivakkal on the Samiyar-madam-Mecode road in Kanyakumari district;

(b) whether estimate has been prepared; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) & (இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த பாலத்தை விரிவு படுத்துவதற்கானத் தேவையை உணர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்கள். உடனடியாக விரிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறிச் சென்றார்கள். ஆனால் இதுவரை தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமல் இருப்பதற்கு காரணமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் குறிப்பிட்டத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

Coffee crops.

*139 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Coffee Estates have registered a bumper crop in 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) ஆம்.



(இ) 1971 அக்டோபர் இறுதி வரையில் 1970–71 காப்பிப் பருவகாலத்தில் பயிரிடப்பட்ட காப்பியில் 1,09,425 டன் காப்பித் தொகுப்பில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் சேர்ப்பிக்கப் பட்ட காப்பியின் அளவில் இதுவே மிக அதிகமானதாகும். இதில் 58,136 டன் அராபிக்கா வகையும், 51,289 டன் ரொபஸ்டா வகையும் அடங்கும். முந்திய ஆண்டின், அதாவது 1969–70-ம் ஆண்டில் உற்பத்தி அளவாகிய சுமார் 63,000 டன்னுடன் ஒப்பிடுங்கால், 1970–71-ல் 73.69 சதவீதம் உற்பத்தி பெருகியுள்ளது. காப்பி பயிரிடுவோர், மும்முரமாகச் சாகுபடியை மேற்கொண்டதே அமோக விளைச்சலுக்குக் காரணமாகும். மேலும் வாரியத்தின் ஆராய்ச்சிப் பிரிவு வேளாண்மையில் புதிய வகைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்ததும் பருவ நிலைகளும் சாதகமாக அமைந்ததும் விளைச்சல் பெருகியதற்குக் காரணமாகும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு காப்பித் தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றனவா? இல்லையெனில், அவற்றை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கன்னியாகுமரி மாவட்டத்தில் காப்பி தோட்டங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றன. இதுவரையிலே 4,251 டன் அங்கே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

சிறுகமணி கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை.

*140 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி வட்டம், சிறுகமணி கிராமத்தில் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை எப்போது முதல் செயல்பட்டு வருகிறது?

(இ) பண்ணைக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலமுள்ளது?

(உ) இதுநாள் வரை புதிய கரும்பு ரகம் ஏதேனும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) 1960-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) பண்ணைக்குச் சொந்தமாக 58.20 ஏக்கர் நிலமுள்ளது. குத்தகைக்கு சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு 6.16 ஏக்கர். ஆக 64.36 ஏக்கர் நிலம் உள்ளது.

(உ) ஆம். கோ 62103, கோ 6304, கோ 6317, கோ 6406, கோ. 6512 முதலிய ரகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டப் பரிசோதனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறுக மணியிலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் அந்தப் பகுதியிலுள்ள கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் பயன்தரத் தக்கதாக இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விதை அளவு, இடை வெளி நிர்ணயம், வடிகால் ஆழம், அறுவடை, போகத் தன்மை இவைகளைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளை அங்குள்ள விவசாயிகள் உபயோகித்து, மேற்கூறியவற்றை பற்றி முடிவு செய்து வருகிறார்கள். சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க, விதைகளின், உபயோகம் அளவு பற்றியும் அங்குள்ள விவசாயி களுக்குச் சொல்லப்பட்டு வருகிறது.

## பச்சை வாழை பயிரிடுதல்.

* 141 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசின் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கரில் பச்சை வாழை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : செங்கற்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசின் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின் கீழ் வருடம் ஒன்றுக்கு 1000 ஹெக்டேர் வீதம், மூன்றாண்டுகளில் 3,000 ஹெக்டேர் நிலத்தில் பச்சை வாழை பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தீவிர வாழை, பச்சை வாழை, சாகுபடி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் சார்பாக எந்தெந்த இடங்களில் எத்தனை எத்தனை ஏக்கர்களில் திட்டமிடப்பட் டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலாவதாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்து வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கான இயந்திர தெளிப்பான் வாங்க 50 சதவிகிதம் மானியம் தரப்படுகிறது. பயிர் பாதுகாப்புக்காக 50 சதவிகிதம் மானியம் தரப்படுகிறது. இதற்காக ரூ. 62,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டிற்கு 62 மாதிரி திட்டங்களை முதலில் ஏற்படுத்துவதுபற்றி முடிவு செய்து, செங்கற் பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டம் முதலில் துவங்கப்பட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இ. எஸ். தியாகராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீவிர வாழை சாகுபடிக்குத் தரப்படும் சலுகைகளை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒரு இடத்திற்கு ரூ. 1,000 வீதம் 62 இடங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற் கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இயந்திரத் தெளிப்பான்கள் வாங்க 50 சதவிகிதம் மானியமும் பயிர் பாதுகாப்புக்காக 50 சத விகிதம் மானியமும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின்கீழ் உற்பத்தியாகின்ற வாழையை விற்பதற்கு சரியான மார்க்கெட் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, மொரிஷியஸ் வாழை காய்த்த உடனே கெட்டுவிடுகிறது. இதை வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? பழ கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதற்கான திட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சி இருக்கிறது என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அந்த முயற்சிகள் மத்திய சர்க்கார் மூலம் நடந்து வருகின்றன. இங்கே தயாரிக்கின்ற வாழையை நாம் மைசூர் போன்ற இடங்களுக்குத்தான் அனுப்ப முடிகிறது—அங்கு மார்க்கெட் இருக்கிற காரணத்தாலே. மேலும் இதை நல்ல முறையிலே உற்பத்தி செய்ய, அந்த வாழைகளுக்கு நெடுந்தூரம் கொண்டுபோவதற்கான தெம்பு இருக்கிறதா, அவைகளுடைய சக்தி என்ன என்பதை எல்லாம் உணர்ந்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற் கான ஏற்பாடுகளை இப்பொழுது ஆராய்ந்து கொண்டு வருகிறோம்.

*Allotment of flats in Kalaignar Karunanidhi Nagar.*

*142. Q.—Dr. H. V. Hande : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) the total number ot persons who applied to the Tamil Nadu Housing Board for the allotment of flats in Kalaignar Karunanidhi Nagar; and

(b) total number of persons allotted with flats and the total number of pending cases ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) & (இ)

1. மொத்தம் மனு செய்தவர்களின் எண்ணிக்கை ... 243
2. ஒதுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ... 216
3. மனுக்களை திரும்பப் பெற கோரிக் கொண்டவர்களின் எண்ணிக்கை ... 22
4. கொடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ... 5

Dr. H. V. Hande : Sir, is it a fact that the Housing Board originally collected one-fourth of the tentative cost and promised to construct flats in six months' time and then they did not keep up their promise. Also whether it is a fact that a number of complaints were brought to the attention of the Government that though they had promised to keep the houses ready, the house have not been kept ready even though the first instalment was collected and if so, what action has been taken by the Government to redress their grievances ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 1/4 பங்கு பணம் வாங்கப்படுவதென்பது உண்மை. ரூ. 7,000 முதலிலேயே கட்டப்பட வேண்டும். ஆனால், நம்முடைய ஹாண்டே அவர்கள் குறிப்பிடுவது போல் எந்தவிதமான குறைபாடும் இதுவரையிலே நம்முடைய கவனத்திற்கு வரவில்லை. கொடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை இன்னும் 5 தான். காலதாமதம் ஏற்படுகிறதா என்பதற்கான தகவல் என்னிடத்திலே இல்லை.

Dr. H. V. Hande : Sir, may I know whether it is not a fact that the Housing Board issued letters to the allottees stating that the plots would be ready for occupation from 10th February 1972





and that the first instalment should be paid. Sir, after the payment of the first instalment, when they went for occupation, they were not ready. Whether this aspect of the matter has been brought to the notice of the Government ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதுவரையிலே அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஹவுசிங் போர்டாலே கட்டப்படுகின்ற வீடுகளானாலும் ஃபிளாட்களானாலும் கொஞ்சம் காலதாமதமாவதற்கு முக்கியமான காரணம் சிமெண்ட் கிடைக்கவில்லை யென்று சொன்னார்கள். அதற்குக் காரணம், அதைக் கொண்டு வருவதற்கான வேகன்களை ரயில்வே இலாக்கா சரியான முறையிலே நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே. அந்த வேகன்களை அலாட் செய்வதில் ஏற்படுகின்ற தகராறு காரணமாக, சிமெண்ட் இங்கு காலா காலத்தில் வரவில்லை என்பது உண்மையா? அதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிமெண்ட் கொண்டு செல்ல வேகன்கள் மட்டுமல்லாமல், இரும்பு அலாட்மெண்ட்–கோட்டா பெறுவதிலே சிரமங்கள் இருக்கின்றன. சிமெண்ட் கிடைப்பதிலே சிரமங்கள் இருந்தாலும், பெரிய குறைபாடுகள் எதுவும் வீட்டு வசதி வாரியத்திலே இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : முன்பணமாக ரூ. 7,000 இப்பொழுது வாங்கப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஏற்படுவதால், அதற்கான வட்டி போட்டுக் கொடுக்கப்படுமா? அந்த வீடுகளை எப்பொழுது கட்டிமுடிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆரம்பத்தில் ரூ. 750 கட்டி விண்ணப்பம் போட வேண்டும். மொத்த அடக்க விலையில் 1/4 பகுதியினை கட்டிய பிறகு தான் வீடு தரப்படுகிறது. ஆகவே, ரூ. 7,000-ஐ வீடு தருகிற நேரத்தில் தான் கட்டுகிறார்கள். வெறும் ரூ. 750 கட்டிவிட்டு நெடுங்காலத்திற்கு அந்த வீடு என்ன ஆயிற்று என்று கூடப் பார்க்காத கேஸ்கள் நிறைய இருக்கின்றன. அனேகமாக பணம் கட்டிய அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இன்னும் கவனிக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் 5 தான் என்பதும் குறிப்பிட விரும்புகிறேன்.

*Uniforms for bus crew.*

* 143. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that uniforms supplied to the Bus Crew of the Transport undertakings are stitched by Private individuals and private firms; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, பல்லவா போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் பேருந்துப் பணியாளர்களுக்குச் சீருடை தைத்துக் கொள்வதற்காகத் துணி மட்டுமே வழங்கப்படுகிறது. அவர்கள், தங்கள் சீருடைகளைத் தனியாகத் தைத்துக் கொள்கின்றனர். அதற்கான தையற்கூலி கொடுக்கப்படுகிறது. பாண்டியன், சோழன், சேரன் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துப் பணியாளர்களுக்குத் தனிப்பட்ட நிறுவனங்களாலும் தனியாளராலும் சீருடைகள் தைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிலேயே ஒரு தனியான செக்ஷனை ஏற்படுத்தி தொழிலாளர்களுக்குத் தேவையான ஆடைகளைத் தைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் பஸ்களை ஓட்டுவதற்குத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர தையல் மெஷின்களை வைத்து தையல் தொழில் நடத்துவதற்கு அல்ல.

THIRU K. M. SUBRAMANIAM : Will the Government consider the uniform policy of supplying cloth to all the transport workers whether they are in Pandya or in any other Transport Corporation and allow them to stitch their own uniforms so that they will not be wanting in size and may I also know what is the rate for stitching of uniforms ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The suggestion made by the hon. Member is a very good one but it has to be placed before the workers' union of the respective Transport Corporations and the hon. Member will agree that unions also should



accept this; Then only it will be possible for implementation. As far as the State Transport Department is concerned, we are giving Rs. 18 for checking inspectors, time-keepers and other supervisory staff, and Rs. 16 for technical staff like drivers and conductors, towards stitching charges.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் மூலம் அந்தத் தொழிலாளர்களுக்கு வருடத்திலே எந்த மாதத்திலே எத்தனை கெஜம் துணி அளிக்கப்படுகிறது என்பதை அரசு அறிவிக்குமா ? மற்ற தொழிலாளர்களுக்கும் ஸ்டிரீட்ச்சுடு யூனிபார்ம் எந்த மாதத்தில் எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே இரண்டு செட்கள், மூன்று செட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் எந்த மாதத்திலே என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, பஸ் கண்டக்டர்களுக்கும் டிரைவர்களுக்கும் கொடுக்கக்கூடிய ஆடைகளைத் துணியாக, கதர்த் துலியாகக் கொடுப்பதால் அது விரைப்பாக இல்லாத காரணத்தினால் அவர்களுடைய அழகே குறைந்துவிடுகிறது. ஆகவே மில் துணிகளை எப்படி போலீஸ்காரர்களுக்கு மில் துணி கொடுக்கப்படுவதால் அவர்கள் விரைப்பாக இருக்க முடிகிறதோ அதைப்போன்று மில் துளிகளைக் கொடுப்பதற்கு அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை. அதுவும் சுதந்திர தின வெள்ளி விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் அதற்குள் கதரை மறந்துவிட வேண்டாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற துணியின் வண்ணத்தை மாற்ற வேண்டுமென்று ஏதாவது விண்ணப்பம் ளூந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படியொன்றும் கோரிக்கை வரவில்லை.

[1972 ஆகஸ்ட் 17

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, நிழற்குடைகள் சென்னை நகரத்திலே இருக்கின்றவர்களுக்குப் பயன்படுகின்றன. சென்னை நகரத்திலே பஸ்களிலே செல்கின்ற பயணிகளிடத்தில் எப்படி பஞ்சாயத்து யூனியன் டெவலப்மெண்ட் டாக்ஸ் என்று போடுகிறதோ—அதைப்போன்று ஒரு வரியை வாங்கி அந்த வருமானத்திலிருந்து நிழற்குடைகளை அமைக்க போக்குவரத்துத் துறை முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்பொழுது இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நெரிசலைப் போக்குவதற்கு நிழற்குடைகள் அமைக்கப்பட்டாலும், மாடிபஸ்களை அதிகமாக்கி சீக்கிரமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாடி பஸ்கள் பரீட்சார்த்த மாகப் பயன்படுத்தப்படுகின்றன. பம்பாயிலே பயன்படுத்துகிறார்கள். இதிலே இருக்கின்ற ஒரு சங்கடம் என்னவென்றால் வேண்டிய பொருள்கள் கிடைக்கவில்லை, அவை வெளிநாட்டிலிருந்துதான் பெற வேண்டிய நிலைமையில் நாம் இன்னும் இருக்கிறோம்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether there is any type-design for these bus shelters?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முக்கியமாக டெர்மினஸ் இருக்கின்ற இடங்களிலே டைம்டேபிள்ஸ் வைக்கப்படுகின்றன.

We have got certain type designs for erection of these bus shelters.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சீரணியின் சார்பாக எத்தனை நிழற்குடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீரணியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாளையொட்டி நல்ல அளவுக்கு 48 இடங்களில் நிழற்குடைகளை அமைத்துத் தந்திருக் கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 17]

## அறநிலையங்கள் நடத்தும் மருத்துவ மனைகள்

* 145 வினா.—திரு. என். கிட்டப்பா/திரு. தி. சி. ஆ. சிவப் பிரகாசம் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக இந்து அறநிலையத்துறையின் சார்பில் எத்தனை மருத்துவ மனைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன ?

(இ) அவைகள் எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இருபது.

@ (இ) ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள் நடத்தக்கூடிய அளவுக்கு உபரி நிதிகள் உள்ள கோயில்களிலிருந்து அந்த நிதியைப் பயன்படுத்தி மருத்துவ மனைகள் ஆங்காங்கு அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோயில்களுடைய உபரி நிதியிலிருந்து மருத்துவமனைகள் தொடங்கப் படுகின்றன. அப்படி எந்தக் கோயில் நிதியில் உபரி நிதி இருக்கிறதோ, அந்தக் கோயில் நிதியிலிருந்து மருத்துவமனைகள் தொடங்க அறங் காவலர்கள் முன்வந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து அனுமதி கொடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, கோயில் உபரி நிதியிலிருந்து, கலைணித்து இருக்கின்ற கோயில்களைப் புதுப்பிக்க நிதி அளிக்க முக்கியத்துவம் தரப்படுகிறதா அல்லது செக்குலர் ஆக்டி விடிஸ் என்ற முறையிலே ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் போன்றவற்றிற்கு செலவு செய்ய முக்கியத்துவம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில் திருப்பணிகள் செய்வதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, மீதியிருக்கிற பணத்தை வைத்து மருத்துவமனைகளை ஆரம்பித்திருக்கிறோம். அரசாங்கத்தி லிருந்து அவற்றிற்கு கணிசமான தொகை, திருப்பணிக் காரியங் களுக்குக் கொடுக்கப்படுவதால் பொதுமக்களுக்கு நன்மையான காரியங்களுக்கும் அந்தக் கோயில் நிதியைப் பயன்படுத்தலாம் என்ற முறையிலேதான் அரசு பயன்படுத்தி வருகிறது.

@ 134–135-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 17

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, நிழற்குடைகள் சென்னை நகரத்திலே இருக்கின்றவர்களுக்குப் பயன்படுகின்றன. சென்னை நகரத்திலே பஸ்களிலே செல்கின்ற பயணிகளிடத்தில் எப்படி பஞ்சாயத்து யூனியன் டெவலப்மெண்ட் டாக்ஸ் என்று போடுகிறதோ—அதைப்போன்று ஒரு வரியை வாங்கி அந்த வருமானத்திலிருந்து நிழற்குடைகளை அமைக்க போக்குவரத்துத் துறை முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்பொழுது இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நெரிசலைப் போக்குவதற்கு நிழற்குடைகள் அமைக்கப்பட்டாலும், மாடிபஸ்களை அதிகமாக்கி சீக்கிரமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாடி பஸ்கள் பரீட்சார்த்த மாகப் பயன்படுத்தப்படுகின்றன. பம்பாயிலே பயன்படுத்துகிறார்கள். இதிலே இருக்கின்ற ஒரு சங்கடம் என்னவென்றால் வேண்டிய பொருள்கள் கிடைக்கவில்லை, அவை வெளிநாட்டிலிருந்துதான் பெற வேண்டிய நிலைமையில் தாம் இன்னும் இருக்கிறோம்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether there is any type-design for these bus shelters?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முக்கியமாக டெர்மினஸ் இருக்கின்ற இடங்களிலே டைம்டேபிள்ஸ் வைக்கப்படுகின்றன.

We have got certain type designs for erection of these bus shelters.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சீரணியின் சார்பாக எத்தனை நிழற்குடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீரணியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாளையொட்டி நல்ல அளவுக்கு 48 இடங்களில் நிழற்குடைகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 17]

## அறநிலையங்கள் நடத்தும் மருத்துவ மனைகள்

* 145 வினா.—திரு. என். கிட்டப்பா/திரு. தி. சி. ஆ. சிவப் பிரகாசம் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக இந்து அறநிலையத்துறையின் சார்பில் எத்தனை மருத்துவ மனைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன ?

(இ) அவைகள் எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இருபது.

@ (இ) ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள் நடத்தக்கூடிய அளவுக்கு உபரி நிதிகள் உள்ள கோயில்களிலிருந்து அந்த நிதியைப் பயன்படுத்தி மருத்துவ மனைகள் ஆங்காங்கு அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோயில்களுடைய உபரி நிதியிலிருந்து மருத்துவமனைகள் தொடங்கப் படுகின்றன. அப்படி எந்தக் கோயில் நிதியில் உபரி நிதி இருக்கிறதோ, அந்தக் கோயில் நிதியிலிருந்து மருத்துவமனைகள் தொடங்க அறங் காவலர்கள் முன்வந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து அனுமதி கொடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, கோயில் உபரி நிதியிலிருந்து, கூனித்து இருக்கின்ற கோயில்களைப் புதுப்பிக்க நிதி அளிக்க முக்கியத்துவம் தரப்படுகிறதா அல்லது செக்குலர் ஆக்டி விடிஸ் என்ற முறையிலே ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் போன்றவற்றிற்கு செலவு செய்ய முக்கியத்துவம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில் திருப்பணிகள் செய்வதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, மீதியிருக்கிற பணத்தை வைத்து மருத்துவமனைகளை ஆரம்பித்திருக்கிறோம். அரசாங்கத்தி லிருந்து அவற்றிற்கு கணிசமான தொகை, திருப்பணிக் காரியங் களுக்குக் கொடுக்கப்படுவதால் பொதுமக்களுக்கு நன்மையான காரியங்களுக்கும் அந்தக் கோயில் நிதியைப் பயன்படுத்தலாம் என்ற முறையிலேதான் அரசு பயன்படுத்தி வருகிறது.

@ 134–135-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 17

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சில கோயில்களிலே சிலைகளைச் சுரண்டியெடுத்து அதை மருந்தாக விற்பனை செய்கிறார்கள். இதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பழனியிலே உள்ள சிலையில் நவ பாஷானம் இருப்பதாகவும் அதை அர்ச்சகர்கள் சுரண்டி சுரண்டி விற்பதாகவும் சொல்லப்படுகிறதே அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சுரண்டல் வேலை தற்போது இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அறநிலையத்துறையின் சார்பில் செயல்பட்டுவரும் இந்த மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் உள்ள மருத்துவ மனைகள் எத்தனை உள்ளன ? குறிப்பாக, சமயபுரம் மாரியம்மன் ஆலயத்தால் நடைபெறும் அந்த மருத்துவ மனையில் எவ்வளவு படுக்கை வசதிகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள 20 மருத்துவமனைகள் சித்த வைத்திய முறையிலே செயல்படுவதாகும். பழனி முருகன் ஆலயத்தின் சார்பில் 20 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையை 14—2—1972 அன்று நம்முடைய முதலமைச்சரவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். அங்கு மட்டும் எம்.பி.பி.எஸ். டாக்டரைப் போட்டு நாம் நடத்தி வருகிறோம். மற்ற எல்லா இடங்களிலும் சித்த வைத்திய முறையிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பழனியில் புதிதாக ஆரம்பித்திருக்கும் இந்த மருத்துவமனையில் சித்த வைத்திய முறையில் வைத்தியர்களை வைத்து மருத்துவ மனையைக் கொஞ்சம் விரிவுபடுத்த அரசுக்கு ஏதேனும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கனவே அங்கே சித்த வைத்திய மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. புதிதாக இந்த மருத்துவமனையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா ; தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் ஒரேயொரு ஆலயத்தின்மூலம்தான் இந்த மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே பல கோயில்களிலே நல்ல வருமானம் வருகிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் மருதமலையில்



1972 ஆகஸ்ட் 17]

நல்ல வருமானம் வருகிறது என்று தெரிகிறது. அந்த மருதமலையின் வருமானத்திலிருந்து அந்தப் பகுதியில் ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are there hospitals run by Madathipathis and other charitable institutions? If not, will this Government persuade them to run hospitals with the excess money they possess?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் கொடுத்துள்ள இந்த 20 மருத்துவ மனைகளுக்கும் அறநிலையத்துறையின் சார்பாக கொடுக்கப்படும் நிதி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தந்தக் கோயிலினுடைய நிதியிலிருந்து நாம் செலவு செய்கிறோம். அங்கே வரும் நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து தேவையான தொகை செலவிடப்படுகிறது. குறிப்பாக எந்த அளவுத் தொகை செலவாகிறது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சித்த மருத்துவத்திற்கு இப்பொழுது நாட்டிலே கிராக்கி இருக்கிறது. நிறைய பி.ஐ.எம். டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வரும் எந்தக் கோயிலாக இருந்தாலும் அந்தக் கோயிலில் இப்படிப்பட்ட சித்த வைத்தியத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பொதுவாக ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வரும் கோயில்கள் என்று கொள்ள முடியாது. ஏனென்றால் அந்தந்தக் கோயில்களுக்கு ஆகும் செலவைப் பொறுத்தும், மீதியாகும் பணத்தை வைத்தும்தான் ஆரம்பிக்க முடியும். ஆனால் சித்த வைத்திய மருத்துவத் துறையில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்களைத்தான் நியமனம் செய்ய வேண்டுமென்ற கொள்கையை அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அமெரிக்காவில் கிறிஸ்டியன் சயன்ஸ் என்ற குழுவின் மூலம், பிரார்த்தனையின்மூலம், மருந்து கொடுக்காமல் நோய்களைக் குணப்படுத்துகிறார்கள். அப்படி, இங்கேயும்கூட மருந்து கொடுக்காமல் பழனி முருகனைப் பிரார்த்திப்பதன்மூலம் that is, only through prayers. நோயைக் குணப்படுத்துவதற்கு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அம்மையார் அவர்களுக்கு அப்படி நம்பிக்கையிருந்தால் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, விபூதி, துளசி தீர்த்தம் இவைகளினால் தீராத நோயெல்லாம் தீர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிச் செய்து தெய்வீக அம்சம் இருக்கிற மருந்துகளைப் பயன்படுத்துவது பற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, துளசி தீர்த்தம் பெறுவதில் ஆட்சேபணையில்லை. அதே நேரத்தில் மருந்துகளை தேவையானவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற அக்கறையையும் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கொடுத்திருக்கும் பட்டியலில் சில முக்கியமான கோயில்கள், குறிப்பாக ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை, அதிகச் செல்வாக்கு பெற்ற சமயபுரம் போன்றவை இருக்கிறதே, இந்த இடங்களிலெல்லாம் இம்மாதிரி மருத்துவமனைகள் அவர்களின் வருவாயிலிருந்து மாத்திரம் இருப்பதற்குப் பதிலாக தேவையான அளவிற்கு விரிவுபடுத்த அரசு உதவி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தந்தக் கோயிலின் நிதியிலிருந்து நாம் இந்த மருத்துவமனைகளைத் துவங்குகிறோம். அரசு நிதியிலிருந்து செய்வதற்கில்லை. அந்தந்தக் கோயிலின் அதிக நிதியிலிருந்து மீதம் ஆகிற நிதியிலிருந்து தொடங்கியிருக்கிறோம். மேலும் 10, 15 இடங்களில் தொடங்குவதற்கு ஆரம்ப வேலைகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## (3) கவன ஈர்ப்பு

### தேனாம்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, viz., the Fire Accident which took place at Teynampet in July 1972, resulting in loss of life and property.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சென்னையில், தியாகராயர் சாலைக்கு வடக்கிலும், அரசாங்கக் கால்வாய்க்குக் கிழக்கிலும், அண்ணா சாலைக்கு மேற்கிலும் அமைந்துள்ள குடிசைப் பகுதியில் 14—7—1972-ல் பிற்பகல் சுமார் 2-30 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தின் காரணமாக 158 குடிசைகள் பாதிக்கப்பட்டன. தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 372 ஆகும். இந்தத் தீ விபத்தால் சுமார் ரூ 1 லட்சம் அளவிற்கு விரயமேற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. ஒரு குடிசையில் கவனிக்கப்படாமல் விடப்பட்ட எரி அடுப்பிலிருந்து கிளம்பிய தீப்பொறியினால்தான் தீ விபத்து ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிய வருகிறது. மூர்த்தி என்பவரின் மகன் சுமார் 4 வயதுள்ள ராஜு என்கிற குழந்தை ஒன்று இத் தீவிபத்தில் இறந்து விட்டது. இறந்த குழந்தையின் தகப்பனாருக்கு முதலமைச்சரின் பொது இடர் உதவி நிதியிலிருந்து ரூ. 500 ரொக்கப் பணம் அனுமதிக்கப்பட்டு 23—7—1972-ல் அவருக்குக் கொடுக்கப்பட்டது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளை மீண்டும் கட்டிக் கொள்வதற்கும், துணிகள் வாங்கிக்கொள்ளவும் அவர்களுக்கு உடனடி ரொக்க உதவித் தொகையாக ரூ. 16,840 அளிக்கப்பட்டது. இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண். | விவரங்கள் | வழங்கப்பட்ட இடருதவித் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | குடிசைப் பகுதியிலிருந்த 154 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு. (குடிசையை மீண்டும் கட்டிக்கொள்வதற்கு ரூ. 60-ம், துணி மானியத்திற்கு ரூ 20-ம் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 80 விதம் | 12,320 00 |

| விவரங்கள். | தொடர் எண். | வழங்கப்பட்ட இடருதவித் தொகை. ரூ. |
|---|---|---|
| 2. வேறிடத்தில் குடியிருந்த 4 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு (குடிசையை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக) ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 60 வீதம் | | 240 00 |
| 3. வாடகைக்குக் குடியிருப்பவர்கள் 214 பேருக்கு (துணி மானியத்திற்காக) குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ 20 வீதம் | | 4.280 00 |
| மொத்தம் | | 16,840 00 |

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் தற்காலிக இடவசதி அளிக்கப்பட்டது. மாநகராட்சி அதிகாரிகளால் அவர்களுக்கு உணவும் அளிக்கப்பட்டது.

## (4) அறிக்கைகள் அளித்தல்.

**(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவையின் முன் வைத்துள்ளேன்.



**(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

**(இ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றுவது அறிக்கை.**

THIRU K. A. WAHAB : Sir, I rise to present the Third Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண சட்ட முன்வடிவு.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, மோட்டார் வண்டி உடமையாளர் பயணிகள் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.**

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Fleet Operators Stage Carriage (Acquisition) Amendment Bill, 1972".

The motion was put and carried and leave was granted

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER: The Bill is introduced.

## (6) தனியார் அலுவல்கள்.

### (i) சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/72.)

திரு. ஆ. கு. சுப்பையா: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் சிறு இனாம்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் முறையே வழிமொழியப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சபையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்த மசோதா சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களையும், அந்த மசோதாவின் நோக்கங்களையும் சொல்வதற்கு முன் வருகிறேன். இந்த நாட்டில் ஒரு காலத்தில் ராஜாக்கள், மன்னர்கள், நிலங்களை எல்லாம் தனி நபர்களுக்கும், கோவில், மடம் போன்றவைகளுக்கும் இனாமாகக் கொடுத்ததன் மூலம் அந்த நிலங்கள் எல்லாம் சீரழிந்து சரியான முறையில் விவசாயம் நடைபெறாமல் உணவு உற்பத்திக்குப் பங்கம் ஏற்படுத்துகின்ற முறையில் இருந்து கொண்டு வந்தன. நாடு விடுதலை பெறுகின்ற சமயத்தில் லட்சக் கணக்கான இனாம் விவசாயிகள், இனாம் ஒழிப்பு மாத்திரமல்லாமல் ஜமீன் போன்ற ஒழிப்புகளையும் செய்து அந்த நிலங்களை எல்லாம் நிலத்திலே பாடுபடுகின்ற நிலத்தைப் பண்படுத்தி உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று பெரும் கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சி நாடு விடுதலை பெறுவதற்கு உதவியாகவே இருந்தது.



அம் மாதிரியான நிலங்களை எல்லாம் ஒழிப்பிலே கொண்டு வந்து ரயத்துவாரியாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. அந்தக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளச் செய்ய விவசாயிகள் பெரிய தியாகங்களை எல்லாம் செய்து வந்திருக்கிறார்கள்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

1948-ம் வருஷம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தை அரசு கொண்டு வந்தது. அந்தச் சமயத்தில், அந்தச் சட்டம் அமலாகிய காலத்தில் அதிலுள்ள ஓட்டைகள் இனாம்தாரர்களுக்குச் சாதகமாக இருந்தன. அன்றிருந்த ஆட்சியாளர்கள் அந்தச் சட்டத்தைப் பூரணமாக அமல் படுத்தாத அளவிற்கு ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட சிறிய பெரிய இனாம்கள் விடுபட்டிருந்தன. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இனாம் ஒழிப்புச் சட்டம் வந்த பிறகும் கூட இனாம் தாரர்களுடைய கெடுபிடியில் இருந்து, சுரண்டல்களில் இருந்து விவசாயிகள் விடுபடவில்லை என்ற காரணத்தால் விவசாயிகள் தொடர்ந்து கிளர்ச்சிகள் செய்து வந்தார்கள். அந்தக் கிளர்ச்சியின் பயனாக, விவசாயிகளுடைய போராட்டத்தின் பயனாக, இனாம் விவசாயிகள் செய்த தியாகத்தின் பயனாக 1963-ம் வருஷம் இருந்த அரசாங்கம் விவசாயிகளுடைய நியாயத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்கள் 1963-ம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எஞ்சி இருக்கும் இனாம் நிலங்களை யெல்லாம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்தார்கள். அவ்வாறு கொண்டுவந்தபோது அதிலிருந்த தவறான அம்சங்களை அன்றைய தினம் இருந்த சட்டமன்ற அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டியும் கூட அந்தத் தவறான அம்சங்களைப் போக்கி நல்ல முறையான இனாம் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவர அன்றையதினம் இருந்த அரசாங்கம் தவறி விட்டது. அதிலுள்ள குறைபாடுகளைத்தான் இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தக் குறைபாடுகளைப் போக்குவதன் மூலமாக நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற லட்சக்கணக்கான விவசாயிகள் பலனடைவார்கள். அவ்வாறு பலனடைகிறபோதுதான் அந்த விவசாயிகள் நல்ல முறையில் விவசாயத்தைச் செய்ய முடியும். உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியும். அந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கம் நிறைவேற முடியும். அந்த வகையிலேதான் என்னுடைய இந்த மசோதாவிலே சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். 1963-ம் ஆண்டு சட்டத்திலே செக்ஷன் 2-ல், புற கிராம

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 ஆகஸ்ட் 17

மாகவோ அல்லது சிறு கிராமமாகவோ இருந்தால்தான் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்று சொல்லப்படுகின்றது. என்னுடைய திருத்தத்திலே என்ன சொல்லுகிறேன் என்றால், ஒரு கிராமத்திலே பத்து ஏக்கர் இனாம் நிலமாக இருந்தாலும் சரிதான், ஐந்து ஏக்கர் இனாம் நிலமாக இருந்தாலும் சரிதான், இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுகிறேன். இவ்வாறு கணக்குப் பார்த்தால் இன்னும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படாது விடுபட்டிருக்கிறது. ஆகவே, ஒரு கிராமத்திலே ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் அளவே இனாம் நிலங்கள் இருந்தாலும் அவற்றையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்த முடியும்.

அடுத்து எடுத்துக் கொண்டால், செட்டில்மென்ட் நடப்பதற்கு முன்னால் எவ்விதம் விவசாயம் செய்து கொண்டிருக்கின்றானோ அவன் விவசாயம் செய்து மேல்வாரம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது—மேல்வாரம் கொடுப்பதும் இனாம் கொடுப்பதுபோல்தான்—செட்டில்மென்ட் கோர்ட் விசாரணை செய்து கொண்டிருக்கும் நிலையில் சிவில் கோர்ட்டுகள் தலையிடுகின்றன. சிவில் கோர்ட்டுகள் தலையிட்டு விவசாயிகளுக்கு உரிமை இல்லையென்று சொல்லக்கூடிய அளவுக்குத் தீர்ப்பளித்து விடுகிறார்கள். செட்டில்மென்டில் விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது சிவில் கோர்ட்டார் அதிலே தலையிட்டு இனாம்தாரர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிப்பதன் காரணமாகப் பல்லாண்டு காலமாக அந்த நிலத்திலே உழுது கொண்டிருந்த வாரம்தாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, எக் காரணத்தைக் கொண்டும் சிவில் கோர்ட் இதிலே தலையிடக் கூடாது என்று நான் என்னுடைய மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் செட்டில்மென்ட்டில் விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது சிவில் கோர்ட் தலையிடாமல் இருக்க செய்வதன் மூலம்தான் அந்த நிலங்களிலே விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தர முடியும் என்பது என்னுடைய வாதமாகும்.

அடுத்து, அந்த நிலத்தை யாருக்குப் பட்டா மாற்றிக்கொடுப்பது என்கிற கேள்வி எழுகிறது. அப்படி பட்டா செய்து கொடுக்கிற போது அந்த நிலத்தை உழுது கொண்டிருக்கிறவராக இருந்தால்



1972 ஆகஸ்ட் 17] [திரு. ஆ. கு. சுப்பையா]

1960-ம் வருஷத்திற்கு முந்தி 12 ஆண்டுக் காலம் தொடர்ந்து அந்த நிலத்தை உழுது வந்திருப்பதாக நிரூபித்தால் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதேசமயம் இனாம்தாரர்களாக இருந்தால் 3 வருஷம் அதிலே உழுது வந்திருப்பதாக நிரூபித்தால் போதும், பட்டா செய்து கொடுக்கலாம் என்று இருக்கிறது. இது மிக, மிக பாரபட்சமானது. ஆகவே இனாம்தாரர்களும் மூன்று வருஷத்திற்குப் பதிலாக 12 வருஷம் உழுது கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு உள்ளதுபோல்—தொடர்ந்து உழுது வந்திருப்பதாக நிரூபித்தால்தான் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று அதிலே நான் சொல்லி இருக்கிறேன். அந்த முறையில் இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

மற்றொரு பெரிய ஆபத்து கோயில், மடங்கள் 10 ஏக்கர் வரையிலும் சொந்தப் பண்ணை என்று வைத்துக்கொள்ளலாம் என்பதாக இந்தச் சட்டத்தில் இருப்பதுதான். பெரும் பெரும் பண்ணைகளை எல்லாம் எடுத்து, பண்ணையாட்களுக்கு இருந்த கஷ்டத்தை எல்லாம் நீக்கிவிட்ட நேரத்தில் புதியதாகக் கோயில் காரர்களையும், மடக்காரர்களையும் பண்ணை வைக்கச் சொல்லி விவசாயிகளை அவர்கள் அடிமைப்படுத்த நாம் இடம் கொடுக்கக் கூடாது. இதுவும் தவறு என்று நான் சொல்கிறேன். கோயில், மடங்களுக்கும் விலக்கு இருக்கக் கூடாது. கோயில், மடங்கள் பண்ணை வைத்துக் கொள்ளலாம் என்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிற விலக்கை ரத்து செய்துவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்தச் சட்டத்தில் நான் சொல்லக்கூடிய வகையில் பல திருத்தங்கள் செய்வதன் மூலமாகத்தான் உண்மையிலேயே விவசாயிகள் நிலத்திற்கு உடையவர்கள் ஆவார்கள்.

இன்னும் கோர்ட்டுகளை எடுத்துக் கொண்டால் கூட புதுக்கோட்டைப் பகுதியில் விவசாயிகளுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கியிருப்பதாகச் சொல்ல முடியாது. விவசாயிகள் மனுக் கொடுக்கிறார்கள். நாங்கள் நீண்டகாலமாக இந்த நிலத்தைச் சாகுபடி செய்து வருகிறோம், அதற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறது என்று மனுக் கொடுத்தாலும் கூட செட்டில்மென்டு அதிகாரிகள் அவற்றைத் தூக்கிவைத்துவிட்டு நியாயமான விசாரணை கூட நடத்த

மறுக்கிறார்கள். இனம்தாரர்கள் கொடுக்கக்கூடிய மனுக்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்கிவிடுகிற நிலைமை தான் இருக்கிறது. புதுக்கோட்டைப் பகுதியில் இதுபோன்ற தீர்ப்புகள் நிறைய வழங்கப்பட்டிருக்கிறது. நான் கொண்டு வந்திருக்கிற மசோதாவின்படி சட்டத்தில் திருத்தமாக ஏற்று அரசாங்கம் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும். இது விவசாயிகளுக்குச் சாதகமான அரசாங்கம். ஆகவே சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டைகளை அடைப்பதற்கு நான் சொல்லியிருக்கும் கருத்துக்களை எல்லாம் சட்டத்தில் ஏற்றுச் செயல்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனம் நிலங்களை ரயத்வாரியாகச் செய்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்கிற முகத்தான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இனம்கள் என்ற பெயரால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் ஒருசிலர் அனுபவித்து வந்த காலம் மாறி இன்றையதினம் அந்த நிலங்கள் எல்லாம் ஏழை குடியானவர்களுக்கு வழங்கப்படுகிற நிலை ஏற்பட சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, இந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு நல்ல திட்டங்கள் தீட்டப்படுவதை மகிழ்ச்சியோடு வரவேற்கிற நேரத்தில், இன்னும் சட்டத்தில் உள்ள ஒரு சில ஓட்டைகள் மூலம் இன்னும் பல இனம்கள்—கோயில் இனம், மோகினி இனம் என்கிற பலப்பல பெயர்களில் நாட்டில் இருந்து கொண்டு வருகின்றன என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதன் காரணமாக அந்த அந்த வட்டாரத்தில் உள்ள எழைக் குடியானவர்கள் பல விதத்தில் கஷ்டப்படுகிறார்கள்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில்—இராணிப்பேட்டை நெளலாக் பகுதி பிரச்சினைபற்றி இந்த அவையில் கூறியிருக்கிறேன். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதற்காகத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றி விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நெளலாக் பகுதியில் ஆரயிக்கணக்கான ஏக்கரா நிலங்கள் இனமில் சேரவில்லை, தனிப்பட்டவர்களுக்கும் சேரவில்லை. ப்ரீ ஹோல்டு லாண்டு என்று ஒருசிலர் அவற்றுக்குச் சொந்தம் வைத்திருக்கிறார்கள். ஐம்பது, அறுபது ஆண்டுகளாக விவசாயிகள் அந்த நிலத்தில் உழுது சாகுபடி செய்து வருகிறார்கள். ஒருவருக்



கொருவர் சட்டப்படி மிராஸ்தார் கூடச் செய்து நிலப் பரிவர்த்தனை செய்துவருகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கே உரிமையாக்கப்படாது—நில மேல்வாரியை. வாரத்தை அவர்களிடம் இருந்து ஒருசிலர் வசூல் செய்துவருகிறார்கள், நிலம் தங்களுக்கே சொந்தம் என்கிற அடிப்படையில். நம்முடைய இனம் சட்டத்தில் உள்ள ஓட்டை காரணமாகத்தான் இந்த நிலை நீடிக்கிறது. நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிற வகையில் அந்தப் பகுதியில் அந்த நிலத்தை 50, 60 ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வருகிறவர்களுக்கே நிலம் சொந்தமாகக்கூடியவிதத்தில் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அந்தப் பகுதியில் பஞ்சாயத்துகள் இருந்தும் இன்னும் அரசாங்கம் அவற்றை அங்கீகரிக்காத நிலைதான் இருக்கின்றது. நெளலாக் பகுதி நிலங்களை 50, 60 ஆண்டுகளுக்கு மேலாக சாகுபடி செய்து வருகிற விவசாயிகள் கூட இன்றைக்கு கிணறு வெட்டவோ, பம்புசெட்டு அமைக்கவோ—இதுபோன்ற அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்காக எந்த எந்த இனத்தின் கீழ் கடன் கொடுத்தாலும் அவற்றைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாகவே இருக்கிறார்கள். காரணம் அந்த நிலங்கள் யாருக்கோ சொந்தம் என்கிற நிலைதான் இருக்கிறது. நம்முடைய சட்டத்தில் உள்ள ஓட்டை காரணமாக தப்பி இருக்கிறார்கள். அதை நம்முடைய வருவாய்த்துறையினரும், சட்டத் துறையினரும் கண்டுபிடித்து அந்த நிலங்களை எல்லாம் அவற்றைப் பலகாலமாகப் பயிரிட்டு வருகிற விவசாயிகளுக்கே சொந்தமாக்க வேண்டும். விவசாயிகள் லாண்டு சீலிங் ஆக்ட்படி நஷ்ட ஈடு கொடுப்பதற்குக் கூடத் தயாராய் இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு கடன் வசதிகள் பெறமுடியவில்லை. உரக் கடன் அல்லது கிணறு வெட்டக் கடன் இவைகள் பெற, கூட்டுறவு வங்கிகள் கூட கடன் கொடுப்பதற்கு முன்வருவதில்லை. தெரியாத்தனமாக் முன்பு கொடுத்துவிட்டார்கள். அதை இப்போது வசூல் செய்வது கஷ்டமாகயிருக்கிறது என்று கூட்டுறவு வங்கிகள் சொல்லக்கூடிய அளவிற்குப் பல சிக்கல்கள் உள்ளன. ஏறத்தாழ ரூ. 20,000-க்கு சில பேர்களுக்கு சாதாரண நிலம் என்று கடன் கொடுத்திருக்கிறார்கள். அதை வசூலிக்கிறபோது எந்தவிதமான ஆதாரமும் வசூலிப்பவர்களுக்கு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள்

வாங்கிய கடனை நாணயமாகக் கட்டினால்தான் உண்டு என்ற அளவில் நிலைமை இருக்கிறது. அங்கு நூற்றுக்கணக்கான விவசாயிகள் அரசாங்கத்திலிருந்து சாதாரண இந் நாட்டு பிரஜை, தமிழ் நாட்டிலுள்ள சாதாரணப் பிரஜைகள் பெறக் கூடிய உரிமைகளைப் பெற முடியாத பிரஜைகளாக வாழ்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தில் இதையும் கொண்டு வந்து அல்லது வேறுவிதமான அடிப்படையில் லான்ட் சீலிங் அடிப்படையில் கொண்டு வந்து அங்குள்ள அந்த விவசாயிகளுக்கு வேண்டியதைச் செய்து தர வேண்டும்—அவர்கள் எல்லாவிதமான நஷ்டயீட்டையும் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்—அதை இந்தத் திருத்தச் சட்டத்தில் செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கோட்டூர் தொகுதி உறுப்பினர் திரு. சுப்பையா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இனாம் திருத்தச் சட்டத்தை ஆதரித்து சில விஷயங்களை நான் இச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இனாம் ஒழிப்புச் சட்டம் என்றால் இனாமை ஒழிப்பது என்பது அதன் பெயரிலிருந்தே தெரியும். ஆனால் ஏழு, எட்டு ஆண்டு அனுபவம் நமக்கு எதைக் காட்டுகிறது? இனாம்களை ஒழிப்பதற்குப் பதிலாக இனாம்தார்களை பாதுகாக்கக்கூடிய விதத்தில்தான் சட்டம் அமல்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாகக் காணலாம், அதை மறுக்க முடியாது. எந்த நோக்கத்தோடு ஒரு சட்டம் செய்யப்படுகிறதோ அதை பல்வேறு திசைகளில் திருப்பி அதிகாரவர்க்கமும் கோர்ட்டும் பல்வேறுவிதமான ஊழல்களைப் பயன்படுத்தி சட்டத்தின் நோக்கத்தையே பாழ்படுத்தக் கூடிய விதத்தில் இனாம் குடிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக அவர்களது உரிமைகள் பறிக்கப்படக்கூடிய அளவிற்குத்தான் சட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

உதாரணமாக, ஒரு கிராமம் இனாம் கிராமமாக அறிவிக்கப்பட்டு விட்டால் இனாம்தாருக்கு உள்ள உரிமை உடனே ரத்தாகிவிடுகிறது. அந்த நிலையில் அந்தக் கிராமத்தைச் சொந்தமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் எந்தவிதத்திலும் குடியானவனை நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. உடனே இனாம்தார்கள் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் வரை சென்று ரிட்பெட்டிஷன்



போட்டு இரண்டு, மூன்று வருட காலம் இழுத்தடிக்க முடிகிறது. தங்களுக்கு உரிமை இருப்பதாகச் சொல்லி மூன்று வருட காலம் நடவடிக்கைகளைத் தடைபடுத்தக்கூடிய முறையில் நிலைமை இருந்து வருகிறது. அவர்கள் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று இனாம்தார்களிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை பெற்று பழைய பாக்கிகளை வசூலிக்கும் முறையில் இனாம் குடிகளை வதைத்துப் பல தில்லுமுல்லுகள் செய்கிறார்கள். ஆகவே, இயற்றப்பட்டுள்ள சட்டத்தை முடக்கும் வழிவகைகள் அடைக்கப்பட வேண்டும். இனாம்தார்களுக்கு உள்ள உரிமைகள் குடிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்படும் வகையில் அமைய சட்டத்திலுள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். கோர்ட்டுக்குப் போவதைத் தடுப்பது அவசியமாகிறது. இவ்வகையில் பல்வேறு விதமான மாற்றங்கள் செய்யக்கூடிய முறையில் திருத்தச் சட்டம் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை வட்டாரத்தில் 43 இனாம் கிராமங்கள் உள்ளன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்கள் பூராவும் பெரிய செல்வந்தர்களாக, செல்வாக்குள்ளவர்களான செட்டியார்களால் வாங்சப்பட்டு அங்குள்ள குடிகள் பலவித தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். பழையவரி பாக்கி, வாடகை பாக்கி என்று வீடுகள் எல்லாம் ஜப்தி செய்யப்படுகின்றன. கோர்ட்டில் வழக்குகள் இருக்கின்றன. ஆக, சட்டம் கொண்டு வருவதற்கே பெரிய போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. பிறகு சட்டங்கள் வந்த பிறகு அதை அமல் நடத்த முடியாமல் அதிகார வர்க்கமும் கோர்ட்டுகளும் வக்கீல்களும் வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது சர்க்கார். திரு. சுப்பையா அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை. ஏழெட்டு ஆண்டு அனுபவத்தில் இனாம் ரயத்துக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்தச் சர்க்கார் காணும்போது சர்க்கார் தரப்பிலிருந்தே இப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி அந்தக் கடமையைச் சர்க்கார் செய்யத் தவறியதன் காரணமாகத்தான் எதிர் கட்சிக்காரர்கள் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆயிரக்கணக்கான இனாம். ரயத்துக்கள் விரட்டப்பட்டிருக்கிறார்கள். 5,000 ரூபாய் அல்லது பத்தாயிரம் ரூபாய் கொடுத்து இனாம்களை சாஸனம் எழுதி வாங்கிக் கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கத் திட்டம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

[திரு. மணலி. சி. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 17

ஆகவே, சட்டத்தில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். டெனன்ட் என்று போட்டிருக்கிறார்கள். ஆக்குபென்ட் என்ற வார்த்தை இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு பத்து நாட்கள் வக்கீல்கள் வாதாடுகிறார்கள். கோர்ட்களில் ஸ்டே வாங்கி கிராமத்தில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டி வருவதால், அதற்கு உதவியாக அதிகார வர்க்கத்தில் ஒரு பகுதி செயல்படுகிறது என்பதால் இத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. க்ளாஸ்வாரியாக வரும்போது பலவிஷயங்களை எடுத்துக் கூறி ருசுப்பிக்க முடியும். பார்ட் இனும், ஃபுல் இனும் என்றிருக்கிற வியாக்கியானங்களை வைத்து குடிகளுக்கு உள்ள உரிமைகள் கிடைக்கச் செய்யாமல் செய்கிறார்கள். ஐந்து ஏக்கர் நிலம் அல்லது அதற்கு மேற்பட்ட நிலம் என்றிருந்தால் அது இனுமாகக் கருதப்பட வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. எந்தவிதத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் குடியிருப்பவர்கள் வெளியேற்றப்படக் கூடாது. ஒரு நிலச்சுவாந்தார் உரிமை கொண்டாடினால் 12 ஆண்டுகள் சொந்த சாகுபடி செய்ய வேண்டும், அவரவர் குடும்பம், அவர் அமர்த்திய ஆள்கள் சேர்ந்து 12 ஆண்டுகள் சாகுபடி செய்தோம் என்ற உண்மையை அவர்கள் ருசுப்பிக்கத் தயாராயிருந்தால் அவர்களுக்கும் நிலத்திற்கும் சம்பந்தமுள்ளது பற்றி முடிவு செய்யலாம். புதுக்கோட்டையில் உள்ள, அந்த ஏரியாவில் உள்ள மிகுசக்தி வாய்ந்தவர்கள், அந்தப் பகுதியில் லேவாதேவி செய்யக்கூடியவர்கள், பெரிய இடங்களில் தொடர்புள்ளவர்கள், இந்த ராஜ்யத்தில் உள்ள மிகப் பெரிய தனவந்தர்கள், நல்ல சக்திவாய்ந்தவர்கள், பழைய பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்த 43 கிராமங்களை ஐயாயிரம், பத்தாயிரம் என்று கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். இனும்தார்களிடமிருந்து சிறிய, சிறிய தொகைக்கு விலைக்கு வாங்கி பல லட்ச ரூபாய் கறக்கக்கூடிய விதத்தில் நிலைமை இருக்கிறது என்பதைச் சர்க்கார் உணர வேண்டும். சர்க்கார் நடவடிக்கையில் குற்றம் கண்டு பிடிப்பதற்காக இதைச் சொல்லவில்லை. 1963-ல் இருந்தே நடக்கிறது. இதற்குமுன்பிருந்த சர்க்கார் கொண்டு வந்த சட்டம் அவ்வளவு மோசமாக அமல் நடத்தப்பட்டது. இந்தச் சர்க்கார் வந்த பிறகும் அது கவனிக்கப்படவில்லை. ஆகவேதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.



1972 ஆகஸ்ட் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

விவசாயிகளுக்கு விரோதமாகச் செயல்படும் விதத்தில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டுமென்றுதான் இது கொண்டுவரப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக உழுது அரை வயிற்றுக் கஞ்சி குடித்து, சில சந்தர்ப்பங்களில் அது கூடக் கிடைக்காமல் கஷ்டப்படும் மக்களுக்காக சோஷலிஸ பாணியில் செல்லும் இந்தச் சர்க்கார் வேண்டியதைச் செய்ய, தன் கடமையைச் செய்யவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரிவுவாரியாக வரும்போது என் கருத்துக்களைச் சொல்லலாம் என்றிருக்கிறேன். ஆகவே நல்லமுறையில் இதைப் புரிந்து கொண்டு ஆளும் கட்சியினர் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இனும் சம்பந்தமான தனியார் தீர்மானம் என்ற முறையிலே தோழர் சுப்பையா அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தீர்மானத்தினுடைய மூலமும், சாரமும் உண்மையிலேயே போற்றக்கூடிய ஒன்றுதான் என்றாலும், அதை அரசாங்கமே சட்ட ஆலோசகர்களைக் கலந்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது தான் முறையாக இருக்கும். அதுவும் இனும் பிரச்னையிலே இருக்கிற பல சிக்கல்களை ஆராய்ந்து, விவசாயிகளுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் இந்தக் கருத்தைக் கூறுவார்கள் என்று நான் தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அரசாங்கமே அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது நான் குறிப்பிடுகிற சில கருத்துக்களையும் மனதில் வைத்துக் கொண்டு கொண்டுவர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இந்த இனும் பிரச்சினையில் தமிழ்நாட்டில் இருக்கும் பல விவசாயிகள், குறிப்பாக பல சிறிய விவசாயிகள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சில பகுதிகளில் இந்த இனும் பிரச்சினையால் சில சிறிய விவசாயிகள் நிலத்திலிருந்து காலி செய்ய வேண்டிய நிலைமைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இந்த இனம் ஏற்பட்ட வரலாறு விசித்திரமானது. வெள்ளைக் காரன் ஆண்ட காலத்திற்கு முன்பு, அரசன் ஆண்டு கொண்டிருந்த போது கோவில்களில் பணியாற்றியவர்களுக்குச் சில சலுகைகளைத் தந்தார்கள். அதிலே பணியாற்றிய ஊழியர்களுக்கும் சில சலுகை களைத் தந்தார்கள். அந்தக் கோவில்களுக்கு வருமானம் வரவேண்டு மென்பதற்காக ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் காட்டி, அதிலே இருந்து வருகிற நிலவரியை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று அனுமதித்திருந்தார்கள். சிலயிடங்களில் பூமியைச் சொந்த மாக்கி இருக்கிறார்கள். அப்படி ஊழியர்களுக்குத் தந்ததும், தெய்வத்திற்குத் தந்ததும் என்பவைகளை "பிரமதாயம்", "தேவதாயம்" என்று இரண்டு பிரிவாகப் பிரித்து இருக்கிறார்கள். அந்த முறைப்படி நீண்ட பெரும் காலமாகவே அந்தப் பிரச்னை ஆலோசிக்கப்பட்டு, சமீபத்தில் சில முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

1900 மார்ச்சு 31-க்கு முன்பு கிரயம் செய்யப்பட்டிருந்த இனம் பூமிகளை இன்று யார் யார் அனுபவித்துக் கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். எந்தவித மான ஒரு கிரயமோ, ஈடோ இல்லாமல் அவர்களுக்குப் பட்டா செய்து தந்து இருக்கிறார்கள். அடுத்தபடியாக, 1948 மார்ச்சு 31-க்கு முன்பு கிரயம் செய்யப்பட்ட இனம் பூமிகளுக்கு குத்தகை அடிப்படையிலோ, அல்லது ஒரு ஆண்டு வருமானத்தைக் கணக்கில் வைத்து 20 ஆண்டுகளுக்கு எவ்வளவு வருகிறது என்று பார்த்து இன்றைக்குத் தீர்வை போட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிற போது, ஒரு ஏக்கர் ரூ. 1,000-க்குக் கூட பிரயோசனம் இல்லாத பூமிக்கு ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 என்று வருகிறது. இது உண்மையிலே கொடுமையானதொன்றாகும். ஒன்றுமே விளையாது இருந்த பூமியில் அவன் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை அதில் போட்டு ஏதோ சம்பாதித்து வருகிறான். அப்படிப் பயிர் செய்து வருகிற ஏழை விவசாயிகளிடமிருந்து 20 ஆண்டு கிரயம் வசூல் செய்கிறோம் என்று சொல்கிறபோது உண்மையிலேயே ஏழை விவசாயி பாதிக்கப்படுகிறான். அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். 1948 மார்ச்சு 31-க்குப் பின்னாலே அவர்களுக்கு நிலம் வந்திருக்கு மானால், அந்த பூமிகள் எல்லாம் அதை வைத்திருக்கும் விவசாயி களுக்குச் சொந்தமில்லாமல் போய்விடுகிறது. நாம் நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலத்தை வேறு ஒருவரிடமிருந்து பிடுங்கித் தருகிறோம். 12–18 ஆண்டுகள் நிலத்தை வைத்திருக்கும் ஒரு



விவசாயிடமிருந்து நிலத்தைப் பிடுங்கித் தருவது எந்தவிதத்திலும் தர்மமாகாது என்று இந்த நேரத்தில் நான் தாழ்மையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிலயிடங்களில் 60–70 ஆண்டுகள் பூமியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கான ரிகார்டு இல்லாத காரணத்தால் அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் அல்லது அந்த பூமியை வேறு ஒருவருக்கு பரம்பரை பாத்தியதை மூலமாக வருஷத்திற்கு ஒரு முறை குத்தகை செலுத்த வேண்டிய நிலையில் இருந்து வருகிறார்கள். இதைவிடக் கொடுமை வேறு இல்லை என்று நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை ஏற்படுத்துகிறபோது ஒரு விசித்திரமான கிளாஸ் போட்டிருக்கிறார்கள். அதாவது, அண்ணன் தம்பி இரண்டு பேருக்கு பூமி இருக்கிறது. அண்ணன் அதிகமாகச் செலவழித்து குத்தகை பூமியை விற்று விடுகிறான். பூமி வாங்கியவனுக்குச் சொந்தமாகிவிடுகிறது. தம்பி விற்காமல் வைத்திருந்தால், அவனுக்குச் சட்டப்படி அந்த பூமியில் சொந்தமில்லை என்று வெளி யேற்றப்படுகிறான். ஆக, "பிராடிகல் சன்னுக்கு"த்தான் இந்தச் சட்டம் ஆதரவாக இருக்கிறதே தவிர ஒழுங்காக இருக்கிறவனுக்கு அந்த பூமி கிரயம் ஆக்கப்படுவது இல்லை. இம் மாதிரியான ஓட்டை, உடைசல்கள் இந்தச் சட்டத்தில் நிறைய இருக்கின்றன. இவைகளை உடனடியாகக் கவனித்து, அரசாங்கம் அதற்கான ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். 13 ஆண்டுகளுக்கு உட்பட்ட பூமிகளை, யாரோ 30–40 ஆண்டுகளுக்கு முன்னாலே இருக்கிற வாரிசுகளுக்குப் பட்டா செய்து கொடுப்பதால் அவர்கள் குத்தகை கேட்கிறார்கள். அல்லது பூமியில் வேறு கட்டடம் இருந்தால் அதற்கான வாடகை, அவனுக்குச் சேராமல் இவனுக்குப் போகிறது. இவைகளை யெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து, சட்டம் கொண்டு வருகிற வரையில், இடைக்கால ஸ்டே கொடுங்கள் என்று கேட்டுக்கொள் கிறேன். அதற்குச் சட்டம் இடம் தரவில்லை என்று கவலைப்படக் கூடாது. நம்முடைய அதிகாரிகள் சிலரிடத்தில் பேசுகிறபோது சட்டம் இடம் தராது என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டம் நமக்காக இருக்கிறதே தவிர, சட்டத்திற்காக நாம் இல்லை. சட்டம் விவசாயிகளுக்கு நன்மையளிக்கிற வகையில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தச் சட்டத்தை தூக்கி எறியுங்கள், அல்லது நமக்கு ஏற்ற வகையில் அந்தச் சட்டத்தை மாற்றுங்கள். ஏழை களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள். இடைக்கால ஸ்டே தாருங்கள்

என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்புத்தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நண்பர் சுப்பையா அவர்கள் முன் மொழிந்துள்ள தனியார் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் மூலமாக இந்த நாட்டில் எண்ணற்ற ஏழை விவசாயிகள் பயன் அடைந்தார்கள். ஆனால் இனும் ஒழிப்புச் சட்டம் அமுல் நடத்தப் பட்டிருந்தும் கூட, இது வரையிலும் விவசாயிகள் இன்னல் பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதைக் காண்கின்ற போது மிகவும் வேதனைப்பட வேண்டியவர்களாகத்தான் நாம் இருக்கிறோம்.

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் தாலுக்காவில் இது போன்று இனும் ஒழிப்புச் சட்டத்தால் பல ஏழைகள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று நண்பர் திரு. சங்குமுத்துத் தேவர் இந்த மன்றத்தில் பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது வரையிலும், அரசாங்கம் எந்த விதமான நிவாரணமும் அளிக்க முன் வரவில்லை என்று கூறுகிறபோது, நிச்சயமாக ஏழை விவசாயிகள் மீது அதிக அக்கறை இந்த அரசு செலுத்தவில்லை என்பதைத் தான் கூற வேண்டி யிருக்கிறது. ஆகவே, திரு. சுப்பையா அவர்கள் தனியார் தீர்மான மாக இதைக் கொண்டு வந்திருந்தாலும், இதற்கு ஆதரவு அளிக்க வேண்டிய நிலையில் இந்தச் சட்டமன்றம் இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த இன்னல்களிலிருந்து ஏழை விவசாயி களைக் காப்பாற்ற வேண்டுமானால், நிச்சயமாக நண்பர் மாண்புமிகு செழியன் அவர்கள் கூறியதுபோல், அரசாங்கம் "ஒரு இடைக்கால தடை உத்தரவை" விதிக்க வேண்டும். இல்லையென்றால் ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற முடியாது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இது போன்று இக்கட்டான சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத் தில் இருக்கிறது. அங்கே "கட்டுகிரிசி, பாட்டம்" என்று விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற நிலங்கள் கேரள மாநிலத்தில் இருக்கின்றன. அந்த மாவட்டம் திருவிதாங்கூர்–கொச்சியிலிருந்து பிரித்து வந்ததால் இம்மாதிரியான நிலங்கள் நிறைய இருக்கின்றன. கேரள மாநிலத்தில் இம்மாதிரி யான நிலங்களையெல்லாம் அரசாங்கம் விவசாயிகளுக்குப் பட்டா



செய்து கொடுத்து விட்டது. இதுவரையில் இந்த அரசாங்கம் இங்கே அந்த விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவில்லை. அதற்காக அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதற்கான விதி, வழிமுறைகளை விதிக்கும்போது விவசாயிகளிடமிருந்து நஷ்ட ஈடு வாங்க வேண்டும், 20 ஆண்டு பாட்டம் வசூலிக்க வேண்டுமென்று விதிமுறைகள் போட்டு இருப்ப தாகத் தெரிகிறது. அந்த நிலையில் பாட்டம் வசூலிக்கப்படுமானால், அந்த நிலங்களுக்குப் பெறுமான விலையை விட அதிகமான விலையை செலுத்த வேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். யார் யார் கைவசம் கண்டு கிரிசி பாட்டம் போன்ற நிலங்களை வைத்திருக்கிறார்களோ, அந்தந்த விவசாயிகளுக்கு அந்தந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதற் கான வழிமுறைகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தருணத்தில் இந்த வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர் ஸார், திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் கொண்டுவந்துள்ள தனியார் மசோதாவின் பேரில் பல உறுப்பினர்கள் ஏற்கனவே பேசி இருந் தாலும் கூட, சில முக்கியமான கருத்துக்களை வலியுறுத்த வேண்டும் என்ற முறையில் தான் நானும் எழுந்து நிற்கிறேன்.

சமீபத்தில் நடந்த விவசாயிகளுடைய போராட்டத்தில் ஒரு கோரிக்கையாக இனும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து விவசாயிகளுக்கு முக்கிய பலன் கிடைக்கக் கூடிய அளவிலே செய்ய வேண்டும் என்று வைக்கப்பட்டு, ஒப்பந்தமானது செய்யப்பட்டிருக் கிறது. அந்த ஒப்பந்தத்தை ஓரளவுக்கு அமுலுக்குக் கொண்டுவரக் கூடிய முறையில் இந்தத் திருத்த மசோதா முயற்சி செய்கிறது. இந்தச் சபையில் எனக்குத் தெரிந்த வரையில் எனக்கு முன்பு பேசிய செழியன் அவர்களும், சங்குமுத்துத் தேவர் அவர்களும் அடிக்கடி இனும் பிரச்னைகளைப் பற்றி வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த இனும் பிரச்னையைப் பற்றி நல்ல முறையில் தெரிந்த ஒருவர் இந்த சட்ட மன்றத்தில் இருக்கிறார் என்றால் அவர் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்தான், அவர்கள் இது சம்பந்தமாக முழு முயற்சி எடுப்பார்கள் என்று கருதுகிறேன். பலதரப்பட்ட காரணத்

தைக் காட்டி ஹைகோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று இதற்குத் தடை வாங்கிக் கொண்டிருக்கிறார்களே, அதையெல்லாம் நிவர்த்தி பண்ணுவதற்கு வசதி ஏற்பட வேண்டும். ஆகவே, அதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். புதுக் கோட்டை பிராந்தியத்தில் நடந்த சில சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

சென்ற சட்டமன்றத் தொடரில்தான் புதுக்கோட்டையில் 500 விவசாயிகள், அதுவும் இனாம் விவசாயிகள் ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அது சம்பந்தமாக இங்கு கூட அந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. 1963-ம் வருடத்து இனாம் எஸ்டேட் சட்டப்படி, புதுக்கோட்டை பழைய ராஜ்யத்துப் பகுதியிலிருந்த 80 கிராமங்கள் ஒழிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டன. கிராமமாக உள்ள 300-க்கு மேற்பட்ட இனாம்கள் மேலே சொன்னபடி ஒழிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன. அது போக பாக்கி இனாம்களையெல்லாம் மைனர் இனாம் கீழே கொண்டுவந்தார்கள். அவை மைனர் இனாம் ஒழிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. இனாம் எஸ்டேட் ஒழிப்பில் வந்தால் ஒழிப்பு தேதிக்கு முன் 12 வருடம் தொடர்ந்து சாகுபடி செய்பவனுக்கு நிலத்தின் மேல் ரயத்துவாரிப் பட்டா உரிமை கிடைக்கும். மைனர் ஒழிப்பில் வந்தால் அந்த நிலத்தின் மேல் ரிக்கார்டு பாத்தியம் இருந்தால், குடிவார உரிமை இருந்தால் தான் பட்டா கிடைக்கும். எனவே மைனர் இனாமாக எடுத்துக் கொண்ட கிராமங்களை எஸ்டேட்டாக மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சி, உண்ணாவிரதம் போன்றவை எல்லாம் நடத்தப்பட்டது. காலஞ் சென்ற முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் ஒரு ஸ்பெஷல் அதிகாரியை நியமித்து ரிபோர்ட்டு கேட்டிருந்தார்கள். அந்த அதிகாரி மைனர் இனாம் என்று அறிவிக்கப்பட்ட 120 கிராமங்களை எஸ்டேட்டாக எடுத்துக் கொள்ளலாம் என்று சிபார்சு செய்தார்கள். அதன்படி 1969-ல் சட்டம் திருத்தப்பட்டு மேற்படி 120 கிராமங்களும் ஒழிப்பில் கொண்டு வரப்பட்டன. இந்தக் கிராமங்களில் பெரும் பகுதியில் இனாம்தாரர்கள் உரிமைகளை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் யார் யார் என்று அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

1963-ம் வருட ஒழிப்புச் சட்டம் 1965-ம் ஆண்டு ஆரம்பத்தில் அமுலுக்கு வந்து மாநிலம் பூராவும் செட்டில்மெண்ட் நடவடிக்கை செய்ததைப்போல, புதுக்கோட்டையிலும் ஒரு உதவி செட்டில்



மெண்டு அதிகாரி நியமிக்கப்பட்டு, பட்டா கொடுக்கக்கூடிய விசாரணைகளெல்லாம் துவங்கப்பட்டது. விவசாயிகளிடம் ஸ்தாபனம் இல்லாத இடங்களிலும் ஓரளவுக்கு எழுச்சி ஏற்பட்டது. அவர்கள் விஷயம் புரியாமல் கூட கிளம்பியிருக்கலாம். ஒழிப்பு வந்த தேதியிலிருந்து இனாம்தார் உரிமை போய்விடுகிறது. சர்க்காரிடம் நிலவரி செலுத்த வேண்டுமென்பது சட்டவிதி. ஒழிப்பு அறிவிப்பும் கிராமங்கள் ஒழிப்பு தேதியில் அப்படித் தான் அறிவிக்கப் பட்டது. விவசாயிகளிடம் ஒழிப்பிற்குப் பின்பும் இனாம்தார்கள் வாரம் வசூல் செய்ய முயற்சி செய்தார்கள். விவசாயிகள் மறுப்பு இயக்கம் ஏற்பட்டது. இது ஒருபுறம் இருக்கட்டும். மாநிலம் பூராவிலும் இனாம்தார்கள் செய்ததைப் போல புதுக்கோட்டை இனாம்தார்களும் ஒழிப்பை எதிர்த்து 1965-ம் வருடம் கோர்ட்டில் ரிட் மனு கொடுத்தார்கள். 1968-ல் அந்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ரிட் கேஸ்கள் கோர்ட்டில் பெண்டிங்காக உள்ள சமயத்தில் கீழே ரெவின்யூ கோர்ட்டுகள், முன்சீப் கோர்ட்டுகள் மூலம் கேஸ்கள் போட்டு, நில வெளியேற்றம் தொடர்ந்து நடத்தப் பட்டது. சாதாரணமாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் ஒரு நல்ல அம்சம் நிலச்சுவான்தார்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் நிலத்தைவிட்டு விவசாயிகளை வெளியேற்றக் கூடாது என்பதுதான். அதற்கான முறையில் வேறு சட்டங்களை வகுத்தால், பின்னாலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டு, மற்ற கோர்ட்டுகளின் மூலம் ஆக்கிரமிப்பு என்ற முறையில் அவர்களை வெளியேற்றக் கூடிய ஏற்பாடுகள் நடக்கின்றன. என்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். அந்த இடங்களில் எல்லாச் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளும் இயக்கம் நடத்தினார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் உரிமையைக் கைவிட்டு சரணடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஹைகோர்ட்டில் கேஸ் தள்ளுபடியானாலும், சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்கியதால் மேலும் பல கிராமங்கள் சரணடைந்தன. அதாவது, சட்டம் போட்டு அமைச்சர்கள் அதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும்பொழுது, ஹைகோர்ட்டில் ரிட் போட்டபொழுது பல விவசாயிகள் சரணடைந்தார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனதும் மேலும் பல விவசாயிகள் சரணடைந்தார்கள். இதைத் தொடர்ந்து 1969-ம் வருடத் திருத்தத்தின் மூலம் ஒழிப்பில் வந்த கிராமங்களும் ஹைகோர்ட்டில் ரிட் போடப்பட்டு, அது தள்ளுபடியான பிறகு சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்டது. ஆகவே,

நிலைமை என்ன வென்றால் நிலவெளியேற்றம் ஹைகோர்ட்டின் தீர்ப்படி செய்யப்பட்ட கேஸ்கள் மீண்டும் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போயுள்ளது. இந்த இடைக்காலத்தில் மூன்று தடவை செட்டில்மெண்டு கோர்ட்டு அங்கே அமைக்கப்பட்டு கோர்ட்டுகளில் ஸ்டே, ஆணவுடன் பூரா கோர்ட்டையும் கலைத்துவிட்டார்கள். ஒவ்வொரு தடவையும் கீழே கோர்ட்டுகள் மூலம், போலீஸ் மூலம் சாகுபடிக்கு தடை, அறுவடைக்கு தடை, நிலவெளியேற்றம் இப்படி ஒவ்வொரு கிராமமாக உரிமை பறிக்கப்படும் போக்கு நீடித்து வருகிறது. தற்பொழுது ஹைகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் ரிட் கேஸ்கள் இருக்கின்றன. கீழே கோர்ட்டுகளில் நிலவெளியேற்றத்திற்கான தொடர்ச்சியான நடவடிக்கைகள் நடக்கின்றன. செட்டில்மெண்டு கோர்ட்டு நடவடிக்கைகள் எந்தக் காரணத்தினாலேயோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்டில் சர்க்கார் எதிர் வழக்காடுவதில் கொஞ்சம் மந்தப் போக்கு இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகள், நிலவெளியேற்றம் எந்த வகையிலும் நடைபெறாமல் நிறுத்தப்படவேண்டும். தற்பொழுது ரெவின்யூ கோர்ட், சிவில் கோர்ட்டு நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்படவேண்டும். 1965-ம் ஆண்டிலிருந்து இனாம் கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட இனாம் விவசாயிகள் ரெஸ்டோர் செய்யப்படவேண்டும். ஹைகோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டுகளில் இருக்கும் கேஸ்களை துரிதப்படுத்தி முடிக்க மாநில அரசு சட்ட இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஸ்டே ஆர்டர்கள் இருந்தாலும், செட்டில்மெண்ட் விசாரணை, பட்டா விநியோகம் தொடர்ந்து நடைபெறவேண்டும். ஸ்டே ஆர்டர் இருந்தாலும் விவசாயிகளிடம் சர்க்கார் நேரடியாக வரி வசூல் செய்யவேண்டும் என்ற முறையில் நிலம் சர்க்காரிடம் வந்துவிட்டது. ஆகவே சர்க்காரே நேரிடையாக வரிவசூல் செய்யக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். இந்த மசோதா ஏற்கனவே இருக்கக்கூடிய மூன்று சட்டங்களுக்கு திருத்தம் கொடுக்கக்கூடிய முறையில் தயார் செய்யப்பட்டிருக்கிறது. விவசாய சங்கங்களில் ஈடுபடக்கூடிய பல கட்சித் தலைவர்களும், அதிலே நேரடியாக உதவி செய்யக்கூடிய பல வழக்கறிஞர்களும் சேர்ந்துதான் இந்தத் திருத்தத்தை தயார் செய்தார்கள். ஆகவே, இதை ஏதோ பிரைவேட் மெம்பர் மசோதா என்று புறக்கணித்துவிடாமல், 10, 15 வருடங்



களாக நடந்த இயக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்ட விவசாயிகள் படக்கூடிய கஷ்டங்களை எந்த அளவுக்கு அரசின் உதவி இல்லாமல் அரசுக்கு அப்பாற்பட்டு இருக்கக்கூடியவர்கள் சிறப்பாக தீர்த்து வைக்க முடியுமோ அந்த அளவுக்கு இதைச் செய்கிறார்கள் என்ற முறையில் இதைப் பார்த்து, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு சமயம் இதை இந்த முறையில் ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும், சென்ற காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி போல் அல்லாமல், உடனே நான் கடைசியில் 5, 6 கோரிக்கைகளை வைத்தேனே, அவைகளை நிறைவேற்றக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் ஏற்கனவே இருக்கப்பட்ட மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்திற்கான ஒரு திருத்த மசோதாவைப் பிரேரேபித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் இருக்கிற பல குறைபாடுகளை இதே மன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த நமது சட்ட அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தி அப்பொழுது பேசியிருக்கிறார்கள். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் கூட இதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள், நான் அந்த நடவடிக்கைக் குறிப்புகளை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தேன். சட்டத்தில் இருக்கிற பல சிக்கல்களும் பிரச்னைகளும், உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்ட பல சிக்கல்களும் இருக்கின்றன என்பதை நான் அரசாங்கத்தின் தரப்பில் ஒத்துக்கொள்கிறேன். இவைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் சார்பிலே ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் விவசாய சங்கப் பிரதிநிதிகளோடு பேசும்பொழுது ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ஆராய்ந்து, இருக்கிற சட்ட சிக்கல்களை நீக்கி, சட்டத்தில் இருக்கிற கோளாறுகளை நீக்கி, திருத்த சட்டம் கொண்டுவருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

பொதுவாக நண்பர் சுப்பையா அவர்கள் பேசும்போது சிவில் கோர்ட்டுகளுக்கு தலையிடுகிற அதிகாரத்தை நிறுத்தவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே 1971-ம் ஆண்டு நாம் நிறைவேற்றிய

'[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 17

28/71 சட்டத்தின் கீழ் தடை விதித்திருக்கிறோம். இது தேவையற்ற ஒன்று. ஏற்கெனவே சிவில் கோர்ட்டுக்கு உரிமையில்லை என்று சென்ற ஆண்டே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் சிக்கல் இல்லை. சிவில் கோர்ட்டிலிருந்து பாதகம் ஏற்படாது என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். ஆலயங்கள் நேரடியாக சாகுபடி செய்வதாக நிரூபிக்கப்படவேண்டாமென்று இருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது 1966-ம் ஆண்டு கடைசியில் போடப்பட்ட ஒன்று. அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆலயங்கள் நேரடியாக நிரூபிக்க வேண்டியதில்லை என்ற திருத்தத்தைப் போட்டிருக்கிறார்கள். காரணம், மனிதனாக இருந்தால் தன் உரிமையைக் காட்ட முடியும். ஆண்டவனால் காட்ட முடியாது என்று போடப்பட்டிருக்கிற திருத்தமாகும். அந்தத் திருத்தம் நாட்டில் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது.

பொதுவாக மைனர் இனாம், மேஜர் இனாம் இவைகளுக்கிடையே பார்க்கின்றபோது பாகுபாடு மெல்லிய கோடு, மெல்லிய வித்தியாசமாக இருக்கிறது. ஆனால் படித்துப் பார்க்கும்போது நிறைய சிக்கல்கள் இருப்பது தெரிகிறது. மேஜர் இனாம் என்று இருக்குமானால், சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள், மேல்வார தாரராக இருந்தால் 3 ஆண்டுகள் நிரூபித்தால் போதும், ஆனால் குடிவார தாரராக இருந்தால் 12 ஆண்டுகள் நிரூபிக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியல்ல, மேஜர் இனாமில், இனாம்தார சட்டத்தின்படி ஏற்கெனவே இருக்கிற பழைய சட்டத்தில் மேல்வாரதாரர் தன் சொந்த நிலம் என்று நிரூபிக்க வேண்டும்; அப்படி நிரூபித்து விட்டால் மட்டும் போதாது, அதற்கு மேல் 3 ஆண்டுகள் சொந்த சாகுபடி என்று நிரூபிக்கவேண்டும். ஆனால் குடிவார தாரராக இருந்தால் அவர் குடிவாரம் என்று நிரூபித்து விட்டால் போதும், பட்டா வந்து விடும். அப்படி அவர் குடிவாரம் என்று நிரூபிக்கத் தவறி விட்டால் 12 ஆண்டுகாலம் அந்த நிலத்தில் உழைத்துக் கொண்டிருந்தார் என்று அவர் சொல்வாரானால், அக்கம் பக்கத்தில் இருக்கிறவர்கள் மூலம் "ஒரல் எவிடன்ஸ்" கிடைக்குமானால், அதை வைத்துக் கொண்டு பட்டா கொடுக்கலாம். ஏதோ மேல்வார தாரருக்கும் குடிவார தாரருக்கும் 12 ஆண்டுகள் வித்தியாசம் என்று நினைப்பது தவறு. அப்படியல்ல. மேல் வாரம் வைத்திருக்கிறவர்கள் நிலம் சொந்தம் என்று நிரூபிக்க



1972 ஆகஸ்ட் 17] '[திரு. ப. உ. சண்முகம்]

வேண்டும். அதற்குப் பிறகு 3 ஆண்டுகள் தொடர்ந்து உழைத்தார் என்று நிரூபிக்க வேண்டும். அப்படி நிபந்தனை இருக்கிறது. ஏற்கெனவே 3 ஆண்டு என்பது அதைத் தொடர்ந்து வந்தது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த சட்டத்திலே, மைனர் இனாம் சட்டத்தின் கீழ் நண்பர் செழியன் பேசும்போது குறிப்பிட்டார்கள். முதலமைச்சர் அவர்களிடத்திலும் சட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் அடிக்கடி பேசும்போது இந்த மைனர் இனாம் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கிற பாதகங்களை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மைனர் இனாம் சட்டத்தின் கீழ் செழியன் அவர்கள் சொன்னது உண்மை. 60 ஆண்டு காலத்திற்கு மேல் பயிர் வைத்துக் கொண்டு தனியாருக்கு விற்றிருந்தால் அப்படி வாங்கியவர்களுக்கு அப்படி விற்கப்பட்ட பட்டா இல்லை. 12 ஆண்டு காலத்திற்கு மேல் பயிர் வைத்திருந்தால் 20 ஆண்டு காலத்திற்கு ஃபேர் ரெண்டு, நிலத் தீர்வை கணக்கிட்டுக் கொடுத்தால் நிலத்திற்கு பட்டா கொடுக்கப்படும் என்று இருக்கிறது. 12 ஆண்டுகளுக்குள்ளாக பயிர் வைத்திருப்பார்களானால் அவர்களுக்குப் பட்டா கிடையாது என்று இருக்கிறது. அப்படி இன்றைக்கிருக்கிற மைனர் இனாம் சட்டத்தில் இருக்கிறது. 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் நிலத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் குத்தகை கொடுப்பதில்லை. சொந்த நிலம், பட்டா கொடுக்கவேண்டுமென்றால், நீ 20 ஆண்டு காலத்திற்கு ஃபேர் ரெண்டு கொடு, இல்லாவிட்டால் இன்னொருவருக்கு கொடுப்பேன் என்பது பொருத்தமற்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இதிலும் நிறைய சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் பட்டா கொடுப்பது என்ற முடிவிற்கு வந்தால் கூட இந்த கோயில்களுக்கு, இன்ஸ்டிட்டியூஷன்களுக்கு அலவன்ஸ் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு வருகிறது. அப்படி கொடுக்கும் போது எவ்வளவு பணம் செலவாகும் என்பதை அதிகாரிகளிடத்தில் கேட்டிருக்கிறோம். இன்னும் தகவல் வரவில்லை. வந்ததற்குப் பிறகு பரிசீலித்து ஒரு முழுமையான சட்டம், நாட்டில் உழுபவனுக்கு நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்ற கருத்தில் சட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நிச்சயமாக தயாராக இருக்கிறோம் என்று உறுதியாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நண்பர் வகாப் பேசும்போது ஃப்ரீ ஹோல்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போதிருக்கிற போர்டு ஸ்டேண்டிங் ஆர்டர்படி யாராவது 20 ஆண்டுகளுக்கு நிலத்திற்குண்டான தீர்வையை மொத்தமாகக் கொடுத்தால் அவர்கள் தொடர்ந்து நில வரியே கட்டத் தேவையில்லை என்று போர்டு ஸ்டேண்டிங் ஆர்டர் இருக்கிறது. ராணிப்பேட்டை பக்கத்தில் நவ்லாக் பகுதியில் இது போன்ற ஃப்ரீ ஹோல்டு இருக்கிறது. இப்படி 20 ஆண்டுகள் தீர்வை கொடுத்து ஃப்ரீ ஹோல்டாக இருக்கிறார்கள். இன்னொருவருக்கு பட்டா செய்யப்பட்ட நிலம் அது. அரசாங்கம் செய்யக்கூடிய தெல்லாம் மீண்டும் நில வரி போட சட்டத்தைக் கொண்டு வர முடியும். இன்னொருவருக்கு விற்றிருப்பார்களானால் அது வாங்கி யிருக்கிறவர்களுக்குச் சொந்தம். நிலச் சட்டத்தின் கீழ் அவர்கள் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருந்தால் அவர்கள் நில உரிமை, எக்ஸ்டென்ஷன், அதிகமாக இருந்தால் அந்த நிலங்களை நிலச் சட்டத்தின் கீழ் எடுத்திருக்கவேண்டும். இதைப் பரிசீலிக்கும்படி அதிகாரிகளை அரசு கேட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, நண்பர் ஜேம்ஸ் பேசும்போது கண்டுகிரிஷி பற்றி குறிப் பிட்டார்கள். இது லீஸ்லேண்டு பற்றியது. தனியாகவே இதை அசைன் செய்வது பற்றி போர்டில் பரிசீலனையில் இருக்கிறது. நிச்சய மாக சாதகமான பதில் அரசாங்கத்திற்கு வரும். அரசாங்கம் நிச்சய மாக சாதகமான தீர்ப்பளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கண்டுகிரிஷி அனுபவித்து வருகிறவர்களுக்கு லீஸ் லேண்டு சொந்த மாக்குவது அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்திருக்கிறது. நிச்சயமாக செய்யப்படும். எனவே இந்த சட்டத்திலே, ஏற்கெனவே உள்ள சட்டத்தில் சிலவற்றில் திருத்தம் வந்திருக்கிறது. மற்றவைகளுக்கு திருத்த சட்டம் கொண்டு வருவதற்கான உத்தேசம் இருக்கிறது. ஆகவே இப்போது இந்த சட்டம் தேவையில்லை. வலியுறுத்த வேண்டாம் என்று நண்பர் சுப்பையா அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். இதற்காக அரசு சீக்கிரத்தில் தனியாக சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



(திரு. நா. வீராசாமி தலைமை)

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த சட்டத்தில் இருக்கக்கூடிய பலஹீனங்களைப் பற்றி இந்த அரசு புரிந்து அமைச்சர வர்கள் வாக்குறுதியளித்ததை முன்னிட்டு நான் என்னுடைய தீர் மானத்தை வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு. சுப்பையா அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

(ii) தனித் தீர்மானங்கள்

(அ) கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பளித்தல்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அடுத்து, கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பளித்தல் குறித்த தீர்மானம். 3—12—1971, 1—4—1972 ஆகிய நாட்களில் முன்னுரைக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் தொடரும்.

"கைத்தறித் துறையின் பாதுகாப்பிற்கும், கைத்தறி நெசவாளர் களின் உரிமைகளைச் செயல்படுத்துவதற்கும் விரைவில் தகுந்த சட்டம் இயற்றப்படலாமென இந்த அவை கருதுகிறது என்று திரு. கே. டி. கே. தங்கமணி கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தின் மீது திருமதி அனந்தநாயகி அவர்கள் தமது உரையைத் தொடரு வார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, சென்ற கூட்டத் தொடரில் நான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அடுத்த கூட்டத்தில் தொடர்ந்து பேசலாம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அதற்கும் முந்திய தொடரில் பேசினீர்கள். அதற்கு அடுத்து ஒரு நாள் விவாதம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இப்போது அம்மையார் அவர்கள் உரையாற்றுவார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர்களைப் பற்றிக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த தீர்மானம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் இந்த அரசுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். குறிப்பாக தமிழகத்திலே பல லட்சக்கணக்கான நெசவாளர்கள் இருக்கும்போது இந்தப் பிரச்னையை எப்படி தீர்க்கப்போகிறோம் என்ற நிலைதான் இருக்கிறதே தவிர இதை தீர்ப்பதற்கான திட்டவட்டமான முயற்சிகளை அரசு எடுக்கவில்லை என்று நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக முன்னர் சொன்னது போன்று, நெசவாளர் குடும்பத்தில் பிறந்த திருவள்ளுவரைப் பாராட்டுகிறவர்கள் அவர் குலத்தை பார்க்காமல் இருக்கிறார்களே என்று கவலைப்படுகிறேன். வள்ளுவரைப் பாராட்டக் கூடியவர்கள் அவர் பிறந்த குலம் எப்படி நசிந்து கொண்டிருக்கிறது. அவர்கள் என்னென்ன பிரச்னைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்வது அத்தியாவசியம் என்று நடவடிக்கை எடுக்கிறார்களாவென்றால் இல்லை. சமீப காலத்தில் கூட சேலம் நெசவாளிகள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மதுரையில் ஊர்வலம் நடத்தி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இப்படி உண்ணாவிரதம் இருந்து ஊர்வலம் நடத்தி பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும் இவர்கள் வழக்கம் போல நடத்தப்படும், கோட்டையை நோக்கி வரட்டும், சிறை கூடத்திற்கு செல்லட்டும், அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று அரசு தட்டிக் கழிக்குமேயொழிய இந்தப் பிரச்னைக்கு என்ன செய்வது என்று உடனடியாக முயற்சிகளை எடுக்கிறார்களாவென்றால் இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு நூல் விலையை எடுத்துக் கொண்டோமானால் நூல் விலை எக்கச்சக்கமாக ஏறிக் கொண்டிருக்கிறது என்று நெசவாளர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. நூல் விலையோ ஏறிக் கொண்டிருக்கிறது. ஆடையின் விலையோ குறைவது கிடையாது. ஆனால் நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற பருத்திக்கு மாத்திரம் விலை குறைந்து கொண்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது அரசாங்கம் இதில் தக்க கவனம் செலுத்தியிருந்தால் நெசவாளி விலை கேட்டு உயிரைக் கொடுத்திருக்க மாட்டான். அதே சமயத்தில் இங்கே நெசவாளி எனக்கு நூல் விலை ஏறிவிட்டதே என்று அலைய மாட்டான். இந்த இரண்டுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுத்திக் கொண்ட இந்த இடைத் தரகர்களைப் பற்றி அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கிறதா





வென்றால் இல்லை. ஏதோ கேட்கிறவர்களுக்கு கூட்டுறவுத் துறை மூலம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்னையில் எவ்வளவு நூல் தேவைப்படுகிறது. இந்த நூலில் எவ்வளவு வாங்குவதற்கு எப்படி வசதிகள் செய்து தரவேண்டுமென்று சிந்திக்கிறதாவென்றால் இல்லை. குறிப்பாக. விவசாயிகள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நூல் பேல்களின் மேல் வங்கிகள் கடன் கொடுக்காமல் இருந்தால் இந்த பேல்களை வைத்துக்கொண்டு கள்ள மார்க்கெட்டில் விற்கக்கூடிய சூழ்நிலை இருக்காது. இதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும் தீர்வு காணவில்லை.

அதேபோன்று நெசவாளிகளுக்கு நியாயமான கூலி இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை. எப்படி விவசாயிகளுக்கு நியாயமான கூலி நிர்ணயிக்க பட்டதோ அதைப்போன்று நெசவாளிகளுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதைக் கேட்டால் உடனே சொல்வார்கள், விவசாயிகளுக்கு கூலி நிர்ணயிப்பதற்காக கணபதியா பிள்ளை குழுவை போட்டோம்; மீண்டும் அதில் இருக்கின்ற குறைகளைப் போக்க பரிசீலனை செய்கிறோம்; அதைப்போன்று நெசவாளிகளுக்கும் நியாயமான கூலி நிர்ணயிக்கப்படுவதற்கான வழிவகைகளைச் செய்கிறோம் என்று சொல்லலாம். ஏதோ நாங்கள் ஒரு அறிக்கை தயாரிப்பதற்காக ஒரு கமிட்டியை நியமனம் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த கமிட்டி என்ன அறிக்கை கொடுத்தது என்பது பற்றி இதுவரையில் சட்டசபையில் வைக்கப்படவில்லை. எப்போது வைக்கப்படும் என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

அடுத்து, நெசவாளிகள் கூட்டுறவுச் சங்கங்கள். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 1,400 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அது கொஞ்சங்கொஞ்சமாக குறைந்து இன்றைக்கு 700 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களே இருக்கின்றன. ஏன் இப்படிக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால் சில சங்கங்கள் சரியாக இயங்கவில்லை, சரியாக வேலை செய்யவில்லை; அதனால் குறைத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். நெசவாளர்கள் பிரச்னையில் உண்மையான அக்கறை கொண்ட அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருந்திருந்தால், அவைகளைக் குறைப்பதற்குப் பதிலாக, குறைபாடுள்ள சங்கங்களை சீர்படுத்தி, எண்ணிக்கையை அதிகரித்திருக்கும். இதைப் பார்க்கும்போது இந்த அரசாங்கம் உண்மையாகவே நெசவாளர்கள் பிரச்னையில் அக்கறை செலுத்துகிறதா என்பது சந்தேகந்தான்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 17

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலமான அமைப்புகளாகச் செயல்பட வேண்டும். அன்றைக்கு 1400-ஆக இருந்த கூட்டுறவுச் சங்கங்களை இன்றைக்கு 2,800 ஆக உயர்த்தி இருக்க வேண்டும். அந்த வகையில் தக்க நடவடிக்கையை எடுக்க இனியாவது அரசாங்கம் முன் வரவேண்டும்.

அடுத்தபடியாக கைத்தறித் துணிகளின் தேக்க நிலை. கைத்தறித் துணிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே தேங்கிக் கிடக்கிறது. தனிப் பட்டவர்களிடம் தேங்கிக் கிடக்கிறது.' தேக்கத்தைப் போக்க ஏதோ வருடத்திற்கு ஒரு முறை எக்சிபிஷன் நடத்துவதாகச் சொல்கிறார்கள். இப்படி ஆண்டுக்கு ஒரு முறை எக்சிபிஷன் நடத்துவதால் தேக்கநிலை மாறிவிடாது. ஏதாவது ஒரு நோய் ஏற்பட்டால், அந்த நோய்க்குரிய மூலக் காரணத்தை உணர்ந்து, அதைப் போக்க மருந்து கொடுக்கப்பட வேண்டுமே அல்லாமல், ஏதோ அப்போதைக்கு நிவர்த்தி செய்ய ஏதாவது ஒரு கை மருந்தைக் கொடுத்தால் அது பிரயோஜனப்படாது. அந்த முறையில்தான் கைத்தறித் துணி தேக்க நிலையையும் அணுக வேண்டும். ஏதோ தீபாவளி வரும்போதும், தைப் பொங்கல் வரும்போதும் எக்சிபிஷன் நடத்தி 10 பைசா ரிபேட் கொடுத்துவிடுவதால் இந்தப் பிரச்னை திர்ந்து விடாது. எனவே, அதற்கு ஒரு நிரந்தரமான முடிவை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கமே கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்து உரிய முறையில் விற்பனை செய்து, நெசவாளர்களுக்கு வருமானத்தைத் தேடித் தரலாம். இல்லையென்றால் அதற்கு ஈடான ஒரு மாற்று வழியைக் காணவேண்டும்.

இன்று கைத்தறித் துணிகளுக்கும், மில் துணிகளுக்கும் பெரும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்படுகிறது. மில் துணிகளோடு கைத்தறித் துணிகள் போட்டியிட முடியவில்லை. இந்தக் கைத்தறித் தொழிலை பார்துகாக்க வேண்டுமென்று இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள், அன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருந்து கொண்டு "கரை போட்ட சேலை, கரை போட்ட வேட்டி" இவைகளை கைத்தறித் துறைக்கே ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் ஆளும் கட்சியாக வந்த பின்னலும் அப்படிப்பட்ட வற்புறுத்தல்கள்தான் இருக்கின்றன. இது ஏதோ விக்கிரமாதித்தன் சிம்மாசனம் போல், இந்த சிம்மாசனத்தில் யார் வீற்றிருந்தாலும் அந்தத் தவறு நடந்து கொண்டுதான் இருக்கும்போல் தெரிகிறது. அன்றைக்கு கரை



1972 ஆகஸ்ட் 17] [திருமதி த. ந. அனந்தநாயகி]

போட்ட சேலை, கரை போட்ட வேட்டிகளை கைத்தறித் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்று சொன்னவர்களை நம்பி, அவர்கள் கையிலே இந்த ஆட்சியை ஒப்படைத்தார்கள். ஆட்சிக்கு வந்த பின்னல் அந்தப் பிரச்னையில் அவர்கள் கவனம் செலுத்தவே இல்லை. பழைய நிலைதான் நீடிக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் பழைய கள்ளை புதுக் குடுவையில் வைத்தது போல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் இனிமேலாவது உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் மீண்டும் அரசாங்கத்தை வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகளுக்கு பாங்குகள் மூலம் கடன் உதவி செய்து கொடுப்பதுபோல் நெசவாளர்களுக்கும் கடன் உதவி செய்து கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு நிலத்தின் அடமானத்தின்மீதுதான் கடன் வழங்கப்படுகிறது என்றாலும், நெசவாளர்களுக்கும் அதுமாதிரி எந்த எந்த வகையில் கடன் கொடுக்க முடியுமோ அந்தந்த வகையில் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தாவது, தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் மூலமாக நெசவாளர்களுக்கு கடன் உத்வி செய்ய முன் வரவேண்டும். ஏற்கெனவே, அப்படிப் பட்டக் கடன் உதவி செய்து வந்தால், அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். உடனே இது எங்கள் பிரச்னை அல்ல; மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது என்று சொல்லிவிடுவீர்கள். அது எனக்குத் தெரியும். மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டுமென்றாலும், பிரச்னைகளை உரிய முறையிலே மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டியது மாநில அரசாங்கத்தின் கடமையாகும், பொறுப்பாகும். டில்லியிலே இருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடாது. முதலமைச்சரும், தொழில் அமைச்சரும் மத்திய அமைச்சர்களுக்கு சரியான முறையில் எடுத்துச் சொல்லி, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளும் வகையில் செயலாற்ற வேண்டும். நெசவாளர்கள் பிரச்னையானாலும், விவசாயிகள் பிரச்னையானாலும், எந்தப் பிரச்னையானாலும், மத்திய அரசாங்கத்தின் கருத்துக்கும் கண்ணோட்டத்துக்கும் அதைக் கொண்டு வந்தால்தான் அவர்கள் அதில் முடிவெடுக்க முடியும்.

இப்போது கூட்டுறவு இலாகாவில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அதைப் போன்று நெசவாளர்களுக்கும் கொடுக்க முடியுமா என்று யோசனை செய்து பார்க்க வேண்டும். நெசவாளர்களின் நிலைமை இப்போது மிக மிக மோசமாக இருக்கிறது. முக்கியமாக சிறு சிறு நெசவாளர்கள் மிக மிக பாதிக்கப்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 17

பட்டிருக்கிறார்கள். இப்படி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்களுக்குக் கூட்டுறவு இலாகா மூலமாகவாவது உடனடியாக உதவி செய்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் உடனடியான பொறுப்பாகும் என்பதை இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று ஒரு பிரச்னை இருக்கிறது. வீடு கட்டித் தரப்பட வேண்டுமென்று சொல்லப்பட்ட பல தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் இன்னும் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நெசவாளர்களை எப்படிக் கவனிக்கப் போகிறார்களா? நெசவாளர்களுக்கு அந்தக் காலத்திலே சில குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இந்தக் காலத்திலே அப்படிச் செய்து கொடுக்கிறார்களா என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் சொல்லப்படுகிறது. அதைப் போன்று நெசவாளர்களுக்கு, நெசவுத் தொழிலுக்கு எந்தவகையிலே பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால் பதில் வரவில்லை.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் மில் துணிகளுக்கு செஸ் வரி வசூலிக்கிறது. கைத்தறித் துணிகளுக்கு சலுகை அளிக்கத் தக்க வகையில் அந்த செஸ் வரி வசூலிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அதனால் கைத்தறி துணிகளுக்குச் சலுகை அளிக்கப்படுகிறதா என்பது சந்தேகமே. ஏனென்றால் கைத்தறித் தொழிலில் ஒரு பசுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, வசூலிக்கப்படுகின்ற செஸ் வரியை வேறு எந்தெந்த வகைகளில் செலவிடலாம் என்று சில திட்டங்களைப் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது. அது மிக மிக வருந்தத்தக்கது. அதைக் காட்டிலும் இன்றைக்கு பெரிய ஆபத்து ஒன்று கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. "இன்ட்ரொடக்ஷன் ஆஃப் பவர் லூம்ஸ்" என்று இன்றைக்கு பவர் லூம்களை புகுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் துணி உற்பத்தியைப் பெருக்குவதற்கு பவர் லூம்களைப் புகுத்துவது மிகமிக அவசியம் என்று சொல்கிறார்கள். அப்படியானால்தான் உற்பத்தி பெருகி, வருமானம் அதிகமாகும் என்று சொல்லப்படுகிறது. பவர் லூம்கள் புகுத்தப்படுகின்ற அதே நேரத்தில் "ஹாண்ட் லூம்"கள் நசிக்கப்படாமலிருக்க, பாதிக்கப்படாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்கு ஹாண்ட் லூம்களை பவர் லூம்கள் விழுங்கிவிடுகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே,



1972 ஆகஸ்ட் 17] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஹாண்ட் லூம்ஸ் நெசவுத் தொழில் பாதுகாக்கப்படும் வகையில், உடனடியாக ஒரு நிபுணர் குழுவை அரசாங்கம் ஏற்படுத்தி பவர் லூமுக்கும், ஹாண்ட் லூமுக்கும் தனித்தனியாகப் பாதுகாப்பு அளிப்பது பற்றி யோசிக்க வேண்டியது மிகமிக அவசியமாகிறது என்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் தமிழக கைத்தறித் துணிகளுக்கு உலகம் பூராவும் மரியாதை இருக்கிறது. மெட்ராஸ் கார்ப்பெட் என்றால் அமெரிக்க மார்க்கெட்டில் போட்டிப்போட்டுக் கொண்டு வாங்குகிறார்கள். பிளீடிங் மெட்ராஸ் அமெரிக்க மார்க்கெட்டை பிடித்துக் கொண்டிருந்த காலம் உண்டு. பிடித்த மார்க்கெட்டை சில சமயங்களில் நாம் இழந்து விடுகிறோம். காரணம் க்வாலிடி கண்ட்ரோல் கிடையாது. இன்றைக்கு ஏதோ எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று வைத்து வெளிநாடுகளுக்குச் சிறப்பான சரக்குகளை அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறோம். நான் ஒரு யோசனைகூடச் சொல்வேன்.

இன்றைக்கு மந்திரி-பதவி கொடுக்க முடியாத அங்கத்தினர்களுக்கு எல்லாம் பதவி கொடுக்க, வாட்டர் போர்டு, டூரிஸ்ட் போர்டு என்பதாகப் பல போர்டுகளை அமைத்து வருகிறோம். மந்திரிகளுடைய அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்படுகின்றன. மந்திரிகளைக் கேள்வி கேட்டால் வாரியத் தலைவரைக் கேட்டு அப்படியே சொல்கிற—ஒரு காரியத்திற்கு இரண்டு மாஸ்டர்களைப்போல ஏற்பட்டிருக்கிற நிலை வந்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது ஒரு ஹாண்டுலூம் போர்டைக் கூட கைத்தறித் துறையில் நல்ல அனுபவம் உள்ள ஒரு உறுப்பினரைத் தலைவராகப் போட்டு அமைக்கலாம். சுற்றுலா அமைச்சர் திரு. ராஜாராமைக் கேட்டால் சுற்றுலா வாரியத் தலைவர் ஆசைத்தம்பியைக் கேட்டுப் பதில் சொல்கிற நிலை அந்த சுற்றுலாத் துறைக்கே ஏற்படுத்தியிருக்கிறபோது கைத்தறி போர்டு ஒன்றை அமைக்கக் கூடாதா?

இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டால் போதாது. எதையும் அமல்படுத்துவதில் காலதாமதம் ஆகிறது. எனக்குத் தெரியும் ஹாண்டு லூம் கமிஷன் என்று போட்டிருக்கிறார்கள். இதுவரை அவர்கள் கூடி நான் பார்த்தது கிடையாது. ஹோட்டல் தொழிலாளர்களுக்காக ஒரு கமிட்டி போட்டார்கள். அந்த அறிக்கை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. நம்முடைய ஆயுளுக்குள்ளாவது ஏதாவது செய்ய வேண்டாமா? சட்டசபையின் ஆயுள் 5 வருடம், நான்கு வருடத்திலேயே கலைத்தாலும் கலைக்கலாம். இந்த நான்கைந்து அநித்தியமான காலத்திற்குள்ளாகவாவது எதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 17

அதைச் செயல்படுத்த முன்வர வேண்டாமா? ஆகவே உடனடியாக ஹாண்டு லூம் போர்டு என்று ஒன்றையாவது ஏற்படுத்தி கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் தொழிலை விட்டே போய்விடுங்கள் என்று சொல்வது சரியல்ல. அழகான வண்ண வண்ணக் கைத்தறி ஆடைகளைத் தயாரித்துக் கொடுத்துக் கொண்டு வருகிற அவர்களது தொழில் நசித்துப் போய்விடாதவாறு பார்த்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கேற்ற முறையில் உடனடியாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அவை முன்னால் இருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். "செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின், நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை" என்கிற கவிதைப் படி நாணயமாக நெசவுத் தொழிலை தம் தொழிலாக மேற்கொண்டிருக்கிற நெசவாளர்களை வாழவைக்க எல்லாக் கட்சிகளும் பேசுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகமும் நெசவாளர் பெருமக்களை வாழவைக்க வேண்டும் என்பதற்காக ஆரம்பகாலத்திலேயே எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளை நாடு அறியும். அவற்றில் ஒருசில உதாரணங்களைச் சொல்லவேண்டுமென்று நானும் விரும்புகிறேன். இந்த நாட்டில் நெசவாளர்கள் தாங்கள் நெய்து வைத்த துணிகள் தேங்கி, விற்பனை செய்ய முடியாது இருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இன்று தலைவர்களாக இருப்பவர்கள்—அன்று தொண்டர்களாக தங்கள் முதுகு மீது கைத்தறித்துணிகளைப் போட்டுக் கொண்டு சென்று தெருத்தெருவாய் விற்றுவந்த காட்சியினை நாடு மறந்திருக்க முடியாது. எங்கள் கட்சிக்குத் துண்டுக் கட்சி என்றே பெயர். நாட்டைத் துண்டாடச் சொல்கிறோம் என்பதனால் துண்டுக் கட்சி என்று பெயர் வரவில்லை. நம் நாட்டு கைத்தறி நெசவாளர்கள் காக்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் உற்பத்தி செய்கிற துணிக்கு மார்க்கெட் இருக்க வேண்டும் என்பதற்காகவே கூட்டங்களில் மாலைகள் போடுவதுபோல துண்டுகள் வாங்கிப் போடுகிற வழக்கத்தையே ஏற்படுத்திக் கொண்டோம். இன்றைக்கும் கூட துண்டு போட்டுக்கொள்கிற வழக்கமும், தலைவர்களும் கூட துண்டு போட்டுக் கொள்கிற வழக்கமும் உடைய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 17] [திரு. கா. வேழவேந்தன்]

நெசவாளர் சமுதாயத்திற்கு கழகம் ஒன்றும் செய்யவில்லை என்பதுபோல எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த இயக்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னரும் நெசவாளர் பெருமக்களுடைய நன்மைக்காக இந்த அரசு என்ன என்ன செய்திருக்கிறது என்கிற விரிவான குறிப்பினை அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சொல்ல இருக்கிறார்கள். இந்த ஆட்சி செய்துள்ள காரியங்களை நாட்டுமக்கள் கண்ணில்படாமல் மறைத்து விட முடியாது.

அறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில்தான் வண்ண வண்ணப் பட்டாடைகள் பெரும் அளவில் நெய்யப்படுகின்றன. ஆயினும் அங்கேயுள்ள பட்டுத்தறிகளுக்கு ஜரிகையை சூரத்தில் இருந்து எதிர்பார்த்து நின்றார்கள். அந்த நிலை மாறியாக வேண்டும். நம் நாட்டில் உள்ள பட்டுத்துணி நெசவாளர்களுக்கு நம் மாநிலத்திலேயே ஜரிகை உற்பத்தி செய்து கொடுத்தாக வேண்டும் என்கிற அடிப்படையில் 25 லட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்திலேயே ஜரிகை உற்பத்தி செய்து கொடுக்க இந்த அரசுதான் திட்டம் தீட்டியது. இதை அம்மையார் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

முன்பெல்லாம் அவர்கள் காலத்திலும் கைத்தறிவாரம் என்று நடத்தப்பட்டது. அதிகாரிகள் அளவில்தான் நடந்தன. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு எல்லாத் தலைவர்களையுமே வைத்துக் கொண்டு மிகப் பெரிய அளவில், மிக அதிக அளவில் கைத்தறித்துணி விற்பனையாகக் கூடிய வகையில் அங்கங்கே கைத்தறி வாரங்கள் நடத்தப்பட்டு வருவதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இன்றைக்கு நம்நாட்டு கைத்தறிகளுக்குப் பெரும் பகையாக இருப்பது ஆமதாபாத். பம்பாய் போன்ற இடங்களில் இருந்து வருகிற வண்ண வண்ண மில் ஆடைகள்தான். அங்கே நிறைய விசைத்தறிகளை அமைத்து நம்முடைய மார்க்கெட்டுக்குப் பெரும் போட்டியாக இருக்கிறார்கள். அந்தப் போட்டியைச் சமாளித்து நம்முடைய கைத்தறித் தொழில் நசிக்காமல் இருக்க பத்தாயிரம், பன்னிரண்டாயிரம் என்ற அளவுக்கு விசைத்தறிகள் ஏற்படுத்தப்பட்டன. அதுவும் தனியார் துறையில் கூடாது என்று மிகச் சிறப்பாக இயங்கக் கூடிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இதை நெசவாளர் பெருமக்கள் மறந்துவிட முடியாது. நெசவாளர்களை இந்த அரசு பட்டினி போடவில்லை, அவர்களது தொழில் நசித்துப் போகவும் விடாது. இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு முறையிலும் நாம் அதை வற்புறுத்தி வருகிறோம். இங்கே கரைபோட்ட வேட்டியையும்

கரைபோட்ட சேலையையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று நாம் நீண்ட நாட்களாக கேட்டு வருவது அனைவருக்கும் தெரியும். இருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்களாகட்டும், ஸ்தாபனக் காங்கிரஸ்காரர்களாகட்டும் அல்லது மற்ற கட்சிக்காரர்களாகட்டும் அரசியல் மாநாடுகளிலே இதுமாதிரி தீர்மானம் போட்டிருக்கிறார்களா? இதுமாதிரி மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறார்களா? இந்திய தேசிய காங்கிரஸ் நண்பர்கள் மத்திய அமைச்சர்களை வைத்துக் கொண்டு கூட்டம் போடுகிறார்களே, அப்படிப் போடுகிற கூட்டங்களிலே் இந்த மாதிரி வற்புறுத்துகிறார்களா? செய்யும் தொழில்களை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நெய்யும் தொழிலே சிறந்த தொழில் என்று அதை ஏற்றுக்கொண்டவர்கள் பல இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வுக்காகவாவது, தமிழக அரசாங்கம் தெரிவிக்கிற கோரிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் போட்டுச் சொல்லியிருக்கிறார்களா? அவர்களுடைய மாநாடுகளில் வேறு ஏதேதோ நடத்தப்படுகிறதாகச் சொல்லப்படுகிறதே தவிர, கைத்தறி நெசவாளர்களுக்காக எதுவும் பேசப்படுவதாகவும் சொல்லப்படுவதாகவும் நான் பத்திரிகைகளிலேயும் படிக்கக் காணோம், எனக்கு வந்து சொல்கிறவர்களும் சொல்லக் காணோம். ஆகவே, இனியாவது தமிழக அரசு எடுக்கிற முடிவுகளுக்கு உறுதுணையாக இருக்க மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்தில் பேசுகின்ற இந்த நேரத்திலே என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிளீடிங் மெட்ராஸ் பற்றியெல்லாம் சொல்கிறார்கள். வண்ணம் மாறும் துணியை தயாரிக்கின்ற மாதரப்பாக்கம் பகுதியிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கிற பிட்டி தியாகராயர் அவர்கள் மரபினர் வண்ணம் மாறும் துணிகளை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலைமைகளெல்லாம் மாறி இருக்கிறது என்பதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் முன்பு குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது யார்? செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே இருக்கிற நாமா? செங்கோட்டையிலே இருப்பவர்கள் உடனடியாக பரிகாரம் எடுத்தாக வேண்டும். ஆனால் நமக்கு வேண்டிய அளவுக்கு மற்ற கட்சிகள் வற்புறுத்தி இருக்கின்றனவா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால் திடீரென்று இறக்குமதி செய்யும் நாடுகளிலே இருப்பவர்கள்,





தங்களுடைய கொள்கைகளையும் சுவைகளையும் மாற்றிக் கொள்கிறார்கள். ஆகவே, ஏற்றுமதி செய்யும் இந்த நெசவாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிற வகையிலே மத்திய அரசாங்கம் இருக்கிற அமைப்புகளின் மூலமாக உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த மாதிரி குறைகளை நிவர்த்திக்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே துணிகளை ஏற்றுமதி செய்ய வழிவகைகளைக் காண வேண்டும். இந்த வழிவகைகள் தமிழக அரசின் கையில் இல்லை. முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கையில் இல்லை. நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கையில் இல்லை. இவர்கள் பரிந்துரை தான் செய்ய முடியும். பிளீடிங் மெட்ராஸாக இருந்தாலும் சரி, எந்த வகையாக இருந்தாலும் சரி, மற்ற நாடுகளுக்குப் போகிற துணிகளாக இருந்தாலும் சரி, இவற்றிற்கு உடனடியாக கழுவாய் தேட வேண்டுமென்று மத்திய அரசை மற்ற கட்சிகள் இந்த நேரத்திலே வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாக, தங்களின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வட்டாரத்தைப் பற்றி குறிப்பிட்டதால், அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு முறை சொன்ன வேண்டுகோளை இப்பொழுது நினைவுபடுத்த விரும்புகிறேன். மாதரப்பாக்கம் பதிவேடு வட்டாரத்தில் ஒரு சாயத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தி இருக்கிறோம். அங்கு போதுமான தண்ணீர் இல்லையென்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் தயவு செய்து மறுபரிசிலனை செய்து, சாயத் தொழிற்சாலை ஏற்படுத்த உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிற இந் நேரத்திலே கோரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு, இன்றைக்கு நல்ல வேலைகள் அவர்களுக்கு பிரையாரிட்டி கொடுக்கப்பட்டு, முன்னுரிமை கொடுக்கப்பட்டு, வழங்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, நெசவாளர் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்புப் பிரச்னைகளைப் பார்க்கிற நேரத்தில், அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் சொல்லி வருகிறது. மற்றக் கட்சிகள் கைத்தறியைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டிய அளவுக்கு வலியுறுத்த வேண்டுமென்றும், இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறவர்கள் மேல் மட்டத்திலே சொல்ல வேண்டிய அளவுக்குச் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆக, பொதுவாக, 1967-க்குப் பின்னர், கைத்தறித் துறையிலே பல மடங்கு இதற்கு முன்னால் ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்களுக்கு அளிக்கிற கடனை இருக்கட்டும், ரிபேட்டாக இருக்கட்டும், பல மடங்கு அதிகமாக ஆக்கப்பட்டிருப்பதை இந்த அவையிலே இருப்பவர்கள் தெளிவுபடுத்தினார்கள். ரிபேட் அளிப்பதாலே இந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கு பரிகாரம் காணமுடியாது என்பதை இந்த அரசாங்கம் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டிருக்கிறது.

பல துறைகளிலே இருக்கிற அரசாங்க ஊழியர்கள், சிப்பந்திகள் முன்பெல்லாம் கதர்மட்டும் தான் வாங்க முடியுமென்ற சூழ்நிலை இருந்தது. அதை மாற்றி கதர் வாங்குகிற அளவுக்கு கைத்தறியும் வாங்கலாம் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்தது. தொழிலாளர்களும் இதை வரவேற்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களும் இதன் மூலம் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடிகிறது. ஆக, அரசுத் துறையிலே கைத்தறித் துணியினை பெற்று தவணை முறையிலே பணத்தைத் திருப்பித் தருகிற அந்த முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆக, இவற்றை யெல்லாம் கருத்திலே கொண்டு நெசவாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னவர்கள், இந்தத் தீர்மானத்தின்மீது எனக்கு முன்னால் பேசிய இந்த அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று கூறியவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று சொல்லி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்:</u> தலைவர் அவர்களே, இன்று நெசவாளர்கள் விலை உயர்வால் மிகவும் கஷ்டப்பட்டு, சரியான நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படாமையால், வேலையில்லாமல் இருக்கும் நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். இந்தக் கஷ்டமான சூழ்நிலையை நிவர்த்திக்க 60-ம் நெம்பருக்கு மேற்பட்ட நூல்களுக்கு ஒரு பூலிங் சிஸ்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் இன்னும் நூல்களை வினியோகம் செய்யவில்லை யென்பதால் கஷ்டம் நீங்கவில்லை. சில மாதங்களாக அவர்களுக்குத் தேவைப்படும் பட்டும் வழங்கப்படாமையால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே போதிய கூலி இல்லாமல் கஷ்டப்படும் அவர்கள் உல்லாச வாழ்க்கை வாழ முற்படாவிட்டாலும், சாதாரணமாக வாழ்ந்தால் போதும் என்ற முறையில், சிறு வீடுகளிலே இருந்தால் போதும் என்ற முறையில் இருந்தாலும், ஒரு நாளைக்கு 10 மணி





நேரம் வேலை செய்ய வேண்டிய அவர்களுக்கு அதுகூடக் கிடைக்கவில்லை. அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க நம்முடைய மாநில அரசு பல முயற்சிகளை மேற்கொண்டாலும் அவர்களுக்குக் கடன் வசதிகள் பலவற்றை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அளித்தாலும், அவர்கள் புதிதாக சொசைட்டிகள் அமைப்பதற்கு ஷேர் காப்பிட்டல் கொடுப்பதற்கு வகை இல்லாமல் இருப்பதை யொட்டி சில ஊர்களிலே சர்க்காரே கடன் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். இன்னும் பல வகைகளிலே, என்னுடைய நண்பர் சொன்னமாதிரி, அரசு ஊழியர்கள் கைத்தறித் துணிகளை கடனில் வாங்க ஆணை பிறப்பித்ததின் மூலம், கைத்தறி நெசவாளர்களுக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. இருப்பினும் அவர்களுடைய நிலை கஷ்டமாகத்தான் இருக்கிறது. அவர்களுடைய வருமானம் அவர்களுக்குப் போதாது. அரசு திட்டக் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தி அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ததை நாம் பாராட்டுகிறோம். ஆனாலும் எந்தவிதமான புது நலனையும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

அவர்களுக்கு இருக்கிற பெரிய கஷ்டம் வீட்டுக் கஷ்டம் தான். மற்ற தொழில் செய்பவர்கள் சிறுசிறு அறையிலே இருந்தும் வாழ முடியும். ஆனால் இவர்கள் சிறு வீட்டிலே வாழத் தயாராக இருந்தாலும் வாழ முடியாது. அவர்கள் இருக்கும் இடத்திலேயே அவர்கள் தறிகளையும் வைத்துக் கொண்டு வாழ வேண்டியிருக்கிறது. தறி வைப்பதற்கு 20-க்கு 10-வது வேண்டுமென்ற அளவு இருக்கிறது. அவர்களுக்கு முக்கியமான பகுதிகளிலே வீடுகள் கொடுக்கப்படவில்லை. இப்பொழுதெல்லாம் நெசவாளர்கள் ஊரின் புறம்போக்கில் தள்ளப்பட்டு அதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வீடில்லாத பிரச்னை அவர்களுக்குப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. அதைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். ஒரு திட்டம் தீட்டி அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். இன்றைக்கு ஹவுசிங் போர்டு இருக்கிறது, ஸ்லம் போர்டு இருக்கிறது. அவர்கள் கட்டுகின்ற வீடுகளில், இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு இவ்வளவு பர்சன்டேஜ் என்று வைத்து வீடுகள் ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களிடம் குறைந்த தொகையை வாடகையாக வசூலிக்க வேண்டும். மற்ற, சர்க்கார் அலுவலர்களுக்குக் கொடுப்பதுபோல், சப்சிடைஸ்டு ரென்டில் நெசவாளர்களுக்கு வீடுகள் ஒதுக்க அரசு முன் வர வேண்டும். நேற்றுகூட, சென்னை புரசைவாக்கம் பகுதியில் இருக்கிறவர்கள் அமைச்சரைச் சந்திக்க வேண்டுமென்று என்னிடம் சொன்னார்கள். அவர்களும்

[திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்] [1972 ஆகஸ்ட் 17

வீட்டுக் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதேமாதிரி மதுரையிலும் அப்படித்தான் இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டும். அதற்கான ஏற்பாட்டை, ஸ்லம் போர்டும், வீட்டு வசதி போர்டும் கலந்து செய்தால்தான், இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள்மீது அக்கறை செலுத்தியதாக அமையும்.

நிலப் பட்டா விஷயத்திலும் பல நெசவாளர்கள் நிலம் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் கலெக்டர் ஆபீஸிலே அந்த மனுக்கள் எல்லாம் அப்படியே வைக்கப்பட்டிருக்கின்றன. கலெக்டர் ஆபீஸிலே அவர்கள் இஷ்டம்போல் சிலருக்குக் கொடுக்கிறார்களே தவிர உண்மையான ஏழைகளுக்குச் சீக்கிரத்திலே கொடுக்க ஆர்வம் காட்டுவது இல்லை. ரெவின்யூ இலாகா இதைக் கவனித்து உடனடியாக ஏழை மக்களுக்கு நிலம் ஜாரி செய்து கொடுப்பதற்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியாளர்களுக்கு நூல் சலிசாகக் கிடைக்க—சிட்டம் போட்ட நூலாக இருந்தால் கைத்தறிக்குப் பயன்படுத்துகின்றபொழுது செஸ் வரியைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே—வழிசெய்யப்பட்டிருக்கிறது என்றாலும்கூட இன்னும்கூட கம்மியான விலையிலே அவர்களுக்கு நூல் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூல், டைஸ், பட்டு முதலியவை அவர்களுக்குக் கொடுக்கும்பொழுது குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டாலும்கூட மாஸ்டர் வீவர்ஸ் அவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக குறைந்த விலையில் வாங்கி அதிகமான விலையில் அவர்களுக்கு விற்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. பழைய மாதிரியில், கைத்தறி நெசவாளர்களுக்கு எல்லாம் ஒரு ஐடன்டிபிகேஷன் கார்டு கொடுத்து அவர்களை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு சப்சிடைஸ்டு ரேட்டில்—நெசவாளர்கள் என்ற கார்டைக் காட்டினால்—கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மாஸ்டர் வீவர்ஸ் லாபம் சம்பாதிப்பதற்கு இடம் இருக்காது.

நெசவாளர்களுக்கு மாதம் 90 ரூபாய்தான் வருமானம் கிடைக்கிறது என்று பிற்பட்ட நலக்குழு கமிஷன் அறிக்கை கூறுகிறது. அந்தக் குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தமுடியவில்லை. எனவே அவர்களைத் தனியொரு கேட்டகரியாக ஏற்படுத்தி அவர்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் குறைந்த விலையில்—சர்க்கார் பண்டகசாலைகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம்—கொடுத்தால் அவர்களுக்கு நலமாக இருக்கும். விலைவாசி



1972 ஆகஸ்ட் 17] [திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்]

ஏறுகின்றபொழுது எப்படி கன்ஸியூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் என்று அரசாங்கம் ஏற்படுத்தி பொருள்களை விநியோகம் செய்கிறதோ அதைப் போன்று இவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். இப்பொழுது பொருள்கள் ஏழையாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும் ஒரே விலைக்குத்தான் கிடைக்கிறது. ஏழைகளுக்குக் கொஞ்சம் சலிசாகக் கிடைக்கின்ற முறையில் ஏழைகள், 200 ரூபாய், 250 ரூபாய் சம்பாதிக்கின்றவர்கள் சுலபமாகப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே சர்க்கார் பண்டகசாலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் உண்மையிலே இந்த அரசாங்கம் ஏழைகளுக்குச் செய்யக்கூடிய பல நல்ல காரியங்களிலே இது ஒன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கார் இந்தத் துறையிலே ஏற்கனவே எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் பாராட்டப்பட வேண்டியவைதான். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்வதைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்துதான் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் போட்டியாக பவர்லூம்ஸ் இருக்கின்றன. இருந்தாலும் எல்லா மாநிலங்களிலும் விசைத்தறிக்கள் விஸ்தரிக்கப்படுகின்ற நிலையிலே நாம் அதைச் செய்யாமல் இருந்தால் முன்னேற முடியாது. ஆகவே நாமும் விசைத்தறிகளை அதிகமாக ஏற்படுத்தினால்தான் மற்ற மாநிலங்களோடு, மற்ற நாடுகளோடு போட்டி போட முடியும், அதன் காரணமாக உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆனால் விசைத்தறிக்கு செஸ் வரியைக் குறைத்திருப்பதால் அவை சுலபமாக போட்டிபோடுகின்றன. ஆகவே அப்படியில்லாமல் விசைத்தறிக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகளைக் குறைத்துக் கொண்டு அவற்றிற்கு செஸ்வரியை அதிகப் படுத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கின்ற குறைகள் எல்லாம் ஓரளவு குறையும்.

கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை சர்க்காருக்குப் பலமாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லை. ஒட்டு மொத்தமாக அவர்கள் வசிப்பது இல்லை, அவர்கள் சிதறிக்கிடக்கிறார்கள். மில்தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து சர்க்காருக்கு அவர்களுடைய கோரிக்கைகளைத் தருகிறார்கள். அவர்கள் வேலை செய்யாவிட்டாலும்கூட அதற்காக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டு வற்புறுத்தி வாங்கிக் கொள்கிறார்கள். அந்த மாதிரி பலமான முறையில் கேட்பதற்கு இந்தத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு இல்லாததால் அவர்கள் சோர்ந்த நிலையில் இருக்கிறார்கள்.

அவர்களுக்குப் பென்ஷன் திட்டம், இன்னும் குறைந்த விலையில் பொருட்கள் வழங்குதல், உடனடியாக வீட்டுவசதிப் பிரச்னையைத் தீர்த்து வைத்தல் இவற்றை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்தச் சபைமுன் வைத்திருக்கிற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டால் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக எண்ணிக்கையிலே மிக அதிகமான எண்ணிக்கை உள்ளவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்தான். அந்தத் தொழிலாளர்களுக்காக அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதிலே யாருக்கும் அபிப்பிராய வித்தியாசம் கிடையாது. ஆனால் மற்ற எந்தக் கட்சிக்காரர்களும் இதை உதாசீனப் படுத்திவிடுகிறார்கள், மாநாட்டிலே தீர்மானம் போடவில்லை என்றெல்லாம் திரு. வேழவேந்தன் அவர்கள் சொன்னார்கள். அது சரியானதல்ல, விவசாயிகள், இந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்துதான் கட்சிகளாக இருக்கின்றன. ஆகவே அந்த நிலையிலே அவர்களைப் புறக்கணிக்க யாராலுமே முடியாது, அவர்களை நிர்ப்பந்தத்தின் காரணமாகக் கவனித்துத்தான் ஆகவேண்டும்.

இந்த அரசாங்கம் அவர்களுக்காக எவ்வளவோ காரியங்கள் செய்திருந்தாலும் அவர்கள் நிலைமை ஏன் இன்னும் முன்னேறவில்லை என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். 14 ஆம் தேதியன்று சேலத்திலே இந்தத் தொழிலாளர்கள் 1,000 பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அது எதைக் காட்டுகிறது என்றால் நெசவுத் தொழிலாளர்கள் இன்னும் அவ்வளவு கஷ்டமான நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. எவ்வளவோ காரியங்கள் நாம் செய்கிறோம் என்றாலும், அவையெல்லாம் அவ்வப்பொழுது அதற்குச் சமாதானம் காணுகின்ற முறையிலேதான் இருக்கின்றனவே தவிர, அவர்களுடைய குறைகளுக்கு அனுதாபம் காட்டுகிறவர்களாகத்தான் இருக்கிறோமே தவிர யாருமே முழுமையாக அவர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு முடியவில்லை. சேலம் ஜில்லாவிலே இன்னும் பதினைந்து நாட்களிலே எல்லா சொஸைடிகளும் மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. மாநில சொஸைடியானது கொள்முதல் செய்யவில்லை என்றும், கொள்முதல்





செய்ததற்குப் பணம் தரவில்லையென்றும் பேங்கிலே சர்டிபிகேட் தரவில்லையென்றும் சொல்லப்படுகிறது. சேலம் மாத்திரமல்ல அந்த நிலைமை தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பிரச்னை. இதற்காக நாம் ஒவ்வொரு நாளும் காரியங்களைச் செய்கிறோம் செய்கிறோம் என்று மனநிம்மதி ஏற்படுத்திக் கொள்கிற நிலைமையிலேதான் இருக்கிறோமே தவிர இதற்காக உண்மையாகப் பாடுபடவில்லை . என்பதிலே சந்தேகம் இல்லை.

சமீபத்திலே நூல் விலை அதிகமாகியிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த காரியங்கள் செய்யவில்லை. நெசவுத் தொழிலாளர்களுக்கு சல்லிசாக நூல் கிடைக்க கூட்டுறவு நெசவு ஆலை உண்டாக்கி இருக்கிறார்கள். ஆனால் அங்கேயும் சரியான விலையில் அவர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. அவர்களுக்கு மார்க்கட் விலையிலேதான் கிடைக்கிறது. நெசவுத் தொழிலாளர்களுக் கென்றே உண்டாக்கப்பட்ட தொழிற்சாலையிலிருந்தே நூல் நியாயமான விலையில் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வருகின்றன. இந்தத் தொழிலை முழுவதுமாகப் பாதுகாப்பதற்கு என்னமாதிரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பார்க்கும்பொழுது சமீபத்திலே பவர்லூம்கள் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கின்றன. அதிகமாக்க வேண்டுமென்பதை நாம் ஒப்புக் கொண்டாலும் அதன் காரணமாக கைத்தறித் துறையிலே பலர் வேலையில்லாமல் போய்விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதிலே சந்தேகம் இல்லை. பவர்லூம்கள் சிறு சிறு அளவிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பலர் பெரிய தொழிற்சாலை மாதிரி, 100, 200 என்ற அளவிலே வைத்துக் கொண்டு நடத்திவருகிறார்கள். அவர்கள் எக்ஸைஸ் வரியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். என்பதால் அவர்கள் குறைந்த விலையில் உற்பத்தி செய்யமுடிகிறது. அதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நெசவுத் தொழிலிலே அப்படியில்லை. இந்த அரசாங்கம் இன்னும் இந்தப் பிரச்னையைச் சரியாக அணுகவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கண் சிகிச்சைக்காக ஒரு பெரிய முகாம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது சமூக நீதியான பிரச்னை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவைகளை இவ்வளவு அவசரமாகச் செய்ய வேண்டுமா? ஏனென்றால் ரோட்டரி கிளப்புகள், லயன்ஸ் கிளப்புகள் போன்றவைகள் மூலம் அதைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் இங்கே கண் போய்க் கொண்டிருக்கிறது, அதை நாம் முதலில் பாதுகாக்க வேண்டும். அதன்பிறகு கண்கொடுக்கின்ற நல்ல காரியத்தை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

அதேபோல் பிச்சைக்காரர்கள், குஷ்டரோகிகள் மறுவாழ்விற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நல்ல காரியம்தான். ஆனால் அதே சமயத்தில் இருக்கின்றவர்கள் பிச்சைக்காரர்களாக ஆகாமல் தடுக்கின்ற மார்க்கத்தைக் கண்டுபிடித்துவிட்டு அதற்குப் பிறகு பிச்சைக்காரர் மறுவாழ்விற்குச் சென்றால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால் இந்தக் காரியங்களை, குஷ்டரோகிகள் போன்றவர்களைக் கவனிக்க பல மெஷினரிகள் போன்றவைகள் செய்கின்றன. அவர்களை ஊக்குவித்து இத்தகைய காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் இத்தகைய நெசவாளர்களைக் கவனிப்பதற்கு லயன்ஸ் கிளப்புகளோ, ரோட்டரி கிளப்புகளோ முன்வருவது இல்லை. ஆகவே இலட்சக்கணக்கான நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஒரு செய்தி பார்த்தேன், மத்திய சர்க்காரிலிருந்து சொன்னதாக வந்த செய்தியைப் பார்த்தேன், எல்லா உற்பத்திப் பொருள்களையும் கொள்முதல் செய்கிறோம், ஆனால் அதற்கு மாநிலங்களிலிருந்து திட்டம் வரவில்லை என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். எனவே, இப்பொழுது உடனடியாக தீபாவளியிலிருந்து கொள்முதல் செய்யாத துணிகளைக் கொள்முதல் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, சொசைட்டிகள் மூடப்பட்டு நூல் வாங்கிக் கொள்ள முடியாத நிலையிலிருக்கும் இடங்களுக்கு நல்ல வழிவகை காண வேண்டும். அதோடு, நூல் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், நெசவுத் தொழிலாளர்களுக்குத் தனி பேங்க் வைத்தால்கூட நல்லது என்று கருதுகிறேன். விவசாயிகளுக்கு என்று ஒரு அமைச்சரை வைத்திருக்கிறோம். ஆனால் அதற்கு அடுத்த தொழிலாக விளங்குகின்ற நெசவுத் தொழிலிலோ நூல் விலை அதிகமாக இருக்கிறது, பாவு இல்லை, ஆகவே தறிகளை மூடிவிடுகிறோம் என்று சொன்னால் அந்த நெசவாளர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் வேறு தொழில் தெரியாதவர்கள். பரம்பரை பரம்பரையாக இதே வழியில் வந்தவர்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கு எந்த வழியும் ஏற்படவில்லை. இந்த நெசவுத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் நிர்ணயிப்பதற்கு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது, ஆனால் அதனுடைய சிபாரிசுகள் இன்னும் வரவில்லை. அப்படி ஏற்படுத்தி குறைந்தபட்ச கூலி நிர்ணயித்து விட்டாலும்கூட தொழிலே நடக்கவில்லையென்றால் சம்பளத்தை நிர்ணயிப்பதால் மட்டும் என்ன பயன் ஏற்பட முடியும்? ஆகவே இதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இப்பொழுது சிறு பரிகாரமாகக் கண்டுபிடித்துச் செய்தாலும்கூட மீண்டும் இந்தப்





பிரச்சினை வரும். ஆகவே ஆழமாகப் பரிசிலித்து அவர்களைப் பாதுகாப்பதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். பவர்லூம்ஸ் வந்துவிட்டதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வேறு வேலைகளுக்குச் சிபாரிசு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அதேமாதிரி நிலப்பட்டாக்கள் வழங்கப்படுவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் லட்சக்கணக்கானவர்கள் இருக்கின்ற இடத்தில் ஒரு சிலருக்குத்தான் செய்ய முடியுமே தவிர அவர்கள் பூராவிற்கும் செய்ய முடியாது. படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் மத்தியிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கின்ற நிலையில் அந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் ஒன்றும் தெரியாத நெசவாளர்களுக்கு, பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நாம் என்னதான் செய்ய முடியும் என்று அறிய விரும்புகிறேன். வேலை பார்த்துக் கொடுப்பதோ அல்லது பட்டா வழங்குவதோ போன்றவற்றை செய்து அவர்கள் அவ்வளவு பேருக்கும் ஒரு சௌகரியமான சூழ்நிலையை ஏற்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கும்பொழுது வேண்டுமானால் அது முடியுமே தவிர, பிராக்டிகலாக, அனுபவரீதியாக இதைப்பார்த்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு வழிவகை காண வேண்டும். அதற்காக இப்பொழுது நான் சொன்ன சில ஆலோசனைகளை எடுத்துக் கொண்டு ஆராய வேண்டும். அதற்கான முடிவை எடுத்துக் கொள்ள சட்டங்கள் தேவைப்பட்டால் சட்டங்கள் கொண்டுவர வேண்டும், தனி அமைச்சர் தேவைப்பட்டால் அப்படி ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராஜன் : தலைவரவர்களே, இன்று இங்கே கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நெசவாளர் சமுதாயம் இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு அடுத்தபடியாக இருப்பதாக எண்ணுகிறேன். அந்த நெசவாளர் சமுதாயத்திற்கு நம்முடைய அரசு என்னென்ன வழிகளிலேயெல்லாம் நன்மைகளைச் செய்து வருகிறது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

இன்றைக்கு செஸ் ஸ்கீமின் கீழே ரிபேட்டுக்காக மத்திய சர்க்கார் நம்முடைய அரசுக்கு 60 லட்சம் ரூபாய்தான் அளிக்கிறது. ஆனால் நம்முடைய அரசு இன்றைக்குச் செலவு செய்யும் தொகை 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் என்பதை இந்த நேரத்திலே நாம் அறிவோம். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணியை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் 10 கோடி ரூபாய் வரையில் விற்பனை செய்யும் அளவில் உண்மையிலேயே பாராட்டும் வகையில் அதிகரித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 5 ஆண்டுக் காலத்திற்கு முன்பு 2 கோடி ரூபாய்க்கு மட்டும்தான் விற்பனையாகி இருக்கிறது. ஆனால் இப்பொழுது 10 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு இந்த விற்பனையை அதிகபட்சமாகச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

நூல் விலையைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே நூல் விலை சில நேரங்களில் ஏறுவதும் இறங்குவதுமாகப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. அதை நம்முடைய அமைச்சரவர்கள், ஒரு நிர்ணயமான விலைக்கு, குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்தால் அது நெசவாளர்களுக்கு உள்ளபடியே நல்ல பலனைத் தரும் என்று நான் நினைக்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல் தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்திற்குமட்டும்தான் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு நூற்பாலையிலேயும் நெசவாளர்களுக்குத் தனியாக ஒரு டெப்போ திறந்து, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலை, வேலைசெய்யும் நெசவாளர்களுக்கு முடிந்த அளவிற்குக் குறைந்த் விலைக்கு விற்றால் நெசவாளர்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தவிரவும், ரிபேட்டு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். தொடர்ந்து அந்த ரிபேட்டை விற்பனைக்குத் தந்தால் மேலும் விற்பனை அதிகமாகி, அதனால் ஏழை நெசவாளர்களிடம் உற்பத்தியான சரக்குக்கு கூலி அதிகமாகக் கிடைக்க வாய்ப்பும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த 20, 25 ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகிறோம். கலர் சேலைகளையும், பார்டர் துணிகளையும் நெசவாளர்களுக்கே ஒதுக்க வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கான உத்தரவை அளித்திருப்பதாகச் சொல்கிறார்களே தவிர, அதை அமல் ஆக்குவதில் சிரமம்



இருப்பதாகத் தெரிகிறது. அது உடனடியாக அமலாக்கப்பட்டால் நெசவாளர் சமுதாயம் நன்றியுள்ள சமுதாயமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஹேண்ட்லூம் விவர்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷன் தொடங்க வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாக நம்முடைய அரசு யோசித்து வருகிறது. அது விரைவிலே ஆரம்பிக்கப்பட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கிறதே, அது விரைவிலே அமைக்கப்படுமா என்பதை அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி ஹேண்ட்லூம் வீவர்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டால் நெசவாளர்களுக்குத் தேவைப்படும் கடன் கிடைக்க வழிகளும், வாய்ப்புகளும் ஏற்படும்.

இப்பொழுது எப்படி சிறு விவசாயிகளுக்கு கிரெடிட் சொசைட்டி மூலம் கடன் தருகிறதோ அதைப்போல் ஹேண்ட்லூம் சொசைட்டி மூலம் கடன் தருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினால் ஏழை நெசவாளர்களுக்கு ஒரு நிதி உதவி அளிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நெசவாளர்கள் குடும்பங்களில் உள்ள பல பேர் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். எனவே அரசாங்க வேலைகளுக்கு ஆட்களை எடுக்கும்பொழுது நெசவாளர் சமுதாயத்தை பொறுத்தவரை ஒரு சலுகை காட்ட வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்குவதிலே மிகவும் கட்டுப்பாடு இருப்பதாகத் தெரிகிறது. அவைகளைத் தளர்த்தி எங்கெங்கே கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கெல்லாம் முடிந்த அளவிற்கு அனுமதி தந்து, அவர்களுக்கு ஷேர் பணத்தைக் கடனாகத் தருவதோடு வேறு எல்லா விதமான வசதிகளும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நெசவாளர் சமுதாயம் நம்முடைய அரசு பங்கேற்ற பிறகு நல்லமுறையிலே வளர்ந்து வருகிறது. அதுமட்டுமல்ல, வெளிநாட்டிற்கு நாம் துணிகளை ஏற்றுமதி செய்வதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்று கூறிக் கொண்டு, முன்பு 2 கோடி ரூபாயாக இருந்த விற்பனையை பத்து கோடி ரூபாயாக விற்பனையை அதிகரிப்பதற்கும், கைத்தறி நெசவாளர்களின் வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை காட்டும் நம்முடைய அமைச்சர் திரு. மாதவன் அவர்களைப் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, சபையின் முன்னுலே உள்ள தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் சார்ந்திருக்கும் தொழில் கை நெசவுத் தொழில் தான். அதைப் பாதுகாக்க அரசு பலவிதமான நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொன்னுலும் கூட இன்று அவர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் பயங்கரமாக இருக்கின்றது. மாதம் பூராவும் வேலை இல்லாத நிலைமையிலே, வேலை இருந்தாலும் வாழ்க்கை நடத்த போதுமான கூலி கிடைக்காத அவல நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிருர்கள். அதிலும் விசைத்தறிகள் தமிழகத்தில் புகுத்தப் பட்ட பின்னுல் கைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

என்னுடைய வட்டாரத்தை எடுத்துக் கொண்டாலும் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வாரத்தில் இரண்டு, மூன்று நாட்களில்தான் தொழில் செய்யக்கூடிய நிலையில் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நூல் கிடைக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாக செயல்பட முடியாமைக்குக் காரணம் சென்ற ஆண்டு உற்பத்தி செய்த அடிப்படையில் 25 சதவிகிதம் கடனுகை வழங்கப்படுகின்ற நிலைமை இருப்பதுதான். சென்ற ஆண்டு ஜவுளித் தேக்கம் ஏற்பட்டதன் காரணமாக அதிகமாக உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகவே, மேற்கொண்டு நூலை வாங்கிக் கொடுக்க முடியாமல் வாரத்தில் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் தறிகள் இயங்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதனுல் அடுத்த ஆண்டு கடன் வாங்குவதில் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, சென்ற ஆண்டு உற்பத்தியில் 25 சதவிகிதம் கடன் என்பதற்குப் பதிலாக உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் விற்பனையாகிற வரையிலே தறிகள் இயங்கக்கூடிய அளவுக்கு கடன் கொடுக்க வேண்டும். உற்பத்தியான துணி மூன்று மாதங்களுக்கு மேல் சங்கங்களில் தேக்கமாக இருந்தால் மாநில கூட்டுறவு பெடரேஷன் மூலமாக வாங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நான் பத்திரிகையில் பார்த்தேன்—தேக்கமான கைத்தறி ஜவுளிகளை மாநிலச் சங்கங்களோ, மாநில சர்க்கார்களோ வாங்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்தால் உதவிகள் செய்ய மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறது என்ற அறிவிப்பைப் பார்த்தேன். பல இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் விற்காமல் தேக்கமாக இருக்கும் காரணத்தால் மேற்கொண்டு நூல் வாங்கி கை நெசவுத்



தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் அவர்கள் பட்டினியாகப் பரிதவிக்கும் நிலைமையில் இருக்கிருர்கள். ஆகவே, உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் மூன்று மாதங்களுக்கு மேல் தேங்கி இருந்தால் அதை மாநிலச் சங்கங்கள் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் விற்பதற்கு எந்த மாதிரி டிசைன் வேண்டுமென்று விரும்புகிருர்களோ அதே மாதிரி துணிகளை உற்பத்தி செய்ய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலிச் சட்டம் கொண்டுவர இருக்கிறது அரசாங்கம். அதை வரவேற்கிறேன். அவர்கள் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் மெம்பர்களாக இருந்தாலும், மாஸ்டர் வீவர்களிடம் வேலை பார்த்தாலும் மாதம் பூராவும் (லீவ் போக) வேலை கிடைக்க ஏற்பாடு செய்து உற்பத்தி செய்த பொருள்கள் காலாகாலத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்து அவல நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நண்பர் தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கைத்தறித் தொழிலானது நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக அதிகப்படியான ஜனங்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாகும். ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் இதிலே ஈடுபட்டிருக்கிருர்கள் என்ருல் அது மிகையாகாது. நமது ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிருர்கள். இந்தத் தொழிலுக்கு ஆபத்து வரும்போது அதிகப்படியான ஜனங்கள் பாதிக்கப்படுகிருர்கள் என்பது நம்முடைய அரசு அறியாத ஒன்றல்ல. இன்றைக்குள்ள நிலையில் இந்தத் தொழில் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்னுல் பேசிய திரு. வேழவேந்தன் அவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஏதேதோ செய்ததாகவும், இன்னும் செய்து கொண்டிருப்பதாகவும் கூறினுர்கள். இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னுல் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்யும் வகையில் தலையிலும், தோளிலும் கைத்தறித் துணிகளைச் சுமந்து விற்பனை செய்தது உண்மைதான். அதனுல் விளம்பரத்தைத்

தேடிக் கொண்டார்கள். ஆனால் அதிகாரத்தைப் பெற்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்காக ஏதாவது செய்தார்களா என்றால் நிச்சயமாக ஒன்றும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்த அக்கறை ஆட்சிக்கு வந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1947-ஆம் ஆண்டு இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்த ஒரு குடும்பத்திற்கு மாத வருமானம் 45 ரூபாயாக இருந்தது. இன்றையதினம் 90 ரூபாய் அளவுக்குத்தான் மாத வருமானம் வருகிறது. இன்றைய தினம் எல்லாப் பொருள்களின் விலையும் ஒன்றுக்குப் பத்தாக உயர்ந்திருக்கின்ற நிலையில், மற்றத் தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய வருவாய் ஒன்றுக்குப் பத்தாக உயர்ந்திருக்கின்ற நிலையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் இந்த அளவுக்குத்தான் ஊதியம் இருக்கிறது என்றால் அந்தத் தொழிலாளர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் ஊதியத்தை உயர்த்தி நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாகத் திட்டம் தீட்டியாக வேண்டும்.

எங்கள் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு சேலத்திலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது. முப்பதாயிரம் நெசவாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு பட்டினியாக பல நாட்களாக இருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக கலெக்டர் அலுவலகத்தின் முன்பு உண்ணா நோன்பு மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல, மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் இந்த நிலையிலேதான் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது எனக்கு முன்பு பேசிய மெம்பர்கள் கூறியதுபோல் இந்தத் தொழிலுக்கான மூலப் பொருளான நூலின் விலை அதிகமாக இருப்பதுதான் என்று கூறப்படுகிறது. மேலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளுக்கு மார்க்கட் இல்லாமல் அடிக்கடி தேக்கம் ஏற்படுவதையும் அறிகிறோம். இதிலே அதிக அக்கறை கொண்டு கவனம் செலுத்தி பாதுகாப்பு அளித்தாலன்றி இந்தத் தொழிலைப் பாதுகாக்க இயலாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



கூட்டுறவுச் சங்கங்கள் வழியாகச் சில சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே, அரசாங்கம் செய்கிற சலுகைகள் எல்லாம் தொழில் புரிகிற தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று அரசாங்கம் ஆராய்ந்து அறிய வேண்டும். நான் அறிந்தமட்டில் அரசாங்கம் செய்கிற சலுகைகள் நிச்சயமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை, இடையில் உள்ள தரகர்கள் பயன் பெறுகிறார்கள் என்று நிச்சயமாகக் கூற முடியும். இந்தத் தொழிலில் ஓரளவு அதிகமான தொடர்புள்ள காரணத்தால் இதிலிருக்கின்ற கோளாறுகளை ஓரளவு என்னால் கூற முடியும். ஆண்டுதோறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் கொடுக்கப்பட்டு வந்தது புக் அட்ஜஸ்ட்மென்ட் மட்டும் ஆகக் கூடிய நிலை இருந்ததே தவிர உண்மையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பயன்பெற முடியவில்லை. முன்பு ஒரு நண்பர் பேசிய போது ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக அரசாங்கம் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்காகச் செலவு செய்து வருவதாகக் கூறினார். ஆனால் உண்மையிலேயே அது அந்தத் தொழிலாளிக்குப் போய்ச் சேரவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் இருவார பொருட்காட்சியை தொழில் அபிவிருத்திக்காக, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு விமோசனம் அளிக்க வேண்டுமென்பதற்காக, தேங்கியிருக்கும் பொருள்களை விற்பனை செய்ய வேண்டுமென்பதற்காக எல்லா மாவட்டங்களிலும் நடத்தி வருகிறார்கள். சில பொருட்காட்சிகளை நான் பார்த்திருக்கிறேன். நெல்லை மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பார்த்திருக்கிறேன். இதனால் மக்களுக்கு இந்தத் தொழிலில் இருக்கும் அக்கறையோ, அபிலாஷையோ, அபிமானமோ குறைகிறதே தவிர, மக்களைக் கவரும் முறையில் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சென்னை மாநகரில் ஒருவேளை சிறப்பாக நடக்கலாம், நடைபெறுகிறது, அதனால் ஓரளவிற்குத் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுகிறது. தேங்கியிருக்கும் பொருள்களும் ஓரளவிற்கு விற்பனையாகிறது. ஆனால் மாவட்ட அளவில் கண்காட்சிகள் சிறப்பாகச் செயல்படவில்லை. அப்படிச் சிறப்புடைய வழிவகைகள் இன்றி இந்தத் தொழில் மீதே ஒரு வெறுப்பு அடையும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கத்தால் அனுமதிக்கப்படும் பணம் உண்மையில் அப் பொருட்காட்சிகளுக்கு செலவிடப்படாமல் வேறு

பல முறைகளில் லீக்காகிப் போவதால் இந்தப் பொருட்காட்சிகள் நல்லமுறையில் செயல்படுவதில்லை யென்பதை திரும்பவும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆகவே நெசவுத் தொழிலாளர்கள் காப்பாற்றப்பட வேண்டும். இந்தத் தொழில் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். இத் தொழில் அழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்காகத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இந்தத் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தேக்கம் அடையாத விதத்தில் மார்கட்ஸ், சந்தைகள் கண்டுபிடித்தாக வேண்டும். ஆக, நெசவாளர் தொழிலாளர்களைக் கார்ப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தையொட்டி பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கைத்தறித் துறை வளர்வதற்கான நல்ல பல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் வரவேற்று இந்த அரசாங்கம் அவர்கள் சொன்ன நோக்கத்தை ஏற்று கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு கொடுத்து நல்ல வளர்ச்சிக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தை வரவேற்று அந்த யோசனைகளை எல்லாம் நிறைவேற்ற முயற்சி எடுக்கும் என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானம் சட்டம் கொண்டு வந்து இந்தக் கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்ததாகும். ஆனால் உண்மை நோக்கம் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பொருளாதார நோக்கத்தோடு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, பல திட்டங்கள் வகுக்கப்பட்டு இந்த கைத்தறித் துறை வளருவதற்கு ஊக்கம் தரவேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்று நான் புரிந்துகொள்கிறேன். பேசிய சில நண்பர்கள் இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை, நெசவாளர்களெல்லாம் பரிதவிக்கிறார்கள் என்ற வார்த்தைகளை எல்லாம்





நினைத்துக் கொண்டார்கள். அது இயற்கை. ஆனால் நிச்சயம் இந்த அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்பதை உண்மையில் அவர்கள் உள்ளத்தால் நம்பமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.

ஏராளமான முயற்சிகளை நாம் தொடர்ந்து எடுத்து வருகிறோம். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் பங்கு என்ன என்று நாம் பேசுவது நியாயம் என்று நான் கருதுகிறேன். ஆனால் அது கூடத் தேவையில்லை. அல்லது மத்திய அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று நாம் சொல்வதற்குப் பதிலாக இன்னின்ன குறைகள் இருப்பதால் மத்திய அரசு அதை மாற்றியமைக்க முன்வருமானால் இத்துறைக்குப் பயன்படும் என்பதைத் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்கள் சொல்வோம் என்பதை முன்கூட்டியே எதிர்பார்த்து மத்திய அரசு மீது பழிபோட்டு தப்பித்துக் கொண்டு ஓடப் பார்க்கிறார்கள் என்று சொல்வது வேடிக்கையாகும். உண்மையில் இந்தத் துறையின் தன்மையைக் கருதுகிறவர்கள் நம் அரசு மத்திய அரசை இவ்வளவை ... செய்ய வேண்டுமென்று வற்புறுத்தும்போது தைரியமாக அரசுக்கு ஆதரவு தந்து மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பற்றிப் பேசும்போது நெசவாளர்களின் வாழ்வை சிறப்படையச் செய்யவேண்டுமென்று கூறும்போது நம் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள மற்ற திட்டங்களை கேலி செய்வது போல் பேசுவது பொருத்தமுடையதல்ல. கண் இழந்தோருக்கு பார்வை அளிப்பது என்பது ஒரு திட்டமாகும். பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிப்பது என்பது ஒரு திட்டமாகும். அவற்றை கிண்டல் செய்யலாம் இத்துறையை ஆதரித்துப் பேசும்போது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை. அதைப்பற்றி பேசிய முறையில் எனக்கு வருத்தம் ஏற்பட்டது.

கைத்தறியைப் பொறுத்தவரையில் 48 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும் கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் தறிகள் செயல்பட்டு வருகின்றன. சுமார் இருபது லட்சம் நெசவாளர்கள் இத்துறையை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள். இவ்வளவு பெரிய துறைக்கு வாழ்வளிக்க வேண்டும் என்பதில் நாம் மிகுந்த அக்கறை காட்டுகிறோம் என்பதுபற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த விவாதம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்ததால் யார், யார் என்னென்ன சொன்னார்கள், எதை எதைச் சொன்னார்கள் என்று தெரியாமல் விவாதத்தில் சூடு இல்லாமல் போய்விட்டதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே பொதுவான நோக்கத்தை மட்டும் வைத்து பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்த் அரசாங்கம் ஏதுவுமே செய்யவில்லை என்று சொன்னதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். அதற்காக ஒருசில புள்ளி விவரங்களைத் தர ஆசைப்படுகிறேன். கைத்தறித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கூட்டுறவுத் துறை மூலம் ஏராளமான உதவிகள் செய்து வருகிறோம். கூட்டுறவுத் துறை, தனியார் துறை என்றிருப்பது பல பிரச்சினைகளுக்கு இடம் தருகிறது. இந்தக் கைத்தறித் துறையைப் பொறுத்து இந்த கூலிப் பிரச்சினை எல்லாம் வருகிறது. கூலிப் பிரச்சினை பொறுத்து ஒரு குழு அமைத்திருக்கிறோம். கூட்டுறவுத் துறை பொறுத்து அப்போதைக்கப்போது ஆங்காங்குள்ள கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அதை நிறைவேற்றி வருகிறார்கள். சிக்கல் இல்லை. தனியார் துறையில்தான் போராட்டம் எல்லாம் நடைபெறுகிறது. நம் நோக்கம், ஒரு குழு போட்டாலும் கூலி நிர்ணயித்தற்காக பொதுவாக கொஞ்சம் கொஞ்சமாக கைத்தறித் துறை முழுவதையும் அரசாங்கமே எடுத்து கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு கொள்கையின் அடிப்படையில் செயல்ப்பட்டால்தான் இதற்கு விமோசனம் ஏற்படும். நம் அரசாங்கத்தின் கொள்கை அதுதான். அந்த முறையில் செயல்படுத்த இன்று முயற்சி எடுத்து வருகிறோம். கூட்டுறவுத் துறைக்கு ஏராளமான உதவிகள் கொடுத்து வருகிறோம். முதலில் இந்தச் சங்கங்கள் தொடங்கும்போது பங்குத் தொகை வேண்டும். அதில் நம் அரசு வந்ததற்குப் பிறகு 66–67-ல் ரூ. 4,14,000 என்றிருந்ததை 71–72-ல் ஆறு லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இந்தத் துறையில் பங்குத் தொகை கொடுப்பதற்குச் சங்கடப்படுகிற கூட்டுறவு நெசவாளர்களைப் பார்க்கிறோம்.

ஆகவே, இந்த அரசாங்கம் இந்த ஆண்டிலிருந்து ஒரு புதிய கொள்கையை நிறைவேற்றி வருகிறோம். எந்தெந்தப் பகுதிகளில் 25 சதவிகிதம் பங்குத் தொகையும் கொடுக்க முடியாத நெசவாளர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்ட் பெர் சென்ட் அரசாங்கமே பங்குத் தொகையை கடனாகக் கொடுத்து புதுச் சங்கங்களை உருவாக்க வேண்டுமென்ற முயற்சியை எடுத்து இருக்கிறோம். மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் இப்படிப்பட்ட சங்கங்கள் தொடங்கப்பட்டு



இருக்கின்றன. இது தமிழ்நாடு பூராவிற்கும் விரிவடைய முயற்சிகள் எடுத்து வருகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதேபோல் இந்த நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற கடன் கூட்டுறவுத் துறையில் அதற்கு வட்டி, மத்திய அரசு எவ்வளவு வட்டி கேட்கிறார்கள், 6 சதவிகிதம். ஆனால் நெசவாளர்களிடமிருந்து வாங்குகிற வட்டி 3 சதவிகிதம், ஆக 50 சதவிகிதம் நம் அரசாங்கம் உதவித் தொகையாகக் கொடுக்கிறது. அதன் மூலம் 65–66-ல் 9 லட்சம் ரூபாய் செலவழித்தோம். 71–72-ல் 13 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். அதை அதிகப்படுத்தத் திட்டம் வைத்திருக்கிறோம். அதேபோல் இந்தக் கூட்டுறவுத் துறையில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு மூல காரணம் அனைவருக்கும் தெரியும். தேங்கிக் கிடக்கிற துணிகள் இங்கு தேங்குவதற்குப் பதிலாக மாநிலச் சங்கத்தில் தேங்கினால் மட்டும் பரிகாரம் ஏற்பட்டு விடுமா என்றால் ஏற்பட்டு விடாது. ஆகவே புது ரகங்களை உற்பத்தி செய்ய ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பயிற்சி நிலையம் என்று அதில் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்குப் புது ரகங்களை உற்பத்தி செய்ய, தேவையான ரகங்களை உற்பத்தி செய்ய பயிற்சி கொடுத்து, உதவித் தொகை கொடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்ததற்குப் பிறகு அவர்களுக்குக் கடன் கொடுத்து புது ரகங்களை உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறோம். அதற்காக 71–72-ல் ரூ. 5,32,000 செலவழித்து, திட்டமிட்டு செலவழித்திருக்கிறோம். அதேபோல் தனியார் துறையில் உதவிகள் செய்வதற்கு ஒரு தனி கார்ப்பரேஷன் இப்போதே இருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷன் சார்பில் 65–66-ல் சுமார் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 71–72-ல் ஐந்து லட்சம் ரூபாய் தனியார் துறைக்கு இந்த வாரியத்தின் மூலம் கடன் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க உதவிகள் செய்திருக்கிறோம். அதேபோல் உதவித் தொகை கொடுக்கும்போது அவர்களுக்கு நடைமுறை முதலுக்காக, வொர்க்கிங் காப்பிட்டல் 66–67-ல் ரூ. 10,000. 71–72-ல் ரூ. 2,00,000. உற்பத்தித் துறையில் எந்தெந்த முறைகளில் நாம் உதவிகள் செய்ய விரும்புகிறோம். இந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு மடங்கு உதவித் தொகைகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன என்பது இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும். ஆக, உதவிகள் எல்லாம் ஏராளமாக பெருக்கப்பட்டிருக்கிறது, அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்பதை

யாரும் மறுக்க முடியாது. இந்த அரசாங்கம் வந்து எதுவுமே செய்யவில்லை என்பது உண்மையிலேயே சரியாக இருக்காது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நம்முடைய மாநிலச் சங்கம், பிரதமச் சங்கங்கள் இவைகளிலே விற்பனை நல்ல முறையில் நடைபெறுவதற்கு பெரிய முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் எடுத்து வருகிறது. அந்த முயற்சிகளின் விளைவாக மாநில சங்கத்தில் மட்டும் 66–67-ல் 4 கோடி ரூபாய்க்கு விற்பனை என்பது மாறி, 8 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. 4 ஆண்டுகளிலே இரண்டு மடங்கு விற்பனை அதிகமாகி இருக்கிறது. இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையை அதிகப்படுத்த அக்கறை செலுத்தி வருகிறார்கள். அதேபோல், தனியார் துறையில் விற்பனையைப் பொறுத்த வரையில் 65–66-ல் 10 கோடியில் இருந்தது, சென்ற ஆண்டு ரூ. 15 கோடிக்கு அந்த விற்பனையை அதிகப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் அமைச்சர் அவர்கள் விற்பனையைப் பற்றிக் குறிப்பிடும் போது 10 கோடி என்பது 15 கோடிக்குப் போய் இருக்கிறது என்று சொன்னார்கள். விற்பனை அதிகமாகியிருக்கிற அளவுக்கு உற்பத்தி யாகவில்லை. விலை தான் ஏறியிருக்கிறது. 15 கோடி அளவுக்கு விற்பனையாகியிருக்கிறது என்று சொன்னால் உற்பத்தி அந்த அளவுக்கு பெருக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. புதிய ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அந்தக் கருத்தை, அரசாங்கத்தின் சார்பில் இதே மன்றத்தில் வைத்து இருக்கும் புத்தகத்தைப் படித்து விட்டுச் சொல்லியிருந்தால் பாராட்டியிருக்கலாம் உற்பத்தி அதிகம் தான் ஆகியிருக்கிறது. எத்தனை சதவிகிதம் விலையால் ஏற்றம், எத்தனை சதவிகிதம் உற்பத்தியால் ஏற்றம் என்பதை அந்தப் புத்தகத்தில் போட்டிருக்கிறோம். 60 சதவிகிதம் உற்பத்தியில் பெருக்கம். 40 சதவிகிதம் விலையால் ஏற்றம். உண்மையிலேயே இல்லை என்று சொல்வது தவறான கருத்தாகும்.



நம்முடைய மன்றத்தில் கொடுத்திருக்கும் புள்ளிவிவரத்தில் கூட 80 மில்லியன் கெஜம் உற்பத்தியிலிருந்து 100 மில்லியன் கெஜம் உற்பத்திக்கு அதிகமாகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தால் வரவேற்று இருப்பேன். விவரம் தெரியாமல் ஒன்றுமே இல்லை என்று சொன்னது வருத்தமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகியிருப்பதற்குப் பாராட்ட வேண்டும். அரசாங்கத்தைக் குறைசொல்ல வேண்டுமென்பதற்காக உண்மையை மறைப்பதில் பயன் இல்லை. மாநில அரசாங்கம் ஒதுக்குகிற தொகை தொடர்ந்து அதிகப்படுத்தப்பட்டு இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 7½ கோடி ரூபாய் என்று இருந்தது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 10.60 கோடி என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. 65–66-ல் ரூ. 145 லட்சம் என்று இருந்ததை 1971–72-ஆம் ஆண்டில் 254 லட்சம் ரூபாய் நாம் செலவழித்து இருக்கிறோம். நாம் செலவழிக்கிற திட்டத்தில் செலவழிக்கும் பணம் அதிகப்படுத்தப்பட்டு வருவதை நாம் பாராட்டி வரவேற்க வேண்டும். இந்தத் துறையில் விற்பனையில் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக ரிபேட் கொடுத்து வருகிறோம். ரிபேட் நிறுத்தப்படவில்லை. இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. நிரந்தரமாக 5 காசு கொடுத்து வருகிறோம். சில நேரங்களில் 10 காசு கொடுக்கிறோம். அதன் விளைவாகப் பார்த்தாலும் கூட 1966–67-ல் 60 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு ரூ. 132 லட்சம் கொடுத்திருக்கிறோம். அதுவும் விலையேற்றத்தால் அல்ல. ஒவ்வொரு ரூபாய்க்கும் என்று கொடுக்கிறபோது, விற்பனை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் உண்மையிலேயே நெசவாளி பயன்பெறுகிறான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுத்து வரும் கடன் உதவி 1966–67-ல் ரூ. 460 லட்சமாக இருந்தது. 1971–72-ல் ரூ. 625 லட்சமாக ஆகியிருக்கிறது. இது மட்டுமல்ல, ஹேண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலம் 1966–67-ல் ரூ. 114 லட்சம் கொடுக்கப்பட்டது. 1971–72-ல் ரூ. 148 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகம் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறோம் என்பதை புள்ளி விவரங்கள் காட்டும். ஏராளமாக

உதவிகள் செய்யவேண்டும்; அதன் மூலமாகத் தொழில் வளர வேண்டும் என்ற கருத்தை நான் மனமுவந்து ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்தத் தொழில் வளர என்னென்ன செய்ய வேண்டுமென்பதை தூய நோக்கத்தோடு பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையெல்லாம் நான் ஆதரிக்கிறேன்.

கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யும் அந்த நெசவாளர்களுக்கு ஒரு சங்கம் அமைக்க வேண்டும். அப்படிச் சங்கம் அமைத்துக் கடன் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். அப்படிக் கடன் கொடுப்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. அவற்றை ஆராய்ந்துதான் செய்ய முடியும். நாம் ஏராளமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் தறியின் அடிப்படையில்தான் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது உற்பத்தி அடிப்படையில் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. நாங்கள் உற்பத்தியைப் பெருக்கி விடுகிறோம். அப்படி உற்பத்தி பெருகி, துணிகள் தேங்கி விட்டால் மேற்கொண்டு கடன் கிடைப்பதில்லை. அந்த நிலைமைக்கு என்ன வழி என்று கேட்கிறார்கள். அதற்கு நம்மால் பதில் சொல்ல முடியவில்லை. இதை ஆராய வேண்டும். கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடன் வசதி கொடுக்கும்போது மத்திய அரசாங்கம், தன்னுடைய ரிசர்வ் பாங்க—மத்திய அரசாங்கம் என்ற உடனே கோபப்பட வேண்டாம், அதுவும் நம் அரசாங்கம்தான், இங்கே எவ்வளவு ஆத்திரத்தோடு கூற முற்படுகிறீர்களோ, அந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறுங்கள்—மூலமாகக் கடன் வழங்கி வருகிறது. மாநில அரசாங்கத்தின் சார்பில் சில திட்டவட்டமான யோசனைகளை நாம் சொல்லி வருகிறோம்.

நாம் சொல்லுகிற யோசனைகளை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் பேசுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் அரசாங்கத்தை ஆதரிக்கக் கூடாது ஏன்பதற்காக விட்டு விட்டார்கள் என்று நினைக் கிறேன். பணம் கேட்கிற சங்கம், பிரதம சங்கங்களில் உற்பத்தி செய்கிற அத்தனை துணிகளுக்கும், மாநில சங்கம் பொறுப்பு ஏற்க வேண்டும். மாநில சங்கம் பொறுப்பேற்று, மொத்தமாகப் பணம் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். இப்படி இருந்தால்தான் பிரதம சங்கத்தில் இருக்கும் சாதாரண நெசவாளி அந்தக் கடனை வங்கியிலிருந்து வாங்கி உற்பத்தியைப் பெருக்க முடியும். மத்திய அரசாங்கம் இதை ஏற்று, தமிழ் நாட்டில் மொத்தமாக உற்பத்தி செய்யும் துணிகளுக்கு மாநில சங்கம் பொறுப்பேற்கும்,





அதற்கு மொத்தமாக ரிசர்வ் வங்கி கடன் வழங்கலாம் என்று சொல்லவேண்டும். மாநில சங்கம் பொறுப்பேற்கும்போது, தவறுகள் ஏற்படாது என்று கருதுகிறேன். ஆகவே, இந்தக் கொள்கையை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி வருகிறோம். இதை மத்திய அரசாங்கம் ஏற்று உதவி புரிய முன்வரும் என்று நம்பு கிறேன். இப்போது நாம் மத்திய அரசிடம் வற்புறுத்திக் கேட்க கேட்க அதிகமான கடன் வசதி செய்து வருகிறது. அதற்காக நாம் அதைப் பாராட்ட வேண்டும். அதை இன்னும் அதிகப்படுத்த, நாம் சொல்கிற அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள உற்பத்தியின் அடிப்படையில், அதற்கு ஏற்ற வகையில் கடன் அளிக்க முன்வருவார்களேயானால், நிச்சயமாக நம்புகிறேன், தமிழ்நாட்டில் நெசவாளர்கள் மத்தியிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம், கூலி கிடைக்காத பிரச்னை இல்லாத சூழ்நிலை, நிரந்தரமாகக் கடன் கொடுக்கும் வாய்ப்பு ஏற்படும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. அந்தக் கொள்கையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தி இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

பணம் கொடுத்து விடுகிறோம். தறியை வாங்கித் தந்து விடுகிறோம். அடுத்த கட்டம், நெய்வதற்கு நூல் வேண்டும். இங்கே பெரிய சிக்கல் இருக்கிறது. இது ஒரு நியாயமான பிரச்னை. அதற்குப் பரிகாரம் என்ன என்பதை இந்த அரசாங்கம் கவனமாகச் சிந்தித்து திட்டவட்டமான ஆலோசனை ஒன்றை மத்திய அரசுக்குத் தெரிவித் திருக்கிறது. நாம் தெரிவித்து இருக்கும் யோசனை, இந்த மாநிலத்தி லுள்ள கைத்தறிகளுக்கு எந்த நெம்பர் நூல் தேவைப்பட்டாலும், அதை வினியோகிக்கும் பூர்ணமான உரிமையை மாநில அரசாங்கத் திற்குத் தந்து விடவேண்டும். இதுதான் நம்முடைய கொள்கை. கூட்டுறவுத் துறையில் இதைச் செய்து வருகிறோம். தனியார் துறை யில் செய்தால்தான் விலையைக் கட்டுப்படுத்த முடியும். அப்போதுதான் பூர்ணமாகப் பாதுகாப்புத் தர முடியும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் ஆங்காங்குள்ள மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நெசவாலைகளுக்கு நேரடியாக நூல் கொடுக்கும் பொறுப்பை நாம் மேற்கொண்டால், மொத்தமாக மாநில அளவில் அதைப் பெற்று மார்க்கெட் பிரைசுக்குக் குறைவாகக் கொடுக்க முடியும் என்ற நிரந்தரமான திட்டத்தை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. நூல் விலை ஏறுவதற்கு இது மட்டுமல்ல காரணம். மற்ற மாநிலத்தில் ஏற்படுகிற சில நிகழ்ச்சிகளின் விளைவு நம் மாநிலத்திலுள்ள நெசவாளர்களை மிகவும் பாதிக்கிறது.

குஜராத், மகர்ராஷ்டிராவில் எங்காவது ஓரிடத்தில் ஏதாவது ஒரு சூழ்நிலை, பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டால் இங்கேயும் அதன் விளைவாக சில சிக்கல்கள் உண்டாகின்றன. தெளிவாகச் சொல்லப் போனால், "ஸ்பெகுலேடர்ஸ்" செய்கிற காரியங்களால் தமிழ் நாட்டில் உள்ள நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதை எப்படித் தவிர்ப்பது என்பதுதான் நம்முடைய பிரச்னை. இதைத் தவிர்க்கும் நிலைமை உருவாக்கப்படுமானால், குறைந்த விலை என்பதை விட நியாயமான விலையில் தொடர்ந்து நெசவாளர்களுக்கு நூல் கொடுப்பதில் நாம் வெற்றி பெற்று விடுவோம். அதற்காகத்தான் நம்முடைய அரசின் சார்பிலே தெளிவாக இந்த யோசனையைக் குறிப்பிட்டோம். நூல் தமிழ் நாட்டில் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கு சந்தை கிடைக்கவில்லை. 1967–68-ல் நூல் விற்பனையாகாமல் ஆலைகளிலெல்லாம் தேங்கிக்கிடந்தது. அதற்கும் போராட்டம் இந்த அரசாங்கத்தை எதிர்த்து, அங்குள்ள ஆலைத் தொழிலாளர்கள் போராட்டம் என்ற கொள்கையையும் நாம் பார்த்தோம். லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நூல் தேங்கிக்கிடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது அண்ணா அவர்கள் இருந்தார்கள். அரசின் சார்பில் ஒரு புதிய திட்டம் உருவாக்கி, தேங்கிக் கிடக்கும் நூலுக்கு—கைத்தறித் துணிக்கு அல்ல ஒரு திட்டம் வகுத்து, நாமே கடன் கொடுப்பது என்ற முறையைக் கொண்டு வந்தோம். ஆனால், அப்படித் திட்டம் கொண்டுவந்த சில நாட்களுக்குள்ளேயே நூல் விற்பனையாகிவிட்டது, அதனால் அந்தத் திட்டத்திற்குப் பலன் இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் என்ன வென்றால், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களிலே நூலுக்கு ஏற்படுகிற மாற்றம், நூல் சம்பந்தமாக ஏற்படக்கூடிய பொருளாதார ஏற்றத் தாழ்வு தமிழ் நாட்டில் உள்ள நெசவாளிகளைப் பாதிக்கிறது என்பது உண்மை. ஆகவேதான் நாம் கேட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல் தனியார் துறையில் இருந்தாலும்சரி, கூட்டுறவுத் துறையிலிருந்தாலும்சரி, மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ் நாட்டிற்கு வரக் கூடிய நூலாக இருந்தாலும்சரி, கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தேவையான நூலை மட்டும் நியாயமான விலையில் விநியோகிக்கக் கூடிய அதிகாரத்தை மாநில அரசுக்கு விட்டுவிடுங்கள் என்று திட்ட வட்டமாக காஞ்சீபுரத்தில் நடந்த மகாநாட்டில் தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானத்தை இந்த அரசு ஏற்று, மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)





அப்பொழுதுதான் நூல் விலையைப் பொறுத்த அளவுக்குப் பரிகாரம் காணமுடியும். நிரந்தரமாக நெசவாளர்கள் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்திருக்கிறோம். நூலைக் கொடுத்ததற்குப் பின்னால் நெய்கின்ற துணிகளை .........

DR. H. V. HANDE: What prevents this Government from taking stock of the quantity of yarn that is available here and find out what exactly is required? The Hon. Minister was saying that there was speculation in Maharashtra. What exactly is the problem for Government? The problem of Salem weavers is they have got to get the yarn at exorbitant price. They have to be helped to get it at controlled price. What prevents the Government from taking action, in getting it at controlled prices if necessary from other States?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத்தான் விளக்கினேன். நமக்கு அதிகாரம் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. சேலம், கோவை மாவட்டங்களைப் பொறுத்து நூலை விட "மான்-மேடு ஃபைபர்" ஆகியவைகளுக்குத்தான் அடிக்கடி கிராக்கி ஏற்படுகிறது. இதை விநியோகிக்கக்கூடிய அதிகாரமும் மாநில அரசுக்குக் கிடையாது. பம்பாயில் உற்பத்தி செய்கிறவர்கள் ஒரு சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கம் எதைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறதோ அதைத்தான் செய்யவேண்டும். மத்திய அரசாங்கத்திடம் சண்டை போட்டு—வருத்தப்பட வேண்டாம், சண்டை போட்டால்தான் கொஞ்சம் பலன் கிடைக்கிறது—தனியார் விநியோகம் செய்யக்கூடிய அதிகாரத்தைக் குறைத்து, டைரக்டர் ஆஃப் ஹாண்டுலூம்ஸ் சொல்கிறவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று கேட்டு ஓரளவுக்கு வெற்றியும் பெற்றோம். பூரணமாக வெற்றி பெற முடியவில்லை. இயக்குநர் மூலம், தமிழ் நாட்டில் யாரோ ஒருவர் இடையிலே இதைப் பயன் படுத்துவது என்ற முறையை மாற்றி, யார் தறி வைத்திருக்கிறார்கள், வீடுகளில் யார் தறி வைத்திருக்கிறார்கள் என்று வீடு வீடாகச் சென்று சர்வே செய்து, சென்ற மாதத்தில் எவ்வளவு நூல் எப்படிப் பயன் படுத்தியிருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து அந்த கணக்கின் அடிப் படையில் நூல் விநியோகம் செய்யப்பட்டது. யாரோ மாஸ்டர் வீவருக்கு கொடுப்பதற்கு முன்வரக்கூடாது என்பதுதான் கருத்து. (குறுக்கீடு) மாநிலம் முழுவதிலும் இந்த நிலைதான். நூலை நாமே விநியோகிப்பதற்கு அதிகாரம் இல்லாமல் தவிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இந்தக் கண்ணோட்டத்தில்

மாநில அரசின் மீது நம்பிக்கை வைத்து நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல், வெளிமாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகின்ற நூல் அத்தனையையும் நாம் சொல்கின்ற திட்டத்தின் அடிப்படையில் நியாயமான விலையிலே விநியோகிக்கக் கூடிய அதிகாரம் மாநில அரசுக்கே தரப்பட வேண்டும் என்றுதான் வற்புறுத்துகிறோம். அப்பொழுதுதான் அங்கே ஏற்படுகின்ற விலை ஏற்றத்தாழ்வு நம்மைப் பாதிக்காமல் இருக்கும். எங்கேயோ ஒரு வியாபாரி எதையோ செய்கின்றதன் விளைவு தமிழ் நாட்டைப் பாதிக்கும் நூல் விநியோகத்தைப் பொறுத்த அளவுக்கு என்பதுதான் நாம் இன்றைக்கு நடைமுறையில் காணக்கூடிய சிக்கலாகும். அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்தப் பரிகாரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: சேலத்தில் இப்பொழுது பெரிய பதட்ட நிலை இருக்கிறது என்று தந்தி அடித்திருக்கிறார்கள். பசியினால், பட்டினியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். 30,000 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பொறுத்தவரையில் மத்திய அரசிடமிருந்து ஏதாவது பதில் அனுப்பியிருக்கிறார்களா? மாநில அரசு இதைப்பற்றி ஏதாவது மத்திய அரசிற்குத் தெரிவித்திருக்கிறார்களா? அப்படி யானால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u>: சேலம் மாவட்டத்தில் மட்டு மல்ல. தமிழ்நாடு முழுவதும் இந்தப் பிரச்னை இருக்கிறது, நூல் பிரச்னையைப் பொறுத்த அளவுக்கு. இடையிலே பவர்லூம்ஸ் எல்லாம் மூடினார்கள் திடீரென்று, நாம் சொன்னதின் பேரில் நிறுத்தி விட்டார்கள். ஓரளவுக்கு சேலத்தில் இந்தப் பிரச்னை தீர்க்கப் பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

நூல் கிடைக்காத நிலையில், கிடைத்த நூல் விலை ஏற்றத்தினால் பெரிய பாதிப்பு தொடர்ந்து ஆண்டுதோறும், மாதந்தோறும் நெச வாளிகளுக்கு ஏற்பட்டது என்ற கவலையில் நாம் ஆழ்ந்திருக்கிறோம். ஆகவே, நம்முடைய திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நூலைக் கொடுத்த பின்னால் உற்பத்தி செய்கின்ற துணிக்கும் நாம் சந்தை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதனால் எவ்வளவு அல்லல் படுகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்





61522

சொன்னார்கள். அந்தக் கவலையையும் நான் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நாம் உற்பத்தி செய்கின்ற கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரையில், நாட்டில் எது தேவைப் படுகிறதோ அந்த ரகங்களை உற்பத்தி செய்கின்ற முறை முழுவதும் பின்பற்றப்படவில்லை. அதுதான் மூலக் காரணம், அதை நிச்சயம் ஓரளவுக்கு மாற்றக்கூடிய வழி முறைகளைப் பயிற்சி நிலையங்கள் மூலம் கொண்டுவருகிறோம். முதலில் நான் எடுத்துச் சொன்ன புள்ளி விவரங்களின்படி அதிகமான சரக்குகள் விற்பனை செய்யப்பட்டிருந் தாலும், இன்னும் ஏராளமாகத் தேங்கியிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

சேலம் பகுதியில் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை, இந்தத் துணி தேக்கத்தினால் நெசவாளர்கள் நிச்சயம் அல்லல் படுகிறார்கள் என்பதுதான் முக்கியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு தீபாவளிக்கு மட்டும் ரூ. 2 கோடி அளவில் விற்பனை செய்கின்ற ஒரு முயற்சியைத் தொடங்கியிருக்கிறோம். ஓரளவுக்குச் சிக்கல் தீரும் என்ற நம்பிக்கை மாநில அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. கண்காட்சிமூலம் ஒன்றும் நடக்கவில்லை என்று யாரும் கருதிவிடக்கூடாது. கண்காட்சிமூலம் அந்தச் சமயங்களில் விற்பனை அதிகப்படியாகத்தான் இருக்கிறது. நிரந்தரமாக நம்முடைய ரகங்களுக்குச் சந்தை கண்டுபிடிக்கக்கூடிய முயற்சி வெற்றி பெற்றால்தான் அடிக்கடி ஏற்படுகின்ற துணித் தேக்கத்திற்கு நாம் பரிகாரம் காணமுடியும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மொத்தத்தில் நம்முடைய ஏற்றுமதி குறைந்து இருக்கிறது. அதைத்தான் உணர்ந் தாகவேண்டும். இதற்கு என்ன காரணம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டு கைத்தறித் துணிகளை நம்பி யிருந்த பல நாடுகள், குறிப்பாக தென் கிழக்கு ஆசிய நாடுகள், அதிலும் குறிப்பாக மலேஷியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை இது போன்ற நாடுகளெல்லாம் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே அவர்களே உற்பத்தி செய்யவேண்டும் என்ற முயற்சியில் ஓரளவுக்கு ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் நம்முடைய நாட்டுத் துணிகளுக்கு உள்ள சந்தை முன்பிருந்ததைவிட இப்பொழுது குறைந்து இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, வெளிநாட்டுச் சந்தையில் ஏற்பட்டிருக்கக்கூடிய உண்மை நிலையை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். நம்முடைய துணி களுக்கு ஏராளமான சந்தை கண்டுபிடிக்கக்கூடிய முயற்சியில் நாம் வெற்றி பெற்றால்தான் நம்முடைய கைத்தறித் துணிக்கு நிரந்தரமான

சந்தையை உருவாக்கிக் கொள்ள முடியும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன். இதற்கு என்ன பாதுகாப்பு? அதுதான் நம்மிடையே உள்ள பிரச்னை. பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தப் பிரச்னை தமிழ்நாட்டில் எழுப்பப்பட்டு வந்திருக்கிறது. கட்சி வேறுபாடின்றி எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தியிருக்கிறார்கள். இன்னென்ன ரகங்கள் கைத்தறித் துறைக்குத்தான் ஒதுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திவந்தோம். நம்மாலே அதை செயல்படுத்த முடியவில்லை என்ற கவலைதான் ஏற்படுகிறது. நான்கூட இந்த ஆட்சிக்கு வந்தவுடன் மாற்றிவிட முடியும் என்று எவ்வளவோ முயற்சி செய்தும், நடக்கவில்லை. ரிசர்வேஷன்; இன்ன ரகங்கள் கைத்தறிக்கு என்று ஒதுக்குகின்ற முறை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று நாம் கேட்டபொழுது, ஏற்கனவே சட்டம் இருப்பது எங்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது மத்திய அரசின் சார்பிலே அதைப்பற்றியும் இந்த அரசு திட்டவட்டமாகத் தெளிவாக ஒரு கொள்கையை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. மகாநாட்டில் தீர்மானம் போட்டு, அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, இந்த அரசாங்கத்தின் சார்பிலும் அதைத் தெளிவாக வற்புறுத்தியிருக்கிறோம். இப்பொழுது இருக்கிற ரிசர்வேஷன் சட்டத்தில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளத்தான் இருக்கிறது. அந்த உத்தரவுகளை அமல் நடத்துவதும் மாநில அரசுதான் என்று ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாகச் செய்திருக்கிறார்கள். ஏனென்றால் தாங்கள் சட்டம் போட்டிருக்கிறோம், மாநில அரசுதான் அதை நிறைவேற்றவில்லை என்று சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்றால், அது எந்த அளவுக்கு ஓட்டைகள் நிறைந்ததாக இருக்கிறது, அந்த உத்தரவுகள் அமல் நடத்தமுடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய அரசின் சார்பில் நாம் சொல்வதெல்லாம் திட்டவட்டமாகச் சொல்லுங்கள், வேட்டி என்று சொல்லுங்கள், சேலை என்று சொல்லுங்கள், துண்டு, துப்பட்டி என்று சொல்லுங்கள் என்றுதான் சொல்கிறோம். ஆனால், அவர்கள் உத்தரவு போட்டிருப்பது தோத்தி கலர் பார்டர் உள்ளது. ஒன்றேகால் இன்ச்சுக்கு மேலாக உள்ளது என்பது. யார் போய் கண்டுபிடிப்பது, எங்கே போய் பார்ப்பது, ஒவ்வொரு தறியையும் யார் போய் பார்ப்பது? மேலும் Sarees using coloured yarn or having striped or check pattern or with borders exceeding 2½ " width என்று போட்டிருக்கிறார்கள். இதை யார் போய் அளப்பது, எந்த



ஊரில் போய் அளப்பது, ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டு லுங்கிதான் உலகச் சந்தையில் பெயர் போனது.

Lungis with check pattern and having width between 42 " and 52 " என்று போட்டிருக்கிறார்கள். இதை யாராவது அளக்க முடியுமா? எந்த ஊரில் யார் அளந்துகொண்டிருக்க முடியும்? அதைப்போலவே தான்

Check or striped chaddars, bed-sheets, bed-covers and counter-panes, honey-comb towels, napkins and dusters.

இப்படிப்பட்ட துணி ரகங்களுக்கு விதிவிலக்கு உத்தரவையும் அளித்து உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி விதிவிலக்கு உத்தரவையும் போட்டுவிட்டு, அதை அமல் நடத்தக்கூடிய அதிகாரத்தையும் மாநில அரசிடம் ஒப்படைத்துவிட்டோம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருந்துவருகிறது. இந்த மோசமான சூழ்நிலை இந்த உத்தரவின் மூலமாக இருக்கிறது. இதை அகில இந்திய கைத்தறியாளர்கள் அவர்களுடைய மாநாட்டின் மூலமாகவும் தலைமை மூலமாகவும் பிரதம மந்திரிக்கு எழுதியிருக்கிறார்கள். இதில் உடனடியாக அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நாங்களும் பதில் கொடுத்திருக்கிறோம். நம் அரசாங்கத்தின் யோசனை, இந்த உத்தரவை மாற்றியமைத்துத் தெளிவாக, இந்த கலர், அங்குலம் என்று இப்படிப் போடாமல் வேட்டி, சேலை, துண்டு, துப்பட்டி, பெட்ஷீட் இவை கைத்தறிக்குத்தான், வேறு துறைக்கு இல்லை என்று தெளிவாக உத்தரவிருந்தாலொழிய, ஒதுக்கல், ரிசர்வேஷன் என்பது பெயரளவில் ஏட்டில் இருக்கும், நடப்பில் நெசவாளர்களுக்குப் பயன் தராது என்பதை அரசின் சார்பில் மத்திய அரசுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் இதை ஆதரித்து அனுமதி தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இது முழுமையாக வந்துவிட்டால் அதனால் பயன் கிடைக்குமாவென்பது சந்தேகம்.

இரண்டாவது கட்டத்தில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்வதை ஒதுக்கி வகைப்படுத்த முடியும். ஆனால் இப்படி மற்ற மாநிலங்களில் அமல் படுத்தாத நிலைமை ஏற்பட்டு அந்த மாநிலங்களில் உற்பத்தி செய்யக் கூடிய நிலை இருந்து அவைகளுடைய ஆக்கிரமிப்பிலிருந்து நம் துணிகளுக்கு எப்படிப் பாதுகாப்பு தரப்போகிறோம் என்பது வேறு இருக்கிறது. இந்த இரண்டு பிரச்னைக்கும் பரிகாரம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்த இரண்டாவது பிரச்னையை நாம் சொல்லியிருந்தாலும் மத்திய அரசாங்கம் இதை தைரியமாக

எடுத்துக் கொண்டு ரிசர்வேஷனை மீறுகிற எந்தத் துணியையும் நாட்டில் அனுமதிக்க மாட்டோம் என்று முடிவெடுக்க வேண்டும். அப்படி எடுத்துவிடுவார்களானால் தமிழ்நாட்டில் அப்படி மீறி வரக்கூடிய துணிகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரத்தையும் மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று இரண்டாவது தீர்மானமாக காஞ்சிபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நிறைவேற்றியது. அதை நம் அரசுக்கு அனுப்பி வைத்து நாமும் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இந்த இரண்டு முறைகளிலும் பாதுகாப்புத் தந்தால்தான்—சட்டமே வேண்டாம், பாதுகாப்புத் தந்தால் போதும்—நம் மாநிலத்தைப் பொறுத்த அளவிற்கு முழுமையாக இந்த ரகங்களுக்கு கைத்தறி உற்பத்தி என்று முடிவெடுத்தால் அதற்கு நிரந்தரமான சந்தையைக் கண்டுவிட முடியுமென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆக, நாம் உற்பத்தி செய்கிற துணிகளுக்கு நிரந்தர சந்தை கிடைக்கக்கூடிய வாய்ப்பைக் கண்டாக வேண்டும். அதற்கு இந்த உத்தரவை மாற்றவேண்டும்.

இன்னொரு யோசனை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறோம். மத்திய அமைச்சரவர்கள் இங்கே வந்த நேரத்தில் அவரோடு பேசியும் மாநாட்டில் எடுத்துச் சொல்லியும் இருக்கிறோம். உற்பத்தி செய்கிற கைத்தறித் துணிகளை வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்வதற்கு அதிக அளவிலே உதவித் தொகை கொடுப்பதற்கு, சலுகை காட்டுவதற்கு மத்திய அரசாங்கம்—இப்போதே செய்கிறார்கள்—இன்னும் அதிகமாக அளிப்பதற்கு உதவி செய்யவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இதையும் செய்வதற்கு முன்வந்தால் கைத்தறித் துணிகள் போட்டி போடுவதற்கு எந்த அளவிற்குக் கஷ்டம் இருக்கிறதோ அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு வேண்டிய சலுகைகளைப் பணத்தின் மூலமாக மத்திய அரசாங்கம் தருமானால் ஏராளமான சந்தையை உலக நாடுகளில் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். இதையும் தரவேண்டுமென்று மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு மாநில அரசு அதிகமாக பல கோடிக் கணக்கான ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், இரண்டு மடங்கு ஒதுக்கியிருந்தாலும், இந்தச் சலுகையைப் பொறுத்த அளவிற்கு பொதுவான ஏற்றுமதி என்ற கொள்கை இல்லாமல் அந்த அடிப்படையில் இல்லாமல் கைத்தறித் துணிக்குத் தனி திட்டமிட்டு அதிகமான சலுகை, உதவித் தொகை தந்தால் ஏற்றுமதியில் உள்ள போட்டியைச் சமாளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





கைத்தறித் துணிகளைப் பொறுத்த அளவிற்கு இந்த விஷயங்களெல்லாம் நிறைவேற்றப்படுமானால் தமிழ்நாடு கைத்தறித் துறைப் பொறுத்த வரையில் நிரந்தரமான பரிகாரத்தைப் பெற்றுவிட முடியுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாநில அரசின் சார்பில் நம் சக்திக்கேற்றவாறு கூட்டுறவுக் கடன் தொகை அளித்து விற்பனையை உயர்த்துவதற்குப் பாடுபடுகிறது. தீபாவளிக்கு நிச்சயமாக ஏராளமான உற்பத்தியைப் பெறுகிற அளவிலேயும், விற்பனையில் வெற்றி பெற்றிடவும் முடியுமென்று நம்பிக்கை இருக்கிறது. எல்லோரும் இந்தத் துணியை வாங்கவேண்டுமென்பது கொள்கை. ஆனால் இதை ஆதரிக்கிற நாம் எத்தனை பேர் வாங்குகிறோம், உடுத்துகிறோம் என்பது சந்தேகத்திற்குரிய பிரச்சினை; இப்போது புதிய ரகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். அருமையான சட்டைத் துணி இப்போது கைத்தறித் தறியில் கிடைக்கிறது. கைத்தறித் துணியை ஆலைத் துறைத் துணிபோல மெர்சிரைஸ்டு செய்து அந்த திட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறோம். 25 லட்ச ரூபாய் அளவிலே ஈரோட்டிலே திட்டம் போடப்பட்டு கைத்தறித் துறையிலே உற்பத்தி செய்கிற அருமையான சட்டைத் துணிகளைச் சந்தைக்குக் கொண்டுவந்திருக்கிறோம்.

கனம் அங்கத்தினர்கள் இதையெல்லாம் பார்த்து இதற்காகப் பிரச்சாரம் செய்யவேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னால் நாம் செய்தோம். அவ்வளவு ஆர்வத்தோடு இப்போது மக்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் பிரச்சாரம் செய்வதாக எனக்குத் தெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இந்த விற்பனையை அதிகமான அளவில் செய்வதற்குப் பிரச்சாரத்தில் ஈடுபடவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல உற்பத்தி செய்கிற சட்டைகளை மாற்றாரோடு போட்டி போடும் வண்ணம் புதிய ரகமாக உற்பத்தி செய்கிறோம். கைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகிற துணியை ஆலையில் உற்பத்தி செய்யப்படுகிற துணியைப்போல சந்தையில் விட்டிருக்கிறோம். அதற்கு அதிகமான கோரிக்கை இருக்கிறது. நம் மாநிலத்தில் இப்படி சட்டை உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கியிருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படி கைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளுக்கு ஏராளமான கிராக்கி இருப்பதைப் பார்க்கிறோம். இவைகளைத் தமிழ்நாட்டில் விற்கிறோமாவென்ற அச்சம் ஏற்படுகிறது. காதியோடு இந்த கைத்தறித் துறையும் இணைந்து ஏராளமாக உற்பத்தி செய்தாலும் வாங்குகிற மனப்பக்குவம் தமிழ்நாட்டில் அதிகமாகப் பெருகு

வதற்கு இந்த வாதம் பூரணமாகப் பயன்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தக் கொள்கையைப் பொறுத்த அளவிற்கு அரசுக்கும், எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகக் கருதவில்லை. எல்லோருமே சேர்ந்து இந்தத் துறையை வலுப்படுத்த வேண்டும், இதற்கு அதிகமான சலுகைகளைத் தரவேண்டுமென்று இந்த முறையில் இந்த தீர்மானத்தினுடைய நோக்கத்தை இந்த அரசாங்கம் பூரணமாக ஏற்றுக்கொள்கிறது. நான் சொன்ன யோசனைகளை நிறைவேற்றினால் இன்னும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு விடும். இந்த விவாதத்தில் சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களுக்கேற்ப அரசு செயல்படும் என்ற உறுதியைக் கூறி இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த அளவிற்கு இதை அவர் திரும்பப் பெறுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதை திரும்பப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்ற உதவி செய்யுமாறு கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I was expecting the Hon. Minister to give some information about the 3,000 persons who are on hunger-strike—telegrams have been received here by Leaders of Opposition Parties and Government also would have received. I want to know whether Government will be able to tell us what concrete steps have been taken about the alarming situation which is snow-balling in Salem district just now.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்பே விளக்கிச் சொன்னேன். இது சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல. எல்லா மாவட்டங்களிலும் உள்ள பிரச்சினை. உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் முன்னாலேயே எடுத்துக் காட்டியபடி தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு வாங்க முடிவு செய்திருக்கிறோம். நிச்சயமாக இந்தத் திட்டம் நிறைவேறுமானால் இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராஜன்: தலைவரவர்களே, கூட்டுறவிற்கு அப்பால் இருக்கிற நெசவாளர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய கொள்கை நிரந்தரமாகக் கூட்டுறவுத் துறையிலே எல்லா நெசவாளர்களும் வரவேண்டுமென்று முயற்சித்தால்தான் வெற்றி பெற முடியும். ஃபினான்ஸ் பொறுத்த அளவிற்கு ஹேண்ட்லூம் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக உதவி செய்து வருகிறோம்.



திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, நான் கொண்டு வந்த தீர்மானத்தின் பேரில் 15 பேர் வரையிலும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களும் சர்க்காருடைய நிலைப்பற்றி விவரமாகவும், விரிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால், நான் ஆரம்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறபோது ஒரு 4, 5 முக்கியமான விஷயங்களை வற்புறுத்தினேன். அவைகள் எதற்குமே பதில் கிடைக்கவில்லையென்பதை நான் ரொம்ப வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன்.

முதலாவதாக, இந்த இலாகா தமிழ்நாட்டிற்கு முக்கியமான ஒரு இலாகாவாக இருக்கிறபோது, எப்படி பின் தங்கிய வகுப்பினருக்கு தனியாக ஒரு அமைச்சரைப் போட்டிருக்கிறோமோ அதே மாதிரி கைத்தறித் தொழில், தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகத் தனி அமைச்சர் இருக்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய அமைச்சரவர்கள் திறமையுள்ளவர்தான். ஆனால் கைத்தறிக்குமட்டும் அவர் பொறுப்பல்ல. தொழில் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும், சட்டத்திற்கும், சிறைக்கும், இப்பேர்ப்பட்ட பல இலாகாக்களை வைத்துக் கொண்டிருப்பவர். இதைப்பற்றிக் கவனிக்க முடியவில்லை, இந்த ஒரு விஷயத்தைச் சொன்னேன். இது சம்பந்தமாகப் பதில் எதுவும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

இரண்டாவதாக, மத்திய சர்க்கார் அகில இந்திய கைத்தறி போர்டில், பண்டித ஜவகர்லால் நேரு இருந்த காலத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அதிகப் பங்கு வகித்தார்கள். இப்போது அந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று அகில இந்திய ஸ்தாபனம் கூறுகிறது. அதேமாதிரி நமது தமிழக அரசாங்கம்கூட இன்றைக்குத் தமிழ்நாட்டிலே அமைத்திருக்கிற போர்டில் எந்த அளவுக்குப் பங்கு எடுத்துக்கொள்கிறது என்று கேட்டிருந்தேன். அதற்கும் அமைச்சரவர்களின் விளக்கத்தில் பதில் இல்லை.

அடுத்து, கைத்தறி என்று சொல்லும்போது வெறும் சாதாரணப் பருத்தி நூல் மட்டுமல்ல. ரயான், பட்டு நூல்கள் எல்லாம் இருக்கின்றன என்று சொன்னேன். அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய இடங்களில் உள்ளவைகளைப்பற்றி, பட்டியல் கொடுத்து, இந்த இந்த இடத்தில் எல்லாம் இப்போது பட்டுத்துணி உற்பத்திச் செய்கிறார்கள். இவைகளுக்கு எல்லாம் இன்றைக்கு அதிகமான மார்க்கெட் இருக்கிறது. அதற்கு அரசாங்கம்

என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புவதாகவும் கேட்டிருந்தேன். அதற்கும் பதில் சொல்லவில்லை.

அதேமாதிரி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 10½ கோடி ரூபாய்க்கு அதிகமாக நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்று பட்ஜெட் விவாதத்தின்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு 2½ கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட 10½ கோடி ரூபாயும் செலவிட முடியாது; அதற்குரிய திட்டம் நம்மிடம் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தக்கமுறையில் அந்த பணம் முழுவதும் பயன்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று என்னுடைய தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தேன். திட்டமிட்ட முறையில் தொழிலைப் பாதுகாக்கவும், தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு ஒரு தனி மசோதாவைக் கூட கொண்டு வருவதற்கு வாய்ப்பு உண்டு. அப்படிக் கொண்டுவரும்போது மத்திய சர்க்காரின் சம்மதத்தோடு கைத்தறித்தொழில் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டால் எந்த அளவுக்கு இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்ட முடியும். கைத்தறித் தொழிலில் அரசாங்கத்திற்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை நாமும் அறியமுடியும்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஓட்டல் தொழிலாளர்கள், சாதாரணமாக இருக்கக்கூடிய கடை சிப்பந்திகள் இவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் முதன் முதலாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது தமிழ்நாடுதான். அந்தச் சட்டத்தை முன்னோடியாகக்கொண்டு, உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் அம்மாதிரியான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதேமாதிரி கைத்தறித் தொழிலாளர்கள் பிரச்சினையிலும் ஒரு சட்டத்தைக் கொண்டுவரக்கூடிய சக்தி தமிழ்நாட்டுக்குத்தான் உண்டு. காரணம், இந்தியாவில் இருக்கிற கைத்தறித் தொழிலாளர்களில் கால் பகுதி தமிழகத்தில்மட்டும் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் கொடுத்த புள்ளிவிபரங்களைப் பார்த்தாலும் 5½ லட்சம் தறிகள் தமிழகத்தில் உண்டு. 20 லட்சம் பேர் அந்தத் தறிகளை நம்பி வாழ்கிறார்கள். அப்படி இருக்கிற இந்தத் தொழில் சம்பந்தமாக இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமானால், அதற்கு ஒரு தனி மசோதாவைக் கொண்டுவர வேண்டும். அதைப்பற்றியும் அமைச்சரவர்களின் பதிலை எதிர்ப்பார்த்தேன். ஒரு பதிலும் கிடைக்கவில்லை.



பொதுவாக கைத்தறித் தொழிலைப்பற்றி எல்லாப் பகுதியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கவலையைத் தெரிவித்தார்கள்; அக்கறையைக் காட்டினார்கள். ஆனால் அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை யாரும் கூறவில்லை. நான் கொடுத்திருக்கிற ஆலோசனைமீது எந்தவிதமான அபிப்பிராயமும் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் அமைச்சரவர்கள் கூறியவகைகளில் இரண்டொரு விஷயங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். குறிப்பாக லோன் சம்பந்தமாக இன்றைக்கு ரிசர்வ் பாங்கு போட்டிருக்கிற நிபந்தனைகள் இருக்கின்றனவே, அந்த நிபந்தனைகள் சிறிதளவு மாற்றப்பட்டாலும் இன்றைக்கு கைத்தறித் தொழிலாளர்கள் ஓரளவாவது பயனடைவார்கள் என்பதை, மத்திய சர்க்காரை எதிர்க்கும் வகையில் பரமக்குடி கைத்தறி நெசவாளர்கள் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியதிலிருந்து நாம் அறிவோம். அவர்கள் கோரிக்கையை வலியுறுத்த ஒரு தூதுகோஷ்டியை அனுப்பலாம். அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யலாம்.

அடுத்தபடியாக, "எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கார்ப்பரேஷன்" என்று இங்கே ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அதை எந்த அளவுக்கு நாம் பயன்படுத்திக்கொள்கிறோம் என்று நான் அறிய விரும்பினேன். அதற்கும் எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவில்லை.

இன்னொரு முக்கியமான விஷயம். கைத்தறி பூராவும் கூட்டுறவுத் துறையில் வரவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற பல சங்கங்கள் மூடப்படுகின்றன. மூடிய சொசைட்டிகளை திறந்தால் போதுமென்ற கோரிக்கைகள் தான் இன்றைக்கு கைத்தறித் தொழிலாளர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. அதை வலியுறுத்தித்தான் செங்கப்பட்டி, பரமக்குடி, சைதாப்பேட்டை, சேலம் ஆகிய இடங்களில் கைத்தறித் தொழிலாளர்கள் இயக்கம் நடத்துகிறார்கள். அவர்கள் இயக்கம் பூராவுமே இதுவரையிலும் "உண்ணாவிரதம்" என்பதற்கு மேல் போகவில்லை.

கைத்தறித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பாதுகாப்புக்கு ஒரு சட்டம் வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தேன். ஆனால் என்ன ஏற்பட்டது ? குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படுவதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கமிட்டி அந்த அறிக்கையை அளித்தவுடன் அதுபற்றி, நடவடிக்கை எடுக்கப்

படும் என்று பட்ஜெட் விவாதத்தில் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் தவறுதலாக அப்படிச் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கமிட்டி இப்போதுதான் அமைக்கப்படவிருக்கிறது. அந்தக் கமிட்டியில் யார் யாரை உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்று இப்போதுதான் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டப் பிறகு, அது சிபாரிசு செய்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் கோவாப்பரேட்டிவ் பேசிசில், பப்ளிக் செக்டாரிலே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, முதலில் அரசாங்கமே அதற்கு பூரா பங்குத் தொகையும் கொடுத்து நடத்துவது என்று முடிவு செய்திருப்பதாக அறிகிறேன். அது நல்ல ஆலோசனை; வரவேற்கத்தக்கது. இந்த இடத்திலே நான் ஒன்றைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். இப்போது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிபரத்தைப் பார்த்தால், ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறுவிதமான புள்ளிவிபரங்கள் கொடுக்கப்படுகின்றன. இப்போது 48½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணி உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள், ஒரு எக்சிபிஷனுக்கு நான் போயிருந்தபோது ஆண்டு ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 40 கோடி கெஜம் துணி உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். இங்கே 10 கோடி கெஜம் துணி உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். எது சரியானது என்று தெரியவில்லை. முக்கிய விஷயம் என்னவென்றால் 50 கோடி ரூபாய்க்கு உள்ளிட்டுத்தான் நம்முடைய உற்பத்தி இருக்கிறது. அப்படியானால், இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்து அரசாங்கத்திற்கு இருக்குமானால் என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த 50 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சரக்குக்கு 50 கோடி ரூபாய் தேவை இல்லை. மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய, டிரெயினிங், வீடு கட்டுவதற்கு, பங்குத்தொகை—என்று கொடுக்கக்கூடிய பணத்தைப் போன்று கைத்தறித் தொழிலுக்கும், எப்படி கல்விக்கு 91 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோமோ அதைப்போன்று கைத்தறித் தொழில் பாதுகாப்புக்கு என்று 20 கோடி ரூபாய் ஒதுக்கினால் கைத்தறித் துணிகள் தேக்கத்தை நாம் சமாளிக்க முடியும். அதைச் சிந்தித்து, தீர்வு காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் ஆரம்பத்திலே இந்த விஷயத்தை வற்புறுத்திச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் இதைக் கொஞ்சம் தொட்டுப் பேசினார்கள். எல்லாவற்றையும் கொள்முதல் செய்ய





வேண்டும் என்று சொல்லும்போது பொறுப்போடு, தமிழகத்திலே இருக்கின்ற நிலைமையை வைத்துதான் நாம் செய்ய முடியும். அந்த வகையில் அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த விஷயத்தை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். தமிழகத்திலேதான் அன்றைக்கு இராஜகோபாலாச்சாரி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக் கோட்டையில் கைத்தறி நெசவாளர்கள் கரை போட்ட வேட்டியும், கலர் புடவைகளும் கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று போராட்டம் நடத்தி, கைது செய்யப்பட்டார்கள். நான் நாடாளுமன்றத்தில் இருந்தபோது அது சம்பந்தமாக சட்டம் இயற்றப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்; சட்டத்தை எடுத்துக் காட்டினார்கள். அந்தச் சட்டத்தை மீறுகிற வகையில்தான் பல மில்காரர்கள் இருக்கிறார்கள். எப்படி என்றால் வேட்டியை மில்லிலே நெய்துவிட்டு, கடைசியில் கோடுபோட்டுவிடுகிறார்கள். வெள்ளைப் புடவைகளை உற்பத்தி செய்துவிட்டு, பின்னால் அதற்குச் சாயம் கொடுத்துவிடுகிறார்கள் evasion has become a part of us. அதற்கு நாம் என்ன செய்வது? இதைக் கொஞ்சம் கவனித்து, சில காரியங்களாவது உடனடியாகச் செய்யவேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன். நான் அரசியலுக்குள் புக விரும்பவில்லை. ஆயினும் சொஸைடிகள் என்கிறபோது அதில் அரசியல் புகுந்துவிடுவதும், இன்னார் தலைமையில் இயங்கக்கூடிய சொஸைடி என்றால் லோன் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடைக்காது என்கிற நிலைமை வளர்வதும் வேதனைக்குரிய விஷயம். அவற்றைப் பற்றி எல்லாம் விவரங்கள் இருக்கின்றன என்றாலும் நான் என்னுடைய தீர்மானத்தின் மீது அவற்றைப் புகுத்த விரும்பவில்லை, எவ்வித பாகுபாடும் இன்றி சர்க்கார் கறாராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு இந்தத் தீர்மானத்தின்மீது பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது போற்றத்தக்கது. பதினைந்துபேர் பேசியிருக்கிறார்கள். நான் போட்டுக்கொடுத்த அஸ்திவாரத்தின் சில பகுதியைதான் அமைச்சர் அவர்கள் கவனித்தார்கள். இந்த கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்டவரை ஒட்டுமொத்தமாக பார்க்கிற ஒரு நிலை இந்த அரசினிடத்தில் இல்லை. விவாதத்தின் முழு அம்சத்தையும் பார்த்தால் சொன்னவற்றுக்குள்ளேயே நான் திரும்பிப் புகும் நிலை வரும். அது இல்லாமல்

"This House is of opinion that suitable Legislation be introduced and passed at an early date for protection of the Handloom Sector and for enforcing the rights of Handloom Weavers",

என்பதாக நான் கொடுத்துள்ள தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

MR. SPEAKER: Next is 'Nationalisation of Industrial Houses'.

THIRU K. T. K. THANGAMANI: I am not moving that Resolution, Sir.

## (ஆ) அரசுப் பணிகளுக்கான வயது வரம்பு.

* திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பணிகளில் அமர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பை 25 என்பதிலிருந்து 30 ஆக உயர்த்த வேண்டுமென இம்மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்கிற என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் நாம் இதை சமுக நீதியின் அடிப்படையில் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் வேலையற்ற பட்டதாரிகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கிறார்கள். படித்து, பட்டம் பெற்று, வேலை தேடி அலை அலையாக அலைந்து வேலை கிடைக்காத நிலையில் மனவேதனையோடு இருக்கிறவர்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். அவர்கள் வேலை வேண்டுவோர் கழகம் என்கிற பெயரில் அங்கங்கே சங்கங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் கூட ஆளும் கட்சிக்காரர்கள் நுழைவின் காரணமாக அவைகள் உடைக்கப்பட்டு வேலை வேண்டுவோர் முன்னேற்றக் கழகம் என்றும் சில மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவில்தான் முன்னேற்றம் இருக்கிறதே தவிர உண்மையில் நாட்டில் படித்து, வேலைசெய்ய விருப்பம் உடையவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் அரசு இல்லை.



வேலையற்றோர்கள் எல்லாம் பல மகாநாடுகள் போட்டு "பட்டம் பெற்றது வாழவா, பட்டினி கிடந்து மாளவா" என்பதாக கோஷங்கள் போட்டுப்போவதை அறியாதவர்கள் இருக்க முடியாது. ஒரு படித்த இளைஞன் வேலை பார்ப்பதற்கு விரும்புகிறானா இல்லையா என்றுதான் பார்க்க வேண்டும். வேலைபார்ப்பதற்கு விருப்பம் உள்ளவர்களுக்கு எல்லாம் அரசாங்கமே வேலைகொடுக்க வேண்டும். அப்படி வேலை கொடுத்தாகவேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. படித்துப் பட்டம் பெற்றவுடன் அவன் விண்ணப்பம் போடுகிறான், வேலைக்காக அலை அலை என்று அலைகிறான். வேலை கிடைக்கவில்லை. உனக்கு 25 வயது ஆகிவிட்டது. இனி வேலைக்கு மனுப்போடக் கூடாது என்று தடுப்பது நியாயமாகாது. அவனுக்கு வேலை கொடுக்காதது நம்முடைய—அரசாங்கத்தினுடைய குற்றமே தவிர அவன் குற்றம் அல்ல. ஏதோ ஒரு காலத்தில் வயது வரம்பை 25 என்று வைத்தார்கள் என்பதற்காக நாமும் 25 தான் என்று வைத்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. நமது அண்டை மாநிலமாகிய பாண்டிச்சேரியில்கூட 30 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

நமது அரசியல் சட்டத்தில் எத்தனையோ திருத்தங்கள் வேண்டும் என்கிறோம். வேலைபார்க்கும் உரிமை அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும் என்கிற அரசியல் அமைப்பு இருப்பதுகூட நல்லது. அந்த உரிமை வேண்டும் என்பதாக ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

நான் அதெல்லாம் கூட வற்புறுத்தவில்லை. படித்தவுடன் வேலை கிடைக்கிற சூழ்நிலை நாட்டில் இல்லை என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். படித்து ஐந்தாறு ஆண்டுகள் அலைய வேண்டியிருக்கிறது உத்தியோகத்திற்கு. அப்படி இருக்கிறபோது 25 வயது ஆகிவிட்டது, உனக்கு வேலை கிடையாது என்று சொல்லி படித்த ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் மனம் உடைந்து விரக்தி அடைந்துவிடக்கூடிய சூழ்நிலைதான் இன்று இருக்கிறது. அப்படியின்றி 30 வயது வரை வேலைக்கு முயற்சி செய்யலாம் என்று சொல்வதன் மூலமாக நாம் இன்னும் 5 வருடங்களைத்தான் கொடுக்கிறோம், வேலைக்கு மனுப்போட. ஐந்து வருடத்திற்குள் வேலை கொடுத்துவிட வேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை.

நமக்குத் தெரியும், மின்சார வாரியத்தில் லட்சக்கணக்கான விண்ணப்ப பாரங்கள் விற்றிருக்கிறார்கள். லட்சக்கணக்கான பேர்கள் விண்ணப்பம் போட்டு, முடிவை இன்னமும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேலை கொடுத்துவிடவேண்டும் என்று கூட நான்

[திரு. க. சுப்பு] [1972 ஆகஸ்ட் 17

சொல்லவில்லை. முயற்சி செய்பவர்களுக்கு 25 வயது என்கிற தடையை விதித்து தடுத்துவிடாது, இன்னும் ஒரு 5 வருடம் கொடுக்கிறோம், 30 வயது வரை வேலைக்குச் சேரலாம், முயற்சி செய்யுங்கள் என்கிற அளவிலாவது ஊக்கம் கொடுக்க 30 என்பதாக வயது வரம்பை உயர்த்தலாம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இந்தக் கருத்தை ஆதரிக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் சத்தியேந்திரன் இதே கருத்தை முன்பு பேசி மாலை முரசில், தினத் தந்தியில் எல்லாம் போட்டோவுடன் வந்திருப்பதை நான் அறிவேன். ஆகவே இந்தக் கருத்தில் ஆளும் கட்சிக்கு பெரிய ஆட்சேபனை எதுவும் இருக்க முடியாது.

இன்னும் ஆசிரியர்களுக்குக் கூட 30 வருடத்திற்குள் வேலைக்குப் போகவேண்டும் என்று இருக்கிறது. பயிற்சி பெற்றவுடன் ஒரு ஆசிரியர், ஓராண்டு, இரண்டாண்டு டெம்பரரியாக வேலை செய்கிறார். வேலை நீக்கம் ஆகிவிடுகிறது. அதற்குள் 30 வயது ஆகிவிட்டால் திரும்ப வேலைக்கு விண்ணப்பம் செய்கிறபோது உனக்கு 30 வயது ஆகிவிட்டது, வேலை கிடையாது என்றால் நியாயம் இல்லை. இது போல ஒரு இடத்தில் கன்னியாகுமரியில் சுண்டிப்பட்டிவிளை என்கிற இடத்தில் நடந்திருக்கிறது. அந்த ஆசிரியை பள்ளிக்கல்வி இயக்குன ருக்கு மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். உனக்கு 30 வயதிற்குள் நிரந்தரமான வேலை கிடைக்கவில்லை, 30 வயது ஆகிவிட்டதனால் உனக்கு இனி வேலை இல்லை என்று பதில் வந்திருக்கிறது.

இப்படி இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் கவனித்து, அரசாங்கமே சமூக நீதி என்கிற அடிப்படையில் வேலைக்குச் சேரும் வயது வரம்பை 25-இல் இருந்து 30 ஆக உயர்த்தி கொடுக்கவேண்டும். 30-க்குள் வேலை கொடுத்தே தீரவேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. வேலைக்கு போக விரும்புகிறவர்கள் முயற்சி செய்வதற்கு—இன்னும் ஒரு 5 ஆண்டுக்காலம் கூட்டிக் கொடுப்பது மிக மிக அவசியம்—காரணம் படித்தவுடன் வேலை கிடைக்கிற காலம் இது இல்லை. எல்லாத் துறையிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. ஆகவே 30 ஆண்டாக உயர்த்தித்தரவேண்டும் என்கிற என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தி, இதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, while supporting the resolution that has been brought forward by the Hon. Member, Thiru Suppu, I have to add a few more reasons . . .



1972 ஆகஸ்ட் 17]

MR. SPEAKER: The hon. Member can take eight to ten minutes.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I may not need ten minutes because my ideas are very, very limited.

The conditions when the age-limit was fixed are now different
from the present-day conditions. At that time there was so much
of employment. Secondly, there was a straight forward education,
by which a person can pass certain examinations and there were
facilities for examinations through private channels. To-day, an
ordinary person can appear for the Matriculation Examination
privately even if he is aged 20 years. Similarly, there are evening
classes. Also there are postal tuitions by which an ordinary person
can pass examinations.

Sir, the persons who pass these examinations ordinarily register
their names for employment in the Employment Exchanges and
the less said about the Employment Exchanges, the better it is.
sometimes it takes four or five years to get employment and they
have to renew their applications periodically. Most of them do
not get employment. Even if a call comes for a job, only one
is selected out of 15 persons sent for interview and the remaining
14 persons do not get any job. Under these circumstances, the
brilliant boys who have passed the examinations become frustrated,
and frustration leads to revolution. So, this Government should
come forward and say. 'All right, it does not matter whether the
age-limit is 25 or 30 years. Also there is an additional advantage
in that a person who is within 30 years has better maturity of
thought, and better experience and he is more useful for the job
than person who is 22 years old. At the same time I do not want
that the age-limit should be increased beyond 30 years. So the
reasons for increasing the age-limit from 25 to 30 years are modern
method of education, facilities that persons get to educate them-
selves independent of schools and colleges and the employment
problem. With these words, I commend the Resolution of Thiru
Suppu for acceptance by this Government.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கொண்டு
வந்துள்ள இந்த தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் ஒரு சில
கருத்துக்களை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

நமது நாட்டிலே, சமதர்மக் கொள்கையை நாம் படிப்படியாக அனுசரித்து வருகிறோம். ஆங்காங்குள்ள தனியார் துறைகளை ஆக்கிரமித்து, தனியார் துறைகளை எல்லாம் நாம் எடுத்துக்கொள்கிறோம். இந்த நிலையிலே அரசாங்கத்திற்கு ஒரு முக்கியமான பொறுப்பு ஏற்படுகிறது. இப்பொழுது நாட்டிலுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கின்ற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்றுதான் அர்த்தம். காரணம், அவர்கள் தனியார் துறைகளை தங்களுடையதாக்கிக் கொள்கிறார்கள். இந்த அடிப்படையிலே இன்று நம்முடைய அரசாங்கங்கள் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கின்றனவா என்று சொன்னால் இல்லையென்ற பதில்தான் கிடைக்கும். காரணம், இன்று லட்சோபலட்சம் இளைஞர்கள் கல்வியை முடித்துவிட்டு போதுமான வேலை வாய்ப்பில்லாத காரணத்தால் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வழியில்லாமல் மிகவும் மனம் நொந்து சோர்ந்திருக்கிறார்கள். வேலை எங்கே கிடைக்கும் கிடைக்கும் என்று ஒவ்வொரு இடத்தையும் முற்றுகையிடக்கூடிய நிலையைத்தான் இன்று நாம் பார்க்கிறோம்.

படித்த இளைஞர்கள் 25 வயதுக்குள் உத்தியோகம பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், வாழ்க்கை முழுவதும் உத்தியோகமற்றவர்கள் இருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இளைஞர்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. அது பலருக்கு பலத்த ஏமாற்றத்தையும் அவர்கள் வாழ்க்கையிலே ஒரு சோர்வையும் உண்டாக்குகிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாயத்திலே பின்தங்கிய மக்களுக்கும் ஒரு விசேஷமான நிலை இருந்து வருகிறது. பொதுவாக, ஏழ்மை நிலையிலே இருக்கிற குழந்தைகளுக்குபோதுமான உணவு, சத்துணவு கிடைக்காத காரணத்தாலே, அவர்களுடைய மூளை பலம் குறைந்திருக்கிறது. அவர்கள் மற்றவர்களோடு போட்டியிட்டு கல்வித்துறையிலே முன்னேற்றம் அடையாமல் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் படித்து வெளி வருகிறார்கள் என்று சொன்னால், படித்து வாழ்க்கையில் வசதி அடைந்தவர்களோடு போட்டி போடமுடியவில்லை. ஆக, பின் தங்கியவர்கள் படித்தும் வாழ்க்கையில் வசதியோடு இல்லாதவர்கள் வேலை பெற அதிகக் காலம் ஆகிறது. 25 வயது என்று நிர்ணயம் செய்திருப்பதாலே, ஏற்கனவே சமூகத்திலே முன்னுக்கு வந்தவர்கள் வேலை பெறுகிற வாய்ப்பு ஏற்படுகிறதே தவிர, சமுதாயத்திலே பின்தங்கியவர்கள், படித்து பட்டம் பெற்றவர்கள் இந்த 25 வயதிற்குள் உத்தியோகம்



பெறுகிற சூழ்நிலை இல்லாத காரணத்தாலே, ஏற்கனவே ஏழ்மையாலே பாதிக்கப்பட்டவர்கள் இவர்களைப் பற்றி கண்டிப்பாக அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 25 வயது நிர்ணயித்திருப்பதாலே, அரசாங்கத்திலே ஏதோ வேலைகள் குவித்து வைத்திருப்பதைப் போலவும், இவர்களெல்லாம் படித்துவிட்டு வேலை செய்யாமலிருக்கிறார்கள் என்பதைப் போலவும் உங்களுக்கு உத்தியோகம் இல்லை, நீங்கள் தவறி விட்டதற்கு நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்வதைப்போன்று இருக்கிறது. அப்படி இல்லை. 25 வயதிற்குள் வேலை தேடினாலும்கூட, அரசாங்கத்தில் போதுமான வேலை இல்லை. அவர்களுடைய வேலை கிடைக்கவில்லையென்று சொன்னால் அதற்கு அவர்களுடைய தகுதியின்மையோ, சோம்பேறித்தனமோ காரணம் இல்லை. அரசாங்கம் போதுமான அளவுக்கு உத்தியோகம் உண்டாக்கி அவர்கள் எல்லோரையும் அப்சார்ப் பண்ணவேண்டும். இப்படி செய்வதன்மூலம், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வாழ்நாள் முழுவதும் வேலை இல்லாமல் இருக்கும் நிலையைப் போக்க முடியும். இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள அத்தனை அரசாங்கங்களுக்கும் இது பொருந்தும்.

எம்பிளாயிமென்ட் எக்ஸேஞ்சிலே ஒரு விண்ணப்பதாரர் தன்னுடைய பெயரை பதிவு செய்து கொண்டால் குறைந்த பட்சம் 7, 8 ஆண்டுகளுக்குக் கூட அவர்களுக்கு வேலை கிடைக்காமல் அவதிப்படுகிற சூழ்நிலையை பார்க்கிறோம். இப்பொழுது பல தனியார் துறைகள் தேசியமயமாக்கப்பட்டன. ஆகவே அவர்கள் எல்லாம் அரசாங்கத்தில்தான் உத்தியோகம் பெறவேண்டும். அதற்காக எம்பிளாயிமென்ட் எக்ஸேஞ்சிலே ஒருவன் பதிவு செய்கிறான். 7, 8 ஆண்டுகள் ஒவ்வொரு அலுவலகமாக படிகள் ஏறியதுதான் மிச்சம். இப்படி வாழ்நாள் முழுவதும் வேலையில்லாமல் இருந்து அவர்கள் தற்கொலை செய்து கொள்வதா? இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆக, 25 ஆண்டுகள் என்று இருப்பதை 30 ஆக்கவேண்டுமென்று திட்டவட்டமாக, நண்பர் சுப்பு அவர்கள் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னைக் கேட்டால், இப்படி நிர்ணயமே கூடாது. அரசாங்கத்தில் வேலை காலி இருந்தால் தகுதியுள்ள வேலையற்றவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். இந்த சித்தாந்தத்தை ஒவ்வொரு அரசாங்கமும் ஒப்புக்கொள்ளவேண்டும். அதுதான் சமதர்மத்தின் அடிப்படை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது இருக்கட்டும், கல்லூரிகளில் என்ன நிலைமை? ஆயிரக்கணக்கான மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, கல்லூரிகளை முற்றுகையிட்டால் அங்கு எத்தனை அதிகமான மார்க்குகள் வாங்கியிருந்தாலும் இடம் இல்லை என்ற நிலைமை. அதிலும் பின் தங்கிய மாணவர்களுக்குப் போதுமான இடம் இல்லை. அவர்களால் போதுமான மார்க்குகளும் வாங்க முடியவில்லை. வாங்கினாலும் மற்றவர்களோடு போட்டி போட முடியவில்லை. ஆகவே, 1, 2 ஆண்டுகள் சென்று அவர்களுக்கு கல்லூரியில் இடம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. படிக்க வருகிறவர்களுக்குக் கூட இடம் கிடைக்கவில்லை. இதனால்கூட அவர்களுடைய வயது வரம்புகள் மீறி விடுகின்றன. இந்த நிலையில் இதிலுள்ள கஷ்டங்களை மனதில் கொண்டு, மனிதாபிமானத்தோடு, மனிதாபிமான நிலை என்ற முறையிலே இந்த 25 வயது என்ற வரம்பு முறையை நீக்க வேண்டுமென்ற தத்துவத்தை நானும் என்னுடைய கட்சியின் சார்பாக பணிவோடு தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பிரச்னை இன்றைக்கு இளைஞர்களுக்கு மிக உதவிகரமான பிரச்சினையாக இருக்கும் என்ற கருத்திலே திருவாளர் சுப்பு அவர்களுடைய "அரசுப் பணிகளில் அமர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பை 25 என்பதிலிருந்து 30 ஆக உயர்த்த வேண்டும்" எனக் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இதைவிட இன்றைக்கு அடிப்படையான பிரச்சினை வேறு என்ன இருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

லட்சக்கணக்கான இளைஞர்கள் எம்ளாயிமென்ட் எக்ஸேஞ்சிலே பதிவு செய்துவிட்டு, வேலை வேலை என்று அலைகிற நிலையை நாம் காணுகிறோம். சிறிது காலம் முன்பு, முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் 4 லட்சம் பேர் பதிவு செய்தும் 40,000 பேருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆக, இந்த பிரச்சினையைப் போக்க எந்த ஏற்பாட்டையும் இன்னமும் இந்த அரசாங்கம் தேடவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. என்னவோ, திட்ட கமிஷன், அது இது என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்ன காரணத்தினால் இருக்கிறது என்பதை யோசித்துப் பார்த்தீர்களா? இல்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. பட்டதாரிகள்கூட வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் இன்ஜினியர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்,





டாக்டர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், தொழிலாளர்களுக்குத் தொழில் கிடையாது, இருக்கக் கூடிய தொழிற்சாலைகளை மிக வேகமாக மூடிக் கொண்டிருக்கிறார்கள், மூடி இருக்கிற தொழிற்சாலைகளை திறப்பதே கிடையாது. இத்தனை வழிகளை அடைத்துவிட்டு, மாதம் ரூ. 100, ரூ. 150 சம்பளம் தருகிறோம், பட்டதாரிகள் வேலை செய்ய வரலாம், இல்லையானால் சேரணியிலே ஆட்களை சேர்த்துக்கொள்ளலாம், அன்றாடம் இவ்வளவு பணம் தருகிறோம் என்று சொல்கிறார்கள். இதெல்லாம் ஏதோ கடப்பாறையை முழுங்கிவிட்டு சுக்கு கஷாயத்தை குடித்தாலும். அந்த மாதிரி பெரிய பிரச்னையை முன்னால் வைத்துக்கொண்டு சிறிய தீர்ப்பை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பி.ஏ. படித்த பட்டதாரிகளெல்லாம் கூட 175 ரூபாய்தான் மாதம் ஒன்றுக்கு வாங்கி கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது, அவர்களுக்கு இன்கிரிமெண்டோ வேறு எதுவுமோ கிடையாது. டீச்சர்ஸ் அப்ரன்டிஸ் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இது மாதிரி என்றைக்குமே கேள்விபட்டது கிடையாது. டீச்சர்ஸ் ஏற்கனவே பயிற்சிபெற்றுத்தான் வருகிறார்கள். பயிற்சிபெற்று வாத்தியார்களாக வெளியே வருகிறவர்களை மேலும் அப்ரண்டிஸ் ஆக அமர்த்துகிற அவல நிலை இந்த அரசாங்கத்திலேதான் நடந்து கொண்டிருக்கிறது. நீ படித்தால்தானே வேலை கேட்பாய், நீ படிக்க வேண்டாம், பயிற்சிப்பள்ளிகளையே மூடிவிடுகிறோம் என்று சொல்லி பள்ளிக்கூடங்களையெல்லாம் மூடக்கூடிய துர்பாக்கியமான நிலைமை இந்த அரசாங்கத்தில்தான் நடக்கிறது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் திறமை கிடையாது. படித்துவிட்டு ஆயிரக்கணக்கானோர் வேலைக்கு வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு வேலை கொடுக்க எங்கே வேலை இருக்கிறது என்று கேட்கிறார்கள். ஏன் கிடையாது? முயற்சிசெய்தால் எத்தனையோ வேலைகள் கொடுக்கலாம். ஒரு வாத்தியாருக்கு 80 பிள்ளைகளுக்கு மேல் போடுகிறார்கள். அப்படியிருந்தால் வாத்தியாருக்கும் பிள்ளைகளுக்கும் என்ன தொடர்பு இருக்கமுடியும்? எப்படிப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்திச் சொல்லிக்கொடுக்க முடியும்? ஆகவே இப்படியில்லாது ஒரு ரேஷியோ வைத்து 35 பிள்ளைகளுக்குமேல் ஒரு வாத்தியாருக்கு இருக்கக்கூடாது என்ற முறையிலே கொண்டுவந்தால் பல்லாயிரக்கணக்கான வாத்தியார்களுக்கு வேலை கொடுக்கலாம். கேட்டால் கல்விக்காக 50 கோடி செலவழிக்கிறோம், 70 கோடி செலவழிக்கிறோம் என்று கணக்கைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர பிரச்சினைகளுக்கு உண்மையிலேயே தீர்வு காணவில்லை..............

திரு. நா. வீராசாமி : சார், ஒரு கிளாரிபிகேஷன். நம்முடைய அரசாங்கம் பயிற்சிபெற்ற ஆசிரியர்களையே அப்ரன்டிஸ் ஆகப் போடுவதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்கள்கூட சட்டம் படித்தவர்கள். சட்டம் படித்துவிட்டுகூட ஏன் அப்ரன்டிஸ் ஆகப் போனார்கள் என்று தெரியவில்லை. அதுபோல் தான் ஆசிரியர்களுக்கும் செய்யப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ரொம்ப நல்லது. ஏற்கனவே டிரெயினிங் முடித்துவிட்டு வந்த வாத்தியார்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்களே, அது எதற்கு? ஏற்கனவே அவர்கள் பயிற்சி முடித்து விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். அது பயிற்சி இல்லையா ? For middle schools B.A., B.Ts. will now become headmasters உங்களுக்குச் சம்பளம் கொடுக்க வக்கு இல்லை, அதனால் பயிற்சி பெற்றவர்களைக்கூட அப்ரன்டிஸ் ஆகப் போடுகிறீர்கள். சட்டப் படிப்பு இரண்டாண்டுக் காலம் படித்துவிட்டு அதற்குப் பிறகு உடனே அப்ரன்டிஸ். இப்பொழுது மூன்றாண்டுக்காலமாக் ஆக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அப்ரன்டிஸ். அதுதான் அங்கே இருக்கிறது. ஆனால் பயிற்சிபெற்ற வாத்தியார்களையே அப்ரன்டிஸ் ஆகப் போடுகிற முறை நகைக்கக்கூடிய முறையிலேதான் இருக்கிறதே தவிர வேறல்ல; இதைத்தவிர இப்பொழுது மிடில் ஸ்கூல்களில் எல்லாம்—முன்பு எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த டிரெய்ன்டு டீச்சர்களாக இருந்தால் அவர்கள் ஹெட்மாஸ்டர்களாக வரலாம் என்று இருந்தது—இப்பொழுது பி.ஏ. பி.டி. படித்தவர்களும் அதற்கு வரலாம் என்று கொண்டுவந்து அடிஷனல் ஹெட்மாஸ்டர் என்ற முறையிலே எல்லாம் போட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்தால் வாத்தியாராக இருக்கிறவர் Once a teacher always a teacher just like once a martgagee always a martgagee. என்று சொல்வதைப் போல கடைசிவரையிலும் வாத்தியாராகத் தான் இருக்கவேண்டிய நிலை வந்துவிடும். இன்றைக்கு 900 டீச்சர்ஸ் என்று போட்டு அடிஷனல் ஹெட் மாஸ்டர்ஸ் என்ற அளவிலே போட்டால் அவர்களுக்குச் சம்பளம் வேண்டுமானால் கொடுத்துவிட முடியுமே தவிர, அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் மரியாதை கடைப்பிடிக்க வேண்டாமா? இதிலே இரண்டு ஹெட்மாஸ்டர்களும் ஒருவருக்கொருவர் சண்டைபோடக்கூடிய நிலைமைதான் இருக்குமே தவிர ஸ்கூல் வேலைகளைப் பார்ப்பதற்கு நேரம் எங்கே அவர்களுக்குக் கிடைக்கப்போகிறது? இந்த வகையிலே வேலைப்



டி ஸ்டேட் 900 டீச்சர்ஸ்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதிலும் புரப்போர்ஷன்படி பார்த்தால் கார்ப்பரேஷனில் 30 பேர்கள் போடுவார்கள். இந்த விஷயத்திலே கார்ப்பரேஷன் காரர்கள் மன்னர்கள். எந்த எந்த வழிகளில் அந்த வேலைக்கு நுழைக்கவேண்டும் என்று எல்லாம் பார்த்து செய்கிறார்கள்......

THIRU N. GANAPATHY : On a point of Order, Sir. The hon. Lady Member is referring to the Madras Corporation and making some insinuation and inundos against the administration of Corporation. I request the Hon. Speaker to expunge those words.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have got representation from Headmasters of Corporation schools. My speech is based on facts. Kindly go through the representation. You do not expunge even indecent remarks. I do not understand the hon. Member asking for expunction of my remarks.

THIRU N. GANAPATHY : The hon. Lady Member was referring to Madras Corporation and she was saying that so many people have been appointed, that the Corporation was making all sorts of appointments, as if by foul means. That is the implication of the lady Member's speech.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Guilty conscience. That is why he says 'foul means'. I never said so.

THIRU N. GANAPATHY : For information of the hon. Member I may say I was never a member of the Corporation. She was a member of the Corporation for some time.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : In those days we never committed such mistakes. Now the Corporation is making all sorts of appointments.

THIRU R. PONNAPPA NADAR : The hon. Member is trying to interrupt the hon. Lady member in the guise of raising point of order.

THIRU N. GANAPATHY : Only with Hon. Speaker's permission I am addressing the Chair), I have raised the point of Order. The hon. Lady member says at that time no such mistake was committed. She was a member before she was

[Thiru N. Ganapathy] [1972 ஆகஸ்ட் 17

removed from office, the party to which she belonged was removed from office in 1959. From 1959 only the D.M.K. continues to rule the corporation.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From 1959 onwards these atrocities are taking place in the Corporation. They appointed thousands of teachers and asked several of them to go out one day. Government had to come to their rescue. That is why I am saying all these things. Even now they are trying to appoint so many B.A., B.Ts as Additional Headmasters. The poor S.S.L.C. trained teachers, with experience, would be hit. That is why I am bringing it to the notice of the Government.

இந்த மாதிரி வேலையில்லா பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக வேதனை தரும் பிரச்னைகளாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற் காகத் தான் நான் சொல்லுகிறேன். வேலைக்கு அமர்வதற்கு 25 வயது என்று வைத்திருப்பதை உயர்த்தவேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். என்னைக் கேட்டால் அது 30 ஆக உயர்த்தப் படுவதுகூடப் போதாது. 25 வயதுக்குள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்டர் செய்துவிட்டால் போதும் பிறகு அவனுக்கு எத்தனை வயதானாலும் அரசாங்கம் வேலை கொடுக்கவேண்டும். கஷ்டப்பட்டுப் படித்து, தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் விற்றுப் படிக்கவைத்த பிறகும்கூட படித்தவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்கு வருடக்கணக்காக நடந்து நடந்து—இதிலே வேறு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கார்டு ரெனியூ பண்ணவேண்டு மென்று வைத்திருக்கிறார்கள், ஏன் அதை வருடத்திற்கு ஒரு முறை என்று வையுங்களேன்; மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று வைத் திருப்பதால் அவர்கள் நடந்து நடந்து பல ஜோடி செருப்புகள் தேய்ந்துவிட்டனவேதவிர வேலை கிடைத்தபாடில்லை பட்டதாரி களுக்கு. உனக்கு 25 வயதாகிவிட்டது, வீட்டுக்குப் போ உனக்கு வேலை கிடையாது என்று சொன்னால் அவர்கள் எப்படி வாழ முடியும்? எனவே, இந்த மாதிரி இல்லாமல் 25 வயதுக்குள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிந்துவிட்டால் 40 வயதானாலும் சரி அவர் வேலைக்குச் சேருவதிலிருந்து தடுக்கப்படக்கூடாது என்ற முறையிலே கொண்டுவரவேண்டும்.

இன்னொன்றையும் பாலிசியாக அரசாங்கம் வைக்கவேண்டும். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிந்துவிட்டால் எப்படியும் அப்படிப் பதிந்தவர்களுக்கு நான்கு ஐந்து வருஷங்களுக்குள் அரசாங்கம் வேலை கொடுக்கவேண்டும். வேலை கொடுப்பது எப்படி



1972 ஆகஸ்ட் 17] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக இவர்கள் வேதனைப் பிரச்னை களைத் தான் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆல் இவர் யென்றால் தமிழ்நாட்டில் வேலையா கொடுக்கமுடியாது? புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி வேலை கொடுக்கலாம். ஏற்கனவே இருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் புல் கெப்பாசிடியில் வேலை செய்வது கிடையாது. அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் அரைகுறையாக உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள், அவற்றை நன்றாக முடுக்கிவிட்டு உற்பத்தியை அதிகப்படுத்தி வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கம், மத்திய அரசாங்கம் என்று தான் சொல்கிறார்களே தவிர இவர்கள் ஒன்றும் செய்யக் காணோம். தொழிற்சாலையை ஆரம்பிக்க ஒரு கோடி ரூபாய்க்கு உள்ளாக மூலதனம் இருந்தால் அதை ஆரம்பிக்க தமிழ்நாடு அரசாங்கமே அனுமதியளிக்கலாம் என்று இருக்கிறது. இவர்கள் எத்தனை தொழிற் சாலைகளை ஆரம்பித்தார்கள்? எத்தனை பேர்களுக்கு வேலைகள் கொடுத்திருக்கிறார்கள்? இருக்கின்ற தொழிற்சாலைகளையும் மூடிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இவர்கள் செய்வது. பி. அன்ட் சி. மில் மூடப்பட்டதால் 10 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். சிம்ஸன் கம்பெனி 10 மாதங்களாக மூடப்பட்டு இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் இந்த அரசாங்கத்திற்குக் கொஞ்சமும் பதைபதைப்புக் கிடையாது. இந்த நிலையில் இங்கே இருக்கிறவர்கள் பிரித்து வடக்கே கொண்டுபோய் விடுகிறார்கள். பிஸ்டன்ஸ் எல்லாம் அங்கே செய்ய ஆரம்பித்துவிட்டார்கள், சிம்ஸன் கம்பெனி செய்துவந்த பேரிங்ஸ் எல்லாம் பிர்லா கம்பெனிகள் செய்துகொண்டிருக்கின்றன. இப்படியெல்லாம் நீங்கள் உங்கள் கொள்கையால் தென்னாட்டைத் தேயவைத்து வடக்கை வாழ வைக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்ட வேண்டியதாயிருக் கிறது. (மணியடிக்கப்பட்டது) அடுத்த தனியார் அலுவல் தினத் தன்று என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்மையார் அவர்களுடைய பேச்சு முடிவுற்றது. இந்தத் தீர்மானத்தின்மீது அடுத்த தனியார் அலுவல் தினத்தன்று தொடரும். சில அறிவிப்புகளுடன் இன்றைய நிகழ்ச்சி முடிவுறும்.

## (7) அறிவிப்புகள்.

### அலுவல் ஆய்வுக்குழுவின் தீர்மானங்கள்

MR. SPEAKER : The following are the decisions arrived at the Business Advisory Committee at its meeting held on 17th August 1972.

18th August 1972—Friday—

Presentation of the First Supplementary **Statement of Expenditure** for 1972–73.

*Official Bills—*

Consideration and passing of—

1. The Tamil Nadu Additional Assessment **and Additional** Water Cess (Amendment) Bill, 1972. (L.A. Bill **No. 27 of 1972).**

2. The Tamil Nadu Additional Assessment and **Additional** Water Cess (Second Amendment) Bill 1972. **(L.A. Bill No. 28 of 1972).**

3. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill 1972. (L.A. Bill **No. 31 of 1972).**

4. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari **District) Bill 1972.** (L.A. Bill No. 26 of 1972).

**19th August 1972—Saturday upto 1 p.m.—**

**Items left over from the Agenda for 18th August 1972, if any—**

1. The Tamil Nadu Land Reforms (Fixation **of Ceiling on** land) Third Amendment Bill 1972. (L.A. Bill **No. 19 of 1972).** (As amended by the Joint Select Committee).

2. The Tamil Nadu Land Reforms **(Fixation of Ceiling on Land)** Fourth Amendment Bill 1972. (L.A. **Bill No. 33 of 1972).**

**20th** August 1972—Sunday—

**Holiday.**

**21st** August 1972—Monday—

1. The Tamil Nadu Debt Relief Bill 1972. **(L.A. Bill No. 21 of 1972).**





2. The Tamil Nadu **Agriculturists** Relief (Amendment) Bill, 1972. (L.A. Bill No. 22 of 1972).

**3. The Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972. (L.A. Bill No. 23 of 1972).**

**22nd** August 1972—Tuesday—

**Discussion and** Voting on **Demands for First Supplementary Statement** of Expenditure for the year 1972–73.

**23rd** August 1972—Wednesday—

Consideration and passing of—

**(1) The Tamil Nadu Excise (Amendment) Bill, 1972.**

(2) The Madurai City Municipal Corporation (Amendment) **Bill, 1972.** (L.A. Bill No. 25 of 1972).

(3) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1972. (L.A. Bill No. 32 of 1972).

(4) The Tamil Nadu Public Buildings (Licensing) **Amendment** Bill, 1972. (L.A. Bill No. 30 of 1972).

(5) The Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill 1971. (L.A. Bill No. 51 of 1971) (as amended by the Joint **Select** Committee).

(6) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972 (L.A. Bill No. 29 of 1972).

(7) The Tamil Nadu Agricultural Labour Fair Wages (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972).

(8) The Tamil Nadu Agricultural Lands (Record of Tenancy Rights) (Amendment), Bill, 1972.

**24th** August 1972—Thursday—

Private Members' Business.

25th August 1972—Friday—

**(1) Items left over, if any, from the Agenda for 23rd August 1972.**

(2) Consideration and passing of Appropriation Bill.

(3) Consideration and passing of other official Bills that may be introduced.

(4) Consideration and passing of the Tamil Nadu Recognised Schools (Regulation) Bill, 1972 (L.A. Bill No. 24 of 1972).

(5) Ratification of the Constitution (Twenty-eighth Amendment) Bill, 1972.

இத்துடன் பேரவையினுடைய இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## 8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**212. Notification issued with G.O. Rt. No. 1325, Revenue,** dated the 9th June 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Kasturiba Women's Association at 10.00 a.m. on 11th June 1972 at Lakshmi Talkies, Pallavaram. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

213. Notification issued with G.O. Rt. No. 1392, Revenue, dated the 16th June 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Engine Valves Employees' Union, Alandur, at 10.00 a.m. on 18th June 1972 at Noorjahan Talkies, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

214. Notification issued with G.O. Ms. No. 901, Public Service A, dated the 30th March 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the post of steno-typist in the Tamil Nadu House, New Delhi, from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

215. Notification issued under G.O. Ps. No. 3337, Revenue, dated the 2nd November 1971, in regard to exemption from liability to sales-tax on the sales of Rubberised coir products by any dealer for a period of two years. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

216. Notification issued with G.O. Ms. No. 958, Rural Development and Local Administration, dated the 9th May 1972, making the Municipal Corporation of Madras (Regulation of payment of conveyance allowance to the Mayor, Deputy Mayor and other members of the Council) Rules, 1972. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

*[1972 ஆகஸ்ட் 17*

217. Notification issued with G.O. No. 1380, Revenue, dated 6th May 1972, in regard to the reduction in the rate of sales tax by any dealer on the sales of stores to the Ordinance Depot at Avadi, Madras. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

218. Notification issued with G.O. Ps. No. 356, Revenue, dated the 7th February 1972, in regard to the exemption from sales tax on the sales of articles manufactured by the inmates of the Indus-
trial Therapy Centre, attached to the Government Mental Hospital,
Madras. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

219. Notification issued with G.O. Ps. No. 257, Revenue, dated the 29th January 1972 in regard to an amendment to the Revenue
Department Notification S.R.O. No. A-2522 of 1960, published at
page 669 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated
the 13th April 1960. [Laid on the table of the House under
section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959.
Tamil Nadu Act I of 1959).]

220. Notification issued with G.O. Ms. No. 175, Excise and
Prohibition, dated the 3rd July, 1972, in regard to levy of excise
duty at the rate of rupees four per proof litre on 35 under proof
arrack for the period from 1st September 1972 to 31st August, 1973.
[Laid on the table of the House under section 34(5) of the Tamil
Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

221. Notification issued with G.O. Ms. No. 1373, Rural Develop-
ment and Local Administration, dated the 5th July 1972, in regard
to appointment of Thiru M. Kannappan, Minister for Religious
Endowments and Thiru K. Arunachalam as members of the Tamil
Nadu Bhoodan Yagna Board. [Laid on the table of the House
under section 28(4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958
(Tamil Nadu Act XV of 1958).]

222. Notification issued with G.O. Ms. No. 1623, Revenue,
dated the 31st May 1972, in regard to constitution of Rent Courts
with jurisdiction over the taluks of Tiruchirappalli and Musiri and
appointment of Special Tahsildars as officers of the Rent Courts.
[Laid on the table of the House under sections 17 (3) and 61(2) of



*1972 ஆகஸ்ட் 17]*

the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act,
1956 (Tamil Nadu Act XXVI of 1956) and the Tamil Nadu Public
Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act,
1961 (Tamil Nadu Act 57 of 1961) respectively.]

223. Notification issued with G.O. Ms. No. 1251, Public (Ser-
vice A), dated the 10th May 1972, in regard to an amendment to
the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for
exclusion of the post of Assistant Director for Propaganda and
Public Relations in the Public (Information and Public Relations)
Department from the Commission's purview. [Laid on the table
of the House under Article 320 (5) of the Constitution of India.]

224. Notification issued with G.O. Ms. No. 3954, Revenue,
dated the 3rd December 1971, in regard to an amendment to Revenue
Department Notification II-1 No. 5939 of 1969, published at
pages 1-2 in Part II—Section 1 of the *Tamil Nadu Government
Gazette* Extraordinary, dated the 19th December 1969, as sub-
sequently amended. [Laid on the table of the House under
section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of
Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

225. Notification issued with G.O. Ms. No. 1480, Home, dated
the 30th May 1972, in regard to the exemption from payment of
Motor Vehicles tax to the three bearer tipper vehicles, belonging
to the Port of Madras. [Laid on the table of the House under
section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act,
1931 (Tamil Nadu Act III of 1931).]

226. Notification issued with G.O. Ms. No. 2564, Rural Deve-
lopment and Local Administration, dated the 23rd November 1971,
in regard to the appointment of Collectors to exercise the powers or
to perform the duties of the Inspector under section 149-A of the
Tamil Nadu Panchayats Act, 1958. [Laid on the table of the
House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act,
1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

227. Notification issued with G.O. Ms. No. 1081, Home, dated
the 12th April 1972 in regard to certain amendments to the Tamil
Nadu Cinemas (Regulations) Rules, 1957. [Laid on the table of
the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regu-
lations) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

228. Notification issued with G.O. Ms. No. 1236, Agriculture, dated the 25th April 1972 in regard to establishment of regulated Market at Tiruthani for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in respect of groundnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

229. Notification issued with Roc. No. 57085/72 E-5, dated the 25th May 1972, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to building regulations, in the entire area of Pappireddipatti Town Panchayat in Dharmapuri district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

230. Notification issued with G.O. Ms. No. 1037, Home, dated the 6th April 1972, in regard to an amendment to rule 56 of the Tamil Nadu Cinemas (Regulations) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulations) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

231. Notification issued with G.O. Ms. No. 1754, Home, dated the 25th June 1971 in regard to certain amendments to the Tamil Nadu Children Rules, 1940 [Laid on the table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

232. Notification issued with G.O. Ms. No. 299, Revenue, dated the 2nd February 1972 in regard to an amendment to the Revenue Department Notification S.R.O. No. 2437 of 1962 published at pages 282–283 of Part II of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th May 1962, as subsequently amended. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

233. Notification issued with G.O. Ms. No. 998, Rural Development and Local Administration, dated the 17th May 1972 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 95 of 1966, published at page 2 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*





(Extraordinary), dated the 6th April, 1966, as subsequently amended. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

234 Notification issued with G.O. Ms. No. 491, Rural Development and Local Administration, dated the 9th March 1972 making the Madras Corporation (Superior) Service Pension Rules, 1970. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

235. Notification issued with G.O. Ms. No. 611, Home, dated the 29th February 1972, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

236. Notification issued with G.O. Ms. No. 3953, Revenue, dated the 3rd December 1971 in regard to the power of Collectors of the Districts and the Special Deputy Collectors (Tenancy Records) for making complaints in writing to court for taking cognizance of the offences punishable under the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

237. Notification issued with G.O. Ms. No. 1195, Revenue, dated the 17th April 1972 in regard to amendment to the Revenue Department Notifications, under section 6 and Clause (7) of section 2 of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969. [Laid on the table of the House under section 18(4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

238. Notification issued with G.O. Ms. No. 403, Rural Development and Local Administration, dated the 1st March 1972 making the rules relating to the Conduct of Election of Madurai Corporation Councillors Rules, 1972. [Laid on the table of the House under section 432(2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

B. *Reports, Notifications and Other Papers.*

47. Notification issued with G.O. Ms. No. 2879, Haelth, dated the 24th November 1971, in regard to certain amendments to the Public Health Establishment (Local Authorities) Regulations, 1940.

48. Erratum issued with Roc. No. 192587/71, E5, dated the 8th March 1972 to the notification issued in proceedings Roc. No. 98121/70/E5, dated 25th August 1970 and published in page 386 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th September 1970.

49. Notification issued with G.O. Ms, No. 818, Labour, dated the 26th May 1972 in regard to certain amendments to the Madras Employees Insurance Courts Rules, 1961.

@ 50. The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 (L.A. Bill No. 24 of 1972).

@ 51. The Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 25 of 1972) with Annexure.

@ 52. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari district) Bill, 1972 (L.A. Bill No. 26 of 1972).

@ 53. The Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 27 of 1972).

@ 54. The Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Second Amendment) Bill, 1972 (L.A. Bill No. 28 of 1972).

@ 55. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972 (L.A. Bill No. 29 of 1972).

@ 56. The Tamil Nadu Public Buildings (Licensing) Amendment Bill, 1972 (L.A. Bill No. 30 of 1972).

@ 57. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Amendment Bill, 1972 (L.A. Bill No. 31 of 1972).

@ 58. Report of the Joint Select Committee on the Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 (L.A. Bill No. 23 of 1972).



59. Report of the Joint Select Committee on the Tamil Nad Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bil 1972 (L.A. Bill No. 19 of 1972).

60. Third Report of the Committee on Government Assurance (Fifth Assembly).

* 61. Report of the Select Committee on the Tamil Nad General Sales Tax (Fifth Amendment) Bill, 1971 (L.A. Bill No 51 of 1971).

% 62. The Madras City Municipal Corporation (Amendment Bill, 1972 (L.A. Bill No. 32 of 1972).

% 63. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972 (L.A. Bill No. 33 of 1972).

% 64. The Tamil Nadu Agricultural Labourer Fair Wage (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972).

% 65. Annexure to the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumar District) Bill, 1972 (L.A. Bill No. 26 of 1972).

% 66. Annexure to the Tamil Nadu Additional Assessment an Additional Water-Cess (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 2 of 1972).

% 67. Annexure to the Tamil Nadu Additional Assessment an Additional Water-Cess (Second Amendment) Bill, 1972 (L.A. Bi No. 28 of 1972).

% 68. Annexure to the Tamil Nadu Buildings (Lease and Ren Control) Amendment Bill, 1972 (L.A. Bill No. 29 of 1972).

% 69. Annexure to the Tamil Nadu Public Buildings (Licensing Amendment Bill, 1972 (L.A. Bill No. 30 of 1972).

% 70. Annexure to the Tamil Nadu Hindu Religions and Charitable Endowments (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972).

---

@ Despatched to Members on 12th August 1972.

* Presented to the House on 10th August 1972.

% Despatched to Members on 14th August 1972.

[1972 ஆகஸ்ட் 17

இணைப்பு.

[37-ஆம் பக்கத்தில் 145-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

விவர அறிக்கை.

1. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், பழனி, மதுரை மாவட்டம்.

2. ஸ்ரீ இராமநாதசுவாமி தேவஸ்தானம், இராமேஸ்வரம்.

3. ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், இருக்கன்குடி, சாத்தனூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

4. ஸ்ரீ பூமிநாதசுவாமி, சிருகாலசாந்தி முதலிய கட்டளை, வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

5. ஸ்ரீ பிள்ளையன் கட்டளை, திருநெல்வேலி.

6. ஸ்ரீ திருமலை குமரசுவாமி ஆலயம், பன்மொழி, தென்காசி வட்டம்.

7. ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி ஆலயம், திருப்புகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

8. ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயம், வைத்தீஸ்வரன் கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

9. ஸ்ரீ சுவாமிநாத்சுவாமி ஆலயம், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

10. ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

11. ஸ்ரீ கொளஞ்சியப்பர் ஆலயம், மணவாளநல்லூர், விருத்தாசலம், தென் ஆற்காடு மாவட்டம்.

12. ஸ்ரீ பென்னரி மாரியம்மன் ஆலயம், ராஜன் நகர், கோபி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

13. ஸ்ரீ சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.



1972 ஆகஸ்ட் 17]

14. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.

15. ஸ்ரீ வேதாரண்யேஸ்வரர் கோயில், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி வட்டம்.

16. ஸ்ரீ அரண்மனை தேவஸ்தானங்கள், தஞ்சாவூர் நகர் மற்றும் வட்டம்.

17. ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் கோயில், கோவிலூர், திருத்துறைப் பூண்டி வட்டம்.

18. ஸ்ரீ கோபிநாதஸ்வாமி கோயில், ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் வட்டம்.

19. ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் கோயில், திண்டுக்கல் வட்டம்.

20. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி ஆங்கிலமுறை மருத்துவமனை, பழனி.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

**வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 18.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## I. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### *State Planning Commission*

* 116 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission has submitted its interim report; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த மாநிலத் திட்ட ஆணைக் குழு அமைக்கப்பட்டு, ஓராண்டிக்கு மேலாகிவிட்டதே. அந்தத் திட்ட ஆணை குழுவில் இரண்டு உறுப்பினர்கள் இப்பொழுது இல்லையே. அவர்களுக்கு மாற்றாக வேறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் இடைக்கால ரிப்போர்ட் ஏதாவது அளித்திருக்கிறார்களா? குறிப்பாக, தமிழகத்தில் பிரத்தியேகமாக இருக்கக்கூடிய கைத்தறி போன்றவற்றைப் பற்றியாவது ரிப்போர்ட் கொடுக்கும்படியாகத் தாக்கீது அனுப்பப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ் நாட்டினுடைய நீண்ட காலத் திட்டத்தைக் குறித்து முன்வரைவு (ட்ராஃப்ட் அவுட்லைன்) ஒன்றைத் திட்ட ஆணைக்குழு தயாரித்து வருகிறது. அதனுடைய வேலை முடியும் தருவாயிலிருக்கிறது. அதனுடைய

முன்வரைவு மிக விரைவில் சட்டப் பேரவையில் வைக்கப்படும். இரண்டு உறுப்பினர்கள் இதில் இல்லை என்று சொல்வது சரியான தகவல் அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இத் திட்டக் கமிஷன் மாவட்ட வாரியாக ஆய்வுகள் நடத்தி அது சம்பந்தமாக இடைக்காலப் பரிந்துரைகள் ஏதாவது வந்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரங்களை முதலமைச்சரவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாவட்டங்களில் முனைப்பான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் முனைப்பான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டு, பின்னர் அவற்றைப் பிற மாவட்டங்களுக்கு நீட்டிப்பது இந்தக் குழுவினுடைய நோக்கமாகும். அதன் தொடர்பாக, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இந்த ஆணைக்குழு சந்தித்து இருக்கிறது. தொழில் நுட்ப உத்தியை அவர்கள் அளிப்பார்கள் என்று அறியப் பட்டுள்ளது. இதுவன்றி, இந்நாட்டில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து தொழில் நுட்ப உதவியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் பற்றியும் இந்த ஆணைக்குழு ஆய்வு செய்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** திட்ட ஆணைக்குழுவின் 'ட்ராஃப்ட் வரைவு' தயாராயிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் அந்த ட்ராஃப்ட் அவையின் ஒரு மாத காலத்திற்குள் அவைமுன் சமர்ப்பிக்கப்படுமா ? "ஃபார்ம் டேட்" கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'விரைவில்' என்று நான் சொன்னேன். 'ஒரு மாதத்திற்குள்ளாக' என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குள்ளாகக்கூட அது அளிக்கப் படும் என்று கருதுகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் இப்படிப்பட்ட மாநில திட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பது குறித்து மத்திய அரசு கருத்து தெரிவித்திருக்கிறதா? அப்படி யென்றால் என்ன கருத்தைத் தெரிவித்தது ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசு, தமிழ் நாட்டில் மாநிலத் திட்டக்குழு அமைப்பதை வரவேற்றிருக்கிறது. மத்திய அரசின் திட்ட அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களே அதை வரவேற்றுப் பேசியிருக்கிறார். அது மாத்திரமல்லாமல், அவர்கள் திட்டக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் இந்த மாநிலத் திட்ட ஆணைக்குழு செயல் படுவதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து பார்த்து மத்திய திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த நீண்ட கால திட்டப் பிரிவு இயக்குநர் அவர்களைச் சென்னைக்கு அனுப்பியிருந்தார். அவர் மாநில திட்ட ஆணைக்குழுவோடு விவாதித்தார்.

* 147 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Planning Commission has evolved any plan to reduce the unemployment problem in this State; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (ஆ) மாநிலத் திட்ட ஆணைக்குழு குறிக்கோள்கள் பலவற்றை எய்தும் திட்டம் ஒன்றை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று இம் மாநிலத்தில் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைக் குறைப்பதாகும்.

**திரு. என். கே. பழனிசாமி :** வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எவ்வளவு செலவாகும், அதில் மத்திய சர்க்காருடைய பங்கு என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவைகளையெல்லாம் இப்பொழுது திட்ட ஆணைக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ந்து முடிவைத் தெரிவித்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்தினுடைய பங்கு பற்றி நாம் யோசிக்க முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு சில சிறப்புத் திட்டங்களை அமைத்திருக்கிறது. அதே மாதிரி நமது மாநில அரசும் ஏதாவது சிறப்புத் திட்டம் நிறைவேற்றுவதற்கு உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொருளாதார வளர்ச்சியின் காரணமாகப் பெரிய தொழிற்துறைகளை விரிவுபடுத்துவதன் மூலமாக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் இதுவரையில் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இப்பொழுது நம்முடைய மாநிலத் திட்ட ஆணைக்குழு, அதற்கு நேர்மாறாக, வேலை வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்துப் பெரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற வகையில் அதை ஆராய்ந்து வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** வேலை வாய்ப்பின்மையைத் தீர்ப்பதற்குத் திட்டம் இடும்போது படித்து வேலையில்லாமலிருப்பவர்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறார்களா? படிக்காமல் கிராமப் புறங்களில் வேலையில்லாமலிருக்கும் மக்களையும் கணக்கில் எடுத்து அதற்கான திட்டம் வகுக்க உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதில் முதன்மையாக, படித்து வேலை இல்லாமல் இருக்கிறவர்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். அதன் தொடர்பாக, கிராமப் புறங்களில் படிக்காமலும் வேலையில்லாமலும் இருக்கின்றவர்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

### *Schools run by Slum Clearance Board*

* 148 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whethr any Swedish Social Service Organisation is offering assistance to the Slum Clearance Board to run schools at tenements areas; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை; (ஆ) இந்த வினா எழவில்லை.

**திரு. என். டென்னிஸ்:** ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்கு தமிழ் நாட்டில் வேறு சோஷல் சர்வீஸ் ஆர்கனைசேஷன், பள்ளி நடத்துவதற்கு உதவித் தொகை ஏதேனும் கொடுத்து வருகிறதா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குடிசை வாரியப் பகுதிகளுக்கு ஏதாவது அப்படி உதவித் தொகை வருகிறதா என்பது கேள்வி. அப்படி உதவி எதுவும் வரவில்லை.

### ஆங்கில ஏடு வெளியீடு

* 149 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து பின்வரும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில சுயாட்சி கோரிக்கைகள் குறித்து பிற மாநிலத்தவரும் வெளி நாட்டவரும் புரிந்து கொள்கிற வகையில் தமிழ்நாடு அரசு ஆங்கில ஏடு நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன்:** மாநில சுயாட்சியின் நோக்கம் குறித்தும், நமக்குத் தேவையான அதிகாரங்களைக் குறித்தும் பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்காகச் செய்தித் துறையின் மூலமாகச் செய்திப் படங்கள் தயாரித்து அவற்றை மக்கள் தொடர்பு அதிகாரிகள் மூலமாகக் கிராமங்களில் பிரசாரம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவ்வாறு இந்த அரசாங்கத்தின் சார்பிலே செய்வதாக உத்தேசம் இல்லை. ஆனாலும், இப்பொழுது ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகின்ற கட்டுரைகள் மூலமாகவும், வேறு மாநாடுகளிலும் மற்ற பிரசாரக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்படுகிற தகவல்கள் மூலமாகவும், நிருபர்களிடத்தில் விளக்குவதன் மூலமாகவும், பல்வேறு நல்ல அரசியல் மேதைகளைச் சந்திக்கும்போது அவர்களிடத்தில் விஷயங்களை விளக்குவதன் மூலமாகவும் மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. சட்டப் பேரவையிலும் மாநில சுயாட்சியின் முக்கியத்துவம் பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாநில சுயாட்சி சம்பந்தமாக இராஜமன்னார் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல நாட்கள் ஆகின்றன. முதல் அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிப்போம்

[1972 ஆகஸ்ட் 18

என்று உறுதிமொழி கொடுத்தும் இதுவரையில் அந்த அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காரணம், நேரமில்லாமையே தவிர வேறொன்றுமில்லை. எப்படியும் இந்த மன்றத்தில் விவாதிக்கப்படும், விரைவில்.

## கிராமப்புறச் சாலைகள்

* 150 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து **கீழ்க்கண்ட** வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் கிராமப் புறங்களில் கப்பிச் சாலைகள் அமைத்திட பணம் ஒதுக்க வேண்டி மத்திய அரசினை தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை. எனினும், மத்திய அரசின் மானிய உதவியுடன் 1,500 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகைகளைக் கொண்ட ஊர்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முக்கிய நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கு கப்பிச் சாலைகள் போடப்பட்டுச் சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலத்திற்கு நகர்ப் புறங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணத்தை கிராமப் புறங்களுக்கு ஒதுக்கி, கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகளைக் கப்பிச் சாலைகளாக உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இருபுறச் சாலைகளும் ஒருசேரக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒன்றைப் புறக்கணித்துவிட்டு, மற்றொன்றைக் கவனிப்பது என்பது சரியல்ல. கிராமப்புறச் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், புதிய இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துவதற்கும் 1970-71, 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் 1 கோடி 10 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க மத்திய அரசு ஒரு



1972 ஆகஸ்டு 18]

திட்டம் வகுத்திருக்கிறது. ஆகவே, உடனடியாக 281 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய இணைப்புச் சாலைகளை அமைப்பதற்கும், 1,427 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைச் சீர்படுத்துவதற்கும் ஆறு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துவிட்டது. 1972–73 ஆம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாய் செலவாகும். இதற்கு ஈடாக ஒன்றரை கோடி ரூபாய் உதவி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த இணைப்புச் சாலைகள் அமைப்பது சம்பந்தமாக 1,500 மக்கட்தொகை என்று இப்பொழுது வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் உள்ள கிராமங்களில் மக்கட்தொகை சற்று குறைவாக இருந்தால்—குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி இருக்கிறது—விதிவிலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ? இது குறித்து அரசு புனர்பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட பகுதிகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது ஓரளவு நிறைவேறுகிற சூழ்நிலை ஏற்பட்ட பிறகு மாவட்டத் தன்மைகளை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்கள் வகுக்கலாம்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** கிராமப்புறச் சாலைகள் இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப் பராமரிக்க வேண்டுமென்றும் போது பல ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி முழுக்க முழுக்க இல்லாது இருக்கின்ற நிலை இருக்கிறது. தமிழகத்தில் இப்படிப் பற்றாக்குறை இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை பெருவழித் துறையில் எடுத்து நடத்த முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசாங்கத்தினுடைய பெருவழித் துறையினர் எடுத்துக்கொள்வது என்ற நிலை வருகிறபோது ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்களின் சாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்களின் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்க, ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை பெருவழித் துறையினர் எடுத்துக்கொள்ளும் நிலை ஏற்படும்.

[1972 ஆகஸ்ட் 18

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதிகளில் இணைப்புச் சாலைகள ஏற்படுத்தும் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. தீவிர கிராம சீரமைப்புத் திட்டத்தின் கீழும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து ஓரளவு குறைகளை சிறிதளவு போக்க முடியும் என்று கருதலாம்.

*Storm Water Drainage System in Madras*

* 151 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to prevent the flooding of the low-lying streets during the rainy seasons in the City of Madras?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை நகர வெள்ள வடிகால் அமைப்பை மேம்படுத்த ஓர் அடிப்படைத் திட்டம் தயாரிப்பதுடன் வெள்ளத்தால் வரும் கஷ்டங்களுக்குத் தீர்வு காணத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** ஒவ்வொரு வருஷமும் சாதாரண மழை பெய்தாலும் எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்குவதன் காரணமாக இதைத் தடுக்க உடனடியாக ஏற்பாடு செய்து அதிகமான தண்ணீர் நிற்கக்கூடிய இடங்களில் பம்புகள் வைத்து இறைக்கவும், தாழ்வான இடங்களை மேம்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை மாநகராட்சிச் சாலைகளைப் பொறுத்தவரையிலும் 1,169 கிலோ மீட்டர் நீளம் உள்ளவையாக இருக்கின்றன. அதிலே 250 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் வடிகால் அமைந்திருக்கின்றது. மற்றைய பகுதிகளுக்கு வடிகால் அமையவில்லை. இதற்காக கடனாக 87 லட்சமும் மாநகராட்சி 50 லட்சமும் ஆக ஒரு கோடி முப்பத்தேழு லட்சம் ரூபாய் கடந்த பத்தாண்டுகளில் செலவழித்தும் போதுமானதாக இல்லை. கடந்த 22—11—1971 அன்று தலைமைச் செயலகத்தில் மாநகராட்சி மன்ற அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி பிறகு வடிகால் திட்டம் அமைப்பது பற்றி 14—12—1971 அன்று யோசனை தெரிவிக்கப் பட்டது. அதன்படி இதற்காகத் தனிச் செயற்குழு அமைப்பது



1972 ஆகஸ்டு 18]

என்றும் நிர்வாகப் பொறியாளர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து இந்தப் பணிக்காக பாதியை மானியமாகவும், பாதியைக் கடனாகவும் வழங்க வேண்டுமென்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிக்கையை மாநகராட்சி மன்றத்தில் சிறப்புக் குழுவினர் ஆராய்ந்து அரசுக்கு அளித்த பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாநகராண்மைக் கழகம் எடுத்துக் கொண்டுள்ள நல்ல நடவடிக்கைகளின் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் தேங்கியதை விட இப்போது குறைவாகத்தான் தண்ணீர் தேங்குகிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக ஓரளவு தண்ணீர் தேங்குவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு கோடி முப்பத்தேழு லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்தும் அது போதுமான அளவுக்கு இல்லையென்ற காரணத்தால் இப்போது சிறப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கை வந்து நடவடிக்கைகள் மேற்கொண்ட பிறகு பல இடங்களில் தண்ணீர் தேங்குகின்ற நிலை ஏற்படாமல் சீர் செய்யப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சென்னையில் இருமாதிரி லோ லையிங் ஸ்ட்ரீட்ஸ் இருப்பது போல் மதுரையிலும் இருப்பதால் வெள்ள நீர் வடிகால் திட்டத்தை மதுரையில் அமைக்க ஆலோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் கூறலாம்.

**திரு. நா. வீராசாமி :** இப்படிப்பட்ட திட்டங்களை டில்லி போன்ற மாநகராட்சிகள் நிறைவேற்ற மத்திய அரசாங்கம் மானியமாகப் பணம் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநகராட்சி இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் பணம் கொடுத்திருக்கிறதா ? இல்லையென்றால் இனியாவது பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

[1972 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதற்காகத் தனியாகக் கேட்கவில்லை. கிரேட்டர் மெட்ராஸ் என்ற அளவுக்குப் பெரியதொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, புறநகர் வளர்ச்சி வசதிகள் ஆகியவற்றுக்கான திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது பற்றி மறுபடியும் ஆராயும்படி நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே, டெல்லி போன்ற நகராட்சிகளுக்கு அளித்தது போல் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

### சிவகாசி—கிருஷ்ணன் கோயில் சாலை

* 152 வினா—**திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து எம். புதுப்பட்டி வழியாகக் கிருஷ்ணன் கோயில் வரை செல்லும் சாலையைப் பழுது பார்த்துப் பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. காளிமுத்து:** போக்குவரத்துக்கு மிக மிக இன்றியமையாத அந்தச் சாலைகளைப் பழுது பார்த்து பாலங்கள் அமைத்திட இனியாவது முயற்சி மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற பாலம் கட்டுவதற்குத் தோராயமாக நான்கு லட்சம் ரூபாய் ஆகுமென்றும், இதர சாலைகள் என்ற தலைப்பின் கீழ் அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது போதுமானதாக இல்லாததால் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்துப் போடப்படுகின்ற திட்ட காலங்களிலே சாலைகள் பற்றிய நிதி ஒதுக்கீடு செய்யும்போது இதைக் கவனிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கலாம்.



1972 ஆகஸ்டு 18]

### ஊராட்சி மன்றங்கள்

* 153 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய ஊராட்சிகளுக்கு ( Minor Panchayats ) அதிக பட்ச வாக்காளர்கள் எவ்வளவு பேரென வரையறுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன்:** ஒரு கிராமப் பஞ்சாயத்தில் 250 வாக்காளர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஒரே ஒரு ஊர் மட்டுமே அடங்கி இருக்கிறது. இன்னொரு கிராமப் பஞ்சாயத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்களும், பத்துப் பதினைந்து ஊர்களும் அடங்கி இருக்கின்றன. இந்த மாறுபாட்டைப் போக்கி ஒரே சீரான கிராமப் பஞ்சாயத்துக்களாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆங்காங்கு இருக்கும் தேவைகளுக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. 600 மக்களுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டிருந்தால் அவர்கள் ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கலாம். மக்கள் தொகை 600-ல் இருந்து 800 வரை ஆறு உறுப்பினர்கள், 800-ல் இருந்து ஆயிரம் வரை ஏழு உறுப்பினர்கள், 1,000-ல் இருந்து 1,200 வரை எட்டு உறுப்பினர்கள். 1,200-ல் இருந்து 1,500 வரை ஒன்பது உறுப்பினர்கள், 1,500 முதல் 2,000 வரை பத்து உறுப்பினர்கள், 2,000 முதல் 3,000 வரை பதினொரு உறுப்பினர்கள், 3,000 முதல் 5,000 வரை பன்னிரண்டு உறுப்பினர்கள். இந்த அடிப்படையில்தான் இப்போது ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. குறைந்த அளவு உறுப்பினர்கள் ஐந்து பேர். அதிக அளவு உறுப்பினர்கள் 12 பேர். 15,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை வரும்போது பேரூராட்சி என்று அமைந்து 15 பேர் உறுப்பினர்கள் இருப்பார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** ஊராட்சி மன்றங்களை அமைக்கும்போது 500 ஜனத்தொகை இருந்தாலும் ஊராட்சி மன்றமாக அமைக்கும்போது குறைந்த ஜனத்தொகை இருப்பதால்

வருமானம் குறைவாக இருந்து சீராக நடத்த முடியாத நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் 2,000 ஜனத்தொகைக்குக் குறையாமல் ஒரு ஊராட்சி மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையில் சீர்படுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த அடிப்படையில் கூட சில இடங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று கிராமங்கள் சேர்ந்து ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில் தனித்து இயங்கக்கூடிய வசதியும், வாய்ப்பும் பெற்றவைகளாக அமைய வேண்டுமென்ற அடிப்படையில் ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போன்று அமைத்துக் கொள்வதில் எந்தவிதத் தடையும் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சிறு சிறு பஞ்சாயத்துக்களாக அமைந்திருக்கிற காரணத்தினால் பல பஞ்சாயத்துக்களுக்கு மின் கட்டணம் கூட கொடுப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. சிப்பந்திகளின் செலவுகளைக் கூட அவர்களால் பராமரிக்க முடியவில்லை. ஆதலால் இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு கன்னியாகுமரி ஜில்லாவிலாவது பரீட்சார்த்தமாக இதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஊராட்சி மன்றங்கள் இயங்கத் தக்க அளவிற்கு அமைய வேண்டும் என்ற கருத்தினைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளலாம். அதைப் பற்றி ஆராயும்படி செய்யப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு மூன்று கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு செய்வது என்பதற்கு அங்குள்ளவர்கள் விட்டுக்கொடுக்க முன்வரவேண்டியவர்களாகயிருக்கிறார்கள். தனித்தனி பஞ்சாயத்தாக இருந்தால் ஒவ்வொரு பஞ்சாயத்துக்குள் பிரசிடெண்ட் என்று பிரசிடெண்டாக இருக்க முடியும். அப்போதுதான் அவர்கள் யூனியனில் போய் உட்கார முடியும் என்ற அளவில் நிலைமை இருக்கிறது. மூன்றும் ஒன்றாகச் சேரும்போது ஒரு தலைவர்தான் இருக்கக்கூடிய நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சங்கடங்கள் இருப்பதால் கூடுமான வரையில் அந்தந்த ஊராட்சி மன்றங்கள் தங்கள் தங்கள் காலிலேயே நின்று இயங்கும் அளவிற்கு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை





அடிப்படையாக வைத்து ஊராட்சி மன்றங்களைக் கண்காணித்து வருகிற இயக்குநர் திட்டம் தீட்டி வருகிறார்கள். அந்த வகையில் ஆராயப்படலாம்.

திரு. நா. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் விடை மிகவும் விளக்கமாக இருக்கிறது. இதற்கு மேல் துணைக் கேள்விகளுக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்றாகச் சேர்த்துத் தேர்தல் நடத்தினால் யார் தலைவராக வருகிறார்களோ அவர்கள் ஊர் மட்டும்தான் கவனிக்கப்படும் என்ற நிலையில் ஏற்கனவே அதைப் பரிசீலனை செய்துதான் தனித்தனியாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆகவே அதை மனதில் வைத்துக் கொண்டு இப்போது இருக்கிற முறையையே நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியாக இயங்கலாம் என்ற அளவிலும், இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து அமைக்கலாம் என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் தனித்தனியாகப் பிரிய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் சேர்ந்து இயங்குவதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் தன் காலிலேயே நிற்கத்தக்க அளவில் அமைய வேண்டும் என்பதுதான்.

### *Pension for employees of Local Bodies*

*154. Q.—Thiru K. T. K. Thangamani: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Municipalities including the Corporation of Madurai have passed resolutions granting pensions to employees who retired before 14th January 1970;

(b) if so, the details of the same; and

(c) the probable date of implementation of the same?

[1972 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) & (உ) நகராட்சிப் பணியாளர்களுக்கும், மதுரை மாநகராட்சிப் பணியாளர்களுக்கும் முறையே நகராட்சி நிதியிலிருந்தும் மாநகராட்சி நிதியிலிருந்தும் தனி ஓய்வூதியம் வழங்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 14—1—70-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கெல்லாம் பென்ஷன் கொடுப்பதற்கு முடிவு எடுத்ததற்குப் பின்னால் அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க ஒவ்வொரு நகராட்சிக்கும் சுற்றறிக்கை விடப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரை, தூத்துக்குடி போன்றவிடங்களில் ஏற்கனவே கிடைத்த வருவாயில் 16-ல் 7 பங்கு கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். இப்படி முடிவு செய்யப்பட்ட அந்த நகராட்சி மன்றங்களில் உடனடியாக பென்ஷன் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 14—1—1970-க்கு முன்னால் இருப்பவர்கள்—அதற்குப் பிறகுதான் ஒருமுறை யின்கீழ் கொண்டு வந்து ஓய்வு ஊதியம் தரப்பட்டது. அதற்கு முன்னால் உள்ளவர்கள்—ப்ராவிடன்ட் பண்ட் போன்றவை வாங்கிக் கொள்வது என்ற முறையில் ஒவ்வொரு நகராட்சி மன்றமும் ஒப்புதல் அளித்தால் செய்யலாம் என்று எல்லா மன்றங்களிடமும் கேட்கப்பட்டது. பெரும்பாலான நகராட்சி மன்றங்கள் அப்படிப் பட்டவர்களுக்கு அட்ஹாக் பேசிசில் ஓய்வு ஊதியம் தரவேண்டு மென்று ரூ. 25 அல்லது 25 சதவிகிதம் என்ற அளவில் கொடுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கொடுக்கலாம் என்பதற்கான முடிவு எடுக்கிறபோது அனைவருக்கும் ஓய்வு ஊதியம் வழங்கப்படலாம் என்று முடிவு செய்கிறபோது ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒவ்வொரு பேசிசில் இருக்குமானால் அது சரியாக இருக்காது. மதுரையில் எட்டில் மூன்று பங்கு என்றோ அல்லது நாற்பது ரூபாய் என்றோ இருக்கிறது. ஒன்றில் ஒன்றாகவும் வேறு ஒன்றில் வேறுவிதமாகவும் இருக்கக்கூடாது. சில ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதிவசதியையொட்டி அப்படிக் கொடுக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். பெரும்பாலானவை ரூ. 25 அல்லது 25 சதவிகித அளவில் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1972 ஆகஸ்டு 18]

*Sale of Tuberculosis seals*

* 155 Q.—Thiru P. R. Munuswamy : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether Tamil Nadu has bagged the award for the maximum sale of Tuberculosis seals in the sale campaign for 1970–71–72; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) 1968 முதல் 1972 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டு களிலும், அனைத்து இந்தியாவிலும் காச நோய் முத்திரைகளை அதிக அளவில் விற்பதற்காகத் தரப்படும் பரிசை தமிழ்நாடு காச நோய் கழகம் பெற்றுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ்நாட்டில் காச நோயினால் பாதிக் கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்றும் அதற்குப் பதிலாக குஷ்ட நோய் பரவலாகத் தமிழ்நாட்டில் இருக் கிறது என்றும் மத்திய அரசிலுள்ள அதிகாரி ஒருவர் தெரியப் படுத்தியிருப்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த விவரம் என்னிடம் இல்லை. காச நோய் குறைந்த காரணத்தினால் அதற்குப் பதிலாக இது பரவுகிறது என்று சொல்வது தவறு. இந்த நோய் வருவதற்கு ஏதுக்கள் பல இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கான சாதனை களும் சில இருக்கின்றன.

கண் தானம் செய்தவர்கள்

* 156 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1970-71 1971-72-ம் ஆண்டுகளில் கண் தானம் செய்தவர்கள் முறையே எத்தனை பேர்—மாவட்டவாரியாக?

(ஆ) சிறைச்சாலைக் கைதிகள் யாரேனும் கண் தானம் செய் துள்ளார்களா?

[1972 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

| | 1970-71 | 1971-72 |
|---|---|---|
| (அ) மதுரை மாவட்டம் | 30 | 8 |
| முகவை மாவட்டம் | .. | 1 |
| சென்னை மாவட்டம் | 3 | 1 |

(இ) ஆம். சென்னை மத்திய சிறைச்சாலைக் கைதிகள் இருவர் 1971-ஆம் ஆண்டில் கண் தானம் செய்துள்ளார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** இப்படிப்பட்ட கண் தானம் கொடுப்பவர்களது கண்கள், கண்களை இழந்தோர்களுக்கு முறைப்படி பொருத்தப்பட்டு விட்டனவா என்றும் கண் தானம் செய்யக்கூடியவர்களுக்கு அரசு அளித்து வரும் சலுகைகளையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** பல தியாகங்கள் பிறருடைய நல்வாழ்விற்காகச் செய்யப்படுகின்றன என்ற உணர்வு அடிப்படையில் நிறைவேற்றப்படுவதாகும். எனவே, இப்படிப்பட்ட நல்ல உணர்ச்சியோடு செய்கிற தியாகத்திற்கு அரசு ஒரு விலை மதிப்பு போடுவது இயலாத காரியம். மற்றொன்று, இந்தக் கண்களைப் பெற்று மற்றவர்களுக்குப் பொருத்துவது என்பது எல்லா நேரத்திலும் எல்லோருக்கும் இயல்வது அல்ல. சில சூழ்நிலைகளில்தான் இயலக்கூடியவைகளாக இருப்பதற்கான காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும் தமிழ்நாட்டில் இந்த உணர்வு அதிகமாக வேண்டும். தங்கள் உயிர் நீங்குகிற ஒரு காலத்திலாவது தங்கள் கண்களைப் பிறர் பார்வைக்கு பயன்படுத்த வழங்குகிற ஒரு மனப்பான்மை உருவாக வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

**திரு. கு. பாலகிருட்டிணன் :** புரட்சிகரமான சிறந்த திட்டம் என்று போற்றப்படும் முதல் அமைச்சர் அவர்களின் கண் ஒளி வழங்கும் திட்டத்திற்கு அரசு செலவழிக்கும் தொகை என்ன? அத்திட்டம் பற்றி அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சம் பேருக்கு காட்டராக்ட், நீக்க அறுவை சிகிச்சை நடத்துவது என்பது நோக்கம். ஒரு ஆண்டிற்கு 60, 70 லட்சம் ரூபாய் செலவாகும். ஒரு லட்சம் பேர்களுக்கு காட்டராக்ட் அறுவை சிகிச்சை நடத்தும் அதே நேரத்தில் ஒருவருக்கு எட்டு பேர் என்ற அளவில் எட்டு லட்சம் பேர்களுக்கு வேறுவித



1972 ஆகஸ்ட் 18]

மான கண் பார்வைக் குறைவுக்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட விரிவான திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும். அரசாங்க வரவு செலவு திட்டத்தில் 1 கோடி ரூபாய் உடனடியாக ஒதுக்குவதற்கு இயலாத ஒரு நிலை இருப்பதைக் கண்டு முதல் அமைச்சர் அவர்கள் தன் பிறந்த நாள் கொண்டாடுகிற நேரத்தில் அதைப் பயன்படுத்தி, வசதியுள்ளவர்கள் நிதி தரவேண்டுமென்று கேட்டு ஏறக்குறைய 26 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. மேலும் தொடர்ந்து இந்த நல்ல திட்டத்திற்கான எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று ஏறத்தாழ பத்து இடங்களில் இது வரையில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. த. சோலையா :** கண் தானம் செய்வதற்கு முன்வந்தவர்கள் வரிசையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர் என்று தெரிவித்தார்கள். அந்த நல்ல காரியத்தைச் செய்ய வந்த அந்த நல்லவர் பிறந்த ஊர் எது? அவரது பெயர் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த விவரம் இல்லை. அது அந்தப் பகுதி உறுப்பினருக்கே தெரியாத அளவிற்கு உள்ள ஒரு செய்தி என்பது இப்போதுதான் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்களே சொல்லியிருக்கலாம்.

**திரு. எம். தேவராசன் :** தூக்கில் இடப்படும் கைதிகளின் கண்கள் எடுக்கப்பட்டு இம்மாதிரி கண் அற்றவர்களுக்கு அளிக்கிற ஒரு ஏற்பாடு நடைபெற்று வருகிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மற்றவர்களின் உரிமையை விட தூக்கிலிடப்படப்போகிறவர்களுக்குள்ள உரிமையை அதிகமாக மதிக்க வேண்டும். எனவே அவர்களாக விரும்பி வழங்க வேண்டும். அப்போதுதான் அந்தக் கண்களைப் பெற முடியும். சிலர் தவறாகக் கருதுகிறார்கள். அதாவது அப்படிக் கண்கள் எடுக்கப்பட்டுவிட்டால் அந்த இடத்தில் குழி விழுந்து, இறந்து போனவரின் உடல் கோரமாகக் காட்சியளிக்கும் என்று தவறாக நினைக்கிறார்கள். கண்களில் உள்ள கார்னியா என்ற பகுதியே தேவை. அது எடுக்கப்பட்டு கண் இரப்பைகள் மூடப்பட்டால்

உடல் எந்த வகையிலும் பார்ப்பதற்கு கோரமாக இருக்காது. எனவே நம்மைப் போன்றவர்கள் கூட அப்படி வழங்குவதற்கு முன் வருவது என்ற ஒரு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் கண் பார்வையற்றவர்கள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரம் எடுக்கப்பட்டிருக்கிறதா. அவர்களுக்குப் பார்வை வழங்க அரசு ஏதேனும் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கண் பார்வையற்றோர் எவ்வளவு என்ற புள்ளி விவரம் ஏறத்தாழ எடுக்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் பேர் இரண்டு கண்களிலே ஒன்றிலே படலம் ஏற்பட்டு முழுவதும் தெரியாமலும், மற்றொரு கண் படலத்தால் சிறிது மறைக்கப்பட்ட நிலையிலும் இருப்பதாகவும், 3—4 லட்சம் பேர் ஒரு கண்ணில் மட்டும் படலத்தால் மறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது ஓரளவிற்கு 40 முதல் 45 வயதிலிருந்தும் 50 முதல் 60 வயதுள்ளோரிடத்திலும் ஏழை எளிய மக்களிடம் மிகுதியாகவும் உள்ளது. நல்ல ஊட்ட மான இயற்கை உணவை உண்ண வழி இல்லாத மக்களிடத்தில் கண் நோய் அதிகமாகிறது. அதற்கு அறுவை சிகிச்சை அளிக்கும்போது, அந்தப் படலம் ஏற்பட்டு முற்றாத நிலையில் உள்ளோருக்கு சிகிச்சை அளிப்பது என்பது முடியாது. காரணம் படலம் முற்றிய நிலையில் இருந்தால்தான் அறுவை சிகிச்சை நடத்த முடியும். இந்தத் திட்டம் 5 ஆண்டு காலத்தில் ஒரு 10 லட்சம் பேர் அளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு விரும்பு கிறது.

### கிராமங்களுக்குப் பொது கழிப்பிடங்கள்

* 157 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 14—10—1969-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், பொதுமக்கள் உபயோகத்திற்கென கிராமங்கள்தோறும் பொது கக்கூஸ்கள் கட்டவும் அதற்கான



செலவில் 75 சதவிகிதம் அரசு மானியமாக அளிக்கவும் அரசினரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அரசு ஏற்க வேண்டிய மொத்த செலவு பற்றி அறிக்கை அனுப்புமாறு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர் கோரப்பட்டுள்ளார் அவ்வறிக்கை வந்தவுடன் இது பற்றி பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட கழிவிடங்கள் இல்லாத காரணத்தால் தெருக்களில் எல்லாம் கழிவு நீர் ஓடுகின்றது. கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் கூட இப்படிப்பட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். சபைக்கு விளக்கம் தேவையில்லை.

**திரு. கே. எ. வகாப் :** அப்படியென்றால் அந்தத் திட்டத்தை உடனடியாக அறிக்கை வந்தவுடன்—அறிக்கை எப்படியிருந்தாலும்—அமுல் நடத்த அரசு முன்வரும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அமைச்சருடைய உறுதி மொழி என்பது நிதி வசதியைப் பொறுத்தது. நிதி கிடைக்குமானால், அமைச்சரைவிட உறுதியானவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சென்னை நகரத்தின் பல பகுதி களில் இப்படிப்பட்ட வசதியில்லாத பகுதிகள் இருக்கின்றன. அதற்கு முக்கியத்துவம் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கும் மூலக் கேள்விக்கும் ரிலவன்சி இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இவ்வளவு பெரிய சென்னை நகரத்தைப்பற்றிய பிரச்னையாதலால், தனிக் கேள்வி போட்டு சென்னை நகரத்தைச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## *Sheep Farms*

*158 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any scheme to revive the Sheep Farming Centres in Hosur and Denkanikotta taluks;

(b) if not, the proposal of the Government as to how to make use of the buildings already constructed for the same purpose some-time back; and

(c) the details thereof?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

## *Import of exotic breed of cattle*

*159 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of exotic bulls like Jersey, Freisian and Red Dane imported so far in Tamil Nadu?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* கடந்த எட்டு ஆண்டுகளில் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அயலினக் கால் நடைகளில், இந்திய அரசு, இந்த மாநிலத்துக்கு 26 ப்ரீஷியன் கால் நடைகளையும் (19 பசுக்கள், 7 காளைகள்), 55 ஜெர்ஸி கால்நடைகளையும் (41 காளைகள். 14 பசுக்கள்) ஒதுக்கித் தந்தது.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that the imported exotic breeds are poor in quality since we are getting them free from other nations? So, will this Government come forward to get very good exotic breed at least by purchasing them from abroad so as to breed good quality of animals in Tamil Nadu?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்படத்தக்க மிகத் திறன் பெற்ற காளை ஒன்று ரூ. 10,000 ஆகிறது. நல்ல இனப் பசு ஒன்று ரூ. 7,000 ஆகிறது. இப்படி தமிழ்நாட்டிற்கு மட்டும் ஏறத்தாழ 240 காளைகளும், 540 பசுக்களும் இந்த வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவைப் படுகின்றன. ஏறத்தாழ ரூ. 62 லட்சம் வெளிநாட்டுச் செலாவணி அதற்காகத் தேவைப்படும். மத்திய அரசு எந்த அளவுக்கு ஒத்துழைப்பைத் தர முடியுமோ அந்த அளவு பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

@ 262-264-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



*திரு. ஆர். பொன்னப்ப நாடார்:* தலைவரவர்களே, இந்த பெர்ஷியன் போன்ற எருதுகளை மாவட்ட ரீதியாக வழங்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் முனைப்புத் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, இப்போது கால்நடைப்பண்ணைகளில்தான் இந்த உயர்தர எருதுகள் வைக்கப்படுகின்றன. அவற்றில் சில வயதாகிவிட்ட தன்மையை எய்திவிட்டதாக நான் அறிகிறேன். மாவட்ட அளவில் ஏற்கெனவே பிரிசியன் எருதுகள்; சிந்தி காளைகள், முர்ரா எருதுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. நாம் கேட்கிற அளவுக்கு ஏராளமான எண்ணிக்கை கிடைக்குமானால், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் காளைகளைப் பயன்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

*திரு. கா. வேழவேந்தன்:* துணைத் தலைவரவர்களே, ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் உயர்தர காளைகளை உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குத்தான் அதிகமாகத் தருகிறார்கள், தமிழ் நாட்டிற்கு அந்த அளவுக்குத் தருவதில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, இதைப் பற்றி மத்திய அரசின் கவனத்திற்கு மாநில அரசு கொண்டு போய் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, உத்திரப் பிரதேசம் மிகப் பெரிய பிரதேசம் என்று சொல்லி, கவனம் அதிகம் செலுத்துவதற்கு வேறு காரணம் காட்டக் கூடும். ஆனால் அவர்கள் தமிழ்நாட்டை அலட்சியப்படுத்த முடியாது என்று நான் கருதுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Out of these three varieties, viz., Freisian, Jersey and Red-Dane which is supposed to be the best? Would the Government make arrangements to import the best exotic breed?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, நம்முடைய நாட்டினுடைய நிலைமையை நோக்குகிறபோது மூன்றுமே மிகச் சிறந்த இனங்கள்தான்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காங்கேயம் மாடுகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், அவற்றை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்களுக்கு அந்தக் காளைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து இருக்கும். அந்த மாடுகள் உழவு வேலைகளுக்குத்தான் அதிகம் பயன்படுகின்றன. மேல் நாடுகளில் உழுவதற்கு மாடுகளை பயன்படுத்தும் அவசியமே இல்லை. மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதைக் கண்காட்சியில் வைக்கவேண்டுமானால், அதற்கு நாமே செலவழிக்க வேண்டும்.

## துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 160 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஊராட்சி மன்றங்களிலும் நகர் மன்றங்களிலும் பணிபுரியும் துப்பரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு மத்திய அரசு 1970-71, 1971-72-லும் எவ்வளவு தொகை அளித்தது?

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எங்கெங்கே வீடுகள் (1970-72 வரை) கட்டித் தரப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஒவ்வொரு ஆண்டுக்கும்|முறையே ரூ. 9,00,000.

(இ) 1970-71.

**நகர் மன்றங்கள்—**

1. கரூர்—கூரைவரை கட்டிட வேலை முடிந்திருக்கிறது.
2. திருச்சிராப்பள்ளி—வேலை துவக்கப்பட இருக்கிறது.

**ஊராட்சி மன்றங்கள்—**

பொன்மலை, உப்பிலியாபுரம், கரியமணிகண்டம், தோட்டக்குறிச்சி, பொன்னமராவதி, அன்னவாசல் ஊராட்சிகளில் கட்டிட வேலை முடிந்துவிட்டது. பாத்தியூர், புல்லம்பாடி, பெரம்பலூர். வெப்பைக் குடிக்காடு, குழித்தலை ஊராட்சிகளில் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.



**1971-72—**

**நகர் மன்றங்கள்—**

இல்லை.

**ஊராட்சி மன்றங்கள்—**

பொன்மலை, அன்னவாசல், பழையஜெயங்கொண்ட சோழபுரம்—கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் பணிக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்கிறதா ? 1972-73-ம் ஆண்டிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972-73 ஆண்டிற்கும் ஏறத்தாழ இதே தொகையை ஒதுக்கியிருக்கிறது.

## அனாதை இல்லங்கள்

* 161 **வினா—திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு எந்த அடிப்படையில் அரசு அங்கீகாரம் அளிக்கிறது? எந்த அடிப்படையில் அதற்கான மானியம் அளிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசு உதவி மானிய விதி தொகுப்பு, படலம் XI -ன்படி, அனாதை இல்லங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 30 மாணவர்களைக் கொண்டதும், ஓராண்டு முழுவதும் நன்றாக நடத்தப்பட்டு வருவதாயும், மாணவர்களுக்கு சுகாதார அமைப்புடன் கூடிய இடவசதி, உணவு, தண்ணீர் முதலியன அளிக்கக்கூடியதாயும், அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கல்வி பயில ஏற்பாடுகள் செய்து தரக்கூடியதாயும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு ஜூலை முதல் தேதியன்றும் இல்ல மாணவர்களில் 80 சத வீதத்துக்கு மேற்பட்டவர்கள் ஆதரவற்றவர்கள் எனச் சான்றிதழ் கொண்டவர்களாயும், 5 முதல் 20 வயது வரை

பில் உள்ளவர்களாயும், பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 300க்கு மிகாமலும், ஊனமுற்றோராயிருந்தால் 5 முதல் 25 வயது வரை உள்ளவர்களாயும், பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 600-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் தேதிக்குள் மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களை, அரசு அங்கீகாரத்துக்கும், மானியத்துக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்வார். மேற்கண்ட இல்லங்களை ஆய்வு செய்து, சமவெளியில் உள்ள இல்லமாயின் தகுதியுள்ள மாணவனுக்கு, ஒரு மாதத்துக்கு ரூ. 12 என்ற அளவிலும், மலைப் பிரதேசத்தில் உள்ள இல்லமாயின் ரூ. 18 என்ற அளவிலும் கணக்கிட்டு, இல்லத்தின் நிகரச் செலவில் நான்கில் மூன்று பகுதியையும் கணக்கிட்டு இரண்டில் எது குறைந்த தொகை கொண்டதாக உள்ளதோ, அதை அவ்வாண்டு மானியமாக வழங்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தமிழகத்தில் தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்கள் மூலம் நடத்தப்படும் அனாதை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதற்காக ஆண்டுதோறும் அரசாங்கம் ஒதுக்கும் மானியம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது வரையில் அங்கீகாரம் பெற்று இயங்கிக் கொண்டு வருகிற அனாதை இல்லங்களின் எண்ணிக்கை 372. எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்சமயம் இல்லை.

**திரு என். ராஜாங்கம் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் தாய், தகப்பன் யாராவது ஒருவர் இருந்து, அவருடைய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதி ஆரம்ப காலத்தில் அனாதை விடுதிகள் முதன் முதலில் ஏற்பட்டபொழுது செய்யப்பட்ட ஒரு விதி. ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பாதித்தால் கூட 360 நாட்களுக்கு ரூ. 360 வந்துவிடும். ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி ரூ. 300-க்கு மேற்பட்டு ரூ. 400-க்கு உள்ளாக ஆண்டு வருமானம் இருந்தால் கூட அனாதைக் குழந்தைகளாகக் கருதப்படுவார்கள் என்பதைக் கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதற்கு முன்னர் மாணவர் ஒருவருக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது தான் 1968-69 முதற்கொண்டு அது 12 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானம் ரூ. 300 என்று இருப்பதை 400 ஆக்குகின்ற உத்தேசம் தற்சமயம் இல்லை.

### *Price of pulses*

* 162. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Government are aware of the upward trend in pulses market in this State during May 1972; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு ஆகியவற்றின் விலை 1971 மே திங்களிலிருந்து ஓராண்டுக் காலத்தில் 20 சத விதம் உயர்ந்துள்ளது. பிற மாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்தது. அதன் காரணமாக நமது மாநிலத்திற்கு வரும் பருப்பு வகைகளின் அளவு குறைந்தமையாலும் போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாகவும் பருப்பு விலைகள் உயர்ந்தன.

**திரு. என். டென்னிஸ் :** அரசு இதன் விலையை நிர்ணயம் செய்து ஃபேர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்துவதன் மூலம் இதன் விலையைக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எப்.சி.ஐ. விற்கின்ற பருப்பு வகைகளை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் கொடுத்தால், அதை இருக்கிற நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு அரசு உத்தேசம் செய்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது அத்தியாவசிய பண்டங்களில் உட்பட்டிருக்கிற காரணத்தினால் இதன் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது பரிந்துரை நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன் கீழ் ஏதாவது நடவடிக்கை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறதா?

[1972 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எந்தப் பரிந்துரையும் நமக்கு வரவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வெளி மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகள் வரவேண்டியிருப்பதன் காரணத்தினால், எப்.சி.ஐ. வாங்கி ஸ்டேட் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். அப்படி அவர்கள் கொடுத்தால், மாநிலத்திலுள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அது விநியோகிக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பருப்புப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு நமது மாநிலத்திலேயே பருப்பு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறார்களா? உளுத்தம் பருப்பு விலை குறிப்பாக எக்கச்சக்கமாக ஏறிக்கொண்டிருக்கிறது. அது தமிழ் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது. ஆகவே, அதை உடனே வாங்கி ரேஷன் கடைகள் மூலமும், நியாய விலைக் கடைகள் மூலமும் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சென்ற ஆண்டு தமிழ் நாட்டில் ஏற்கெனவே பயிர் ஆகி வந்த 8.50 லட்சம் ஏக்கராவோடு 5.35 லட்சம் ஏக்கரா அதிகமாகப் பருப்பு வகைகள் சாகுபடி செய்வது என்று அரசாங்கம் தனித் திட்டம் வகுத்து செயல்பட்டு வருகிறது. பருப்பு வகைகளைக் கேட்டிருக்கிறோம். உளுத்தம் பருப்பும் கேட்டிருக்கிறோம். அது கிடைத்தால் இருக்கிற நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கப்படும்.

*Distribution of rice in Kanyakumari district*

* 163 Q.—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that adequate quantity of rice is not available in the belt areas of Kanyakumari district for distribution through foodgrains shops; and

(b) whether the Government propose to increase the allotment per individual?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.



1972 ஆகஸ்ட் 18]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த பெல்ட் பகுதியிலே கொடுக்கிற ரேஷன் மிகக் குறைவாக இருக்கிறது. நபர் ஒன்றுக்கு 700 கிராம் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை 1,400 கிராமமாக மாற்றுவதற்கு அங்குள்ள பொது மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, குறைந்த பட்சம் 1,400 கிராமமாக மாற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எந்த இடத்திலும் பெல்ட் ஏரியாவில் 700 கிராம் கொடுப்பதாக இல்லை. 1,000 கிராம் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. 16—7—1972 முதல் 1,400 கிராம் கொடுக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவில் அரிசி விலை மிக அதிகமாக இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் விநியோகத்தில் உள்ள கோளாறு என்பதுதான் கருதப்படுகிறது. ஆகவே கன்னியாகுமரி ஜில்லா மக்களுக்கு, அனைவருக்கும் கார்டு விநியோகம் செய்து, அந்தக் கார்டின் அடிப்படையில் எல்லா ஜனங்களுக்கும் அரிசி கிடைப்பதற்கான முறையில் முயற்சி எடுத்துக்கொள்ள இந்த அரசு வழி வகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கன்னியாகுமரியைப் பொறுத்த மட்டில் சர்ப்ளஸ் டிஸ்டிரிக்ட். அதாவது அதிகமாக விளையக்கூடிய மாவட்டமாகும். அரிசி விலை ஏறியிருப்பதற்குக் காரணம், விநியோகக் கோளாறு அல்ல. கள்ள வியாபாரம் தான். கள்ள வியாபாரத்தைத் தடுப்பதற்குப் பொது மக்களும், அங்கு இருக்கிற பொதுநல ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும். அதைத் தடுப்பதன் மூலம் அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியும். பெல்ட் ஏரியாவில் கார்டு கொடுக்கப்பட்டு, அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. கன்னியாகுமரி ஜில்லா பூராவும் இப்பொழுது கார்டு கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கள்ளக் கடத்தலுக்கு உடந்தையாக இருப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். கேரள அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு எல்லைப் பகுதியில் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அதிகமாகக் கள்ளக் கடத்தல் நடக்கிறது. அது சம்பந்தமாக ஏதாவது பேச்சு வார்த்தை நடக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு நாம் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கடுமையான தண்டனைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். கள்ளக் கடத்தல் பற்றித் தெரிவிப்பவர்களுக்கு ரூ. 1,000 வரையில் சன்மானம் அளிப்பதாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. கள்ளக் கடத்தலைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு எவ்வளவு மொத்தம் பிடித்துக் கொடுக்கிறார்களோ அதில் 10 சத விகிதம் பணம் இனாமாக அளிக்கப்படும் என்றும் ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் கள்ளக் கடத்தலைப் பிடிப்பதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### *Licences for powerlooms*

* 164 *Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of licences issued for running powerlooms in the State during 1970–71 and 1972?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விசைத்தறிகள் ஓட்டுவதற்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை வருட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1970—ஒன்றுமில்லை.

1971—1,917 விசைத்தறிகளுக்காக, 574 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

1972 (30-6-72 வரையில்) 622 விசைத்தறிகளுக்காக 248 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி:** மெஷின் தறிகள் சேலை, போர்வை, இன்னும் வேட்டிகள் இவைகளை அதிகப்படியாக உற்பத்தி செய்வதாலும், 20 கைத்தறி நெசவாளர்கள் வேலையை ஓரே மெஷின் செய்யலாம் என்பதாலும், நெசவாளிகள் மத்தியில் நெருக்கடி ஏற்பட்டதற்கு இப்படி அதிகப்படியான லைசென்ஸ்கள் கொடுத்தது தான் காரணமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

**திரு. சு. துரைசாமி:** நம்முடைய தமிழகத்தில் உற்பத்தியாகின்ற நூல் எல்லாம் தமிழ் நாட்டில் பயன்படுத்தாமல், பம்பாய் போன்ற வெளி மாநிலங்களுக்குச் சென்று, துணியாக நெய்யப்பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகிறது. இப்பேர்ப்பட்ட போக்கை மாற்றுவதற்கு விசைத் தறிகளை வேகமாகக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 12,500 விசைத் தறிகள் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

### சிற்பக் கலை

***165 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழகத்தில் சிற்பக் கலையினைப் பாதுகாத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கற்சிற்பக்கலையைப் பாதுகாப்பதற்காக மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கற்சிற்பக் கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கு உற்பத்திக்கூடம் ஒன்றும் இணைக்கப்பட்டு வெளியிலிருந்து வரும் தேவைகளுக்கேற்ப சிற்பங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

**திரு. என். கிட்டப்பா:** சிற்பக் கலைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பைக் கூட மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே? அதையாவது மாநில அரசு மேற்கொண்டு செயல் முறைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பழைய சிலைகளைப் பாதுகாப்பது பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றி நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மாநிலத்தினுடைய பொறுப்பில் வர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

### பட்டு உற்பத்தி

***166 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்ய 'மல்பரி' மரங்கள் வளர்க்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) நம் தமிழ்நாட்டில் தட்பவெட்ப நிலைகளை அனுசரித்து மல்பரியை செடிகளாகவே (Bush plantation) பயிர் செய்து வருகிறார்கள். பட்டு உற்பத்தியை அதிகரிக்க தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தெங்கனி கோட்டை முதலிய தாலுக்காக்களில் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை முசுக்கொட்டை அதிக அளவில் பயிரிடுவதற்காக குத்தகைக்குக் கொடுத்து வரும் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. சென்ற ஆண்டு 2,000 ஏக்கரா அளவு கொடுக்கப்பட்டு, புதியதாக 800 குடும்பங்கள் முசுக்கொட்டையை பயிரிட்டுப் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

**திரு. ஏ. எம். இராஜா :** தாளவாடிப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டு மிகவும் உயர்ந்த ரகம் என்று கூறப்படுகிறது. அந்தப் பகுதியிலே மார்கெடிங் பெசிலிடிஸ் இல்லாத காரணத்தினால், அவர்கள் உற்பத்தி செய்ததை மைசூர் மாநிலத்திற்குக் கொண்டு போய் வியாபாரம் செய்ய வேண்டிய சங்கடமான நிலை இருந்து வருகிறது. அந்த நிலைமையைப் போக்க நம்முடைய மாநிலத்திலேயே கோவை மாவட்டத்தில் மார்கெடிங் பெசிலிடிஸ் ஏற்படுத்திக் கொடுத்தால் தாளவாடியில் உயர்ந்த ரகப் பட்டு உற்பத்தியை அதிகமாகச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த அரசு இந்தத் துறையில் கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதனுடைய விலை பக்கத்தில் இருக்கிற மைசூர் மாநிலத்தோடு போட்டி போட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த மாநிலத்தில் பட்டு வளர்ச்சிக்கும், உற்பத்தி செய்வது விற்பனையாவதற்கும் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்கலாம் என்பதற்காக நம்முடைய அரசின் சார்பில் இதற்கென்று ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டு, தாளவாடி, தர்மபுரி மாவட்டத்தில் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister whether the land is given on lease for planting 'mulberry' trees and if so, whether the Government will give free assignment so that the cultivators can grow these trees well?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிரந்தரமாக நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக உள்ள பிரச்னை. சொந்தமாக்கி விட்டால் அவர்கள் அந்த நிலங்களில் மல்பரி பயிர் செய்யாவிட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்ற கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. இந்த சிக்கல் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது.

### *Chalk Crayons Unit*

* 167 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open any Chalk Crayons Unit at Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே. மாநிலத்தில் இதன் மூலப் பொருள்கள் எந்தெந்த இடங்களில் கிடைக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திருச்சி மாவட்டத்திலே அரியலூர் பகுதியிலே கிடைக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பற்றி விவரம் இல்லை.

### கங்கை-காவிரி இணைப்பு.

* 168. வினா—திரு. கே. ஏ. வகாப் :

**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கங்கை, காவிரி நதிகளை இணைக்க, ஐ.நா. நிபுணர்கள் உதவியுடன், மத்திய அரசு சர்வே நடத்துவதாக தமிழ்நாடு அரசிற்குக் குறிப்புகள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

[1972 ஆகஸ்ட் 18

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, ஐக்கிய நாடுகள் சர்வேயின் மூலம் இந்த காவிரி கங்கை இணைப்பானது நடக்கக் கூடியதென்றும், ஆனால் அதற்கு நாடாளு மன்றத்தில் சட்டம் செய்தால் தான் முடியுமென்பதும் அரசுக்குத் தெரியுமா ? இதை நாடாளு மன்றத்திற்குத் தெரியப்படுத்தி சட்டம் இயற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இன்றைய பத்திரிகை செய்திப்படிதான் சட்டச் சிக்கல் இருப்பதாகத் தெரிய வருகிறது. நம்முடைய அரசு கங்கை காவிரி இணைப்பு அவசியம் என்று வலியுறுத்தி இருக்கிறது. ஐக்கிய நாட்டுக் குழுவும் ஆதரித்து கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, கங்கை நதியைக் காவிரியுடன் இணைப்பதற்குப் பதிலாக தாமிரபரணி வரையிலும் இணைப்பதற்கு ஃபீசிபிலிடி இருக்கிறதென்று மத்திய மந்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு நம் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கங்கை காவிரி இணைப்பு பற்றி ஐக்கிய நாட்டுக் குழு தமிழகத்திற்கு வந்து பேசிய பிறகு நாம் மத்திய அரசாங்கத்திற்குச் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். அந்தக் கருத்துக்கள்—

That the proposal to pump water from a height of about 300 feet from Srisailam reservoir for carrying water to the Mettur Reservoir could be avoided by a cheaper gravity canal taking off from Srisailam Reservoir and tailing into the Cauvery above the Upper Anicut.

That it is desirable to take up the Godavari Cauvery link in the initial phase of the Grand Feeder Canal from the Godavari, as the Godavari has a large sparable surplus and as this part of the canal is more economical and can confer early benefits.

That the tentative plan suggested by U.N. experts also envisages the feasibility of carrying the waters from the Cauvery further south to the river Tambaraparani and that it would immeasurably benefit chronic drought affected areas in Ramanathapuram, Madurai, East Coimbatore and Salem districts.



1972 ஆகஸ்ட் 18]

தாமிரபரணி வரை இதைக் கொண்டு போக வேண்டுமென்ற கருத்தை அரசுத் தரப்பில் வலியுறுத்தியிருக்கிறோம். அதையும் பரிசீலிப்பதாக யூனியன் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, இப்போது காவிரியிலிருந்து நமக்குத் தண்ணீர் கிடைப்பது அவசியமாக இருக்கிறது. மேற்கொண்டு கங்கை-காவிரி இணைப்பு ஏற்பட்ட பிறகு மைசூர் அரசு அதிகமான அணைகளைக் காவிரியில் கட்டிடாமலும் தமிழ் நாட்டிற்குத் தண்ணீரை வேண்டிய அளவிற்குப் பெறவும் மத்திய சர்க்காரிடமிருந்து உறுதி மொழி பெறுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கங்கை-காவிரி இணைப்பால் இப்போது காவிரி மூலம் என்ன தண்ணீர் கிடைக்குமோ அதை விட மூன்று இன்னும் அதிகமாகக் கிடைக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, கங்கையிலிருந்து காவிரிக்குக் கொண்டு வந்து இணைப்பது என்பது பெரிய பிரச்சினை. அதற்கிடையில் நம் அரசாங்கம் திட்டவட்டமாக என்ன யோசனையை மத்திய அரசாங்கத்திற்குக் கூறி இருக்கிறது ? நம்முடைய மாநிலத்திலேயே பல்வேறு ஆறுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் இணைத்து நம்முடைய மாநிலத்திலேயே முதல் கட்டமாகச் செய்ய ஏதாவது திட்டம் வகுக்கப் பட்டுள்ளதா ?

MR. DEPUTY SPEAKER : Put the question; the preface takes such a long time.

DR. H. V. HANDE : The Chair may take a list of all the questions asked so far. I am trying to gather my points.

MR. DEPUTY SPEAKER : All right.

DR. H. V. HANDE : Have you got a programme to link all the rivers in the State? Without doing that, how can we ask them for this link?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றித்தான் பேசப் பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே ஆறுகளிலே தண்ணீர்

போதுமானதாக இல்லை. காவிரி நீர்த் தண்ணீர் முழுப் பங்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள், காவிரி-கங்கை இணைப்பு இருக்கட்டும், நம்முடைய மாநிலத்தில் இருக்கிற ஆறுகளை இணைத்து விட்டீர்களாவென்று கேட்டார்கள். காவிரி, வைகையை இணைக்க முடியாது. காவிரி, தாமிரபரணியை இணைக்க முடியாது. எல்லாவற்றையும் இணைப்பது என்பது இயலாத காரியம். என்ன யோசனை சொல்லியிருக்கிறோம் என்றால் கங்கையிலிருந்து காவிரிக்கு நீங்கள் இந்த இணைப்பை ஏற்படுத்துவதை முன்னிட்டு கங்கையிலிருந்து ஆரம்பித்துக் கொஞ்சங்கொஞ்சமாகக் காவிரி வரை செல்வதற்குப் பதிலாக, காவிரிப் பகுதியிலிருந்தும் கங்கைப் பகுதியிலிருந்தும் எதிரெதிரே ஆரம்பித்து இரண்டையும் ஓர் இடத்தில் ஒன்றாகச் சேருங்கள். என்று சொல்லியிருக்கிறோம். அதற்கேற்பவே மத்திய அரசிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இம்மாதிரி காவிரி-கங்கையை இணைக்கவேண்டுமென்றால் அதற்குரிய ஒரு சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று மத்திய அரசுக்கு நமது மாநில அரசு தெரிவித்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அப்படிச் சட்டம் இயற்ற வேண்டுமென்றால் அது பற்றி பாராளுமன்றம் நிச்சயமாக யோசிக்கும் என்று கருதுகிறேன். ஒரு வேளை இந்தக் கேள்வியின் மூலம் பாராளுமன்றத்தின் சிந்தைக்குத் தென்படக் கூடும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த பிரம்மாண்டமான திட்டத்தில் இணைப்பதற்கு நிதிவசதி போதாது என்ற கருத்தை என்ஜினீயர்கள் கூறுகிறார்களே. இது சம்பந்தமாக என்ஜினீயர்கள், நிபுணர்கள் ஆய்வு நடத்தியிருந்தார்களா, அவர்கள் ஏதாவது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களா வென்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதெல்லாம் திரு. கே. எல். ராவ் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள்.

### அவிநாசி பேருந்து நிலையம்

*** 169. வினா—திரு. நி. ஓ. பெரியசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் அவிநாசி வட்டம், அவிநாசி பேரூராட்சி மன்றப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த இட வசதியைப் பெருக்க அவிநாசி பயணிகள் விடுதியைச் சார்ந்த இடத்தில், ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு அவிநாசி பேரூராட்சி மன்றத்திடமிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### சோத்துப்புலிவாத்தலை வாய்க்கால்.

*** 170 வினா—திரு. சி. இராமநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில், சிலட்டூர் வட்டார ஏரிகளுக்குப் பயன்படும் சோத்துப்புலிவாத்தலை திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அறந்தாங்கி வட்டத்தில் சிலட்டூர் ஏரிக்குப் பயன்படும் சோத்துப்புலிவாத்தலை வாய்க்காலைச் சீரமைக்க வேண்டுமென்றும் ஒரு கோரிக்கை சம்பந்தப்பட்ட நிலச்சுவான்தாரர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. இக் கோரிக்கை தலை அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

## வேட்டுவபாளையம் குட்டை

*171. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராமம் வேட்டுவபாளையம் குட்டையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) மங்கலம் கிராமம் நில அளவை எண் 220-ல் உள்ள வேட்டுவபாளையம் குட்டையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் வரை படங்களும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, இது ஏறக்குறைய இரண்டாண்டு காலமாக நடைபெறாமல் இருக்கிறது. அரசு இதில் விரைவாக நடவடிக்கை எடுக்க உத்திரவு பிறப்பிக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, திட்ட மதிப்பீடு 66 ஆயிரம் ரூபாய். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுக்கு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அவருடைய ஒப்புதல் கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட குட்டைகள், ஏரிகள் இவைகளைத் திட்டமிட்டு செப்பனிட எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. பரிசீலிக்க எத்தனை ஆண்டுகள், துவக்கிட எத்தனை ஆண்டுகள் என்ற விதி முறைகள் இருக்கின்றனவா ? அப்படி இல்லை யென்றால் அவைகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.



## Ayigoundanpalayam pond

*172. Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for not repairing the Ayigoundanpalayam pond in Uthukuli firka, Erode, even though it has breached three times?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அயிகொண்டான் பாளையம் குட்டையில் இதுவரை உடைப்பு ஏதும் ஏற்படவில்லை.

## பாண்டியன் போக்குவரத்துக் கழகம்

*173. வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கூடுதல் பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்புகள் தயாரித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பத்து புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, மதுரை நகரத்தில் இனிமேல் புதிதாக வேறு யாருக்கும் அனுமதி கொடுக்காமல் புதிதாக, அதிகமாக பஸ்களை யெல்லாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மூலமாக விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கூடுமான வரையில் மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் கூடுதலான வழித்தடங்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கார்ப்பரேஷனில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மதுரை நகரத்தில் ஓடக்கூடிய பஸ்கள் பூராவும் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் உடைமையாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

[1972 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே. டி.வி.எஸ்.-இலிருந்து 340 பஸ்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு மேலும் 40 பஸ்கள் அளவிற்குக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். மதுரை நகரில் நகர் பஸ் முறையையும் எடுக்க இப்போது ஒன்றும் உத்தேசமில்லை. ஏனென்றால் விரைவிலே எல்லாப் பேருந்துகளையும் மேற்கொள்ளக் கூடிய திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது வரவிருக்கிற காரணத்தினால் மதுரை நகருக்காகத் தனியாக ஒரு திட்டம் அவசியமில்லையென்று கருதுகிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இருக்கிற மதுரை மாவட்டத்திலும் பக்கத்தில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திலும் புதிதாக வருகிற வழித்தடங்களையெல்லாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அப்படி ஒன்றும் உத்தேசம் இப்போதில்லை. ஆனால் படிப்படியாக நாட்டுடைமையாக்குவது செயல் முறையில் இருக்கிற காரணத்தினால் புதிய வழித்தடங்களைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

### லாரிகளுக்குச் சீரான கட்டணம்

* 174. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரிகளில் சாமான்கள் ஏற்றிச் செல்வதற்கான கட்டணங்கள் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இருக்குமாறு ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, லாரிகளில் சாமான்களை ஏற்றிச்செல்வதற்கு கட்டணமாக டன் ஒன்றுக்கு சென்னையிலிருந்து மாயூரத்திற்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரையிலும், அதைப்போல் கும்பகோணத்திற்கும் லாரிகளுக்குத் தக்கபடியும் இடங்களுக்கு ஏற்றபடியும், நேரத்திற்கு ஏற்றபடியும் வசூலிக்கிறார்கள். இதை மாற்றியமைத்து ஒரே சீராகக் கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?



1972 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில் எங்கெங்கே இடங்களுக்குச் செல்கின்றன, என்னென்ன பொருள்களை ஏற்றிச் செல்கின்றன என்பதைப் பொறுத்து பல்வேறு விகிதங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே, ஒரே சீரான கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பது மிகவும் கடினமான காரியம்.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, பெரிய பஸ் கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்கி வருகிறோம். இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கி விடுவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த லாரிகளையும்—முதலில் பெரிய லாரி கம்பெனிகளையும் பின்பு படிப்படியாக சிறிய லாரி கம்பெனிகளையும் தேசியமயமாக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பஸ்களையே இன்னும் முழுவதுமாகத் தேசியமயமாக்கவில்லை. முதலில் இந்த வேலை முடிந்த பின்னால் லாரிகளைத் தேசியமயமாக்குவது பற்றி யோசிக்கலாம்.

### *Murugan temple in Vadakku Tiruchitrambalam*

*175 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a number of idols of the Muruga Temple at Vadakku Tiruchitrambalam village near Madurantakam were damaged in May 1972; and

(b) If so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகரின் வடபகுதியில் உள்ள வடக்கு திருச்சிற்றம்பலம் ஸ்ரீ ஆறுமுகர் ஆலயத்திலுள்ள நவக்கிரக சிலைகள் 29-4-1972 தேதி மாலை மதுராந்தகம் குப்புசாமி என்பவரால் குடிவெறியில் கற்களால் தாக்கப்பட்டுள்ளது. அந்நபர் மீது இ.பி.கோ. 295 மற்றும் 297 பிரிவுகளின்

கீழ் வழக்குத் தொடர்ந்து நிலுவையில் உள்ளது. மேற்படி ஆலயத்திற்குப் புதிதாக நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக இதுவரை ரூ. 500 நன்கொடை சேர்ந்துள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, குடிவெறியன் கோவில் சிலைகளை சேதப்படுத்தும்வரை கோவிலில் இருந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள்? அப்படிப்பட்ட அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா? மேலும் இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அறநிலையத் துறை என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறநிலையத்துறை அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, சேதமுற்ற கோயில் அறநிலையத்துறையைச் சேர்ந்தது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் வினாவின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வினா உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிக்கைகள் அளித்தல்.

### (அ) கடையநல்லூர் இரயில் நிலையத்தில் இரு இரயில் வண்டிகள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்து குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவையின் 82-வது விதியின்கீழ் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையொன்றை அவைக்கு அளிப்பார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 16-8-72 புதன்கிழமை அதிகாலை 2 மணி அளவில் தென் பிராந்திய ரயில்வேயில் விருதுநகர்-தென்காசி மீட்டர்கேஜ் இருப்புப் பாதையிலுள்ள கடையநல்லூர் இரயில் நிலையத்தில் திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக்கொண்டன என்ற தகவலைக் கேட்டு வருத்தத்தில் ஆழ்ந்துள்ளோம். இந்த விபத்தின் காரணமாக 6 பேர் கடுமையான காயமடைந்தனர்; 4 பேர் சிறு காயமடைந்



தனர். மேலும் 41 பயணிகளுக்கு இரயில் நிலையத்திலும் 5 பேருக்கு உள்ளூர் அரசு மருத்துவமனையிலும் முதலுதவி அளிக்கப்பட்டது. கடுமையான காயமடைந்தவர்கள், சிறு காயமடைந்தவர்கள் அனைவரும் கடையநல்லூரிலுள்ள அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், மேற்கொண்டும் சிகிச்சை அளிப்பதற்காகத் திருநெல்வேலி அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிகிச்சைக்குப் பின் இப்போது இருவர் மருத்துவ மனையிலிருந்து திரும்பினர்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை சூபரண்டுடனும், மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு தேவையான உதவியை நல்கிட அதிகாரிகளுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தார். அவருடைய உத்தரவின் பேரில். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து 30 பேர்கள் கொண்ட மருத்துவக் குழு ஒன்று இடத்திற்கு விரைந்து சென்று காயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது. காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்த்து, அவர்களுக்கு முதல் அமைச்சரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். விபத்து ஏற்பட்டதால் பயணம் தடைப்பட்ட பயணிகளைக் காவலர் வண்டிகளில் தென்காசி ரயில்வே நிலையத்திற்கு அனுப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விபத்துப் பற்றித் தகவல் கிடைத்தவுடன், மருத்துவர்களுடன் கூடிய நிவாரணச் சிறப்பு இரயில் வண்டிகள் விபத்து நடந்த இடத்திற்கு மதுரை, செங்கோட்டை, கொல்லம் ஆகிய இடங்களிலிருந்து விரைந்து அனுப்பி வைக்கப்பட்டன. உற்றுழிச் சிறப்பு இரயில் வண்டிகள் (பிரேக் டவுன் ஸ்பெஷல்ஸ்) மதுரையிலிருந்தும் செங்கோட்டையிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டன. தென் பிராந்திய இரயில்வேயின் மூத்த அதிகாரிகள் சென்னையிலுள்ள தலைமை இடத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு விமானத்தில் விரைந்தனர். மதுரை இரயில்வே கோட்டக் கண்காணிப்பாளரும், மதுரை கோட்டத்திலுள்ள கோட்ட அதிகாரிகளும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். விபத்தில் காயமடைந்த உள்ளூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட 10 பேர் ஒவ்வொருவருக்கும் இரயில்வே அதிகாரிகள் கருணைக் கொடையாக ரூ. 200 வழங்கினர்.

கீழே பெயர் குறிப்பிட்டுள்ளவர்கள் கடையநல்லூர், திருநெல்வேலி மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் :—

**கடையநல்லூர் மருத்துவ மனை :**

1. திரு. ஆசிர்வாதம், பண்டகக் கிடங்குக் காப்பாளர், இரயில்வே, கொல்லம்.

2. திரு. சண்முகம், எரியூட்டுபவர் (பயர்மென்), இரயில்வே, மதுரை.

3. திரு. முத்தையா, பயணி.

**திருநெல்வேலி மருத்துவ மனை.**

1. திரு. பி. பெருமாள், 109-ஆம் எண், இரயில் வண்டியின் வலவர்.

2. திரு. சிவசங்கரன், அடையாள விளக்கு காட்டுபவர், இரயில்வே, திருநெல்வேலி.

3. திரு. ஸ்டீபென்சன், 133-ஆம் எண், இரயில் வண்டியின் வலவர்.

4. திரு. காசிம், இ.எல்.ஆர். காங்கியான், இரயில்வே.

விபத்துக்குள்ளான இரண்டு இரயில் வண்டிகளிலும் பயணம் செய்தவர்களை அவரவர்கள் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்களூர் இரயில்வே உதவி ஆணையாளர் இந்த இரயில் விபத்து குறித்து செங்கோட்டையில் 18-8-1972 பகல் 11 மணி முதல் விசாரணை நடத்துகிறார்.

## (3) 1972-73 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை— அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1972-73-ம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை யொன்றும் இம் மன்றத்தின்



முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை எட்டு கோடியே தொண்ணூற்றேழு இலட்சம் ரூபாய்களாகும். இதில் ஆறு கோடியே முப்பத்து மூன்று இலட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கின்கீழ் வருவதாகும். எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். இக் கோரிக்கைகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கென நாலரை கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின்கீழ் வரும் முக்கியமான செலவினங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

அரசு ஊழியர்களில் மாத ஊதியம் ரூ. 300-க்குக் குறைவாகப் பெறுபவர்கள் பெற்று வந்த அகவிலைப் படியை ரூ. 15-லிருந்து 25 ஆகவும், 300-க்கு அதிகமாகப் பெறுபவர்கள் பெற்றுவந்த அகவிலைப்படியை ரூ. 30-லிருந்து 40 ஆகவும் அரசு உயர்த்தியுள்ளது. இதற்கு ஆண்டுதோறும் ஆறு கோடி ரூபாய் கூடுதலாகத் தொடர் செலவாகும். தொடக்கச் செலவுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ. 1.5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு, "மானியம் 33" இன் கீழ் அடையாள நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இச் செலவுக்கு அந்தந்த மானியங்களின் மிச்சங்களிலிருந்து எடுத்துச் செலவிடப்படும்; அல்லது அடுத்து வரும் ஒரு கூட்டத் தொடரில், தொடர்புடைய மானியங்களின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்படும். இதுவன்றி "மானியம் 33" இன்கீழ் நாம் ரூ. 62 இலட்சம் ஒதுக்கியுள்ளோம். அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அரசு ஆசிரியர்களல்லாத பிற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படும் குறைந்த அளவு ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ. 40 ஆக உயர்த்தியதால் ஏற்பட்ட செலவும் இதில் அடங்கும். 1960-ம் ஆண்டு ஜூலை முதல் நாளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும், கீழ்நிலைப் பணியைச் சேர்ந்த முன்னாள் நகராட்சிப் பணியாளர்களும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியங்களால் பயன் பெறுவர். முன்னர் குறிப்பிட்டதுபோல், அரசுப் பணியாளர் அனைவருக்கும் அகவிலைப் படியை பத்து ரூபாய் வீதம் உயர்த்தி வழங்கப்பட்டதை ஒட்டி தற்போது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், இனி வருங்காலத்தில் ஓய்வூதியம் பெற இருப்பவர்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 5 அகவிலைப் படியாகக் கொடுக்க அரசு அனுமதியளித்துள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஆகஸ்ட் 18

வேலையின்மைத் துயரைத் தணிக்கும் பொருட்டு ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ. 433 இலட்சம் செலவில் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இதில் ரூ. 3 கோடி செலவாகும் கிராமச் சாலைத் திட்டமும் அடங்கும். இதன் மூலம் 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுடைய கிராமங்கள் அனைத்திற்கும் தார் சாலைகள் வடிவில் எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் பயிற்சியேதும் பெற்றிராத 15,000 பேர்களுக்கும், பொறியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் அடங்கிய மேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வேலையளிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக "மானியம் 27" இல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில், இளைஞர் அணிக்குக் கூடுதலாக, 1,450 ஆண் தொண்டர்களையும் 150 பெண் தொண்டர்களையும் சேர்ப்பதும் அடங்கும். இதற்கு "மானியம் 33"இல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும் மொத்தத் தொகையில் சுமார் ரூ. 2 கோடி மத்திய அரசால் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கீழ்மட்டத்திலிருந்தே திட்டமிடும் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே திட்டமிடும் பணி பயனுள்ள வகையில் உருவாக முடியும் என்பதை முழுமையாக உணர்ந்து, மாநிலத் திட்டக் குழுவின் ஒரு பகுதியாக, மாவட்ட திட்டப் பிரிவுகளை நாம் அமைத்துள்ளோம். இதற்காகும் செலவுக்காக "மானியம் 8"இன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு வட ஆற்காடு மாவட்டத்திலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சிறப்புக் காப்பு மறுவாழ்வு இல்லங்கள் இரண்டினை நிறுவ அரசு அனுமதித்துள்ளது. இதற்கு "மானியம் 42"இன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டுவந்த இந்த அரசு, இந்த ஆண்டில் விழி இழந்த ஏழைகட்குக் கண்ணொளி வழங்கி வாழ்வில் ஒளிகாட்ட, மாவட்டங்களில் இலவச கண்ணொளி வழங்கும் திட்ட முகாம்களை நடத்தி வருகின்றது. இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதற்காகத்



1972 ஆகஸ்ட் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

தேவையான பணியாளர்களுடனும் சாதனங்களுடனும் இயங்கும் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஐந்தினை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ. 71.5 இலட்சம் தொடரா இனச் செலவும் ரூ. 8.6 இலட்சம் தொடர் இனச் செலவும் ஆகும். இது குறித்து தொடக்கத்தில் ஆகும் ரூ. 45.4 இலட்சம் செலவிற்கு "மானியம் 14" வகை செய்கிறது. இத் தொகை நாளடைவில் கண் ஒளி வழங்கும் திட்ட நிதியிலிருந்து நேர் செய்யப்படும்.

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாகிய ஊட்டச் சத்துணவுச் சிறப்புத் திட்டத்தை, சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் வெளியூர்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 3 வயதுக்குட்பட்ட சிறார்கள் மட்டுமே இத் திட்டத்தினால் பயனடைந்தனர். எனினும் இந்த ஆண்டு, கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் 3 முதல் 6 வயது வரை உள்ள சிறார்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த 2,10,000 சிறார்களும், 40,000 தாய்மார்களும் இத் திட்டத்தின்கீழ் பயனடைவர். இத் திட்டத்திற்கு ரூ. 83 இலட்சம் செலவாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 78.7 இலட்சம் செலவிலான மீனவள மேம்பாட்டுத் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவில் 75 சத விகிதத்தை வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் வழங்குகிறது. எஞ்சிய 25 சத விகிதத்தை அரசு ஏற்கும். இத் திட்டத்திற்கு, அரசு தொகை வழங்க "17-வது மானியமும்" "[illegible]9-வது மானியமும்" வகை செய்கின்றன.

தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமையாக்குதல்) சட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு நிலங்களை உடைமையாக்க முடிந்தது என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அறிவர். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும்போது எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களுக்காக இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் ரூ. 15.1 இலட்சம் செலவிற்கு "36-வது மானியம்" வகை செய்கிறது.

மத்திய நிலவள வங்கி வெளியிட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களுக்குத் தொகை அளிக்கும் வகையில் ஒரு கோடி ரூபாயைக் கூடுதலாக அரசு முதலீடு செய்துள்ளது. வேளாண்மை

மறுநிதி உதவிக் கழகமும் உலக வங்கியும் அளித்துவரும் நிதி உதவியைக் கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மத்திய நிலவள வங்கி பெருமளவில் முனைப்பாகச் செயல்படுத்தி வரும் இச்சமயத்தில், இப்போது செய்துள்ள முதலீடானது, வங்கி இன்னும் செவ்விய முறையில் செயல்படுவதற்குப் பேருதவியாக இருக்கும்.

வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்றத்தின் முன் வைத்து உரையாற்றுங்கால், நான் அறிவித்தபடி, தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்திற்கென தொடக்கத்தில் 25 இலட்சம் ரூபாய் அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ் நாடு திரைப்பட அரங்குக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாக 10 இலட்சம் ரூபாயையும் அரசு வழங்கியுள்ளது. இத்துணை மதிப்பீட்டில் இவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

துணை மதிப்பீட்டில் சேர்த்துள்ள செலவினங்களின் முக்கியக் கூறுகள் பற்றி நான் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் இந்த இனங்களைப் பற்றிய விரிவான விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீடுகளில் சேர்ந்துள்ள ஏனைய திட்டங்கள் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்றுமில்லை எனக் கூறி, 1972-73 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

## (2) அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

## (ஆ) சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்த தனி நபர் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் பற்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராயத் தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் அக்குழு சமர்ப்பித்த அறிக்கையினையும், பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒருசேர ஆய்வு செய்தது. அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன்.





பட்டதாரி ஆசிரியர்களது சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 ஆக மாற்றி உயர்த்தப்படும். இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்கு பட்டப்படிப்புத் தகுதியாக அமைந்துள்ளன, முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் ஆகியோர் சம்பள விகிதங்களும் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 என மாற்றி உயர்த்தப்படும். இந்த உயர்வினால், பட்டதாரி ஆசிரியர் 25,000 உட்பட 31,000 பேர் பயன் பெறுவர்.

கால்நடை உதவி மருத்துவர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனாக ஏறத்தாழ 900 பேர் பயனடைவர்.

இளம் பொறியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் விளைவாக ஏறத்தாழ 1,900 பேர் பயனடைவர்.

இளநிலை உதவியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 200-5-250-10-300 என்பதிலிருந்து ரூ 210-5-245-10-325 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் அடைவர்.

தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250-10-300-15-450 என மாற்றி உயர்த்தப்படும். இதனால் ஏறத்தாழ 13,000 பேர் பயன் பெறுவர்.

தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 350-15-500-20-600 என்பதிலிருந்து ரூ. 350-15-425-25-600 என மாற்றியமைக்கப்படும். இதன் பயனை ஏறத்தாழ 1,100 பேர் பயன் அடைவர்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஆகஸ்ட் 18

வருவாய்த் துறையின் கீழ் வரும் கிராம அதிகாரிகள் ஊழியர்கள் மதிப்பூதியம் (Honororium) மாதமொன்றுக்கு ரூ. 7 விதம் உயர்த்தப்படும். மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

இடைநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 225-5-250-10-350 என்பதிலிருந்து ரூ. 250-10-400 என மாற்றி உயர்த்தப்படும். இத்துடன் தேர்வுநிலை ஆசிரியர்களிடமிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக் காட்ட சிறப்பூதியமாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும். இதனால் 4,900 தலைமை ஆசிரியர்கள் பலனடைவர்.

சம்பள விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த, மற்ற பதவிகளில், புதிய விகிதங்களில் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும். இதன்படி, பழைய பணிக்காலத்திற்கு இரண்டு இரண்டு, மூன்று, மூன்று ஆண்டுகள் பணிக்கு ஒரு உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும். கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இரண்டாண்டுக்கும் ஒரு உயர்வு எனக் கொண்டு ஐந்து உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள் மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

இச் சலுகைகள் வரும் செப்டம்பர்த் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—1970 அடிப்படைத் தேதியாகக் கொள்ளப்படும்.

தனிநபர்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச் சலுகைகளின் விளைவாக தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக் கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச் சலுகைகளை அனைவரும் வரவேற்றிடுவீர் என்றும் இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகின்றேன்.





## (4) அறிவிப்புகள்

### (அ) பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் விரைவில் வெளியிடப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

நமது சட்டப்பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் அச்சிடப்படுவதில் அதிகக் கால தாமதம் ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி குறிப்பிட்டு வந்ததையொட்டி, நடவடிக்கைக் குறிப்புகளை விரைவில் அச்சிட்டு வெளியிடுவதன் அவசியத்தை நான், அச்சுத்துறைப் பொறுப்பை வகிக்கும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, நடவடிக்கைக் குறிப்புகளைத் தாமதமின்றி உடனுக்குடன் வெளியிட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியதன் விளைவாக, கடந்த கூட்டத் தொடரின் கடைசி நாளான 6—4—1972 அன்றைய நடவடிக்கைக் குறிப்புகள் வரை அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைப் பேரவைக்குத் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், குறிப்பாக அச்சுத்துறை இயக்குநர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் துறைச் செயலாளர், மற்றும் அதிகாரிகளுக்கும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நடவடிக்கைக் குறிப்புகள் தொடர்ந்து விரைவாக வெளியிடப்பட வேண்டிய நடவடிக்கையினை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து எடுத்துக் கொள்ளுவார்கள் என்கின்ற நம்பிக்கையினையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## (5). அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, சட்டப்பேரவை சட்ட (முன்வடிவு எண் 28/72).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை @ (சட்டப் பேரவையின் 1972 ஆம் ஆண்டு 27 எண் சட்ட முன்வடிவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1948), தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1963) ஆகியவற்றின் விதித்துறைகளின்கீழ், இழப்பிட்டுத் தொகை அல்லது தஸ்திக் படி கணக்கிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூறுகளில் தண்ணீர்த் தீர்வையும் ஒன்றாகும். தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1963) 1962 ஜூலை 1-ஆம் நாளன்று செயலுக்கு வந்த பின்னர், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின்கீழ் விதிக்கத்தக்க கூடுதல் தண்ணீர்த் தீர்வையானது பல்வேறு எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் கிழ் செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகை அல்லது தஸ்திக் படியைக் கணக்கிடும் காரியத்திற்காகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தது. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின்கீழ் விதிக்கத்தக்க கூடுதல் தண்ணீர்த் தீர்வையானது, பல்வேறு எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் கிழ் செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகை தஸ்திக் படியைக் கணக்கிடுவதற்காகக் கணக்கில் எடுத்துச் கொள்ளப்படக் கூடாது என்பது அரசின் நோக்கமாகும். எனவே தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது

@ 10—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



சட்டத்தின் 2, 17-வது பிரிவுகளைத் திருத்தவும், தொடர்புள்ள கால அளவுகள் அனைத்திற்கும் பொருந்தும் வகையில் இத் திருத்தங்கள் முன்னர் ஒரு நாளிலிருந்து செயலுக்கு வருமாறு செய்யவும் அரசு முடிவுசெய்துள்ளது.

தமிழ்நாடு 1864-ஆம் ஆண்டு வரி வசூலிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1864) தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு 16-வது சட்டத்தின் மூலம் சென்னை மாநகருக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ரத்து செய்யப்பட்டுள்ள '1851-ஆம் ஆண்டு சென்னை மாநகர் நில்வரிச் சட்டம்', '1857-ஆம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டம்' ஆகிய சொற்றொடர்களை நீக்கி தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 10 வது பிரிவைத் தகுந்தவாறு திருத்த இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

சட்டத்தின் விதித்துறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் எழக்கூடிய இடர்பாடு எதனையும் நீக்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்க தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 15-வது பிரிவு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. சட்டத்தின் விதித்துறைகளை மாற்றுவதன் மூலம் ஐயப்பாட்டினை அல்லது இடர்ப்பாட்டினை நீக்குவதற்கான அதிகாரமானது சட்டம் இயற்றுவதற்கான அதிகாரமன்றத்தின் அதிகாரத்தைச் செலுத்துவதாகும், என்றும், ஆகவே இந்த அதிகாரம் நிர்வாக அதிகார மன்றத்திற்குப் பிரித்துக் கொடுக்கப்பட முடியாது என்றும் தலைமை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பில் கூறியுள்ளது. எனவே, இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மேற்படி சட்டத்தின் 15-வது பிரிவை நீக்கிவிட்டு தொடர்பான அவசியமான திருத்தங்களைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்கண்ட நோக்கங்களை எய்த விழைகிறது.

இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு இம் மாமன்றத்தை நான் வேண்டுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த மசோதா சம்பந்தமாக ஓரிரு கருத்துக்களை இந்த மன்றத்திலே வைப்பதற்கு முற்படுகிறேன்.

பொதுவாக, இந்த வரி, செஸ் எப்படி விதிக்கப்பட வேண்டும், அதன்மூலம் என்ன என்ன பிரிவுகள் சட்டத்திலே அமைய வேண்டுமென்ற கருத்துக்களை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையிலே தெளிவாக எடுத்துக்கூறி இருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு சட்டங்களின், அமைப்பின் காரணமாக இந்த செஸ் வரி விதிக்கப்பட வேண்டுமென்ற முறையிலே இது அமைய வேண்டும். அதற்கு என்ன முறையிலே அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கள் எல்லாம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக, சட்டசபைக்கு உரித்தான அதிகாரங்கள் அதிலே வரக்கூடிய சங்கடங்களையும் கோளாறுகளையும் நீக்குவதற்காக டெலிகேடட் லெஜிஸ்லேஷன் என்ற முறையிலே அதை மாற்றி அமைப்பதற்கு நமக்கு உரிமையில்லையென்ற சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையிலே இந்த சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. வரி விதிப்பதும் இன்று கூடிக் கொண்டே வருகிறது. விவசாயிகள் பகுதியிலே வரி விதிப்பது இன்னும் அதிகமாக வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சொல்லிக் கொண்டே வருகிறது. இந்தக் கருத்துக்கு எவ்வளவு வலிவு இருக்கிறது. இந்தக் கருத்தை ஆதரிக்க வேண்டுமா வேண்டாமா என்பதையெல்லாம் நாம் சற்று நிதானமாக சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இந்த செஸ் வரி விதிப்பின் காரணமாக இருக்கிற சட்ட சிக்கலை அகற்றுவதற்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் விவசாயிகள் இன்று நலிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பண்டங்களுக்கு விலை குறைவாக இருக்கிறது என்ற கருத்தினை நான் இங்கு கூற விரும்புகிறேன். அண்மையில் நடந்த விவசாயிகள் போராட்டங்களில் கூட, பருத்தி போன்ற விவசாயப் பண்டங்களின் விலை மிகவும் குறைவாக இருக்கிறது என்று பல விவசாயச் சங்கங்களிலிருந்து கூறினார்கள். அவர்களுக்குப் பல பாதுகாப்புகள் வேண்டும், பயிர் பாதுகாப்பு வேண்டும். சாட்டில் இன்ஷ்யூரன்ஸ் வேண்டுமென்ற கருத்துக்கள் எல்லாம் விவசாயிகள் சார்பாகக் கூறப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் வரவேற்கத் தகுந்த அம்சம் என்று கருதுகிறேன். நாம் சட்டங்களைத் திருத்துகின்ற முறையிலே பல சங்கடங்களுக்கு ஆளாக்கப்





பட்டு இருந்தாலும் இந்த விவசாயிகளுடைய துயரத்தை அகற்றுவதற்கு முன்னோடி திட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்பதையும் நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எஸ்டேட் அபாலிஷன் சட்டப்படியும், மற்ற முறையிலேயும் இந்தத் தண்ணீர்த் தீர்வையை எப்படி வசூலிக்க வேண்டுமென்ற கருத்தையெல்லாம் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்னொரு சட்டத்தையும் அடுத்த பில்லிலே உருவாக்க இருக்கிறார்கள். அதுவும் இந்த பில்லுக்கு அடுத்தபடியாக இப்பொழுது விவாதத்திற்கு வருகிறது. இந்த சட்டத்தை அமுல் செய்கின்ற முறையைப் பார்க்கின்ற பொழுது இது கொஞ்சம் ஆத்திரப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கின்றதோ என்று நாங்களெல்லாம் ஐயப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. ஆதலால் இந்த ரயத்துவாரி முறை அமுலாகிற காரணத்தால் இந்த சட்டத்திலே இருக்கிற சிக்கலைப் போக்குவதற்கு இது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலும் விவசாயிகளுக்கு இன்னும் அதிகமான சலுகைகள் தேவைப்படுகின்றன என்ற காரணத்தினாலும் அவர்களுக்கு இருக்கிற துன்பங்களை நீக்குவதற்கு இந்த அரசாங்கமும் இந்த மன்றமும் முனைந்து நிற்க வேண்டுமென்ற கருத்தினை இங்கு கூறுகிறேன்.

இந்த ரூல்-மேக்கிங் பவர்-ஐ எல்லாம் எந்த முறையிலே டெலிகேட் செய்ய வேண்டுமென்பதையெல்லாம் நாம் ஆராயவேண்டும். ரூல்-மேக்கிங் பவர்-ஐ எல்லாம் டெலிகேட் செய்தால் . . . Delegated authority cannot be delegated furthe என்று விதி இருக்கிறது. Delegatus non-delegari என்ற அமைப்பும் இருக்கிறது. ஆதலால், இந்த சட்டத்திற்கு விதி முறைகள் வகுக்கின்ற நேரத்திலே, எந்த விதமான சிக்கலும் ஏற்படாத வகையில் வழி வகைகள் செய்ய வேண்டுமென்று கூறி இந்நேரோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஏதோ புதிய வரி போடப்போவதாக, காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசியதாக நான் கருதுகிறேன். இது புதிய வரி அல்ல— நாம் புதிய வரி போடவில்லை 1963-ம் ஆண்டு போடப்பட்ட தண்ணீர்த் தீர்வை, கூடுதல் நிலவரிதான் இது. ஏற்கனவே போடப்பட்ட ஒன்று இது. அதைப் பின்னர் சில சட்டங்கள்மூலம் நிலத்திற்கு இழப்பீடு கொடுக்கின்றபொழுது

Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, Minor Inams Act,
இப்படி பல்வேறு சட்டங்களின்கீழ் அந்த நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கும்பொழுது தண்ணீர்த் தீர்வை சேர்த்து கணக்கிடப்பட வேண்டுமென்று இருந்தது. ஆனால், 1963-ம் ஆண்டு போடப்பட்ட இந்த புதிய தீர்வையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அப்பொழுதே ஒரு ஆணை அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டது. அதற்கு சட்ட வடிவம் கொடுக்கத்தான் இது கொண்டு வரப்படுகிறது.

டெலிகேடட் லெஜிஸ்லேஷன் பற்றி குறிப்பிட்டார்கள். ஏதோ அதிகமான வரம்பை எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். இதை உயர்நீதிமன்றம் நீக்கிவிட்டது, தவறு என்று சொல்லிவிட்ட ஒன்றை இதன் மூலமாக மாற்றங்கள் செய்து இருக்கிறோமே தவிர, இதில் வேறு ஒன்றும் கிடையாது. எனவே, இந்தச் சட்டத்தின்மூலம் புதிய வரி ஒன்றும் கிடையாது. ஏற்கனவே, 1963-ம் ஆண்டு போட்ட கூடுதல் வரியை, நிலத்திற்கு காம்பன்சேஷன் கொடுக்கும்பொழுது சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு சட்ட வடிவம் கொடுக்கத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. எனவே, இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 27 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 27 of 1972) be passed.

The motion was put and carried and the Bill was passed into law.



(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி-கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1963), வருவாய்க் கணக்குகளில் நன்செய், புன்செய் மானவாரி நிலங்களெனப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்காக, சந்தர்ப்பத்திற்கேற்ப, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு வகை செய்கிறது. ஆயினும் வரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்களுக்குக் கூடுதல் நிலவரி விதிப்பதற்கும், புறம்போக்கு நிலங்கள், வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் (புன்செய் அல்லது மானவாரி), விதிக்கப்படாத தரிசு நிலங்கள் ஆகியவற்றிற்குக் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கும் மேற்படி சட்டம் வகை செய்யவில்லை. மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், நன்செய் நிலங்கள், பாசன புன்செய் நிலங்கள் ஆகியவற்றின் உடைமையாளர்கள் முறையே கூடுதல் நில வரியையும் கூடுதல் தண்ணீர்த் தீர்வையையும் செலுத்துகையில், மேற்குறிப்பிட்ட நிலங்களை, மேற்படி சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து விட்டுவைப்பது முரணானதாகும் என்று கருதப்படுகிறது மேற்சொன்ன வகை நிலங்களை மேற்படி சட்டத்தின் செயல்வரம்பிற்குள் கொண்டுவரும் பொருட்டு மேற்படி சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 2 (11) பிரிவில், "நன்செய் நிலம்", "ஒருபோக நன்செய் நிலம்", "வரி இணக்கம் செய்துகொள்ளப்பட்ட இருபோக நன்செய் நிலம்", அல்லது "இருபோக நன்செய் நிலம்" என்ற சொற்களுக்கு, அரசின் வருவாய்க் கணக்குகளில், சந்தர்ப்பத்திற்கேற்ப நன்செய் ஆக, ஒருபோக நன்செய்யாக, வரி

---

@ 10-8-1972 தேசிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 18

இணக்கம் செய்து கொள்ளப்பட்ட நன்செய்யாக அல்லது இருபோக நன்செய்யாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களெனப் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. வரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்கள் மேற்படி பிரிவின் செயல்வரம்பிற்குள் வரவில்லை. எனவே, மேற்படி சட்டத்தின் 3-வது, 4-வது பிரிவுகளின்கீழ் கூடுதல் நிலவரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்களை ஒருபோக நன்செய் நிலங்களாக அல்லது இருபோக நன்செய் நிலங்களாகக் கருதும் வகையில் இப்பிரிவைத் திருத்துவதெனக் கருதப்படுகிறது.

அரசின் வருவாய்க் கணக்குகளில் புன்செய்யாக அல்லது மானவாரியாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்குக் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவு வகை செய்கிறது. அதாவது, அப்பிரிவின்படி, முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புப் பாசன வாயில் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் குறித்து 75 சதவீதமும், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வகுப்பு பாசன வாயில் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் குறித்து 37½ சதவீதமும் தண்ணீர்த் தீர்வை உயர்த்தப்படும் புறம்போக்கு நிலங்கள், வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் (புன்செய் அல்லது மானவாரி) அல்லது வரி விதிக்கப்படாத தரிசு நிலங்கள், அனைத்தையும் ஒரே வகை நிலங்களாகக் கருதி, இந்த நிலங்கள் மீது கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிக்கும்பொருட்டு, இந்நிலங்களை இப்பிரிவின் செயல் வரம்பிற்குள் கொண்டுவருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சட்டத்தின் 5 (1) பிரிவு நிலவரி, தண்ணீர் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை ஆகியவற்றின் மொத்தத் தொகை, ஒருபோக பயிர் மட்டும் விளைவிக்கப்படும் நிலங்களுக்கும், ஒரு பயிருக்கு மேல் விளைவிக்கப்படும் நேர்வில் முதல்போகப் பயிருக்கும், விளைச்சல் ஆண்டு ஒன்றிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படக்கூடாது என்று வகை செய்கிறது. புறம்போக்கு நிலங்களுக்கும் வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்களுக்கும் (புன்செய் அல்லது மானவாரி), வரி விதிக்கப்படாத தரிசு நிலங்களுக்கும் உயர்ந்த அளவு வரம்பு வரையறுக்க வேண்டிய தேவையில்லை என்று கருதப்படுகிறது. ஏனென்றால், இந்த நிலங்கள் ஆக்கிரமிப்பின்கீழ் உள்ளன. இதா காரியத்துக்கென, மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவிற்கண்ட வரம்பு நிபந்தனைகளிலிருந்து இந்த நிலங்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான்,



1972 ஆகஸ்ட் 18] [திரு ப. உ. சண்முகம்]

இப்பிரிவின் முக்கிய விதித்துறை அது காரணமாகவே இந்த நேர்வுகளில் செல்திறன் உள்ளதாகும். மேற்சொன்ன நோக்கங்களை எய்த இந்தச் சட்ட வரைவு விழைகிறது.

இப்பேரவை இதனை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**திரு ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவில் இன்றையத்தினம் நிலங்களுக்குத் தீர்வை விதிக்கின்ற ஓர் அதிகாரத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தண்ணீர் தீர்வை விதிக்கிறபோது ஒருபோகம், இரண்டுபோகம் என்று சொல்கிற நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. நம் ராஜ்யத்தில் புறம்போக்கு நிலங்கள் என்று சொல்லக்கூடிய பல்லாயிரக்கணக்கான ஏக்கரா எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருந்திருக்கிறது. ஏழை விவசாயிகள் அவற்றை வெட்டி, திருத்தி, வயலாக்கி பல ஆண்டுகளாக அவற்றில் விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலங்களுக்குப் பாசன வசதிகளே இருக்காது. மழை பெய்தால் தான் அந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியும். குளம், குட்டை, ஏரியில் இருக்கும் தண்ணீரை இறைத்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விவசாயம் செய்கிற நிலங்களுக்கு தீர்வையைப் போல பல மடங்கு தண்டத் தீர்வை என்று விதித்து வருவதை நாம் அறிவோம். இதுபற்றி அடிக்கடி விவசாயிகள் சார்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

சில சமயங்களில் ஜமாபந்தி காலங்களில் விவசாயிகள் விண்ணப்பங்கள் கொடுத்து அந்தத் தண்டத் தீர்வைகளை ரத்து செய்யக்கூடிய நிலைமை இருந்து வந்தது. இப்போது அரசாங்கம் சட்டபூர்வமாக புறம்போக்கு நிலங்களுக்கும் கூட தீர்வை வசூல் செய்தாக வேண்டும் என்கிற அடிப்படையில் இந்தச் சட்டத்தையே கொண்டுவந்திருப்பதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். இந்தத் தரிசு நிலத்திற்கும், மானாவாரி நிலத்திற்கும் தீர்வை கூடாது. அந்த நிலங்களில் எல்லாம் விவசாயிகள் விவசாயம் செய்ய மற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். இன்றையதினம்

அவற்றுக்கு யாரும் கவலைப் பட்டுக்கொடுக்கவில்லை. புறம்போக்கு என்றால் நாதியற்று அரசாங்கமும் கவனிக்காமல், ஸ்தல ஸ்தாபனங்களும் கவனிக்காமல் இருக்கிற நிலைதான் இருக்கிறது. இருந்தும் கூட விவசாயிகள் இன்றைய தினம் தங்களுடைய கடுமையான உழைப்பினால், தங்கள் பணத்தையும் செலவிட்டு சாகுபடி செய்கிறார்கள் என்றால் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகிறார்கள் என்று கருதவேண்டுமே தவிர அவர்களுக்குப் போய் தீர்வை விதிப்பது சரியாகாது. இராமநாதபுரத்தில் இதுபோல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டம் ஒரு டெல்டா பிரதேசம். அங்கும் கூட பல இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் விவசாயிகள் சாகுபடி செய்ய, அவர்களுக்குப் பல மடங்கு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். திருத்துறைப்பூண்டி ஏரியாவில் வெள்ளையர் காலத்தில் ஐயாயிரம் ஏக்கரா சொர்ணம் நிலங்களுக்கு யாரும் அதற்குள் பிரவேசிக்கக் கூடாது என்பதாகத் தடை விதிக்கப்பட்டது. வெள்ளையர் காலத்தில் விதிக்கப்பட்ட தடைகள் தான் இன்னமும் 25 ஆண்டுக்காலம் ஆன பிறகும் நீக்கப்படாமல் இருக்கிறது. அந்தத் தடையை ரத்து செய்து நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்கு அந்தத் தரிசு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகள் ஏனோ தானோ என்று இருக்கிறார்கள். அந்த நிலங்களையும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும்.

புறம்போக்கு நிலங்களைச் சாகுபடி செய்வது என்பது சுலபமான காரியம் அல்ல. ஒருவர் பத்து சென்ட், 20 சென்ட்க்கு மேல் சாகுபடி செய்ய முடியாது. அப்படி இருக்கிறபோது புறம்போக்கு, தரிசு நிலங்களுக்கும் கூட சட்டப்படி வரி விதிக்க இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதானது அநீதியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து புறம்போக்கு, மானாவாரி, தரிசு நிலங்களை இந்த மசோதாவில் இருந்து எடுத்து விட முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இந்த மசோதா பெரிய அநீதியை விளைவிப்பதாக ஆகும். இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.





**திருமதி த. ந. அனந்தநாயகி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். புஞ்சைக்கு வரி எடுத்தோம், நஞ்சைக்குக் கூட எடுத்துவிடப் போவதாக நாம் சொல்லிக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அதை விடுத்து மானாவாரி, தரிசு, புறம்போக்கு ஆகியவற்றுக்கு எல்லாம் கூட வரிவிதிக்கின்ற இந்த மசோதாவை ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருப்பது மிகமிக வருந்தத்தக்கது. விவசாயிகளிடத்தில் இந்த அரசு காட்டுகிற அலட்சிய கடுமையான போக்குக்கு இதுவும் கூட ஒரு சான்றுதான் அமைகிறது. ஏற்கனவே அவர்களிடத்தில் மிகவும் கடுமையாக நடந்துகொண்டு வருகிறார்கள். மேலும் இந்த மசோதாவைக் கொண்டு வருவது கடுமையாக இருக்கும் என்று சொல்கிறேன். புஞ்சைக்கு விலக்கு அளித்துவிட்டோம், நஞ்சைக்கும் விலக்களிக்கப்போகிறோம் என்பதாக பேரவையில் பேசுகின்ற அரசாங்கம் தரிசு, புறம்போக்கு, மானாவாரி ஆகிய எல்லாவற்றுக்கும் வரி விதிக்கிற மசோதாவைக் கொண்டுவருவது நியாயமானதல்ல.

"The Act does not, however, provide for the levy of additional assessment for the assessed waste wet lands and additional water-cess for the poramboke lands, assessed waste land (dry or manavari) and unassessed waste lands.

'It has been considered that it will be anamolous to leave off the lands referred to above from the scope of the Act.........'

இதெல்லாம் சட்டத்திலே தப்பித்தது என்பதற்காகத் திரும்பவும் கொண்டுவந்து கூடுதல் வரி போடுகிறோம் என்று சொன்னால் இது விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் செய்யப்படுகிறதா அல்லது உபத்திரவம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் செய்யப்படுகிறதா. இதன் மூலம் எவ்வளவு வருமானம் வரும் என்றும் தெரியவில்லை. அதை அமைச்சரவர்களும் மிகவும் சாமர்த்தியமாகச் சொல்லவில்லை. புதிதாக இந்தக் கூடுதல் வரிகளைக் கொண்டு வருவதன் காரணமாக இத்தனை கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னாலும் ஏதோ கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள், புதிதாக வரி போடுகிறார்கள் என்று தெரியும். இராமநாதபுரம் மாவட்டத்திலே மானாவாரிப் பிரதேசம் அதிகமாக இருக்கின்றது. அந்தப் பஞ்சப் பிரதேசத்தில் புஞ்சைப் பயிர் போடுகிறார்கள் என்றால் அவர்களுக்குத் தீர்வை

போட்டு கூடுதல் நிலத் தீர்வை, தண்ணீர் தீர்வை என்று கொண்டு வர வேண்டுமென்று செய்தால் இது நல்லெண்ணத்தில் செய்ததாக இருக்கவில்லை. எனவே இதைத் தயவு செய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே மாதிரி

' In section 2 (ii) of the Act the terms " wet land ", " single-crop wet land ", " compounded double-crop wet land ", or " double-crop wet land " have been defined as the lands registered in the revenue accounts of the Government as wet, single-crop wet, compounded-crop wet, or double-crop wet as the case may be. Assessed waste wet lands do not fall within the scope of the section . . . .'

ஆகையால் அதையும் இங்கே கொண்டுவருவதற்கு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். இதற்கு மேலாகப் பார்க்கும்பொழுது, கடைசியிலே

' Section 5 (1) of the Act, also provides that the aggregate of land revenue, water-cess and additional water-cess should not exceed Rs. 15 per acre per fasli year for the lands raised with only one crop and for the first crop if more than one crop is raised . .'

அதற்கும் உச்சவரம்பு ரூபாய் 15 என்று சொல்கிறார்கள். அதற்கடுத்தபடியாக வருவது ரொம்ப ஆபத்தாக இருக்கிறது.

' It has been considered that no maximum limit need be fixed for the poramboke lands, assessed waste lands (dry or manavari) lands and unassessed waste lands, in view of the fact that these lands are under encroachment and for this purpose it has been decided to exclude these lands from the provisions under sub-section (1) of section 5 of the Act . . . .'

இது அடிக்கடி ரெவின்யூ அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தண்டத் தீர்வை 600 ரூபாய், 700 ரூபாய், என்று போடுகிறார்கள். ஏழை விவசாயிகள், நிலம் இல்லாதவர்கள், தங்களுக்குப் பட்டா நிலம் வாங்கச் சக்தியில்லாதவர்கள் தான் புறம்போக்கு நிலத்தை உழுகிறார்கள். இந்தப் புறம்போக்கு நிலங்களை, நிலமில்லாத விவசாயிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும், இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அடைமானம் செய்து தருகிற காரியத்தைச் செய்ய வேண்டுமே



தவிர அவர்கள் அதில் விவசாயம் செய்தால் போடு 600, போடு 700, இல்லையென்றால் அறுவடை செய்ய விடமாட்டேன் என்ற பயங்கரமான நிலையை இந்தச் சட்டத்திலே வைத்திருப்பது ஏழை நிலமில்லாத விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய காரியமா என்பதை உழவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் தண்டத் தீர்வை போடும் பொசிஷன் இல்லை. ரெவின்யூ அமைச்சரவர்கள் எப்பொழுதோ சொன்னார்கள், போர்ட் மெம்பரை அனுப்புகிறோம் தண்டத் தீர்வையை ரத்து செய்ய என்னென்ன செய்யப் போகிறோம், எங்கெங்கே என்க்ரோச்மெண்ட் செய்திருக்கிறார்கள் என்று கவனிக்கச் சொல்லப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது 'ஆட்டோமேடிக் வாட்டர் சீப்பேஜ்'. நீர்ப்பிடிப்பு இடங்களில் புறம்போக்கிலே விவசாயம் செய்தால் 600 ரூபாய், 700 ரூபாய் தண்டத் தீர்வை என்று தண்டத் தீர்வை வசூலிக்க இந்த அரசாங்கம் முயற்சித்தால் அது பெரிய தவறு. இந்த அரசாங்கத்திலே புறம்போக்கு நிலங்களே இருக்கக்கூடாது. ஏன் இருக்கிறது? ரொம்பவும் தீவிரமாக நிலச்சீர்திருத்தம் செய்கிறோம், அதையெல்லாம் ஏற்பாடு செய்கிறோம், இதையெல்லாம் ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள், புறம்போக்கு நிலங்களில் உற்பத்திக்கு லாயக்கில்லாத நிலங்களை எத்தனை எக்ஸ் சர்வீஸ்மேன்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புகூட ரெவின்யூ அமைச்சரைச் சந்தித்து, எக்ஸ் சர்வீஸ்மேன் ஒருவர் அப்ளிகேஷன் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தேன். இப்படி ஆயிரம் பேர் காத்து இருக்கிறார்கள். அதற்குக் கருணை மனசு வைத்தால் உண்டு, இல்லையென்றால் இல்லை. எனவே, எத்தனையோ எக்ஸ் சர்வீஸ்மேன், நிலமில்லாத ஏழைகள், எத்தனை அரசியல் தியாகிகள், கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் 1½ ஏக்கரா நன்செய், 3 ஏக்கரா புன்செய் என்று சொல்கிறார்களே தவிர, அவைகளை நடைமுறையில் செய்திருந்தால் புறம்போக்கு நிலங்கள் என்று இருப்பதற்கு நியாயமே இல்லை. ஏதாவது லோகல் பாடீஸ், பஞ்சாயத்துக்கள் போன்றவைகள் பள்ளிக்கூடங்கள் கட்டவும், ஆஸ்பத்திரிகள் கட்டவும், இல்லையென்றால் பொது மக்களின் நன்மைக்காகவும் இருக்கும் இடங்களைத் தவிர மற்ற அத்தனை நிலங்களையும் அடைமானம் செய்வதற்கு நடவடிக்கை

எடுத்திருந்தால் இப்படிப்பட்ட சட்டத்திருத்தமே தேவையில்லை. அதுதான் நிலச் சீர்திருத்தத்தில் முக்கியமான கட்டம். அதை விட்டுவிட்டு எங்கெங்கெல்லாம் பணம் வருகிறதோ அங்கெல்லாம் வரி செய்வது என்று சொல்வது நியாயமல்ல.

' No maximum limit will be fixed '

என்று போட்டிருக்கிறது. அது கருணையற்ற பொசிஷன், அதைத் தயவு செய்து ரெவின்யூ அமைச்சரவர்கள் மறுபரிசிலனை செய்து, உச்சவரம்பாக 15 ரூபாய்க்கு மேல், 20 ரூபாய்க்குமேல் வரி வசூலிக்கக்கூடாது என்ற நிலையை ஏற்படுத்தினால் பல ஏழை நிலமில்லாத உழவர்கள் இதன்மூலம் கட்டாயம் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, புன்செய், மானாவாரி நிலங்களில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை பெய்தால்தான் உண்டு, இல்லையென்றால் இல்லை. அப்படி இராமநாதபுரம் மாவட்டத்தின் நிலைமையிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த நிலைமை என்னைவிட ரெவின்யூ அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இப்படிப்பட்ட மானாவாரி நிலங்களுக்கு இப்படிப்பட்ட கூடுதல் நிலத் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்க முடியுமா என்று பார்ப்பது நியாயமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைவிட்டுவிட்டு எங்கெல்லாம் பணம் வருகிறதோ அங்கெல்லாம் புகுந்து வசூலிப்பதில் கவனம் செலுத்துவது என்ற நிலைமையிருந்தால் இது சாமான்யர்களின் அரசாங்கமாக இருக்க முடியாது என்பதை எடுத்துக்கூறி இதை வன்மையாக எதிர்க்கின்றேன்.

**மணலி திரு. சி. கந்தசாமி :** தலைவரவர்களே, நானும் மயிலாப்பூர் தொகுதி உறுப்பினர் அம்மையார் அவர்களோடு சேர்ந்து இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றேன்.

பொதுவாகவே, இந்தச் சர்க்காரின் வரி விதிப்புக் கொள்கையிலே இரண்டு முரண்பாடுகள் இருக்கின்றன. ஒரு பக்கத்திலே வரிவிலக்கு கொடுக்கிறார்கள். மற்றொரு பக்கத்திலே அதை ஈடு கட்டும் விதத்திலே வேறொரு உருவத்திலே வரி போடுகிறார்கள் என்ற அடிப்படையில்தான் சமீபகாலத்திலே இந்தச் சர்க்காரின் வரிவிதிப்புக் கொள்கை விவசாயிகளைப் பொறுத்தவரையில்



இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏற்கனவே நஞ்சை புஞ்சைகளுக்கெல்லாம் வரிக் குறைப்பு செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, லோகல் செஸ், வாட்டர் செஸ் என்று இதுபோன்ற இனங்களைப் பார்த்தால், விவசாயிகளைப் பொருத்தவரையில் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அவர்களுக்கு நிவாரணம் இல்லை. நானும் வரி கட்டிக்கொண்டு வருகிறேன், 5 ஏக்கர் நிலம் இருக்கிறது, வரைக் கூடுகிறதே தவிர, குறையவில்லை. இதைத் தயவு செய்து ரெவின்யூ அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களைப் பட்டா செய்துகொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒன்று அவர்களை வெளியேற்ற வேண்டும். அல்லது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். அதை விட்டுவிட்டு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்தவர்களிடம் நூற்றுக்கு நூறு தண்டத் தீர்வை வசூலிப்பது தர்மம் அல்ல, நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையிலே ஆக்கிரமிப்பு செய்த நிலங்களை நல்ல முறையிலே 3 அல்லது 6 மாதங்களில் பட்டா செய்துகொடுக்க விசேஷ ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். புறம்போக்கு நிலங்களுக்கு இன்றைக்கு இந்த செஸ் வரி விதிப்பது சரியல்ல. ஏற்கனவே தண்டத் தீர்வை ஒன்றுக்கு 100 மடங்கு கட்டும் விதத்திலே இதையும் போடுவது சரியல்ல.

ஆகவே, பொதுவாக இந்த வரியேற்றம் என்ற கொள்கையைப் பொறுத்தவரையில், விவசாயிகளைப் பொருத்தவரையில் தயவு செய்து ரெவின்யூ அமைச்சரவர்கள் கருணைகூர்ந்து இந்தச் சட்டத்தை இனிமேலும் கையாளாமல் இருப்பது நல்லது. சமீபத்தில் 2 பைசா, 1 பைசா உயர்த்தியதன் விளைவாக விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விவசாயிகள் மத்தியிலே ஆர்ப்பாட்டங்கள் நடந்தன நமக்குத் தெரியும். ஆகவே, இந்த அடிப்படையிலே விவசாயிகளை சோதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு நான் எதிர்க்கிறேன்.

**திரு சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை என்ற மசோதாவிலே தரிசு நிலங்களில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தால்

தண்ணீர்த் தீர்வை விதிப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் இன்றைக்கு என்க்ரோச்மெண்ட் அல்லது புறம்போக்கு இப்படிப் பட்ட நிலங்களில், புஞ்சைக்குப் பக்கத்திலே கொஞ்சம் மோசமாக உள்ள நிலத்தைச் சீர்திருத்தி சீராக்கி, பண்படுத்தி விவசாயம் செய்யும் ஒருவருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தண்ணீர்த் தீர்வை விதிக்கலாம் என்ற ஷரத்தைச் சேர்த்து, வேறு நிலங்களுக்கு 15 ரூபாய் விதிக்க வேண்டுமென்ற அந்த நிபந்தனைக்குப் புறம்பாக இம்மாதிரி புறம்போக்கு நிலங்கள் அல்லது என்க்ரோச்மெண்ட் செய்து அரை ஏக்கர், அல்லது ஒரு ஏக்கரில் தொடர்ந்து விவசாயம் செய்பவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தண்டத் தீர்வை விதிக்கலாம் என்ற ஏற்பாடு சரியல்ல. இப்பொழுதுகூட கீழ் பவானி ப்ராஜக்டிலே ஒரு ஏக்கருக்கு 200 ரூபாயிலிருந்து 800 ரூபாய் வரையில் தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். அதேமாதிரி தாமிரவருணி ஆற்றுப் பகுதியிலே தண்ணீர் பாயக்கூடிய பகுதிகளில் ஆற்றுப் பகுதிகளில், ஓடைப் பகுதிகளில் உள்ள புறம்போக்கு நிலங்களில் எல்லாம் அரை ஏக்கர் ஒரு ஏக்கர் என்ற முறையில் அவர்கள் அதிகமான அளவில் பணம் செலவழித்து பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் 200 ரூபாய், 300 ரூபாய் என்ற அளவிலே தண்டத் தீர்வை போட்டு தொந்திரவு கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு எல்லாம் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய்தான் வருமானமே வரும். அந்தக் குறைந்த வருமானம் பெறுகின்றவர்கள்கூட இன்றைக்கு இந்தச் சட்டத்தின் பிரகாரம் அதிகமான வரி செலுத்தவேண்டுமென்று சொல்வது சரியல்ல, நியாயமல்ல. அப்படி எதாவது என்க்ரோச்மெண்ட் செய்திருக்கிறார்கள் என்று அரசாங்கம் கருதினால்—எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல்—ஒன்று சிறிய விவசாயி அந்த நிலத்தை பயிர் செய்து கொண்டிருந்தால் அவருக்கோ அந்த நிலத்தை நிலமில்லாதவர்கள் பயிர்செய்துகொண்டிருந்தால் அவர்களுக்கும் பட்டாப் போட்டுக்கொடுத்துவிடவேண்டும். 15 ரூபாய்க்கு மேல் இந்த வரிப் போடக்கூடாது என்ற நிலையிலேதான் இருக்கிறது, அதே நிலையில் இதற்கும் ஏற்கக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தவறான கருத்திலே முதலிலேயே இந்தச் சட்டத்தை அணுகியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏதோ இந்தச் சட்டத்தின் மூலமாகக் கோடிக் கணக்கான ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்கு அதிகமாகக் கிடைக்கப் போகிறது என்று எண்ணுவது தவறு. புறம்போக்கு நிலங்களின்மீது கூடுதலாக வரியைப் போட்டு அரசாங்கம் ஏதோ லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று நோக்கத்தில் அல்ல, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்பது சாதாரணப் பட்டா நிலத்திற்கு என்ன கூடுதல் தீர்வையை விதிக்கிறோமோ அதே தீர்வையைப் புறம்போக்கு நிலங்களுக்கும் அரசாங்கத் தண்ணீரைப் பாய்ச்சுகின்ற நிலங்களாக இருந்தால் போடுகிறோம். ஆகவே, இது ஏதோ அவர்களுக்குக் கொடுக்கிற தண்டனை என்பது கிடையாது. பட்டா நிலம் வைத்திருக்கிறவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதற்காகக் கூடுதல் தீர்வை எவ்வளவு விதிக்கப்படுகிறார்களோ அதே அளவுக்கு புறம்போக்கு நிலங்களைப் பயிர்செய்து கொண்டிருக்கிறவர்கள், பயன்படுத்திக்கொண்டிருக்கிறவர்கள், ஆகியவர்களும் விதிக்கப்படுகிறார்கள்.

தண்டத் தீர்வைபற்றிக் குறிப்பிட்டார்கள். அது வேறு. புறம்போக்கு நிலங்களுக்கு 200 ரூபாய் 300 ரூபாய் என்று போட்டு விடலாம் என்று கருதுவது சரியல்ல. அப்படியல்ல. தண்ணீர்த் தீர்வை ஒரு ஏக்கருக்கு 15 ரூபாய் வரையில் விதிக்கலாம் என்றுதான் இப்பொழுது சட்டம் இருக்கிறது. புறம்போக்கு நிலங்களாக இருந்தால், அதிகப்பட்சம் 15 ரூபாய் என்ற வரம்பை நீக்கி, அதற்கெல்லாம் 75% வரையில் கூடுதலாக வரி போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அதிகபட்சம் 26¼ ரூபாய்தான் வருமேதவிர அதிகமாக வராது.

கிருஷ்ணகிரி ஆயக்கட்டுப் பகுதிகள் போன்ற பகுதிகளில் உள்ளவைபோன்ற புறம்போக்கு நிலங்கள் வேறு இடங்களில் அரசாங்கத் தண்ணீரைப் பயன்படுத்துகின்ற நிலையில் கூடுதலாக 75% போடுகிறோம், அது ரூபாய் 26¼க்கு மேல் போகாது.

இராமநாதபுரம் பகுதியிலே அது மானாவாரிப் பகுதி, அந்தப் பகுதிகளில் எல்லாம் போடுகிறார்களே என்று திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். புறம்போக்கு

நிலங்களை எங்கெங்கெல்லாம் பயன்படுத்துகிறார்களோ—அது இராமநாதபுரம் பகுதி என்பதல்ல—எங்கெங்கெல்லாம் பயன் படுத்துகிறார்களோ எங்கெல்லாம் அரசாங்கத் தண்ணீரைப் பயன் படுத்துகிறார்களோ அங்கு எல்லாம் இந்தக் கூடுதல் தீர்வை விதிக்கப்படுகிறது. தண்டத் தீர்வை அல்ல, அது வேறு. தண்டத் தீர்வை என்பது தண்ணீரைத் தவறுதலாகப் பயன்படுத்துகிறவர் களுக்குப் போடுவது.

தண்டத்தீர்வை போடப்பட்ட நிலங்களில் கூட சிலவற்றைப் பொறுத்தவரையில் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதை எப்படிச் செய்யலாம் என்பதுபற்றியெல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு போர்டு நியமித்து இருக்கிறோம். அறிக்கை வந்ததற்குப் பிறகு அதைப்பற்றிய பரிசீலனை தொடங்கப் படும். புறம்போக்கு நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுத்துவிடுங்களேன் என்று சொன்னார்கள். எங்கெங்கெல்லாம் நிலங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பட்டாசெய்து கொடுக்க இந்த அரசு முயற்சிகளையெல்லாம் எடுத்துவருகிறது, அந்த முயற்சிகளைப்பற்றி இதுவரையிலும் யாரும் குறை சொன்ன தில்லை. அதிவேகமாக பட்டா செய்துகொடுத்துக்கொண்டிருக் கிறோம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், சிக்கார்டுகளும் இருக்கின்றன. மேட்டூர் பகுதியில் அங்கேயுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ள பகுதிகளிலேயெல்லாம் நிலங்களைப் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை யெல்லாம் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்து விட்டால் நீர்ப்பிடிப்பே இல்லை என்ற நிலைமை வந்துவிடும். ஆகவே அப்படிப் பட்ட பகுதிகளையெல்லாம் விட்டு விட்டு மற்ற நிலங்களையெல்லாம் —ஆறு, குளம், பாதை இவையெல்லாம்கூடத்தான் புறம்போக்கு களாகப் பாவிக்கப்படுகின்றன. இவையெல்லாம்—சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பரிசீலித்து பட்டா செய்து கொடுத்துக் கொண்டுதான் வருகின்றோம்.

சென்ற ஆண்டு 1¼ லட்சம் எக்கர் பட்டா கொடுக்கவேண்டு மென்று திட்டமிட்டோம், அதேபோன்று ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பட்டாசெய்து கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு 75 ஆயிரம் ஏக்கர் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று





திட்டமிடப்பட்டிருக்கிறது. அதையும் முடித்துவிடுவோம் என்று நம்புகிறோம். இதைத்தவிர காட்டு நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுப்பதற்கான முயற்சிகளையெல்லாம்கூட இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்டதற்குப் பிறகு இதுவரையிலே 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பட்டா செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் பட்டா நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை கூடுதல் தண்ணீர் தீர்வை எந்த அளவுக்குப் பெறுகிறோமோ அந்த அளவுக்குப் புறம்போக்கு நிலங்களுக்கும் அரசாங்கத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டால் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிக்கிறோம் என்பதற்காகத் திருத்தப்படுகிற சட்டமே தவிர வேறு தவறுதலாகக் கருத வேண்டியதில்லை. எனவே இந்த மன்றம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I wish to bring some points to the attention of the Hon. Minister. The Hon. Minister was explaining to us that only when source of water and irrigation is given by Government, there will be additional water-cess...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** எக்ஸ்பளேநேஷன் ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I want explanation to be clear to us because only when the source of irrigation is given by Government, assessment will be there. But in the Statement of Objects and Reasons it is stated as follows :—

"The Act does not, however, provide for the levy of additional assessment for the assessed waste wet lands and additional water-cess for the poramboke lands, assessed waste land (dry or manavari) and unassessed waste lands".

I want to know whether additional assessment is to be paid for these lands also.

**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் முதல் வரியைச் சேர்த்துப் படிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Tamil Nadu Additional Assessment and Additional Water-cess Act, 1963 (Tamil Nadu Act 8 of 1963), provides for the levy of additional assessment and additional water-cess on certain lands.

அந்தச் சட்டத்தை இதற்கு நீட்டிக்கிறோமே தவிர, அடிஷனல் செஸ் போடவேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தச் சட்டத்திலே அந்த நிலங்கள் நீக்கப்படுகின்றன, ஆகவே வேண்டாம் என்பதைத்தான் சொல்லவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். புறம்போக்கு நிலங்கள் அரசாங்கத் தண்ணீரைப் பயன்படுத்தினால் அதற்குத் தண்ணீர் தீர்வை இல்லாமல் இருந்தது மற்றப் பட்டா நிலங்களுக்கு என்ன வாங்குகிறோமோ அதேமாதிரி இந்த நிலங்களுக்கும் வாங்கக்கூடிய முறையில் சமமாக ஆக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

'தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2. பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## *Clause 3*

MR. CHAIRMAN : (THIRU N. VEERASAMY) : The question is :

" That clause 3 do stand part of the Bill ".



THIRU A. K. SUBBIAH : Sir, I move the following amendment—

" In sub-clause (i) of Clause 3, delete the brackets and words " including any poramboke land, assessed waste land (dry or manavari) or unassessed waste land ".

நான் என்னுடைய திருத்தத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற அந்த வார்த்தைகளையெல்லாம் எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழையில்லா மானாவாரிப் பகுதிகளில் மழை பெய்தால் அதற்குக் கூட வரி போடுகிறோம் என்று சொல்வது நியாயமல்ல. மானாவாரிப் பகுதிகளில் மழை பெய்தால் தான் பயிர்செய்ய முடியும். அதற்குக்கூட வரிப் போடுவது சரியல்ல, ஆகவே அதை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, in support of the amendment moved by the hon. Member, Thiru A. K. Subbiah, I would like to say a few words.

So far as sections 3 and 4 are concerned it is for additional assessment. As far as section 5 is concerned it is for additional water-cess. But so far as sections 3 and 4 are concerned, there should be no additional assessment for fresh lands which are to be taken in under this Bill. No doubt, the Hon. Minister has been saying that only an amendment is made to the original Act of 1963 and that he is not bringing forward a new Bill. But in the Act of 1963 these lands were not included. Now only these lands have been included for additional assessment. I once again say with all the emphasis at my command that the additional assessment for poramboke and dry or manavari lands must be given up.

So far as section 5 is concerned, if the Hon. Minister wants to impose additional water-cess, let him have the pleasure of doing so.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அடிஷனல் அஸெஸ்மென்ட் என்பது அரசாங்கக் கணக்கில் அஸெஸ்டு வேஸ்ட் ஆக இருந்தால்தான் வரும், இல்லாவிட்டால்

வராது. பாக்கி முழுவதும் வாட்டர் செஸ்தான். பட்டா நிலங் களுக்குத் தண்ணீர் கொடுத்தால் என்ன தீர்வை விதிக்கப் படுகின்றதோ அதே தீர்வைதான் விதிக்கிறோமே தவிர வேறல்ல. புறம்போக்கு நிலங்களில் பயிரிடுகின்றவர்களுக்குச் சலுகை இருக்கக்கூடாது, அவர்கள் பட்டா வாங்கிக் கொள்ள வேண்டும். பட்டா அரசாங்கம் வழங்க முடியாத நிலை இருந்தால் அவர்கள் அதைக் காலி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் தீர்வையைக் கட்ட வேண்டும். புறம்போக்கு நிலத்தில் சாகுபடி செய்யும்போது தீர்வை விதிக்கக்கூடாது என்று சொல்லுவது சரியல்ல. அரசாங்கத் தண்ணீர் உபயோகித்தால் கூடுதல் தண்ணீர்த் தீர்வை உண்டு, இல்லாவிட்டால் இல்லை என்று கூறி இந்தத் திருத்தத்தை அங்கத்தினர் அவர்கள் வற்புறுத்த வேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment of Thiru A. K. Subbiah was put and lost

**Clause 3 was put and carried.**

Clause 1, the Preamble and the Long Title were put and **carried.**

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

**'That the Tamil Nadu Additional Assessment and Additional Water-cess (Second Amendment) Bill, 1972 (L.A. Bill No. 28 of 1972) be passed.'**

**The motion was put and carried and the Bill was passed into law.**

**(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட பேரவைச் சட்ட முன்வடிவு எண் 31/1972)**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு

* 10—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.



எண் 31/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென முன்மொழிகிறேன்.

பட்டியலில் சேர்க்கப்பட்ட சமய நிறுவனம் ஒன்றுக்கு, ஆண்டுக்கு ரூ. 20,000 க்குக் குறையாமல் வருமானம் உடைய சமய நிறுவனம் ஒன்றுக்கு பரம்பரை அறங்காவலர் எவரும் இல்லை எனில், இந்து சமய அறக் கட்டளைகள் துறை ஆணையாளர், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 47வது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு மேற் சொன்ன சமய நிறுவனம் தொடர்பாக, அவரால் நியமிக்கப் படுகிற, மூன்று பேருக்குக் குறையாத, ஐந்து பேருக்கு மேற் படாத நபர்களடங்கிய அறங்காவலர் வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும். பட்டியலில் சேர்க்கப்படாத கோவில்களைப் பொறுத்த வரை, அறங்காவலர் வாரியத்தை அமைப்பதற்கு, தொடர் புடைய, இந்து சமய அறக்கட்டளைகள் துறை உதவி ஆணையாளர், 49-வது பிரிவின்கீழ், அதே வகை அதிகாரங்கள் உடையவராவார்.

சமூகநல ஏற்பாடாகவும், சீர்திருத்த நடவடிக்கையாகவும் கோவில்களுக்கான அறங்காவலர் வாரியம் ஒவ்வொன்றிலும் அரிசனங்கள் அல்லது பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது. அதன்படி பட்டியலிற் கண்டுள்ள கோவில்களின் அறங்காவலர் வாரியங்களில் ஒவ்வொன்றிலும், அதன் மொத்த உறுப்பினர் மூவராகவோ ஐவராகவோ இருந்தாலும், அரிசனங்கள் அல்லது பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒருவர் ஆணையாளரால் கட்டாயமாக நியமிக்கப் பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுக்கு இச்சட்ட வரைவு செயல்வடிவம் கொடுக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, இதனைப் பேரவை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, கோயில்களுக்குத் தர்மகர்த்தாக்களை நியமிப்பதில் அரிசனங்களுக்குச் சட்டப்படி ஸ்தானம் ஒதுக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அதற்காக அரசாங்கத்திற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 ஆகஸ்ட் 18

சட்டப்படி ஒருவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் இந்த மாதிரி தர்மகர்த்தாக்களாக நியமனம் செய்யப்படுவதன் மூலமாகத் தீண்டாமை இழிவு போக வழியாக இருக்குமென்ற நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கோயில்களில் அரிசனங்கள் தாராளமாக அச்சம் இல்லாமல் சென்று ஆலயத்தில் ஆண்டவனைத் தொழ உதவிகரமாக இருக்கும்.

அங்கே சிப்பந்திகள் நிறைய நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்கள் அத்தனைபேரும் அரசு நோக்கத்திற்கு விரோதமானவர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். தர்மகர்த்தா குழுதான் நியமனம் செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். தர்மகர்த்தா குழு நியமனம் செய்கிறபோது மெஜாரிடி, மைனாரிடி என்று பார்த்து நியமனம் செய்யப்படுகிறது. பத்து பேர் வேலை செய்தால் அதிலே இரண்டு மூன்று பேர்களை அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களில் இருந்து சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற நிலையை அரசு உத்தரவு மூலமாக அனுப்புவது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் அரிசனங்களில் இருந்து ஒருவர் மட்டுமே போடக் கூடிய நிலை இருக்கிறது. ஐந்து பேர் தர்மகர்த்தாக்களாக இருக்கும்போது அதிலே இருவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும், மூவர் மற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்று செய்வது நலமாக இருக்கும். அரிசனங்களில் இரண்டு பேர்களைத் தாராளமாக நியமனம் செய்யலாம். இந்த மசோதாவினுடைய நோக்கம் அடிபடக்கூடிய முறையில் தகுதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். தர்மகர்த்தாக்களாக நியமனம் செய்யப்படுகின்றவர்கள் சொத்துடையவர்களாக இருக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். சில கிராமங்களில் அரிசன வகுப்பு மக்களிடையே சொத்துடையவர்களையே காண முடியாது. எல்லாரும் ஏழைகளாகவே இருப்பார்கள். இந்தத் தகுதி நிர்ணயம் காரணமாக அவர்கள் தர்மகர்த்தாக்களாக வர முடியாத நிலை ஏற்படும். இதனால் அரசாங்கத்தின் நல்ல நோக்கம் அடிபட்டு விடும். இதை



1972 ஆகஸ்ட் 18] [ஆ. கு. சுப்பையா]

அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதிலே நான் சொன்ன ஆலோசனைகளை ஏற்று சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதாவை முழு மனத்தோடு ஆதரித்து, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்ற அரசைப் பாராட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காலகாலமாக இந்த நாட்டில் கடவுளை அரிசனங்கள் நேரிலே போய்ப் பார்க்க முடியாது; கோவிலில் அருகில் சென்று கடவுளைப் பார்க்கமுடியாது; இந்த நாட்டிலேதான் நந்தனார் கதைகள் நடந்தன. நந்தனார் கதையைக் காலட்சேபம் செய்து வந்தார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. இன்று நடைமுறையில் கடவுளை அருகில் சென்று தரிசிக்க வேண்டுமென்பதற்கு அப்பாலும் கூட அவர்கள் அறங்காவலர் குழுவில் இருந்து பணியாற்ற வேண்டுமென்ற அக்கறையை இதற்கு முன்னால் இருந்தவர்கள் எடுத்துக் கொள்ளாமல் இருந்தாலும் கழக அரசு இன்றைக்கு இதை இரண்டாவது புரட்சியாகச் செய்திருக்கிறது. முதல் புரட்சி தமிழ் வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டுமென்று செய்ததாகும். இரண்டாவது, அறங்காவலர்கள் மூன்று பேர், ஐந்து பேர் என்று இருக்குமிடத்தில் ஒருவர் கட்டாயமாக அரிசனத் தோழராக இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழராக இருக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருப்பது மிகப் பெரிய புரட்சியாகும். இதனை இந்த மாமன்றத்தில் பெரிய அளவில் வரவேற்று அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்தப் புரட்சியில் இன்னும் கூடக் கொஞ்சம் தீவிரம் வேண்டுமென்பதைப் பணிவோடு வேண்டுகோளாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அறங்காவலர் துறை, ஆணையாளர், துணை ஆணையாளர் ஆக இருப்பவர்கள். அந்தத் துறையின்கீழ் வருகிற கோயில்களுக்கு மட்டுந்தான் இந்தப் பிரிவு அமல்படுத்தப்படும் என்ற முறையில் இருக்கிறது.

ஹெரிடிட்டரி ட்ரஸ்டி என்று சொல்லப்படுகிற, பரம்பரையாக இருக்கிற அறநிலையங்களில், அந்தக் கோவில்களில் இப்படி அமைப்பதற்கு இன்னும் கூட தடை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சரவைக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் மாறிக் கொண்டு வருகிறது. கிரீடங்கள் எல்லாம் கூட மறைந்து வருகின்றன. மன்னர்கள் எல்லாம் கூட மாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் சிலர் கடவுள்களைத் தங்கள் சொந்த சொத்துக்களாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். எனது தாத்தா கோவில், என் முப்பாட்டன் கட்டிய கோவில் இதை நாங்கள்தான் பயன்படுத்தவேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். ஆகவே விரைவில் ஒரு திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்து ஹெரிடிட்டரி ட்ரஸ்டிஷிப் முறையை மாற்றவேண்டும்.

முதல் பட்டியலில் உள்ள வார்த்தை எடுக்கப்பட்டு எல்லா அறநிலையங்களிலும் ஹரிஜனங்கள் இடம் பெறக் கூடிய முறையைக் கொண்டுவரவேண்டும். திரு. சுப்பையா அவர்கள் ஒரு ஹரிஜனத் தோழர் இருப்பதை வரவேற்று இரண்டு பேர்கள் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதே ஆர்வத்தோடு நானும் என் கட்சியினரும் இருக்கிறோம் என்றாலும் மூன்றில் ஒருவரை நியமிக்கும்போது அதுவே மிகப் பெரியதொரு வெற்றியாகும். மெஜாரிட்டி ஹரிஜனங்களாக இருக்கவேண்டியது அவசியமே. அது மகிழ்ச்சி அளிக்கக் கூடியதுதான் என்றாலும் ஊரில் உள்ள உண்மை நிலையையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

கிராமத்தில் உற்சவத்தில் சுவாமி கிளம்பினால் காலனி வரை போய் வந்து சேருவதற்கே போலீஸ் பந்தோபஸ்துடன் வந்து சேரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இந்நிலையில் ஒரு ஹரிஜன தோழரை நியமிப்பது என்பதே ஒரு பெரிய வெற்றியாகும். கலைவாணர் என். எஸ். கே. ஒருமுறை குறிப்பிட்டார்கள். ஒரு ஹரிஜனத் தோழர் கோவிலினுள் நுழையும்போது உள்ளேயிருக்கிற ஜாதி, சமயத் தலைவர் உள்ளே வரக்கூடாது என்று வெளியே தள்ளிவிடுகிறார். உடனே அவர் உள்ளே வருவதற்கு என்ன தகுதி வேண்டுமென்று கேட்கிறார். நீ சுத்தமாக இல்லை, குளித்திருக்கவேண்டுமென்று சொல்கிறார். உடனே அவர் பதில் சொல்லும்போது தினம் தினம் மீன்கள் குளிக்கின்றனவே.





கோவிலுக்கு வராத மீன்கள் தினம் தினம் குளித்துக்கொண்டிருக்கின்றன, அவை சொர்க்கத்திற்கா போய்க் கொண்டிருக்கிறது என்று கேட்பதாக வருகிறது. இன்று அவர்கள் இல்லாவிட்டாலும், இந்தக் கொள்கையை எடுத்துச் சொன்ன அறிஞர் அண்ணா அவர்கள் இல்லை என்றாலும் அவர்கள் கொள்கையை நிலை நாட்டும் வகையில் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இந்த மசோதா நிறைவேற்றப்பட இருக்கிறது. ஹரிஜனங்கள் கோவில்களுக்குப் போவது மட்டுமல்லாமல் இனிமேல் திருவிழாக்கள் நடத்துபவர்களாகவும், கோவில்களைப் பராமரிப்பவர்களாகவும் நியமிக்கப்படக்கூடிய வகையில் இந்த மசோதாவினைக் கொண்டு வந்ததற்காக அமைச்சர் அவர்களையும், இந்த அமைச்சரவையையும் தமிழ்நாடு மக்கள் சார்பில் நானும் நெஞ்சார வரவேற்று இந்த மசோதாவைப் பாராட்டி வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்** : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தத்தை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொண்டு வந்துள்ள இத்திருத்தம் மிகவும் உகந்தது என்றுதான் கூறவேண்டும். இப்போதுள்ள எக்ஸிஸ்டிங் செக்ஷனில்,

Provided that the Commissioner may, pending the constitution of such a Board of Trustees, appoint a fit person to perform the functions of the Board of Trustees.

என்றிருக்கிறது. பெண்டிங் என்ற க்லாஸில் பல கோவில்களில் பல மாதங்களாக இருந்து வருகின்றன. எனது தொகுதியில் உள்ள திருவானைக்கோவிலில் கூட பல மாதங்களாக ட்ரஸ்டிகள் இல்லாதிருக்கும் ஒரு நிலை இருக்கிறது. ஆகவே ட்ரஸ்டிகளை நியமனம் செய்வதில் அது துரிதமாக செய்யப்படவேண்டும். ஐந்து பேர்களுக்கு மேல் இல்லாமல் ட்ரஸ்டிகளை அப்பாயின்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது. ஐந்து பேர்களை அப்பாயின்ட் செய்வதில் மூன்று பேர்கள் மற்ற இனத்தைச் சார்ந்தவர்களாகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் பழங்குடி மக்கள் இவர்களில் இரண்டு பேர்கள் இருக்கவேண்டும் என்றும் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதை வெகு அழகாக திரு. வேழவேந்தன் அவர்கள் சொல்லாமல் சொன்னது போல் அப்படி அவர்களைப் போடுவதில் ஆட்சேபனை இல்லை

யென்றாலும்கூட கிராமங்களில் குறைகள் ஏற்படும், தொந்தரவுகள் ஏற்படும் என்று சொன்னார்கள். அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் இவர்களின் நலனுக்காகப் பல நல்ல தொண்டுகளைச் செய்துவரும்போது இந்தச் சமயத்தில் இதை வற்புறுத்தி கண்டிப்பாகப் போட்டேயாக வேண்டும், அப்படி அப்பாயின்ட் செய்யும்போது 5,000 ரூபாய் சொத்து இருக்க வேண்டும், மூன்று ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்க வந்திருக்கிற இந்த அரசு மூன்று ஏக்கர்கள் கொடுத்துவிட்டால் அந்தத் தகுதியைப் பெற்றவராக அவர் ஆகிவிடுகிறார். பின்னர் 5,000 ரூபாய் சொத்து இருக்கவேண்டும் என்ற தகுதியை exempt செய்ய வேண்டும். கோவில் சொத்துக்களைப் பராமரிக்க தகுதி வாய்ந்தவர்களாகப் பார்த்து அப்பாயின்ட் செய்ய வேண்டும், ஏற்கெனவே உள்ள செக்ஷனில்,

The Commissioner may in lieu of a member of the Scheduled Castes or Scheduled Tribes appoint as a member of such Board a person belonging to the Scheduled Castes or Scheduled Tribes.

என்றிருக்கிறது. இது எப்படி இருக்கிறதென்றால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் அரசாங்க ஊழியர்கள் தேர்விலும் கூட நாம் பார்க்கிறோம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிஸர்வேஷன் என்று கொடுக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்கள் இல்லாத காரணத்தினால் பல உத்தியோகங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதை நான் அறிகிறேன். நான் கேட்கிறேன் அப்படித் தகுதி வாய்ந்தவர்கள் இந்தப் பரந்த தமிழ் நாட்டில் இல்லாமலா இருக்கிறார்கள்? அதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ரிஸர்வேஷன் வைத்தும்கூட சில சமயங்களில் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை என்று சொல்லும் போது எந்த அடிப்படையில் தகுதி வாய்ந்தவர்கள் அல்ல என்று குறிப்பிடுவது வெளியாவதில்லை தகுதி இல்லாவிட்டால் மற்றவர்களுக்குக் கொடுப்பது என்றிருக்கிறது. அது இங்கும் அப்ளை ஆகிறது.

ட்ரஸ்டிகளை அப்பாயின்ட் செய்வதில் என்ன கஷ்டமிருக்கிறது? கோவில்களை நல்ல முறையில் பாதுகாக்கும் வகையில் பார்த்துக் கொள்ள அவர்களிடையே தகுதி வாய்ந்தவர்கள் இல்லையா? ஒரு ஆப்பர்சூனிட்டி கொடுத்தால்தான் தகுதி வாய்ந்தவர்களா



இல்லையா என்பது தெரிய வரும். இல்லாவிடில் அந்தக் கேள்விக்கே இடமில்லை, தகுதி வாய்ந்தவர்களா இல்லையா என்பதற்கு. எனவே, மூன்று ஏக்கர் நிலம், ஐயாயிரம் ரூபாய் சொத்து என்று வைத்துக் கொண்டு அது இல்லாவிடில் தகுதி வாய்ந்தவர் இல்லை என்று நிர்ணயித்தால் அரசாங்கம் பெரிய தவறு செய்வதாகும். இரண்டு பேர்களைப் போடுவதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களில் ஒருவரும், பழங்குடி மக்களில் ஒருவரும் என்று போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் உள்ள கோவில்களைப் பொறுத்தமட்டில் இன்று மகாராஜாக்கள் இல்லையென்ற ஒரு நிலை இருந்தாலும் திருவிதாங்கூர்-கொச்சி ஸ்டேட்டாக இருந்தபோது ஏற்படுத்திய படி அவர்களது பிரதிநிதி இன்னும் தனிச் சலுகை பெற்று—அவர்கள் சலுகைகள் போய்விட்டிருந்தாலும் கூட—அவர் கண்டின்யூ செய்கிறார். தேவஸ்வம் போர்ட் இன்னும் இயங்கிக் கொண்டுவருகிறது. அந்த போர்டை அபாலிஷ் செய்துவிட்டு ட்ரஸ்டிகளை அப்பாயின்ட் செய்து பெண்களையும் ட்ரஸ்டிகளாகப் போடவேண்டும்.

எங்கெல்லாம் ட்ரஸ்டிகள் அப்பாயின்ட் செய்யாமல் மாதங்கள் பல, அல்லது சில ஆண்டுகள் என்று ஆகியிருக்கிறதோ அங்கெல்லாம் உடனடியாக ட்ரஸ்டிகளை அப்பாயின்ட் செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு சாக்குப்போக்கு சொல்லாமல் தகுதிவாய்ந்த ஹரிஜனங்கள் இல்லை என்ற குறையைக் கூறாமல் உடனடியாக வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு திரு. சுப்பையா அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, அறநிலைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதா உள்ளபடியே பாராட்டுக்குரியதாகும்.

இதே மன்றத்தில் 35, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் என்ற விவாதம் எழுந்தபோது ஹரிஜனங்கள் எல்லாம் இந்து மதத்தினர் என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர அவர்கள் இந்து மதத்தில் உள்பட்டவர்கள் அல்ல, சாஸ்திரப்படி அவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள், சாஸ்திரங்கள் அவர்களை ஒதுக்கி வைத்திருக்கிறது, சாஸ்திரப்பிரகாரம்

அவர்கள் கோவில்களுக்குள் நுழைய அருகதையற்றவர்கள் என்று எதிர்த்தரப்பிலிருந்து அன்றையதினம் வேண்டாதவர்கள் வாதாடினார்கள். பிறகு மகாத்மா காந்தி அடிகள் ஆலயப் பிரவேசம் செய்யவேண்டும் என்று சொன்னபோது அவர்களை எதிர்த்து எழுந்தது நாடு. ஏன் எதிர்த்தது? அவர்கள் முறை தவறிப் போகிறார்கள். இந்து மதத்திற்குத் துரோகம் செய்கிறார்கள். இந்து மதத்திற்கு அப்பாற்பட்டவர்களை, சாஸ்திரப்படி ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களை சாஸ்திரங்களுக்கு உட்பட்ட கோவில்களுக்குள் நுழைய அனுமதி கோருகிறார்கள். ஆகவே அவர்களது வாதம் சரியல்ல என்று நாடு அவர்களது வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை.

அதன் பிறகு மகாத்மா காந்தி அவர்கள் ஒரு விவாதத்தில் மாட்டிக் கொண்டபோது சொன்னார்கள், இந்து மதத்தில் இருக்கிற 4 ஜாதிகளில் ஹரிஜனங்கள் வராவிட்டாலும், இந்து மதத்தில் இரண்டு கடவுள்கள் இருக்கின்றார்கள், ஒன்று சிவன், மற்றொன்று ஹரி, சிவனுக்குச் சொந்தமானவர்கள் அந்த ஜாதியினர், ஹரிக்குச் சொந்தமானவர்கள் இவர்கள் என்று சொல்லி, இந்து மதத்தில் இரண்டு கடவுள்களை ஒப்புக்கொண்டிருக்கிற நீங்கள், இவர்களையும் இந்து மதத்தில் சேர்ந்தவர்களாகத்தான் கருத வேண்டுமென்று சொன்னார்கள். அதன் பிறகு தான் ஓரளவு மக்கள் அவர்களை இந்து மதத்தினர்களாக ஒப்புக்கொண்டார்கள். ஆலயப் பிரவேசத்திற்கும் இசைந்தார்கள்.

ஆலயப் பிரவேசம் எப்படி நடந்தது என்று பார்த்தால், மதுரை மீனாட்சி கோவில், சிதம்பரம் கோவில் போன்ற கோவில்களில் ஆலயப்பிரவேசம் நடைபெறுகின்ற அன்று கதவை மூடிவைத்து விட்டு, பூட்டு போட்டு விட்டார்கள். அதை எதிர்த்து மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டு, எதிர்க்கட்சியில் இருந்தவர்கள்--அதாவது தற்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள்--எல்லாம் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பிறகு, ஜனாதிபதி அவர்களும், கவர்னர் அவர்களும் உத்தரவிட்டார்கள். "கோவில்களைத் திறக்காவிட்டால் போலீசை வைத்து அரசாங்கமே கோவில்களைத் திறக்க வேண்டியிருக்கும்" என்று சொன்னவுடனே தான் கதவு திறக்கப்பட்டு, அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். அந்த



ஆலயப் பிரவேசத்திற்காக டாக்டர் அம்பேத்கார், தமிழ்நாட்டின் தலைமகன் என்று போற்றப்பட்டவர்கள் கூடப் போராடினார்கள். ஆலயத்தின் உள்ளே செல்வதற்கே இப்படிப்பட்ட போராட்டங்களைத் துவக்கி நடத்திய காலம் போய், இன்று தமிழக அரசும், முதலமைச்சர் அவர்களும், அந்த இலாகாவைச் சார்ந்த அமைச்சர் அவர்களும், உள்ளபடியே அவர்களுக்கு இருக்கும் நல்லெண்ணத்தின் காரணமாக இன்றைக்கு இந்தச் சட்டம் நமது சபைக்கு வந்திருக்கிறது.

இந்தச் சட்டத்தின் வாயிலாக 2 பேர், 3 பேர் அறங்காவலர்கள் குழுவில் இருந்தாலும், அதிலே ஹரிஜன் ஒருவரை அறங்காவலராக நியமிக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அன்று கோவிலில் நுழைவதற்கே போராட்டங்கள் நடத்த வேண்டியிருந்தது. ஆனால் இன்றைய நிலை, கோவிலில் நுழைவதற்கு மட்டுமல்ல, கோவிலில் சென்று மற்றவர்களோடு சேர்ந்து கடவுளைத் தொழுவதற்கு மட்டுமல்ல, கோவிலில் உள்ள நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்கும், அந்தக் கோவிலைத் எப்படி நிர்வாகம் செய்ய வேண்டுமென்பதற்குத் தன்னுடைய ஆலோசனைகளைத் தருவதற்கும் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காணுகிறபோது எந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் ஏற்றம் கொடுத்திருக்கிறது, எந்த அளவுக்கு அவர்களுடைய முன்னேற்றத்தில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது என்பதைக் காட்டுகிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த தமிழக அரசையும், சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சரையும், முதலமைச்சர் அவர்களையும் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாகப் பாராட்டி நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவரவர்களே, இந்த மசோதா ஒரு நல்ல திருத்த மசோதா என்பதை யாரும் மறுக்க இயலாது. அதே சமயத்தில் இந்தச் சீர்திருத்தத்திற்குக் காரணமான மகாத்மா காந்தி அவர்களையும் நாம் மறக்க முடியாது. ஆண்டவனே செய்ய முடியாத அந்தத் திருத்தத்தை காந்தியடிகள் அவர்கள் செய்து காட்டினார்கள். நந்தன் ஈசனைக் காண வேண்டுமென்பதற்காக இசை பாடி ஆலயத்தின் முன்னே நின்றபோது, ஈசன் நந்தியைப் பார்த்து நகர்ந்து கொள் என்று சொன்னாரே தவிர,

நந்தா உள்ளேவா என்று கூறவில்லை. அப்படி ஆண்டவனே செய்ய முடியாத ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்த மகாத்மா காந்தி அவர்களை மறக்க இயலாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக தாழ்த்தப்பட்ட அந்தச் சமுதாயம் நல்ல வகையில் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறேன்.

அறங்காவலர்களாக நியமிப்பதற்கு மாத்திரம் சட்டம் கொண்டு வந்தால் போதாது. இந்த அறநிலைய இலாகாவில் இருக்கும் பல்வேறு குறைபாடுகளையும் கவனிக்க வேண்டும். குறிப்பாக, இந்த அறங்காவலர்களை நியமிப்பதில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சொன்ன மாதிரி பல ஆலயங்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். வருஷக் கணக்கில் காலதாமதமாகிறது. ஏன் அந்தத் தாமதம் ஏற்படுகிறது என்பது எங்களுக்குப் புரியவில்லை. பொதுவாக, அறங்காவலர்களாக நியமிக்க நம்முடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கிடைப்பார்களா என்பதிலே அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. ஆண்டவன் பெயரில் நம்பிக்கையில்லாத கூட்டத்தை அறங்காவலர்களாக நியமித்தால் அந்த ஆலயங்கள் உண்மையிலேயே நல்ல விதத்தில் நிர்வகிக்கப்படுமா என்கிற சந்தேகம் எழுகிறது. இதிலே கூட கட்சிக் கண்ணோட்டம் இருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே கோவில்களின் நிர்வாகத்தில் அவர்களுக்கு அக்கறையிருக்கிறதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாக அம்மையார் அவர்கள் அவர்கள் தொகுதியில் இருக்கிற திருவானைக்கோவிலுக்கு அறங்காவலர்கள் நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். அங்கே மட்டுமென்ன, இங்கே சென்னையில், தமிழ் நாட்டின் தலைநகரத்தில், எச் ஆர். அண்டு சி.இ. டிபார்ட்மெண்டின் தலைமைச் செயலகம் நுங்கம்பாக்கத்தில் இருக்கிறது. அப்படியிருந்தும், இங்கே உள்ள பைராகி மடம் கோவிலுக்குப் பல ஆண்டுகளாக அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் காலதாமதம் செய்யப்பட்டு வருகிறது. இதே சட்ட மன்றத்தில் நான் பல தடவைகள் இந்தப் பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு



முறையும் எந்தெந்தக் கோவில்களில் அறங்காவலர்கள் இல்லை என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர முடியுமா? அவர்களாகவே ஒரு கட்டு திட்டம் வைத்து அதைச் செய்ய வேண்டும். ஆலயங்களில் உள்ள நிர்வாகத்தை சீர்செய்ய வேண்டும் ஆலயங்களில் இருக்கும் நிர்வாக அதிகாரிகளை 3 மாதத்திற்கு ஒரு தரம், 6 மாதத்திற்கு ஒரு தரம் மாற்றி விடுகிறார்கள். ஒரு நிர்வாக அதிகாரி வந்து அந்தக் கோவிலின் வருமானம் எவ்வளவு. சொத்து எவ்வளவு, எந்த வகையில் வருமானம் வந்து கொண்டிருக்கிறது, என்பதையெல்லாம் அறிந்து கொள்வதற்கு முன்பாக அவர் மாற்றப்படுகிறார் என்று சொன்னால் எப்படி அவர் கோவிலின் முன்னேற்றத்திற்காக, ஆலயத்தின் நல்ல நிர்வாகத்திற்காகத் தன்னுடைய கவனத்தைச் செலுத்த முடியும்? அவர்கள் குறைந்தது 2 அல்லது 3 வருஷங்களாவது ஒரு கோவிலில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு விடவேண்டும். அப்போதுதான் அறங்காவலர்களும் இந்த நிர்வாக அதிகாரி நமக்கு அப்போதுதான் அறங்காவலர்களும் இந்த நிர்வாக அதிகாரி நமக்கு துணை நிற்பாரா என்பதையும் அறிந்துகொள்ள முடியும். அறங்காவலர்கள் குழு இந்த நிர்வாக அதிகாரி எங்களோடு ஒத்துவரவில்லை, அல்லது அவர் பேரில் ஏதாவது குற்றம் குறை இருக்கிறது என்று சொன்னால் மட்டும் அவர் மாற்றப்பட வேண்டும்.

இப்போதுதான் கோவில் சொத்துக்களெல்லாம் யார் யார் இடத்தில் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இது ஏதோ ஒரு ஆயிரத்தில் ஒரு பிரச்னை தானே தவிர வேறு அல்ல. இதற்காக அரசாங்கம் தீவிர கவனம் செலுத்திக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்களில் உள்ள சிப்பந்திகளுக்கு மிகக் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது இதை மாற்றியமைக்க வேண்டும். அந்தக் காலத்தில் மானியங்கள் கொடுத்து வந்தார்கள். அதை வைத்துக் கொண்டு அவர்கள் தாராளமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தற்போது அரசாங்கம் அந்த மானியங்களையெல்லாம் நிறுத்திவிட்டது. இப்போது எல்லாவற்றிற்கும் டிக்கெட் போட்டு எப்படி அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மதுரை

மீனாட்சி கோவிலுக்கு உள்ளே செல்ல வேண்டுமானால் அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. கோவிலுக்குச் செல்பவர்கள் ஆண்டவனைக் கும்பிடப் போகிறோம் என்ற உணர்வோடு வந்து, தர்ம சிந்தையோடு, தர்ம உணர்ச்சியோடு காணிக்கை செலுத்தி வந்தது போய், இப்போது வட்டிக்காரன், சட்டிக்காரன் மாதிரி காசு வாங்குவது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீ காசு கொடுத்தால்தான் உள்ளே போகலாம் இல்லாவிட்டால் போகக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி வாங்குகிற காசைக் கொண்டு கோவில்களைப் பராமரிப்பதற்கு உபயோகித்தால் பரவாயில்லை. ஆனால் அரசாங்கம் அதை வேறு காரியங்களுக்குத்தான் பயன்படுத்துகிறது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏற்கெனவே ஒரு கோவிலில் அறங்காவலராக இருந்து இருக்கிறார்கள். அவர்கள் இருந்த அந்தக் கோவிலிலும் கட்டணங்கள் வசூலித்துக் கொண்டிருந்தார்கள். அதுபோன்று வசூல் செய்வது தவறு என்று அந்தக் கோவிலில் இருந்தபோது என் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்தக் கோவிலில் கற்பூரம், அர்ச்சனை, தேங்காய் உடைப்பதற்காகத்தான் கட்டணம் வசூல் செய்தோம்.

When we expect a special pooja or duty to be performed, we can pay to the Iyer. சாமி பார்ப்பதற்காக கட்டணம் வசூலிக்கவில்லை. அதைத்தான் நான் சரியில்லை என்று சொல்கிறேன். கற்பூரம் கொளுத்துதல், தேங்காய் உடைத்தல் போன்றவை என்றால் நமக்கு ஸ்பெஷலாக சில காரியங்களைக் கோவிலில் செய்கிறார்கள். ஆகவே அதற்குக் கட்டணம் வசூலிக்கலாம். ஆனால் சாமி பார்ப்பதற்கே கட்டணம் என்பது சரியல்ல. திருப்பதி கோவிலில் 101 ரூபாய் கொடுத்தால்தான் உள்ளேயே விடுவேன் என்று சொல்கிறார்கள். அந்தக் கோவில் நம் தமிழ் நாட்டில் இல்லை. ஆந்திர மாநிலத்தில் இருக்கிறது. ஆகவே, அதைப் பற்றிய கவலை நமக்கில்லை. அங்கே 101 ரூபாய் கொடுத்தால் கூட க்யூவில் நின்ற



பிறகு தான் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரியான நிலையில் பணத்தை வசூல் செய்து ஆலயங்களின் திருப்பணிக்காகச் செலவழித்தால் பரவாயில்லை. அப்படித் திருப்பணி செய்யாமல், அதை எடுத்து வேறு காரியங்களுக்குச் செய்வது நல்லதல்ல. பணக்காரக் கோவிலிலிருந்து பணத்தை எடுத்து ஏழைக் கோவில்களுக்கு, பராமரிப்பு இல்லாமல் இருக்கும் கோவில்களைப் பராமரிப்பதற்கும் செலவழித்தால் நல்லது.

திருவேற்காடு கருமாரியம்மன் கோவிலுக்குப் பின்னாலே வட வேதாரண்யம் என்ற பாடல் பெற்ற கோவில் இருக்கிறது. அது பாழடைந்த நிலையில் இருக்கிறது. அதற்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. அப்படிப்பட்ட கோவில்களுக்கு அதிகமாகப் பணம் இருக்கிற கோவில்களிலிருந்து நிதியை வழங்கினால் பரவாயில்லை. அதை விட்டு விட்டு, கண் சிகிச்சைக்காகவும், பள்ளிகள், கல்லூரிகள் திறப்பது போன்ற அரசாங்கம் செய்யும் பணிகளையும் செய்து கொண்டிருந்தால் அது நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

They cannot spend from the consolidated fund for such purposes.

கடவுள் பெயரால் சொல்லி வாங்குகிற பணத்தைக் கொண்டு கடவுளுக்குத்தான் திருப்பணிகள் செய்யவேண்டுமேயன்றி வேறு காரியங்களுக்குச் செய்வது சரியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கோவில் உபரி நிதிகளை மத மேம்பாட்டு வளர்ச்சி அல்லாத இத்தகைய காரியங்களுக்கும் செலவழிக்கலாம் என்ற சட்டம் அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில்தான் இயற்றப்பட்டது. ஆகவே அம்மையார் எந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விளக்குவார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்பொழுதும் இதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறேன். என்னுடைய பேச்சை டிபேட்டிலிருந்து பார்க்கலாம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 18

Even then I have insited that religious funds must be spent on religious activities first and priority must be given only for those activities.

அப்பொழுதும் இதைத்தான் சொல்லியிருக்கிறேன். ரெகுலர் ஆக்டிவிடீஸ், அதாவது ஆஸ்பத்திரி, ஸ்கூல் இவைகளுக்காக செலவழிக்கக் கூடாது. கள்ளுக்கடை, சாராயக்கடை இவைகளிலிருந்து ரூ. 40 கோடி வருமானம் வருகிறதே? அதை சமுதாய நன்மைக்குச் செலவழியுங்களேன். யார் வேண்டாம் என்கிறார்கள்? மத உணர்ச்சியை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் பழைய காலத்தில் கோவில்களுக்கு இத்தகைய சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை எடுத்துச் செலவழிப்பதில் மத சம்பந்தமான காரியங்களுக்குத் முதல் இடம் கொடுக்க வேண்டும். கள்ளுக்கடை, சாராயக் கடையிலிருந்து ஏழைகளை ஏமாற்றி வாங்குகிறீர்களே, அந்த வரிப் பணத்தை சமுதாய மேம்பாட்டிற்குச் செலவழியுங்கள். அந்தப் பணத்தைக் கொண்டு ஆஸ்பத்திரி கட்டுங்கள், ஸ்கூல் ஏற்படுத்துங்கள், சித்த வைத்தியத்திற்கு செலவழியுங்கள். ஆலயங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பணத்தை ஆலயங்களைச் சிறப்பாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டி அந்தத் துறையில் செலவழிக்க வேண்டும். கோவில் திருப்பணிக்கு என்று கேட்டால் 15,000, 10,000 ரூபாய் தான் என்று செலவழித்துவிட்டு, மீதிப் பணத்தைக் கொண்டு ஆஸ்பத்திரி கட்டுகிறேன், சித்த வைத்தியம் செய்கிறேன் என்றால் அது சரியல்ல.

வந்தவாசி கோவிலில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. ரூ. 15,000 அல்லது 20,000 தான் திருப்பணிக்காகக் கொடுத்திருக்கிறார்கள். அது சிறந்த வைணவக் கோவில். ஒரு அம்மையார் சிறப்பாக திருப்பணி வேலைகளைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அரசின் உதவி இன்னும் அதிகமாக இருந்தால் சீக்கிரம் திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்க முடியும். 15,000 ரூபாய் வேண்டுமென்றால் 15,000 தடவை எச். ஆர். அண்டு ஸி. டிபார்ட்மெண்டுக்கும் அமைச்சர் அவர்களிடத்திலும் நடக்க வேண்டியிருக்கிறது. அந்த அம்மையார் வயது ஆனவர்கள். இந்தத் திருப்பணி செய்து முடிப்பதற்குள் அவர் காலமே முடிந்துவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள்.



1972 ஆகஸ்ட் 18] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் அமைச்சர் அவர்கள் யார் எதைச் சொன்னாலும் சரி கோவில் வருமானத்தை கோவில் மேம்பாட்டிற்காகத்தான் செலவழிக்க வேண்டும், கோவில் வருமானத்திலிருந்து க்ஷீணித்துக் கிடக்கக்கூடிய கோவில்களைப் புதுப்பிப்பதற்கு முன்வர வேண்டும். வட வேதாரண்யம் வேதபுரீசுவரர் திருக்கோயிலைப் புதுப்பிக்கவேண்டும். கருமாரியம்மன் கோவில் பக்கத்தில் இருக்கிறது. அதைப் புதுப்பித்தால் நல்ல வருமானம் வரும். அது இன்வெஸ்ட்மெண்டுதான்.

திருப்பதி கோவிலில் இருக்கிற ஆண்டவன் எத்தனை கோடி ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கிறார்? நீங்கள் அதிகாரிகளை வைத்து, கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் போன்ற அதிகாரிகளை வைத்து வியாபாரிகளை மிரட்டி, உருட்டி வரி வசூலிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஆண்டவன் அத்தகைய சிப்பந்திகள் எவரும் இல்லாமல் உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே எத்தனையோ கோடி ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கிறார். திருக்கோவில்களை செப்பனிட்டு சீர்திருத்தம் செய்தால், அதனால் கோடிக்கணக்கான ரூபாய் எஸ்டாபிளிஷ்மெண்டு இல்லாமலேயே கிடைத்துவிடும். ஆகவே, சீர்கெட்டிருக்கும் கோவில்களை செம்மைப்படுத்துவதற்கு முக்கியமாகச் செலவழிக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு மற்ற காரியங்களுக்குச் செலவழித்தால், அது நியாயமாக இருக்காது. ரெகுலர் ஆக்டிவிடீசுகளுக்கு அரசாங்கம் வரிப் பணத்தைச் செலவழிக்க வேண்டும். கோவில் மேம்பாட்டுக்கு செலவழித்து மிஞ்சியிருந்தால் சமுதாய நன்மைக்காக தாராளமாகச் செலவழியுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை.

இந்துக் குழந்தைகளுக்கு அனாதை இல்லங்கள் ஏற்படுத்த வேண்டும். அப்படித் தனி அனாதை இல்லங்கள் இல்லாமல் வேறு பல அனாதை இல்லங்களுக்குப் போய்ச் சேருவதால் மதமாற்றம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அறநிலையங்களுக்கு இருக்கக்கூடிய கட்டளையிலிருந்து வருகிற வருமானத்தை மத உணர்ச்சியை மேம்படுத்துவதற்கும், மதத்தை வளர்ப்பதற்கும் என்ன என்ன காரியங்கள் தேவையோ, அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளுக்காகச் செலவழிக்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு மற்ற காரியங்களுக்காகச் செலவழிப்பது தவறு.

கோவில் சிப்பந்திகளுக்கு சம்பளம் மிகக் குறைவு. இவ்வளவு வருமானம் வரும்பொழுது அய்யர், மற்றும் கோவில்களில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்குக் குறைவான சம்பளம் கொடுக்கப் பட்டு வருகிறது. அந்தச் சம்பள விகிதங்களைத் திருத்தி அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டும். கோவில் நந்தவன சிப்பந்திகள் போன்றவர்களுக்கு ரூ. 30, 35, 50 என்று சம்பளம் தரக்கூடிய பரிதாபகரமான நிலை இருக்கிறது. அற நிலையங்களில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளும் வாழ வேண்டியவர்கள். அவர்கள் வாழ்க்கைக்குத் தகுந்த நல்ல ஊதியம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

இந்த மசோதாவிற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். நல்ல எண்ணத்தோடு தான் கொடுத்திருக்கிறேன். நம்முடைய அமைச்சர் 5 பேர்கள் கொண்ட அறங்காவலர்கள் குழுவில் ஷெட்யூல்டு காஸ்டு அல்லது ஷெட்யூல்டு டிரைப்ஸ் இவர்களில் ஒருவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதோடு 'உமன்' ஒருவரையும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். தற்பொழுது பெண்கள் குறைவான எண்ணிக்கையில் தான் தர்மகர்த்தாக்களாக இருக்கிறார்கள். அவர்கள் கூட கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றப்படுகிறார்கள். ஆண்களை விட பெண்கள்

They are more religious-minded. They are more pious. There must be representative of women in the board of trustees in all listed temples.

ஆகவே, இந்தத் திருத்தத்தை நல்ல எண்ணத்தோடு தான் கொண்டு வந்திருக்கிறேன். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்க் கட்சியைச் சேர்ந்த அம்மையார் கொண்டுவந்திருக்கிறார்களே என்ற எண்ணத்தில் இல்லாமல், 5 பேர் கொண்ட அறங்காவலர் குழுவில் ஒரு ஹரிஜனோடு ஒரு பெண்ணையும் போடுவார்களேயானால், இன்னும் சிறப்பாக கோவில்களைக் கவனித்துக் கொள்ள முடியும், கோவில் நிர்வாகம் மிகச் சிறப்பான கண்காணிப்பில் இருக்கும். இந்த நிலை ஏற்படுவதற்கு என்னுடைய திருத்தம் மிகவும் அவசியம். அதே சமயத்தில் அரிஜனங்களுக்கும், பெண்களுக்கும் ரிலாக்சேஷன் இருக்க வேண்டும். அவர்களைப் பொறுத்த வரையில் சொத்து போன்ற தகுதி தேவை என்று



சொல்லக் கூடாது. அவர்களின் மேலே ஏதாவது கிரிமினல் குற்றம் இல்லாமல் இருந்தால், 25 அல்லது 30 வயதுக்கு மேல் இருந்து தகுதியுடையவராக இருந்தால், இந்த நாட்டுப் பிரஜையாக இருந்தால் போதும், அவர்களை அறங்காவலர் குழுவில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் விஷயத்தில் சொத்து, போன்ற தகுதிகளைப் பார்ப்பது என்றால், ஷெட்யூல்டு காஸ்டு அல்லது ஷெட்யூட்டு டிரைப்ஸிலிருந்து ஒருவர் கூட கிடைக்க மாட்டார்கள். திருத்தம் கொண்டு வந்தும், வலது கையால் கொடுத்ததை இடது கையால் பிடுங்கிக்கொண்டு போவது போல் தான் ஆகும். அமெண்டுமெண்டு கொண்டு வந்தோம், ஆனால் ஆள் கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலை தான் ஏற்படும். ஆகவே ஷெட்யூடு காஸ்ட் அல்லது ஷெட்யூல்டு டிரைப்ஸ் அல்லது பெண்களைப் பொறுத்த வரையில் ரிலாக்ஸேஷன் கொடுத்ததாக வேண்டும். தகுதிக்கான வயதுவந்தவர்களாக இருந்து, இந்தியப் பிரஜையாக இருந்து, தெய்வ பக்தியுடையவராக இருந்தால் போதும் என்ற எண்ணத்தில் பார்க்கவேண்டுமே தவிர, எதையும் கவனிக்கக் கூடாது. அந்த அளவில் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் ஒவ்வொரு கோவிலிலும் அறங்காவலர்களை மூன்று மாதங்களுக்குள் நியமிக்க வேண்டும், காலியாக இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் தான் திருவள்ளுவர் கோவில் இருக்கிறது. வள்ளுவரைப் பாராட்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டு அவருடைய கோவிலைக் கவனிப்பதே இல்லை. பஸ்களில் வள்ளுவர் படத்தை மாட்டுகிறார்கள். ஆனால் வள்ளுவர் சிலை தெய்வமாகக் குடிகொண்டிருக்கும் கோவிலை அரசு கவனிக்காமல் இருக்கிறது. அந்தக் கோவிலுக்காக ஒரு கமிட்டி போட்டு அறநிலைய இலாகாவிற்கு அனுப்பி மாதக்கணக்கில் ஆகியும், அது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. காங்கிரஸ்காரராக இருக்கிறார் என்பதாலே அந்தக் கமிட்டிக்கு இன்னும் அங்கீகாரம் கொடுக்கவில்லையோ என்னவோ புரியவில்லை. திருவள்ளுவர் கோவிலை அழகாகச் சீர்திருத்தம் செய்து, செப்பனிட்டு, உலக நாடுகளிலிருந்து வரக்கூடியவர்கள் அத்தனை பேர்களும் அதனைப் பெருமையோடு கண்டுகளிக்கக்

கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் அந்தக் கோவிலில் குடிகொண்டிருப்பதை, இவர் தானா திருவள்ளுவர் என்று ரசித்துப் பார்க்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட வேண்டும். அந்தக் கோவிலையும் கவனிக்காமல், போட்ட கமிட்டியையும் அங்கரிக்காமல். அல்லது ஒரு புதுக் கமிட்டியையும் போடாமல், ஒன்றுமே நடக்காமல் எல்லாம் பெண்டிங்காக இருந்தால் எப்படி? டிஸ்போஸலே கிடையாதா? இந்த நிலைமை நீடித்திருப்பது நியாயமல்ல. இதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்.

இந்தப் புரட்சிமிகு திருத்த மசோதா தமிழக அறநிலையத் துறையிலே ஒரு சிறப்பு மிக்க வரலாற்றினை உருவாக்குகின்றது என்பதனை நாம் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை நான் சொல்வதற்குக் காரணம் இரண்டு கொள்கைகளை இந்த மசோதா நிறைவேற்றியிருக்கிறது. தி.மு.க. பல ஆண்டுகளாகப் பேசி வருகிற சமதர்மக் கொள்கையையும், சீர்திருத்தக் கொள்கையையும், ஆக இந்த இரண்டு கொள்கைகளையும் அடக்கிக் கொண்டு இந்த மசோதா நிறைவேற்றப்படுகிற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த சமுதாயம் தமிழகத்திலே நல்ல முறையில் வளர வேண்டும் என்று எண்ணினார்களோ, அதற்காக 35 ஆண்டுக் காலமாக இந்த நாட்டிலே தன்னுடைய பேச்சால், எழுத்தால், தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்களோ. அந்தக் கனவுகள் வெற்றி பெறுகின்ற நிலையில் தான், இன்றையதினம் டாக்டர் கலைஞர் அரசு சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக, நசுக்கப்பட்டவர்களாக, சக்கையாக்கப்பட்டவர்களான தன்மையிலே காட்சி அளித்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும் என்கிற சமதர்மக் கொள்கையின் அடிப்படையிலே



இந்தத் திருத்த மசோதாவை இங்கே கொண்டு வருகிறது. ஆகவே, இது பாராட்டிப் போற்றி வரவேற்கக்கூடிய ஒரு மசோதாவாகும்.

மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள். தி.மு.க. அரசு மற்ற கட்சித் தோழர்களை அறங்காவலராக நியமிப்பதில்லை என்ற குற்றச்சாட்டினை இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். திருத்தணி திருமுருகன் ஆலயத்தில் இன்றையதினம் அறங்காவலராக இருந்து கொண்டிருக்கும் திரு. துரைசாமி முதலியார் அவர்களை நமது டாக்டர் கலைஞர் அரசுதான் நியமித்திருக்கிறது என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி சிண்டிகேட் காங்கிரஸ் என்பதனையும் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இந்த இயக்கத்தின் சார்பாக அங்கே அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற அறங்காவலர்களுடைய பதவி காலத்தைவிட துரைசாமி முதலியார் அவர்களுக்கு ஐந்து ஆண்டு அதிக காலத்திற்கு இந்த அரசு நியமித்திருக்கிறது என்பதனை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல. அதே திருத்தணி ஆலயத்தில் திரு. சண்முக முதலியார் என்பவரை, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்திருப்பவரை, இந்த அரசு தான் அறங்காவலராக நியமித்திருக்கிறது என்பதனையும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு கட்சிகளை மறந்து செயல்படுகிற அரசாக இன்றையதினம் தமிழகத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது என்பதை மிக மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடவுள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ ஆனால் கலைஞர் ஆட்சிக் காலத்திலே கடவுளுக்கு எங்கள் மீது அதிகமாக நம்பிக்கை வளர்ந்து விட்டது என்பதை என்னால் நிரூபிக்க முடியும். அதன் அடிப்படையில் தான் இன்றையதினம் திருத்தணி திருமுருகன் ஆலயம் மூன்றாவது நிலையிலிருந்து முதல் நிலைக்கு மாறும் என்ற நிலையில் டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே மாறி வருகிற தன்மைகளை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தச் சீர்திருத்தக் கொள்கை

[திரு. ஆ. பாந்தாமன்] [1972 ஆகஸ்ட் 18

அடங்கிய, சமதர்மக் கொள்கை அடங்கிய இந்த சிறப்பு மிக்க மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் இப்படி அறங்காவலர்களை நியமிக்கின்ற நேரத்திலே தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் அல்லது மற்றவர்களாக இருந்தாலும் அந்த ஆலயத்தின் அருகிலுள்ள வட்டாரத்தில் இருக்கிறவர்களை பெரும் அளவிற்கு அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த வட்டாரத்தில் இருக்கிறவர்களை நியமிப்பதின் மூலம் அந்த ஆலயத்தின் பல வேலைகளை உடனுக்குடன் கவனிக்க முடியும். அத்தகைய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே 50 மைல், 100 மைல் தூரத்திலிருந்து அறங்காவலர்களை நியமிப்பதைக் காட்டிலும் அந்தந்த இடங்களில் இருப்பவர்கள் அறங்காவலர்களாக இருக்க வேண்டுமென்ற தாழ்மையான எண்ணத்தைத் தெரிவித்து இந்த சிறப்பு மிக்க மசோதாவை, சமதர்ம மசோதா, சீர்திருத்த மசோதா என்ற அடிப்படையில் வரவேற்று அமைகிறேன்.

**Thiru K. M. SUBRAMANIAM**: Mr. Chairman, Sir, I entirely welcome this amendment brought forward by the Government.

We are very proud, particularly my party is very proud that after 40 years of efforts for Harijan uplift, the Government has now decided to bring in an amendment enabling Harijans to become members of the Board of Trustees of Temples. Sir, it is welknown how under Mahathma's leadership, the Congress was fighting for the uplift of Harijans. The Vaikam Sathyagraha is a standing example of the terrible fight put forth for the uplift of Harijans. Similarly, I find that when appointments are taking place, various qualifications are laid down. So far as the Harijans are concerned, I think these qualifications—ownership of properties—should be removed and they should be exempted from such qualifications, so that Harijans who belong to the Hindu religion and who have faith in the Hindu religion, whatever their property, could become a trustee.



1972 ஆகஸ்ட் 18] [Thiru K. M. Subramaniam]

There are general criticisms. The hon. Member, Mrs. Anandanayaki made a lot of remarks and I want to make one important remark. So, far as temples are concerned, if we go to temples like the one in Guruvayur and other temples in Malabar, there is absolute equality shown to devotees whether they are rich or poor, whether one is a Brahmin or non-Brahmin. There is no special VIP treatment shown in any of the temples in Malabar. But particularly in Tamil Nadu, we find a lot of VIP treatment shown to certain class of people. Such people sometimes happen to be those who do not believe in Hindu Religion at all. They are given temple honours though they do not believe in temple worship, etc. The Hon. Minister for Religious Endowments should bear this in mind and bring in reforms that will make the temple places where there will be absolute equality shown to all devotees. Mr. Paranthaman referred to 'Samatharmam'. Well there may be Samatharmam in Tamil Nadu but there is little or no Samatharmam in temples of Tamil Nadu. All sorts of people are given all sorts of temple honours.

One other important point I want to stress is this. In the matter of appointment of trustees of temples, whatever the party to which one belongs, one must be a person who believes in Hindu religion and who has faith in Hindu religion. Otherwise, there is no use appointing some people who have no faith, but who can manipulate to bring in more money? That is no good. What is wanted is faith. The purpose of temple is to propagate the Hindu religious ideas and trustees must be in a position to follow, practise and set an example in such things. I think this amendment is not too late, it is a welcome measure and I think every one in this country would welcome this. It is a culmination of the ardent desire of our Great Mahathma Gandhi. All of us support this measure; myself and my party definitely support this amendment.

***மாண்புமிகு திரு மு கண்ணப்பன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்டத்தை இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒருமுகமாக வரவேற்று, பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியை இந்த நேரத்தில் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். அறங்காவலர்கள் நியமனத்தில் 5 பேராக இருந்தாலும், அல்லது 3 பேராக இருந்தாலும் கட்டாய

மாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அல்லது பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒருவரைச் சேர்க்கவேண்டுமென்று சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதன் நோக்கம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களையும் இந்தத் தூய்மையான பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சமுதாயத்தில் அவர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும். அவர்களும் மற்ற சமுதாய மக்களால் மதிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இத்தகைய திருத்தத்தைச் செய்திருக்கிறோம். இப்படி சட்டத்தின் மூலம்தான் செய்ய முடியுமா, சட்டம் இல்லாமலே அரசு ஏன் செய்யக் கூடாது என்று சிலர் கேட்கலாம். சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னல் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு அவர்களும் வாழ்க்கைத் துறையிலே முன்னேறவேண்டும், சமுதாயத்தில் அவர்களுக்கு நல்ல அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்ற வகையில் பல்வேறு காரியங்களை நாம் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை கடந்த 5 ஆண்டு காலத்தில் தமிழ் நாட்டிலிருக்கிற கோயில்களில் 491 பேர்களை நாம் அறங்காவலர்களாக நியமித்திருக்கிறோம். அதேநேரத்தில் பழைய ஆட்சிக் காலத்தில் 62-67 வரை எடுத்துக் கொண்டால் 227 பேர்களைத்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை அறங்காவலர்களாக நியமனம் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் இந்த 5 ஆண்டு காலத்தில் அவர்கள் செய்ததை விட இந்த ஆட்சி இரண்டு மடங்கு அதிகமான அளவில் செய்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவரவர்களே, முன்பு இந்த மாதிரி சட்டம் இல்லை. ஆனலும் அரிஜனங்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் அறங்காவலர்களாகப் போட்டிருந்தார்களே, இதை இல்லையென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்களா ? சட்டம் இல்லாத போதும் அரசாங்கம் அவர்களைத் தேர்ந்தெடுத்ததைக் குறை கூறுகிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவரவர்களே, அதை நான் குறை கூறவில்லை. ஏற்கெனவே 62-லிருந்து 67 வரை





நியமனம் செய்யப்பட்ட போதும் 67-லிருந்து இன்றையதினம் வரை நியமனம் செய்யப்பட்டபோதும் சட்டமே கிடையாது. சட்டம் இல்லாத நேரத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 227 பேர்கள்தான் நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 491 பேர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு காலத்திலேயும் சட்டம் கிடையாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் கூட எந்த ஆட்சி வந்தாலும் அவர்களுக்கு நிரந்தரமாக பாதுகாப்பு தரவேண்டுமென்று இந்தச் சட்டத்தைச் செய்திருக்கிறோம். இந்தச் சட்டத்தைப் பாராட்டிப் பேசுகிற நேரத்திலே இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்களும், அவர்களுக்குப் பின்னல் பேசிய உறுப்பினர்களும் திருத்தத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். மூன்று பேராக இருந்தாலும், 5 பேராக இருந்தாலும் இரண்டு பேரை நியமிக்க வேண்டும். ஒருவர் கூடாது. இரண்டு பேரை நியமிக்கவேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனல் சட்டத்தின் மூலம் ஒருவரைக் கண்டிப்பாக நியமிக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இரண்டு பேர்களில்லை, 3 பேர்களையுமே அல்லது 5 பேர்களையுமே அரிஜனங்களாக நியமிக்க எந்த விதமான தடையும் கிடையாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவரவர்களே, நானூற்றுச் சில்லரை பேர்களை நியமனம் செய்திருப்பதாக அமைச்சரவர்கள் கூறினர்கள். இவர்கள் கட்சி அடிப்படையிலே நியமனம் பெற்றிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரங்களைத் தெரிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவரவர்களே, யார் யாருக்குத் தகுதியிருக்கிறதோ அவர்கள் நியமனம் பெற்றிருக்கிறார்கள். கட்சி அடிப்படையில் வேண்டுமானல் மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் கணக்கை எடுத்துக்கொள்ளலாம். ஆட்சேபணையில்லை. ஆகவே, இரண்டு பேரைக் கண்டிப்பாக நியமனம் செய்யவேண்டுமென்ற திருத்தத்தை அவர்கள் இந்தத் திருத்தத்திலே பேசவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொடுத்

[திரு. மு. கண்ணப்பன்] [1972 ஆகஸ்ட் 18

திருப்பார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய மாண்புமிகு சுப்பையா அவர்கள் ஏற்கெனவே ஒரு கோயிலில் அறங்காவலராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இரண்டு பேரை வேண்டுமானாலும் அறங்காவலர்களாக நியமித்துக் கொள்ளலாம். ஐந்து பேரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளலாம். அதற்கு சட்டத்தில் எந்த வகையான தடையும் இல்லாத காரணத்தினால் இந்தத் திருத்தம் தேவையில்லை என்று என்னைப் பொறுத்த அளவிலே நான் நம்புகிறேன்.

அடுத்து, அரிசன மக்களில் தகுதி படைத்தவர்கள் கிடைக்காவிட்டால் அந்த இடத்தைக் காலியாக வைக்கவேண்டுமென்று பலரும் சொன்னார்கள். அப்படிக் காலியாக வைக்காமல் அந்த இடத்தையும் நாம் நிரப்பவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இப்போது அரிசன உறுப்பினரையும் நியமிக்க வேண்டுமென்று வழிவகை செய்திருக்கிறோம். ஆனால் தகுதியுள்ளவர்கள் கிடைக்காவிட்டால் காலியாக வைக்கமுடியாது. ஏனென்றால் சிறிய சிறிய கிராமங்களில் அரிசன உறுப்பினர் கிடைப்பது கடினமாக இருக்கிறது. அதனால் நீண்ட நாட்கள் அந்த இடத்தைக் காலியாக வைக்காமல். வேறு வகுப்பினரை நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அந்த முறையிலேதான் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறதே அல்லாமல் அரிசன மக்களைப் புறக்கணிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், அரிசன மக்களின் மீது இந்த அரசுக்கு இருக்கிற அக்கறையினால்தான் கடந்த ஆண்டு அர்ச்சகர் சட்டத்தை மாற்றி அமைத்தோம். அதுபற்றி நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு. சில தீர்ப்புகள் நமக்குப் பாதகமாக இருந்தாலும் முதன்முதலிலே சட்டத்தைக் கொண்டுவந்தது இந்த அரசுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை நல்ல அந்தஸ்துக்குக் கொண்டுவர முயற்சி எடுத்திருக்கிறோம். திரு. சுப்பையா அவர்களும், திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் சொன்னார்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படக் கூடியவர்களுக்கு சொத்து இருக்கவேண்டு



1972 ஆகஸ்ட் 18] [திரு. மு. கண்ணப்பன்]

மென்று இருப்பதாக. அறங்காவலர்களாக நியமிக்கப்படக் கூடியவர்களுக்குச் சில தகுதிகள் இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறோம். ஆனால் சொத்து இருக்கவேண்டுமென்று அந்தத் தகுதிகளில் சொல்லப்படவில்லை. அறங்காவலர்களாக வரக் கூடியவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்; 25 வயது முதல் 70 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்; மூளைக்கோளாறு, செவிடு போன்ற குறைபாடுகள் இல்லாதவராக இருக்கவேண்டும்; கோயில் ஊழியராக இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. சொத்து தகுதி இருக்கவேண்டுமென்று சட்டத்திலே கிடையாது என்பதைத் தெளிவாகக் கூறிட விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேதான் அறங்காவலர்களை நியமனம் செய்திருக்கிறோம்.

பரம்பரை அறங்காவலர்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். தங்கள் சொத்துக்களைக் கொடுத்திருக்கிறோம் என்று காரணம் காட்டி பலர் பரம்பரை அறங்காவலர்களாக வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நீக்க வேண்டுமென்று திரு. வேழவேந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட கருத்தை, இந்த அரசாங்கம், எந்த வகையிலே நிறைவேற்றலாம் என்பது குறித்து ஏற்கெனவே பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பரம்பரை அறங்காவலர் இருக்கக்கூடிய இடத்தில் நிர்வாக அதிகாரிகளை நியமித்து சீர்படுத்துவதா அல்லது அவர்களை அடியோடு நீக்கி விடுவதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

அடுத்து, கன்னியாகுமரி தேவசம் போர்டைப் பற்றி திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் திருவிதாங்கூர் மகாராஜா பிரதிநிதி ஒருவர் இருக்கிறார். நம்முடைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவர் இருக்கிறார்கள். அப்படி மூன்று பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நியமன உறுப்பினர் தேவையில்லை. நம்முடைய அரசாங்கச் சட்டத்தையே கன்னியாகுமரிக்கும் நீட்டிக்கலாம் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இப்போது நம்முடைய அரசாங்கம் நியமிக்கவேண்டிய உறுப்பினர்களைக் கூட நியமிக்காமல் இருக்கிறது. நம்முடைய அரசாங்கமே மூன்று பேரையும் நியமனம் செய்வதா அல்லது

[திரு. மு. கண்ணப்பன்] [1972 ஆகஸ்ட் 18

நமது சட்டத்தை கன்னியாகுமரிக்கும் நீட்டிப்பதா என்பதை பரிசீலனை செய்து வருகிறோம். இது சம்பந்தமாக மத்திய அரசின் கருத்தையும் அறியவேண்டியிருப்பதால், மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். விபரம் தெரிந்தவுடன் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருவானைக்கோவிலைப் பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அங்கு பல மாதங்களாக அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கு 5 அறங்காவலர்கள் உண்டு. 22—11—1971 முதல் 4 பேர்களுடைய பதவி காலம் முடிவடைந்துவிட்டது. 23—4—1972 அன்று அந்த இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நான்கு பேர்களின் பதவி காலம் முடிந்து, ஒருவர் மட்டும் இருந்ததால், காலியான இடங்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்து, முடிவு செய்வதில் தான் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. அதுவும் காலியான 5 மாதங்களுக்குள்ளேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, பைராகி மடத்தைப்பற்றிச் சொன்னார்கள். 15—8—1969 அன்று அறங்காவலர் பதவி காலியானது. மீண்டும் 13—3—1972-ல்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. உடனடியாக நியமிக்கப்படாததற்கு சிவில் கோர்ட்டில் அது சம்பந்தமாக வழக்கு நடைபெற்றதுதான் காரணமே அல்லாமல் அரசாங்கத்தினால் எந்தவிதமான காலதாமதமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து. அறங்காவலர்களைக் கட்சிக் கண்ணோட்டத்துடன் நியமிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி எந்தக் காலத்திலும் நியமிக்கப்படவில்லை. மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்கூட இப்போது அறங்காவலர்களாக இருக்கிறார்கள். திரு. பரந்தாமன் அவர்கள் பேசுகின்றபோது அதைப்பற்றித் தெளிவாகச் சொன்னார்கள்.

அடுத்து, கோவில் பணத்தை எடுத்து வேறு காரியங்களுக்காகச் செலவிடுகிறார்கள் என்று பலர் சொன்னார்கள். இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் கோவில் பணத்தில் பல அறப்பணிகள் செய்யப்படுகின்றன. அதில் எந்தவித ஐயப்பாடும் வேண்டியதில்லை. ஏற்கெனவே இந்து மதத்தில்



1972 ஆகஸ்ட் 18] [திரு. மு. கண்ணப்பன்]

நம்பிக்கை வைத்து இருக்கக்கூடிய மக்கள், அந்த எண்ணத்தில் மாறாமல் இருக்கவேண்டும். ஏனென்றால் மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் கல்வித் துறைக்கு, மருத்துவத் துறைக்கு, இது போன்ற வேறு பல காரியங்களுக்கும் தங்கள் மத நிறுவனத்திலிருந்து பணம் செலவிடுகிறார்கள். அதேமுறையில்தான் இந்து மத நிறுவனங்களிலிருந்து அறநிலையங்களிலிருந்து கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், மருத்துவ மனைகள், செவிடர்-ஊமையர் பள்ளிகள், வேறு பல நற்காரியங்கள் முதலியவற்றிற்குப் பணம் செலவிடப்படுகிறது.

பிச்சைக்காரர்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எந்தக் கட்சிக்காரர்களுக்கும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்காது என்றே நான் நினைக்கிறேன். எல்லோரும் அதை வரவேற்பார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட நற்காரியங்களுக்கு அறக்கட்டளைகளிலிருந்து பணம் செலவிடுவதில் எவ்வித தவறும் இல்லை.

அதேமாதிரி மதத்திலே நம்பிக்கை உள்ளவர்களைப் பார்த்து அறங்காவலர்களாக நியமிக்கவேண்டும் என்று சொன்னார்கள். மதத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் தான் அறங்காவலர்கள் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் அந்த அடிப்படையில்தான் நியமனம் செய்து இருக்கிறோம்.

மேலும், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம், இது ஒரு திருத்த மசோதாவாக இருந்தாலும், இதை அறநிலையத்துறை மானியமாகவே எடுத்துக்கொண்டு. அரிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு ஏற்ற வகையில் அவைகள் எந்த அளவுக்குப் பயன்படுமோ அந்த அளவுக்கு அங்கத்தினர்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும். அவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படக்கூடாது; உயர்ந்த ஜாதி. தாழ்ந்த ஜாதி என்ற வேறுபாடு இருக்கக்கூடாது— வேறுபாடு காட்டக்கூடாது என்ற வகையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள்

[திரு. மு. கண்ணப்பன்] [1972 ஆகஸ்ட் 18

கொடுத்திருக்கின்ற திருத்தங்களைத் திரும்பப்பெற்று, இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அமைச்சரவர்களிடம் ஒரு சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் முன்னாள் திருவிதாங்கூர் மகாராஜாவின் நியமன உறுப்பினர் ஒருவர் இருக்கிறார். அந்த நியமன உறுப்பினர் தொடர்ந்து இருக்கவேண்டுமா வேண்டாமா என்பதற்கு மத்திய அரசாங்கத்தின் கருத்து அறியப்படவேண்டும்; அதற்காகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மன்னர்களுடைய விசேஷ உரிமைகள், சலுகைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்ட பிறகு மேலும் அவர்களுக்கு சலுகையோ, உரிமையோ கிடையாது. அப்படி இருக்கும்போது முன்னாள் மன்னரால் நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர் தொடர்ந்து பதவி வகிக்கலாமா என்பதற்கு ஏதாவது விளக்கம் இருந்தால் அமைச்சரவர்கள் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கேரளமும், தமிழ்நாடும் பிரியும்போது சில ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. மன்னர்களுடைய விசேஷ சலுகைகள் ஒழிக்கப்பட்டாலும், அந்த ஒப்பந்தத்தின்படி இது சம்பந்தமாக மத்திய அரசின் எண்ணத்தை அறியவேண்டியிருக்கிறது. மத்திய அரசின் முடிவு தெரிந்தவுடன் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



1972 ஆகஸ்ட் 18]

## *Clause 2.*

MR. CHAIRMAN : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

'In sub-clause (1) of clause 2 after the words "Scheduled Castes or Scheduled Tribes" add the word "woman".'

THIRU R. PONNAPPA NADAR : Sir, I second the amendment.

THIRU A. K. SUBBIAH : Sir, I move the following amendments :—

'In sub-clause (1) of clause 2, for the words "of whom one shall be a member of the Scheduled Castes or Scheduled Tribes", substitute the words "of whom *two* shall be members of the Scheduled Castes or Scheduled Tribes".'

'Sub-clause (2) of Clause 2 shall be deleted.'

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second them. Sir, my amendment is a very important one but I do not think that it has caught the attention of the Hon. Minister. In his reply he has referred to Scheduled Castes and Scheduled Tribes and he has completely forgotten about the women. You know what is the population of women. So, when the Government constitute such Board of Trustees, it is but just that they must give representation to the women of the locality. When they can appoint representatives from the Scheduled Castes and Scheduled Tribes, I do not think there would be any special difficulty for appointing women on the Board. If women are appointed, much more work will be turned out and much more attention will be paid to the religious functions of the temple. I am sure, the Hon. Minister will be chivalrous enough to accept my amendment and see that women are appointed on the Board.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தில் 2 பேரை நியமனம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். நிச்சயமாக ஒருவர் இருக்க வேண்டுமென்பதை நாங்கள் எல்லாம்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 ஆகஸ்ட் 18

பாராட்டுகிறோம். சட்டப்படி ஒருவர் இருக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த சட்டம் மிகவும் பாராட்டுக்குரியது. அதேசமயத்தில் நான் சொன்னாற் போல் இரண்டு பேர் இருந்தால், ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும். 3 பேர் கொண்ட டிரஸ்டு போர்டு என்றால் ஒருவர் இருக்கலாம். 3 பேருக்கு மேல் இருந்தால் 2 பேர் இருக்கலாம் என்பதற்காகத்தான் அதைக் குறிப்பிடுகிறேன்.

இந்த நியமனத்திற்குத் தகுதி என்று சொல்லும்போது, 20 வருஷங்களுக்கு முன்னாலே இந்த பார்ம்கள் எல்லாம் பிரிண்ட் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே போட்டிருக்கக்கூடிய கன்டிஷன்களையெல்லாம் பார்த்தால் சில பேர் தகுதியற்றவர்களாகி விடுகிறார்கள். தகுதியுள்ளவர்கள் கிடைக்காததால் தர்மகர்த்தாக்கள் நியமனம் செய்யவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்குக் காரணம் அந்த பார்ம் தான். எழுதப் படிக்கத் தெரிந்தவர், நாணயமானவர், ஒழுக்கமுள்ளவர், அந்த ஊரிலே உள்ள ஜனங்களாலே மதிக்கத் தகுந்தவர் என்று இருந்தால் போதும் என்ற முறையிலே அந்த பார்ம்களைத் திருத்தியமைப்பதற்கு அமைச்சரவர்கள் உறுதி கொடுத்தால் நான் என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன். 15, 20 வருஷங்களுக்கு முன்னாலே தயாரிக்கப்பட்ட அந்த கன்டிஷன்களெல்லாம் திருத்தப்படாததாலே. அரிசனங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லையென்ற நிலை இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மீது ஓரிரு கருத்துக்கள் கூறுவதற்கு முற்படுகின்றேன்.

முதலிலே தாய்க் குலத்திற்கு இந்த அறங்காவலர் நியமனத்திலே அதிகப் பங்கு கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை நான் முழு மனதோடு வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றுள்ள சட்ட அமைப்பை எடுத்துப் பார்த்தால்,

'Hindu Religious and Charitable Endowments Act'

சட்டத்திற்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பொதுவாக, இன்று சமூகத்திலே இருக்கிற சட்டங்களையெல்லாம் திருத்தி அமைக்க வேண்டுமென்று



1972 ஆகஸ்ட் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மத்திய அரசாங்கம் பல நல்ல சட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறது. முன்பு பெண்களுக்கென தனிச் சொத்துரிமை இல்லாமல் இருந்தது. அதையெல்லாம் நீக்கி அவர்களும் சட்டத்தின் முன் சமம் என்ற முறையை இன்று அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

விடோஸ் பற்றி பழம்பெரும் கருத்துக்கள் எல்லாம் இந்து லா-விலே இருந்தது. சொத்துக்களை அவர்கள் பராமரிப்பதிலே பல கஷ்டங்களும் சங்கடங்களும் இருந்ததைத் தவிர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள்மூலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேமாதிரி அறங்காவலர்கள் நியமனத்திலே பல சங்கடங்களும் கஷ்டங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்திலே அவர்களுக்கு இடம் கொடுக்கும் முறையிலே விதிமுறைகளை சரியான முறையிலே அமைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

இந்த அறங்காவலர்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டுமென்ற கண்டிப்பான விதி இருக்கிறது. அதையும் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டுமென்று கோருகிறேன். பொதுவாக, தாய்க் குலத்திற்கும் கடவுள் நம்பிக்கை அதிகமிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆண்கள் அதிலே குறைந்தவர்கள் அல்லது சளைத்துப்போனவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. ஆதலால், இந்த நியமனத்திலே, குழுவிலே அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கூறுகிறேன். அதற்காக, இந்த விதிமுறைகளையெல்லாம் வகுக்கின்றபொழுது, முன்னெச்சரிக்கையாக நல்ல நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று கருதுகிறேன். ஆதலால், இந்த கருத்தை வரவேற்று அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஷெடியூல்டு காஸ்ட், ஷெடியூல்டு டிரைபை சேர்ந்த ஆட்கள் போதிய அளவிலே சில இடங்களிலே கிடைக்கவில்லை, ஆதலால், நியமனம் பெறுவதற்கு அவர்களுக்குத் தகுதியில்லையென்று பல இடங்களிலே கருத்து நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்

பட்டவர்கள் இவர்களையெல்லாம் முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு சட்டம் போடுகிறோம். ஆதலால், கண்டிப்பாக அவர்களுக்கு நியமனம் கொடுத்தாக வேண்டும். அவர்களுக்குக் கொடுத்ததுபோக பாக்கியை மற்றவர்களுக்குக் கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தினை நான் வலியுறுத்திக் கூறி, இத்தோடு என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்களும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே, பெண்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தினார்கள். பெண்களை ஏற்கனவே பல கோயில்களிலே நியமித்திருக்கிறோம். ஆனால், அதற்காக சட்டம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்பது வேறு. அதேநேரத்திலே பெண்களை நியமிக்க வேண்டுமென்பது வேறு. இரண்டையும் ஒன்றாக எடுத்துப் பார்க்கக் கூடாது. ஏனென்றால், சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் தொடக் கூடாதவர்கள் கோயிலுக்கு வரக் கூடாதவர்கள் என்றெல்லாம் இருந்ததை நாம் பார்க்கவேண்டும். ஆகவே, இந்த முறையில் சட்டமாக்குவது உள்ளபடியே நிரந்தரமான பாதுகாப்பாகும். அதேநேரத்திலே பெண்களை அறங்காவலர்களாக நியமிக்கக் கூடாது என்ற நோக்கம் நமக்கு நிச்சயமாக இல்லை. உதாரணமாக, வடபழனி கோயிலிலே பெண்ணை அறங்காவலராக நியமித்திருக்கிறோம். நெல்லையப்பர் கோயில் போன்ற பெரிய கோயில்களிலே பெண்களை அறங்காவலர்களாக நியமனம் செய்திருக்கிறோம். மேற்கொண்டு பெண்கள் விண்ணப்பம் செய்வார்களானால், அவர்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு, எத்தனை பேர் மனு போட்டாலும் அவர்களை நியமனம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அதற்காக சட்டத்திலே விதி தேவையில்லையென்று கூறுகிறேன். அதை வலியுறுத்த வேண்டாமென்று கோருகிறேன்.

அடுத்து திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒன்று கூறினார்கள். விண்ணப்பத்திலே குறைபாடுகள் இருக்குமானால் அவற்றைப் பரிசீலனை செய்து நீக்கிவிட்டு எவை எவை சட்டப்படி தேவையோ அவைகளை வைத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.





ஆகவே, அவர்கள் சொல்லிய கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தத் திருத்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Minister has stated that some women have been appointed as Trustees. I do know that some women have been appointed but how many have been appointed? Not even half of the members belonging to the Harijans have been appointed. Now there are 491 Harijans on the Board and how many women are there? I do not think it would exceed a dozen. That is why I want that a woman must be on the Board of a listed temple. A listed temple which has got an income of Rs. 20,000 can appoint five Trustees and out of them one woman can be appointed. . . .

(MR. CHAIRMAN sounded the gong.)

So, I am pressing my amendment.

The amendment of Thirumathi T. N. Anandanayaki was put and lost.

**திரு ஆ. கு. சுப்பையா :** ஐயா, அமைச்சரவர்கள் என்னுடைய திருத்தத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டதால் நான் என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

The amendments of Thiru A. K. Subbiah were, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clause 1, the preamble and the long title were put and carried.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, நியாய வாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/72)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, நியாயவாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/72) சட்டப்பேரவையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

**(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, நியாய வாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1972.)**

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, Sir. I beg to move that the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill,* 1972 (Legislative Assembly Bill No. 26 of 1972), be taken into consideration.

The Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), and the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956), were extended to Shencottah taluk of Tirunelveli district by the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Shencottah taluk) Act, 1959 (Tamil Nadu Act 28 of 1959), as the system of land tenure and the system of tenaicy in Shencottah taluk were found to be the same as those prevalent in the rest of Tamil Nadu. The extension of the two Acts to Kanyakumari district was, however, kept in abeyance pending introduction of ryotwari settlement in that district. Ryotwari settlement has since been introduced in that district and

* Published in the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated 10th August 1972.





it is now time for extending the two Acts to Kanyakumari district. The Government have, therefore, decided to extend the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955) and the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) to Kanyakumari district.

The Bill gives effect to the above decision.

Sir, I commend the motion for the acceptance of the House.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிற்கு சட்டங்களைக் கொண்டுவந்து அவற்றை அமல் நடத்துவதற்காகத் திருத்தங்களைக் கொண்டுவந்திருப்பதை வரவேற்று நான் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக ராஜ்யப் பிரிவினை ஏற்பட்டபொழுது அங்கே தனிச் சட்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆதலால் பல சட்டச் சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. படிப்படியாக அந்தச் சட்டச் சிக்கல்களையெல்லாம் தீர்க்கக்கூடிய வகையில் இந்தச் சட்டங்களையெல்லாம் ஒன்றாக இணைப்பதற்காக நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. 1957 ஆம் ஆண்டிலே சில எக்ஸ்டென்ஷன் லாஸ் எல்லாம் கொண்டுவரப்பட்டன. அதற்குப் பிறகு வேறு விதமான சட்டங்களை எல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். முதன்முதலாக நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ரிக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ்-க்காக ஒரு சட்டம் அந்த ஜில்லாவில் அமல் நடத்தப்பட்டது. அந்தச் சட்டம் எந்த நாளிலிருந்து அமல் நடத்தப்பட்டதோ அந்த நாளிலிருந்தே இந்தச் சட்டத்தையும் அமலாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இது சம்பந்தமாக ரிஜிஸ்டர் தயார் செய்யப்பட்டு ஸ்டேட்மெண்ட் எல்லாம் வாங்கப்பட்டு அது சம்பந்தமாக கெஜட்டிலே வந்திருக்கிறது. யார், யார் குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள் என்று பதிவுசெய்யப்பட்டு இருக்கிறது. ஒருவேளை அந்த ரிஜிஸ்டர் பரிபூர்ணமாக செயல்படவில்லை என்று நினைத்தாலும் இது ஒரு முக்கியமான காரியம்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 ஆகஸ்ட் 18

ஆதலால் அந்த நாளிலிருந்து அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரிக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் எடுக்கின்றபொழுது, எழுத்துமூலமாக ரிக்கார்டு இல்லாத காரணத்தினாலே பலர் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. வெள்ளப் பார்வையாளர்கள் என்ற முறையிலே லைசென்ஸீஸ் என்று சொல்லிக்கொண்டு இருக்கிற இடங்களில் எல்லாம் இந்த ரிக்கார்டு புறக்கணிக்கப் பட்டிருக்கிறது.

கல்குளம் தாலுகாவிலே இந்தச் சட்டம் வந்தபொழுது பெரிய நிலச்சுவான்தார்கள் பல தொந்தரவுகளைக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தக்கலை ஒன்றியத்தின் தலைவராக தி. மு. க. தலைவராக இருந்த இரணியல் ரவி என்று சொல்லப்படுகின்ற சிவதாணுப் பிள்ளை அவர்களுக்கு பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதிலே பயிர் செய்து கொண்டிருந்த ஏழை விவசாயிகளின் பயிர்களையெல்லாம் போலீஸ் பாதுகாப்போடு அழித்தார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத் திற்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டு விசாரணை எல்லாம் நடந்தது. பலாத்காரமான காரியங்கள் நடப்பதற்கு போலீஸ் உடந்தையாக இருந்ததால் அவர்கள் தாங்கள் பயிர்செய்திருந்த பயிர்களையெல்லாம் அழித்தார்கள். இந்த வகையிலே அவர்கள் சட்டத்தின் சந்துபொந்துகளிலே நுழைந்துகொள்கிறார்கள். ஆகவே சட்டங்கள் எல்லாம் எக்ஸிகியூஷனுக்குப் பொருந்தக்கூடிய சட்டங்களாகத்தான் இருந்தன. யார் உண்மையாக உழுது பயிரிடுகிறார்கள் என்று விசாரணை செய்வதிலே பலவிதமான காலதாமதங்கள் இருப்பதாலே கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சட்டத்தின் முன்னால் எல்லாரும் சமம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்திலே அந்த ஜில்லாவைப் பொறுத்த வரையிலே பல ஊழல் குற்றச்சாட்டுகள் நடை பெற்றிருக்கின்றன. நான் வேண்டுமென்றே பழிசுமத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. டிரஸ்ட் நிலங்களைப் பயிர்செய்வதிலேகூட பல காரியங்கள் நடைபெறுகின்றன. இப்பொழுது லைசென்ஸீஸ் என்ற ரசீதைக் காட்டிக்கொண்டே பல டிரஸ்ட்கள் இருந்து



1972 ஆகஸ்ட் 18] [திரு ஆர். பொன்னப்ப நாடார்]

வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் தேவி நாயகர் டிரஸ்ட் போன்ற டிரஸ்ட்கள் எல்லாம் பாட்டம் என்று சொல்லாமல், பாட்டம் என்று சொன்னால் குத்தகைச் சட்டம் என்ற அமைப்பிலே வந்துவிடும் என்ற காரணத்தினால், லைசென்ஸீஸ் என்ற முறையிலே பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இந்தச் சட்டத்தை உதாசீனம் செய்யக்கூடிய முறையிலே நடந்து கொண்டு வருகிறார்கள். ஆகவே ரிக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் ஆக்ட் வந்த நாளிலிருந்து இதையும் அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஜில்லாவிலே கட்டுப்பாட்டம் என்ற அமைப்பு இருந்து வருகிறது. அந்த முறையிலே நிலச்சுவான்தார்கள் எவ்வளவு கேட்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும். 60, 40 என்பது இல்லை. உழுபவனுக்கு 60, நிலத்துக்காரனுக்கு 40 என்ற முறை அங்கு இல்லை. அது இருந்தால் நல்லது. எனவே ரிக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் என்ற அந்த விதியை சரியாக அங்கே ஏற்படுத்த முடியுமா என்பதை ஆய்வுசெய்யவேண்டும்.

ரயத்துவாரி முறை அங்கே அமல் நடத்தப்பட்டு வருகிறது. அதையொட்டி வேறு சட்டங்களிலேயும் வேண்டிய திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக கோர்ட் பீஸ் ஆக்டிலே ஒரு திருத்தம் செய்யவேண்டும். அந்தப் பகுதியிலே ஒரு வழக்கு, அல்லது ஒரு தாவா செய்யவேண்டுமென்றால் கோர்ட் பீஸ் கொடுக்கவேண்டுமென்றால் வருவாயின் அடிப்படையிலே மார்க்கட் வேல்யூவை நிர்ணயிக்கவேண்டுமென்றிருக்கிறது. ரயத்துவாரி முறை ஏற்பட்டதாலே எவ்வளவு வருவாய் என்று பார்த்து அதற்குத் தகுந்தபடி கோர்ட் பீஸ் நிர்ணயிக்கின்ற அளவிலே அந்த ஆக்டிலே திருத்தம் கொண்டுவரவேண்டும்.

பொதுவாகவே உழுபவனுக்கு அதிக ஊக்கம் அளிக்கக்கூடிய நிலைமையில் நாம் இருப்பதால் சட்டங்களை அமல் நடத்துவதிலே நிர்தாட்சண்யமாக அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே இருக்கின்ற முற்போக்கான கருத்துக்களையும், அம்சங்களையும் பொதுவாக வரவேற்று இந்தச்

சட்டத்தை நான் முன்பே கூறியதுபோல் அந்த நாளிலிருந்தே அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவை நான் ஆதரித்து, ஒருவேற்று சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் காலம் கடந்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1956-ஆம் ஆண்டிலே குத்தகைதாரர் நியாயவாரச் சட்டம் இந்த அரசால் கொண்டுவரப்பட்டது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறேன். 1956-ஆம் ஆண்டு குத்தகைதாரர் சட்டத்தை ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் வந்ததற்கு ஒரு சரித்திரமே உண்டு. அந்த நேரத்தில் தமிழகத்திலே விவசாயிகள் ஒரு பெரிய கிளர்ச்சி செய்தார்கள். தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு போராட்டம் நடத்தினார்கள். அதன் காரணத்தினால் விவசாய சங்கத்தையே சட்ட விரோதமாக்கினார்கள். 1952-ஆம் வருஷம் விவசாயிகள் ஒரு நல்ல தீர்ப்பை அளித்தபிறகு, விவசாயிகளின் கோரிக்கையைப் புறக்கணிக்கமுடியாத நிலைமையில் அந்த நிலை வந்ததற்குப் பிறகு தான் இந்த குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்பிறகு, 1956-ஆம் வருஷம் நியாய வாரச் சட்டம் என்று 60 விவசாயிக்கும், 40 நிலச்சுவான்தார்களுக்கும் என்ற சட்டத்தை அப்பொழுது முதலமைச்சராயிருந்த காமராஜ் கொண்டு வந்தார். இன்று இந்த இரண்டு சட்டங்களும் அமலில் இருக்கின்றன. இவற்றை அமலாக்குவதற்காக கோர்ட்டுகள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றன. நியாய வாரக் கோர்ட்டுகள் என்றும், ரெவின்யூ கோர்ட்டுகள் என்றும் இருக்கின்றன. நியாய வாரக் கோர்ட்டுகளில் தாசில்தார் அந்தஸ்தில் நியாய வார அதிகாரிகளாக இருந்து பைசல் செய்கிறார்கள். அவர்களின் விசாரணையை எடுத்துக்கொண்டால், குத்தகைதாரர்களுக்கு விரோதமாகவே பெரும்பாலும் தீர்ப்பளிக்கிறது. அவர்கள் பல்வேறு முறைகளைக் கையாளுகிறார்கள். விவசாயிகளுக்கு அதிகம் விளைந்திருக்கிறது என்று யாராவது ஒருவர் சொன்னால் அதை வைத்துத் தீர்ப்புக்



கூறப்படுகிறது. சில விவசாயிகளுக்கு அந்த வாரத்தை நிர்ணயம் செய்வதில் கோர்ட்டுகளுக்கு இழுக்கடிக்கப்பட்டு பெரிய நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். அதுபோல குத்தகை அளக்கவில்லை அல்லது வேறு காரியத்திற்கு நிலத்தைப் பயன்படுத்துவதாக பிராது செய்தால் ரெவின்யூ கோர்ட் வெளியேற்றலாம் என்று இருக்கிறது. குத்தகை அளக்கவில்லை என்றால், குத்தகைதாரர்கள் பெரிதும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள், கொடுக்கச் சக்தி யற்றிருக் கிறார்கள் என்று சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய அரசாங்கம் குத்தகை பாக்கிகளை ரத்து செய்து சட்டம் நிறை வேற்றியிருக்கிறது. சட்டம்கூட இன்னும் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் பெறாமல் அப்படியே இருக்கிறது. பிறகு ஏதாவதொரு நிலையேற்பட்டால் விவசாயிகள் அவதிக் குள்ளாகக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த விவசாயிகளுக்காக வைத்திருக்கும் கோர்ட்டுகள், விவசாயிகளின் பாதுகாப்பிற்காகக் கொண்டுவரப்படும் சட்டத் தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக விவசாயிகளை வெளியேற்று வதற்கு அல்லது விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதற்கு செய்யும் நிலையிலே அதிகாரிகள் தங்கள் நடவடிக்கைகளை மேற் கொள்கிறார்கள். இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். தஞ்சாவூர் மாவட்டத்திலே தான் இந்த விவகாரங்கள் அதிகமாக நடக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேமாதிரி 1956-ஆம் வருஷமே ஹைகோர்ட்டில் ரிட் போட்டது இன்னும் முடிவிற்கு வராமல் இருக்கிறது. இப்படிப் பல நூற்றுக்கணக்கான கேஸ்கள் ஹைகோர்ட்டில் இருக்கின்றன. அவைகளை, அரசாங்கத் தரப்பிலே உள்ள வழக்கறிஞர்கள் சீக்கிரம் பைசல் செய்வதற்கான நடவடிக் கைகளை எடுப்பதன்மூலம் அந்த விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பை அளிக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, 16 ஆண்டுகளுக்குப் பிறகும் விவசாயிகளுக்கு 60-40 என்று சொல்வது மிகவும் மோசமானது. 60-ஐ 75-ஆகக் உயர்த்திக்கொடுக்க வேண்டும். குத்தகை செய்யும் விவசாயிகளுக்கு

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 ஆகஸ்ட் 18

75 என்று கொடுக்கவேண்டும். மற்றவைகளுக்கு உயர்த்துகிறார்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட கருணையோடு, அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இன்றைக்கு அதிக ஊதியம் கொடுப்பதாக அறிவித்தார்கள். அது மிகவும் பாராட்டுக்குரியது. 6 கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதேபோல உழுது கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் அந்தவிதமான நிலை வரவேண்டும். இது 23, 24 ஆண்டுகளுக்கு முன்பு போட்டது. அதற்கேற்ப குத்தகைதாரர்கள் மிகவும் குறைவாக வாரம் பெறுகிறார்கள். இப்பொழுது 16 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, இந்தக் குத்தகை வாரதாரர்களுக்கு 100-க்கு 75 வாரமும், நிலச்சுவான்தார்களுக்கு 25 வாரமும் என்ற சட்டத்தையும் அமைச்சரவர்கள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான சட்டமாகயிருந்தாலும், நியாய வாரச் சட்டமாக இருந்தாலும் பல சட்டங்கள் வந்திருக்கின்றன. 15, 16 சட்டங்கள் வந்திருக்கின்றன. எல்லாச் சட்டங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே சட்டமாகக் கொண்டுவரப்படும் என்று பல முறை சபையிலே அறிவித்திருக்கிறார்கள். அதையும் ஒருங்கிணைத்து ஒரே சட்டமாகக் கொண்டு வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, இந்தச் சட்டம் கன்னியாகுமரி ஜில்லா விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய ஒரு நல்ல அம்சம் என்று கூறிக்கொள்கிறேன். இந்தச் சட்டமானது, குத்தகை பதிவுச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறதோ அந்தத் தேதியிலிருந்து இது செல்லும் என்று அரசாங்கத் தரப்பிலே அந்தத் திருத்தத்தை அவர்களாகவே கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இல்லையென்றால் விவசாயிகள் அத்தனைபேரும் வெளியேற்றப்படக்கூடிய நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு எந்தவிதமான ஆதாரமும் இருக்காது. ஆகவே இந்தக் குத்தகை பதிவுச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த தேதியிலிருந்தே இந்தக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 18]

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இந்த இரண்டு சட்டங்களையும் கன்னியாகுமரி ஜில்லாவிற்கு விஸ்தரிப்பதற்கான மசோதாவை இந்த அவைமுன் கொண்டுவந்தமைக்காக அரசாங்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டமானது 1956-ஆம் ஆண்டு இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, இது ஒரு முற்போக்கான திட்டம் என்று எல்லாக் கட்சிகளாலும் வரவேற்கப்பட்ட திட்டம். 1956-வது ஆண்டு இந்த மாநிலத்தை ஆண்ட காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் அரசு இந்த மசோதாவை 16 ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றி அன்று முதல் விவசாயிகளுக்கு நன்மைகள் புரிந்திருக்கிறது என்று சொல்லும்போது நிச்சயமாக இந்த மசோதாவை 16 ஆண்டுகளுக்குப் பின்பாக இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரிப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டுவந்த அரசாங்கத்தைப் பார்க்கிலும், 16 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மசோதாவை நிறைவேற்றிய அரசு மிகவும் முற்போக்கான அரசு என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, இந்த நிலையிலே 1956-வது ஆண்டு நவம்பர் திங்கள் முதல் தேதியிலே கன்னியாகுமரி மாவட்டம் இந்தத் தாய்த் தமிழகத்தோடு இணைந்தாலும்கூட 16 ஆண்டுகளாக இந்த முற்போக்குத் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்காமல் இருந்தது மிகவும் வருந்தத்தக்கது என்பதை இந்தத் தருணத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இப்பொழுது இருக்கும் முறை பாதி வாரம் என்ற நிலையில் அமலில் இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டம் விஸ்தரிப்பதால் 60-க்கு 40 என்ற நிலை அங்கே வருகிறது. ஆகவே, இந்த அளவிற்கு குத்தகைதாரர்களுக்கு நன்மை செய்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் 1955 ஆம் ஆண்டு சட்டத்தில் சில குறைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நில உடைமைக்காரர்களுக்குக் கூட விவசாயத்தில் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியைக் கொடுக்கிறோம். ஆனால் நெல்லைக் கொடுக்கிறோம். அதோடுகூட வைக்கோலும் கொடுக்க

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 ஆகஸ்ட் 18

வேண்டுமென்ற ஒரு ஷரத்து அங்கு இருப்பதைக் காணும் பொழுது நிச்சயமாக அது தேவையற்றது என்பதை இந்த அரசாங்கத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற குத்தகைதாரர்கள்தான் யாடு, கன்றுகள் வைத்திருக்கிறார்கள். அதற்கு இந்த வைக்கோலும் தேவைப்படுகிறது. நில உடைமைக்காரர்களுக்கு வைக்கோல் தேவையில்லை. ஆகவே, இந்த ஷர்த்து இந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டிய ஷரத்தாகக் காணப்படுகிறது. ஒருவேளை அன்றிருந்த நிலையில், இந்தச் சட்டம் இயற்றுகின்றபொழுது எது சேர்க்கப்பட்டிருந்தாலும் இன்றுள்ள நிலையில் இந்த ஷரத்து தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சொந்தத் தேவைக்கு என்று சில குத்தகைதாரர்களை சில நேரங்களில் நில உடைமையாளர்கள் வெளியேற்றலாம் என்று காணப்படுகிறது. அது தேவைதானு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த ஷரத்தைத் துஷ்பிரயோகம் செய்து இன்று பல குத்தகைதாரர்கள் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதைப் போன்று இன்றைக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் இந்தச் சட்டத்திலிருக்கின்ற குறைபாடுகளைப் பயன்படுத்தி தங்கள் செல்வாக்கில் இருக்கிற அதிகாரிகளின் துணையோடு கூட எவ்வளவு இன்னல்களைப் புரிகிறார்கள் என்பதைத் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினார்கள். நான் இந்தத் தருணத்தில் கூற விரும்புவது என்னவென்றால், சட்டத்தை இயற்றுவது பெரிதல்ல. ஆனால் சட்டத்தை அமல் நடத்த வேண்டும், சட்டம் எல்லா மக்களுக்கும் ஒன்றுதான் என்ற எண்ணம் இருக்க வேண்டும், எல்லோருக்கும் நீதி வழங்க வேண்டும், அதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இந்தத் தருணத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற குறைபாடு நிச்சயமாக சட்டத்தை அமலாக்கும்போது இருக்கக் கூடாது என்று கூற விரும்புகிறேன். இதுவரையில் அதுபோன்ற தவறுகள் இருந்தாலும் கூட இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள்



1972 ஆகஸ்ட் 18] [திரு ஜே. ஜேம்ஸ்]

ஏற்படாமல் அரசாங்க ஊழியர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு இல்லாமல் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு முறை, மற்றவர்களுக்கு ஒரு முறை என்ற வகையில் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும், அதற்கான தாக்கீதை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தனது சொந்தத் தேவைக்காகக் குத்தகைதாரர்களை அப்புறப் படுத்தும் ஷரத்தைப் பயன்படுத்தி பல நிலச்சுவான்தார்கள் குத்தகைதாரர்களைத் தேவையற்ற முறையில் அப்புறப்படுத்துகிறார்கள். அந்தப் பகுதியை இந்தச் சட்டத்திலிருந்து அகற்ற வேண்டும். அதற்கான மசோதாவையும் அதிகக் காலதாமதமின்றி இந்த மன்றத்தில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஷரத்தின் நோக்கத்தைப் பற்றி ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்பதில் கூறும்போது, ரயத்துவாரி செட்டில்மென்ட் கன்னியாகுமரி ஜில்லாவில் அமல் நடத்தப்படாத காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது ரயத்துவாரி செட்டில் மென்ட் அமல்படுத்தப்பட்டு விட்டதால் இதனை அப்பகுதிக்கும் விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ரயத்துவாரி செட்டில்மென்ட் அமல் நடத்தும்போது இன்று இருக்கும் குறைபாடுகளை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்தபோதும், இந்த மன்றத்தில் பல முறையும் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

இப்போது ரூல் 91 நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. இந்த நோட்டீஸ் எல்லா மக்களுக்கும் போய்ச் சேராத காரணத்தால் அவர்கள் இந்த நோட்டீசின் அடிப்படையில் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய மறுமொழிக்குக் காலதாமதமாகி இருக்கிறது. ஏற்கனவே, காலதாமதம் ஆகி இருந்தாலும் இன்னும் அதற்குக் காலம் கொடுத்து இந்த நோட்டீசிற்கான மறுமொழிக்கு அவகாசம் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த அரசாங்கத்தைப் பாராட்டி அமர்கிறேன்.

**மணலி திரு. சி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, குடியானவர் பாதுகாப்புச் சட்டத்தையும், குடியானவர் நியாய வாரச் சட்டத்தையும் கன்னியாகுமரி ஜில்லாவில் பயத்துவாரி செட்டில்மென்ட் ஏற்பட்டதன் காரணமாக விஸ்தரிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை வேறு விதமாகக் கொண்டு வந்திருந்தால் பட்டற்ற மகிழ்ச்சி அடைந்திருப்பேன். இந்த இரண்டு சட்டங்களையும் தமிழகத்தில் அமல் நடத்தியதில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்துக் கொண்டு திருத்தச் சட்டமாக கன்னியாகுமரி ஜில்லாவும் உள்பட்டு அமலுக்குக் கொண்டு வரக் கூடிய விதத்தில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடுமானால் உள்ளபடியே மேலும் வரவேற்கக்கூடியதாக இருந்திருக்கும். சொந்த அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது பல சந்தர்ப்பங்களில் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள் இதனை அமல் நடத்துவதிலே பல ஊனங்கள் இருந்திருக்கின்றன. பலவிதமான ரெப்ரசென்டேஷன்கள் மந்திரிகளுக்கும், கலெக்டர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு சட்டங்களும் நல்ல சட்டங்களாக இருந்தாலும் அமல் நடத்துவதிலே பல ஊனங்கள் இருந்திருக்கின்றன. ஆகவே, அந்தக் குறைகளை எல்லாம் போக்கும் வகையில் இந்த இரு சட்டங்களுக்கும் திருத்தச் சட்டங்களாக கன்னியாகுமரி பகுதியையும் உள்ளடக்கிக் கொண்டு வந்திருந்தால் நல்ல முறையில் அமைந்திருக்கும்.

ரெவின்யூ கோர்ட்டுகளிலும், மேல் கோர்ட்டுகளிலும் சொத்துரிமைக் கண்ணோட்டம் இருக்கக்கூடிய வர்க்கத்தில் இருந்து தான் பெரும்பாலான அதிகாரிகளும், ஜட்ஜுகளும் இருக்கக் கூடிய நிலைமையில் அவர்கள் இந்தச் சட்டங்களை வியாக்கியானம் செய்யும்போது விவசாயிகளை வெளியேற்றும் விதத்தில், ஃபேர் ரென்ட் கிடைக்காத நிலைமையில் செய்து வருகிறார்கள்.

60-40 சட்டம் 16 வருஷங்களுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. அதைப் பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய சுப்பையா அவர்கள் கூறினார்கள். பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகும் அதே 60-40 என்று பிரித்துக் கொள்ளும் நிலைதான் இருக்கிறது. அதுகூடச் சரியாகக் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. காலப் போக்கு மாறி வருகின்ற நிலையில், 25 வாரத்திற்கு மேல் நிலச்சுவான்தார்களுக்குக்



கிடைக்கக்கூடாது என்ற கொள்கை நாடு பூராவும் ஏற்பட்டு, ஜனநாயகக் கொள்கையாக நிலச்சீர்திருத்தக் கொள்கை முக்கியமான கொள்கையாக இருக்கும்போது அதே 60-40-ஐ வைத்துக் கொண்டு அதையும் அமல் நடத்துவதில் ஊனங்கள் இருக்கும் போது எந்த அளவுக்கு அது பயன்படப் போகிறது என்று புரியவில்லை.

இப்போது இன்னொரு சட்டத்தையும் நிறைவேற்றி இருக்கிறார்கள். பிரசிடென்ட் அனுமதி கிடைக்கவில்லை என்றாலும் கூட இந்தச் சட்டத்தை அமுல் கொண்டு போகிற காலத்தில் பண்ணையாள் பாக்கி வைத்திருக்கும் குத்தகை வாரம்தாரர்கள் வெகு சீக்கிரத்தில் பாக்கியைப் பெற பலவிதமான காரியங்களில் ஈடுபடுவது என்பது இயல்பான விஷயம். இந்த விஷயத்தைப் பற்றி யோசித்து இதற்கு என்ன செய்தால் தடுக்க முடியும் என்று பார்க்க வேண்டும். பிரசிடென்டின் அனுமதிக்கு கையெழுத்தாகி வரும் வரையில், இடைக்காலமாக பழைய பாக்கிகள் வசூலிக்கப்படாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிராசுதாரர்கள் எப்படியாவது தங்களுக்கு வரவேண்டிய பாக்கியை வசூலிக்க வேண்டுமென்ற வகையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன் வருவார்கள். அதைப் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

விவசாயிகளுக்காகப் பல சட்டங்கள் வந்திருக்கின்றன. அவை போதாது. அந்த சட்டங்களை அமல் நடத்தும்போது அனுபவங்களை அடிப்படையாக வைத்து ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நியாயமாகப் பல திருத்தச் சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். ஏற்கனவே சொல்லியதுபோல் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கையில் இருக்கும் ரிகார்டுகளைப் பார்க்கும்போது அவர் ஆக்கவும் வல்லவர். அழிக்கவும் வல்லவர் என்ற வகையில் முக்கியமான பொறுப்பை வைத்திருக்கிறார். அவர் வேகமாகச் செயல்பட்டு பல திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தால்தான் தமிழ்நாட்டின் அரசியலில் வருங்காலம் இருக்கிறது என்பதை வலியுறுத்தி, விவசாயிகளை வெளியேற்றுவதைத் தடுக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் பல உறுப்பினர்கள் கருத்துச் சொன்னாலும் கூட சில முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். பொதுவாக, ஏற்கனவே இருந்த இரண்டு சட்டங்களையும்—தமிழ்நாடு கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட், 1955, தமிழ்நாடு கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் பேமென்ட் ஆப் ஃபேர் ரென்ட் ஆக்ட் 1956 ஆகிய இரண்டு சட்டங்களையும்—கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் நோக்கம்.

முதல் முதலாக திரு—தமிழகம், தாய்த் தமிழகத்தோடு சேர்ந்து பதினாறு ஆண்டுகள் ஆகிவிட்டன. பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சட்டங்கள் புதிதாக நம்மோடு சேர்ந்த திரு—தமிழகத்திற்குப் பொருந்தும் என்று சொன்னால் அது எந்த முறையிலும் கூட நியாயப்படுத்த முடியாது. சில காரணங்கள் சொல்லப்பட்டாலும் கூட அந்தக் காரணங்கள் பொருத்தமானதல்ல, போதுமானதல்ல என்று நான் முதல் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது 1952-ஆம் வருஷத்தைப் பற்றி திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்றைக்குத் தஞ்சை மாவட்டம் பூராவும் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுவதை எதிர்த்து வலுவான பெரிய இயக்கம் நடந்ததும் அன்றைக்கு ஐக்கிய முன்னணியாக இருந்த தலைவர்கள் எல்லாம், குறிப்பாக பிரகாசம் அவர்கள் தலைமையில் நடந்த மாநாடும், அந்த மாநாட்டின் முடிவை அமல் நடத்தாமல் இருக்க வேறு வழி இல்லை என்ற முறையிலும் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த ராஜகோபாலச்சாரியார் அவர்கள் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

அது உண்மையிலே விவசாயிகளைப் பொறுத்தவரையில் நிலச் சீர்திருத்தத்திற்கான ஒரு ஆரம்பமாக இருந்தது. 52-ல் என்ன நிலை இருந்ததோ அதே நிலைதான் 72-லும் இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் குத்தகை விவசாயிகளைப் பொறுத்தவரையில் குத்தகை



விவசாயிகள் என்றிருக்கக்கூடிய இந்த அமைப்பே இருக்கக் கூடாது என்பதன் அடிப்படையில் மசோதாக்கள் கொண்டுவரப் பட வேண்டும். **What is after all abolition of landlordism?** இம்மாதிரியாக குத்தகை விவசாயிகள் இருக்க வேண்டும், அவர்களை வெளியேற்றலாம். வெளியேற்றப்படாமல் இருப் பதற்கு சில சட்டதிட்டங்கள் போடுவது என்றால் **it defeats the very purpose of abolition of landlordism.** நிலப் பிரபுத்துவத்தை ஒழிக்கவேண்டுமென்று சொன்னால் குத்தகை விவசாயிகளுக்குப் படிப்படியாக அந்த நிலம் அவருக்கு சொந்த மாகியிருக்கிறது என்பது நிலச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக நாம் வரம்பு கட்டியபின் வரம்பிற்கு மேல் இருக்கக்கூடிய நிலங்கள் இந்தக் குத்தகை விவசாயிகளுக்கு சொந்தமாகும் என்றும் தனியாக உழுது பயிரிட முடியாமல் இருப்பார்களே யானால் அது குத்தகை விவசாயிக்குப் போகக்கூடிய முறை வந் தால்தான் நிலப் பிரபுத்வ முறை ஒழிந்ததாக அர்த்தம்.

பல தடவை எல்லா மாநிலங்களையும் விட முன்னேற்றகரமான முறையில் நிலச் சீர்திருத்தங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது என்றால் ஜீர்ணிக்க முடியாத ஒரு விஷயம். 1—1—1970-க்குப் பிறகு இம்மாதிரி குத்தகை விவசாயி என்ற அமைப்பே கோளாவில் கிடையாது. அப்படி ஒரு அமைப்பை இங்கு வைத்துக்கொண்டு அவர்களை வெளியேற்றுவதா வேண்டாமா என்ற சர்ச்சையில்தான் இத் திருத்தச் சட்டங்கள் இருக்கின்றன. இது குறித்து இரண்டு மூன்று தடவை நான் கூறியிருக்கிறேன். இப்போதும் அதை அழுத்தமாக கூற விரும்புகிறேன். குத்தகை விவசாயிகள் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் சட்டங்களை அமைத் திருக்கிறோம். அப்படி அமைப்பதில் உள்ள ஊனங்களை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த ஊனங்கள் என்ன? எவ்வளவு குத்தகை கொடுக்கவேண்டுமென் பதைப் பொறுத்தவரையில் 56-ல் அன்றைக்கு என்ன சொன்னோமோ அதைத்தான் இன்றைக்கும் சொல்கிறோம். அன்று 60-40 சட்டம் இயற்றப்பட்டது. எனக்கு ஞாபகம் இருக்கிறது. நீலா சாகுபடி சம்பந்தமாகவுள்ள ஒரு கூட்டத்தில் பேசும்போது கிட்டத்தட்ட எல்லா உறுப்பினர்களுமே 80-20 என்று போடுவது,

[திரு. கே. டி. கே. தங்கமணி][1972 ஆகஸ்ட் 18

75-25 என்று போடுவது, 60-40 என்பது இந்தக் காலத்திற்கு நியாயமில்லை என்று சொன்னார்கள். இந்த மசோதாவை ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு எக்ஸ்டென்ட் செய்கிறபோது the whole concept of fixity of tenure is lacking என்ற முறையில் இருக்கிறது. மணலி அவர்கள் குறிப்பிட்டதுபோல் இதோடு சில திருத்தங்களையும் சேர்த்துக் கொண்டு வந்தால் உதவியாக இருக்கும்.

60-40 என்பதற்குப் பதிலாக 75-25 என்று கொண்டு வருகிறோம், எக்ஸ்டென்ட் செய்வதோடு கூட பல திருத்தங்களையும் கொண்டு வந்திருக்கிறோம் என்று அம்மாதிரி திருத்தங்கள் கொண்டுவரலாம்.

அடுத்தபடியாக, எந்தக் காரணத்தைக்கொண்டும் நிலத்தை விட்டு வெளியேற்றப்படமாட்டார்கள் என்றிருக்கவேண்டும். பழைய பாக்கியிருந்தால் வெளியேற்றப்படலாம் என்பதற்கு ஒரு ஷரத்து இருக்கிறது. அப்படிப்பட்ட பாக்கி இருந்தால் வெளியேற்றக் கூடாது என்று ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டு வந்தோம், We can discuss the entire legislation. 52-ம் ஆண்டு சட்டத்தில் இருக்கிறது, 55-ம் ஆண்டு சட்டத்தில் இருக்கிறது, 56 சட்டத்திலும் இருக்கிறது. அதை மாற்றி இன்றைக்கு குத்தகை விவசாயிகளாக இருப்பவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற நிலை இருந்தால் தான் குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு இருக்கும். ரெவன்யூ போர்ட் மெம்பர் சுற்றுப்பயணம் செய்யும்போது பார்க்கிறோம். குத்தகை விவசாயிகளை அடங்கலில் பதிவு செய்து விட்டார்களா என்பதற்கான அந்த ஷோரத்தைப் பார்த்தால், அடங்கலில் பதிவு செய்துள்ள குத்தகை விவசாயி என்று இருக்க வேண்டுமே தவிர முதல் ஜட்டோ நிலப்பிரபுதான். குத்தகை விவசாயி கடைசியில்தான் வருகிறான். குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற நிலை இன்றி நிலப்பிரபுக்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற முறையில் தான் விதிகளும் பாரங்களும் இருக்கின்றன என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். அடங்கலில் பதிவாகிறது என்பதே பெரிய காரியமாக இருக்கிறது. குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று, அவர்கள் பெயர்களை ரிக்கார்ட் செய்யவேண்டுமென்று ஏற்பாடு



1972 ஆகஸ்ட் 18] [திரு. கே. டி. கே. தங்கமணி]

செய்தால் அதில் பதிய முடியாத நிலைபற்றி. அதைத்தான் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரிக்கார்ட்டில் அவர்கள் பதிவு செய்ய முடியவில்லை.

ஒரு பெரிய இயக்கம் நடந்தது. கிருஸ்துவ கோவிலைச் சேர்ந்தவர்கள். நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். 40, 50 ஆண்டுகளாக குத்தகைக்கு இருந்த விவசாயிகளை வெளியேற்ற முயற்சி செய்து கடைசியில் வந்த காம்ப்ரமைஸில்கூட குத்தகை விவசாயி என்று பதிவு செய்ய அவர்கள் தயாராயில்லை. ஒரு பெரிய எதிர்ப்பு இருக்கும்போது பழைய சட்டத்தை அப்படியே டிரான்ஸ்போர்ட் செய்கிறோம் என்று சொல்வது போதாது. இன்று இது எக்ஸ்டென்ட் செய்யப்படுகிறது. ஏற்கனவே செய்த சட்டங்கள் இன்றும் கோர்ட்களில் உள்ளன. 56-ல் போட்ட ரிட் கூட இன்னும் முடியாமல் இருக்கிற நிலை இருப்பதாகக் கூறப்பட்டது. சில விவரங்கள் கொடுத்தால் நல்லது. குத்தகை கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள் யார் யார்? எந்தெந்த கேஸ்கள் இருக்கின்றன? என்ற விவரங்களைக்கொடுத்தால் நல்லது.

இன்னொரு அம்சம். நிலத்தை விட்டு விவசாயிகள் வெளியேற்றப்படக்கூடாது. அப்படி வெளியேற்றிய நிலப்பிரபுகள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? நடவடிக்கைகள் எடுக்க என்ன ஷரத்துக்கள் இருக்கின்றன? கேரள சட்டத்தில், 56-ல் நிலத்தை விட்டு விவசாயிகளை வெளியேற்றக் கூடாது என்று இங்கு அந்தமாதிரி கேரளாவிலும் வந்தது. 57-ல் அங்கு, அந்த சமயத்தில் நான் கேரளாவிற்கு போக வேண்டிய நிலை இருந்தது. அங்கு ஒரு பெரிய ஜன்மி இருந்தார். மிகப் பெரிய நிலச்சுவாந்தார். அவர் ஒரு குத்தகை விவசாயியை வெளியேற்றினார். அதே நேரத்தில் இங்கு மதுரை மாவட்டத்தில் பொதும்பை என்ற ஊரில் ஒரு சம்பவம் நடந்தது. அங்கு ஒரு விவசாயி வெளியேற்றப்பட்டார். அங்குள்ள விவசாயிகள் பூராவும் நாங்கள் சேர்ந்து உழுதுகொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலை வந்தபோது அவர்களை வெளியேற்றுவதற்கு ரிசர்வ் போலீஸ் கொண்டு வரப்பட்டு அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். சட்டப்படி அவர்களுக்கு பாதுகாப்பு

ஆனால் போலிஸ் நிலச்சுவாந்தார்களுக்கு பாதுகாப்பாக இருந்தார்கள். அதே நேரத்தில் கேரளாவில் அந்தப் பெரிய ஜன்மியை விலங்கு போட்டு ஏன் அந்த விவசாயியை வெளியேற்றினாய் என்று கேட்டு அவரை கைது செய்தார்கள். அமல் நடத்தும் முறைபற்றிச் சொல்கிறேன். குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு இருக்கும்போது அதற்கு விரோதமாகச் செயல்பட்ட நிலச்சுவாந்தார் அங்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அப்படி வெளியேற்றினால் தண்டனை கிடைக்கும் என்ற பயம் இருக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போகலாம், அடங்கலில் பதிவு செய்யாமல் இருந்தால் குத்தகை விவசாயி இல்லை. என்று சொல்லலாம் என்ற போக்கு இங்கு இருக்கிறது. இதை கன்னியாகுமரி ஜில்லாவிற்கு விஸ்தரிக்கப்போகிறோம் என்ற திருப்தி இருக்கலாம். சிறிய நிலம் வைத்திருப்பவர்களுக்கு வேண்டுமானால், அவர்கள் பாதிக்கப்பட்டால், நஷ்டயீடு கொடுக்கலாம். நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கலாம். தேவைப்பட்டால் 5,000 ரூபாய் ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக மற்றவர்களுக்கு கொடுத்தால் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு ரூ. 20,000 கொடுப்போம் வேண்டுமானால். இன்று நிலச் சீர்திருத்தம் என்பது ஏன் அதிகமாக வருகிறது என்றால் அது பெரிய உற்பத்திச் சாதனமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் மிகப் பெரிய உற்பத்திச் சாதனமாக நிலம் இருக்கிறது. 12 மாதமும் சாகுபடி செய்யமுடியும். அப்பேர்பட்ட ஒரு பெரிய உற்பத்தி சாதனத்தை வைத்துக்கொண்டு அதில் ஈடுபடுகிறவர்களுக்கு உற்சாகமூட்டமுடியாத ஒரு நிலை இருப்பதால் லட்சக்கணக்கான வாலிபர்களுக்கு இன்று வேலையில்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. கன்னியாகுமரி ஜில்லாவிற்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக கொண்டு வந்துவிட்டோம் என்றிருக்கக் கூடாது. விவசாயிகள் வெளியேற்றப்பட மாட்டார்கள், சிறு நிலச்சுவாந்தர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற அளவில் ஃபூல் ப்ரூஃபாக ஒரு சட்டத்தை விரைவில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரிப்புச் செய்கிற 1972-ம்



ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள், பாதுகாப்பு, நியாயவாரம் கொடுத்தல் ஆகிய இந்தச் சட்டத்தை அங்கத்தினர்கள் பொதுவாக வரவேற்றுப் பேசினார்கள்.

ஆனால், 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஏன் இந்தச் சட்டம் இவ்வளவு காலதாமதமாக இந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுகிறது என்ற கேள்வியைக் கேட்டார்கள். நான் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிற போதே, இப்போதுதான் ரயத்துவாரி செட்டில்மெண்ட் முடிந்தது, உடனே கொண்டு வந்திருக்கிறோம், என்று கூறினேன். "செங்கோட்டைப் பகுதியில் 1959-ம் ஆண்டே இது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. காரணம், செங்கோட்டைப் பகுதியில், நில உரிமை முறையும், நிலக் குத்தகை முறைகளும் தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் செயலிலுள்ள முறைகளைப் போன்றே இருந்ததால். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த இரு சட்டங்களையும் நீட்டிப்பது அந்த மாவட்டத்தில் ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செயலுக்குக் கொண்டு வரப்படும் வரை ஒத்திவைக்கப்பட்டது." அது இப்போதுதான் முடிந்த காரணத்தால். உடனே கொண்டு வந்திருக்கிறோம். இதிலே கால தாமதம் ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் உறுப்பினர் சுப்பையா அவர்கள். நீதிமன்றங்கள் பெயரால் தாசில்தார்கள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். நல்ல நோக்கத்தோடு தான் நாம் சட்டங்கள் கொண்டு வருகிறோம். மிகுந்த எச்சரிக்கை எடுத்துக்கொண்டு அதிலே உள்ள ஓட்டை உடைசல்களையெல்லாம் அடைத்து, நல்ல சட்டமாகத்தான் கொண்டு வருகிறோம். எங்காவது தவறு நடந்து இருக்கலாம். அப்படி தவறு நடந்து இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் இந்த மன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக சென்று இருந்தது. அந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று இங்கு வந்து ஒரு வார காலம் ஆகிவிட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் விவசாயிகள் ஒரு பசலிக்கு உண்டான

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 18

குத்தகையைக் கொடுத்து விட்டால்; ஏற்கெனவே கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியை கொடுத்து விட்டதாக ஆகிவிடும். இனிமேல் விவசாயிகளுக்கு எந்த விதமான அச்சமும் தேவை யில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதற்கும் தான் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது. எந்தப் பகுதியும் விடப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரிக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ்-க்காக ஒரு சட்டம் கன்னியா குமரி மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டது. அந்தச் சட்டம் எந்த நாளிலிருந்து அமல் நடத்தப்பட்டதோ அந்த நாளிலிருந்தே இந்த சட்டத்தையும் அமலாக்கவேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்தத் தேதி யிலிருந்து தான் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்பதில்லை. குத்தகைத் தீர்வை பதிவு செய்யப்பட்டு வைத்திருக்கிறவர்கள் எல்லோருக்கும் இந்தச் சட்டத்தின் படி பாதுகாப்பு கொடுக்கப் படும். நிச்சயமாக பாதுகாக்கப்படுவார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நேற்றைய தினம் வேளாண்மை உரிமை குத்தகை நிலங்கள் ஆவணச் சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக் கிறேன். அந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருகிறபோது, அந்தச் சட்டம் விவாதத்திற்கு வரும் போது இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குத்தகை விவசாயி என்று சிட்டாவில் எழுதியிருக்கவேண்டுமென்பதில்லை. நாம் போட்டு இருக்கும் உத்தரவுப்படி வாய் மூலம் நிரூபிக்கப் பட்டால் கூட பதிவு செய்து கொள்ளலாம். அப்படி நிரூபிக்கக் கூட அவர்கள் வரவில்லையென்றால் அங்கே போகிற அதிகாரி விசாரித்து அவன் குத்தகைதாரர் தான் என்று அறிந்தால் அதை யும் பதிவு செய்து கொள்ளலாம் என்று போட்டிருக்கிறோம். எவ்வளவு எளிதாக செய்ய முடியுமோ அவ்வளவு எளிதாகச் செய் திருக்கிறோம்.

இந்த நேரத்தில் அரசின் கொள்கை ஒன்றை தெளிவு படுத்த நான் விரும்புகிறேன். குத்தகை 60-40 அல்லது 75-25 என்று கேட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில் குத்தகைத்தாரர்கள்



1972 ஆகஸ்ட் 18] [திரு. ப. உ. சண்முகம்]

இன்டர்மீடியரீஸ் இருக்கக்கூடாது என்பது தான் கொள்கை. இதை காலம் கனிகிறபோது நல்ல நேரத்தில் ஏற்றவகையில் சட்ட மாக நிறைவேற்றியே தீருவோம் என்ற உறுதியை அரசின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நாங்கள் பின் வாங்கமாட்டோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். எவ் வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை அமுலுக்குக் கொண்டுவருவோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே இருக்கிற தவறுகளைத் திருத்தி, ஓட்டைகளை அடைத்து புதிதாக ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாதா என்று மணலி கந்தசாமி அவர்கள் கேட்டார்கள். இப்போது இருக்கிற சட்டத்தை விஸ்தரித்து இருக்கிறோம். அவ்வப்போது ஏற்படும் சிற்சில நடைமுறை பிரச்சினைகளை, அதில் உள்ள ஓட்டைகளை அடைப்பதற்கு அவ்வப்போது திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்வதில் தவறு இல்லை. அரசாங்கம் அதைச் செய்யத் தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்றுப் பேசியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக குற்றச்சாட்டு ஒன்றினை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் பல ஏக்கர் நிலங்களில் ஏழை விவசாயிகள் பயிர் செய்திருந்த பயிர்களை போலீஸ் பாதுகாப்பு வைத்து அழித்தார்கள் என்று கூறினார்கள். அந்த நிகழ்ச்சி என்னுடைய கவனத் திற்கு கொண்டு வரப்படவில்லை. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். எனக் குத் தெரியாது. எங்கே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதை அரசு நிச்சயமாகக் கண்டிக்கும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை தெளிவு படுத்திவிட விரும்பு கிறேன். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்க வேண்டும் என்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில்

இதைச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்யும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். எப்படி இந்தப் புரட்சிகரமான திட்டத்தை சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தான் அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும், குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, நியாயவாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 26/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2, 3, 4, 5, 6, 7 and 8 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

'That the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, 1972 (L.A. Bill No. 26 of 1972) be passed.'.

The motion was put and carried and the Bill was passed into law.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

239. Notification issued with G.O. Ms. No. 1554, Agriculture, dated the 2nd June 1972, in regard to regulation of trade over the purchase and sale of tamarind, gingelly and cane jaggery in the entire district of Dharmapuri. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

240. Notification issued with G.O. Ms. No. 267, Food, dated the 3rd July 1972, making a rule, for inclusion of cotton yarn bales in the Schedule to the Tamil Nadu Warehouses Act, 1951. [Laid on the Table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

241. Notification issued with G.O. Ms. No. 1463, Revenue, dated the 17th May 1972, in regard to an amendment to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act 1939 (Tamil Nadu Act X of 1939).]

242. Notification issued with G.O. Ms. No. 1550, Agriculture, dated 1st June 1972, in regard to an amendment to rule 38 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

243. Notification issued with G.O. Ms. No. 1339, Home, dated the 19th May 1971, in regard to an amendment to rule 112 of the Madras Children Rules 1940. [Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

244. Notification issued with G.O. Ms. No. 1356, Rural Development and Local Administration, dated the 3rd July 1972; in regard to an amendment to the Madras Khadi and Village

Industries Board Rules, 1960. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959.]

245. Notification issued with G.O. Ms. No. 1164, Home, dated the 26th April 1971, in regard to an amendment to the Tamil Nadu Children Rules, 1940, [Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920.)]

B. *Reports, Notifications and Other Papers.*

71. Notification issued with G.O. Ms. No. 1625, Revenue, dated the 1st June 1972 in regard to remission of stamp duty chargeable in respect of a sale deed to be executed in favour of the Tamil Nadu Electricity Board Staff Co-operative Housing Society Limited, Madras.

72. Notification issued with G.O. Ms. No. 1976, Revenue, dated the 7th July 1972, in regard to reduction in stamp duty chargeable in respect of sale deeds to be executed by the Tamil Nadu Housing Board in favour of the allottees of plots and flats.

73. Notification issued with G.O. Ms. No. 1749, Agriculture, dated the 21st June 1972 making the Tamil Nadu Inland Fisheries Lease and Licence Rules, 1972.

74. Report of Justice Thiru N. S. Ramaswami, Judge, High Court, Madras, Commission of Inquiry on the untoward incidents at Annamalai Nagar on 23rd July 1971 (Tamil).

## இணைப்பு

[20-ம் பக்கத்தில் 158-ஆம் எண்ணுள்ள கேள்வியில் குறிப்பிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*(அ)* தமிழ் நாட்டில் செம்மறியாடு வளர்ப்பு நிலையங்கள் எவையும் இல்லை. எனவே, இவ்வினா, தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வந்த செம்மறியாடு-கம்பளி வளர்ச்சிப்பணி நிலையத்தைக் குறிப்பிடுகிறது என்று கருதப்படுகிறது. இம் மாநிலத்தில் செம்மறியாடு-கம்பளி வளர்ச்சிப்பணி நிலையங்களை மீண்டும் தொடங்கும் கோரிக்கை எதுவும் அரசிடமில்லை.





*(இ) & (ஈ)* 1969 இறுதிவரை, தருமபுரி மாவட்டத்தில் செம்மறியாடு-கம்பளி வளர்ச்சிப்பணி நிலையங்கள் எட்டு செயல்பட்டு வந்தன. இந்தப் பிரிவுகள் மூடப்பட்ட பின்னர், அங்குள்ள கட்டிடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன அல்லது பயன்படுத்தப்படக் கருதப்பட்டுள்ளன :—

| செம்மறியாடு-கம்பளி வளர்ச்சிப் பணி நிலையம் அமைந்துள்ள இடம். | அங்குள்ள கட்டத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் முதலியன. |
|---|---|
| 1. குந்துமாரணபள்ளி | துணை நிலையம், குந்துமாரணபள்ளி. |
| 2. கம்பந்தொட்டி | துணை நிலையம், கம்பந்தொட்டி. |
| 3. உள்ளுக்குருக்கி | துணை நிலையம், உள்ளுக்குருக்கி. |
| 4. உத்தணபள்ளி | துணை நிலையம், உத்தணபள்ளி. |
| 5. குருபாரப்பள்ளி | கால்நடை மருந்தகம், பேரிகை. |
| 6. தேன்கனிக்கோட்டை | கால்நடை மருந்தகம் (அமைக்கக் கருதப்பட்டுள்ளது). |
| 7. ஆவலப்பள்ளி | ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, உண்மையில் கோழி வளர்ப்பவர்களுக்குக் குத்தகைக்கு விடக் கருதப்பட்டுள்ளது. |
| 8. தளி | |

(a) There were no sheep farming centres in Tamil Nadu. It is, therefore, presumed that the question refers to the Sheep and Wool Extension Centres functioning in Dharmapuri district. There is no proposal with the Government to revive the Sheep and Wool Extension Centres in the State.

(b) and (c) There were eight Sheep and Wool Extension Centres functioning in Dharmapuri district, till the end of 1969.

After the closure of these Units the buildings available there are being utilised or proposed to be utilised in the manner indicated below :—

| Location of the Sheep and Wool Extension Centre. | Name of the institution now located, etc. |
| --- | --- |
| 1. Kundamaranapalli | Sub-centre, Kundumaranapalli. |
| 2. Kammandoddi | Sub-centre, Kammandoddi. |
| 3. Ullukurukki | Sub-centre, Ullukurukki. |
| 4. Uddanapalli | Sub-centre, Uddanapalli. |
| 5. Kurubarapalli | Veterinary Dispensary, Berigai |
| 6. Denkanikotta | Veterinary Dispensary (Proposad). |
| 7. Avalapalli | Proposed to be leased to bona fide poultry breeders on tender system. |
| 8. Thally | Proposed to be leased to bona fide poultry breeders on tender system |

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 19.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### மதுரைக்கு சிறுவர் திரை அரங்கம்.

* 176. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் சிறுவர் திரை அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம்.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்தத் திரையரங்கத்தின் நோக்கம் என்ன ? எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட இருக்கிறது ? இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவு படுத்தி, சிறுவர் திரையரங்கத்தை ஒவ்வொரு மாவட்டத் தலை நகரிலும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தத் திரையரங்கத்தின் நோக்கம், சிறுவர்கள் நல்ல அறிவார்ந்த படங்களைப் பார்த்து அதன் மூலமாகப் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான். அப்படிப்பட்ட படங்கள் வராத நேரத்தில் பொதுவான பல நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவை நடப்பதற்கு இது தரப்பட்டு, அதன் மூலமாகக் கிடைக்கின்ற வருமானத்தின்மூலம் இந்த அரங்கங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலை நகரத்திலும் இந்த அரங்கம் அமைப்பதற்கு இட வசதி, நிலம்

கிடைக்கும் தன்மை இவைகளையெல்லாம் ஆராய்ந்து அறிவிக்( மாறு ஆங்காங்குள்ள மக்கள் தொடர்பு அதிகாரிகளுக்குக் கூற பட்டிருக்கிறது.

**திரு. நா. வெ. குருசாமி :** முதலமைச்சர் அவர்கள் கூறுட போது மதுரையில் சிறுவர் திரையரங்கம் ஏற்படுத்தப்போவதாகக் கூறினார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது அத பற்றி ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** சென்னையிலுள்ள கலைவாணா அரங்கைப் புதுப்பிப்பதற்கு மதிப்பீடு எவ்வளவு ? வேலை எப் பொழுது முடிவுறும் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதனுடைய மதிப்பீடு குறித்து தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். ஆனால், இன்னும் ஐந்தாறு மாதங்களில் அதனுடைய வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகள்

* 177 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தற்போது சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள் எத்தனை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1,202 குடிசைப்பகுதிகள் தற்போது சென்னை நகரத்தில் உள்ளன.

**திரு என். கிட்டப்பா :** கழக ஆட்சி பொறுப்பேற்றுக்கொள் வதற்கு முன்னால் இருந்த குடிசைப் பகுதிகள் எத்தனை மாற்றி யமைக்கப்பட்டிருக்கின்றன? அவைகளுக்கான செலவினங்களை அறிவிக்க இயலுமா? அதற்காக மத்திய அரசு ஏதேனும் நிதி உதவி அளித்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1,202 குடிசைப் பகுதிகள் குடிசை மாற்று வாரியத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 1,041 குடிசைப் பகுதிகளில் கணக்கெடுக்கும் வேலை யெல்லாம் முடிவுற்றிருக்கின்றன. ஏழு, எட்டு ஆண்டுகளில்



40 கோடி ரூபாய் செலவில் இந்தக் குடிசைகளையெல்லாம் மாற்றி நல்ல கட்டடங்கள் கட்டுவதற்கான திட்டமொன்றைத் தமிழக அரசு தீட்டியிருக்கிறது. இப்பொழுது 65 இடங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் இடங்களில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 12,000 குடியிருப்புகள் அங்கே இடம்பெறும். 1973-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 12,000 குடியிருப்புக்கான வேலைகளும் முடிவுற்றுவிடும். 1971-72-ம் ஆண்டுக்கு மாநில அரசு ஒதுக்கி யிருக்கும் தொகை 3.65 கோடி ரூபாய். 1972-73-க்கு மாநில அரசு ஒதுக்கியிருக்கும் தொகை 3.65 கோடி ரூபாய். குடிசைகளை மாற்றி நல்ல கட்டடங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு உதவி எதுவும் செய்யவில்லை. ஆனால், ஆங்காங்கு இருக்கின்ற குடிசைப் பகுதிகளில் சுகாதார வசதி, சாக்கடை வசதி, விளக்கு வசதி, சாலை வசதி அமைப்பதற்கு மத்திய அரசு இரண்டரை கோடி ரூபாய் கடன் தர முன்வந்திருக்கிறது. அதை நாம் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. அதைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். ஆனால், மத்திய அரசு கொடுக்கும் தொகை, குடிசைகளை மாற்றி கட்டடங்கள் அமைப்பதற்கு அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தக் குடிசைகளின் கணக்குகளையெல்லாம் இலாக்கா கணக்கெடுத்ததா? அல்லது குடிசை மாற்று வாரியம் கணக்கெடுத்ததா? அதன் விவரங்கள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக ஒரு தனி 'செல்' அமைக்கப்பட்டு அந்தக் கணக்கெடுப்பு வேலைகள் முடிவுற்றிருக்கின்றன.

**திரு. எம். தேவராசன் :** குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது சொல்வதற் கில்லை.

**திரு. என். மருதாசலம் :** குடிசை மாற்று வாரியத்தை கோவை நகரில் கொண்டுவர அரசுக்கு உத்தேசம் உண்டா?

(விடை இல்லை)

**திரு. செ. கந்தப்பன் :** குடிசை மாற்று வாரியத்தினால் அமைக்கப்படுகின்ற நல்ல வீடுகள் குறைந்த வாடகையில் விடப்படுவதாக அறிகின்றோம். இந்த வகையில் நம்முடைய மாநில அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது? எதிர்காலத்தில் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும்போது இந்த இழப்பு பெருமளவுக்கு உயரக்கூடுமா? அப்படியானால் இந்த இழப்பை ஈடுசெய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தண்ணீர்க் குழாய்கள் வசதி, விளக்கு வசதி ஆகியவற்றுடன் தரப்படுகிற வீடுகளுக்குக் குறைந்தபட்சம் 50 ரூபாய் வாடகை வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், இப்பொழுது அங்கே குடியிருக்கின்ற ஏழை எளிய மக்களிடமிருந்து 15 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, 35 ரூபாய் ஒவ்வொரு குடியிருப்புக்கும் அரசாங்கம் மானியமாகத் தரவேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. கால கட்டத்தில் இந்த நஷ்டம் அதிகமாகத்தான் ஆகும். அதற்காகத்தான் ஆங்காங்கு கட்டுகிற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே வருமானத்தைப் பெருக்கும் வகையில் கடைகளும் சிற்றுண்டி விடுதிகளும் கட்டலாமா என்ற யோசனை குடிசை மாற்று வாரியத்திற்கு இருக்கிறது. அந்த யோசனை சில இடங்களில் செயல்படவும் தொடங்கி இருக்கிறது.

• 178 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of slum dwellers were evicted near Muthuswamy Iyer Bridge in George Town area in Madras about November 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) சென்னை 40-வது வட்டத்தில் முத்துசாமி ஐயர் பாலத்திற்கும் அரசாங்க பொது மருத்துவமனைக்கும் இடையே அமைந்துள்ள இடம் அன்பழகன் நகர், ஜோதி அம்மாள் நகர் என்று வழங்கப்படுகிறது. சுகாதாரக் கேடுடன் அமைந்த இவ்விடம் மக்கள் வாழ வசதியற்றதாக உள்ளது. இங்கு வசித்த குடிசை வாழ் மக்கள் யாவரும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் செலவில் வியாசர்பாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மாற்று இடம் கொடுக்கப்பட்டனர். ஒவ்வொரு





குடும்பத்திற்கும் தனித்தனியே இடமும் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ள ரூ. 50-ம் மானியமாக குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கொடுக்கப்பட்டது. தற்போது வியாசர்பாடியில் கட்டப்பட்டுவரும் மாடி குடியிருப்புகளின் வேலை முடிவுற்றதும் அம்மக்களை அவைகளில் குடியேற்ற தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உத்தேசித்துள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** குடிசைவாழ் மக்கள் இருந்துவந்த குடியிருப்புகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பக்கத்திலேயே இடம் இல்லாத காரணத்தால், அவர்களோடு கலந்துபேசி வியாசர்பாடியில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் ஒவ்வொருவருக்கும் ஐம்பது ரூபாய் விதம் கொடுக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் இடம் மாறிக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** உப தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் மதிப்பிற்குரிய கனம் திரு. அன்பழகன் அவர்கள் பெயரில் இருக்கின்ற நகர் வாசிகளும், ஜோதி அம்மாள் பெயரில் இருக்கின்ற நகர்வாசிகளும் எங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதில் அன்பழகனோ ஜோதி அம்மாளோ யாருமில்லை. அங்கே வாழ்ந்த 232 குடும்பங்கள் தான் அங்கிருந்து வியாசர்பாடிக்கு மாற்றப்பட்டனர்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** உப தலைவர் அவர்களே, ஜோதி அம்மாள் நகரில் வாழ்ந்து வந்தவர்கள் இப்பொழுது சுடுகாட்டில் இருக்கின்றார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியானால், அவர்களுக்கு எப்பொழுது இந்த ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டு மூலமோ, ஹௌஸிங் போர்டு மூலமோ வீடு கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கேள்வியிலே குறிப்பிட்டிருக்கிற இடம், முத்துசாமி ஐயர் பாலத்திற்கும் அரசாங்கப் பொது மருத்துவமனைக்கும் இடையே அமைந்துள்ள இடம் ஆகும். பக்கத்திலே இரயில்வே லைன் இருப்பதால் பல நேரங்களில் விபத்து ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்தது. அந்தப் பக்கத்திலே மோட்டார்

வண்டி உருண்டு குடிசையின்மீது விழுந்த காரணத்தால் குடிசையிலிருந்த இரண்டு பேர் இறந்துபோகக்கூட நேர்ந்தது. இந்தக் காரணங்களையெல்லாம் முன்னிட்டுதான் அங்கிருந்தவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஜோதி அம்மாள் என்கின்ற பெயரில் எழும்பூர் தொகுதியில் சேத்துப்பட்டில் இருந்த அந்த நகர் இரயில்வே லைனுக்குப் பக்கத்தில் இருந்த காரணத்தால், இரயில்வே நிர்வாகிகள் அவர்களை வெளியேற்றிய காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அவர்களுக்கு நல்ல வீடுகள் அண்ணா நகரில் கட்டப்பட்டு குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையா? ,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முற்றிலும் உண்மை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** உப தலைவர் அவர்களே. சேத்துப்பட்டிலுள்ள அந்த இடம் கனம் அரங்கண்ணல் அவர்களுடைய தொகுதி இப்பொழுது. அந்தத் தொகுதியில் ஜோதி அம்மாள் நகர் மக்கள் வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள் என்று கனம் முதலமைச்சரவர்கள் சொன்னதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், சுடுகாட்டில் அந்த மக்கள் அனுப்பப்பட்டார்கள் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். அங்கிருந்து அவர்களை மாற்றி நல்ல வீட்டு வசதி அவர்களுக்குச் செய்து கொடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெயர் எதுவும் மாற்றப்படவில்லை. அம்மையார் கவலைப்பட வேண்டாம். இடுகாட்டின் பக்கத்தில் இருக்கின்றவர்களுக்கு விரைவில் வேறு இடங்கள் ஒதுக்கப்படும்.

**திரு ஜே. ஜேம்ஸ் :** துணைத் தலைவர் அவர்களே, புதியதாக அந்த மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துக்கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களுக்கு அன்பழகன் நகர், ஜோதி அம்மாள் நகர் என்று பெயர் வைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த நகரங்களுக்குப் பெயர் வைப்பதில் நாங்கள் கட்சி வேறுபாடு எதுவும் பார்ப்பதில்லை. புதிய அரசு வந்த பிறகு பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருக்கிறது.



## Kite flying

*179 Q. **Dr. H. V. HANDE :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a number of children have died for the craze of kites in the City of Madras in the months of September and October 1971; and

(b) if so, the details thereof and the precaution taken by the City Police?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 1971 அக்டோபரில் காற்றாடி பிடிக்கும் ஆர்வத்தில் நான்கு சிறுவர்கள் உயிரிழந்தனர். காற்றாடி பறக்கவிடும் காலம் தொடங்குவதற்கு முன்னரேகூட காவலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தனர். காற்றாடி பறக்கவிடுவதை முழுமையாகத் தடைசெய்யுமாறு காவல் நிலையங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பலர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காற்றாடி பறக்கவிடுகின்றவர்களை வளைத்துப்பிடிக்கும் உத்தரவுடன், காவலர்கள் காலையிலும் மாலையிலும் வழக்கமாகப் பாராக் காவற்பணியும் ரோந்துக் காவற்பணியும் செய்தனர். காவலர்கள் மேற்கொண்ட இந்த முன்னெச்சரிக்கைகளின் விளைவாக மேற்சொன்ன நான்கு சிறுவர்கள் இறந்ததைத் தவிர, வேறு நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை.

**திரு. ஆ பரந்தாமன் :** துணைத் தலைவர் அவர்களே, பந்தயங்கள் வைக்காமல் காற்றாடி விடலாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்னை மாநகர காவல் துறைச் சட்டப்படி 71-ஆவது பிரிவு 16-ஆவது பகுதியின் கீழ் காற்றாடி பறக்க விடுவதே குற்றம் என்று கொள்ளப்படும்.

**திரு. கே. டி கே. தங்கமணி :** ஜனநெருக்கடி இருக்கக்கூடிய பிராட்வே போன்ற இடங்களில் தான் இம்மாதிரி காற்றாடிப் போட்டி அதிகமாக இருக்கிறது. அந்த இடங்களைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு மாற்று இடம் பக்கத்தில் இருக்கக்கூடிய மைதானத்தில் கொடுக்கப்பட்டு, அந்த இடத்தில் காற்றாடிகள் பறக்கவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மைதானம், ஜன நெருக்கடி மிகுந்த இடம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். கூவம் ஆற்றிற்கு அருகாமையில் பரந்த வெளியில் சிறுவர்கள் காற்றாடி விட்டுக்கொண்டிருந்தபொழுது காற்றாடி அறுந்துபோன காரணத்தினால் பிடிப்பதற்கு ஓடி மூன்று பேர்கள் ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். அதேமாதிரி தான் இன்னொரு இடத்தில் காற்றாடி விடுகிற நேரத்தில் ஒரு குழந்தை கழுத்தில் காற்றாடி கயிறு சிக்கிக்கொள்ள, கயிற்றை இழுப்பதற்கு காற்றாடி விட்ட இருவரும் முயற்சி செய்ததால், குழந்தையின் கழுத்தில் காற்றாடிக் கயிறு இறுகி, குழந்தை இறந்து விட்டது. ஆகவே ஜன நெருக்கடி உள்ள இடம், ஜன நெருக்கடி இல்லாத இடம் என்பதில்லை. காவலர்கள் காற்றாடி பறக்க விடுவதை தடை செய்யும் முயற்சியில் பொது மக்களும், மற்றவர்களும் ஒத்துழைப்பு தந்தால் நலமாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** காற்றாடி பறக்கவிடும் சிறுவர்கள் எத்தனை பேர்களை போலீஸார்கள் பிடித்தார்கள் ? அவர்கள் மீது ஏதாவது வழக்கு போடப்பட்டதா ? அதன் விவரத்தை முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1971-ல் இப்படி 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

*Arrest of Eve teasers*

* 180 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Eve teasers in the City of Madras have been traced and arrested by the Police during their rounds in the months of August and September 1971 ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் திங்களில், 53 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டனர்.

**திரு. ஆ. பரந்தாமன் :** ஆண்களை ஆண்களே கேலி செய்கின்ற ராகிங் என்ற முறை கல்லூரிகளில் நிலவி வருகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. ஆங்காங்கு இருக்கிற கல்லூரி முதல்வர்கள் அதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பொதுவாக பெண்கள் நம்முடைய பண்பாட்டிற்கு ஏற்ற முறையிலே உடை அணியாத காரணத்தினால் இப்படிப்பட்ட ராகிங், டீஸிங் என்ற முறைகள் நிலவி வருகின்றன என்பதை குறிப்பாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சில பேர்கள் தொப்புள் தெரிய சேலை கட்டுகிறார்கள். சில பேர்கள் டைட்ஸ் போடுகிறார்கள். இன்னும் சில பேர்கள் லோ ஹிப்ஸ் என்ற முறையில் சேலை கட்டுகிறார்கள். இதைப் பார்க்கின்ற சாதாரண மாணவர்களுக்கு ப்ராவகேஷன் வருகிறது. (சிரிப்பு) ஆகையினால் குற்றம் அவர்கள் பேரில் கிடையாது. இவைகளில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மிக்க ஆர்வம் உள்ளவர்கள்—இவைகளைக் களைந்து எறிவதில்! (சிரிப்பு) ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலாகிலும் உடைகளைப்பற்றி ஏதாவது ஒரு நல்ல முறை அனுசரிக்கப்பட வேண்டும் என்பதற்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கைடு லைன்ஸ் ஏற்பாடு செய்து, அதற்கான உத்தரவு பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டி இதைப்பற்றி யோசிக்கலாம் ! (சிரிப்பு)

தமிழ்நாட்டு வரலாறு.

* 181 **வினா—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டு வரலாற்றை எழுத ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழுவின் உறுப்பினர்கள் யாவர் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அக்குழுவின் உறுப்பினர்கள் பின் வருமாறு :

1. டாக்டர் மு. வரதராசனார், துணைவேந்தர் மதுரைப் பல்கலைக் கழகம்—தலைவர்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர், உறுப்பினர்—செயலர்.

3. திரு. மயிலை சீனி வேங்கடசாமி—உறுப்பினர்.

4. திரு. இரா. நாகசாமி, எம்.ஏ., தொல்பொருள் ஆய்வுத் துறை—உறுப்பினர்.

5. திரு. சி. இ. இராமச்சந்திரன், எம்.ஏ.எம்.லிட்., சிறப்பு பேராசிரியர், வரலாற்றுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்—உறுப்பினர்.

6. திரு. அ. இராகவன்—உறுப்பினர்.

7. திரு. கா. அப்பாத்துரை—உறுப்பினர்.

8. திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., திருக்குறள் ஆராய்ச்சித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை—உறுப்பினர்.

9. திரு. கே. ஆர். அனுமந்தன், எம்.ஏ., வரலாற்றுப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை—உறுப்பினர்.

**திரு. ஆ. பரந்தாமன் :** இப்படி வரலாற்றை எழுதுகின்ற நேரத்தில், பகுத்தறிவுக் கொள்கைகள், திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்துவது பற்றியும் இணைக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழக வரலாற்றை பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை எழுதுவதற்கு இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த கருத்துக்களை, எந்தெந்த நிகழ்ச்சிகளை இணைப்பது என்பதை அந்தக் குழுவினர் ஆராய்வர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது யோசனை தோன்றினால், அந்தக் குழுவிற்கு எழுதி அனுப்பினால், அதை அவர்கள் ஆராய்ந்து தக்க முடிவு எடுப்பார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்த வரலாற்றினை எழுதும் பொழுது தமிழகத்தில் விடுதலைப் போரில் வீர சாகசச் செயல்கள் புரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய வரலாற்றையும், அதேபோன்று தொழிற் சங்க இயக்கம், விவசாயிகள்



இயக்கம் இவற்றைத் தோற்றுவித்த மாபெரும் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வரலாற்றையும் இதில் சேர்க்க வேண்டும் என்ற ஆணையை இந்தக் கமிட்டிக்கு பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்காகத் தான் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் வல்லுநர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், தொல் பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள், பல்கலைக் கழக துணைவேந்தர் முதலியோர் இடம் பெற்றிருக்கிறார்கள். வரலாற்றுக் குறிப்புகள் எது எது இடம் பெற வேண்டும் என்று அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அரசாங்கம் ஆணை பிறப்பிக்க இயலாது. அவர்கள் அதற்கான கருத்துக்கள், மற்றவைகளையெல்லாம் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள். அந்தத் தொகுப்பு எந்த வகையில் வரும் என்பதையும் அவர்கள் தான் முடிவு செய்யவேண்டும். ஏனெனில் ஆராய்ச்சி காலத்துக்கு முற்பட்ட வரலாறு, பிற்பட்ட வரலாறு, பண்டைக் காலத்து வரலாறு, இடைக்காலத்து வரலாறு, தற்காலத்தைய வரலாறு என்பதையெல்லாம் சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். 25,000 கல்வெட்டுகளிலிருந்து குறிப்புகள் எடுப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்திலிருந்த கல்வெட்டுகள் மைசூரில் கொண்டு போய் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதிலிருந்து குறிப்புகள் எடுத்துக்கொள்வதற்கு மத்திய அரசிடமிருந்து இப்பொழுது அனுமதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அதிலிருந்து குறிப்புகள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு பல வகைகளிலும் குறிப்புகளையும், கருத்துக்களையும் சேகரிக்கும் பணியில் இந்தக் குழுவினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். வரலாற்று நூலில் எந்தக் கருத்து இடம் பெறுவது என்பதை அவர்கள் தான் முடிவு செய்யவேண்டும். நான் முதலில் குறிப்பிட்டது போல அவரவர்களுக்குத் தோன்றிய கருத்துக்களை அந்தக் குழுவினருடைய முடிவுக்கு எற்ப அனுப்பி வைக்கலாம்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** இங்கே தமிழ் நாடு என்று குறிப்பிடப்பட்டிருப்பது புதிய தமிழ் நாட்டை மாத்திரம் குறிக்குமா ? இல்லையென்றால், சேரர்களால் ஆளப்பட்ட பகுதிகளைச் சார்ந்த வரலாற்றுச் சான்றுகளும் சேர்க்கப்படுமா ? தொல்

[1972 ஆகஸ்ட் 19

**பெருமை வாய்ந்த பண்டை தமிழ் பகுதி முழுவதையும் இது குறிக்குமா ?**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வரலாறு என்று சொன்னாலே ஆரம்ப காலத்திலிருந்து, அதாவது கடல் கொண்ட லெமூரியா கண்டத்திலிருந்து, அந்தக் காலத்திலிருந்து வரலாறு எப்படி வளர்ந்தது, சேர, சோழ, பாண்டியர்கள் எப்படி இருந்தார்கள், அவர்கள் காலத்திய வரலாறு, சாளுக்கியர்கள், பல்லவர்கள் காலத்திய வரலாறு என்று அந்தத் தன்மையிலிருந்து இன்றைக்கு தமிழகம் எப்படியிருக்கிறது என்ற அளவுக்கு வந்து சேரும். இதற்கான முயற்சிகளை அந்தக் குழுவினர் மேற்கொள்வர்.

**திரு. ஏ. எம். இராஜா :** வரலாற்றுக் குழுவிற்கு எத்தனை ஆண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? இப்பொழுது அவர்கள் இதுவரையில் எந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டு ஏதாவது நூல்களை வெளியிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான்—ஓராண்டு காலத்திற்கு முன்னால் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அடிப்படைக் கருத்துக்களை சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழு இரண்டு, மூன்று தடவைகள் கூடி என்னென்ன செய்வது என்பதைப்பற்றி முடிவு எடுத்திருக்கிறார்கள். அவர்கள் வரலாறு எழுதுவதற்கு தேவைப்படுகிற கருத்துக்களைச் சேகரிப்பதில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கான ஒரு காலவரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இத்தனை ஆண்டு காலத்திற்குள் இதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துவதற்கும் இயலாது. முதலில் கருத்துக்களைச் சேகரிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வகையில்தான் மைசூரில் இருக்கிற கல்வெட்டுகளிலிருந்து படியெடுப்பதற்கு இப்பொழுது மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றிருக்கிறார்கள். பல்வேறு பல்கலைக்கழகம், மற்றவைகளோடு தொடர்பு கொண்டு—பூனா, கேரளா பல்கலைக்கழகங்கள், அண்ணாமலை பல்கலைக்கழகம், பூனாவில் உள்ள டெக்கான் கல்லூரி, லண்டனில் உள்ள கீழ்க்கலை கல்வி நிறுவனம், இலங்கை கல்விக் கழகம் முதலியவைகளோடு தொடர்பு கொண்டு—கருத்துக்களைச் சேகரிப்பதில் இந்தக் குழு ஈடுபட்டிருக்



1972 ஆகஸ்ட் 19]

கிறது. வரலாறு எழுதுவதற்கான அடிப்படைக் கருத்துக்களையும், குறிப்புகளையும் சேகரித்துக் கொண்டு பிறகு எழுதத் தொடங்குவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இடையிலே வந்து சேர்ந்த பகுதி. ஆகவே, தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதும் நிபுணர் குழுவில், முழு விபரங்களும் தெரிந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவரையும் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தக் குழுவில் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிபுணர்களைச் சேர்த்துக்கொள்வது என்றால், ஆயிரக்கணக்கானவர்களை இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டிவரும். அது இயலாத காரியம். இப்பொழுது இருப்பவர்கள் ஆராய்ச்சித் துறை, அறிவியல் துறை, தொழில் நுட்பத்துறை போன்ற பல்வேறு துறைகளில் உள்ள, நன்கு திறமை பெற்ற நிபுணர்கள்தான். அவர்கள் வரலாற்றை எழுதி முடித்தப்பின்னால், ஏதாவது விட்டுப் போயிருந்தால், அவர்களுக்குத் தெரிவிக்கலாம். அவர்கள் அதையும் ஆராய்ந்து, அடுத்த பதிப்பில் சேர்த்துக்கொள்வார்கள்.

**திரு. ப. முத்துசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டின் வரலாற்றைப்பற்றி ஏற்கெனவே இதைப்போன்ற நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவா ? இல்லையானால் முன்பு இருந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தனித் தனி வரலாறுகளாக, துண்டுத் துண்டாக பல குறிப்புகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த வரலாறு ஒரு முழுமையான வரலாறாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், எல்லாவற்றையும் ஆராய்ந்து, மேற்கொண்டு சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்து சிறந்தமுறையில் வெளியிடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்திய சரித்திரத்தை வின்ஸ்டன் ஆஸ்டின் என்ற அறிஞர் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய "The History of India appears to be the History of North India' என்ற நூலிலும், நீலகண்ட சாஸ்திரிகள் எழுதிய தென்னாட்டு சரித்திரத்திலும் பல வரலாற்று உண்மைகள் அடங்கியிருக்கின்றன. இவை போன்ற வேறு பல நல்ல வரலாற்றுக் குறிப்புகளையும்கூட ஆராய்ந்து பார்க்கலாம். திட்டமிட்ட வகையில் ஒரு ஒழுங்கு முறையை வகுத்துக்கொண்டு, குழுவின் உறுப்பினர்கள் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை கூடி விவாதித்து, பிரியாடிக்கலாக தங்கள் அறிக்கையை தொகுத்து வெளியிடலாம். அதுமாதிரியாக இந்தக் குழு இதுவரை ஏதாவது தொகுத்து அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட தொகுப்பு எதையும் அவர்கள் தரவில்லை. அவர்கள் மூன்று, நான்கு தடவைகள் கூடி, என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்கள். ஆங்காங்கே உள்ள பல வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் அறிக்கை வடிவில் அரசுக்கு எதுவும் தரப்படவில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே. இந்தக் குழு வரலாற்றை எழுதி முடிப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறதா ? மத்திய அரசாங்கம் இப்போது இந்திய வரலாற்றை எழுதுவதற்கு ஏராளமாக பணம் செலவிட ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதைப்போன்று இந்த தமிழகத்தின் வரலாற்றை எழுதுவதற்கும் நிதி ஒதுக்க மத்திய அரசாங்கம் முன்வருமா ? அப்படி இல்லையாயின் நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் இனிமேலாவது நிதி உதவி கோருமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தக் குழுவினர் 'யுனஸ்கோ' விடம் நிதி உதவி கோரி அரசுக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், கலைச் சொற்கள் மிகுந்ததாகவும் இருப்பதால் 'யுனஸ்கோ' விடம் உதவி கோர வேண்டுமென்று ஒரு கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அது யுனஸ்கோவிற்கு அனுப்பப்பட இருக்கிறது. மத்திய அரசு இதற்கு 10 லட்சம் ரூபாய் உதவி செய்யவேண்டும் என்று மற்றொரு கோரிக்கையையும் அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் மத்திய அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது.





## தமிழில் புதிய சொற்கள்.

* 182 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழில் புதிய சொற்களை தொகுக்கும் குழு ஏதேனும் தற்போது செயல்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதில் அங்கம் வகிப்பவர்கள், யார் யார் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழில் புதிய சொற்களை தொகுக்க, "அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக்கழகம்" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(இ) உறுப்பினர் பெயர்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக்கழகம் இதுவரை எத்தனை நூல்களை தொகுத்து அனுப்பியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதுவரை துண்டு துண்டாக வெளியிடப்பட்டிருக்கிற—அறிவியல், தொழில் நுட்பம்—போன்றவைகளில் எல்லாம் உள்ள கலைச் சொற்களை தொகுத்து ஒன்றாக உருவாக்கும் வகையில் இந்தக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் இன்னும் நியமிக்கப்படவில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, சட்டத்துறையில் வல்லுநர்களைக் கொண்டு, சட்டத் துறையிலுள்ள கலைச் சொற்களை பயன்படுத்தி 'சட்ட கலைச் சொற்கள் சொல்லகராதி'யை உருவாக்கியதுபோல். மருத்துவத்துறையிலும் அந்தத் துறையின் நிபுணர்களைக் கொண்டு ஒரு அகராதி உருவாக்கப்படுமா ? அதேபோன்று அறிவியல் துறை, தொழில் நுட்பத் துறை இவைபோன்ற ஒவ்வொருத் துறையிலும் உள்ள நிபுணர்களைக் கொண்டு, அந்தந்த துறை சம்பந்தப்பட்ட சொல்லகராதியை உருவாக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று சட்டத் துறையில் கலைச் சொற்களை உருவாக்க ஒரு குழு இருந்தது. அதைப் போன்று மருத்துவத் துறை, பொறியியல் துறை போன்ற பல துறைகளிலும் உள்ள கலைச் சொற்களைக் கொண்ட சிறு சிறு வெளியீடுகள் வந்துள்ளன. அவற்றைத் தொகுத்து ஒரே அகராதியாகக் கொண்டு வருவதற்காகத்தான் இந்த அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய கலைச் சொற்களும் புதிதாக கண்டுபிடிக்கப்படும் கலைச் சொற்களும் இந்த அகராதியில் இடம் பெறும்.

*Intermediate Course*

*153 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is a proposal to reintroduce the Intermediate course in the Colleges in this State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இப்பொருள் பல்கலைக்கழகங்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாகும். அரசு, இதைப் பல்கலைக்கழகங்களுடன் கலந்து ஆய்ந்து வருகின்றது. இப்பொருள் அவைகளால் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், எல்லா யூனிவர்சிட்டிகளும் இன்டர்மீடியேட்—இரண்டாண்டு ஆக்குவதற்கு ஆதரவு கொடுத்திருந்தும், இன்னும் சர்க்கார் நியமித்த திட்ட கமிஷனால் ஏற்படுத்தப்பட்ட 'டாஸ்க்ஃபோர்ஸ்'கூட இன்டர்மீடியேட்டை இரண்டு வருஷமாக்க சிபாரிசு செய்திருந்தும் சர்க்கார் இதில் கால தாமதம் செய்வதற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த டாஸ்க்ஃபோர்ஸ் குழுவின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு அளிக்கப்படவில்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் பல





கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்களே தவிர, அதுபற்றி அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பவில்லை. அவர்களுடைய அறிக்கை கிடைத்ததும், எல்லா துணைவேந்தர்களையும் கலந்து கொண்டு, அரசு ஒரு முடிவுக்கு வரும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த இன்டர்மீடியேட் வகுப்பைக் கொண்டுவருவதானால், பள்ளிக் கல்வி 10 ஆண்டு படிப்பாக இருக்கவேண்டுமா அல்லது 11 ஆண்டு படிப்பாக இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்களா ? அதன் விபரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதுபற்றியும் கவனம் செலுத்தியிருக்கிறோம். பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் கருத்துக்கள் மாறுபட்டவையாக இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 11,2,2 ஆண்டுகளாக இருக்கலாம் என்றும், மதுரைப் பல்கலைக்கழகம் 10,2,3 ஆண்டுகளாக இருக்கலாம் என்றும், கருத்து தெரிவித்திருக்கின்றன. வேறு பல மாநிலங்களில் 10, 2, 3 ஆண்டுகள் என்று வைத்திருக்கிறார்கள். இங்கே பட்டப்படிப்புக்குப் போகிறவர்களுக்கு 10,2,3 என்று 15 ஆண்டு படிப்பை வைக்கலாம் என்றும், பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு பாலிடெக்னிக் போன்ற டெக்கனிக்கல் கோர்ஸ்ஸுக்குப் போகிறவர்களுக்கு அவை சம்பந்தப்பட்ட அட்வான்ஸ்ட் சப்ஜெக்ட்ஸ் சொல்லிக்கொடுப்பதற்காக பள்ளிக் கல்வியை 11 ஆண்டாக்கலாம் என்றும் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி மூன்று துணைவேந்தர்களும் மூன்றுவித கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, டாஸ்க்ஃபோர்ஸ் குழுவின் அறிக்கை வந்த பின்னால், எல்லாப் பல்கலைக் கழக துணைவேந்தர்களையும் மற்றும் நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து இதில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இண்டர்மீடியட் வகுப்பை மீண்டும் கொண்டு வரவேண்டுமென்கிற யோசனை நீண்ட காலமாக ஆராய்ச்சியில் இருந்து வருகிறதே. இதை விரைவுப்படுத்த அரசாங்கம் ஏதாவது பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை வழங்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல மாநிலங்களில் முன்பு புகுமுக வகுப்பைக் கொண்டு வந்தார்கள். திரும்ப இண்டர்மீடியட் வகுப்பைக் கொண்டுவந்துவிட்டார்கள்.

1972 ஆகஸ்ட் 19]

நம்முடைய மாநிலத்திலும் கொண்டுவருவதுபற்றித் தான் யோசனை செய்யப்படுகிறது. இப்போதுள்ளது எல்லாம் படிப்புக் காலத்தை 11-2-2 என்று அமைப்பதா, 10-2-3 என்று அமைப்பதா என்பதாகும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை எல்லாம் அரசு கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே பி.யு.சி. யிலேயே இடம் கிடைக்காத நேரத்தில் இண்டர்மீடியட் இரண்டு ஆண்டு என்று கொண்டு வருவதானது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதாக சம்பத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தம்முடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களே, இதுபற்றி ஏதாவது யோசிக்கப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைத்தான் முன்பு குறிப்பிட்டேன். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு விதமான கருத்தைச் சொல்கிறார்கள். இப்படி தனித்தனியாக கேட்பதைவிட எல்லோரையும் சேர்த்து வைத்துக்கொண்டு, டாண் கோர்ஸ் ரிப்போர்ட்டையும் வைத்து பொதுவாக, ஒரு முடிவுக்கு வரும் நடவடிக்கையைத்தான் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 184 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—1971-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் பணியாளர்களை ஒன்றியங்களுக்கிடையே மாவட்ட அளவில் மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கே முழு அதிகாரம் அளிக்க வேண்டுமென்று அரசைக் கோரி தீர்மானித்துள்ளதா?

(இ) ஆம் எனில். அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை. ஆனால், திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டம், வட கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அரசாங்க ஊழியர்களை மூன்று



1972 ஆகஸ்ட் 19]

வருடங்களுக்கு ஒரு முறை அவசியம் ஏற்படும்பொழுது மாற்றம் செய்வதுபோல ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்களையும், நிர்வாகம் நன்கு செயல்பட நிர்வாக அடிப்படையில் அவசியம் ஏற்படும்பொழுது ஒரு ஒன்றியத்திலிருந்து வேறொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்ற மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என அரசைக் கோரி தீர்மானங்கள் அனுப்பி உள்ளன.

(இ) இத் தீர்மானங்கள் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. ஏ. வகாப்:** இப்படி இந்தப் பணியாளர்களை மாற்றுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் தருவதைப் போன்று ஆசிரியர்களை மாற்றுகிற அதிகாரத்தை கல்வி அதிகாரிகளிடத்திலேயே தருகிற செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி முடிவு செய்ய முன்பு அட்ஹாக் கமிட்டி இருந்தது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி தலைவர்களைக் கலந்து கொண்டு எத்தகைய முடிவை எடுக்கலாம் என்பது பற்றி அரசு தீர்மானிக்கும் என்று முதல்வர் தெரிவித்திருக்கிறார். இது ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னால் ஒன்றியங்களின் சம்மதத்தை, நகராட்சி மன்றங்களின் சம்மதத்தை பெற்றே மாற்ற வேண்டியதாக இருக்கிறது. சம்மதம் பெறுவதில் பலவிதமான இடையூறுகள் வந்துவிடுகின்றன. அங்கேயே தங்களை இருத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவிடுகின்றன. ஆகவே அதிகாரிகள் மட்டத்திலேயே மாற்றம் பற்றி தீர்மானிக்க தலைவர்களைக் கலந்துகொண்டு விரைவில் தக்கதொரு முடிவு எடுக்கப்படும்.

### *Buildings for Panchayat Union Councils in Kanyakumari District*

* 185 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of Panchayat Unions for which Council Halls have been constructed so far in Kanyakumari District; and

(b) the details of the cost of construction of these halls?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நான்கு.

| | | ரூபாய் |
|---|---|---|
| (இ) | (1) தக்கலை (அலுவலகக் கட்டிடமும், ஊராட்சி ஒன்றிய மண்டபமும், சேர்த்து) | 97,776 |
| | (2) திருவட்டார் (அலுவலக கட்டிடமும் ஊராட்சி ஒன்றிய மண்டபமும் சேர்த்து) | 65,135 |
| | (3) குருத்தென்கோடு (அலுவலக கட்டிடமும் ஊராட்சி ஒன்றிய மண்டபமும் சேர்த்து) | 62,000 |
| | (4) ராஜாக்கமங்கலம் (ஊராட்சி ஒன்றிய மண்டபம் மட்டும்) | 12,339 |

**திரு. என். டென்னிஸ் :** பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஹால் இல்லாததால் கூட்டங்கள் கூட போடுவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அத்தகைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு கவுன்சில் ஹால் கட்டுவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அகஸ்தீஸ்வரம், கிள்ளியூர் போன்று நான்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குத்தான் மீட்டிங் ஹால் கட்டப்படாமல் இருக்கிறது. அவை கட்டுவதற்கு 25 ஆயிரம் தேவைப்படும் என்றும் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அதற்கு வகை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது இந்த மன்றங்கள் ஸ்தாபன காங்கிரஸ் கையில் இருப்பதன்காரணமாகத்தான் கவுன்சில் ஹால் கட்டப்படவில்லை என்கிற புகார் இருக்கிறதே. இந்த வருடமாவது அந்த மன்றங்களைக் கட்ட அரசாங்கம் ஆணை பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதில் அரசியல் நோக்கம் கற்பிப்பதற்கு இயலாது. தொடர்ந்து அவை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினர்களிடமே இருந்து வந்திருக்கிற காரணத்தினால் முன்பே மீட்டிங் ஹால் கட்டப்பட்டிருக்கலாம். அப்போது



விடப்பட்டதற்கு அரசியல் காரணமாக இருக்க முடியாது. இப்போதும்கூட இந்த நான்கும் ஸ்தாபன காங்கிரஸ் கையில்தான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆகவே இதில் அரசியல் நோக்கத்திற்கு இடமில்லை எப்படியும் இவை கட்டப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

*Cancer treatment centres.*

* 186 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have any proposal to open a cancer centre in all the Government Hospitals in big towns; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் புற்றுநோய் சோதனை சிகிச்சை நிலையங்களை படிப்படியாகத் தொடங்குவது குறித்து அரசு ஆய்வு செய்துகொண்டு வருகிறது.

(இ) முதற்கண், புற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க இயலும் வகையில் எக்ஸ் கதிர் நுண்ணிய இயந்திர சிகிச்சை வசதியுள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

DR. H. V. HANDE : While welcoming the measure may I know whether it will be possible as a preliminary step to have at least in headquarters hospitals a point where survey can be made as to the pre-cancerous condition so that later on treatment can be given. May I know whether it is possible to institute cells in major headquarters hospitals to make a survey of the pre-cancerous stage?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சர்வே நடத்துவது என்பதை ஒரு பரிசீலனை நடத்துகிற அளவில் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கான்சர் இன்ஸ்டிட்யூட்டில் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. யார் யாருக்கு புற்று நோய் காணப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து, உடனே அதற்கு சிகிச்சை அளிக்க வசதியும், வாய்ப்பும் இல்லாத நிலை அவர்கள்

தங்களுக்குப் புற்று நோய் ஏற்பட்டிருப்பதை உணர்ந்துவிடுகிற காரணத்தினால் அச்சத்தால் நாளும் நலிந்து போவதைத் தவிர்த்து வேறு பயன் எதுவும் இல்லாத காரணத்தினால் சிகிச்சை அளிக்க வசதியை ஏற்படுத்திக் கொண்டு இந்தப் பரிசிலனையை விரிவாக நடத்தலாம் என்பது அரசாங்கத்தினுடைய எண்ணம்.

DR. H. V. HANDE: May I know whether this Government is negotiating with other countries for certain equipment which are found in Adyar Cancer Institute? Such equipments we do not have in other headquarters hospitals or in major hospitals, like General Hospital. May I know whether it is possible to upgrade the Cancer Department of General Hospital so that it could have the specialised equipments found in Adyar Cancer Institute?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வெளிநாட்டில் உள்ளவர்கள் உதவி செய்வதாக இருந்தாலும்கூட மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறாமல் மாநில அரசாங்கங்கள் எதையும் செய்ய முடியாது என்கிற நிலைதான் இருக்கிறது. காஞ்சீபுரம் அறிஞர் அண்ணா கான்சர் இன்ஸ்டிட்யூடுக்கு டபிள்யு.எச்.ஓ. செய்வதாக இருந்த உதவித்தொகை முழுவதுக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கும் கோபால்டு தெராபி போன்ற கருவிகளாகவே வழங்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். மதுரையில் ஏற்படுத்தியிருக்கிற இன்ஸ்டிட்யூடுக்கு கருவிகளாக வரவழைக்க மத்திய அரசாங்கத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டு அண்மையில் அது கிடைக்கும் என்ற நிலவரம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ரீஜனல் கான்சர் யூனிட் திறக்கப்படும் என்ற நிலைமை இருந்ததே, அது என்ன ஆயிற்று? மத்திய அரசாங்கம் அதற்கு ஏதாவது உதவி செய்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசாங்கத்தில் இருந்து இதுபற்றி ஆராய புற்று நோய் பற்றிய ஆராய்ச்சித் துறை டாக்டர்கள் சேர்ந்த குழு ஒன்று அண்மையில் தமிழ் நாட்டுக்கு வந்து காஞ்சீபுரம் அறிஞர் அண்ணா கான்சர் இன்ஸ்டிட்யூட்டையும், அடையார் இன்ஸ்டிட்யூட்டையும், கன்னியாகுமரியில் உள்ள மருத்துவ மனையையும் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் வகையில் அவர்கள் பரிந்துரை செய்வார்கள் என்று நினைக்கிறோம்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** தமிழகத்தில் எத்தனைபேர்களுக்கு இந்த புற்றுநோய் கண்டிருக்கிறது. காணும் வாய்ப்பிருக்கிறது என்பது பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றனவா? அப்படியானால் மாவட்டத்திற்கு ஒரு இன்ஸ்டிட்யூட் அமைப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காஞ்சீபுரத்தைச் சுற்றி ஏறத்தாழ 15 மைல் சுற்றளவுக்குள் நடத்தப்பட்ட பரிசோதனையின் கீழ் தாய்மார்கள் என்றால் பால் கொடுக்கும் உறுப்பிலும், ஆண்களாக இருந்தால் வாயிலும் இந்த நோய் ஏற்படுவதை அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3, 4 இடங்களில் புற்றுநோய் சிகிச்சை அளிக்க வசதி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதுவும் ஆரம்ப காலத்திலேயே இந்த நோய்க்கு சிகிச்சை அளிப்பது அதிக பலன் கிடைக்கக்கூடியதாகவும் இருக்கிறது. எனவே ரீஜனல் இன்ஸ்டிட்யூட்டின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் அரசு செலவழிக்க வேண்டியதாக இருக்கும் இந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க. மத்திய அரசாங்கம் கூறியுள்ள ஆலோசனைப்படி நமது தமிழ்நாட்டுப் பொதுமக்கள் சுகாதாரத் திட்டத்திற்கும் மருத்துவத் திட்டத்திற்கும் உதவி செய்வதாக இருந்தால் தலைக்குத்தலை வரி என்கிற அடிப்படையில் வரி போட எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்பதாக இருந்தால் தமிழ் நாடு அரசு துணிச்சலோடு இந்த வரியைப் போட்டு அதன் மூலம் இந்த மருத்துவ சுகாதாரத் திட்டத்தை செம்மையான முறையில் நிறைவேற்றிவைக்க முன்வரும்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இந்த புற்று நோய் வருவதற்குக் காரணம் புகையிலையிலே உருவாக்கப்படுகிற சிகரெட்டு, மூக்குப்பொடிதான் என்று மேல் நாடுகளிலே சிகரெட்டு பெட்டியிலே விளம்பரம் செய்கிறார்கள். அதே போல தமிழ் நாட்டிலேயும் சிகரெட்டு பிடிப்பது, பொடி போடுவது இவைகளைத் தடை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா? புகை பிடிப்பவர்களுக்கு பர்மிட்டு தருவதற்கு அரசாங்கம் முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இதுவும் ஒரு காரணம் என்றுதான் சொல்லப்படுகிறதே தவிர இது மட்டுமே காரணம் என்று சொல்லப்படவில்லை. ஆனால் இந்தக்

காரணத்திற்காக தமிழ் நாட்டில் அச்சடித்து விளம்பரம் செய்தாலும் படித்துக் காட்ட பக்கத்தில் ஒருவர் போகவேண்டும். மக்களுடைய பழக்க வழக்கம், பொருளாதார வாழ்க்கை வசதிகளைப் பெருக்குகின்ற திட்டங்களின் மூலமாகத்தான், நல்ல பழக்கங்களுக்கு வசதி செய்து கொடுத்தால்தான் தீய பழக்கங்கள் குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

திரு. த சோனையா : தலைவரவர்களே, புற்று நோய் தீருவதற்கு ரேடியம் ட்ரீட்மெண்டு வசதி மதுரை ஆஸ்பத்திரியில் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது பழுதாகிவிட்டது. ஆனால் கிராமப் புறங்களில் நாட்டு வைத்தியம் மூலமாக இந்த புற்று நோய் பலருக்குத் தீர்ந்திருக்கிறது. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இந்த புற்று நோய்க்கு வைத்தியம் செய்ய நாட்டு மருந்துப் பிரிவுகளை அரசாங்கம் ஏற்படுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க அன்பழகன் : தலைவரவர்களே, புற்று நோயில் பல வகை இருக்கிறது. நாட்டு மருந்துகளில் சில வகை நோய்கள்தான் குணமாகின்றன என்று கூறுகிறார்கள். இவை இரண்டையும் பயன்படுத்திக் கொள்கிற காலம் இனிதான் வர வேண்டும்.

### சென்னையில் மருத்துவக் கண்காட்சி.

* 187 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரியில், பிப்ரவரி மாதம் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சிக்கு யாரேனும் நன்கொடைகள் தந்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை மருத்துவக் கல்லூரியில் பிப்ரவரி மாதம் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சிக்கு கீழ்க்கண்டோர் நன்கொடை வழங்கியுள்ளனர் :—

| | | ரூ. |
|---|---|---|
| 1. | திரு. எம். ஜி. ராமச்சந்திரன் | 5,000.00 |
| 2. | திரு. நல்ல கிருஷ்ணன் | 2,000.00 |
| 3. | ராணி வெளியீட்டார் | 1,001.00 |
| 4. | திரு. மகாலிங்கம் | 1,000.00 |
| 5. | டாக்டர் சுந்தரவதனம் | 1,000.00 |
| 6. | திருவாளர்கள் தாராபூர் | 1,000.00 |
| 7. | திரு. ரத்தினம் (டி.வி.எஸ்) | 1,001.00 |
| 8. | திரு. சுந்தர்லால் நகாதா (கிழக்கிந்திய பட நிறுவனம்) | 2,500.00 |
| | மொத்தம் | 14,502.00 |



திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்த கண்காட்சியைப் போல தமிழகத்திலுள்ள ஏனைய மருத்துவக் கல்லூரிகளிலும் இத்தகைய கண்காட்சியை நடத்தி மக்கள் பயன்பெற ஏற்பாடு செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அண்மையில் தஞ்சையில் ஒரு மருத்துவக் கண்காட்சியை நான் தொடங்கி வைத்திருக்கிறேன். அதே போல செங்கற்பட்டில் ஆளுநர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். மற்ற கல்லூரிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைக்கின்ற ஆர்வத்தைப் பொறுத்து, திறத்தைப் பொறுத்து அவைகளை நடத்த முடியும்.

### *Cases of chicken-pox in Madras City.*

* 188 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there was any outbreak of chicken-pox in Madras City around the end of March 1972 ; and

(b) if so, the preventive steps taken in this regard ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சின்னம்மையால் பாதிக்கப்பட்டவர்களென (chicken-pox) உடல் நல அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டவர்கள் தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய்கள் மருத்துவமனையில் நோய் தொற்றும் தன்மை முடிகிற வரையில் தனித்து வைக்கப்பட்டனர். தங்கள் வீடுகளிலேயே தனித்து வைக்க இடம்

இருப்பவர்களைக் குறித்த வரையில், அவர்கள் தனிப்பட்ட மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்பட அனுமதியளிக்கப்பட்டனர். மக்களில் விருப்பமுள்ளோர் பெரியம்மை வராமல் இருக்க அம்மைப்பால் குத்தப்பட்டனர். அம்மாதிரி அம்மை குத்துதல் அவர்களை பெரியம்மையிலிருந்து தான் பாதுகாக்குமே தவிர சின்னம்மையிலிருந்து பாதுகாக்காது என்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளதைப்பற்றிய நாளிதழ் அறிக்கையொன்று சென்னை மாநகரின் உடல்நல அலுவலரால் வெளியிடப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon Minister whether it was in an epidemic form and whether there were casualties and if so, may I know the details?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, 72-ம் ஆண்டு ஜனவரியில் 915 பேருக்கு சிக்கன்பாக்ஸ் ஏற்பட்டது. ஒருவர் இறந்திருக்கிறார். பிப்ரவரியில் 1565 பேருக்கு ஏற்பட்டது. ஒருவரும் இறக்கவில்லை. மார்ச்சில் 1940 பேருக்கு ஏற்பட்டது. 3 பேர் இறந்திருக்கிறார்கள். ஏப்ரலில் 887 பேருக்கு ஏற்பட்டது, 3 பேர் இறந்திருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் சிக்கன்பாக்ஸ் காரணமாக இறந்ததாகச் சொல்வது கடினம். வேறு சிக்கல்கள் இருந்திருக்கக்கூடும். அவைகளால் இறந்திருப்பார்கள். இது ஸ்மால்பாக்ஸ் போல கொடுமையானதல்ல என்று தெரிகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, இந்த சின்னம்மை ஏற்படுவதற்குக் காரணம் வைரஸ் என்று சொல்கிறார்கள். வைரஸ் காரணத்தினால் மருந்துகள் கண்டு பிடிக்க முடியவில்லையென்று கருதுகிறார்கள். இது உண்மைதானாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இன்னும் நான் அவ்வளவு புரிந்து கொள்ளவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, சின்னம்மையால் வட சென்னை அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததா அல்லது தென் சென்னை அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததா? அப்படி வட சென்னையில் அதிகமாக இருந்திருக்குமானால் அதற்கு அங்கேயுள்ள



மக்கள் நெருக்கடி காரணமா என்பதை அறிய ஆராய்ச்சியை சென்னை நகரத்தில் அரசு நடத்தியதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

## குடும்பநலத் திட்டம்.

* 189 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடும்பநலத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்தக் குடும்ப நல திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிற டாக்டர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கிற காரணத்தினால் சில பல நேரங்களில் சங்கடங்கள் உருவாவதாகச் சொல்லப்படுகிறது. ஆக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்கிற நேரத்தில் பெண் டாக்டர்களையே பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இது தவறான கருத்து. ஏனென்றால் இந்த திட்டத்தில் பெண்களுக்கு போஸ்ட் டெலிவரி ஆபரேஷன் என்ற நிலையில் பெண் டாக்டர்களால் மட்டும் தான் நடத்தப்படுகிறது. இது பிரசவத்தையொட்டி நடத்தப்படுவதால் கைனகாலஜி, ஆப்ஸ்டெட்ரிக்ஸ் போன்ற துறைகளில் தகுதி பெற்று சிறப்பு பட்டம் பெற்ற பெண்கள் மட்டும் தான் இந்தத் துறை டாக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஏராளமான பெண்கள், தகுதியுள்ளவர்கள், தகுந்த மேற்பார்வையில் இந்த அறுவை சிகிச்சையை நடத்துகிறார்கள். உடன் இருந்து செய்கிறவர்கள், மற்றும் பெரும்பாலோர் பெண்களாகவே தான் இருப்பார்கள்.

* 190 வினா—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடும்பநலத் திட்டப் பணிகளை மதிப்பிட மாநில அளவில் மதிப்பீட்டுக்குழு ஏதேனும் செயல்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சென்ஸஸ் கணக்குப்படி 51—61 அதிகரிப்பைக் காட்டிலும் 61—71-ல் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே ஃபாமிலி பிளானிங் மெதட்ஸ் தீவிரப்படுத்தப்படவேண்டுமா, மக்கள் தொகையை கட்டுப்படுத்துவது பற்றி மேலும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 51—61-ல் இருந்ததை விட விகிதாசாரக் கணக்குப்படி பார்த்தால் 61—71-இல் குறைந்திருக்கிறதே தவிர கூடி இருப்பதாகத் தெரியவில்லை. பர்சென்டேஜ் பிரபோர்ஷன்படி பார்த்தால், ஆயிரத்திற்கு இத்தனை பேர் என்ற கணக்குப்படி பார்த்தால் இறப்பு விகிதம் குறைந்த காரணத்தினால் பிறப்பு விகிதத்தினுடைய வேகத்தால் ஏறுகிற மக்கள் தொகை அதிகமாக வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் 51—61-ல் இறப்பு விகிதம் எவ்வளவு இருந்ததோ அதை விட 61—71-ல் இறப்பு விகிதம் மிகவும் குறைவு பெற்ற காரணத்தினால், மக்கள் தொகை அதிகமாயிருக்கிறது. எனவே, இந்த குடும்ப நல திட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு நியாயம் இருக்கிறது.

*Seasonal conditions in districts.*

* 191 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether it is a fact that the Board of Revenue has received reports of adverse seasonal conditions in the districts during April and May 1972 ; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாதகமான பருவ நிலைகளினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க எடுக்கவேண்டிய துயர்தணிப்பு நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்து செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வருவாய்த்துறை வாரியத்திற்கு அறிக்கைகள் வந்தன. ஆனால், பின்னர், அந்த மாவட்டங்களில் நல்ல மழை பெய்ததால், நிலைமை கணிசமான அளவுக்குச் சீரடைந்தது. எனவே, அதுபற்றி மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether Government have set up any Research Bodies to forecast such eventualities :

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது பருவ மழை தவறுவதால் ஏற்படக்கூடிய ஒன்று. அதனால் ரிசர்ச் பாடி என்று ஒன்று வைப்பதற்கில்லை. எப்போது நிலைமையில் பாதகம் ஏற்படுகிறதோ அப்போது அந்த நிலைமைகளைப் பரிசீலித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any report has been sent by the District Collector of Dharmapuri about the drought condition prevailing at present in Dharmapuri District?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு முழுவதும் உள்ள நிலைமையைப் பரிசீலிப்பதற்கு வாரிய அங்கத்தினர்கள் ஒருவரை அனுப்பியிருக்கிறோம். அந்தக் குழு அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்த அறிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 மாதங்களாக மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளில் மழையின்மையால், கிணறுகளில் தண்ணீர் வற்றி, ஆடிமாதப் பட்டத்தில் விதைக்க முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதன் காரணமாக, மக்கள் அந்தப் பகுதிகளைவிட்டு வெளியேறுகிறார்கள். அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எங்கெங்கு குடி தண்ணீர் நிலைமை மோசமாக இருக்கிறதோ, அங்கங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதுகுறித்து

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. பொதுவாக, வறட்சி நிலைமை பற்றிப் பரிசீலித்து அறிக்கை அனுப்ப வேண்டுமாய் வாரிய உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the peculiar condition in the Dharmapuri district is that it is under the spell of the south-west monsoon. The monsoon suddenly appears and pours showers. These showers tempt ryots to sow seeds and then there are no rains. This is what is happening there for the last so many decades. So, may I know whether he will arrange for special investigation and see that frequent droughts are stopped?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 4 நாட்களுக்கு முன்பு தர்மபுரி மாவட்டத்திற்கு நான் சென்றிருந்த பொழுது மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை இல்லை என்பதைப் பார்த்தேன். ஆங்காங்கு சிறுசிறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைபற்றி, அங்கு சென்றிருந்த வாரிய உறுப்பினர் அவர்களுடைய அறிக்கை வந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பருவமழை தவறியதுகுறித்து போர்டு ஆப் ரெவினியூக்கு எழுதி இருப்பதாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத கஷ்டமான நிலைமை அங்கு இருக்கிறது. வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்பகுதிக்கு ஏதாவது நிதி உதவி செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறதா? ஆமெனில் அதன் விவரம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சிறிது காலத்திற்கு முன்பு, வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பினார்கள். ஆனால், அதன்பிறகு பருவ மழை பெய்த காரணத்தினால், நிலைமை சீரடைந்து இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுவாக, வறட்சி நிலைமை பற்றி அறிக்கை அனுப்புமாறு வாரிய உறுப்பினர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.





*Cases pending in Nagercoil Courts*

*192 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Civil Suits arising at Kuzhithurai in Kanyakumari district pending at Nagercoil Courts as on 1st March 1972?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1—3—1972 அன்றுள்ளபடி, குழித்துறையிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட 131 மேல்முறையீட்டு வழக்குகளும், 11 பல்வகை சிவில் மேல்முறையீட்டு வழக்குகளும் நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறா நிலையில் இருந்தன. அதே போல, 1—3—1972 அன்றுள்ளவாறு, குழித்துறையிலிருந்து பதிவு செய்யப்பட்ட 265 மேல்முறையீட்டு வழக்குகளும், 13 பல்வகை சிவில் மேல்முறையீடுகளும் நாகர்கோவில் துணை நீதிமன்றத்தில் முடிவுறா நிலையில் இருந்தன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி ஒரு கோரிக்கை தாலுகாவிலிருந்து நாகர்கோவிலில் இருக்கும் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, குழித்துறையில் அவசியம் சப் கோர்ட் தேவைப்படுகிறது. ஆகவே குழித்துறையில் சப் கோர்ட் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** அப்படி ஒரு கோரிக்கை இருக்கிறது. உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, குழித்துறையிலேயிருக்கிற முன்சீப் கோர்ட்டிலே அதிகமான கேஸ்கள் இருக்கிற காரணத்தினால், அங்கு அடிஷனல் முன்சீப் கோர்ட் வேண்டுமென்று மனுச் செய்தார்களே. அதன்மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? அண்மையிலே அமைச்சரவர்கள் குழித்துறைக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது இது சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்சீப் கோர்ட் பற்றிய விவரம் இல்லை. நான் அங்கு சென்றபோது சப் கோர்ட் தான் வேண்டுமென்று கேட்டார்கள். அதை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தால், அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி இல்லாத காரணத்தால், அதிக வழக்குகள் முடிவுறாமல் இருக்கின்றனவா ? தற்காலிகமாக தலைமை நீதிபதி ஒருவரை நியமிக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, சட்டத்துறையைப் பற்றியது.

### பாய் நெசவுத் தொழில்

*193 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈச்சம்பாய், கோரைப் பாய், நெசவுத் தொழில் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் மிகுதியாக நடைபெற்று வருகின்றன?

(இ) இத்தொழில்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சிறுகாகுழி தாலுகாவில் கொள்ளிடக்கரை ஓரத்தில் ஏராளமான கோரைகள் மண்டிக் கிடக்கின்றன. அங்கு கோரைப்பாய் நெய்வது முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. அதை ஊக்குவிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்திலே விளாந்திர சமுத்திரம், விளாங்குடி இரண்டு இடத்திலேதான் இது செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர், அவர் கூறியது பற்றி எழுதி அனுப்பினால் அரசு கவனிக்கும்.

திரு. கே எ. வகாப் : தலைவர் அவர்களே, விடையிலே சுமார் 33 இடங்களில் பாய் சங்கங்கள் இயங்கி வருவதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் வந்தவாசி கூட்டுறவு என்பது பல சங்கங்களை உள்ளடக்கிய பாய்சங்கம் என்பதை அரசு அறியுமா ? அது மற்ற சங்கங்களைவிடப் பெரிய சங்கம் என்பதால், மற்ற சங்கங்களுக்கு அளிப்பதுபோல் இல்லாமல் அதற்கு அதிகப்படியான உதவிகளை அரசு அளிக்குமா ? நஷ்டத்தில் நடக்கின்ற சங்கங்களுக்குத்தான் உதவி அளிப்பது என்ற கொள்கை இருக்கிறதே, அதை மாற்றி, லாபத்தில் நடக்கின்ற சங்கங்களுக்கும் உதவிகளை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 382–384-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதை நன்றாக நடத்துகிறார்கள் என்று அரசாங்கம் பெருமையோடு கருதிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உதவிகளைக் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any reduction in the production of the mat weaving industry in recent years due to competition from other industries like plastics industry?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய விவரம் இல்லை.

### *Industrial Liaison Board*

*194 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any proposal to form an Industrial Liaison Board ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, was any proposal brought before the Government to find out the needs of each industry and then to train technical persons to suit the needs of each industry so that proper technical persons can be given to the various industries. Also, whether such a proposal was not recommended by the Technical Education Department?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்குத் தேவையானவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்ற முயற்சியை மேற்கொள்ளும் வகையில் மாநில அளவிலே தொழில் அதிபர்களையும் இந்தத்

தொழில் பயிற்சிக்கூடங்களை நடத்துபவர்களையும் மாநில அரசு அழைத்துப் பேசியது. அந்த அந்த மாவட்டத்திலே குழு அமைத்து, அந்த அந்த மாவட்டத்திலே இருக்கிற இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்டியூட் நிர்வாகிகளையும், தொழிலதிபர்களையும் உள்ளடக்கி, எப்படிப்பட்ட டிரேட்ஸ்ஸுக்கு, எந்தெந்த தொழிற் சாலைகளிலே வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய்ந்து, அந்தந்த பயிற்சியை அந்தந்த தொழிற்சாலைகளிலே கொடுக்க வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்தது.

DR. H. V. HANDE: Have this Government got in touch with other progressive States like Maharashtra, Punjab and Haryana to find out whether it is practised there and if so, whether this Government are prepared to implement it as early as possible and if possible in the next year itself?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது நடைபெற்று ஓராண்டு இருக்கும். ஆகவே, ஏற்கனவே, இதுநடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைச் செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது பயிற்சி பெற்றிருக்கிறவர்களிலே வேலையில்லாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில் தேக்கம் இருக்கிறது. எதிர் காலத்தில் எப்படிப்பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், எந்த எந்தத் துறையிலே பயிற்சி கொடுக்கவேண்டுமென்று ஆங்காங்குள்ள மாவட்ட தேவைகளை ஆராய்ந்து டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மென்ட் அண்ட் டிரெய்னிங் எந்தெந்த ஐ.டி.ஐ. நிலையங்களுக்கு இந்த டிரேட்ஸ் மாற்றம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இப்பொழுதே செயல்பட்டு வருகிறது.

### *Release of water from Mettur Dam*

* 195 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any prospect of early release of water from Mettur for irrigation this year; and

(b) if so, the probable date by which water would be released?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) பாசனத்திற்காக, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து 7—7—1972-இல் நீர் திறந்து விடப்பட்டது.





DR. H. V. HANDE: Sir, has the attention of the Government been drawn to the fact that the level of water in Mettur is very low and if so, what steps the Government are going to take to prevent the consequences of such a low level in the deltaic areas. Also, is it not a fact that chronically the ryots in the delta area suffer on that account and it is only after they embark on an agitation that water is released. So, may I know why there is an inordinate delay in the release of water from the Mettur Dam to the deltaic areas?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, சாதாரணமாக, மேட்டூர் ரிசர்வாயரிலிருந்து ஜூன் மாதம் 12-ம் தேதி தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்ற உத்தரவு இருந்தாலும் நிலைமையைப் பரிசிலித்துப் பார்த்து தேவையான தண்ணீர் தேங்கிய பிறகுதான் நீர் திறந்து விடப்படுகிறது. 27—6—1972-ம் தேதி 72.09 அடி தண்ணீர் வந்தபிறகு, 7—7—1972-ல் தண்ணீர் விடப்படலாம் என்று தலைமைப்பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தண்ணீர் குறைவாக இருந்தாலும் பின்னர் சமாளித்துக்கொள்ளலாம் என்ற நிலையில் தண்ணீர் விடலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### ஆரணி ஆற்றின் குறுக்கே அணை

* 196 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே சிறிய அணைக்கட்டு அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இந்தப் பெரியபாளையம் திட்டத்தை மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் நடந்துவந்து பார்வையிட்டார்கள். எந்தத் தேதிக்குள் இந்தத் திட்டம் முடிவடையும் என்று அறிவிப்பார்களா?

[1972 ஆகஸ்ட் 19

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** இப்பொழுது இருக்கிற நிலவரப்படி 'The Chief Engineer has reported that a preliminary investigation for the construction of the dam across Arani river near Periapalayam in the Tiruvallur taluk, has been taken up by the local officers.' என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனை முடிந்தபிறகு அது பற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

### மதுரை மாவட்டத்தில் பாசன வசதிகள்

*197. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிப் பகுதியில் பாலாறு திட்டம், பரசலாறு திட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், முறையே அந்தத் திட்டங்களுக்கு செல வழிக்கப்படும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் பாலாறு-பொறந்தலாறு, பரப்ப லாறு ஆகிய இரு திட்டங்களின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(இ)

| | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) பாலாறு-பொறந்தலாறு திட்டம் | 281.60 |
| (2) பரப்பலாறு திட்டம் | 39.12 |

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் எப்பொழுதுமுதல் முறைப்படி செயல்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திட்டப்பணிகள் நிறைவேறிய பிறகு முறைப்படி செயல்படுத்தப்படும்.



1972 ஆகஸ்ட் 19]

*198. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாதக[illegible] பட்டிக்கருகில் அணைக்கட்டுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இத்திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டுள்ளது. பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியிலே போடப்பட்டிருக்கிற திட்டம் ஆகும். அன்எக்கனமிக் ஸ்கீம் என்ற அடிப்படையிலே பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் அரசிடனிடத்திலே இருக் கின்றன. சிக்கனமற்ற திட்டம் என்று பார்ப்பதைவிட பின் தங்கிய பகுதியிலே இருக்கின்ற திட்டம் என்று பார்த்து அந்த முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் திட்டத் தினுடைய மொத்த மதிப்பீடு 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய். மதுரை மாவட்டத்திலே டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உணவு உற்பத்தி டன் ஒன்றுக்கு 6,616 ரூபாய் அளவுக்கு ஆகும் என்று தெரிகிறது. இத் திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டாலும் பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

### கால்நடைகள் வாங்கக் கடனுதவி

*199. **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் அரிஜனங்களுக்கு மாடு ஆடுகள் வாங்கப் பணம் கடன் வழங்கும் உத்தேசம் ஏதே னும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : இச்சங்கங்களின் துணை விதிகளில் இதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி** : சங்கங்களினுடைய துணைவிதிகளிலே இடம் அளிக்கப்பட்டிருந்தாலும் அரிசனங்கள் ஆடு மாடுகள் வாங்குவதற்கு லோன் சாங்ஷன் செய்யப்படுவது கிடையாது. ஒரு ஏரியா முழுவதுமாக சாங்ஷன் செய்வதிலே இனிமேலாவது அரசு உத்தரவுகள் போட்டு கடன் வழங்கச் செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செய்யப்படுவது கிடையாது என்று அவர்களே தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். தகவல்கள் தரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. 1970-71-ஆம் ஆண்டு 2,735 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டு லட்சத்து ஓராயிரம் ரூபாயும், 1971-72-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 1,864 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1 லட்சத்து 86 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி** : விதிகள் இடம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்திலே சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆடு மாடுகள் வாங்குவதற்கு மூன்றில் ஒரு பங்கு மானியம் பெற்றவர்களுக்கு, அறவே அப்படி மானியம் பெறுகின்ற பகுதிகளிலே, கடன்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படையிலே மானியம் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கிற இடங்களிலேயும் கடன்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு மத்திய வங்கியின் இயக்குநர். அவர்களே அறவே கொடுக்கவில்லை என்று சொல்வதாக இருந்தால் அவர்களுக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்க வேண்டும். உண்மையாகப் பார்த்தால் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.



### வட ஆர்க்காடு மாவட்டத்தில் கலைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்

* 200. வினா—**திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் தற்போது எத்தனைக் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், எத்தனை கூட்டுறவு நில வள வங்கிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அவைகள் கலைக்கப்பட்ட காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : (அ) கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்படுவதில்லை. ஆனால் அவைகளின் நிர்வாகக் குழுக்கள்தான் கலைக்கப்படுகின்றன. 1971-ஆம் வருடம் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட குழுக்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே நாணயச் சங்கங்கள் 3, நில வள வங்கிகள் 2.

(இ) சரியான கணக்கு இல்லாமை; தவணை கடந்த பாக்கிகள் மேல் வங்கிகள் சீராக நடைபெறாமை, துணைவிதிகளைக் கடைப்பிடியாமை, இன்னும் இவைபோன்ற பல குற்றங்கள்.

**திரு. கே. ஏ. வகாப்** : கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டால் மறுபடியும் அவை செயல்படுகின்ற வரையில் விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். புதிய நிர்வாகக் குழுக்களை உடனடியாகத் தேர்ந்தெடுத்து அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டாலும் அந்த இடத்திலே தனி அலுவலாளர் நியமிக்கப்படுகிறார். அவர்கள் இந்தச் சங்கங்களை நடத்தி வருகிறார்கள். தேர்தல் பற்றிச் சொன்னார்கள். தேர்தல் விரைவிலே நடைபெற இருக்கிறது.

### *Price of sugarcane*

* 201 Q.—THIRU K. T. K. THANGAMANI :
THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the price paid to sugarcane growers by the Millers is the lowest in Tamil Nadu; and

(b) if so, the steps taken to bring it in line with prevailing rates in other States

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே தங்கமணி :** சார், அகில இந்திய ரீதியிலே டன் ஒன்றுக்கு 85 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு இங்கே கொடுக்கின்ற நிலைமை இல்லாமல் இருப்பதாலே, மத்திய அரசு மேலும் அதிகமாக்கக்கூடிய செய்தி வந்திருக்கின்ற நிலையில், டன் ஒன்றுக்கு 85 ரூபாய்க்குக் குறையாத அளவுக்குக் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே கரும்பு உற்பத்தியாளர்கள், ஆலை முதலாளிகள் எல்லோரையும் வைத்து ஒரு ஒப்பந்தம் பேசி, குறைந்த அளவு 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து, இன்றைக்கு அதுபற்றிய தாக்கீதும் அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் விலை மறுபடியும் நிர்ணயம் செய்ய இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு மேலும் அதுபற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக்காரர்கள்,—பொது மார்க்கட்டிலே 220 ரூபாய், 230 ரூபாய் என்ற நிலை இருந்தது. இப்பொழுது 315 ரூபாயிலிருந்து 320 ரூபாய் வரையில் ஏறிக்கொண்டே போகிற நிலைமையில்—ஒரு டன் கரும்பு அரைத்தால் குறைந்த பட்சம் 250 ரூபாய் என்று வைத்தால்கூட 50 ரூபாய் வரையில் லாபம் பெறுகிறார்கள். இன்றைக்கு 350 ரூபாய் என்ற அளவிலே பொது மார்க்கெட்டிலே விற்கப்படுகிறது. எனவே இந்த நிலைமையையொட்டி, கரும்புக்கும் விலையை ஏற்றிக் கொடுக்கச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பொதுவாகவே மார்க்கெட் விலையை அனுசரித்துத்தான் செய்யமுடியும். திடீர் திடீரென்று விலை ஏறுகின்றபொழுதும், இறங்குகின்றபொழுதும் அப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ரெக்கவரி மிகவும் குறைவாகக் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே ரெக்கவரி அதிகமாகக் கிடைக்கிற நிலையில் நம்முடைய மாநிலத்தில் அப்படிக்



கிடைக்காத காரணத்தினால் குறைவாகக் கிடைக்கின்ற நிலையில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இல்லை என்ற காரணத்தினாலே இந்த 85 ரூபாய் விலை கொடுப்பதற்கே நாம் சங்கடப்பட்டு செய்திருக்கிறோம். இன்னும் சில ஆலைக்காரர்கள் அதிகமான லாபம் இல்லை எங்களுக்கு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்காருடைய பொதுவான கொள்கையை வைத்துத்தான் முடிவுசெய்யவேண்டும். அவ்வப்பொழுது விலைகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஏற்றமுறையில் அனுசரித்துக் கொடுப்பது நம்முடைய கையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. சண்முகம் :** தலைவர் அவர்களே, கரும்பு விலையை 85 ரூபாய் என்று நிர்ணயம் செய்து அதற்காகத் தாக்கீது அனுப்பப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் சில ஆலைக்காரர்கள் 85 ரூபாய் என்ற அளவுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** கூட்டுறவு ஆலைக்காரர்கள் எல்லாம் அந்த விலையைக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தனியார்கள் 3 பேர்கள் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அதற்கான நடவடிக்கைகளை உணவு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, 85 ரூபாய்க்கு மேல் கூட்டிக்கொடுக்கச்சொல்ல கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். கேரள மாநிலத்திலே சித்தூர் பேக்டரியிலே தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவந்து கொடுத்தால் 100 ரூபாய் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள கரும்புக்கு ரிக்கவரி அதிகமாக இருப்பதால்தான் அவர்கள் 100 ரூபாய் கொடுக்க முன்வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து 100 ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தமிழ்நாடு அரசு 85 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்வதிலே அதை வாங்கிக் கொடுப்பதிலே சங்கடம் எதுவும் இல்லை. முத்தரப்பு மாநாட்டிலே கூட அவர்கள் அதைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 3 பேர்கள் கொடுக்கவில்லை. அரசாங்கம் அவர்களுக்குத் தாக்கீது அனுப்பி இருக்கிறது. கேரள மாநிலத்தில் உள்ள சித்தூரில் 100 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். கோயம்புத்தூரில் உள்ள சக்தி மில்லிலேயே 90 ரூபாய்

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether any survey of the living conditions of the community has been conducted?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தனித் துறை என்று கேட்டதால் இல்லை என்று சொன்னேன். ஆனால் இதற்கு மாவட்ட துணை ஆட்சித் தலைவர் போடப்பட்டு அவர்களுக்கு எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதிலும் மதுரை மாவட்டத்தில் பெருமளவு கள்ளர்களுக்காக இந்த மேம்பாட்டுத் திட்டம் இருக்கிறது. அதை எல்லா கள்ளர் சமுதாயத்திற்கும் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட நோக்கம் எதுவும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வெடால் கிராமத்தில் கோவில் திருப்பணி

* 205 வினா—திரு. வீ. இராசகோபால் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தில் உள்ள ஜெயங்கொண்டான் காலத்திய கோவில் இந்து அறநிலையத்தின் கீழ் உள்ளதா ?

(இ) அக்கோவிலை புதுப்பிக்கக் கோரி அவ்வூர் மக்களிடமிருந்து மனு வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த வெடால் கிராமத்தில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த குகைச் சிற்பங்கள் இருக்கின்றன. அதையும் அரசாங்கம் கண்காணித்து சரி செய்து சீர் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தில் உள்ள கோயிலைப்பற்றிய தகவல்தான் என்னிடத்தில் இருக்கிறது. பல்லவ காலத்தைப் பற்றிய சிற்பங்களைப்பற்றிய தகவல் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) பி. அண்ட் சி. ஆலை கதவடைப்பு குறித்து.

MR. SPEAKER : A notice under Rule 42 of the Legislative Assembly Rules has been received by me from the hon. Member, **Thiru N, K. Palanisami, to adjourn the business of the House to discuss a definite matter and urgent matter of public importance, namely,** " the Lock-out in the B & C Mills from the 11th August 1972 affecting 14,000 workers and the failure of the Government to negotiate with the Company in order to re-open the Company ".

**Similar notices have been received** from Thiru J. James, Thiru K. Suppu, Thirumathi T. N. Anandanayaki and Thiru N. V. Gurusami.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், ஆகஸ்ட் மாதம் 11-ஆம் தேதியிலிருந்து பி. அண்ட் சி. மில் மேனேஜ்மெண்டாரால் சட்ட விரோதமாக மூடப்பட்டிருக்கிறது. இண்டஸ்டிரியல் எஸ்டாபிலிஷ்மெண்ட் ஆக்ட் கம்பெனி ஸ்டாண்டிங் ஆர்டர் செக்ஷன் 11-ஐக் காண்பித்து பத்திரிகைகளுக்கு லாக் அவுட் என்றும், அங்கே வெறும் நோட்டீசை லே-ஆஃப் என்று ஒட்டியும் வைத்திருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் வந்தபிறகு இம்மாதிரி ஸ்டாண்டிங் ஆர்டர் அவசியமில்லாதபோது இந்த பி. அண்ட் சி. மில் மட்டும், அந்த மேனேஜ்மென்டார் மட்டும் இம்மாதிரி ஸ்டாண்டிங் ஆர்டரை வைத்து தொழிலாளர்களை ஏமாற்றுவது சரியல்ல. ஏற்கனவே நடந்த வேலைநிறுத்தத்தில் சர்க்கார் தலையிட்டு அதன் மூலமாக அட்ஜூடிகேஷனுக்கு அனுப்பி

அட்ஜூடிகேஷன் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. அதன் பிரகாரம் பாக்கிகளை, மேனேஜ்மெண்டாரும், தொழிலாளர்களும் சேர்ந்து ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சேர வேண்டுமென்று கணக்கிட்டு அதைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் மேனேஜ்மெண்டார் மாதாமாதம் அவர்கள் இஷ்டப்படி கணக்கில்லாமல் கொடுத்ததன் காரணமாக அங்குள்ள தொழிலாளர்கள் ஏற்கனவே கொடுத்த தீர்ப்பின் பிரகாரம் இரண்டுபேரும் சேர்ந்து ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டதற்கு ஒரேபிடிவாதமாக இருந்ததால்தான் இந்த லாக் அவுட் ஏற்பட்டிருக்கிறது. இது சட்டவிரோதமானது. ஆகவே, சர்க்கார் தலையிட்டு இதை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கழிந்த ஒரு வார காலமாக பி. அண்ட் சி. மில் மூடப்பட்டு ஏறத்தாழ 15,000 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையிழந்து பட்டினியால் வாடுகின்றார்கள் என்று கூறும்பொழுது நிச்சயமாக நாம் வருந்தக்கூடிய நிலையில் இருக்கிறோம். அதற்குக் காரணம் தொழிலாளர்கள் அல்ல என்பதை இந்த மன்றத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்ட அட்ஜூடிகேஷனில் முடிவு செய்யப்பட்ட விஷயங்களைக்கூட நடைமுறையில் நடத்த தவறுகிறார்கள் என்று கூறும்பொழுது அதன் விளைவுகளுக்கு முதலாளிகள் தான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலை நீடிக்காமல் இருக்க, 15,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைவிட வேறு அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் இருக்க முடியாது என்பதால் இதை விவாதிப்பதற்காக இந்த மன்றத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகரவர்களே, சென்னை நகரத்தில் பொதுவாகவே தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு அமைதியின்மை நிலவுவதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வந்திருக்கிறோம். சிம்சனில் 15,000 பேர்கள் வேலையின்றித் தெருவிலே நின்று திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இது போதாது என்று பி. அண்ட் சி. மில்லில் 15,000 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன, நோய்க்கு மூல



காரணம் என்ன என்பதை ஆராய்வதில் அரசாங்கம் மிகவும் தாமதமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். முதலாளிகள் தவறு செய்தாலும் சரி, தொழிலாளர்கள் தவறு செய்தாலும் சரி, தவறு எங்கே இருக்கிறது என்று பார்த்து இத்தகைய நிலைமைகளைச் சமாளிக்க அரசாங்கம் முன்வராமல் பயந்து பயந்து, முதலாளிகளுக்கு பயந்துகொண்டும், தொழிலாளர்களுக்கு பயந்துகொண்டும் பிரச்னைகளுக்கு எப்படி தீர்வு காண்பது என்று ஆராயாமலே போகாமலிருப்பது சென்னை நகர மக்களுக்கு அவஸ்தை அளித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக. பி. அண்டு சி. மில்லுக்கு ஒரு யூனியன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. பல தொழிற்சாலைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன்கள் இருந்தாலும் திடீர் திடீரென்று தகராறுகள் வருவதைப் பார்த்தால் இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்டிலோ அல்லது தொழிலாளி-முதலாளி உறவைக் கண்காணிக்கும் சட்டங்களின் அடிப்படையிலோ மாறுதல் அவசரமாகத் தேவை என்று தோன்றுகிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற நிலை ஏற்பட வேண்டும். பல தொழிற்சங்கங்கள் இருந்தால் அங்கீகரிக்கப்பட தொழிற்சங்கம் எது என்று உடனடியாக எவால்யுவேஷன் கமிட்டி மூலமாக முடிவு எடுக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம் இதுதான் என்று முடிவு எடுத்த பிறகு அடுத்தவர்கள் இடையிலே தொல்லை கொடுக்கக்கூடாது. அடுத்த தேர்தல் வரும் வரை ரெகக்னைஸ்டு யூனியன் இயங்க வேண்டுமென்ற கட்டுதிட்டத்தோடு இருந்தால்தான் அமைதியைப் பாதுகாக்க முடியும். தேசிய யூனியன் இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தகராறு செய்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கம் இருந்தால் அதை எதிர்க்கக்கூடிய தொழிலாளர்கள் அந்த வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இதிலே உண்மையைச் சொல்லுகிறேனே தவிர மறைக்க ஒன்றும் இல்லை. இரண்டு பேரும் நாலு நாலு ஆட்களை வைத்துக்கொண்டு தகராறு செய்து கொண்டிருந்தால் தொழில் ஸ்தம்பித்து விடுகிறது, தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்படுகிறது.

அரசாங்கம் என்ன செய்கிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது செய்தால் அதை ஒரு கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள், வேறு கட்சியைச் சேர்ந்த

வர்கள் செய்தால் வேறு கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். அரசு என்று வந்த பிறகு கட்சியைப் பார்த்துக் கொண்டிராமல், விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குமானால் கட்டாயமாக பல தொல்லைகள் ஏற்படும். அதனால் தொழில் மந்தம் ஏற்படும். புதுத் தொழில்கள் ஆரம்பிக்க இடம் இல்லாது போய்விடும். அரசாங்கம் நல்ல கண்ணோட்டத்தோடு திறமையாக, திட்டவட்டமாக நடவடிக்கைகளை எடுத்து இப்படிப்பட்ட அனாவசிய தொழில் தகராறுகள் தமிழகத்தில் ஏற்படாமல் இருக்க வழி காண முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தலைவர் அவர்களே, பி. அண்டு சி. மில் வேலைநிறுத்தத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக, நமது அம்மையார் அவர்கள் பாதி உண்மைக்கு வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir it is a question of privilege. பாதி உண்மைக்கு வந்திருப்பது என்றால் பாதி பொய் பேசுவதாக ஆகிறது. ஏதோ அவர்கள்தான் எப்போதும் உண்மையே பேசிக் கொண்டிருப்பது போல் பேசுகிறார்கள். 'தமிழரசில்' கூட 'வழக்கம்போல் அனந்தநாயகி தவறான கருத்தைச் சொன்னார்' என்று போடப்பட்டிருக்கிறது. லெஜிஸ்லேச்சர் டிமாண்ட் வரும்போது பேசலாம் என்று இருக்கிறேன். இது சரியல்ல.

MR. SPEAKER : There is no 'pathi' truth. There is truth or no truth.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: நான் பேசும் வரை அமைதியாக இருந்தால் நான் சொல்ல வந்ததைப் புரிந்து கொள்ள முடியும். அரசாங்கத்தின் பாதுகாப்பை வைத்து தொழிற் சங்கத்தைப் பலப்படுத்துகிறோம் என்று தெரிவித்தார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

பிரிட்டானியா பிஸ்கட் பாக்டரியில் இரண்டு தொழிற்சங்கங்கள் இருந்தன. ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம், வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் இருந்தது.



மற்றொன்று ஐ.என்.டி.யு.சி. எதை ஏற்பது என்ற பிரச்சினை வளர்ந்து நடுவர் ஒருவரை நியமித்து பரிசிலனை செய்து அதிகமாக எண்ணிக்கையுடையவர்கள் ஐ.என்.டி.யு.சி.-யில் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் ஐ.என்.டி.யு.சி. சங்கத்தைத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டது. இதே இதேபோல பி. அண்டு சி. தொழிற்சங்கத்தை அங்கீகரிப்பதிலும் தகராறு ஏற்பட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதிலே நடுவரை நியமித்து அந்தோணிப் பிள்ளையைத் தலைவராக ஏற்று இருக்கும் சங்கத்திற்குத் தொடர்ந்து ஏற்பு அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

சிம்ஸன் கம்பெனியைப்பற்றி அம்மையாருக்கு நன்றாகத் தெரியும். காட்டூர் கோபால் ராஜினாமா செய்துவிட்டு வேறு ஒரு தேர்தலை அரசு தொழிலாளர் துறை ஒழுங்காக நடத்தி இருக்கிறார்கள். அதனைத் தொழிற்சங்கத் தலைவரே பாராட்டி இருக்கிறார்கள். எனவே, அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு தொழிற்சங்கத்தை தி.மு.க. அரசு வலுப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டுக்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி. அண்டு சி. ஆலை கடந்த பத்து நாட்களாக செயலாற்றவில்லை. இன்று அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது யோசனையின்படி அரசாங்க சார்பில் தொழிலாளர் நலத் துறைச் செயலாளரும், தொழிலாளர் நலத்துறை கமிஷனரும் தெரிவித்த நிபந்தனைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டார்கள். தொழிலாளர்கள் அதுபற்றித் தங்களுடைய செயற்குழுவில் வைத்து முடிவு சொல்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அநேகமாக திங்கட்கிழமை மில் திறக்கப் படலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன் இதிலே தீர்வு காண அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டது. முன்பு இருந்த அரசாங்கம் இம்மாதிரி நடக்கவில்லை என்பது அம்மையாருக்கே கூடத் தெரியும்.

தொழிலாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளைப் பற்றி பேச்சுவார்த்தை ஆரம்பித்து பத்து நாட்களுக்குள்ளாக சரி செய்கிறோம் என்று நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டார்கள். அதைத் தொழிற்சங்கமும் ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

[திரு. என். வி. நடராசன்] [1972 ஆகஸ்ட் 19

திங்கட்கிழமையில் திறக்கப்படலாம் என்ற நிலை இருப்பதால் இதைப்பற்றி மேலும் விவரமாகக் கூறத் தேவையில்லை என்றும் பேரவையை இதற்காக ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென்றும் என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, அனுமதி மறுக்கப்படுகின்றது.

**(ஆ) சிம்ஸன் கூட்டு நிறுவனங்கள் மூடப்பட்டதும் அதன் விளைவுகள் குறித்தும், அரசு அவற்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும்.**

MR. SPEAKER: The hon. Member, Thiru N. K. Palanisamy, has given notice under Rule 42 of the Assembly Rules to adjourn the business of the House to discuss the following definite matter, of urgent public importance :—

'The closure of the Simpson Group of Companies for the past three months which has affected the life of the thousands of workers in the public and the failure of the Government to negotiate with the Company in order to re-open the Companies.'

திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே. டி. கே. தங்கமணி. டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியவர்களும் இதேமாதிரியான ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானங்களையும் நான் இத்துடன் இணைக்கப் போகிறேன்.

அவர்கள் இன்று காலை 9½ மணிக்குத்தான் இந்தத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற விதிகளில் 43-வது விதியில் ரொம்பத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுப்பதற்கான காலவரையறையை அது குறிப்பிடுகிறது.

'A member desirous of moving a motion for an adjournment of the business of the House for the purpose of discussing a definite matter of urgent public importance shall, before the commencement of the sitting of the Assembly at which he proposes to ask for leave of the House to make his motion, hand to the



1972 ஆகஸ்ட் 19] [Mr. Speaker]

Secretary three copies of a statement in writing of the matter proposed to be discussed, and obtain the Speaker's consent to his asking for leave to make the motion.'

என்று தெளிவாக இருக்கிறது. ஆனாலும், கொஞ்ச நாட்களாக நான் தாராளமாக இருப்பதை உரிமையாகக் கருதிக்கொண்டு முக்கியமான தலைவர்களே இப்படிக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியதல்ல.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய இந்தத் தீர்மானத்தோடு திரு. பொன்னப்ப நாடார், திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி அனந்தநாயகி ஆகியவர்களுடைய தீர்மானங்களையும் இணைத்துக் கொள்ளுகிறேன். இந்த மாதிரி நிலைமைகள் இனி ஏற்படாதவாறு 43-வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் செயலாளரிடத்தில் எழுதிக் கொடுத்து பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். பொதுவாக, தமிழ் மாநிலத்தில் இப்போது முக்கியமான பிரச்சினை என்று சொன்னால் அது சிம்ப்சன் பிரச்சினையாகத்தான் இருக்கிறது. ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து இந்த சிம்ப்சன் குரூப் ஆப் கம்பெனீஸ் மூடப்பட்டு இன்று பதட்ட நிலைமை தொழிலாளர்கள் மத்தியில் உருவாகி இருக்கிறது. இதற்கு யார் காரணம், என்ன சூழ்நிலைகளால் உருவாயிற்று என்றெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்பவில்லை. ஆனால் அரசியல் தலையீடு இந்த விவகாரத்திலே அதிகமாகத் தலை தூக்கி இருக்கிறது. குறிப்பாக, விரும்பத்தகாத பல வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதையெல்லாம் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இவ்வளவு பெரிய நிறுவனம் இவ்வளவு நாட்களாக மூடப்பட்டிருந்தும் என்னென்ன வழிமுறைகளை அரசாங்கம் வகுத்தது, என்னென்ன திட்டங்களை எடுத்தார்கள் என்பதைப்பற்றியெல்லாம் சற்று சிந்திக்கவேண்டும். பாராளுமன்றத்தில் விவாதம் நடந்த போது இந்தத் தொழில் துறை சம்பந்தமாக முழுப் பொறுப்பும்

இந்த மாநில அரசுக்கு இருக்கிறது என்று திட்டவட்டமாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மாநில அரசிலிருந்து இதற்கு எந்தவிதமான முடிவும் இதுகாறும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை இங்கு கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது ஒருபுறமிருக்க, இன்று மானேஜ்மென்ட்டார் ஒரு நோட்டீஸ் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். 23-ம் தேதி அன்று அவர்கள் திறக்கப்போகிறார்கள் என்ற ஒரு நோட்டீஸை பார்க்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் எல்லாம் இப்படி தொன்றுதொட்டு மூடிக்கிடக்குமானால் நமது தொழில் துறை மிகவும் பாதிக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல் தொழில்கள் இந்த மாநிலத்தில் இருந்து வேறு மாநிலங்களுக்கு ஓடிச் செல்வதற்குள்ள நிர்பந்தச் சூழ்நிலையும் உருவாகிவிடும் என்று ஐயப்படுகிறேன், தமிழ் மக்களும் ஐயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முக்கியமான விஷயத்தில் உதாசீனமாக இல்லாமல் இந்த அரசாங்கம் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு மூடிக்கிடக்கிற ஆலைகளை எல்லாம் திறப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கோருகிறேன். அதோடு தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதில் அரசாங்கம் தவறி இருக்கிறது என்று தொழில் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் கூறுகிறார்கள். ஆதலால் அதையும் கவனிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் இருப்பது, சிம்ஸன் கம்பனி மூடப்பட்டிருக்கிறது, அரசாங்கம் சில பொறுப்புகளைச் செய்யத் தவறி விட்டது, அதைத் திறக்க வேண்டும் என்றுதான் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 23-ம் தேதி திறக்கப்போகிறது என்று நீங்களே சொல்கிறீர்கள். அந்தச் செயல்கள் ஆரம்பமாகிவிட்டன என்றுதான் பொருள். ஆகவே உங்கள் தீர்மானமே 'இன்ஃப்ரக்சுவஸ்' ஆகிறது. 23-ம் தேதி திறக்கப்படும் என்று தெரிவித்துவிட்ட பிறகு, அப்படி நிர்வாகத்தினர் தெரிவித்த பிறகு அதைப்பற்றி விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை மற்றவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது பத்திரிகைகளில் வந்த செய்தி. அது நிஜமா, அதைத் திறக்கப் போகிறார்களா, அல்லது திறந்து இன்னும் நடக்கப் போகிறதா என்பதெல்லாம் நாம்



பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயம். மானேஜ்மென்டிலிருந்து அம்மாதிரி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து அறிக்கை விட்டதாக நான் கூறவில்லை. ஆகவே, இம்மாதிரியான விஷயங்களில், குறிப்பாக சிம்சன் பிரச்சினையில் முடிவு காண்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எவ்வளவு துன்பங்கள், கஷ்டங்கள் இருந்தாலும் இந்தப் பிரச்சினையை நல்ல மனிதப் பண்போடு அணுக வேண்டியது நம் கடமை என்ற உணர்வோடு இப்பிரச்சினை பற்றி நல்ல முறையில் சர்வ கட்சியில் உள்ள தலைவர்களை வேண்டுமானால் அழைத்து இதற்கு ஒரு பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் முனைய வேண்டும் என்ற கருத்தினைச் சுட்டிக்காட்டி, இதுகுறித்து விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இது மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் சில விதி முறைகள் இருந்தாலும் எங்களுடைய இந்த அட்ஜோர்ன்மென்ட் மோஷனை அனுமதித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான், திரு. பொன்னப்ப நாடார், டாக்டர் ஹாண்டே, திருமதி அனந்தநாயகி ஆகியோர் கொடுத்திருக்கும் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் அரசாங்கத்தின் குறை என்ன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

failure of Government to re-open the units,
failure of Government to ensure peace in the area,
failure of Government to give confidence to the workers,

என்ற மூன்று குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் பேரில் கொடுத்திருக்கிறோம். ஒற்றிவைப்பது என்று வரும்போது அரசு செய்யத் தவறியவை என்னென்ன என்பதை தங்களுக்குச் சுட்டிக் காட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு ஆண்டுக் காலமாக இந்த சிம்சன் பிரச்சினை ஒரு தீராத பிரச்னையாக இருந்து வருகிறது. ஜுன் 15-ம் தேதி ஏற்பட்ட அசம்பாவிதத்தைப்பற்றி இந்த சபை அறியும். அன்று தொழிற்சாலைக்குள்ளே ஒரு தொழிலாளியும் அதைத் தொடர்ந்து வெளியே வந்த ஒரு தொழிலாளி தொழிற்

சாலைக்கு வெளியே படுகொலை செய்யப்பட்ட ஒரு பயங்கரமான சம்பவம் ஏற்பட்டதையொட்டியும் 16—6—1972-ல் இருந்து தொடர்ந்து அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன.

MR. SPEAKER : You mean death of Prathapchandran.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பிரதாப் சந்திரன் கொலை செய்யப் பட்டது தொழிற்சாலைக்குள்ளே. கொலை செய்யப்பட்ட நேரம் எனக்குத் தெரியாது. கொலை செய்யப்பட்டவுடன் தொழிலாளிகள் பூராவும் வெளியே வரக்கூடாது என்று ஏற்பாடு செய்து, போலீஸ் பந்தோபஸ்துடன் அவர்கள் வெளியே வருவது என்று ஏற்பாடு இருந்தது. அந்த ஏற்பாட்டைத் தெரியாத ஒரு அப்பாவி தொழிலாளி சுவற்றைத் தாண்டி வெளியே குதித்து வருகிற நேரத்தில் இங்கிருந்து உள்ளே வருகிறார் என்று வெளியே காத்துக்கொண்டிருந்தவர்கள் படுகொலை செய்திருக்கிறார்கள். காலை ஆறு மணிக்கு கண்ணனின் உடல் கிடைத்ததாகத் தகவல் வந்திருக்கிறது. உள்ளே ஒரு தொழிலாளி கொலை செய்யப் பட்டதும் வெளியே ஒரு தொழிலாளி கொலை செய்யப்பட்டதும் ரொம்பவும் வருத்தப்படக்கூடிய ஒரு சம்பவமாகும். இம்மாதிரி யான சம்பவங்கள் நடக்கக்கூடாது.

இந்த ஸிம்ப்ஸனைப் பொறுத்தவரையில் அதன் முதலாளி 23-ம் தேதி திறக்கப்போகிறோம் என்று சொன்னால் அது அமைதியான முறையில் திறக்கப்படுமா என்று எனக்குத் தெரியாது. முதலாளி இன்று தானாக சில காரணங்களை வைத்துச் சொல்கிறார். ஆனால் அப்படி திறப்பதாக இருந்தால் இந்த மூன்று விஷயங்களிலும் அரசாங்கம் தன்னுடைய பொறுப்பில் இதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்ற ஒரு உத்தரவாதமும், அப்படித் திறக்கப்பட்டால் அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் எந்த விதமான அசம்பாவிதமும் ஏற்படாது என்ற ஒரு உத்தர வாதமும்—நான் இதைக்கூடச் சொல்வேன்—பெரிய தொழிற் சங்கத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் அங்கு சென்று உட்கார வேண்டும், தகராறு வந்தால் அவர்கள் உதை வாங்கட்டும், தொழி லாளர்கள் அடிபட்டுச் சாவதை விட. ஒரு மாத காலம் தினசரி மில் கேட் திறக்கப்பட்டவுடன், போலீஸ் பந்தோபஸ்து இருப்பினும், ஆளும் கட்சியில் உள்ள ஒரு அமைச்சர் வேண்டு



னாலும் வரட்டும், மற்றக் கட்சித் தலைவர்களும் அங்கு சென்று ட்கார்ந்து கொண்டு அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படக்கூடிய றையில், ஏதாவது ஏற்பட்டால் அவர்களுக்கு ஆதரவாக ருக்கிறோம் என்ற முறையில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ற்படக்கூடிய முறையில் ஒரு நிலைமையை ஏற்படுத்திய பிறகு ரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இன்று திரு.வி.க. காலனியைப் பார்த்தால் அங்கு பாதி காலி ாகவே இருக்கிறது. பலர் குடும்பத்தோடு வாழமுடியாது என்று ஷ்டப்பட்டு வேலை கிடைத்தவர்கள் எல்லாம் அவரவர்கள் ஊர்களுக்கு சென்று விட்டார்கள். அங்கு நிரந்தரமாக வீடு ட்டிக்கொண்டவர்கள் கூட வேறு இடங்களுக்குப் போயிருக்கும் ரிதாபகரமான நிலை எல்லாம் அங்கு இருக்கிறது. அவர்களுக்கு த்தரவாதம் கொடுக்கக்கூடிய முறையில் அரசாங்கம் இன்னும் டவடிக்கைகள் எடுக்கவில்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்—பாராளு ன்றத்தில் இந்தமாதிரி தொழிலாளர் பிரச்சினை வந்தபோது விவாதத்திற்குப் பிறகு பிரதம மந்திரி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு வைத்து சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் நாமும் சீரியஸாக இருக்க வேண்டும். 23-ம் தேதி திறக்கப் போகிறார்கள் என்று சொன்னால் என்னென்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஒரு சிறிய மாநாடு அல்லது அவர்களைக் கூப்பிட்டு வைத்து விவாதித்து கூட்டாக ஏதாவது அறிக்கை விட்டால்கூட உதவிகரமாக இருக்கும். இது மிகவும் முக்கியமான விஷயம். எல்லோருடைய கருத்துக்களும் தெரிவது உதவியாக இருக்கும். எனவே சபையின் அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இது பற்றி ஒரு விரிவான விவாதத்திற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டு மென்று வற்புறுத்துவதோடு முக்கியமான ஒன்றிரண்டு கருத்துக் களையும் நான் கூற விரும்புகிறேன். இந்த ஸிம்ப்ஸன் பிரச்சினை குறித்து பல தடவை இந்த மன்றத்தில் விவாதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஒரு முக்கியமான பிரச்னைக்கு மட்டும்

தெளிவான ஒரு முடிவை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை என்று நான் கருதுகிறேன்.

நீண்டநாட்களாக இந்தப் பிரச்னை இருந்து வருகிறது. பல்வேறு தொழிலாளத் தோழர்கள் தாக்கப்பட்டார்கள். குறிப்பாக மௌண்ட்ரோட், திரு.வி.க. நகர், பெரம்பூர் ஆகிய இடங்களில் நீண்ட நாட்களாக தொழிலாளர்கள் தாக்கப்பட்டு வந்தார்கள். அந்த நேரங்களில் ஸிம்ஸன் முதலாளியோ அல்லது நிர்வாகமோ இன்னார் இன்னாரை ஸஸ்பெண்ட் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. இப்போது குறிப்பிட்ட சில நபர்களை ஸஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் முக்கியமானது. இருதரப்பிலிருந்தும் திறக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கட்சித் தலைவர்கள் திறக்கவேண்டுமென்றும் சொல்கிறார்கள். எல்லோரும் ஒருமுகமாகச் சொல்கிறார்கள் உடனடியாகத் திறக்க வேண்டுமென்று. இப்போது சுமார் இருநூறு பேர்களை நீக்க வேண்டுமென்றும் அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் நிர்வாகத்தினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள், எல்லோரையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். சில பேர்கள் மீது கேஸ் போட்டிருக்கிறீர்கள், இப்போதுதான் கேஸ் போட்டிருக்கிறீர்கள், இவ்வளவு நாட்கள் போடவில்லை, பிரதாப் சந்திரன், கண்ணன் இறந்தபிறகுதான் கேஸ் போட்டிருக்கிறீர்கள் என்கிறார்கள். அவர்கள் குற்றச்சாட்டுகள் எல்லாம் கவனிக்கத்தக்கது. திரு.வி.க. நகரில் ஒரு இல்லத்தில் பெட்ரோல் விட்டு நெருப்பு கொண்டு கொளுத்தப்பட்டது. அந்த நேரத்தில் எல்லாம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளாமல், இப்போது மட்டும் குறிப்பிட்ட சில நபர்கள் மீது நடவடிக்கைகளை எடுப்பது என்பது விகடிமைசேஷனகத்தான்' கருதப்படுகிறது. இந்த Gordion Knot ஐ கத்தரிக்க வேண்டுமானால், இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமானல் எத்தனை பேர் உண்மையிலேயே நீக்கப்பட வேண்டும், அப்படி நீக்கப்படாமல் தொழிற்சாலை திறக்க இயலுமா என்கிற பிரச்னையையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் கேஸ் போட்டவர்கள் கோர்ட்டுக்குச் சென்று, அங்கே 'அக்விட்' செய்யப்பட்டு விடுகிறார்கள் என்கிற நிலையேற்பட்டால் ஏன் அவர்களை முன்கூட்டியே நீக்க வேண்டுமென்ற பிரச்னையும் இருக்கிறது. இதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



இரண்டாவதாக, உள்ள பிரச்னை என்ன வென்றால், நாளைக்கு மீண்டும் தொழிற்சாலைகள் திறக்கப்படுகின்றன என்று சொன்னால், அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? அதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். இதைப்பற்றி இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்களும் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வன்முறைகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த மன்றத்தில் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று சொல்லிய பிறகும், மேல் மட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் உறுதி கூறிய பிறகும், சில நபர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் மீது அரசாங்கம் கண்காணிப்பு வைத்து, சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கூறிய பிறகும், இந்த மன்றத்தில் அமைச்சர்கள் ஒப்புக்கொண்ட பிறகும், அங்கே நடைமுறைக்கு அது கொண்டு வரப்படவில்லை போலீஸ் அதிகாரிகளால். ஆகவே, அரசாங்கம் திட்டவட்டமான ஒரு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சில தொழிலாளர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களையும் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். இப்போது முதலாளிகள் 23-ம் தேதியன்று தொழிற்சாலைகளைத் திறக்கப் போகிறோம் என்று அறிவிப்புப் போட்டிருக்கிறார்கள். அதிலே 150 பேரை சஸ்பெண்டு செய்யப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். 50 பேரைக் குறைத்து இருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் 'ஏரியா ஆப் அண்டர் ஸ்டேன்டிங்' விஸ்தரிக்கப்படுமானால், இந்தப் பிரச்னை முடிவடைவதற்கு வசதியாக இருக்கும்.

அந்தத் தொழிற்சங்கத் தலைவர் தற்போது ஜெயிலில், ரிமாண்டில் இருக்கிறார். சஸ்பெண்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களைக் குறித்த பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்றால் அவருடைய அசிஸ்டெண்டோடுதான் செய்ய வேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்னை, ஒரு பக்கத்தில் பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ள தொழிலாளர்கள், மற்றொரு பக்கத்தில் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜெயிலில் இருக்கிறார். மற்றொரு பக்கத்தில் சஸ்பெண்டு

செய்யப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதா என்பதைப்பற்றி முடிவுசெய்ய வேண்டியது, இப்படி மூன்று கோணத்தில் இந்தப் பிரச்சினையிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்ந்தால்தான் இதற்குச் சரியான ஒரு முடிவு காணமுடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருமூர்த்தியை வெளியே அனுப்பி விட்டு, காட்டூர் கோபால் வந்ததை பற்றியெல்லாம் நான் பேசவில்லை. "லெட் பை கான்ஸ் பி பை கான்ஸ்" நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி மேலாவது நாம் ஒரு நல்ல முடிவு எடுப்போம்.

நாங்கள் எல்லோரும் ஒரு மனதாக இருந்து இந்த 15,000 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்புகிற காரணத்தால் இந்த மூன்று பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் திட்டவட்டமாக அறிக்கை கொடுத்து விட்டால், எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்று சொல்லி, இந்த சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதித்தால், இன்னும் விரிவாக விவாதிப்பதற்கு நன்றாக இருக்கும் என்று வற்புறுத்தி, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சிம்சன் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக உருவாகிவிட்டது. இந்தப் பிரச்னையில் அரசாங்கம் எப்படி நடந்து கொள்கிறதோ, அந்தப் பாதையில் நான் தமிழகத்தில் தொழிற்சங்கம் இனி இயங்கும் என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிம்சன் விவகாரத்தை நிறுத்திவிட்டார்கள். இத்தனை மாதங்களாக இந்தக் கம்பெனிகள் மூடியிருந்ததன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய்க்கான உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தொழிற்சாலைகள் சிலவற்றை வெளி மாநிலங்களில் திறக்க வேண்டிய நிலைமைக்கு இந்தப் பிரச்னை கொண்டு போய் விட்டிருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் காலதாமதமாகுமானால் அது தமிழ் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

23-ம் தேதியன்று சிம்சன் கம்பெனி திறப்பதாக முதலாளிகள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய திரு. ஹாண்டே அவர்கள் சொல்லிய மாதிரி போலீசார் சிலபேர்





மீது வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். சில பேர் மீது 'டொமஸ்டிக் என்கொயரி' வைத்திருக்கிறார்கள். தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள், எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பும் வாய்ப்பு கொடுத்தால் தான் உள்ளே போவோம இல்லாவிட்டால் உள்ளே போக முடியாது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் எப்படி இந்தச் சிக்கலை தீர்க்கப்போகிறது என்பதில் தான் அவர்களுடைய திறமை இருக்கிறது என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

சாதாரணமாக தொழிற்சங்கங்களிலே இப்படி 'கிரிமினலி இன்வால்வ்ட்' என்பது வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். சிம்சன் தொழிற்சாலையில் நடந்தது ஒரு தொழிலாளி தொழிற்சாலையின் உள்ளேயே பலரால் தாக்கப்பட்டு உயிரைக் கொடுக்கிறான் என்பதாகும். ஒரு தொழிற்சங்கத்திற்கும் மற்றொரு தொழிற்சங்கத்திற்கும் தகராறு ஏற்படலாம், முதலாளிகளுக்கும் தொழிற்சங்கத்திற்கும் சிக்கல் ஏற்படலாம், ஆனால் ஒரு தொழிலாளிக்கு மற்றொரு தொழிலாளியால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகவும் வருந்தத்தக்கது அரசாங்கம் இந்தப் பிரச்னையில் வழ வழா, கொழ கொழா என்று இல்லாமல், திட்டவட்டமான ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் வழக்கு போட்டுள்ள தொழிலாளர்களையும் சேர்த்து உள்ளே அனுப்பப் போகிறீர்களா என்பதை திட்டவட்டமாக அறிவியுங்கள். அசோக் லேலண்டில் 200 பேரை வெளியேற்றியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது)

I want to ensure that they are also தொழிற்சங்கம்தான். அதே போல் தான் சிம்சன் தொழிற்சாலையிலும் செய்து இருக்கிறார்கள். சிம்சன் தொழிற்சாலையில் மட்டும் இப்படி வழக்குப் போட்டவர்களையும் சேர்த்து உள்ளே அழைத்துச் செல்வது என்று சொன்னால், அசோக் லேலண்டில் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களையும் உள்ளே அனுப்ப வேண்டாமா. அப்படிச் செய்யவில்லையென்றால் அவர்களுக்கு நாம் பாதகம் செய்தவர்களாக ஆவோம். அங்கே கொலை நடக்க வில்லை, வன்முறைகள் நடந்து அதன் பேரில் போலீஸ் வழக்கு போட்டிருக்கிறார்கள். வன்முறை நடந்தாலும் சரி, கொலை நடந்தாலும் சரி, அடிதடி-

நடந்தாலும் சரி அவர்கள் மீது பாரபட்சம் இல்லாதவகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வன்முறையில் ஈடுபட்டது திராவிட முன்னேற்றக்கழகத் தொழிலாளியாக இருந்தால் போலீஸ் ஸ்டேஷனில் பிராது கொடுத்தால் கூட நடவடிக்கை எடுப்பது இல்லை. இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதைப் போக்க வேண்டும்.

எந்தக் கட்சியைச் சார்ந்த தொழிலாளிகளாக இருந்தாலும், அவன் வன்முறையில் ஈடுபட்டால், இப்படிப்பட்ட சமூக விரோத செயல்களில் ஈடுபட்டால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளியாக இருந்தாலும் சரி, வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அந்தத் தொழிலாளி மீது இந்த அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை அளித்தால் தான், தொழிலாளர்கள் மத்தியில் ஒரு அமைதியான சூழ்நிலை உருவாவதற்கு, அவனுடைய மனதிலே ஒரு நம்பிக்கை வளர்வதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். நாளை கம்பெனி திறக்கப்பட்டு நாம் உள்ளே சென்றால் யார் யார் தாக்கப் படுவோமோ, எத்தனை சைக்கிள் செயின்கள் வருமோ, ராடுகள், கம்பிகள், தடிகள் வருமோ என்று அச்சப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை நீக்குவதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அரசாங்கம் ஒரு திட்டவட்டமான யூனிபார்ம் பாலிசி எடுக்க வேண்டும். 'போலீஸ் கிரிமினல் என்கொயரி' நடத்தும் தொழிலாளர்களுக்கும், வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் ஏதாவது சாப்பாட்டுச் செலவுக்கு வழிவகை செய்யுங்கள், பரவாயில்லை. ஆனால் ஒரு கம்பெனியில் கிரிமினலி இன்வால்வ்ட் தொழிலாளர்களை வெளியே நிறுத்தி வைத்து விட்டு, மற்றொரு கம்பெனியில் அவர்களை உள்ளே போகச் செய்வது என்றதொரு பாலிசியை வைத்துக்கொள்ளாதீர்கள். எல்லா இடங்களிலும் யூனிபார்ம் பாலிசியாக ஒரு திட்டவட்டமான கொள்கையை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அதன் மூலம் அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சியின் தலைவர்கள் அனைவரும் தொழில் அமைதி காப்பாற்றப்படுவதில் அரசாங்கம் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்கிறது என்கின்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஏனென்றால் அமைந்துள்ள தொழிற் சங்கப் பிரிவுகள் எந்தக் கட்சிச் சார்புடையவைகளாக இருந்தாலும். அவைகள் வன்முறைகளில் இறங்கினாலோ, சட்ட விரோதமாக செயல்பட்டாலோ, அந்தந்தத் தொழிற்சங்கங்களின் மீது அல்லது வன்முறையில் ஈடுபடுகிற அந்தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் மீது அரசாங்கக் காவல்துறையும் பாரபட்சம் இல்லாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது.

சிம்சன் விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால் கொலையுண்ட பிரதாப்சந்திரன் அவர்கள் மீது கூட, அவர்கள் கொலைக்கு ஆளாகிய 5-6 மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட சம்பவங்களிலே காவல் துறையால் கைது செய்யப்பட்டு, அவர் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டதை இந்த மன்றத்திற்கு நினைவு படுத்துவதன் மூலம், அரசாங்கம் தொழிற்சங்க விவகாரத்தில் பாரபட்சமாக இருந்திடவில்லை என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிம்சன் விவகாரம் எப்படி வளர்ந்தது என்பதைப் பற்றி மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஓராண்டுக் காலமாகவே சிம்சன் தொழிற்சாலையில் நிலவி வருகிற அமைதியின்மையைக் குறிப்பிட்டு, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளும், அதிலே ஏற்பட்ட தவறுகளும்தான் இவைகளுக்குக் காரணம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே 'சிம்சன் விவகாரம் எப்படி வளர்ந்தது? காட்டூர் கோபால் அவர்கள் அந்த யூனியன் தலைவராக வந்ததும், அவர் அந்தத் தலைவர் பதவியி

விருந்து இறங்கவேண்டுமென்பதுதான் பெரிய கொள்கையாக வைக்கப்பட்டு, கோரிக்கையாக வைக்கப்பட்டு, அதற்கு எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்துகொண்டன. அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம், ஏதோ தொழிலாளர்களையெல்லாம் காட்டிக் கொடுக்கக் கூடிய ஒப்பந்தம், புதிய அமைப்பு வருமானால், அந்த ஒப்பந்தம் உடனே மாற்றப்படும் என்றெல்லாம் கூறப்பட்டு, ஒரு அறுவர் குழு அமைக்கப்பட்டு, அந்த அறுவர் குழு "எங்களால் இயலாது, ஆகவே, நாங்களும் விடைபெற்றுக் கொள்கிறோம்" என்று அவர்களும் அதைச் செயல்படுத்துவதற்கு இயலாமல் அவர்கள் அனைவரும் ராஜினாமா செய்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். காட்டூர் கோபால் தலைவராக இருந்து, அறுவர் குழுவும் செயல்படுவது என்பது இயலாத காரியம் என்ற கருத்து வெளியிடப்பட்ட காரணத்தினால், காட்டூர் கோபாலை ராஜினாமா செய்யச் சொல்லி, அவர்களும் ராஜினாமா செய்தார். பிறகு நடைபெற்ற தேர்தலில் முன்னேற்றக் கழக சார்புடைய யாரும் போட்டியிட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டதால், இன்றைக்கு இருக்கிற யூனியன் நிர்வாகிகள், தலைவர், உப தலைவர், மற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு அங்கே இரண்டு தொழிலாளர் நண்பர்கள்— ஒரு தொழிற்சங்கத் தலைவர், மற்றொரு தொழிலாளர்—கொலையுண்டது எவ்வளவு பரிதாபத்திற்குரியது என்பதும், அது எவ்வளவு கொடுமையான வன்முறையின்பாற்பட்டது என்பதும் அனைவரும் நன்றாக அறிவார்கள். காட்டூர் கோபால் பதவி விலகிய பிறகு, அறுவர் குழு அமைத்த பிறகு, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, காட்டூர் கோபால் ஒப்பந்தத்தை மாற்றப் போகிறோம் என்று சொன்னார்களே, ஏதாவது நடந்ததா என்றால் அதுவும் இல்லை. அதற்கான முயற்சியும் நடைபெறவில்லை. முதலில் காட்டூர் கோபால் பதவி விலகவேண்டும் என்பதற்காக எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஏதோ அரசுக்குத் தொல்லை கொடுக்கவேண்டும் என்பதற்காக எடுக்க அந்த முயற்சிகளின் விளைவாகத்தான் இவ்வளவு குழப்பங்கள் ஏற்பட்டன என்று நான் குற்றம் சாட்டினால், அதைத் தவறு என்று யாரும் கூற முடியாது. நமது மதிப்பிற்குரிய இந்திய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்





ஆகஸ்டு 17-ம் தேதியன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மிக அழகாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

"In our society whenever any organised group makes a demand, all political parties rush into the arena with their vociferous support. Thus we are being constantly pressurised,"

என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஏதாவது ஒரு சிறிய தகராறு எங்கேயாவது எழுமேயானால், எல்லா அரசியல் கட்சிகளும் அதில் சேர்ந்துகொண்டு அரசாங்கத்தை வற்புறுத்துகின்ற ஒரு நிலைமையை உண்டாக்குகிறார்கள் என்று பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் பெரியவர்கள். அவர்கள் அப்படிக் கூறினால் சகித்துக் கொள்ளக்கூடிய மனப்பான்மையை நாமெல்லாம் பெற்றிருக்கிறோம். ஆனால், நான் அதையே கூறினால் சகித்துக்கொள்ளக் கூடிய மனப்பான்மையை அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இப்பொழுது பெற்றிருக்கவில்லை என்பதுதான் இங்கே உள்ள குறைபாடாகும்.

பம்பாயில் நடைபெற்ற தொழிற் தகராறு பற்றிச் சொல்கிறார்கள். 'பாகிஸ்தானுக்கும் நமக்கும் நடைபெற்ற போராட்டம் நின்று விட்டது என்றாலும், அந்தப் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகளின் பாதிப்புகள் நாட்டில் நிலவிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய தொழில் வளர்ச்சியை முன்னிட்டு இது போன்ற வேலை நிறுத்தங்கள் கூடாது' என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், இந்திய ஜனாதிபதி அவர்களும் கேட்டுக் கொண்டதை தொழிற் சங்கத் தலைவர்கள் ஏற்க மறுத்தார்கள் என்று வருத்தத்தோடு அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சிறிய தகராறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் காட்டூர் கோபால் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவராக இருக்கிறார், அவர் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட,வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அத்தனை பேர்களும் அணி திரண்டு வந்தால்தான் சிம்ஸன் விவகாரம் இந்த அளவிற்கு குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இன்றைக்கு நிர்வாகத்தினர் 23 ஆம் தேதி தொழிற்சாலைகளைத் திறக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய நண்பர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதுதான் வழக்குப் போடுகிறார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது, இதற்கு

முன்பெல்லாம் செய்யப்பட்டதா என்றெல்லாம் கேட்டார்கள். இதற்கு முன்பும் செய்யப்பட்டது. வழக்கு இருதரப்பைச் சார்ந்தவர்கள் மீதும் போடப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், ஹாண்டே அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருது கிறேன். தொடர்ந்து நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக் கிடையே—ஒரு தரப்பில் மட்டுமல்ல. இரு தரப்பிலும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கிடையே திடீரென்று ஒரு நாள் திராவிட முன்னேற்றக் கழகப் பேரவையைச் சார்ந்த தொழி லாளர்கள் 53 அல்லது 59 பேர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளானார்கள். அந்த 53 பேர்களை தாக்கியவர்கள் பிறகு கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவருக்கும் சேர்த்துத்தான் அரசாங்கம் ஒரு நல்ல முடிவுக்கு வந்தபிறகு அனைவரையும் விடுதலை செய்தோம். முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களைத் தாக்கியவர்களை தண்டிக்க வேண்டும் என்று கருதவில்லை. அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு வாபஸ் பெறப் பட்டு, அவர்களை, அரசாங்கம் விடுதலை செய்திருக்கிறது.

ஆகவே, பாரபட்சத்திற்கு இடமே இல்லை. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. யாரும் தவறான முறையில் ஒழுங்கு நடவடிக்கை விசாரணை மூலம் பழி வாங்கப்பட மாட்டார்கள். வேண்டுமென்றே பழி வாங்கப்பட்டால் அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்காது என்ற உறுதியை நான் அளிக் கிறேன். தொடர்ந்து நான்கு, ஐந்து ஆண்டு காலமாக தொழிற் சங்கத்தில் நடைபெற்ற பல்வேறு ஒழுங்கு தவறிய காரியங் களுக்காக நிர்வாகத்தினர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று நாம் வற்புறுத்துவது சரியல்ல. அனைத்துக் கட்சித் தலைவர்களும் அவர்களுக்கு ஆதரவாக இருந்து, அதற்கு அரசாங்கமும் ஆதரவாக இருந்தால், யார் தவறு செய்தாலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கூறினால், பெரிய நிர்வாகத்தை. பெரியத் தொழிற்சாலை நிர்வாகிகள் நடத்திச் செல்ல இயலாது. ஆகவே, ஒழுங்கு நடவடிக்கை தவறாக இருக்குமானால், வேண்டுமென்றே எந்தத் தொழிலாளியும் பழிவாங்கப்படுவாரே யானால், அவரை நிச்சயம் பாதுகாக்கின்ற முழுப்பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஒழுங்கு



நடவடிக்கைக்கு ஆளாகியிருக்கிற தொழிலாள நண்பர்களுக்கு, இப்பொழுது தாற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளிவைக்கப் பட்டிருக்கிறவர்களுக்கு. சஸ்பெண்டு செய்யப்பட்டிருப்பவர் களுக்கு, மறுபடியும் ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடிந்து வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற வரையில், விசாரணை முடியும் வரையில், அவர்களுக்கு 50 சதவிகிதம் ஊதியம் அளிக்கப்படும் என்றும் நிர்வாகத்தினர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இது அந்தக் கம்பெனியைப் பொறுத்த அளவிலே ஸ்டாண்டிங் ஆர்டரில் இல்லை. அவர்கள் ஸ்டாண்டிங் ஆர்டரில் 50 சதவிகிதம் ஊதியம் கொடுக்கவேண்டும் என்றில்லை என்றாலும், ஸ்டாண்டிங் ஆர்டருக்கு மாறுதலாகக் கூட 50 சதவிகிதம் ஊதியம், தீர்வு காணப்படுகிற வரையில் அவர்களுக்குத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களும், மற்றவர்களும் நடக்கப் போகிற ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். என்ன ஆகுமோ, எத்தனை கொலை விழுமோ, என்னென்ன செய்யப்படுமோ என்றெல்லாம் பேசினார்கள். அப்படியெல்லாம் நாம் பேசுவது கூட, அப்படி ஏற்படுவதற்கு நம்மை அறியாமல் ஒரு தவறான தூண்டுதலாக ஆகிவிடக்கூடாது, ஏற்படும் என்று சொல்லவில்லை. அப்படி ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில்தான் சொன்னார்கள். தாலி கட்டுகிற நேரத்தில் விதவையாக ஆகிவிடுவார்களோ என்று சொல்லக்கூடாது. ஆகவே, ஒன்றை அப்படி ஆகிவிடுமோ என்று எதிர்பார்த்து சொல்லக்கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அனுபவத்தில் பார்த்துத்தான் சொல்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எத்தனையோ பேர்கள் கலியாணம் ஆனபிறகு விதவையாகிவிடுகிறார்கள். அதற்காக அந்த அனுபவத்தை வைத்து, மணப்பந்தலில் உட்கார்ந்திருப் பவரைப் பார்த்து விதவையாகிவிடுவாயோ என்று கவலைப்படு கிறோம் என்று சொல்லக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதல் அமைச்சர் அவர்கள், அந்தமாதிரி காரியங்களில் ஈடுபடவேண்டுமென்று நாங்கள் தூண்டிவிடுகிறோம் என்ற கருத்துப்பட சொல்கிறார்கள். நாங்கள்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 19

கூறுவதெல்லாம் அம்மாதிரி நடக்கக் கூடாது, அரசாங்கம் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் சொல்கிறோம். எங்கள் எண்ணத்தை சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் காந்தியடிகளின் வழி செல்பவர்கள் ; அகிம்சையில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் காந்தி வழி செல்பவர்கள். இந்திரா காந்தி வழி செல்பவர்கள். இரண்டையும் நான் ஒத்துக்கொள்கிறேன். இரண்டும் காந்திய வழி தான். இல்லை என்று மறுக்கவில்லை. உள்ளூர அந்த எண்ணத்தோடு சொன்னார்கள் என்று குறிப்பிடவில்லை. ஏற்படுமோ என்று சந்தேகப்படுவது போல சொன்னால், தொழிலாளர்கள் மத்தியில் கிளர்ச்சி ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடுமோ என்ற அச்சத்தோடு தான் சொல்கிறேன். அம்மையார் அவர்களோ, டாக்டர் ஹாண்டே அவர்களோ, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களோ, திரு. பொன்னப்ப நாடார் அவர்களோ அப்படிப் பட்ட சம்பவங்கள் நடக்கவேண்டும் என்று நிச்சயம் விரும்ப மட்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு அருமையான யோசனையைச் சொன்னார்கள். அனைத்துக் கட்சியினரும் கூடிப் பேசலாம் என்று சொன்னார்கள். 23-ஆம் தேதியன்று தொழிற்சாலை திறக்கப்படுகிறது. அனைத்துக் கட்சியினரும் கூடிப் பேசுவதற்கு அவர்களெல்லாம் சம்மதிப்பார்களேயானால் நிச்சயம் நான் அப்படிக் கூடிப் பேசுவதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒழுங்கு முறைகளைக் காப்பாற்றுவதற்கு தொழிலாளர்கள் நிச்சயம் ஒத்துழைப்புத் தரவேண்டும். அதற்கு நாம் அனைவரும் அந்த நிர்வாகத்தினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். தொழிலாளர்கள் பழி வாங்கப்படாத நிலைமையில் ஒழுங்கும், கட்டுப்பாடும், கண்ணியமும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இருந்தால்தான் உண்மையில் தொழில் அமைதி கட்டிக் காக்கப்படும் என்று எடுத்துக் கூறி, அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த விவாதம் இந்த முறையிலே ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உதவும்



1972 ஆகஸ்ட் 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்ற நம்பிக்கையோடு, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றி மேலும் பேச வேண்டிய அவசியமில்லை என்று தலைவர் அவர்களுக்கு எடுத்துக்கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்கள் கூறியது போல், இந்த விவாதம் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும், தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்கும், இதை வெற்றிகரமாக முடிப்பதற்கும் உதவும் என்ற வகையில் இதை மேலும் அனுமதிக்க தேவையில்லை என்று கூறி, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### 3. அறிவிப்புகள்

#### (அ) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் நலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (மதுரை யுனிவர்ஸிடி செனெட்) கீழ்க்கண்ட நால்வரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன :

1. திரு. கா. காளிமுத்து
2. திரு. பொ. பத்மநாபன்
3. திரு. மு. சுருளிவேல்
4. திரு. கே. கந்தசாமி

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது நான்கு என்பதால், நால்வரும் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

### 4. அறிக்கைகள் அளித்தல்

#### (அ) தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவை முன் அளிக்கிறேன்.

**(ஆ) தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு, விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவை முன் அளிக்கிறேன்.

**(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

THIRU P. SEENIVASAN: Sir, I rise to present the **Fourth** Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

**(ஈ) பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே. பொதுக் கணக்காய்வுக் குழுவின் புதுப் பணிகள் குறித்த குழுவின் அறிக்கையை நான் பேரவை முன் சமர்ப்பிக்கிறேன்.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஆ) தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.



### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(ஆ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72) (கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 as amended by the Joint Select Committee * be taken into consideration."

Sir, the Joint Select Committee held 15 sittings in the various district headquarters of the State and has presented its report to the House. After considering the evidence recorded and the various written representations submitted by the parties, the Joint Select Committee held discussions and decided to re-draft the Bill in accordance with the consensus generally arrived at by the Committee. The salient features and the important changes made in the Bill by the Joint Select Committee are explained below :

Originally, new section 2 to the 'principal Act proposed in sub-clause (1) of Clause 3 of the Bill sought to exempt "lands held as full owner by any religious institutions". This exemption given to religious institutions is now extended also to religious trusts of a public nature. The exemption is to apply only to the religious institutions and trusts which were in existence on the date of the commencement of the proposed amendment Act. Future acquisition of any land, by such religious institutions and trusts by any means, whatsoever, after the commencement of the proposed amendment Act is prohibited. If a public trust has been created for a public purpose of a religious nature and for any other public purpose or where the income from a public trust is appropriated both for a public purpose of a religious nature and for any other public purpose, such trust is deemed to be a religious trust of a public nature.

The Bill also defines by way of clarification 'public trust' as 'a trust for a public purpose of a religious, charitable or of an educational nature'.

---

* Published in the *Tamil Nadu Government Gazette* Eetraordinary, dated 17th August 1972



'Private trust' is defined as 'including a trust under which the benficiaries are persons, who are ascertained or capable of being ascertained.'

The Bill provides for a separate ceiling for the following categories of institutions, namely :

Any college affiliated to or recognised by any University under any law or rule relating to education—40 (forty) standard acres.

Any High School or equivalent school recognised by the Government or University under any law or rule relating to education—20 (twenty) standard acres.

Any Elementary School or Higher Elementary school or other equivalent institution recognised by the Government under any law or rule relating to education—10 (ten) standard acres.

Any Students' Hostel—25 (twenty five) standard acres.

Any Polytechnic Institution—25 (twenty five) standard acres.

Any Agricultural School—25 (twenty five) standard acres.

Any Orphanage—25 (twenty five) standard acres.

If any institution mentioned above held lands on the date of the commencement of the proposed amendment Act less than the extent allowed, it should not acquire in future any land in excess of the extent so held.

If any institution did not hold any land on the date of the commencement of the proposed amendment Act, it cannot acquire any land after that date.

Other public trusts of a charitable nature in existence on the date of the commencement of the proposed amendment Act, shall not hold more than five standard acres, provided such extent is held by such trust on the said date. These trusts if they were holding land less than five standard acres on the date of the commencement of the proposed amendment Act they cannot acquire any land in excess of the land so held. Any such trust holding no land on the date of commencement of the proposed amendment Act cannot acquire any land in future.

If more than one institution mentioned above are maintained by any public trust, the maximum area, allowed to that trust shall be equal to the total extent of the land allowed under this Bill for each of such institutions maintained by the trust, provided the trust held the said extent of the date of the commencement of the proposed amendment Act.

A new sub-section (3-A) has been inserted in section 5 of the principal Act to the effect that the land owned by a private trust shall be deemed to be land owned by the beneficiary shall be deemed to be the owner of the land to the extent of the share of his beneficial interest in the said trust.

Since future acquisition of land by trusts has been prohibited, penalty for such future acquisitions has been provided. It has also been provided that no land shall be held by any public trust created after the 1st March 1972.

Sir, I commend the motion for the acceptance of the House.

தலைவரவர்களே, ஒரு சிறு தவறு, அச்சுப் பிழையால் ஏற்பட்டிருக்கிற சிறு தவறு என்று நான் கருதுகிறேன். ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியின்போது தவறு இல்லை. அச்சுப் பிழை சட்ட மன்றத்திற்கு வரும்போது ஏற்பட்டிருக்கிறது.

In sub-clause (1) of Clause 3, after sub-items (i) and (ii), the sentence 'which is in existence on the date of the commencement of this Act' should be common to both the sub-items. This is only a mistake in print.

**திரு. என். கே. பழனிசாமி:** சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பிரேரேபித்து பேசக் கூடிய காலத்தில் 1956 ஆம் வருஷத்திற்குப் பின்னால் ஏற்பட்ட டிரஸ்டுகளைப் பூராவும் சர்க்கார் இந்த மசோதாவிற்குள்ளாகக் கொண்டு வருவதாகச் சொல்லப் பட்டது. அதை விவாதமாக்கிப் பதில் சொல்லக் கூடிய முறையில் தொழில் அமைச்சரவர்கள் பதில் சொல்லக் கூடிய காலத்தில் பூரா



டிரஸ்டுகளையும் எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போய் அது வெளி வந்ததற்கு அப்புறம் அதன் நோக்கமே அடியோடு மாற்றப் பட்டிருக்கிறது. முன்பு கோயில்களுக்கும், மடங்களுக்கும் சேர்ந்த பட்டா நிலங்களை மட்டும் எடுத்துக் கொள்வதாக இருந்தது. இன்று கட்டளை பூமிகளுக்கும் சேர்த்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே ஏற்கெனவே முன்பு இந்த உச்சவரம்புச் சட்டம் ஏற்பட்டு சர்க்காருடைய திருத்தம் இந்த சட்டத்திற்கான நோடிஃபிகேஷன் டேட் என்று சொல்லி சட்டம் பாஸாகி ஜனாதிபதி கையெழுத்து போட்டு இப்படி இவ்வளவு நாட்களுக்குப் பிறகுதான் சட்டம் அமுலாகிறது. இப்படிச் சட்டம் அமலாவதற்குள்ளாகவே வலிவலம் தேசிகர், தியாகராஜ முதலியார் போன்று இன்னும் இப்படிப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைக் கட்டளைகள் என்ற பெயரால், பள்ளிக்கூடம் என்ற பெயரால் எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி எழுதித் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி ஒரு மோசடிக்கு இந்த மசோதாவானது ஓட்டிப் போகிறது.

அது மட்டுமல்ல. நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னே ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். மாயூரத்திலே இருக்கிற தேசிகர் வீட்டில் ஒரு கிருஷ்ணன் படம் இருந்தது. அதற்கு ஆயிரக்கணக்கான நிலத்தை எழுதி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எழுதி வைப்பதினால் என்ன பார்ப்பன் என்று தெரியவில்லை. அந்த வகையிலே பார்க்கும்போது இந்த மசோதா தவறான காரியங் களுக்கு எல்லாம் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய வகையில் வந்திருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்கோ அல்லது விவசாயி களுக்கோ எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அவர்கள் கணக்குப் பிரகாரம் இப்படி விதிவிலக்குக் கொடுக்கப்பட்டால், 2,500 ஏக்கர் நிலம்தான் கிடைக்கும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

[திரு. என். கே. பழனிசாமி] [1972 ஆகஸ்ட் 19

முன்பெல்லாம் இந்த மடங்களுக்கு தர்ம காரியங்களுக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை எழுதி வைத்தார்கள். திருவாடுதுறை மடத்தை எடுத்துக் கொண்டால் வெகு தூரத்தில் இருந்து வரக்கூடிய பிரயாணிகளின் களைப்பை நீக்குவதற்காக, தாகத்தைப் போக்குவதற்காக நீர் மோர் வழங்கப்படுவதற்கு என்றே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அப்படி கொடுக்கப்படுவதில்லை. பிரயாணிகளும் நடந்து வருவதில்லை. பஸ்களிலே வந்து விடுகிறார்கள். 75,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் நிகர வருமானம் வருகிறது.

இதைப் போன்று இன்னும் திருப்பனந்தாள் மடம், குன்றக்குடி மடம், நாங்குனேரி மடம், இன்னும் பல மடங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட மடங்களுக்கு எல்லாம் அந்தக் காலத்தில் இந்து சமயத்தின் நெறிமுறைகளைக் காக்க, தர்ம காரியங்களுக்கு என்று ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தர்ம சிந்தையுள்ளவர்கள் எழுதி வைத்தார்கள். இப்பொழுது அந்த தர்ம காரியங்கள் நடைபெறவில்லை. அதனால் அந்தச் சொத்துக்களை எல்லாம் அரசாங்கமே ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

இப்பொழுது 'லாண்ட் ரிஃபார்ம்ஸ் கமிட்டி' என்று ஒன்றை அமைத்திருக்கிறார்கள். ரிலிஜியஸ் பர்ப்பஸுக்காக என்று கோவில் மடங்களுக்கு இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் விட்டு வைக்க வேண்டுமா என்பதைச் சர்க்கார் யோசனை செய்து அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே அந்தக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆதரவு இல்லை என்று மாநாட்டில் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் அந்த நிலத்தில் உழுது பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு எப்படி நிலம் கிடைக்கும்?

நமது மாநிலத்தில்தான் எல்லா கோவில் மடங்களுக்கும் இவ்வளவு அதிகமான பூமி இருக்கிறது. ஆகவே, அந்த நிலங்களை ரிலிஜியஸ் பர்ப்பஸுக்கு என்று சொல்லித் தவறாகப் பயன்படுத்த விட்டுவைப்பது சரியல்ல. இன்றைய தினம் ஒரிசா அரசாங்கத்தில்



1972 ஆகஸ்ட் 19] [திரு. என். கே பழனிசாமி]

கூட 'பூரி ஜெகனாத்' கோவிலைச் சேர்ந்த பூமியை எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. அது இப்போது பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, இங்கேயும் அந்த மாதிரியான நடவடிக்கை எடுக்காமல் விட்டுவைப்பது சரியாகாது.

இன்றைய தினம் கோவில் நிலங்களிலிருந்து ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய்தான் வருமானம் வருகிறது என்று பொறுக்குக் கமிட்டியில் ஒரு 'விட்னஸ்' சொன்னதாகச் சொல்லப்பட்டது. அப்படி வைத்துக்கொண்டாலும், மொத்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானமும் அந்தக் கோவிலுக்குத் தேவைதானா என்பதை சர்க்கார் யோசிக்க வேண்டும். வரக்கூடிய வருமானம் முழுவதும் கோவில் மடத்திற்குப் போய்ச் சேருகிறதா என்றால் அதுவும் இல்லை. விவசாயிகளுக்கும் அதனால் பிரயோஜனம் இல்லை. அப்படியானால் அந்தப் பணம் எங்கே போகிறது? இடையிலே இருக்கின்ற இடைத் தரகர்களுக்குத்தான் போகிறது. அதைத் தடுக்க வேண்டும். அதற்கு சர்க்காரே அந்த நிலங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, கோவில் செலவுகளுக்காக இப்போது கொடுக்கப்படுகின்ற 'தஸ்திக் அமவுண்ட்'. 'மோகினி' தொகை போன்று ஒரு குறிப்பிட்டத் தொகையைக் கொடுத்து விடலாம். அப்படிக் கொடுப்பதினால் சர்க்காருக்கும் நஷ்டம் வராது.

அடுத்து, இந்த மசோதாவில் கலாசாலைக்கு இவ்வளவு நிலம். பள்ளிகூடத்திற்கு இவ்வளவு நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கடுத்து மெடிகல் காலேஜ் வைத்து நடத்துவதற்கு இவ்வளவு நிலம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். தனியாக மெடிக்கல் காலேஜ் வைத்து நடத்துவதால் அங்கே என்ன 'அட்வான்ஸ் மெத்தேடு' இருக்க முடியும்? இப்போது பள்ளிக்கூடங்களுக்கு 80 சதமானம் செலவைச் சர்க்காரே கொடுக்கிறது. மேலும் கொஞ்ச தொகைதானே கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் பூமிகளை எல்லாம் சர்க்காரே எடுத்துக்கொண்டு, முழுச் செலவையும் சர்க்காரே ஏற்றுக் கொள்ளலாமே. அதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது. சர்க்கார் இவ்வளவு பணம் கொடுத்தும், பள்ளிக்கூடங்களையும்

காலேஜுகளையும் நடத்துகிறவர்கள் இப்போது அதை ஒரு வியாபாரமாகவே நடத்தி வருகிறார்கள். ஆகவே, இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா சரியல்ல. அதனால் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I am very happy that the ruling party has accepted majority of the recommendations or almost all the recommendations that have been made by the Joint Select Committee after a through enquiry of the matter from the peopple who have been affected by such legislation.

Of course, the hon. Member, Thiru Palaniswamy, has referred to exemptions given to temples and other religious institutions. Sir, I may remind the hon. Member that 90 per cent of the temples in India are in Tamil Nadu. Secondly, unlike other religious institutions which get money from foreign countries, Hindu religious institutions do not get any money from the foreign countries for the good work that they do. Of course I admit that many of them are not doing good work and that is a different matter. I think the Government have done well in incorporating these exemptions in this Bill.

Of course, during the process of discussion, it has come to light that various trusts are abusing their privileges but such trusts are only private trusts. Private trusts are treated like individuals and they can hold only 15 acres.

Sir, having given this compliment to the Government, I want to go deeper into the matter. I have given notice of certain amendments to the Bill. Sir, we have given exemptions to certain colleges, schools, orphanages, etc., but the Government or the University demand cash security or endowment for running them. Many educational institutions are not able to give cash security and they can give only lands as endowment. For example, for the starting of a high school, a sum of Rs. 30,000 has to be deposited as security and the person who wants to start it may not have cash and he may have only lands and he should be



enabled to give those lands as security in lieu of cash security. What would happen to the school which has got such lands which exceeds 20 acres?

Also, certain institutions may have uncultivable lands adjacent to the campus. If they want to extend the campus, they have to take those lands also. What will happen to those lands? For instance if they may required 5 acres for building a hostel, under this Bill, they are not allowed to extend their activities. I think the Government will have to seriously consider this aspect of the matter.

Then I come to another point. Also, under this Bill no educational institution could acquire any land after the commencement of this Act. Supposing a high school may be having only 10 acres now and tommorrow a charitable institution may endow 5 acres to that high school. But under this Bill, that school cannot get those five acres. Why should the Government stand in the way of that school getting those five acres? If he has money he can give it. When he has no money, and, when he feels that he should do something for education, why should Government stand in the way of his gifting that land to educational institution? Under the Act it is clearly said "provided that land is held by such institution". Any college can hold to the extent of 40 acres, any high school 20 acres, and any elementary school 10 acres. Why should Government come forward and say that at any time only upto that ceiling extent only, the educational institution can hold land. These are the things I want to express.

I have been a member of the Select Committee. I know that Government had been very fair in accepting many of the suggestions made by various witnesses and I am very happy about it. But only for two important points I have given notice of amendments. I think they are reasonable. I hope this Government will accept the reasonableness of my amendments and accept the same. It will be useful for the future.

[1972 ஆகஸ்ட் 19

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, அறக்கட்டளைக்கு எழுதி வைத்திருக்கிற நிலங்களை அரசு மேற்கொள்வதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதாவில் நிறையக் குறைபாடுகள் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் கொண்டுவருவதற்குக் காரணம் தமிழ் நாடு அரசு நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்த காலத்தில் 1959 ஆம் வருஷமே நிலப்பிரபுக்கள் நிலத்தை மோசடி செய்வதற்காக பல்வேறு அறக்கட்டளைகளுக்கு எழுதி வைத்து மோசடி செய்து விட்டார்கள் என்பதை அரசு கணக்கில் எடுத்துக்கொண்டுதான், இந்த அறக்கட்டளைகளுக்காக எழுதி வைக்கப்பட்ட நிலங்களை எல்லாம் எடுத்து விடவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. முதலில் எந்தவிதமான மசோதா கொண்டு வந்தார்களோ அப்படியே இன்று இல்லை. இதில் பலவிதமான திருத்தங்களைச் செய்து விட்டார்கள். மோசடி செய்திருப்பவர்களுக்கு விரோதமாக மசோதா வருவதற்குப் பதிலாக அவற்றை எல்லாம் நியாயமாக்குவதுபோல மசோதா வந்திருப்பது மிகமிக வருந்தத்தக்கது. உதாரணமாக நாகப்பட்டினம் தாலுக்காவில் வலிவலம் கிராமத்தில் 292 ஏக்கரா நிலத்தை டிரஸ்டாக பலவற்றுக்கு எழுதி வைத்து, ஒருவரே அதன் லாபங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டு வந்தார். சென்ற வருஷம் சர்வோதய சங்கத்தினர்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் கிளர்ச்சி செய்து, அந்த மோசடியை அம்பலப் படுத்தி அந்த நிலத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதுபோலப் பல்வேறு உதாரணங்களைச் சொல்லலாம் எப்படி எப்படி மோசடி செய்திருக்கிறார்கள் என்பதற்கு. அறக்கட்டளைகளுக்காக விடப்பட்டிருக்கிற நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்வதுதான் நியாயமாக இருக்கும்.

அதேபோல கோயில்கள், மடங்களுக்கு லட்சக்கணக்கான நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதற்காக நிலம்? அன்றையதினம் நிலப்பிரபுக்கள் இருந்தார்கள். இன்றைய தினம் கோயில் நிர்வாகத்தினர்கள், மடாதிபதிகள் நிலப் பிரபுக்களாகத்தான் மாற்றப்பட்டிருக்கிறார்கள். கோயில்



1972 ஆகஸ்ட் 19] [திரு. ஆ. கு. சுப்பையா]

மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை விவசாயிகளிடம் கொடுத்து அவர்களிடம் இருந்து வாரங்களைப் பெறுவதும் முறையாக நடைபெறவில்லை. இவர்களுடைய தர்பார்கள் நடக்கத்தான் இவற்றுக்கு நிலங்கள் இருக்க அனுமதிப்பது உதவியாக இருக்கும். நிலப்பிரபுக்களிடம் இருக்கும் நிலத்தை 15 ஏக்கராவுக்கு மேல் இருந்தால் எடுத்துவிட வேண்டும் என்பது போலவேதான் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலங்களையும் அரசு எடுத்துவிட வேண்டும்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

உதாரணமாக, கேரள அரசாங்கம் அறக்கட்டளைகள், கோயில்கள், மடங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் எடுத்திருக்கிறார்கள். அங்கே நல்ல முறையில்தான் பூசைகள் முதலிய காரியங்கள் நடைபெறுகின்றன. அங்கே எந்தவிதமான எதிர்ப்பும் கிடையாது. ஆகவே, அதுபோல இங்கும் எடுத்துவிட்டு அரசாங்கமே அவற்றுக்குப் பணமாக உதவி செய்யலாம். இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள் அவசியம் இல்லை என்று வலியுறுத்திக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. எம். இராஜா:** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இப்படி முக்கியமான மசோதா விவாதத்தில் இருக்கிற நேரத்தில் எதிர் வரிசையில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரும் பேரவையில் இல்லாமல் இருக்கிறார்களே (திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சி. மணலி கந்தசாமி : நாங்கள் இருக்கிறோம். நாங்கள் தலைவர்கள் இல்லையா ?) இது முறைதானா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. எதிர்க்கட்சி முன்வரிசையில் யாராவது இருப்பதுதான் முறை. மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருப்பதன் காரணமாக அவர்களே இனி உணர்ந்து நடந்து கொள்வார்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பிக்கும்போது—ரெவின்யூ அமைச்சர் சிரிக்கிறார். இந்த மசோதா மார்ச் 1ஆம் தேதி நிதிநிலை

அறிக்கையின்போது முதல் அமைச்சர் கொடுத்த அறிவிப்பின் மீது எழக்கூடிய மசோதா. நில உச்சவரம்புச் சட்டம் 1959 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல அறக்கட்டளைகள் என்ற பெயரால் எழுதி வைத்து விட்டார்கள். அவற்றை எல்லாம் ரத்து செய்யப் போகிறேன் என்று அவர் குறிப்பிட்டபோது நாங்கள் எல்லாம் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றோம். அந்த அடிப்படையில் மசோதா வந்தது. பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. 15 தடவைகள் கூட பொறுக்குக் கமிட்டியும் தடபுடலாகத்தான் இதுபற்றி சாட்சிகளை எல்லாம் விசாரித்தது. முடிவில் பொறுக்குக் கமிட்டியால் திருத்தங்கள் செய்யப்பட்டு இங்கே வந்திருக்கிற மசோதாவைப் பார்க்கிறபோது இது முன்பு கொண்டு வரப்பட்ட மசோதாவைத் திருத்தம் செய்ததுபோல இல்லை. புதியதாகவே ஒரு மசோதா கொண்டுவந்திருப்பது போலத்தான் தோன்றுகிறது. முன்பு கொண்டுவந்த மசோதாவில் ஒன்றும் மிச்சம் இல்லை. பூராவாகத் திருத்தப்பட்டுவிட்டது. இன்றையதினம் மாம்பலம் உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் மனதார இந்த அரசைப் பாராட்டினார்கள் என்றால் இது எங்கே போய் முடியுமோ எனக்குத் தெரியாது. பாராட்டினார் கடைசியிலே. அந்த அளவுக்கு இன்றையதினம் ஒரு திசையிலே ஒத்துப்போகக் கூடிய விதத்தில் ஆளும் கட்சியும் அதை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிற ஸ்தாபனக் கட்சியும் ஒத்துப்போவதைப் பார்க்கும்போது எனக்கு வியப்பாகவும் இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது. ஆனால், அவர்களுடைய தலைவர் அவர்களோ, அம்பாசமுத்திரத்திலே என்ன பேசுகிறார்? கோயில்களிலே மடாதிபதிகளுக்கு அபிஷேகமா ஒன்றும் கிடையாது. எல்லாம் மந்திரிகளுக்கு நடக்கிறது என்று அவருடைய தலைவர் பேசுகிறார். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் செய்ததை எல்லாம் பாராட்டுகிறார்.

இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தை ஒவ்வொரு மட்டத்திலும் சீர் குலைப்பது, எப்படியாவது சீர் குலைப்பது என்ற போக்கு ஆபத்தானது. அந்த லட்சியம் நல்லதல்ல என்று உள்ளபடியே தெரிவித்துக் கொள்கிறேன். அதை வேடிக்கையோடு சொல்லவில்லை, விளையாட்டாகச் சொல்லவில்லை. ஒன்று முடிந்தால்



செய்யுங்கள், இல்லாவிட்டால் இவ்வளவுதான் முடியும் என்று சொல்லுங்கள். இன்றைக்கு 2 பைசாக்களுக்காகப் போராடுகிற விவசாயி நிச்சயம் வாழ்நாளுக்காகப் போராடமாட்டானா?

1950-க்குப் பிறகு இருக்கிற அறக்கட்டளைகளுக்குக் கோயில்களுக்குச் சொந்தமான நிலம் 4 லட்சம் ஏக்கர் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதை நம்பிக்கொண்டுதான் மதம் நிற்கின்றது. அவைதான் மதத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதை நான் நம்பத் தயாராயில்லை. அதை விவசாயிகளுக்குக் கொடுத்து ஒரு ஏக்கருக்கு ரூ. 50 என்று வசூல் செய்தால் கூட ரூ. 1½ கோடி வசூல் செய்ய முடியும்.

பட்டா நிலங்கள் என்று கூறுகிறார்கள். அவையெல்லாம் காலப் போக்கில் வந்திருக்கிறதே தவிர, ஒரு காலத்திலே சோழ மகாராஜா கொடுத்தது, நவாப் கொடுத்தது, இப்படி ஒட்டுமொத்தமாக கொடுக்கப்பட்டவையே தவிர, பட்டா நிலங்கள் என்று வியாக்கியானம் செய்வது சரியல்ல. 4 லட்சம் ஏக்கர் நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதன் மூலம் 10 லட்சம் ஜனங்கள் தாங்களே படித்துக் கொள்வதற்கும் தாங்களே வைத்தியம் செய்து கொள்வதற்கும் நாம் உதவ முடியும். அதை விட்டுவிட்டு, தர்மம் செய்வதும், தர்மத்தினாலே மக்கள் வாழ வேண்டுமென்று சொல்வதும் சோசலிசத்தைப் பரிகாசம் செய்து கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருளாகும். தர்மத்தை எதிர்பார்ப்பவன் இருக்கக் கூடாது—சோசலிச நாட்டில். சோசலிச நாட்டில் பிச்சை எடுப்பவன் இருக்கக் கூடாது. யாரையாவது கெஞ்சி, கூத்தாடி, அவனுடைய தர்மத்திலே பிழைக்கிற நிலைமை இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் சோசலிசம் உண்மையானதாக இருக்கும். இந்த நாட்டில் தர்மம் இருக்கிற வரையிலே இது மானங்கெட்ட நாடு என்று வெளிப்படையாகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். தர்மம் செய்பவன் இருக்க வேண்டும், அவனிடம் பல்லை இளித்துப் பிழைப்பவன் இருக்க வேண்டுமென்று கூறுவது நாட்டிற்குத்தான் மானம் இல்லை என்று பொருளாகும். சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும் ஒருவிதத்தில் அடிமை நாடாக இருக்கிறது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

மடாதிபதிகள் தர்ம ஸ்தாபனங்களுக்கு என்று எழுதி இருக்கிறார்கள். கோபாலன் ஐயர் அவர்கள், திருப்பனந்தாள் காசிவாசி மடாதிபதிக்கும் மற்றொருவருக்கும் வக்காலத்து வாங்கிப் பேசினார். அவர் பேசியதை அப்படியே செய்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தர்ம ஸ்தாபனம் என்று இருந்தால் அவர்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன. அவர்கள் மதத்தோடு நின்றால் பரவாயில்லை. கட்டளை போடல், பள்ளிக்கூடம் நடத்துதல், வைத்தியசாலை நடத்துதல் என்று எல்லாம் செய்கிறார்கள். ஆகவே. தர்ம ஸ்தாபனத்திற்கு விதிவிலக்கு என்று ஒத்துக்கொண்டால், அறக்கட்டளை தானே என்று ஒத்துக்கொண்டால், அவர்கள் கோரியது அப்படியே ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். இந்த இரண்டு சாமியார்கள், இரண்டு மடாதிபதிகள், இவர்களுக்கு ஆதரவாக, எந்த அளவுக்குச் சமுதாயத்தைப் புரட்டிவிடப் போகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அதன் காரணமாக விவசாயிகளை ஏன் இப்படி ஆக்குகிறார்கள் என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் மடத்தோடு இருந்தால் தேவலை. அவர்கள் பள்ளிக்கூடங்கள் கட்டுகிறார்கள், ஆஸ்பத்திரிகள் வைக்கிறார்கள். அவர்களுக்கு நிலங்களை எழுதி இருப்பதை நாம் ஒத்துக்கொள்வது என்பது நீதிக்குப் பொருந்துவதல்ல, அது சரியும் அல்ல.

இந்த மடாதிபதிகளைப் பாதுகாக்கக் கூடிய விதத்திலே ஒரு போக்கு உங்களுடைய ஆட்சியிலே தலை தூக்குகிறது என்று சொல்ல விரும்புகிறேன். மதம், மதம் என்று பயமுறுத்துகிறார்கள். செலக்ட் கமிட்டியிலே சில பேர் பேசினார்கள். உலகமே கவிழ்ந்து போய்விடும் என்று சொன்னார்கள். இந்த 1972-லே எவ்வளவோ பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிற நாம், தமிழில் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறோம். எந்த ஜாதியாக இருந்தாலும் அர்ச்சனை செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட்டிலே வாதாடுகிற நேரத்திலே மதத்தைப்பற்றிச் சொல்வது எனக்குப் புரியவில்லை. நான் முஸ்லீம் நண்பர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். உங்களுடைய மசூதிகள் இருக்கிற வரையிலே, உங்களுடைய திருக்குரான் இருக்கிற வரையிலே, உங்களுக்கு



அதன் மீது நம்பிக்கை இருக்கிற வரையிலே உங்கள் மதத்தை யாராவது ஒழிக்க முடியுமா? பள்ளி வாசலை நிலமா காக்கும்? சமுதாய முன்னேற்றத்திற்கு, முற்போக்கு நோக்கத்திற்கு ஒவ்வாத இந்த பழைய குருட்டுத் தன்மையை மக்கள் மத்தியிலே வைத்துக் கொண்டிருப்பது சரியாகுமா? வழிபாட்டு உரிமையில் தலையிட வேண்டாம். அதில் தலையிடுவது தவறு. செக்குலர் ஸ்டேட் என்று சொல்வது. அதற்காக மதத்தை இப்படிக் காட்டுவது தவறு. அதற்குச் சொத்து இருக்கிறது, சுதந்திரம் இருக்கிறது அவை சமுதாயத்திற்குத் தடையாக இருக்கிறது என்று சொன்னால், இந்த அளவிற்காவது தலையிடுவதற்கு சர்க்காருக்கு உரிமை இல்லையா?

இன்றைக்கு 4 இலட்சம் ஜனங்கள் தாங்களாகவே தங்களுக்குக் கல்வி வசதியை ஏற்படுத்திக் கொள்வது பெரிய சீர்திருத்தமில்லையா? தண்ணீர் பந்தலுக்கு என்று நிலம் ஒதுக்கியிருக்கிறார்கள். தண்ணீர் பந்தலுக்கு என்று இந்தக் காலத்தில் யாராவது சொன்னால் நம்புவார்களா? அவனவன் சோடா வாங்கி குடித்து விட்டுப் போகிறான். இந்த தண்ணீர் பந்தலுக்கு 5 ஏக்கர் என்று சொன்னால் வேடிக்கையாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே எங்கு பார்த்தாலும் புரொடெக்டட் வாட்டர்சப்ளை இருக்கிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் குடிப்பதற்கு வேண்டிய வசதி இருக்கிறது. இந்த நிலைமையிலே நான் தண்ணீர்ப் பந்தலைப் பார்த்து பல வருஷங்கள் ஆயிற்று. இந்த அடிப்படையில் இந்தச் சட்டம் சரியான சட்டமே இல்லை. இந்தச் சட்டம் ஏற்கனவே உள்ள சட்டத்தை மோசமாக்கக்கூடிய விதத்தில் திருத்தப்பட்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. இந்தச் சட்டத்தை இப்பொழுது சபையின் அனுமதியோடு வாபஸ் பெற்று மீண்டும் நல்லமுறையிலே மாற்றம் செய்து கொண்டுவருவதற்கு அமைச்சரவர்கள் இசைந்தாரானால் அது பெரிய சேவை செய்ததாகும்.

ரெவினியூ அமைச்சருடைய நடவடிக்கைகள் முன்னேற்றக் கழக அரசை வலுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளாகவும் இருக்கலாம். பலவீனப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளாகவும் இருக்கலாம் என்று சூசகமாகச் சொல்லியிருந்தேன். உணவு விஷயத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுடைய வாழ்க்கையின் வளர்ச்சி

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 19

தான் நாட்டின் வளர்ச்சி. அவர்களுடைய மந்திரியிலே ஜனநாயகம் துலங்குவதுதான் உண்மையான ஜனநாயகம் துலங்குவதாக அர்த்தம். ரெவின்யூ அமைச்சர் பதவி மிகப் பொறுப்புள்ள பதவி. அவருடைய கடமை மிகக் கேந்திரமான கடமை. எந்த நந்தி குறுக்கே இருக்கிறது, அது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அந்த நந்திதான் முற்போக்குக் கொள்கைகளை முடமாக்குகிறது என்று நினைக்கிறேன். காலப்போக்கில் அந்த நந்தி தெளிவாய்த் தெரியும்.

மதம் மதம் என்ற கூச்சலுக்குச் செவி சாய்க்காதீர்கள். உண்மையாகக் கும்பிடக் கூடியவர்கள் யாரையும் அவமதிக்கிற நோக்கம் இல்லை. அவர்களை நிந்திக்க நான் தயாராக இல்லை. பல பெரியவர்கள் போராடி இருக்கிற இந்த மதத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. மதத்தைப்பற்றி அடிக்கடி பேசுகின்ற அம்மையார் அவர்கள் இங்கே இல்லை. 'மதமான பேய் என்னைப் பிடிக்காதிருக்க வேண்டும்' என்று இராமலிங்க அடிகள் பாடியிருக்கிறார். கந்த கோட்டத்தில முருகன் முன் நின்று அவர் அவ்வாறு பாடியிருக்கிறார். (குறுக்கீடு) அது வேறு மதமா? 'அறிவான தெய்வம்' என்று தாயுமானவர் பாடியிருக்கிறார். சர்க்கரைப் பொங்கலைப் பொங்கி வைத்து—சிறு பிள்ளைகள் விடுகட்டி வாழ்கிற மாதிரி—கோயில்களிலே இப்படி ஒரு போக்கை இன்னும் அனுமதிப்பது நாட்டுக்கே பெருத்த அவமானம். பிற்போக்கு மாற்றங்களைச் செய்கிறீர்கள். மடாதிபதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிற மாற்றங்களைச் செய்யாதீர்கள். விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முன்னேற்றங்களை, மாற்றங்களைச் செய்யுங்கள்.

திரு. பழனிவேல் அவர்களும், ஜனார்த்தனம் எம்.எல்.சி. அவர்களும் ரொம்பத் தெளிவாக, ஒழித்துக்கட்டிவிடவேண்டுமென்று பேசினார்கள். அவையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் காதிலே விழாது. கோபாலன் அவர்கள் சொன்னதையும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதையும் காதில் வாங்கிக் கொண்டு, தங்களுடைய கட்சிக்காரர்கள் சொன்னதையே ஆட்சேபித்ததற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 19] [திரு. மணலி சி. கந்தசாமி]

பள்ளிகூடத்திற்கு 60 ஏக்கர் என்று இருந்ததை 40 ஏக்கராக மாற்றியிருக்கிறார்கள். 60-ஐ 40-ஆகக் குறைத்திருக்கிறார்கள். அது வேறு விஷயம். எதற்காக அந்த 40 ஏக்கர்? இன்றையதினம் கேரளாவிலே நடந்திருக்கிற ஒப்பந்தத்தைப் பாருங்கள். தனியாருடைய பள்ளிக்கூடங்கள் பூராவையும் கொளை பிடிக்கிற பணியிலே அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். எப்படியாவது நிலச்சுவான்தார்கள் கையில் நிலம் ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும். எப்படியாவது விவசாயிகள் கையில் நிலம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை இப்பொழுது இருக்கிறது. ஆகவே, தயவு செய்து இதை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கோருகிறேன். இந்த மாற்றங்களை நான் எதிர்க்கிறேன். பல பிரச்னைகளை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். நிச்சயமாக விவசாயிகள் கைகட்டி இருக்கமாட்டார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்கு அகோரமான நிலப்பசி இருக்கிறது. நான் வாழ்நாள் பூராவும் போராட்டங்களை நடத்தி, நடத்தி அலுத்துப்போனவன். கடைசியாக இந்தப் போராட்டத்தை நான் என்னுடைய தலைமையிலே நடத்தும்படி என்மீது திணிக்காதீர்கள். ஏனென்றால் என்னுடைய கடைசி காலத்தைப் போராட்டத்திலே கழித்து விடலாம் என்று நினைக்கக்கூடிய அளவுக்குச் செய்துவிடாதீர்கள். நான் இதை வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் உங்களிலேயே பலர் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயத்திற்காக நான் போராட்டம் நடத்துவதிலே ஒன்றும் தவறில்லை. ஆகவே, இந்தச் சட்டம் ரொம்பத் தப்புகள் நிறைந்தது, எனவே இதை வாபஸ் வாங்கிக்கொண்டு நல்ல ஒரு சட்டமாகக் கொண்டுவரவேண்டுமென்று சொல்கின்ற நிலையில் நான் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்குத் தயாராக இல்லை, ஆதரிப்பதற்கும் தயாராக இல்லை. இது இரண்டுங்கெட்டான் சட்டம் ஆக இருக்கிறது. ஒன்றிலுமே சேராத சட்டமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. கந்தசாமி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு கொண்டுவந்திருக்கின்ற இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை நான் என்னுடைய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இன்றைய நிலச் சீர்திருத்தச் சட்டம் பழைய அரசு செய்திருந்த சட்டத்திலே மிகத் தீவிரமாக மக்களுக்குச் சோஷலிச

திட்டங்களை நிறைவேற்றித் தரக்கூடிய முறையிலே இன்றைய கால வர்த்தமான நிலைகளைப் பரிசீலனைசெய்து மக்களுடைய மனோ நிலையைப் புரிந்துகொண்டு இந்தச் அரசு கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

பெருமைக்குரிய பழம்பெரும் அரசியல் தலைவர் திரு. மணலி அவர்கள் பேசுகின்றபொழுது அறநிலையக் கட்டளைகளுக்கு விதி விலக்குகள் அளித்திருப்பதையும் மத ஸ்தாபனங்களுக்கு விதி விலக்குகள் அளித்திருப்பதையும் கல்வி ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகள் இவற்றிற்காக விதிவிலக்குகள் அளித்திருப்பதையும் வன்மையாகக் கண்டித்து அவைகளையெல்லாம் வாபஸ் பெறவேண்டுமென்றும், ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றும் அப்படியில்லாவிட்டால் தன்னுடைய கடைசிக் காலத்தைப் போராட்டத்தில் கழிக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் சொன்னார்கள். 'அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்தப் பொறுக்குக் குழுவினிலே பேசும்பொழுதும் அவர்கள் இதே கருத்தைத்தான் சொன்னார்கள். நாங்கள் முற்போக்கான திட்டங்களை வரவேற்கத் தயாராக இருக்கிறோம், இன்றைய கலைஞர் அரசு சோஷலிசத் திட்டங்களைக் கொண்டுவருகிறது. நாம் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று நாங்கள் சொன்ன நேரத்திலே திரு. மணலி அவர்களும் அதே கருத்தைத்தான் சொன்னார்கள். அவர்கள் அதற்குப் பதிலளிக்கின்ற நேரத்திலே காந்தியடிகள் அந்தக் காலத்தில் ராமராஜ்யம் வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதற்கு முன்னால் கிராம ராஜ்யத்தைக் கொண்டுவந்தார்கள். மத்திய, மாநில அரசில் இருக்கின்ற அதிகாரங்களையெல்லாம் கிராமங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

'அன்டு தி லாஸ்ட்' என்ற புத்தகத்திலே ரஸ்கின் அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் காந்தியடிகள் நிறைவேற்றிவிடவேண்டுமென்று கருதினார்கள். அன்றைய காங்கிரஸ் ஆட்சி பஞ்சாயத்து மன்றங்கள் ஏற்படுத்தி, பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல்கள் மூலமாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட கிராம மக்களிடத்திலே அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று முயற்சிசெய்ய முன்வந்தார்கள், அந்த எண்ணம் நல்ல எண்ணம் தான், அந்தக் கருத்தின் அடிப்



படை, நல்ல அடிப்படைதான். ஆனால் காலக் கோளாறினால் துக்ளக் செய்ததைப்போல் ஆகிவிட்டது, அவருடைய திட்டம் நல்ல திட்டம்தான், ஆனால் மக்கள் நல்ல நிலைமையிலே இல்லாத காரணத்தினாலே அவர்

" Thukluk was the wisest fool of all the Kings "

என்ற பட்டத்தைப் பெற்றார். பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்கபோய், பஞ்சாயத்துப் பதவிகளுக்குப் போட்டி ஏற்பட்டுபோய் இன்றைக்கு நிறைய கேஸ்கள் கிராமங்களிலே வந்துக்கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. மக்களுக்கு நிலத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகள் கழிந்துவிட்ட பிறகும் நம் மக்களுடைய மனோ பலம் மனப் பக்குவம், மாறவில்லை. சுதந்திரத்தை நாமும் அனுபவிக்க வேண்டும், மற்றவர்களுக்கும் அந்த சுதந்திரத்தை அனுபவிக்க விட்டுக்கொடுக்கவேண்டும், 'லிவ் அன்ட் லெட் லிவ்' என்ற கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மக்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லையென்ற நிலையில்தான் நாடு இருக்கிறது குறிப்பாகத் தமிழகத்தில் தெய்வத்தை நம்புகிறவர்கள் நூற்றுக்கு எண்பது பேர்கள் இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் நம்மிடத்திலே கருத்து வேறுபாடுகள் இருந்தாலுமகூட அவர்கள் சொன்ன திட்டம் பலன் அளிக்க கூடியதாய் இருந்தாலும் கூட, நாம் ஜனநாயகத்தில் ஆட்சி நடத்துகிறோம், செக்யூலர் என்று சொல்வதற்கு Secular State means not interfering in any matter religious. என்பதுதானே அர்த்தம்? ஆகையினாலே மத விஷயங்களிலே அரசு தலையீடு இருக்கக்கூடாது என்று அரசியல் நிர்ணய சட்டத்திலேயே விதிக்கப்பட்டிருக்கின்றபோது, மதஸ்தாபனங்கள் தவறுகள் செய்தால் அதை நீக்க வேண்டுமென்று சொல்லி, மதஸ்தாபனங்களில் தலையிடக்கூடாது என்று எடுத்துச்சொன்னோம். அந்தக் கருத்தையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இசைவு தெரிவித்தார்கள். மெஜாரிட்டி மக்களைப் புண்படுத்துகின்ற அளவுக்கு வேதனைப்படுத்துகின்ற அளவுக்கு விதிவிலக்கு அளிக்காமல் இருப்பது பொருத்தமல்ல. எனவே திரு. மணலி அவர்கள் கூறிய கருத்து காலத்திற்கு, இன்றுள்ள சூழ்நிலைக்குப்

பொருந்துவது அல்ல என்பதைத் தெரிவித்து, பல குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். குறைகள் பல இருந்தாலும், குறைகளை வளர்க்கவேண்டுமென்று, ஆதரவு கொடுக்கவேண்டுமென்று சொல்பவன் அல்ல நான். மதஸ்தாபனங்களில் தெய்வத்தின் பெயரால், தர்மத்தின் பெரால் இருக்கக்கூடிய குறைகளைப் போக்கியும் அந்த தர்மகாரியங்கள் நடக்கவேண்டுமென்ற முறையிலே தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறி இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தெரிவித்து வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இந்தச் சட்டத்தினுடைய ஒரு முக்கியமான கருத்தை விட்டுவிட்டுப் பேசினார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்தச் சட்டம் அறக்கட்டளைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை எடுப்பதா இல்லையா என்பதைப்பற்றித்தான். ஆலயங்களுக்கு இருக்கின்ற நிலத்தை எடுப்பதா இல்லையா என்பதைப்பற்றிச் சட்டம் வரவில்லை, அப்படியொரு சட்டம் பொறுக்குக் குழுவுக்கு விடப்படவும் இல்லை. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது கொண்டுவரப்பட்டபொழுது அறக்கட்டளை நிலங்களை எடுக்கலாமா இல்லையா என்பதுபற்றிச் சொல்லப்பட்டு அது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு மாவட்டங்களின் தலைநகர்களில் உறுப்பினர்கள் சென்று அங்குள்ள சாட்சிகளையெல்லாம் விசாரித்ததற்குப் பிறகு அந்தக் குழு எடுத்த முடிவுகளை, யோசனைகளைத்தான் இந்த மாமன்றத்திற்கு நாம் இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிறோம்.

இதிலே நாம் ஏதோ மடாதிபதிகளைக்கண்டு பயந்துவிட்டோம் என்றோ அல்லது வேறு யாருக்கோ பயந்துவிட்டோம் என்றோ சொல்வது பொருத்தமல்ல. ஆங்காங்கிருந்து வந்திருந்த சாட்சிகளை விசாரித்து அதன் பிறகுதான் முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வந்திருந்த சாட்சிகளில் இரண்டுவிதக் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இந்தச் சட்டம் தேவையில்லை என்றும் சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் காம்பன்சேஷனை கொடுக்கக் கூடாது என்றும் சொன்னார்கள். இந்தச் சட்டத்திற்கு ஆதரவும்





தெரிவித்துப் பேசினார்கள். இடையில் உள்ளவர்கள் நடைபெறுகின்ற பாடசாலைகள், கல்லூரிகள் எல்லாம் கெட்டுவிடும் என்று தெரிவித்தார்கள். இன்னும் சிலர் தர்ம ஸ்தாபனங்களின் பெயரால் நடக்கக்கூடிய காரியங்கள் கெட்டுவிடக் கூடாது என்றும் தெரிவித்தார்கள். இவையெல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆலயங்களுக்கு நிலங்கள் தேவைதானா என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. அந்தக் கருத்துக்குள் நான் இப்பொழுது போகவில்லை. இந்தச் சட்டத்தில் அறக்கட்டளைகளுக்கு நிலங்கள் தேவைதானா என்பது பற்றித்தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆலயங்களுக்கு இப்பொழுது விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். மத சம்பந்தப்பட்ட அறக்கட்டளைகளுக்கும் விதி விலக்குகள் கொடுத்திருக்கிறோம். இந்த விதிவிலக்குகள் எல்லாம் நிரந்தரமானதுதானா என்பதுபற்றியும் என்னால் சொல்லமுடியாது. காலத்தை உத்தேசித்து, விதிவிலக்குகள் ரத்துசெய்யப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அது காலத்தை உத்தேசித்துத்தான் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு தெய்வத்தில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, எங்களுக்கு ஆலயங்களிலே நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, நாட்டிலுள்ள மக்களின் மனதைப் புண்படுத்துவதைவிட அவர்களுடைய மனது பக்குவப்பட்ட பிறகு கொண்டுவரலாம் என்று இருக்கிறோம். அது தவறு என்று கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு நிலப்பரப்பு ஏதேதோ அறக்கட்டளைகளுக்கெல்லாம் எழுதி வைத்திருந்தார்கள் என்று முதல்வர் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அந்த அறக் கட்டளைகளுக்கு விதிவிலக்கு கொடுத்ததுபோல் ஆகாதா. 2,000, 3,000 ஏக்கர் வைத்துக் கொண்டு மோசடி செய்பவர்களுக்கு சட்டத்திலே அங்கிகாரம் கொடுத்திருக்கிறீர்களே என்று கேட்டார்கள். சட்டத்திலே சொல்லியிருக்கிறோம். பிரைவேட் டிரஸ்டாக இருந்தால் விட்டுவைக்கப்பட மாட்டாது. பிரைவேட் டிரஸ்டாக எவ்வளவு நிலம் இருந்தாலும் சொந்த நிலத்தோடு சேர்த்து லேண்ட் சீலிங்கிற்காகக் கணக்கிடப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

பப்ளிக் டிரஸ்டாக இருந்தாலும்கூட பெரும்பகுதி தனிப்பட்டவர்களுக்குப் போகும் என்று தெரிந்தால் அதை முழுவதும் ரத்து செய்து பிரைவேட் டிரஸ்டாகக் கருதப்படும் என்று சொல்லியிருக்கிறோம். பப்ளிக் டிரஸ்ட், சாரிடபிள் தேச்சாக இருந்தால் உச்சவரம்பு 5 ஏக்கர் இருக்க வேண்டுமென்று வைக்க சட்டத்திலே, சிபாரிசு செய்திருக்கிறோம். எனவே அறக்கட்டளைகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு தூரம் இதிலே தலையிட்டுச் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடசாலைகள், கல்லூரிகளுக்கு நிலம் எதற்கு என்று கேட்டார்கள் 'பெரியவர் மணலி. அவர்கள். கொடுத்திருக்கும் நிலம் போதாது, அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் தெரிவிப்பது கல்லூரிகளுக்கு கட்டிடங்களை விரிவாக்கவோ அல்லது கல்லூரிகளின் நடவடிக்கைகளை விரிவாக்கவோ இந்த இடத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. கல்லூரிகளுக்குப் பயிரிடும் பூமி எவ்வளவு கொடுக்கலாம் என்று தந்திருக்கிறோம். 40 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வரையில் தந்திருக்கிறோம். இது போதும் என்று கருதி இந்த யோசனை தரப்பட்டிருக்கிறது. தேவையில்லை என்பது இன்னொரு கருத்து. அதன் மூலம் பல கல்லூரிகளுக்கு, உயர்தர பாடசாலைகளுக்கு வரும் வருமானத்தைத் தடை செய்து நிறுத்தப்படுவது சரியல்ல. இவைகளையெல்லாம் அரசாங்கமே ஏன் கொடுக்கக்கூடாது, நிலத்தை உழுபவனுக்கே ஏன் நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நான் துவக்கத்திலேயே சொன்னேன். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையில் பின்வாங்கிய அரசு அல்ல இது, அந்தக் கொள்கையை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால், அதை அடைவதற்கான வழிமுறைகள் உண்டு. நாங்கள் எடுத்திருக்கும் வழிமுறை அவைகளிலே ஒன்று. இந்த முறை சரி என்று மனத்தில் கருதியதால் இந்த முறைக்கு வந்தோம்.

இந்தச் சட்டம் பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சட்டம். யாருக்கோ பயந்து கொண்டு இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது என்பது சரியல்ல. இன்றைய





சமுதாயத்திற்கேற்ப இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இந்தக் காலத்திற்கேற்ற வகையில் திருத்தியிருக்கிறோம், ஆனால் காலப்போக்கில் மேற்கொண்டு இந்தச் சட்டம் திருத்தப்படலாம் என்று கூறிக்கொண்டு இந்தக் குழுவின் சிபாரிசுகளை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு. மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவையின் முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 19/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு. நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## பிரிவு 3

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் ஒரு பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. M. SUBRAMANIAM : Sir. I move—

In sub-clause (4) of clause 3, the following items, viz., (ii), (a) and (b) shall be deleted :

"(ii) Notwithstanding anything contained in sub-clause (i) no such institution as is referred to in that sub-clause: and

(a) holding land, on the date of the commencement of this Act, less than the extent specified in the corresponding entry in column (2) of the Table under sub-clause (i), shall acquire by any means whatsoever, after that date, any land in excess of the extent so held; and

(b) holding no land at all on the date of the commencement of this Act, shall acquire by any means whatsoever, after that date, any land."

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : I second it, Sir.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—

In sub-clause (4) of clause 3, after the Table, the following shall be added :

"This however shall not include the lands endowed as security to the Government or to the University in lieu of cash and also land used by the educational institutions for their campuses."

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I second it.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the position has been amply explained. I do not want to take the time of the House. I therefore request that the amendments moved by me may kindly be accepted by Government.

THIRU N. K. PALANISWAMI : Sir, I move—

In sub-clause (4) of clause 3, for the existing Table substitute the following Table :

| (1) | (2) ACRES |
|---|---|
| (1) Any college affiliated to or recognised by any University under any law or rule relating to education ... ... | 5 |
| (2) Any High School or equivalent school recognised by the Government or University under any law or rule relating to Education ... ... ... ... | 5 |
| (3) Any Elementary School or Higher Elementary School or other equivalent institution recognised by the Government under any law or rule relating to education ... ... ... ... ... ... ... | 5 |
| (4) Any Students' Hostel ... ... ... ... ... ... | 5 |
| (5) Any Polytechnic institution ... ... ... ... ... | Nil |
| (6) Any Agricultural school ... ... ... ... ... | 5 |
| (7) Any orphanage ... ... ... ... ... ... ... | 25 |
| ... ... ... ... ... ... ... | Nil |



THIRU N. MARUDACHALAM : I second the amendment Sir.

**திரு. என். கே. பழனிசாமி** : சார், தனிப்பட்டவர்களிடம் ஒரு மெடிகல் காலேஜை ஒப்படைப்பது சரியல்ல. அதற்குக் காரணம், அட்வான்ஸ்ட் மெத்தேட்ஸ் அவர்களால் செய்ய முடியாது. அதற்கு ஊக்கமும் கொடுக்க முடியாது. அது மட்டுமல்ல, இந்தத் திருத்தத்தில் பூராவும் பள்ளிகளுக்கு ப்ளேகிரவுண்ட் தவிர வேறொன்றும் இருக்கக்கூடாது. விவசாயக் கல்லூரியாக இருந்தால் விடுவீர்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தனியார் மருத்துவக் கல்லூரி இல்லை. நீங்கள் மருத்துவக் கல்லூரிகளைக் குறிப்பிடுகிறார்களா என்று கேட்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி** : ஹாஸ்பிடல்களைக் குறிப்பிடுகிறேன். காரணம் என்னவென்றால் தனிப்பட்ட இந்தக் கட்டளை, தர்ம ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு பணம் பூராவையும் இப்படி காலேஜ்கள், ஸ்கூல்களிலே போட்டு வியாபாரமாக லாபத்திற்காக நடத்துகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தக் கட்டளைகளுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். மாயவரம் உக்கடைத் தேவாது கிருஷ்ணன் படத்திற்கு என்ன ரிலிஜியஸ் நேச்சர் இருக்கிறது? அதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமா? இதை எடுத்துக் கொண்டால் ரிலிஜியஸ் நேச்சர் வந்துவிடுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இந்த மசோதாவிலே 'ரிலிஜியஸ் நேச்சர்' வருகிறது என்று சொன்னேன், அவர்கள் பதில் சொல்லும் பொழுது சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் உயர்திரு பழனிசாமி அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஹாஸ்பிடல்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறீர்கள், அது சரிதானா என்று கேட்டார்கள். அவைகளுக்கு 5 எக்கர் வரையில் இருக்கலாம் என்று வைத்து

5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் போகாது. அவ்வளவுதான். இதையும் எடுத்துவிடுவதற்கு யோசனை செய்தோம். ஆனால் அதில் சட்டச் சிக்கல் வந்ததால் 5 ஏக்கர் என்று வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 5 ஏக்கர் என்பது மருத்துவமனைகள் என்பதால் மட்டும் அல்ல, சட்டச் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவும் போடப்பட்ட ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களில் மதிப்பிற்குரிய கே. எம். எஸ். கொடுத்திருக்கிற திருத்தம் ஒன்று. ஏன் ஏற்கனவே தர்ம ஸ்தாபனங்கள் அல்லது கல்லூரிகள் அல்லது பாடசாலைகள், குறிப்பிட்ட அளவிற்கு 40 ஸ்டாண்டர்ட் ஏக்கரா ஒரு கல்லூரி வைத்திருந்தால் மேற்கொண்டு வாங்கக்கூடாது என்று போட்டிருக்கிறீர்களே அதற்குக் காரணம் என்ன என்று கேட்கிறார்கள். நிலமில்லாத பாடசாலைகளுக்குப் புதிதாக எழுதி வைக்கக்கூடாது என்று போட்டிருக்கிறதே, காரணம் என்ன என்று கேட்கிறார்கள். ஏற்கனவே இந்தச் சட்டம் வெளியிட்ட 1—3—1972 ஆம் தேதியில் கல்லூரிகள், பாடசாலைகளுக்கு என்ன நிலம் உள்ளதோ, அவை போக மீதமுள்ளவற்றைக் கொடுக்க வேண்டும். ஏற்கனவே உள்ள அந்த ஸ்தாபனங்கள் ஒத்துக் கொண்டு அதிலே வரம்பு வைத்துப் போடப்பட்டது. புதிதாக யாரும் எழுதி வைக்கக்கூடாது. அதனால் தர்மம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தைத் தடுப்பதற்காக அல்ல. தர்மம் செய்ய வேண்டுமென்று நினைத்தால் நிலமாகத்தான் எழுதி வைக்க வேண்டுமென்று இல்லை, பணமாகக் கொடுக்கலாம். அதைத் தடுக்கவில்லை. பாடசாலைகளுக்கோ, கல்லூரிகளுக்கோ உள்ள நிலத்தை ஈடுகாட்டியிருந்தால் நிலைமை என்ன ஆகும் என்று கேட்கப்பட்டது. நான் பொறுத்துக் காலையிலேயே சொல்லி இருக்கிறேன். பல்கலைக் கழகத்திலிருந்து இருக்கின்ற அனுமதி ரத்தாகாதவாறு அரசு பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ அதை அளிப்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்தத் திருத்தம் அவசியமில்லை என்று கருதுகிறேன்.



திரு. பழனிசாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி உள்ள டாக்குமென்டில் பிரைவேட் டிரஸ்ட் என்று போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவை எல்லாம் பர்சனல் ஹோல்டிங்சில் சேர்த்துக் கொள்ளப்படும். பிரைவேட் டிரஸ்ட் என்று கோயிலுக்கு எழுதி வைத்திருந்தாலும், வீட்டிலுள்ள படத்திற்கு எழுதி வைத்திருந்தாலும் மருத்துவமனைக்கு எழுதி வைத்திருந்தாலும் வேறு எந்தக் காரியத்திற்கு எழுதி வைத்திருந்தாலும் அவை எல்லாம் பர்சனல் ஹோல்டிங்சில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆகவே, அவருக்கு அந்த அச்சம் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அளவுகளைக் குறைக்க வேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அளவுகளைக் குறைப்பதில் அவர்களுக்கும் எனக்கும் சிறிய கருத்து வேறுபாடு இருக்கிறது. அவர்கள் கல்லூரிகள், பள்ளிகள் எல்லாவற்றுக்கும் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் போதும் என்று கூறுகிறார்கள். இப்போது நிர்ணயிக்கப்பட்ட அளவுகள் குழு ஆராய்ந்து சிபாரிசு செய்த நிலையில் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை. உதாரணத்திற்கு திருச்சியில் உள்ள கிறித்தவக் கல்லூரியை எடுத்துக் கொண்டால் அவர்கள் நடத்துகிற கல்லூரிகளும், வேறு பல நிறுவனங்களும் எப்படி நடக்கின்றன என்று பார்க்கும்பொழுது நிலத்திலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துத்தான் நடத்துகிறார்கள். அந்த நிலங்களை நாம் எடுத்துக் கொண்டால் கல்லூரிகளே நடக்க முடியாத நிலைமைக்குக் கூடப் போய்விடும். அப்படிப் பாதகம் ஏற்படும்போது எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் சிந்தித்து. அப்படிப் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த அளவுகளை நிர்ணயித்து இதற்கு மேல் போகக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குழு சிபாரிசு செய்தது அதிகமில்லை, அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I want a clarification. Now a ceiling of 20 or 40 acres is fixed for various educational institutions. If they want to extend their campus for the construction of hostels, etc., can they acquire at least agricultural lands under this Bill?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு நிறுவனத்திற்குத் தேவை என்று கணிப்பதை நியாயம் என்று அரசு ஏற்றுக் கொண்டால் அதை அக்கவைர் செய்து கொடுக்க அரசுக்கு ஆட்சேபனை இல்லை. அரசாங்கமே அந்த அக்கவைர் செய்து கொடுக்கும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 1, the preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

'That the Tamil Nadu Land Reforms (Fixations of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) as amended by the Joint Select Committee be passed.'

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was passed into law.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவு.**

(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1972)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேரவைக்கு ஓர் அறிவிப்பு

தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/72) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.



### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

**(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்). நான்காம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 33/72)**

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Chairman, Sir, I beg to move—

'That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill,* 1972 (L.A. Bill No. 33 of 1972) be taken into consideration.'

The Committee of Legislators of both the Houses constituted to review the exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) has recommended the deletion of the exemption in respect of lands used for dairy farming or live-stock breeding contained in section 73 (x) of the Act. The Government have accepted the recommendation of the Committee.

Consequent on the deletion of the exemption in respect of lands used for dairy farming or live-stock breeding the functions of the Land Board will be confined only to grant of permission under section 31 of the Act to hold lands interspersed among or contiguous to any plantation. The Government have, therefore, decided to change the constitution of the Land Board.

Under sub-section (5) of section 5 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) as amended by the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Act, 1972 (Tamil Nadu Act of 1972), the maximum extent of land which a family consisting of more than 5 members can hold is 40 standard acres. It has been decided to reduce this maximum extent from 40 standard acres to 30 standard acres, viz., twice the extent allowed for a family consisting of five members or less.

The High Court has held that a person who has a right to enjoy the land during his life time without a power to alienate is not a limited owner as defined in clause (28) of section 3 of the Act. It has, therefore, been decided to amend this section to the effect that a person who has a right to enjoy the Land during his

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 12th August 1972.

life time shall be deemed to be a limited owner notwithstanding that he has no power to alienate the Land. This amendment will take effect from 6th April 1960 which is the date of the commencement of Tamil Nadu Act 58 of 1961.

At present there is no power vested in any authority to reopen a case finalised under the Act, if for any reason the extent of any land held by a person has been omitted to be included in the total extent of the land held by such person for the purpose of the Act. It has, therefore, been decided to insert a new provision giving power to the Land Commissioner to direct the Authorised Officer to reopen the cases in cases of omission of land to be included in the total extent held by a person.

Section 8 (1) allows a time limit of 90 days for filling returns by a person holding land in excess of the ceiling limit. Section 10 (5) allows 60 days time to file objections by a person interested in the land in respect of which draft statement has been published. Section 50 (2) allows 60 plus 30 days time for preferring claim for compensation for the land acquired. Section 50 (3) (a) (ii) allows 60 plus 30 days time for preferring objections to the draft compensation assessment roll. Section 51 (1) allows 90 days name for preferring claims by mortgagees or charge holders of the land acquired. Section 78 (1) allows 60 days time to landholders to file appeal to the Land Tribunal against the decision of the Authorised Officer. The time now allowed for filing returns, filing of objections, etc., under the various provisions referred to above is considered too long as this leads to prolongation of the proceedings of the Act in each case resulting in delay in the implementation of the Act. It has, therefore, been decided to reduce the time allowed under the various sections referred to above except section 51 (1) to 30 days and to reduce the time allowed under section 51 (1) to 60 days.

It has been decided to omit the existing section 81 of the Act relating to the revisional jurisdiction of the Land Tribunal and to entrust the revisional jurisdiction to the Land Commissioner in respect of the matters specified in that section.

At the conference of Chief Ministers held on 23rd July 1972 at New Delhi, it was decided that the compensation for surplus land acquired should be on a slab basis with the quantum decreasing with increase in the size of the holding. The existing provi-





sion in Schedule III to Tamil Nadu Act 58 of 1961 provides for calculation of the compensation on the basis of the multiples of net annual income. The net annual income is the amount of fair rent less the land revenue. It has been decided to revise the slabs prescribed in paragraph 6 of Part I of Schedule III for purposes of calculation of the compensation so that the quantum of compensation will decrease with the increase in the size of the holding. It has also been decided that for the purpose of determining the normal gross produce of the lands acquired, the value of gross produce as furnished in the return filed by the landowner under the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955) shall be taken into account. It has also been decided that the compensation payable for any building, machinery, plant, etc., acquired under the Act shall be the written down value determined in accordance with the provisions of the Income-tax Act, 1961 (Central Act 43 of 1961) of such building, machinery, plant, etc., on the date of the publication of the notifications under section 18 (1). The revised formula for determination of the compensation will take effect on and from the date of the publication of the amending Act that is to lands which vest in the Government after the date of publication of the amending Act.

The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

THIRU N. K. PALANISWAMI : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972 (L.A. Bill No, 33 of 1972) be circulated for the purpose of eliciting opinion thereon."

THIRU MANALI C. KANDASAMI : I second the amendment.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவானது சமீபத்தில் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட அடிப்படையில் இந்த மசோதா இல்லை. பாமலி என்று குறிப்பிட்டு நிரந்தரமாகத் தண்ணீர் வசதி இருக்கக்கூடிய பூமியாக இருந்தால் 10 முதல் 18 ஏக்கர் வரை என்றும், ஒரு போகமாகயிருந்தால் 27 ஏக்கர் என்றும், வறட்சியான பூமியாக இருந்தால் 54 ஏக்கர் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஒரு குடும்பம் என்றால் ஐந்து பேர்கள்

அடங்கியது ஒரு குடும்பம் என்றுதான் அர்த்தம். இங்கு முப்பது
ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே
ரெஜிஸ்டராகியிருந்தால் மனைவிக்கும் புருஷனுக்கும் தனித்
தனியாக ரிஜிஸ்டராகியிருந்தால் அல்லது பேரன் பேத்திகளின்
பேரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும் சரி அவர்களுக்குத்
தனித்தனியாக ஒதுக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே
இது அடிப்படைக் கருத்துக்கே விரோதமாக இருக்கிறது.

எனவே, அடிப்படையான நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட
வேண்டும். நிலம் அற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து
கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளின் வறுமையைப்போக்க
வேண்டும் என்பதுதான். 1960-ல் இருந்து எல்லா மாநிலங்களிலும்
இம்மாதிரி சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்
பட்ட சட்டங்கள் பூராவிலும் அதிகபட்சமாக உச்சவரம்பு
நிர்ணயிக்கப்பட்டது. இந்தியா பூராவிலும் வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்தது.
எனவே மறுபடியும் காங்கிரஸ் மானிபெஸ்டோவில், நாங்கள்
அதிகாரத்திற்கு வந்தவுடன் உச்சவரம்பைப் பற்றிக் கவனித்து
அதிகப்படியான பூமியை எடுக்கும் விதத்தில் செய்வோம் என்று
சொல்லப்பட்டது. சென்ட்ரல் லான்ட் ரிபார்ம்ஸ் கமிட்டி என்று
போட்டு அவர்கள் பரிசீலனை செய்து சில முடிவுகளைச் சொல்லி
யிருக்கிறார்கள். அந்த சென்ட்ரல் லான்ட் ரிபார்ம்ஸ் கமிட்டி
சிபார்சின் பிரகாரம் கோவில்கள், மடங்களின் நிலங்கள், இம்மாதிரி
நிலங்களைச் சர்க்கார் எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.
அதற்கு காங்கிரஸ் கமிட்டியிலும், அதற்குப் பின்னால் நடந்த முதல்
அமைச்சர்கள் மாநாட்டிலும் ஆதரவு இல்லாததன் காரணத்தால்
அது கைவிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், மைசூர், ஒரிஸா
மாநிலங்களில் கோவில்களுக்குச் சொந்தமாகவுள்ள பூமிகளைச்
சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கான மசோதாவைத் தயாரித்திருக்
கிறார்கள். இங்கு பாமிலி டெபனிஷன் அதற்கு முற்றிலும் விரோத
மாக இருப்பதால் அதனால் அதிகப்படியான பூமி கிடைக்காது.

நாட்டிலுள்ள வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும்
போக்கப்படவேண்டும். இன்று இந்தியா பூராவிலும் 34 கோடி
ஏக்கர் பூமியில் பயிரிடப்படுகிறது 1950-ல் இருந்து அது இருபது
சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. இன்னும் சிறிது தண்ணீர்



வசதி செய்துகொடுத்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாக்கலாம்.
ஆனால் போதுமான அளவு பூமி இல்லை. அந்த அளவிற்குத் தகுந்த
படி தொழில் அபிவிருத்தியும் கிடையாது. அக்ரிகல்ச்சரல்
பாப்புலேஷன் பூராவும் இன்டஸ்டிரீஸ்க்கு திருப்பிவிடக்கூடிய
நிலையில் நாம் இப்போது இல்லை. ஆகவே உடனடியாக நிலச்
சீர்திருத்தச் சட்டங்களை கொண்டு வந்து நிலம் அல்லாத
விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்படவேண்டும்.

மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய சர்க்கார்களுக்கு ஜனநாயக
சோஷலிஸத்தில் நம்பிக்கை. ஆனால் நம் சர்க்காரின் அடிப்படைக்
கொள்கை விஞ்ஞான சோஷலிஸக் கொள்கையை அடிப்படையாகக்
கொண்டது. அப்படி ஏற்றுக்கொண்டிருப்பதால் முதல்படியாக
நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டு, ஏகபோகம் என்பது ஒழிக்கப்
படவேண்டும். அதற்கு அடிப்படையானது நிலச்சீர்திருத்தம்.
அதைச் செய்யத் தவறிவிட்டால் நாம் நம் கொள்கையை நிறை
வேற்றமுடியாது. ஆகவே இந்த மசோதாவை மறுபரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, நிலச்
சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு
வேக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டங்கள் இயற்றுவது
மட்டுமல்ல, இயற்றப்பட்ட சட்டங்களை அமலாக்குவதில் கூட தமிழ்
நாடு அரசு துரிதமாகக் காரியமாற்றி வருகிறது. 60-ல் நிறை
வேற்றிய சட்டம். ஏற்கனவே இருந்த சட்டங்களில் இருந்த பல்
வேறு ஓட்டைகளை எல்லாம் அடைத்து மாற்றங்கள் செய்து
இன்றைய தினம் புதிய சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்
கிறோம். அந்தச் சட்டங்களின் விளைவாக யார் யார் அனுபவித்து
பயன்பெற்று வந்தார்களோ அவர்களெல்லாம் இந்தச் சட்டத்தின்
கீழ் அப்படி அனுபவித்து வந்த பலன்களை எல்லாம் தடுப்பதற்குச்
சட்டம் போட்டு நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுப்பதற்காக அரசு
முனைந்திருக்கிறது. இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி
இன்னும் காலதாமதம் செய்வது என்பது சரியல்ல என்று நான்
கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, தயவு செய்து திரு. பழனிசாமி அவர்கள் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் 1960-ம் ஆண்டு பால்பண்ணை நடத்துவதற்கும், மாட்டுப் பண்ணை நடத்துவதற்கும் என்று இந்த நாட்டில் பல பேர்களுக்கு, ஒருவர் இருவர் அல்ல, ஆறு, ஏழு பேர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் வைத்திருந்த நிலத்திற்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் அதை அனுபவித்து வரும் நிலை. அது தவறுதலாகக் கொடுக்கப் பட்டது என்று காலமாற்றத்தால் உணர்ந்து நாம் அதை ரத்து செய்திருக்கிறோம். இதனால் நிலம் அற்ற ஏழைகளுக்கு நிலம் கிடைக்கப் போகிறது. ஆகவே இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி மேலும் காலதாமதம் செய்வது சரியல்ல. 40 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு என்றிருந்த உச்சவரம்பை 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று குறைத்திருக்கிறோம். சென்ற கூட்டத்தொடரில் ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருந்ததை 40 என்று குறைத்தோம். இந்தக் கூட்டத் தொடரில் 40 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்பது அதிகம் என்று முதல் அமைச்சர் அவர்கள் கருதி அதை 30 ஆகக் குறைக்கவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதையொட்டி 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று இந்தச் சட்டம் இன்றையதினம் வந்திருக்கிறது.

முப்பது ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று சொல்வது மத்திய அரசில், முதல் அமைச்சர்கள் மாநாட்டில் என்ன முடிவு எடுக்கப் பட்டதோ அதையொட்டித்தான் செய்யப்படுகிறதே தவிர வேறு அல்ல. அதற்கும் இதற்கும் பொருத்தமாகத்தானிருக்கிறது. முதல் அமைச்சர்கள் மாநாட்டில் அல்லது சென்ட்ரல் லாண்ட் ரிபார்ம்ஸ் கமிட்டியில் செய்யப்பட்ட சிபாரிசு 10 அல்லது 18 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டது. சென்ட்ரல் லாண்ட் ரிபார்ம்ஸ் கமிட்டியில் தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உறுப்பினராவார். அவருக்குப் பதிலாக நான் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவு இது. பத்து ஏக்கர் அல்லது 18 ஏக்கர் வரையில் இருக்கலாம்.



இது இரு போகம் விளையக்கூடிய பூமியாக இருக்கவேண்டும் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டு அந்த அளவிற்கு நிலம் இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஒரு குடும்பம் என்றால் எவ்வளவு பேர்கள் இருக்கலாம் என்று கணக்கு எடுத்தபோது 10 முதல் 18 ஏக்கர் வரை என்று சொல்வது இரு போகம் விளையக் கூடிய பூமி. கொஞ்சம் மோசமான பூமியாக இருந்தால் அதிக பட்சமிருக்கலாம் என்று அவர்கள் ஒதுக்கியிருப்பது 54 ஏக்கர் வரையில் இருக்கலாம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் குடும்பத்திற்கு உச்சவரம்பு என்று வரும்போது 5 பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு இவ்வளவு. அதுபோல் ஐந்துபேர்களுக்கு மேற்கொண்டு இருக்கிற குடும்பமாக இருந்தால் உச்சவரம்பு இருமடங்காகத்தான் இருக்கவேண்டும். அதற்கு மேல் இருக்கக்கூடாது.

உதாரணமாக ஐந்து பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்ச வரம்பு 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கரா என்றால் ஐந்து பேர்களுக்கு மேல் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பமாக இருக்குமானால் அவர்களுக்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கராலிருந்து மேல் போகக்கூடாது என்பது கருத்தாகும். அப்படி எடுத்துக்கொண்டால் நாம் 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கிறோம் உச்சவரம்பு. 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர்ஸ் என்று இருக்கிறதே தவிர தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல தரமுள்ள பூமியாக இருந்தால் 12 சாதாரண ஏக்கர் கூட 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்குச் சமமானது. 12 சாதாரண ஏக்கரிலிருந்து 60 சாதாரண ஏக்கர் வரைபோகிறது. ஒரு ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு .8 ஆர்டினரி ஏக்கர் என்று சொல்லப்படுவது ஒரு ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு வருகிறது. சிலவிடங்களில் நான்கு சாதாரண ஏக்கர் ஒரு ஸ்டாண்டேர்ட் ஏக்கராவாக வருகிறது. அது மோசமான பூமி.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நிலத்தின் மீது விதிக்கப் படும் தீர்வையை வைத்து ஸ்டாண்டேர்ட் ஏக்கர் நிர்ணயித்து இருக்கிறோம். இப்படி நிர்ணயித்து இருப்பது 'சையிண்டிபிக் மெதடாக' இருக்கிறது என்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கணக்குப் பார்க்கிறபோது ஒரு குடும்பத்திற்கு—30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றால்—120 சாதாரண ஏக்கராக இருக்கும். மத்திய அரசாங்கம் சொல்கிற யோசனைப்படி பார்த்தால் 108 சாதாரண ஏக்கராவாக இருக்கும். வித்தியாசம் அதிக

மாக இல்லை என்று தமிழ் நாடு முதலமைச்சர் தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொண்டு சரி என்று அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். இதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. நமக்கும் அவர்களுக்கும் ஏறக்குறைய ஒன்றாக இருப்பதால் மாற்றம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இப்போது உயர் நீதி மன்றத்தில் 'லிமிடெட் ஓனர்ஷிப்' என்று சொல்லி ஒருவருக்கு ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டோ, அல்லது இன்னொருவருக்கோ நிலத்தை எழுதி வைத்துவிட்டு, அதை விற்கவோ, மாற்றம் செய்யவோ உரிமையில்லை. அவர் உயிர் உள்ள வரையில் அனுபவிக்கலாம் என்று எழுதிவைத்து இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக சொந்தமான நிலங்களும் இருக்கும். அந்த நிலங்களோடு, இப்படிப்பட்ட நிலத்தையும் சேர்த்து உச்சவரம்புக்கு கணக்கிடும்போது கணக்கிடுவதா இல்லையா என்ற பிரச்னை இருந்தது. உயர் நீதி மன்றத்தில் சேர்க்க வேண்டாம் என்று சொன்னார்கள். அதையும் சேர்த்துக் கணக்கிடவேண்டுமென்ற வகையில் இப்போது நாம் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம். 'லிமிடெட் ஓனர்ஷிப்பில்' எவ்வளவு நிலம் இருந்தாலும் அதையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று இப்போது சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம். இது ஒரு சிறந்த சட்டம். இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டிய அவசியம் இல்லை. இதை மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே முடிந்து விட்ட சில கேஸ்கள், அதாவது ஆதரைஸ்டு ஆபீசர்கள் கணக்கெடுத்து முடித்து விட்ட கேஸ்கள். அவைகளைத் திரும்பவும் 'ரீ-ஓபன்' செய்வதற்கு அரசுக்கோ அல்லது வேறு யாருக்குமோ அதிகாரம் கிடையாது. ஆதரைசுடு ஆபீசர்கள் தவறு செய்திருப்பார்களேயானால், அரசாங்கமே நீதி மன்றத்திற்குச் சென்றுதான் தீர்த்துக் கொள்ளவேண்டும். அது மாதிரி கேஸ்கள் இருக்கின்றன. நான் எந்த ஊர், எந்த இடம் என்று சொல்ல விரும்பவில்லை. ஒரு ஊரில் குறிப்பிட்ட ஒருவருக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும்போது தவறுதலாகச் செய்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் தனியாக இப்போது நடவடிக்கை எடுத்து



இருக்கிறது. சிறு குழந்தைக்குக் கூடத் தனியாக யூனிட் என்று
வைத்து அதற்கும் 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் எழுதி வைத்திருக்
கிறார்கள். எப்படி அந்த ஆதரைசுடு ஆபிசர் அதை எழுதினார்.
யார் சொல்லி எழுதினார், யாருடைய வற்புறுத்தலினாலே அதைச்
செய்தார் என்பதெல்லாம் காலத்தால் வெளியாகும் ரகசியங்கள்
அவற்றை வெளியில் சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன்.
இப்படிப் பல தவறுதல்கள் ஆதரைசுடு ஆபீசர்கள் செய்து இருக்
கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப ஆவலோடு
யார் என்று அறிந்து கொள்ள விரும்புவதாலே நான் ஒருவர்
பெயரை மட்டும் சொல்கிறேன். அர்த்தநாரீஸ்வரர் குடும்பத்தில்
தான் இது நடந்து இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று
சொன்னேன். திருநெல்வேலி மாவட்டத்தில் இப்படிப் பல இருக்
கின்றன.

ஆதரைசுடு ஆபீசர்களுக்குத் தனிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்
பட்ட காரணத்தால், அவர்கள் நிர்ணயம் செய்கிறபோது சில
தவறுதல்கள் நடைபெற்று இருக்கின்றன. அப்படித் தவறு நடந்
திருந்தால் அவற்றை மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு
அதிகாரம் இல்லை. இந்தச் சட்டத்தில் அந்த அதிகாரத்தைப்
போர்டு மெம்பருக்குக் கொடுத்து இருக்கிறோம். இதுவும் சிறந்த
ஒரு திருத்தம், இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

உச்சவரம்பு நிர்ணயிக்கும்போது நிலச்சுவான்தார்கள்
ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டிய காலவரம்பு நோட்டீஸ்
90 நாள், 30 நாள் என்று இருந்தது. இப்படிச் செய்வதால் நீண்ட
நாட்கள் ஆகிறது. சில இடங்களில் உச்சவரம்பு நிர்ணயிக்க ஒரு
வருடம் கூட ஆகிறது. இதைக் குறைக்கவேண்டுமென்பதற்காக
எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடியவேண்டு
மென்பதற்காக இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்திருக்
கிறோம். இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டிய
தேவையில்லை. இதையும் இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்திற்கு காம்பன்சேஷன் கொடுக்கிற முறையிலே மாற்றம்
செய்து இருக்கிறோம். இந்த மாற்றம் முதலமைச்சர்கள்
மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஒட்டியதாகும். தனிப்

பட்ட ஒருவருக்காகக் கொண்டு வரப்பட்டதல்ல. தனிப்பட்டவர்களுக்கு, பெரிய நிலச்சுவான்தார்களுக்கு தற்போது காம்பன்சேஷன் கொடுக்கிற முறை, 'ஃபேர் ரெண்ட்' எவ்வளவு என்று கணக்கு எடுத்து விட்டு, 'ஃபேர் ரெண்டி'ல் இருந்து லேண்ட் ரெவின்யூவைக் கழித்து விட்டு எவ்வளவு பணம் வருகிறதோ அதில் முதல் 5000 ஐ 12-ஆல் பெருக்கவேண்டும், அடுத்த 5000-ஐ 11-ஆல் பெருக்க வேண்டும், அடுத்த 5000-ஐ 10-ஆல் பெருக்க வேண்டும், மீதியுள்ளதை 9 ஆல் பெருக்கவேண்டுமென்று இருக்கிறது. இது படிப்படியாக அதிகமாக எடுக்கும் நிலத்திற்கு அதிகம் காம்பன்சேஷன் கொடுக்கிறபோது, அந்தக் காம்பன்சேஷன் கொடுக்கும் முறையை எப்படிக் குறைக்க வேண்டுமென்பதற்காக அதை 9, 8, 7, 6, 5, 4, 3 என்று வந்து மிச்சம் இருப்பது முழுவதையும் 2-ஆல் பெருக்கவேண்டுமென்று இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். இது சிறந்ததொரு திருத்தம், இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'ஃபேர் ரெண்ட்' நிர்ணயிக்கும்போது அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் ரிட்டர்ன் கொடுத்து இருந்தால் அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம். இது ஒரு புதிய சட்டத்திருத்தமாகக் கொண்டு வந்து இருக்கிறோம். இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. இவைகள் நல்ல திருத்தங்கள், இவைகளை உடனடியாக நிறைவேற்றினால் தான் பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் இருக்கும் நிலங்களை எடுப்பதில் உள்ள சிக்கலை நீக்குவதற்கும், குறைந்த காம்பன்சேஷன் கொடுப்பதற்கும் முடியும். ஆகவே. இந்த மன்றத்தில் உள்ள அத்தனை பேரும் இதற்குத் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: While defining standard acre in our Land Ceiling Act, there are so many difficulties. It is better we simplify it. Now it is based on kist paid to the land and also based on source of irrigation to the land. It is



better we simplify the procedure. At present only one who is good in Algebra can correctly calculate, the definition. Classify the lands simply as single crop land, double crop land, dry land with source or without source of irrigation. That would be better.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஏற்கெனவே 60-ம் ஆண்டு போடப்பட்ட சட்டத்தில் ஏற்பட்ட இந்த முறையிலேயே இன்னும் பரிபூர்ணம் அடையமுடியவில்லை. மேலும் சிக்கல்கள் வரவேண்டாம் என்று கருதுகிறேன். இப்போது ஒரு திருத்தம் கொண்டு வந்து விட்டால், மீண்டும் முடிவு செய்யப்பட்ட எல்லாவற்றையும் புனர் ஆலோசனை செய்யவேண்டி வந்து விடும். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பது முடிவு அடைந்து வருகிறது. 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இப்போது குறிப்பிட்டு விட்டதால் அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது அதில் கை வைக்க வேண்டியதில்லை. இருப்பது சிறந்தது. ரொம்ப சயின்டிபிக் மெதட். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நாம் வைத்து இருக்கிறோம். நம்முடைய ஸ்டாண்டர்ட் ஏக்கர் கணக்கு நில வருமானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்று கணக்கு எடுத்தால் கூட அது சரியாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகும். அதிலே போய் மாற்றம் செய்கிற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment of Thiru N. K. Palaniswami was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is:—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972 (L.A. Bill No. 33 of 1972) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

*Clause* 3.

MR. DEPUTY SPEAKER : The questions is :—

" Clause 3 do stand part of the Bill ".

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move the following amendment :—

In Clause 3, in sub-clause 17 (i) for the portion " the expression 9 (3) ", *substitute* the following, namely :—

" the expression under section 9 (3) ".

THIRU N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

For sub-clause (2) of clause 3, substitute the following :—

" (2) in section 5, of the principal Act, in sub-section (5) for the expression ' shall in no case exceed 40 standard acres ', the expression ' shall in no case exceed 20 standard acres ' had been substituted."

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிலசீர்த்திருத்தத்திற்கு அடிப்படையான முக்கியமான விஷயம் டெபினஷன் ஆஃப் தி பாமிலி. செண்டிரல் லாண்டு ரிபார்ம்ஸ் கமிட்டியின் ரிபார்ட்டின்படி 5 நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு—ஸ்டாண்டர்டு ஏக்கர் அல்ல—10 ஏக்கரிலிருந்து 18 ஏக்கர் என்றும், ஒரு போகமாக இருந்தால் 27 ஏக்கர் என்றும், சாதாரண பூமியாக இருந்தால் 54 ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குப் பின்னர் முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் அது திருத்தப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கக்கூடிய பேரண்டு ஆக்டை எடுத்துக் கொண்டால் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட அத்தனை பேர்களுக்கும் பூமி உண்டு. ஒரு குடும்பத்தில் இருக்கும் பேத்தி அப்படிப்பட்ட முறையினருக்கும், ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் போதும், அவர்களுக்கெல்லாம் பூமி உண்டு. அப்படியிருந்தால் அதிகப்படியான பூமி கிடையாது. டெபினிஷன் ஆஃப் பாமிலியை மாற்றிவிட்டால் நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்தும் பிரயோசனம் இல்லை.



அது மட்டுமல்ல. சட்டம் எல்லாம் பாஸ் செய்திருந்தாலும், இதுவரையில் ஒரு இன்ச் பூமி கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை. அரசியல் அமைப்புச் சட்டம் 25-வது அமெண்டுமெண்டு பிரகாரம் நஷ்டஈடு கொடுத்துவிட்டு, எடுத்துக் கொள்ளக்கூடிய பூமிகளை எடுத்துக்கொண்டு, எவ்வளவு பணம் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்துவிட்டு, பாக்கிக்கு பாண்டாக கொடுத்துவிடலாம். அல்லது குத்தகைதாருக்கு ஆக்குபன்ஸி ரைட் கொடுத்துவிட்டு, வருஷம் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று போட்டுவிடலாம். கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் வருமானத்தின் அடிப்படையில் தரம் பிரித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பல பூமிகளுக்கு இப்பொழுது பாசனவசதி ஏற்பட்டிருக்கிறது. ஆற்றிலிருந்து பாசனத்திற்கு ஏராளமாகத் தண்ணீர் எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டிருக்கிறது. அதெல்லாம் எந்த ரூபத்தில் வரும் ?

ஆகவே, இப்பொழுது இருப்பதை மாற்றி, ஒரு போகம், இரு போகம், ஆற்றுத் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யக்கூடியது, சர்க்கார் அதிகப்படியாக செலவு செய்து போரிங் மெஷின் போட்டு, சர்க்கார் கடன் கொடுத்து, அம்மாதிரி விவசாயம் செய்யக்கூடிய பூமிகளையெல்லாம் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வந்தால் தான், சட்டம் கொண்டு வந்ததினால் பிரயோசனம் இருக்கும். அந்த முறையில் செய்யவேண்டுமென்பதற்காகத் தான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. மணலி. சி. கந்தசாமி :** மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விளக்குகின்ற காலத்தில் மத்திய சர்க்கார் கூட்டியிருந்த மகாநாட்டில் நிர்ணயித்ததற்கும், அவர்கள் சொல்வதற்கும் இடையே உள்ள இடைவெளி கொஞ்சம் என்று கூறினார். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் என் இந்த இடைவெளி கூட இருக்க வேண்டும்? இந்த இடைவெளியைத் தவிர்த்து, அதற்கும் கொஞ்சம் கீழே போய் நிர்ணயித்து, மற்றக் காரியங்களில் செய்வதுபோல் இந்தக் காரியத்திலும் மற்ற மாநிலங்களுக்கு ஏன் நம்முடைய மாநிலம் முன்னோடியாக இருக்கக்கூடாது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய உறுதி மொழி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. அவர்கள் பேசும்பொழுது 40

என்று சொன்னார். நான் ஏன் 30 என்று குறைக்கக்கூடாது என்று கேட்டேன். குறைத்துவிட்டார். இதில் இன்னும் 10 ஏக்கர் குறைத்தால் ஒன்றும் குடிமுழுகிவிடப் போவதில்லை. இதில் ஏன் கஞ்சத்தனம் காட்டவேண்டும்?

இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் ஸ்டாண்டர்டு ஏக்கர் ரொம்ப விஞ்ஞான ரீதியாக இருக்கிறது. இல்லாவிட்டால் விஞ்ஞானிகளைக் கொண்டு தான் விளக்கவேண்டியிருக்கும். வக்கீல்களுக்கு வேலை இருக்கும் ஒரு போகம், இரு போகம், புஞ்சை என்று போட்டுவிட்டால் கஷ்டமாக இருக்கும். விவசாயி தானே வழக்காடக் கூடிய காலத்தில் வசிக்கிறான். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அந்த சட்டத்தைத் திருத்தி, அதற்குத் திருத்தம், அதற்குத் திருத்தம் என்று திருத்த சட்டங்களைக் கொண்டுவந்தால், அந்த 5 சட்டங்களையும் வைத்து அதைப் பார்த்துத்தான் விஞ்ஞானிகள் போய் விளக்கவேண்டியிருக்கும். ஒரு போகம், இரு போகம் என்று போடக்கூடாது.

பீஹாரில் சட்டம் வந்திருக்கிறது. நல்ல விஷயங்களைப் பின்பற்றுவதே இல்லை. ஒரிஸாவில் பூரி ஜகன்னாதர் ஆலயத்திற்கு இருந்த 11,000 ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். இங்கே என்னவோ நீங்கள் சாமியைக் கட்டிக்கொண்டு அழுகிறீர்கள். ஸ்டாண்டர்டு ஏக்கரை எடுத்துவிட்டு, ஒரு போகம், இரு போகம் என்று போட்டால், நாம் செட்டில்மெண்டு பண்ணி எத்தனை வருஷம் ஆகிவிட்டது? ரீசெட்டில்மெண்டு ஆகவில்லை. பழைய காலத்தில் நடந்ததை வைத்துக்கொண்டு இப்பொழுது எப்படிப் பேசுவது (குறுக்கீடு). ஒரு பைசா என்றால் அது வேறு விஷயம். செட்டில்மெண்டு ஆகி பல வருடங்கள் ஆகிவிட்டன. ரீசெட்டில்மெண்டு ஆகவேண்டிய காலத்தில் எப்படி பழைய காலத்தில் செட்டில்மெண்டு நடந்ததை வைத்துக் கொண்டு நிர்ணயிப்பது? (குறுக்கீடு) நான் ரீசெட்டில்மெண்டு செய்வதற்கு ஒத்துக் கொள்கிறேன். நிச்சயம் ரீக்ளாஸிபை பண்ணவேண்டும். நான் ஒத்துக்கொள்ளத் தயார். நான் நிலப்பிரபுக்கள் பக்கம் பேசவில்லை. அன்னக்காவடிகளின் பக்கம் பேசுகிறேன். 40, 50 வருஷங்களுக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் காலத்தில் செட்டில்மெண்டு ஆனதை வைத்துக்கொண்டு, தரம் நிர்ணயிப்பது சரி அல்ல. நிலப்பிரபுக்கள் நல்லபாம்பைப்போன்றவர்கள். அவர்



களை அடித்தால் ஒரே அடியாக அடிக்கவேண்டும். அவர்கள் சீறிக்கொண்டிருக்கிறார்கள். அரை அடி, கால் அடி, என்பதில்லாமல், பூராவும் அடிக்க வேண்டும், இல்லாவிட்டால் அவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள். அவர்களை எவ்வளவு நைஸ் பண்ணினாலும் பலன் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். நிலப்பிரபுக்களைப் பற்றி முக்கால் அடி, அரை அடி என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் நியாயமாகச் சொல்ல வேண்டும். யாருமே நிலம் வைத்திருக்கக்கூடாது என்று சொல்ல வேண்டும். மணலி ஐயா வைத்திருக்கக்கூடிய 5 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடம் கொடுத்துவிடுவார்களா? எந்தத் தனி நபரும் நிலம் வைத்திருக்கக்கூடாது என்ற சித்தாந்தத்தை ஏன் பின்பற்றக்கூடாது? சிறு விவசாயிகள் 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் என்று ஏன் அந்த சித்தாந்தம் வெளிவருகிறது? யாரும் நிலம் வைத்திருக்கக்கூடாது. ஸ்டேட் மஸ்டு ஓன் என்று ஏன் சொல்லிவிடக்கூடாது?

**திரு. மணலி சி. கந்தசாமி :** நான் கொடுத்துவிடுவதற்குத் தயார். அம்மையார் கணவருடைய நிலத்தைக் கொடுப்பதற்குத் தயாரா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாடு முழுவதிலும் அப்படி முடிவு செய்யட்டும். நான் கொடுப்பதற்குத் தயார்.

**திரு. மணலி சி. கந்தசாமி .** நாம் இரண்டு பேரும் முடிவு செய்வோம். நான் கொடுக்கத் தயார். நாட்டைப்பற்றி கவலைப்பட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு எழுதி வைத்து விடுங்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** ஆர்டர் ஒன்றுமில்லை. இப்படி நடுவே குறுக்கிட்டால் பேசுவது தொந்தரவாய் இருக்கிறது. நிலப்பிரபுக்களை அரைகுறையாக விட்டுவைத்திருப்பது உங்களுக்கு எப்பொழுதும் ஆபத்து. அதனால் விவசாயிகள் தான் பாதிக்கப்படுவார்கள். கொடுக்கவேண்டிய நன்மைகளையும், கொடுக்க

வேண்டிய ஆதரவையும் விவசாயிகளுக்குக் கொடுக்கத் தயங்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டு, தயவு செய்து 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருப்பதை 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்து விடுங்கள் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு, என்னுடைய இடத்தில் அமர்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நில உச்சவரம்பு சட்டத்திற்கு இப்பொழுது கொண்டுவந்திருக்கிற சில திருத்தங்கள் உண்மையான அடிப்படையானவை என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். இதற்கிடையே ஏன் மத்திய அரசு சார்பில் கொண்டுவரப்பட்ட சில அடிப்படைகளைப் பின்பற்றக் கூடாது என்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு சில விளக்கங்களை அறிய விரும்புகிறேன்.

உதாரணமாக என்னுடைய மாவட்டத்தில், அது போல இன்னும் பல மாவட்டங்களிலும் மானத்தைப் பார்க்கிற பூமிகள் இருந்துகொண்டிருக்கின்றன. நல்ல மழை இருக்கிற நேரத்தில் இரு போகம் சாகுபடி செய்கிறார்கள். சில பேர்கள் முப்போகம் கூட சாகுபடி செய்கிறார்கள். மழை இல்லாத நேரத்தில் ஒரு போகம் சாகுபடி செய்கிறார்கள். சில நேரங்களில் ஒரு போகம் கூட சாகுபடி செய்ய முடியவில்லை. ஆகவே, சாகுபடி செய்வதன் அடிப்படையில் வைத்துக்கொண்டால், இருபோகமா, முப்போகமா, ஒரு போகமா என்று எப்படி கண்டுபிடிப்பது என்று கேட்கின்றேன். அதுவுமின்றி அப்படிப்பட்ட அடிப்படையை வைத்தால் இருபோகம், முப்போகம் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் கூட வேண்டுமென்றே ஒரு போகம் என்று எழுத்திலே கொண்டு வந்து, அதன் மூலம் தப்பித்துக் கொள்ள வழி ஏற்படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலப்பிரபுக்களை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. நிலப்பிரபுக்களுக்கு சாதகமாக இருக்கவேண்டுமென்ற எண்ணமும் அரசுக்கு இல்லை. நிலப்பிரபுக்களுக்கு அஞ்சி சட்டத்தை திருத்தவேண்டிய அவசியமும் இந்த அரசுக்கு இல்லை. ஏற்கனவே சட்டத்தில் இருந்த கிரேஸிங் லாண்டு வைத்துக்கொள்ளலாம் என்பதை ரத்து செய்ததிலிருந்தே,



ஏற்கனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்ததிலிருந்தே, 60 ஸ்டாண்டர் ஏக்கர் வரை மொத்தம் குடும்பத்திலுள்ளவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்றிருந்ததை இப்பொழுது 30 ஆகக் குறைத்ததிலிருந்தே, அரசு இப்படிக் கொண்டு வந்த பல்வேறு திருத்தங்களைப் பார்த்தாலே நிலப் பிரபுக்களுக்கு பயந்து சட்டங்களைக் கொண்டு வரவில்லை, துணிந்துதான் கொண்டு வந்திருக்கிறோம் என்பது புலனாகும்.

சென்ற கூட்டத்தொடரில் 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் 5 பேர்களுக்கு மேற்கொண்ட குடும்பத்திற்கு இருக்கலாம் என்று நாம் சட்டம் கொண்டு வந்தோம். மணலி அவர்கள் அப்பொழுதே 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக ஆக்கக்கூடாதா என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டார்கள். இப்பொழுது 40 என்பதை 30 என்று குறைத்திருக்கிறோம். இப்பொழுது 30 என்று சொல்லும் பொழுது 20 என்று சொல்கிறார். 20 என்று சொன்னால் 10 ஏக்கர் என்று சொல்வார்களோ என்னவோ என்று அச்சமாக இருக்கிறது. நாங்கள் கொண்டு வந்த இந்தத் திருத்த சட்டத்தை ஒத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருப்பது ஏதோ அதிகம் என்று கருதவேண்டாம். முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு வையுங்கள், ஐந்து பேர்களுக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு இரு மடங்காக இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். இது அதிகம் அல்ல, ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டாண்டர்டு ஏக்கரைப் பற்றி குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் எப்பொழுதோ நடைபெற்ற சர்வே என்றாலும் அதை நியாயமானது என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் நாம் கொண்டு வந்திருக்கிற அதி தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் சாதாரண நிலங்கள் கூட இப்பொழுது இருபோக நிலங்களாக மாறியிருக்கின்றன. ஆகவே, ஒரு போகம், இருபோகம் என்று வைத்துக்கொள்வது தமிழ் நாட்டினுடைய நிலைமைக்கு சரியாக வராது. நாம் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருப்பதை மாற்ற முடியாது, இப்பொழுது இருப்பதே போதும் என்று கருதுகிறேன். எனவே, இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று திரு. என். கே. பழனிசாமி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"In clause 3, in sub-clause 17 (i), for the portion "the expression "9 (3)", substitute the following, namely :—

the expression "under section 9 (3)".

The amendment was put and carried.

The amendment of Thiru N. K. Palanisami was put and lost.

Clause 3, as amended, was put and carried.

Clauses 4 to 7 were put and carried.

Clause 1 the Preamble, and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth amendment Bill, 1972, as amended, be passed".

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

### 6. முதலமைச்சரவர்களின் அறிக்கை

ஃபிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பதவி நிலை உயர்வு குறித்து முதலமைச்சரவர்களின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வரு வாய்த்துறை இலாகாவில் இருக்கும் 746 ஃபிர்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பதவிகள் தற்போது இளநிலை எழுத்தர். ஜூனியர் அஸிஸ்டெண்டு நிலையில் உள்ளன. இவைகளை உயர் நிலை எழுத்தர், அஸிஸ்டெண்டு நிலைக்கு உயர்த்துமாறு அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் ரெவின்யூ இலாகாவிலுள்ள கீழ் நிலை அலுவலர்களின் நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுறுகின்றன. 21-8-72 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A Statutory Rules and Orders.*

246. Notification issued with G.O. Ms. No. 1138, Home, dated the 24th April 1971, in regard to certain amendments to the Madras Children Rules, 1940. [Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

247. Notification issued with G.O. Ms. No. 2895, Home, dated the 26th October 1971, in regard to an amendment to Appendix I in the Tamil Nadu Children Rules, 1940. (Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

248. Notification issued with G.O. Ms. No. 307, Home, dated the 2nd February 1972, in regard to an amendment to Appendix I in the Tamil Nadu Chilrden Rules, 1940. [Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

249. Notification issued with G.O. Ms. No. 826, Rural Development and Local Administration, dated the 14th April 1972, in regard to dissolution of the Battalagundu Panchayat Union Council in Madurai district with effect from 15th April 1972 and reconstitution of the Panchayat Union Council with effect from 25th July 1972. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

250. Notification issued with G.O. Ms. No. 871, Rural Development and Local Administration, dated the 21st April 1972, in regard to dissolution of the Kalligudi Panchayat Union Council

[1972 ஆகஸ்ட் 19

in Madurai district with effect from 22nd April 1972 and reconstitution with effect from 22nd July 1972. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

251. Notification issued with G.O. Ms. No. 2581, Revenue, dated the 7th September 1971, in regard to the date of coming into force of Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 in certain districts and authorisation of officers to exercise the powers and duties under the Act. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

252. Notification issued with G.O. Ms. No. 3056, Revenue, dated the 15th October 1971, in regard to preparation of tenancy rights for each revenue village in certain districts in the state of Tamil Nadu. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

253. Notification issued with G.O. Ms. No. 672, Home, dated the 4th March 1972, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

254. Notification issued with G.O. Ms. No. 3222, Home, dated the 29th November 1971, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Tamil Nadu Act IV of 1939).]

B. *Reports, notifications and other papers.*

75. Errata issued with Memo. No. 121053/Y3/71-3, Revenue, dated the 18th November 1971 to the Revenue Department Notification II-1 No. 5087 (b) of 1971, published at page 2 in Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th September 1971.

@ 76. Annexure to the Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972).



1972 ஆகஸ்ட் 19]

@ 77. Annexure to the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 32 of 1972).

78. Report of the Joint Select Committee on the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972).

79. Report of the Joint Select Committee on the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

80. Fourth Report of the Committee on Subordinate Legislation (Fifth Assembly).

81. Fourth Report of the Committee on Public Accounts on New Service/New Instruments of Service.

% 82. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1972–73 (English and Tamil).

% 83. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1972–73 (Eglish and Tamil).

**84. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister on** the First Supplementary Estimates for the year 1972-73 (English and Tamil).

---

@ Despatched to Members on 17th August 1972.
% Laid on the Table of the House on 18th August 1972.

## இணைப்பு

[32-ம் பக்கத்தில் 193-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஈச்சம்பாய், கோரைப்பாய் நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்காகத் தொழில் வணிகத் துறையினால் ஆரம்பிக்கப்பட்டுத் தற்சமயம் இயங்கி வரும் பாய் நெசவாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் (மாவட்ட ரீதியாக) கீழ் வருமாறு :—

| மாவட்டம். | கோரைப்பாய் நெய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வரும் இடங்கள். |
|---|---|
| 1. வட ஆற்காடு | வந்தவாசி |
| 2. சேலம் | 1. உத்தமசோழபுரம் |
| | 2. இருப்பாளி |
| 3. கோயம்புத்தூர் | 1. தாராபுரம் |
| | 2. கொளத்துப்பாளையம் |
| | 3. ஊர்துபுரம் |
| 4. தஞ்சாவூர் | 1. விளாந்திரசமுத்திரம் |
| | 2. விளாங்குடி |
| 5. திருச்சி | 1. நீத்தான்விடுதி |
| | 2. கரூர் |
| 6. மதுரை | 1. கோடங்கிநாயக்கன்பட்டி |
| | 2. வேடப்பட்டி |
| | 3. தேனூர் |
| 7. இராமநாதபுரம் | 1. இராங்கப்பராயக்கன்பட்டி |
| | 2. திருப்பத்தூர் |



| மாவட்டம். | கோரைப்பாய் நெய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வரும் இடங்கள். |
|---|---|
| 8. திருநெல்வேலி | 1. எருவாடி |
| | 2. கிரியம்மாள்புரம் |
| | 3. குறிச்சிக்குளம் |
| | 4. கிழவீராணம் |
| | 5. பொதுக்குடி |
| | 6. பத்தமடை |
| | 7. விரவநல்லூர் |
| | 8. ரகுமானியபுரம் |
| | 9. துலுக்கர்பட்டி |
| | 10. லட்சுமி |
| | 11. முதலியார்பட்டி |
| | 12. பேட்டை |
| 9. கன்னியாகுமரி | 1. குரங்குடி |
| | 2. மாதவாளையம் |
| | 3. தக்கலை |
| 10. தர்மபுரி | 1. இருளப்பட்டி |
| | 2. பாப்பாரப்பட்டி |

### ஈச்சம்பாய் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

வட ஆற்காடு மாவட்டம்—காஞ்சி (செங்கம் தாலுகா)

சேலம் மாவட்டம்—இடப்பாடி

(இ) மேற்படி தொழிலில் ஈடுபட்டுள்ளவருக்காக ஆரம்பிக்கப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்குப் பங்கு மூலதனக் கடன் அரசு வழங்குகிறது. மேலும் நன்றாக இயங்கிவரும் சங்கங்களில், பங்குத் தொகையில் அரசும் பங்குகள் எடுத்துக்கொண்டு வருகிறது. நடைமுறை மூலதனத்திற்காக (Working Capital) கடன் உதவி அளிக்கிறது. நன்றாக இயங்கி

வரும் சங்கங்களுக்கு தேவைப்படும் பணிமனைகள் கட்டுவதற்கு மானியம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்ற அரசாங்க ஊழியர் ஒருவரை இலவசமாகவோ அல்லது அவர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியைச் சங்கம் ஏற்றுக் கொள்ளும் முறையிலோ அளித்து அரசு உதவி செய்கிறது. மேற்படி தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினரால் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக பல்வேறு கைத் தொழில் விற்பனை நிலையங்களை அரசு நிறுவி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைத் தகுந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மாதிரியான தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் உதவி செய்வதற்காகத் தனி வங்கி ஒன்றையும் அரசு நிறுவி உதவி செய்து வருகிறது.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### திங்கட்கிழமை, 1972 ஆகஸ்ட் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Madras Museum*

*206 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

**(a)** whether the Museum Review Committee constituted by the Centre has recommended during 1972 that the Madras Museum may be upgraded as National Museum; and

(*b*) if so, the action taken by the Government?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* இந்திய அரசால் 1970-இல் நியமிக்கப்பட்ட அரும்பொருட்காட்சிச்சாலை மறு ஆய்வுக்குழு, சென்னையிலுள்ள அரும்பொருட்காட்சிச்சாலை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு அது தேசிய அரும்பொருட்காட்சி நிலைக்கு உயர்த்தப்படவேண்டும் என்ற பரிந்துரையைச் செய்துள்ளது. இந்திய அரசு மாநில அரசின் கருத்து அறிய அந்தப் பரிந்துரையை மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. அதுபற்றி மாநில அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*திரு. என். கே. பழனிசாமி:* போதுமான கட்டடங்கள் கட்டாததனால் ரேர் ஸ்பீஸிகள் கொண்டுவந்து வைக்கப்படாத நிலை இருக்கிறது, முப்பது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவிலேயே மிக முக்கியமான மியூஸியமாக இருந்த இது இப்பொழுது கேட்பாரற்றுக் கிடைக்கிறது என்பது உண்மையா? அப்படியானால் மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியம் வாங்கி அபிவிருத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள அரும்பொருட்காட்சிச் சாலை நல்ல நிலையில்தான் இருந்து வருகிறது. ஆனால், போதுமான அளவுக்கு இடம் இல்லை என்பது உண்மை

[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அக்வேரியத்தில் வைக்கிறார்கள். ஏனென்றால் இது பெரும்பாலும் பழம்பொருளைச் சேகரித்து வைக்கும் அரும்பொருட்காட்சிச் சாலையாக இருக்கிறது. அக்வேரியத்தில் அப்படிப்பட்ட புதிய மீன் வகைகளைச் சேகரித்து வைக்கிறார்கள்.

## *Municipal Schools*

* 207 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have any proposal or scheme to take over the schools run by the Municipalities in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தாங்கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்த வேண்டும் அல்லது தனியார் பள்ளிகளுக்குத் தருவது போன்று தங்களுக்கு 100 சதவிகிதம் மானியம் தர வேண்டும் என்று இம்மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் கேட்டுக் கொண்டன. இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்டமாக மிகவும் நெருக்கடியான நிதி நிலையிலிருக்கும் நகராட்சிகள் நடத்தும் 10 உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் 1972-73-ம் ஆண்டு முதல் ஏற்றுக்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளைக்கூட சில நகராட்சிகள் நடத்தி வருகின்றன. எனவே, அந்த ஒன்றுக்கு மேற்பட்டவைகளை அரசாங்கம் எடுத்து மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப்பிட்டது மாதிரி, நிதி நெருக்கடி மிக அதிகமாக இருக்கிற நகராட்சிகள் நடத்தும் உயர்நிலைப்பள்ளிகளில் பத்து இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வி இயக்குநர் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார். இந்த ஆண்டு பத்துப் பள்ளிகளை எடுத்துக்கொள்வது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. திருநெல்வேலி நகராட்சி 7 உயர்நிலைப்பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றிலே ஒரு பள்ளியை இந்த ஆண்டு அரசு எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்திருக்கிறது. குன்னூரில் ஒரு பள்ளியையும், குடியாத்தத்தில் ஒரு பள்ளியையும், இராமநாதபுரத்தில் ஒரு பள்ளியையும், திருவள்ளூரில் ஒரு பள்ளியையும், வாலாஜாபேட்டையில் ஒரு பள்ளியையும், இராசிபுரத்தில் ஒரு பள்ளியையும், மேட்டுப்பாளையத்தில் ஒரு பள்ளியையும், சிவகாசியில் ஒரு பள்ளியையும், அருப்புக்கோட்டையில் ஒரு பள்ளியையும் ஆக, பத்து உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்று அரசு திட்டமிட்டிருக்கிறது.



1972 ஆகஸ்ட் 21]

திரு. கே. எ. வகாப் : இப்படி எடுத்துக்கொள்ளப்படுகிற உயர்நிலைப்பள்ளிகள் எந்த ஆண்டிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73-இல், அதாவது இந்த ஆண்டில் எடுத்துக்கொள்வதாகத்தான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## செங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 208 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், செங்கசமுத்திரம் உயர்நிலைப்பள்ளி, கட்டட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், கட்டட வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, a number of elementary schools require their own buildings. At present the Panchayat Unions construct buildings and they have not been properly constructed. With two years they fall down or crack. So, may I know whether the construction of the buildings would be taken up by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓரளவு நிதி வசதி அடிப்படையில்தான் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் சார்பாகக் கிட்டத்தட்ட 30,000 சில்லரை பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 12,000 சில்லரை பள்ளிகள் தான் நல்ல கட்டடங்களில் அமைந்திருக்கின்றன. மற்றவைகளுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை. அவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கவேண்டும் என்பதற்காக நிதி வசதி ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறலாமா என்ற எண்ணம் இருக்கிறது. அரசுக்கு நேரடியாகக் கடன் தரும் நிலைமை ஆயுள் காப்புறுதிக் கழகத்திற்கு இல்லை. ஆகவேதான் இதற்குத் தனி வாரியம், டி.ஆர்.டி. அவர்களைப் பொறுப்பாளியாக நியமித்து, வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு கடன் வாங்கியதற்குப் பிறகு பல பள்ளிகளுக்குக் கடன் வழங்கி பள்ளிக்கூடங்களைக் கட்டலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.

## *Paintings in Chittannavasal*

* 209 *Q.*—THIRU *K. T. K.* THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that paintings in Chittannavasal are fading and are in decay; and

(*b*) if so, the steps taken to preseve the same?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

***திரு. கே. டி. கே. தங்கமணி:*** சார், இந்த சித்தன்னவாசல் சித்திரங்கள் புராதனமான பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை. இப்போது அந்தச் சித்திரங்கள் அழிந்து வரக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதற்கு போதுமான பாதுகாப்பு இல்லை. அதோடு யாரோ அங்கே புதிதாக சில சித்திரங்களை எழுதியிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அது உண்மையா? அப்படியானால் அந்தச் சித்திரங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** தலைவரவர்களே, சித்தன்னவாசலில் இருக்கின்ற ஓவியங்கள் எல்லாம் கிட்டத்தட்ட 1,100 ஆண்டுகளுக்கு முன்னால் தீட்டப்பட்டவை. ஆகவே, பல்லாண்டுக் காலமாக மழையிலும் வெயிலிலும் அடிபட்டு, அதன் காரணமாக அந்த சித்திரங்கள் பாதிக்கப்பட்டு வந்தன. பின் புதுக்கோட்டை அரசு அந்த சித்திரங்களுக்கு ஓரளவு பாதுகாப்புக் கொடுத்து. மீண்டும் இப்போது அதற்குப் பாதுகாப்பு அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

***திரு. கே. டி. கே. தங்கமணி:*** சார், பண்டைக்கால சோழ மன்னர்களுடைய ஓவியங்கள் தஞ்சை கோவிலிலும், இம்மாதிரி பல்லவர் காலத்திய ஓவியங்கள் சித்தன்னவாசலிலும் இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த அந்த இடங்களில் காவலுக்கு என்று ஏதோ ஒருவரை போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒருவரால் அவைகளைச் சரியாக பார்த்துக்கொள்ள முடியாது. எனவே மேற்கொண்டு சில காவலர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** தலைவரவர்களே, அவைகளுக்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்கிறது. இப்போது இருக்கின்ற காவல் போதாதென்றால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அறிக்கை வந்தபின் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.



## தஞ்சாவூர் அரண்மனை

* 210. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரண்மனையில் உள்ள கூடகோபுரம் பழுதடைந்து, தற்போது இடியும் நிலையில் உள்ளது என்பது உண்மையா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** ஆம். பழுது பார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

***திரு. என். கிட்டப்பா:*** தலைவரவர்களே. இந்தக் கூடகோபுரத்தை பழுது பார்க்கும் பணியை மத்திய சர்க்கார் மேற்கொள்ள வேண்டியிருக்கிறதா? அல்லது மாநில அரசாங்கத்திற்கு பணியை மேற்கொள்ள உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா? மாநில அரசாங்கத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தால் மத்திய அரசாங்கம் அதற்குச் செலவிடும் தொகை எவ்வளவு? அந்த வேலை எப்போது செய்து முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** தலைவரவர்களே, தஞ்சை அரண்மனையைப் பொறுத்தவரையில், அது தமிழக அரசின் மேற்பார்வையில் தான் இருக்கிறது. இப்போது பொதுப்பணித் துறை அதை மேற்பார்வை செய்து வருகிறது. சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில பகுதிகள் பழுதுபட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் பழுதுபார்க்க அதிகமாகச் செலவு ஆகும். ஆகவே, அரண்மனையின் அந்தப் பகுதியை தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்றிட பொதுப்பணித் துறை விருப்பம் தெரிவித்திருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ள இருக்கிறது.

## *Wages for labourers*

* 211 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal to amend the Minimum Wages Rules to enable the plantation workers to get double the normal wages for overtime work?

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:*** ஆம்.

***திரு. என். கே. பழனிசாமி:*** சார், இப்போது 'ஓவர் டைம் வேஜஸ்' ஒரு கிலோவுக்கு 4½ அணா விதம் கொடுக்கிறார்கள். ஆனால் அண்டையில் இருக்கிற கேரளத்தில் ஒரு கிலோவுக்கு 9 அணா விதம் கொடுக்கிறார்கள். அதைப்போல் இங்கும் கொடுக்க, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, அதுபற்றி ஏற்கெனவே கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய அரசாங்கங்களின் தொழிலாளர் நல ஆணையாளர்களுடன் நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறார். இன்னும் திட்டவட்டமான பதில் வரவில்லை. எனினும் பொதுமக்களுடைய கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய ஊதியத்தையும், வசதிகளையும் பெற்றுத்தர முத்தரப்பு மாநாட்டில் மேற்கொள்ளபட்ட முடிவுகள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு விட்டனவா? இல்லையானால் மேற்கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, பிற மாநிலங்களின் கருத்தை அறிய நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இத்துடன் பொது மக்கள் கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டிருக்கிறது.

*212. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்து வருகின்ற இந்தச் காலத்தில் அத்தகைய தொழிலாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி எவ்வளவு அதிகமாகச் செய்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு போனஸ் அளித்து ஊக்கப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, இம் மாநிலத்தில் உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் ஊக்கத் தொகை அளிக்கும் திட்டங்களும், உற்பத்தி உயர்வையொட்டி ஊதியத்தையும் உயர்த்திக் கொடுப்பதற்கு வகை செய்யும் சீரமைப்புத் திட்டங்களும் தனித்தனி நிறுவனங்களைப் பொறுத்து, தொழி



லாளர் நலத் துறை அதிகாரிகளின் நன்முயற்சியுடன் அவ்வப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் கீழ்க் காணும் தொழிற்சாலைகளில் உற்பத்தியுடன் இணைந்து ஊதியம் வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது :

1. சிம்சன் தொகுதியில் பொறியியல் நிறுவனங்கள்.
2. மலைத் தோட்டத்தில் பறித்தல் வேலை.
3. பஞ்சாலைகள் பலவற்றில் குறிப்பாக நூல் சுற்றும் துறைகளில்.

**திரு. ஆ. பாந்தாமன் :** தலைவரவர்களே, ஊக்கத்திற்கேற்ற ஊதியம் வழங்குகின்ற நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஊக்கமும், முதலாளிகளுக்கு வருமானமும், அதேநேரத்தில் நாட்டுக்கும் வருமானம் கிடைக்கிறது. ஆகவே, மொத்தமாக இதைப் பரிசீலித்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் காரியத்துக்காக பல்வேறு துறைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தித் திறனைக் கருத்திற் கொண்டு உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் குறிக்கோள் அளவுகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, அந்தக் குறிக்கோள் அளவுகளுக்கு மேற்பட்டு அதிக அளவு உற்பத்தியை எய்த தொழிலாளர்கள் நன்கு பாடுபடுவதோடு அவர்கள் பெறும் சிறப்பான அடிப்படைச் சம்பளத்துடன் ஊக்கத்தொகையும் பெற வேண்டும். என்பதும், உற்பத்தி உயர்வுக்காக வரையறுத்த வீதங்களைக் காட்டிலும் அதிக ஊதியம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும்போது தற்போது உள்ளதுபோல் யூனிட் ஒன்றுக்குக் கூடுதல் ஊதியம் அல்லது திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களின் மீது வரையறுத்த ஊதியங்கள் இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அது கிட்டும் வகையில் மேற்படி வீதங்கள் தகுந்தவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பது சில கம்பெனிகளில் செய்துகொண்ட உடன்படிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது. அது எல்லாக் கம்பெனிகளுக்கும் நீட்டிக்கப்படுவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு விரைவில் முடிவெடுக்கப்படும்.

### சாணார்பட்டிக்குத் துணைப் பதிவாளர் அலுவலகம்

*213 வினா—**திரு. க. நாகராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சாணார்பட்டியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.

[1972 ஆகஸ்ட் 21

## பர்மா அகதிகளுக்கு வீடுகள்

*214. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வியாசர்பாடியில் பர்மா தமிழர் அகதிகளுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதற்காகும் மொத்த தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) வியாசர்பாடி ஏரிப் பகுதியில் குடிசைகளில் வசிக்கும் பர்மா அகதிகளுக்காக, அடிப்படை வசதிகளுடன் கூடிய 2,760 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1,13,16,000 செலவிட அனுமதி வழங்கி, 1971 நவம்பர் திங்களில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. பர்மா அகதிக் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 3 சென்ட் பரப்பளவிற்கு மேற்படாமல் மனைகள் இலவசமாக ஒப்படை செய்யப்படும். அகதிகளுக்கு வீடு கட்டுவது தொடர்பாக இந்திய அரசு வரையறுத்துள்ள கடன் வழங்கு முறைக்கிணங்க, ஒவ்வொரு குடும்பமும் ரூ. 4,100 கடன் தொகை பெறத் தகுதியுடையதாகும். வீடு கட்டும் மனைப் பகுதிக்கு 19—2—72-ல் வருகை தந்த புதுடில்லியிலுள்ள இந்திய அரசின் புனர் வாழ்வுத் துறைச் செயலாளர், அம் மனைகளைச் சீர் செய்ய வேண்டியதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக்கான உச்சவரம்புக் கடன் தொகையை ரூ. 4,100 லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்துவது குறித்துப் பரிசீலிப்பதாக ஒப்புக்கொண்டார். வீடுகள் கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக வீட்டு வசதி வாரியம் தயாரித்த வீட்டு மாதிரி வடிவமைப்பு, மனைப் பிரிவு வரைபடங்கள் ஆகியவை ஆய்வில் உள்ளன. இத் திட்டப்பணிகள் முழுவதும் இரண்டாண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள அகதிகள் குடும்பத்தினருக்கு கடன் அனுமதிக்கப்படும். இத் தொகை வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும். அகதிகளுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கிணங்க, இத் திட்டத்திற்கான செலவுத் தொகை முழுவதும் இந்திய அரசால் ஈடு செய்யப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்த பர்மா அகதிகளுக்கு கட்டித்தரப்பட்டிருக்கிற வீடுகள் மொத்தம் எத்தனை? அது எந்த ஆண்டில் முடிவுறும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மொத்தம் 2,760 வீடுகள் கட்டித் தரப்படும். அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டுக்குள் முடிக்கப்படலாம்.



1972 ஆகஸ்ட் 21]

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இதுவரை பர்மாவில் இருந்து வந்த அகதிகள் அனைவருக்கும் 67-க்கு முன்பு வந்த அனைவருக்கும் வீட்டு வசதியும், நிலமும் அளிக்கப்பட்டுவிட்டனவா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இது வியாசர்பாடியைப் பற்றிய குறிப்பிட்ட கேள்வி. மற்ற தகவல்கள் இப்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் சேகரித்து அளிக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பர்மா அகதிகளுக்காகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மத்திய சர்க்கார் கடனாகக் கொடுக்கிறார்கள். அதனால் சகல பர்மா அகதிகளுக்கும் வீடு கட்ட முடியாமல் இருக்கிறது. பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனாகவும் மத்திய சர்க்கார் அளிக்க வேண்டும் என்று நமது சர்க்கார் சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மத்திய சர்க்கார் இப்போதே முழுத் தொகையையும் கடனாகத்தருகிறபோது நாம் பாதித் தொகையைக் கடனாக அளிக்க வேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** பர்மா அகதிகள் ஒவ்வொருவருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க 3 சென்ட் இடம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்படி குடிசைமாற்று வாரியத்தின் வர்டிகல் எக்ஸ்பான்ஷன் என்பதாக—மாடி வீடுகள் கட்டிக்கொடுக்கிறோமோ அதுபோல இந்த பர்மா அகதிகளுக்கும் வீடுகள் கட்டித்தருவதென்றால் நமக்கு இடம் மிச்சமாகும். அதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** வியாசர்பாடியைப் பொறுத்த வரையில் இவர்கள் தனித்தனியாக வீடுகள் வேண்டும், மாடி வீடுகள் வேண்டாம் என்ற காரணத்தினால்தான் இந்தத் திட்டமே தாமதமாயிற்று. எனவே தான் 3 சென்ட் வீதம் ஒதுக்கப்பட்டது. மாடி வீடுகளை விரும்பினால் அதுபோல நிச்சயமாக கட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** வியாசர்பாடி, கும்முடிப்பூண்டி ஆகிய இடங்களைப் பொறுத்தவரை பர்மா அகதிகளுக்குக் கடன் வழங்குவதில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள் பற்றி மாநில அரசுக்கும், மத்திய அமைச்சருக்கும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கடன் வழங்கும் முறையில் சிக்கல் எதுவும் இல்லை. முதல் தவணையை வாங்கிக் கொண்டு சிலர் அதைத்

தவறான வழியில் செலவிட்டுவிட்ட காரணத்தினால் அடுத்த தவணை வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்தான் அது. ஒருவர் இருவர் செய்கிற தவறு பெரும் சிக்கலை அளித்துவிடுகிறது. கடன் கொடுக்கின்ற முறையில் சிக்கல் இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : அகதிகளாக வந்துள்ள பர்மா தமிழர்கள் அத்தனைபேர்களுக்கும்—வீடுகள் இல்லை என்று மனுக்கள் போட்டவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுவிட்டதா ? அவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : தனிக் கேள்வி வேண்டும்.

### அரிசனக் காலனிகளுக்கு மேல்நிலைக் குடிநீர் தொட்டிகள்

* 215. வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியத்தில் உள்ள பாலவாக்கம் அரிசனக் காலனி, வெண்கல் குப்பம் அரிசனக் காலனி, தாமரைப்பாக்கம் அரிசனக் காலனி, மாகரல் அரிசனக் காலனி ஆகியவற்றில் மேல்நிலைக் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாலவாக்கம் மற்றும் 3 அரிசனக் காலனிகளுக்கு மட்டுமல்லாமல் இந்த வசதி தேவையுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள இதர அரிசனக் காலனிகளுக்கும் வசதி அளிப்பதுபற்றி பரிசீலித்து நிதி நிலைமைக்கு உட்பட்டு சீரான திட்டமிட்ட முறையில் அரசு செயல்படுத்தும்.

**திரு. கா. வேழவேந்தன்** : செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள ஹரிஜனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுவது பின்னால் வருவதாக இருந்தாலும், உடனடியாகக் குடிநீர் வசதியற்ற இந்த நான்கு ஹரிஜன காலனிகளுக்காவது குடிநீர் வழங்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : பாலவாக்கம், வெண்கல்குப்பம் தாமரைப்பாக்கம், மாகரல் ஆகிய இடங்களில் உள்ள அரிசனக் காலனிகளுக்கு குடிநீர் வழங்க—பொதுவாக இந்தத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் 1 லட்சம் கேட்டிருக்கிறார். அதைக் கொடுக்கக்கூடிய நிலைமை வரும்போது இவற்றில் உடனடியாக 3 கிராமங்களையாவது எடுத்துக் கொள்வது பரிசீலிக்கப்படும்.



### வேலூரில் பிச்சைக்காரர் இல்லம்.

* 216. வினா—**திரு. மா. பா. சாரதி** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : இல்லை, எனினும் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை-வேலூர் சாலையில், திருவண்ணாமலையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இடத்தில், தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம், அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்** : ஏற்கனவே காட்பாடியில் உள்ள தொழு நோய் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : அது குறித்து அரசுக்குத் தகவல் தெரியவில்லை.

**திரு. கே. எ. வகாப்** : தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமான தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள் என்பதனால் அங்கே ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : வட ஆற்காட்டைக் காட்டிலும் தர்மபுரியில்தான் அதிகம் என்று சொல்லப்படுகிறது. இப்போது அதற்கு திருவண்ணாமலைப் பகுதியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா** : இந்தத் தொழுநோய் விடுதி ஒன்றை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : அதற்கு திருச்சியில் இருந்து தஞ்சை போகிற வழியில் ஓரிடம் எடுக்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சையில் சேரும்.

### *Ryots of Inam Estates*

* 217 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that 500 Inam Ryots in Pudukottai went on hunger strike on 22nd March 1972 in front of Revenue Divisional Officer, Pudukottai Office;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to meet their demands?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) ஏறத்தாழ 250 வேளாண்மைத் தொழிலாளர்கள் 22—3—72-ல் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலமாகச் சென்று புதுக்கோட்டை மாவட்டத் [illegible] ஆட்சித் தலைவரது அலுவலகம் முன்பாகக் கூடி நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 4-35 மணி வரை அடையாள உண்ணா நோன்பு இருந்தனர். அவர்களது கோரிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(இ) (1) நிலவரி ஏற்பாட்டு வேலைகள், உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட போதிலும், அவ் வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக அவசரச் சட்டம் ஒன்றைச் சாற்றுரைத்தும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (கையகப்படுத்துதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தையும் (26/1963), தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (கையகப்படுத்துதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தையும் (30/1963) தக்கவாறு திருத்தியும் இவ்வேலைகள் உடனடியாக முடிக்கப் பெறுதல் வேண்டும்.

(2) சிவில் நீதிமன்ற ஆணைகளின்படிக்கான கைது, ஜப்தி நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

(உ) சிவில் ஏற்பாட்டு வேலைகள் உயர்நீதி மன்றம் நிறுத்திவைத்துள்ளதால் இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. இவ்வழக்கு குறித்து உயர்நீதி மன்றம் முடிவு எடுக்கும் வரையில், நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்று ஸ்டே ஆர்டர்கள் இருந்தாலும்கூட செட்டில்மெண்டு செய்வதற்கான விசாரணையைத் தொடர்ந்து நடத்தவும், பட்டா விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் அரசு முன் வருமா? இனாம் திருத்தச் சட்டம் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். ஆகவே அப்படிச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னாலே இது போன்ற நடவடிக்கையை எடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மைனர் இனாம்ஸ் 361 இருக்கிறது என்றால் 340-க்கு செட்டில்மெண்டு முடிந்துவிட்டது. 21-க்குத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவும் ஸ்டேயில் இல்லை. 31—8—1972-க்குள் பாக்கியுள்ளது முடிந்துவிடும். இனாம் எஸ்டேட்ஸ் என்று எடுத்துக்கொண்டால் 198 இல் 133-க்கு செட்டில்மெண்டு முடிந்துவிட்டது. பாக்கியுள்ள 59



இல் 44 தான் ஸ்டேயில் இருக்கிறது. மிச்சம் உள்ள 15-ம் சீக்கிரத்தில் முடிந்துவிடும். இதுபற்றி அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறது என்று தெரிவித்தேன். நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஹைக் கோர்ட், சுப்ரீம் கோர்டிலே இருக்கும் கேஸ்களை துரிதப்படுத்துவதற்கு, துரிதமாக அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோர்ட்டுகளுக்கு அரசாங்கம் ஏதாவது மனு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தாமதப்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. எவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்த வேண்டுமென்று வழக்கறிஞர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

## கேளிக்கை வரிகள்

* 218. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-1971, 1971-1972 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுக்கு முறையே கிடைத்த வருமானம் எவ்வளவு?

(இ) அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகப்படுத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) சென்னை கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கீழ்க்கண்டவாறு வருமானம் கிடைத்துள்ளது :—

பந்தய வரி—

1970-71-ம் ஆண்டு 178.46 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 199.46 இலட்சம் ரூபாய்.

கேளிக்கை வரி—

1970-71-ம் ஆண்டு 10.91 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 14.28 இலட்சம் ரூபாய்.

மொத்தம்.—

1970-71-ம் ஆண்டு 189.37 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 213.74 இலட்சம் ரூபாய்.

கேளிக்கை வரிச் சட்டத்தின்மூலம் வசூலிக்கப்பட்ட தொகையில் 90 சதவிதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது.

(இ) 3-3-1972 முதல் பந்தய வரி விகிதங்களை அரசினர் கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளனர்.

| | |
|---|---|
| (i) மின் கணிப்புப் பொறியமைவுகளுக்கான (Electric Totalizator) பந்தய வரி. (ii) பணை முகவர்களின் (Bookies) மீதான பந்தய வரி. | 15 சதவிதத்திலிருந்து 20 சதவிதம். |
| (iii) மின் கணிப்புப் பொறியமைவுகள் நீங்கலான பந்தயக் கணிப்புப் பொறிகளுக்கான பந்தய வரி. | 20 சதவிதத்திலிருந்து 25 சதவிதம். |

1972-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு குதிரைப் பந்தய வரியின்மீது 5 சதவித மேல்வரி விதிக்கப்பட்டுள்ளது.

1972-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு பந்தயத் திடல் நுழைவுக்கட்டணத்தின் மீது செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், அவ்வாறு செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படும்போது ஒரு ரூபாய் கேளிக்கை வரிக்கான கூடுதல் மேல்வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதற் கொண்டு அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய குதிரைப் பந்தய வரி வசூலிப்புப் பணியைக் குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து வணிக வரித்துறை எடுத்துக் கொண்டது. இதனால், குதிரைப் பந்தயச் சங்கத்திற்குக் தரகுத் தொகையாகக் கட்டப்பட்டு வந்த 1 சதவிதத் தொகை அரசுக்கு மிச்சமாகிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that because of the recent increase in the Betting and Entertainment Taxes, there is a huge increase in private and illegal betting in the Race Course?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதுபற்றிப் புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. எ. எம். இராஜா: தலைவர் அவர்களே, புதிய வரி மூலம் அரசுக்கு அதிகமான வருமானம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. மத்திய அரசு ஜாக்பாட்டிலே வெற்றி பெறுகின்ற அதிகமான தொகை பெறுகின்றவருக்கு ஒரு



வரி விதித்திருக்கிறார்கள். அதன்மூலம் மத்திய அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. அதே போல், நம்முடைய அரசு டபுள், டிரெபுள், ஜாக்பாட் இவைகளிலே வெற்றி பெறுகின்றவர்களுக்கு, அதிலே 10 சதவிதமோ, 20 சதவிதமோ வரி விதித்தால், அதன்மூலம் அரசுக்கு சுமார் ரூ. 50 லட்சம் கிடைக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு அதுமாதிரி வரி விதித்திருக்கிறார்கள். தமிழக அரசு வரி விதிப்பதைப் பற்றி பரிசீலிக்கலாம். ஆனால் முடியுமா என்பது சந்தேகம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சென்னை குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து இரண்டு நாள் ஓட்டங்களை அனுமதிக்க வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதை அனுமதிப்பதன் மூலம் அரசின் வருமானத்தை அதிகரிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு நாள் கூடி ஓட்டத்தைத்தான் அரசு அனுமதித்திருக்கிறது. 2 நாள் கூடி ஓட்டம் அனுமதித்தால், தொகை அதிகமாவதன் காரணமாக, வேறு சில காரியங்கள் நடந்து, அதன்காரணமாக லா அண்ட் ஆர்டரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற காரணத்தினாலும், பணம் பெரிய இருந்தால், தவறுகள் இருக்குமோ என்று செய்திகள் நடமாடுகின்ற காரணத்தாலும் இரண்டு நாள் கூடி ஓட்டத்துக்கு அனுமதி இல்லை என்று தெரிவித்துவிட்டோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த குதிரைப் பந்தய திட்டம் சூதாட்ட முறையில் இருப்பதாகச் சில பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதுபற்றி அரசு என்ன கருத்தைத் தெரிவிக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சூதாட்டம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். சூதாட்டம் சூதாட்டம் தான்.

*219. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு வணிகவரி வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கேளிக்கை வரி மீது நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் 1972-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கிடைத்தத் தொகை எவ்வளவு?

[1972 ஆகஸ்ட்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேளிக்கை வரி மீது விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் ஜனவரித் திங்களில் கிடைத்த தொகை ரூ. 1 இலட்சம்.

**திரு. எஸ். கணேசன்:** இந்தக் கூடுதல் சர்சார்ஜ் வரிமூலம் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக இதுவரை கிடைத்திருக்கின்ற தொகை எவ்வளவு? நம்முடைய மாநிலத்தின் சார்பில், நாட்டுப் பாதுகாப்புக்கான நிதி இந்தியப் பிரதமரிடம் அளிக்கப் பட்டிருக்கிறதே, இந்த நிலையில் மேலும் இந்த வரியை நீடிக்க அரசு விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் விடை அளிக்கும்போது சொன்னேன், ஏற்கனவே சட்டம் பிறப்பிக்கும்போது வார்த்தைகள் எச்சரிக்கையாகப் போடப்பட்டிருக்கின்றன. நாட்டுப் பாதுகாப்புக்கு என்ற வார்த்தையை நான் சேர்க்கவில்லை. தமிழக அரசினுடைய வருவாயைப் பெருக்குவதற்கும் என்று சொன்னேன். ஆகவே, இந்த வரியை இப்பொழுது நீக்குவதாக இல்லை. வருமானத்தைப் பற்றி இதுவரையில் எவ்வளவு என்ற தகவல் இல்லை. ஆனால், மார்ச் மாதம் முடிய தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கிற வருமானம் ரூ. 50.97 லட்சமாகும்.

**திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தச் சினிமா தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த ஆண்டு மதுக்கடைகள் மிக அதிகமான அளவுக்கு ஏலம் போயிருக்கின்றன. இது மேலும் இந்தத் தொழிலை பாதிக்கும் என்பதால் இதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேளிக்கை வரி வசூலை பார்க்கும் போது, பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. சினிமாத் தொழில், நன்றாக, சிறப்பாக இருப்பதாகத்தான் எனக்குக் காட்சி அளிக்கிறது.

### மத்திய சிறைச்சாலைகளில் செய்யப்பட்ட மரச்சாமன்கள்

* 220 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-72-ம் ஆண்டில் தமிழக மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் செய்யப்பட்ட மரச் சாமான்களின் மதிப்பீட்டுத் தொகை சிறைச் சாலை வாரியாக எவ்வளவு?



1972 ஆகஸ்ட் 21]

(இ) அவை எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட்டன

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) தமிழக மத்திய சிறைச்சாலைகளில கைதிகளால் செய்யப்பட்ட மரச்சா ஏப்ரல் 1971 முதல் பிப்ரவரி 1972 முடிய கைதிகளால் செய்யப்பட்ட மரச்சாமான்களின் மதிப்பீட்டுத்தொகை வருமாறு:

1. மத்தியச் சிறைச்சாலை, சென்னை—3,20,703 ரூபாய்.

2. மத்தியச் சிறைச்சாலை, மதுரை—2,31,227 ரூபாய்.

3. மத்தியச் சிறைச்சாலை, வேலூர்—1,68,709 ரூபாய்.

4. மத்தியச் சிறைச்சாலை, சேலம்—4,07,169 ரூபாய்.

5. மத்தியச் சிறைச்சாலை, கோவை—2,50,952 ரூபாய்.

6. மத்தியச் சிறைச்சாலை, திருச்சி—2,52,878 ரூபாய்.

7. மத்தியச் சிறைச்சாலை, கடலூர்—2,00,735 ரூபாய்.

8. மத்தியச் சிறைச்சாலை, பாளையங்கோட்டை—2,03,928 ரூபாய்.

9. இளைஞர் சிறைப்பள்ளி, புதுக்கோட்டை—7,774 ரூபாய்.

10. பிற்காப்பு இல்லம் (ஆண்கள்), சென்னை—56,831 ரூபாய்.

(இ) சிறைச்சாலைகளில் தயார் செய்யப்படும் தர அளவு நிர்ணயிக்கப்பட்ட ( standard ) மரச்சாமான்களில் பெரும்பாலானவை அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் தேவைக்கேற்ப செய்யப்படுகின்றன. எனினும் தனிப்பட்டோர் வேண்டுகோளின்படியும் தரஅளவு நிர்ணயிக்கப்படாத மரச்சாமான்கள் தயார் செய்து கொடுக்கப்படுகின்றன.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலைகளில் கைதிகளால் செய்யப்படுகின்ற மரச்சாமான்களை மேலும் அதிகமாகச் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களிடம் வேலை வாங்கி, இன்னும் அதிகமான மரச் சாமான்களைச் செய்து, அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை சிக்கனமான முறையில் அவற்றைப் பயன்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதே அதைத்தான் செய்து வருகிறோம்.

### ஜெயம்கொண்டத்திற்கு முன்சீப் கோர்ட்

* 221 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயம்கொண்டம் நகரத்தில் ஜில்லா முன்சீப் கோர்ட் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. சதாசிவம் :** தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவினர் அங்கு வந்து விசாரித்தபொழுது, பொதுமக்களும் மற்ற அரசியல் தலைவர்களும் அது அவசியமானது என்று எடுத்துக்கூறி இருப்பதால், அதைக் கொண்டு வருவதற்கு இனியாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர்நீதிமன்றம் அந்த கோரிக்கையைப் பரிசீலித்து, பரிந்துரை செய்யுமானால் கவனிக்கலாம்.

### கழிவுநீர்க் குழாய்கள் தயாரிப்பு

* 222 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொம்பலூர் லால்குடி வட்டங்களில் கிடைக்கும் களிமண்ணை வெட்டி எடுத்து கழிவு நீர்க் குழாய்கள் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பொம்பலூர் வட்டத்திலும், லால்குடி வட்டத்திலும் நிறைய களிமண் கிடைக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியில் குழாய் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை துவங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்தின் சார்பிலே இப்பொழுது திட்டம் இல்லை.





### பீங்கான் தொழிற்சாலை

* 223 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை, கரூர், மணப்பாரை ஆகிய வட்டங்களில் கிடைக்கும் வெங்கச் செங்கல், பெல் ஸ்பார்களைக் கொண்டு சிறிய அளவில் ஒரு பீங்கான் தொழிற்சாலை துவக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, என்னுடைய வினாவில் குறிப்பிட்ட பகுதிகள் மிகமிகப் பின் தங்கிய பகுதிகள், ஆகவே, அங்கு கிடைக்கின்ற கற்களைக் கொண்டு தனியார் சார்பிலே ஒரு தொழிற்சாலை துவங்க அரசு அனுமதி வழங்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேட்டால் அனுமதி வழங்கலாம்.

### கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல்

* 224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, எதையெதையோ நாம் இயந்திரமயமாக்குகிறோம். ஆனால் இன்னும், கிராமங்களிலே செக்கிலே இருந்துதான் புண்ணாக்கு எடுக்கிறார்கள். ஏன் அதையும் இயந்திரமயமாக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதே கிராமங்களிலே இயந்திரங்களிலே புண்ணாக்கு எடுப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே மூன்று தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன.

மாநகர் போக்குவரத்து

* 225 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்த்துவிட்டு அங்கே பாதாள ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தவும், துரித போக்குவரத்தினை துவக்கவும், திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழு ஆலோசனை ஏதும் கூறியுள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினிடத்திலே இதுபோன்ற பாதாளரயில் விடும் திட்டம் பரிசிலனையில் இருப்பதைப் பத்திரிகையில் பார்த்ததாக எனக்குக் கவனம். எனவே இதைப் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழுவினிடத்திலே இதற்கு ஆலோசனை இல்லை என்று சொன்னேன். மாநில அரசினிடத்திலே அப்படிப்பட்ட ஆராய்ச்சி இருக்கிறது. டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அவர்களும் சிப் எஞ்சினியர், ஹைவேஸ் அவர்களும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பரிசிலனை செய்து இருக்கிறார்கள். அதைப்பற்றி டவுன் பிளானிங் டைரக்டர் அவர்கள், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் சர்குலர் ரயில்வே ஏற்படுத்த முடியுமா என்று பரிசிலனை செய்து அதைப்பற்றி ரயில்வே இலாகாவோடு தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் இன்னும் நடைமுறைக்கு வர நீண்டகாலம் ஆகும். ஆகவே அதுவரையிலும் காத்திராமல் எப்படி நம்முடைய அரசாங்கம் கூவத்தைச் சீரமைத்ததோ அதைப்போன்று பக்கிங்ஹாம் கால்வாயையும் சீரமைத்துப் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர் எடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அண்டர்கிரவுண்ட் ரயில் விடுவதுபற்றி



ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. பக்கிங்ஹாம் கால்வாயை தூர் எடுப்பதுபற்றியும் அதை அடுத்தே ஒரு பாதையைப் போடவும் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Have the Government completed the Cooum Canal Scheme?

MR. DEPUTY SPEAKER : That is not relevant.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியாகக் கேள்வி போடவும்.

*Overbridges for Madurai.*

* 226 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the construction of the two overbridges in Madurai City at the Railway level crossings have been completed; and

(b) if not, the probable date by which the works will be completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) சுப்பிரமணியபுரத்திலே கட்டப்படுகிற மேம்பாலம் விரைவிலே முடிவடையும். மீனாட்சி மில்லின் மேம்பால வேலை துரிதமாக நடைபெறுகிறது. 1973-ஆம் ஆண்டிற்குள் முடிவடையும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரையிலிருந்து விருதுநகர் போன்ற மற்ற இடங்களுக்குப் போவதற்கான பகுதிகளிலேதான் இந்த சுப்ரமணியபுரம் மேம்பாலமும், மீனாட்சி மில்மேம்பாலமும் இருக்கின்றன. இந்த வேலைகள் ஒரு ஆண்டுக்கு மேலாக நடக்கின்றன. ஆகவே இந்த வழியாகப் போக்குவரத்து நடக்காமல் வேறு வழியாகத்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த மேம்பாலங்களைக் கட்டி முடிக்க 1973-ஆம் ஆண்டு கடைசிவரை ஆகும் என்றால் இடைஞ்சல் ஆகத்தான் இருக்கும். ஆகவே இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகவாவது இந்த வேலைகளை முடித்துவிடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுப்ரமணியபுரம் மேம்பாலம் கிட்டத்தட்ட முடிவடைந்துவிடும் நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம். மீனாட்சி மில்ஸ் மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைக் கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம்.

திரு. த. சோலையா: இந்த மேம்பாலங்கள் கட்டப்படுவதால் இரண்டு தெருக்களில் உள்ள கடைகளுக்கு இடைஞ்சல் இருப்பதாக மகஜர் அனுப்பப் பட்டிருக்கிறது. இந்த மேம்பாலங்களுக்குகீழ் உள்ள இடத்தில் கடைகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே அப்படிக் கடைகளைக் கட்டினால் வாடகை மூலம் வருமானம் கிடைக்கும். அதைச்செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது ஒரு நல்ல ஆலோசனை. மேம்பாலங்களுக்குக் கீழே கடைகள் வைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

## Bridges

* 227 Q.—Thiru N. Dennis: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the proposals under examination for the improvement of Suchindram bridge on Nagercoil-Cape Comorin route?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேசிய நெடுஞ்சாலை எண் 47. திருவனந்தபுரம்–கன்னியாகுமரி சாலை மைல் 46/1-ல் உள்ள பாலத்தை சீர் அமைப்பதற்கான பணி 1972-73-ம் ஆண்டு நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் உள்ளது. பாலத்தின் அமைப்பும் திட்டப் பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அது ஒரு ஒடுங்கிய அகலமில்லாத பழைய பாலமாக இருப்பதால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே உடனடியாக அதைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த ஆண்டு அது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கணபதியான்கடவு, ஞாலாங்குளம் பாலம் போன்ற பல்வேறு பாலங்கள் சீரமைக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. இதுவரையில் அவையெல்லாம் கட்டப்படவில்லை. எனவே, இனிமேலாவது ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு பாலமாகவாவது எடுத்துக் கொண்டு முடிக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.



* 228 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வேலூர் காட்பாடிக்கு இடையே பாலாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலம், பலவீனமாகவும், பழையதாகவும் இருப்பதால், புதுப்பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடலூர்-சித்தூர் ரோட்டில் 119/2-5 மைலில் பாலாற்றின் குறுக்கே உள்ள பாலத்தை ரூ. 60 லட்சம் செலவில் திருத்தி அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த வேலை எப்பொழுது முடிவு அடையும் என்று அறிவிப்பார்களா? அதுகூட எஸ்டிமேட் தொகைக்கு மேலாக அதிகமாகச் செலவு செய்யப்பட்டால் அதற்காக வரி என்று போட்டு விடுகிறார்கள். எனவே அப்படி ஏற்பட்டால் எஸ்டிமேட் தொகைக்குள்ளாகவே பாலத்தை முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டெண்டர்கள் கேட்கப்பட்டு 17.64 சதவிதம் என்ற அளவிற்கு விடப்பட்டிருக்கிறது. எப்பொழுது முடிவு அடையும் என்ற விவரம் இல்லை.

* 229 வினா—திரு. சி. இராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புனவாசல்-ஓரியூர் சாலைகளை இணைக்க திருப்புனவாசல் அருகில் பாம்பாற்றின் குறுக்கே பாலம் ஒன்றினைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரிசீலனையிலுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மேம்பாலங்கள் கட்டுவதற்காக ஆகும் செலவிற்காகத் தனியாக ஸ்பெஷல் வரி போடுகிறார்கள், அதன் காரணமாக காருக்கு இவ்வளவு வரி, வண்டிக்கு இவ்வளவு வரி என்று போடுகிறார்கள். என்ன என்ன முறையிலே போடுகிறார்கள், எவ்வளவு காலைக்குப் போடுவார்கள், எந்த அடிப்படையிலே வசூலிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செலவு செய்யப்பட்ட தொகை வசூலிக்கப்படுகின்ற வரையில் அந்த டோல் வாங்கப்படும்.

### *Own Your House Scheme*

*230 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Housing Board to collaborate with the Life Insurance Corporation for the implementation of the 'Own Your House Scheme'; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) சொந்த வீடு கட்டும் திட்டம் என்று அழைக்கப்படும் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் திட்டம் ஒன்றை மாநில வீட்டு வசதி வாரியங்களின் மூலமாக நிறைவேற்றுவது குறித்து இந்த அரசின் கருத்துரைகளுக்காக இந்திய அரசு அனுப்பியுள்ளது. இந்த அரசின் கருத்துக்கள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அதன்படி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்குத் தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் மாநில வீட்டு வசதி வாரியங்கள் வீடுகள் கட்டி விற்பதற்கு வகை செய்வதற்காக அவற்றிற்கு இத் திட்டத்தின் கீழ் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடன்கள் வழங்கக் கருதியுள்ளது. வீட்டு வசதி வாரியங்கள் பெருநகரங்களிலும் அவற்றைச் சுற்றிலும் நகரியங்களை உருவாக்குவதற்கும் அங்குள்ள மனைகளையும், கட்டப்படும் வீடுகளையும் பொது மக்களுக்கு ஒதுக்குவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether the rate of interest charged by the L.I.C. is high and may I know whether L.I.C. is willing to finance the entire project of the Housing Board?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, வட்டி விதத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். இரண்டரை சதவிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. வட்டித் தவணை தவறினால் இரண்டரை சதவிதம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. வீட்டு வாரியத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லாத் திட்டங்களுக்கும் எல்.ஐ.சி. தருவது என்பது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அப்படிப்பட்ட எண்ணங்கள் பேச்சுவார்த்தையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that during the last 10 years or so, right from 1959 to 1972, only 10,000 houses have come up in the City of Madras and it is due to the high incidence and increase in annual valuation of houses and rate of property tax by the Corporation?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, 10 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய ஸ்டாட்டிஸ்டிக்ஸ் என்னிடத்திலே இல்லை, தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### *Loans for Tourism Development Projects*

*231 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Department of Tourism has issued loans for Tourism projects in this State for private parties; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:**

(a) No.

(b) Does not arise.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் எந்த நிலையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் ஒன்று இப்பொழுது அண்ணா நகரில் அண்ணா டவரில் கட்ட வீட்டு வசதி வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. தனிப்பட்ட முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, இந்த சுழலும் ஹோட்டல் என்பது குடை ராட்டினம் போல சுற்றுமா அல்லது தலைகீழ் ராட்டினம் போன்று சுற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அது கட்டப்பட்ட பிறகு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அதில் உட்கார வைத்துக் காட்டுகிறேன். அதுவரையில் அவர் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

### சூலூரில் சுற்றுலா இல்லம்

* 232. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூரில் சுற்றுலா இல்லம் ஒன்று கட்ட சூலூர் ஊராட்சியின் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, may I know on what basis the tourist bungalows are put up? Are they built in centres of pilgrimage or centres of other attractions? Have they any basis for putting up such tourist bungalows?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுற்றுலா மாளிகைகள், மக்களைக் கவரத் தகுந்த இடங்களில் கட்டப்படுகின்றன. உதாரணமாக, கோயில்கள் இருக்கும் இடங்கள், மலைவாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சியுள்ள இடங்கள் போன்றவற்றில் கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் மாவட்டத் தலைநகரங்களிலும் கட்டலாமா என்ற எண்ணம் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, சில முக்கியமான சுற்றுலா இடங்களில் உள்ள அந்த சுற்றுலா மாளிகைகளில் அநேகமாக இடம் கிடைப்பதில்லை. இதற்காக அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுற்றுலா மாளிகைகளில் ஓரளவுக்குத்தான் இடம் கொடுக்கமுடிகிறது. இப்பொழுது கூட உதகமண்டலத்தில் 100 பேர்கள் தங்கக் கூடிய அளவிற்கு கட்டப்பட்டு வருகிறது. அந்த அளவிற்கு எவ்வளவு பயணிகள் அந்த இடங்களுக்கு வருகிறார்கள் என்று பார்த்து அவர்களது வசதிகளைக் கவனிக்கத் தக்க அளவிற்கு சுற்றுலா வாரியம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, in these tourist bungalows, will the M.L.As. and M.Ps. be given priority whenever they go and want to occupy?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இது நாட்டிற்கு வருகின்ற பயணிகளுக்குத்தான். எம்.எல்.ஏ.க்கள் அநேகமாக பயணம் போவதில்லை என்று கருதுகிறேன்.

### புதிய பேருந்து வழித்தடங்கள்

* 233. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் ஆண்டில் எந்தெந்த புதிய ரூட்டுகளில் புதிதாக பஸ்கள் விடப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** விடை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டில் புதிதாக விடப்பட்டு வரும் பல் ரூட்டுகளை அறிவிக்க இயலுமா? மாயவரம் தொகுதி மக்களின் சார்பாகவும், தஞ்சை மாவட்டத்து மக்களின் சார்பாகவும் அடிக்கடி மாயவரத்திலிருந்து பஸ்கள் விடப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் சொன்னபோதெல்லாம், பெரும்பாலும் கடலூரிலிருந்து பழனி, கடலூரிலிருந்து மதுரை என்று இப்படித்தான் விட்டுக்கொண்டு வருகிறார்கள். எனவே மாயவரத்தை ஒரு முக்கிய ஊராகக் கருதி, அது ஃபர்ஸ்ட் கிரேட் ஊர் என்ற அடிப்படையிலாவது அங்கே டெப்போ ஏற்படுத்தி அங்கிருந்து பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டில் புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் பட்டியல் இங்கு தரப்பட்டிருக்கிறது. 1972-73-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் இனிமேல்தான் அவைகளையெல்லாம் தருவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாயவரத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கு விரைவுப் பேருந்துகள் விடப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள். நல்லவேளையாக அவர் பன்ருட்டியிலிருந்து கோயம்புத்தூர், பன்ருட்டியிலிருந்து மற்ற இடங்களுக்கு என்று சொல்லாமல் விட்டது பாராட்டத் தக்கது. ஆனால் புதிய பஸ்கள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் அவைகளுக்கு இடையிலே உள்ள போக்குவரத்தைக் கணக்கிட்டு அதன்மூலம் புதிய வழித்தடங்களில் அரசாங்கப் போக்குவரத்தை மேற்கொள்கிறோம். உறுப்பினரவர்கள் ஏற்கனவே தெரிவித்த யோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.

---

@ 498-449-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, துரிதப்போக்குவரத்து வண்டிகள் சிலயிடங்களில் 12 மைல்களுக்கு ஒரு தடவை நின்று செல்கிறது. திருபுவனம் போன்ற 12 மைல்களுக்குள் உள்ள இடங்களில் நிற்காமல் இருக்கிறது. குறைந்த பட்சம் எத்தனை மைல்களுக்கு இடையில் நிற்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அப்படி ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்திலே பயணிகள் அதிகமாகப் பேருந்துகளில் ஏறுவார்கள் என்று கணக்கில் தெரிந்தால் அந்த இடங்களில் அந்த விதிக்கு விலக்காக அங்கே நிறுத்துகின்ற முறை கையாளப் படுகிறது. திருபுவனத்தைப்பற்றி உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். திருபுவனத்தில் எத்தனை பேர் ஏறுகிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 17 வழித்தடங்களில் 40 பஸ்கள் விடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய பஸ்கள் விடப்படும் இடங்களில் நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. அதற்கு அடிப்படைக் காரணம் ஆம்னி பஸ்கள் தான் என்பது உண்மையா? அப்படியென்றால் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது? இந்த ஆம்னி பஸ்களைத் தேசிய மயமாக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நம்முடைய விரைவு பேருந்துகள் ஓடும் வழித்தடங்களில் ஆம்னி பஸ்கள் ஓடுவது உண்மை. அவற்றினால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் நம்முடைய விரைவுப் பேருந்துகளின் மூலம் வாரம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்பார்க்கிறோம். இப்பொழுது 9 லட்சம் ரூபாய் அளவில் நமக்கு வருமானம் வருகிறது. ஆகவே வருமானம் என்று கணக்கிடும்பொழுது வாரம் ஒன்றுக்கு 1 லட்சம் என்ற கணக்கில் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் வருவாய் குறைகிறது என்று சொல்லலாம். தேசியமயமாக்கும் திட்டத்தைப் பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 5 ஆண்டுகளில் எல்லாப் பேருந்துகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆம்னி பஸ்கள் அவைகளுக்கு விதிவிலக்கு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், 5 ஆண்டுகளில் பஸ்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால் இனிமேல் புதிய வழித்தடங்கள் தனியாருக்குக் கொடுக்கப்படுமா, கொடுக்கப்படாதா? இருக்கும் வழித்தடங்களில் அடிஷனல் பஸ்களை விடுவதற்கு தனியார்களுக்கு அனுமதி கொடுப்பார்களா?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் சட்டம் வரும் வரையில் காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இப்பொழுது அரசாங்கம் நடத்தக் கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்களை அதிகம் பயணிகள் பயன்படுத்துகிறார்கள், சென்னை, மதுரை, நாகர்கோயில் போன்ற இடங்களில். ஆம்னி பஸ்கள் சம்பந்தமாக ஹைகோர்ட் கொடுத்த தீர்ப்பு அரசாங்கத்திற்குப் பாதகமாகி விட்டிருக்கிறது. எனவே அதைப் பரிசீலனை செய்து அந்த ஆம்னி பஸ்கள் உண்மையிலேயே எந்த நோக்கத்திற்காக விடப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு அப்பால் அவர்கள் விடக்கூடிய நிலையைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்து தெரிவித்ததைப்போல உயர்நீதிமன்றம், ஆம்னி பஸ் விடலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் முழு விவரம் நமக்கு இன்னும் வரவில்லை. ஆனால் அந்தத் தீர்ப்பிலேயேகூட ஆம்னிபஸ் என்ற நோக்கத்திற்காக அவர்கள் பயன்படுத்தினால் அப்பொழுது தான் விடலாம் என்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இருப்பதாகப் பத்திரிகைகளில் நான் பார்த்தேன். அதையே சாதாரண பஸ் மாதிரி பயன் படுத்தினால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் இருக்கிறது. எந்தெந்த வகையிலே தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைபற்றி அந்த நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு கிடைத்தவுடன் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Transport whether there is any proposal to start a new bus route from Nagercoil to Bangalore via Hosur?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அண்மைக் காலத்தில் மைசூர் மாநிலத்தோடு நம்முடைய தமிழ்நாடு ஒரு நல்ல ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறது. வேண்டுமானால் இந்த ரூட் பற்றியும் அவர்களிடத்தில் கலந்து இந்த முயற்சியை மேற்கொள்ளலாம்.

[1972 ஆகஸ்ட் 21

*234. வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கும், கள்ளக்குறிச்சிக்கும் இடையே திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை, திருக்கோவிலூர், மணம்பூண்டி, சங்கராபுரம் வழியாக அரசு விரைவுப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ந. தருமலிங்கம்: தலைவரவர்களே, இந்தப் பெருந்து வழித்தடத்தில் தனியார் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இனிமேலாவது அரசாங்கம் விடுவதற்கு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடலாம் என்றுதான் அரசாங்கம் யோசனை செய்தது. ஆனால் அண்மைக்காலத்தில் 150 மைல்களுக்கு உள்ளான பகுதிகளிலிருந்து சாதாரண பேருந்துகளில் செல்வதையே விரும்புகிறார்கள், விரைவுப் பேருந்துகளில் பயணக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற உணர்வு இருப்பதால், கூடியவரையில் நீண்ட தூரங்களுக்கே விரைவுப் பேருந்துகள் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இப்பொழுது தனியார் விடுகிறார்களா என்பதைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் சாதாரண லிமிடெட் ஸ்டாப் சர்வீஸ் விடலாம் என்று யோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன்: முதலையில் இருந்து பங்களூருக்கு பஸ்விட கோரிக்கை இருந்தது. அமைச்சர் அவர்கள் கூட பெங்களூரில் இதைப் பற்றிப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. இந்த பஸ் சர்வீஸ் எப்பொழுதாகத் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமக்கு பஸ் வண்டிகள் கிடைத்தவுடன் அந்த சர்வீஸ்கள் துவங்கப்படும்.



1972 ஆகஸ்ட் 21]

*235. வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலிருந்து அவிநாசி, திருப்பூர், வெள்ளக்கோயில், தென்னிலை, சின்னதாராபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி வழியாக திண்டுக்கல் வரை அரசு பேருந்து தடம் ஒன்று திறக்க செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இத்தடம் எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த வழித் தடத்தில் இருப்புப் பாதை இல்லாத காரணத்தாலும் மேலும் இந்த நீண்ட அளவு தூரத்திற்குத் தனியார் போக்குவரத்து ஏற்பாடு செய்ய முடியாது என்ற காரணத்தாலும் அந்தப் பகுதி விவசாயிகளும், வணிகர்களும் மிகுந்த சிரமப்படுகிறார்கள் என்ற காரணத்தால் இதைப் பற்றி அருள்கூர்ந்து கவனித்து இனியேலாவது இந்தத் தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த வழித் தடத்தைப் பொறுத்த வரை சுற்றிச் செல்லுகிற வழித்தடம் என்று சொல்லி இருக்கிறார்கள். கோவைக்கும் திண்டுக்கல்லுக்கும் பல்வேறு வழிகளில் ஏராளமான விரைவுப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சுற்றிச் செல்லுகின்ற வழித் தடத்தை ஏற்படுத்தினால் கட்டணமும் அதிகமாகும், நேரமும் அதிகமாகும், போதிய வருமானமும் இருக்காது என்ற காரணத்தால் இப்போது அது வேண்டாமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அமைச்சர் அவர்கள் இத் தடம் சுற்றிச் செல்லும் தடம் என்று சொன்னார்கள். இருந்தபோதிலும் பல கிராமங்களையும் போதுமான போக்குவரத்து இல்லாத பகுதிகளையும் இணைக்கக்கூடிய திட்டமாக இருக்கும் காரணத்தால் கிராம மக்களுக்குப் பலன் தரும் முறையில் அரசு இதை அனுதாபத்துடன் கவனித்து ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல் விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை முக்கிய நகரங்களோடு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலைகளையும் இணைப்பதில்தான் முன்னுரிமை தரப்பட்டிருக்கிறது. கிராமங்களைப் பொறுத்தவரை சாதாரண பஸ்களை விடுவதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.

**திரு. த. சோணையா:** பெரிய நகரங்களுக்கிடையே பஸ் தொடர்பு இருக்கிறது. குக்கிராமங்களில் இருப்பவர்கள் நகரப் பகுதிகளுக்கு வர கஷ்டமாக இருக்கிறது. ஆரம்பத்திலே அடங்கிய மினி பஸ்களை கிராமப் பகுதியில் விட்டு கிராம மக்களுக்கு நன்மை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கிராமங்களைப் பொறுத்தவரையில் பஸ்ஸை ஆதரிக்கின்ற வகையில் அரசாங்கம் திட்டத்தை மேற்கொண்டது. ஆனால் அது லாபத்தைத் தருவதாக இல்லை. அது பெரிய ரோடில் ஓடுவதாகும். அன்றைக் காலத்தில் சென்னையில் ஓடுகின்ற மினி பஸ்களை வாங்கி இருக்கிறோம். பதியிலே ஒன்றிரண்டு வாங்கி பரிசோதித்துப் பார்த்த பிறகு கிராமப்புறங்களுக்குப் பயன்படுத்தலாமா என்பதைப் பற்றி அரசாங்கப் போக்குவரத்துத் துறை பரிசீலித்து வருகிறது. முதலில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் அந்த மினி பஸ்ஸை வாங்குவதாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் உயர்நிலைப்பள்ளியில் போலீஸ் நுழைந்து மாணவர்களை அடித்ததாகக் கூறப்படுவது குறித்து

MR. SPEAKER: The hon. Member, Thiru J. James, has given notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the following adjournment motion to discuss a matter of urgent public importance, viz..—

'That on 17th August 1972 the Police entered into Class rooms of St. John's High School at Palamcottah without the permission of the Headmaster and beat the students indiscriminately with lathis. Large number of students in Standards VI, VII and VIII were subjected to lathi charge and some of them were admitted in Hospitals. The school is consequently closed indefinitely and very serious situation has developed in Palamcottah and Tirunelveli following the said incident.'

The hon. Member, Thiru K. Suppu, has also given notice of a similar motion.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கழிந்த இரண்டு ஆண்டுகளாக பாளையங்கோட்டைப் பகுதியிலுள்ள மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி பற்றி இந்த மன்றத்திலே பல தடவை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றாகத் தெரியும். கழிந்த 17—8—1972 அன்று வருந்தத்தக்க நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக, போலீஸ் அதிகாரிகள் செயின்ட் ஜான் உயர்நிலைப் பள்ளி காம்பவுண்டுக்குள் சென்றது மட்டுமல்ல, மாணவர்கள் படித்துக் கொண்டிருந்த அறைகளுக்குள்ளே சென்று ஆறு, ஏழு, எட்டாவது படிக்கும் மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக அமைச்சர் அவர்கள் அது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதை ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு மூலகாரணமாகக் கூறப்படுவது, இதற்கு முன்னதாக சில நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்றிருக்கின்றன. விவசாயப் போராட்டத்தின்போது இந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்ததாகவும், அந்த வழியாகச் சென்ற ஒரு பஸ்ஸை நிறுத்தியதாகவும் அது சம்பந்தமாக சிறிய கலவரம் நடைபெற்றதாகவும், அதையொட்டித்தான் இந்த நிகழ்ச்சியும் நடைபெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை.

ஏனென்றால், அந்தப் பள்ளி தலைமையாசிரியர் அவர்கள்தான் போலீசை வரவழைக்கவில்லை என்று பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். தலைமையாசிரியர் அனுமதியின்றி போலீஸ் அதிகாரிகள் பள்ளிக்கூடத்தில் வகுப்பறைகளில் நுழைந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டச் செல்லவில்லை என்பதை நிச்சயமாக எடுத்துக்காட்டி இந்த அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சியையொட்டி பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. கடந்தமாதம் 5-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தப்பள்ளி மாணவர்கள் மட்டுமல்லாது அந்தப் பள்ளியைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களும் வெளியே உலாத்தக்கூட முடியாத நிலையில் மாணவர்களை வெளியில் உள்ளவர்கள் தாக்குகின்ற சூழ்நிலை அங்கு நிலவி இருந்தது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்றதற்கு அரசியல் காரணம் கற்பிக்கக்கூடிய அளவுக்கு நடந்திருக்கிறது. ஒருவேளை தலைமையாசிரியர் போலீஸ் உதவி வேண்டு

மென்று கேட்டு போலீஸ் அதிகாரிகள் சென்றிருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் சென்றதை ஜஸ்டிபை செய்யக்கூடிய நிலைமையில் அவர்கள் பேச முடியும். தலைமையாசிரியர் விருப்பத்திற்கு மாறாக போலீஸ் அதிகாரிகள் அங்கே சென்றிருக்கிறார்கள். குறிப்பாக, ஆறு, எழு, எட்டு வகுப்புகளில் படிக்கும் மாணவர்களை, 10, 11, 12, வயது வந்த மாணவர்களைத்தான் போலீசார் வகுப்பிற்குள் நுழைந்து லத்தி சார்ச் செய்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்தச் செயலை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜேம்ஸ் அவர்கள் எப்படி இது அரசாங்க நிர்வாகத்தின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு வருகிறது என்பதைப் பற்றி மட்டும் விளக்க வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** போலீசால் தாக்கப்பட்ட மாணவர்கள் இன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Not about the history... இது எப்படி அரசாங்க நிர்வாகத்தின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு வரும் என்பதைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டும். இந்தத் தீர்மானத்தை அனுமதித்த பிறகு பேச வேண்டிய விஷயங்களை எல்லாம் இப்போது பேசக் கூடாது. இதிலே அரசாங்கத்தின் பொறுப்பு என்ன, அதிலே என்ன தவறு செய்து விட்டது, அன்றாட நிர்வாக நடவடிக்கைகளுக்கு எப்படி அப்பாற்பட்டது என்பதைப் பற்றி மட்டுந்தான் பேச உரிமை உண்டு.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த நிலையில் மாணவர்களிடையே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்குப் பதிலாக சட்டத்தையும் ஒழுங்கையும் மீறக்கூடிய வகையில் வன்முறை நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் அனுமதி தரக்கூடாது என்பதைப் பற்றி விவாதிக்க இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

ஆகவே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை எல்லாம் ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெரிய சூழ்நிலை மாணவர்கள் . . . .





MR. SPEAKER : The hon. Member should only explain how it comes under an adjournment motion.

**திரு. க. சுப்பு :** தமிழகத்தில் மாணவர்களைப் பொறுத்தவரை அமைதியாகக் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை இல்லை. கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் சென்றிருக்கக்கூடிய பிள்ளைகள் கற்றுத் திரும்வார்கள் என்ற நிம்மதியும் பெற்றோர்களுக்கு இல்லை. அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். கல்வி கற்றுத்தரும் கல்விக் கூடங்களைக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கும் மோசமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மாணவர்களுடைய ஒழுக்கையும், கட்டுப்பாட்டையும் காப்பாற்றக்கூடியவர்கள் ஆசிரியர்கள். அதிலே பொறுப்பு இல்லாமல் காவல் துறையினர் இடையிலே நுழைகிறார்கள். தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் . .

MR. SPEAKER : I am not going to permit the hon. Member. இது பாளையங்கோட்டை செயின்ட் ஜான் பள்ளியைப் பொறுத்தது. இதிலே அரசாங்கத்தின் பொறுப்பு என்ன, அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதைப் பற்றி மட்டுமே பேசவேண்டும்.

**திரு. க. சுப்பு :** எப்படி அரசாங்கம் தவறிவிட்டது என்பதைச் சொல்வதற்காகத்தான் வருகிறேன். கல்லூரிக்குள்ளே காவல்துறையினரும் மற்ற காலிகளும் உள்ளே நுழைந்து அந்தப் பொறுப்பை கையில் எடுத்துக் கொள்ளும் முறையில் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் நிம்மதியாகக் கற்று வீடுதிரும்ப முடியுமா என்ற ஐயப்பாடு தமிழகத்தில் உள்ள பெற்றோர்களின் மனதில் ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். பாளையங்கோட்டையில் தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர்களும் அங்குள்ள காவல்துறையினரை உள்ளே அழைக்கவில்லை, எழுதிக் கொடுக்கவில்லை, அவர்களாகவே அப்படி வந்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பள்ளி தலைமை ஆசிரியர் அப்படி வேண்டாமென்று சொல்லியிருப்பதையும் மீறி காவல் துறையினர் உள்ளே நுழைந்து பள்ளி சிறுவர்களை கண்டபடி தாக்கி, மாணவர்களை அவர்கள் வகுப்பறைகளில் சென்று அடித்துத் தாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் மாணவர்களை அவர்கள் பெற்றோர்கள் பள்ளிகளுக்கு அனுப்ப அஞ்சுவார்களா, இல்லையா என்பதை சற்று சிந்திக்க வேண்டும். இதற்கு முன்னாலே பல்கலைக் கழகத்திலிருந்து கல்லூரிக்கு வந்து இப்போது உயர்நிலைப் பள்ளிக்கு வரக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் கல்விச் சூழ்நிலை விரிவடைந்து வருகிறது.

[திரு. க. சுப்பு] [1972 ஆகஸ்ட் 21

இப்படி காவல்துறையினர் அனுமதியின்றி கல்லூரி அல்லது பள்ளிக்குள் நுழைவது சரியா என்பதை சிந்திக்கவேண்டும். மாணவர்கள் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடாது என்று ஒரு அமைச்சர் கூறியிருக்கிறார்கள். வீட்டில் பெற்றோர்கள் இருப்பதைப் போல் நான் இங்கு அமைச்சராக இருக்கிறேன். வீட்டுச் சொத்தை பிள்ளைகள் அடித்து உடைத்து விட்டால் பெற்றோர்கள்தான் வாங்கித் தரவேண்டிய நிலைமை இருப்பது போல் இங்கு நீங்கள் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தால் மக்கள் வரிப்பணத்திலிருந்து, மக்கள் வரிப்பணத்திலிருந்துதான் அதை சரிசெய்ய வேண்டிவரும், ஆகவே இப்படிச் செய்யாதீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக அப்படிப் பெரியவர் ஸ்ரீ. என். கோவிந்தன் நாயர் அவர்கள். தம்முடைய அமைச்சர்கள் அப்படிப்பட்ட அறைகூவலை அந்த முறையில் சொல்லவேண்டும். மாணவர்கள் பிரச்னைகளைச் சமாளிப்பதில் வெற்றியால் தாக்கக்கூடிய ஒரு முறையைக் கையாளமாட்டோம். காவல்துறையினர் பள்ளித் துறையில் காலடி வைத்து ஆக்கிரமித்துக் கொள்ளாத வகையில் சிந்தித்தும் செய்யக் கூடிய முறையில், மாணவர்கள் பள்ளிக்குச் சென்று நிம்மதியாக பயின்று வீடு திரும்ப முடியும் என்ற ஒரு நிலையை உருவாக்கித்தான் கல்வித் துறையில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட முடியும் (மணியடிக்கப்பட்டது). முடித்துக் கொள்கிறேன். அந்த முறையில் இதைப்பற்றி நான் விவரித்தால் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தமுடியும் என்று கூறி, இதைப்பற்றி விவாதிக்க இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று [illegible] அனுமதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இந்தத் தீர்மானத்திற்கான காரண-காரிய விளக்கங்களை விட குற்றச்சாட்டுக்களைச் சொல்வதில் அவர்கள் நேரத்தை செலவழித்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் 32,000 சில்லறை துவக்கப் பள்ளிகளும், 2,600 சில்லறை உயர்நிலைப் பள்ளிகளும், 169 கல்லூரிகளும் இருக்கின்றன. ஒன்றிரண்டு இடங்களில் நடைபெறுகிற சிறு தகராறுகளை வைத்துக்கொண்டு தமிழகத்தில் கல்வி முறையே கெட்டுவிட்டது என்றும், மற்ற மாநிலங்களில் உள்ள சூழ்நிலை சரியாக இருக்கிறது என்றும் எடுத்துச் சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்பதை இந்த மன்றத்தில் தெளிவாக உணருகிறவர்கள் தெளிவாக உணருவார்கள்.



1972 ஆகஸ்ட் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த நிலைமை இப்போதுதான் ஏற்படுகிற நிலைமை அல்ல. 32,000 சில்லறை துவக்கப் பள்ளிகளுக்கு மாணவர்களைப் பெற்றோர்கள் அனுப்ப இயலாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டினை யாரும் சொல்லமுடியாது. சிலவிடங்களில் எதிர்பாராத வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடுகின்றன. திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளிக்கும் காவல்துறையினர் சென்று கலகம் விளைவிக்கவேண்டும் என்ற நோக்கமும் கிடையாது. கொள்கையும் கிடையாது, அதனால் லாபமும் கிடையாது. அதனால் எந்தவிதமான பலனும் கிடையாது. குறிப்பிட்ட பள்ளியில் எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததன் காரணமாகக் காவல்துறையினர் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள புனித யோவான் உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 1,200 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். பள்ளியின் தலைமை ஆசிரியராக இருக்கும் திரு. ஜான் ராஜநாயகம் இவ்வாண்டுதான் இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்று பணியாற்றி வருகிறார். காலை வகுப்புகளை 9 மணியிலிருந்து தொடங்குவதை மாற்றி 10 மணியிலிருந்து தொடங்கும்படியும், பள்ளி மாணவர்கள் கூட்டத்தை வாரத்திற்கு ஒருமுறைதான் நடத்தவேண்டும் என்று கோரியும் பள்ளி அலுவலக ஊழியர்கள் மாணவர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து 24—7—1972 அன்று காலை மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்தினார்கள். வகுப்புகளுக்குச் செல்லாத மாணவர்கள் ஊர்வலம் ஒன்றையும் நடத்தினார்கள். இரண்டு நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டு 24—7—1972 அன்று பள்ளி மூடப்பட்டது. 26—7—1972 அன்று பள்ளி திறக்கப்பட்டது. எனினும் அன்றைய தினமும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்தினார்கள். மாணவர்கள் கல்வீச்சில் இறங்கிவிட்டார்கள். அன்றைய தின கல்வீச்சில் பள்ளியின் கண்ணாடி சன்னல்களும், மின்சார விளக்குகளும் சேதப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து பள்ளி காலவரையறையின்றி மூடப்பட்டதாகத் தலைமை ஆசிரியரால் அறிவிக்கப்பட்டது.

7—8—1972 அன்று பள்ளி மீண்டும் திறக்கப்பட்டது. ஆனால் மாணவர்களின் நிலையில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. அதனால் 7—8—1972 அன்றே பள்ளி மீண்டும் மூடப்பட்டதாகத் தலைமை ஆசிரியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போலீஸ் நுழைந்து மாணவர்களை அடித்ததாகக் கூறப்படுவது குறித்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஆகஸ்ட் 21

அதற்குப் பின்னர் 17—8—1972 அன்று பள்ளி திறக்கப்பட்டு அமைதியாக நடந்துள்ளது. அடுத்த நாள் 18—8—1972 அன்று காலை 10 மணிக்கு பள்ளி திறக்கப்பட்டவுடன் மாணவர்களில் ஒரு பகுதியினர் வகுப்பிற்குச் செல்லாமல், வகுப்புகளில் இருந்த மாணவர்களை நோக்கி கற்களை வீசினார்கள். தலைமை ஆசிரியர் திரு. ஜான் ராஜநாயகம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று கோஷமிட்ட அந்த மாணவர்கள் பள்ளி கட்டட வளாகத்திற்குள் அமைந்திருக்கும் தலைமை ஆசிரியரின் வீட்டையும் தாக்கி பொருள்களைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். பள்ளி வகுப்பு அறைகளிலிருந்த மாணவர்கள் வெளியேயிருந்து கற்களை வீசிய மாணவர்களின் மீது கற்களை வீசத் தொடங்கினார்கள். நிலைமை இவ்வாறு பெரிதாகிக்கொண்டே போகவே தலைமை ஆசிரியர் உள்ளூர் காவல்துறை உதவிக்கண்காணிப்பாளருக்குத் தொலைபேசியில் தகவல் அறிவித்து, பாதுகாப்பு கோரினார்.

பத்திரிகைச் செய்தி தொலைபேசி மூலம் இருக்கிற நிலை சம்பந்தமாக உதவிக்கண்காணிப்பாளருக்கு செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் எழுத்து மூலம் தெரிவிக்கவில்லை என்று விசாரித்தபோது சொல்லியிருக்கிறார்கள். செய்தி வராமல் காவல்துறையினர் அங்கு செல்லவில்லை.

உதவிக் கண்காணிப்பாளர் தலைமை ஆசிரியரை சந்தித்து பள்ளியினுள் காவல்துறையினர் நுழைவதற்கு எழுத்தில் அனுமதி பெறுவதற்காகச் சென்று கொண்டிருக்கும் தருவாயில், மாணவர்கள் காவல்துறையினர் மீதும் கற்களைக் கொண்டு தாக்கத் தொடங்கினார்கள். அவர்களைக் காவல் துறையினர் விரட்டி கலைந்து போகுமாறு செய்தார்கள். புனித யோவான் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்துகொண்டு கற்களை வீசியிருக்கிறார்கள். மாணவர்களின் கல்லெறிதலில் உதவி கண்காணிப்பாளர் ஒருவர், 3 ஆய்வாளர்கள் உள்பட, மொத்தம் 10 காவல் துறையினர் காயமடைந்தார்கள். கலவரத்தில் 9 மாணவர்கள் காயமடைந்தார்கள். நான்கு பேர்கள் பாளையங்கோட்டை மருத்துவமனையில் அகப்பிணியாளர்களாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 5 பேர்கள் புறப்பிணியாளர்களாக சிகிச்சை பெற்று திரும்பியிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மட்டுமல்லாமல் கல்லூரி மாணவர்களும் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். சேதத்தின் மதிப்பு சுமார் 800 என்று கூறப்பட்டிருக்கிறது. மூன்று வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. பள்ளியின் நிர்வாகத்தில் சற்றுக் கடினமான போக்கினைக் காட்டிய தலைமை ஆசிரியரை விரும்பாத சில மாணவர்களின் போராட்டமே பெரிய உருவெடுத்து இன்று பள்ளி மூடப்பட வேண்டிய நிலைக்குக் கொண்டு



பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போலீஸ் நுழைந்து மாணவர்களை அடித்ததாகக் கூறப்படுவது குறித்து

1972 ஆகஸ்ட் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சென்றிருக்கிறது என்றும் மாணவர்களின் இந்தப் போராட்டத்திற்குப் பள்ளியில் பணியாற்றுகிற சில ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் இருந்து வந்திருக்கிறது என்றும் அறியப்படுகிறது. வேறு எந்த அரசியல் காரணமோ அல்லது அரசியல் கட்சிகளோ அல்லது வேறு நிலையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இது அன்று மட்டும் நடைபெற்ற போராட்டம் அல்ல. மூன்று நான்கு முறை நடைபெற்று பள்ளி மூடப்பட்டு மறுபடியும் திறந்து, மறுபடியும் மூடப்பட்டு மறுபடியும் திறந்து, மேலும் தலைமை ஆசிரியர் வீட்டுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

காவல் துறையினர் பள்ளி அல்லது கல்லூரிக்குள் எப்போதுமே நுழையவேண்டாம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கச் சொன்னால் அதைச் செய்ய இந்த அரசு தயாராயிருக்கிறது. ஆனால் அத்துமீறிய விளைவுகள் ஏற்படும்போது காவல்துறையினர் சென்று பாதுகாத்துத்தான் தீரவேண்டும் என்ற முறையை அரசு மேற்கொள்ளாமல் இருக்கவும் முடியாது. உள்ளேயே நுழையக் கூடாது என்று சொல்லமுடியாது. ஒரு பள்ளி அல்லது ஒரு கல்லூரியில் ஒரு கொலை நடந்தாலும் அப்போது எழுத்துமூலம் வந்த பிறகு தான் உள்ளே செல்லவேண்டும் என்ற அளவிற்குக் காவல்துறையினர் இருக்க முடியாது. இப்போதுள்ள சட்டம் என்ன சொல்கிறது என்றால் அமைதியான சாதாரண சூழ்நிலையில் காவல்துறையினர் பள்ளி தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் அனுமதி பெறாமல் உள்ளே போகக்கூடாது. ஆனால் அத்துமீறி அசம்பாவிதங்கள் போன்றவை நடைபெறும்போது அப்போதும் கூட தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் அனுமதி பெறுவதற்கு வேலிக்குப் பக்கத்தில்தான் அல்லது வெளியில்தான் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால் எல்லை அசம்பாவிதங்கள் நடைபெறக்கூடும். அவர்கள் தொலைபேசியில் கூறியபிறகுதான் உதவிக் கண்காணிப்பாளர் சென்றிருக்கிறார். தனிப்பட்ட இடமாகயிருந்தாலும் சரி அல்லது தனி மனிதனாக இருந்தாலும் சரி அல்லது பொது இடமாகயிருந்தாலும் சரி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு காவல்துறையினருக்கு இருக்கிறது. அங்கு மாணவர்கள் போராட்டங்கள் நடைபெற்றதனுடைய தொடர்ச்சிதான் இது. இப்போது அந்தப் பள்ளி மூடப்பட்டிருக்கிறது. அங்குள்ள பெரியவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றவர்கள் எல்லாம் சமாதானப்படுத்த, அமைதியை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசும் தன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பணிகளைச் செய்து கொண்டு வருகிறது.

ஆகவே இதுகுறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அமைதியான முறையில் பள்ளிகளை விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகளைக் கல்வித்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கூறி இந்த அவை அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இவ்வளவு பெரிய விளக்கத்திற்குப் பிறகு, இத்தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) கவன ஈர்ப்பு.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் பூந்துறை, இறைமாந்துறை ஆகிய இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டது குறித்து

MR. SPEAKER: The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance namely, the sea erosion in many parts of Kanyakumari district, namely, Poonthurai, Eraimanthurai, Enayam, Midalam and others during June-July 1972.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, 1972 ஜூன்-ஜூலை திங்களில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரையோரக் கிராமங்களில் சில, கடலரிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன என்றும் மேல மிடாலம், இனையம், எராமந்துறை, பூந்துறை கிராமங்களில் 62 குடிசைகளும் கல்வீடு ஒன்றும் நீரில் அடித்துச்செல்லப்பட்டன என்றும் அரசுக்கு அறிக்கைகள் வந்துள்ளன. பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டுள்ள பாதுகாப்புப் பணிகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் உயிர்ச்சேதம் எதும் இல்லை.

மணல் மூட்டைகளை அடுக்கிவைப்பதன் மூலம் இக்கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகத் தாற்காலிக நடவடிக்கைகளைப் பொதுப்பணித் துறையும் வருவாய்த்துறையும் எடுத்துள்ளன.





கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காப்பு வேலைகளின் விவரங்கள் கீழ்வருமாறு:—

(1) **மிடலாம் துறை**:—கரை நெடுக 3,300 அடி நீளத்திற்கு ரூ. 89,500 செலவில் இரண்டு வரிசை பனை மரக்கம்பங்கள் நடப்பட்டு அவற்றிற்கிடையே கருங் கற்கள் போடப்பட்டுள்ளன.

(2) **எரமாந்துறை**:—2 அடி இடைவெளிவிட்டுப் பனைமரங்கள் நடப்பட்டுள்ளன. சிமிட்டி கான்கிரீட் பாளங்கள் இந்தப் பனை மரங்களுக்கிடையில் போடப்பட்டுள்ளன. இவ்வாறு மூன்று அடுக்கு நீர் அரிப்புத் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி 1971-ஆம் ஆண்டில் முடிக்கப் பட்டது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 85,056.

(3) **பள்ளம் துறை**.—கடற்கரை நெடுக 450 மீட்டர் நீளத்திற்கு கல்கட்டுமானத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 99,000. இச்சுவர் 1971-ல் கட்டப்பட்டது.

(4) **மேல மணக்குடி**.—பழையாறு முகத்துவாரத்திலிருந்து கடற்கரையின் மேற்கு அலைத்தடுப்புச் சுவர் மீது 335 அடி நீளத்திற்கும் கடற்கரையின் தெற்குப் பக்கம் நெடுக 100 அடி நீளத்திற்கும் 5 கன அடி பரிமாணத்திற்குக் குறையாத 2,000 பெரிய கற்கள் போடப்பட்டுள்ளன. ரூ. 47,200 செலவில் நிறைவேற்றப்பட்ட இப்பணி 1971-ல் முடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் கடற்கரை முழுவதிலும் கடல் அரிப்பைத் தடுக்க தகுந்த முறைகளை வகுப்பதற்காகப் பொதுப்பணித்துறையில் பூண்டி பாசன ஆராய்ச்சி நிலையத்தில் சிறப்பு உட்கோட்டம் ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆய்வுப்பணியை மேற்கொள்ளும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும் மாதிரி ஆய்வுகளை நடத்துவதும் இச்சிறப்புப் பிரிவின் பணிகளாகும். இந்த ஆய்வுப்பணியை விரைவுபடுத்துவதற்காகத் தமிழ்நாடு கடற்கரை நெடுக விமான மூலம் ஆய்வு செய்ய வகை செய்யும் செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிலையான ஏற்பாடாக தமிழ்நாட்டில் அரபிக்கடற்கரை நெடுக கடற்சுவர் ஒன்றைக்கட்டுவது குறித்த செயற்குறிப்பிற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். டென்னிஸ்:** சார், கன்னியாகுமரி மாவட்டத்தின் கடலோரத்தி லுள்ள சில கிராமங்களில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளன. அது கடல் அரிப்பிற்கு நிரந்தர பரிகாரம் காணக்கூடியதாக இல்லை. மிடாலம் போன்ற இடங்களில் கட்டப்பட்டிருக்கும் தடுப்புச் சுவர்கள் கடல் அரிப்பிற்கு

[திரு. என். டென்னிஸ்] [1972 ஆகஸ்ட் 21

இரையாகிவிட்டது. கேரளாவில் நீண்டகரை போன்ற இடங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலுக்குள் கல்லை அடுக்கி கடல் அரிப்பை நிறுத்த முடியும் என்று பரிகாரம் கண்டிருக்கிறார்கள். அது போன்ற நடவடிக்கைகளால் தான் நிரந்தரப் பரிகாரம் காண முடியும் என்பதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடலால் சூழப்பட்டிருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராமங்களை கடல் அரிப்பிலிருந்து நிரந்தரமாகத் தடுப்பதற்கு இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/72) (கூட்டாய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு)

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

விவசாயிகள் அல்லாத குறைந்த வருவாய்த் தொகுதியினர்க்குக் கடன் கொடுத்திருப்பவர்கள் வாங்கும் அநியாய வட்டியினால் அவர்களது கடன் சுமை நாளுக்கு நாள் பெருகிவருவதன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைக் களைவதற்கென இந்தச் சட்ட வரைவு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இப்பேரவை அறியும்.

இச்சட்ட வரைவின் விதித்துறைகளை இணை ஆய்வுக்குழு விரிவாகப் பரிசீலனை செய்து அதில் சில மாறுதல்களைச் செய்துள்ளது. செய்யப்பட்டுள்ள முக்கிய மாறுதல்களில் சிலவற்றை நான் குறிப்பிடுகிறேன்:—

(1) கூட்டுறவுத் துறையிலும் வங்கியிலும் வசூலிக்கப்படுகிற தற்போதைய வட்டி விகிதங்களைக் கருத்தில் கொண்டு, ஆண்டுக்கு வட்டி விகிதம் 6¼ சதவிகிதத்திற்குப் பதிலாக 9 சதவிகிதம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) வருமானவரி விதிக்கப்பெறுபவர்களின் ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்பட்டால் அவர்களும், வேளாண்மை ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கு மேற்பட்ட தொகை மீது வேளாண்மை வருமான வரி விதிப்

* 19—8—72-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1972 ஆகஸ்ட் 21] [திரு. ஓ. பி. இராமன்]

பிற்கு உட்பட்ட ஏனைய நபர்களும் இச்சட்டத்தின் பயனைப் பெறத் தகுதியற்றவர் என 2 ஆம் பகுதியின் (3) ஆம் உட்பகுதி முன்னர் விதித்தது. ஆனால், தற்போது வருமான வரி விதிப்பதற்குட்பட்ட அனைவரும், ரூ. 1,200, ரூ. 1,200 க்கு மேற்பட்டு அரை ஆண்டு வருமானத்தின் மீது தொழில் வரி விதிக்கப் பெறுபவர்களும், தமிழ்நாடு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ள விவசாயிகளும் இச்சட்டத்தின் பயனைப் பெறுவதற்குத் தகுதியற்றவரென விதிக்கப்பட்டுள்ளது.

(3) 1971 அக்டோபர் 1 ஆம் நாளுக்கு முன் வாங்கிய கடன்களையும், 1971 ஆக்டோபர் 1 ஆம் நாளுக்கு பின்னர் வாங்கிய கடன்களையும் வேறுபடுத்த இதற்குமுன் இச்சட்ட வரைவில் வகை செய்யப்பட்டிருந்தது. இந்த வேறுபாட்டை நீக்கி விட வேண்டுமென்று இக்குழு முடிவு செய்தது.

(4) 1971 அக்டோபர் 1 ஆம் நாளன்று நிலுவையாக உள்ள வட்டி நிலுவைகள் அனைத்தையும் தள்ளிவிடுவதற்கு முற்படுகிற இச்சட்ட வரைவின் 6-வது பகுதியைச் சேர்ந்த (1) உட்பகுதியை நீக்கி விட இக்குழு முடிவு செய்தது.

(5) முதல் கொதுவைதாரரிடமிருந்து மாற்றல் பெற்றவரும், முதல் கொதுவைதாரரின் வாரிசுகளிடமிருந்து மாற்றல் பெற்றவரும் இச்சட்டத்தின் பயன்களைப் பெறக்கூடாதென்று 8-வது பகுதியின் 10 ( ) இந்த உட பகுதியின் முன்னர் விதிக்கப்பட்டிருந்தது. இப்பகுதி தேவையற்றதென குழு முடிவு செய்தது.

இணை ஆய்வுக் குழுவால் மாற்றம் செய்யப்பட்ட இச்சட்ட வரைவை இப்பேரவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment, viz—

"That the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) as reported by the Joint Select Committee be recommitted to make suitable amendments consistent with the subject matter of the Bill to enhance the limit of debts and reduce the interest."

மிஸ்டர் ஸ்பீக்கர் சார். கூட்டுப் பொறுக்குக் குழுவின் ரிப்போர்ட்டின் அடிப்படையில் நமக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த மசோதா—கூட்டு பொறுக்குக் குழு நிறைவேற்றி இங்கே அனுப்பியிருக்கக்கூடிய இந்த

மசோதா—திருப்திகரமாக இல்லை. ஆகவே, மீண்டும் ஒரு முறை இதை அந்த பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தத்தை நான் உங்களுக்கு முன்னால் [illegible]

இத்திட்டத்தின் [illegible] ஆசைப் படுகிறேன். [illegible] வதற்கு முன்னால் [illegible] கூட்டியே கொடுக்கவேண்டுமென்று [illegible] நியதி இருக்கிறது. ஆனால் [illegible] செலக்ட் கமிட்டியின் ரிப்போர்ட் [illegible] முன்னாலேயே இருக்கவேண்டுமென்று தெளிவாகப் பிரிவு 108-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 19-ம் தேதி தான் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னால் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அதை 21-ம் தேதியே கொண்டு வருவது என்று எல்லோரும் ஒப்புக்கொண்ட காரணத்தினால் தாங்கள் அந்த 5 நாட்கள் நோட்டீசை 'வெய்வ்' பண்ணிவிட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

அது ஒரு புறம் இருக்க, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் பல விஷயங்களைப் பற்றி நான் இந்தச் சபைக்கு முன்னால் வலியுறுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். காரணம் இந்த மசோதா இந்தச் சபைக்குக் கொண்டுவரப்படும் நேரத்தில் பெரும் அளவுக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை வந்தது. [illegible] இலக்கம் [illegible]ாக மாதம் ரூ. 600 சம்பளம் வாங்கக்கூடியவர்கள் அதிக வட்டிக்குக் கடன் பட்டிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டது. ஆகவே, ஜனங்கள் எல்லாம் இதை வெகு ஆவலாக எதிர் பார்த்தார்கள். மாதம் ரூ. 600 சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு அதிக வட்டியில் கடன் வாங்கி, அதிகமான பணத்தைக் கொடுத்து இன்னும் கடன் காரர்களாக இருக்கும் நிலைமை மாறும் என்று எதிர்பார்த்தார்கள்.

இதே மாதிரி 1938-ம் வருஷத்திய ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த சட்டம் இருக்கிறதே அந்தச் சட்டம் விவசாயிகள் ஏற்கனவே பட்ட கடனுக்கு, இருக்கிற கடனுக்குக் கூட திருப்பிக் கொடுத்தாலும் கூட இன்னும் கடன் காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்டதே அந்தக் கருத்தைக் கொண்டு தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது.



உங்கள் அனுமதியின் பேரில் அந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டம் கொண்டு வருகிறபொழுது, ஏற்கனவே கடன் பட்டவர்கள், குறிப்பிட்ட ஆண்டு 1931 என்று நினைக்கிறேன். ஏற்கனவே கடன் பட்டவர்கள் அந்தக் கடனுக்கு எவ்வளவு திருப்பிக் கொடுத்திருந்தாலும் சரி, இனிமேல் திருப்பிக் கொடுக்க முடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டபொழுது, அதைப் பூராவுமே ரத்து பண்ண வேண்டும், அதாவது ஆங்கிலத்தில் சொல்லப்போனால், 'மாரடோரியம்' திருப்பிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்ற அளவுக்கு முதல் அம்சமாக இருந்தது. இரண்டாவது அம்சமானது என்னவென்றால், அவர்கள் அதிகமாக வட்டி கொடுத்து, தாங்கள் வட்டியாகவோ அல்லது வட்டியும் முதலுமாகவோ வாங்கிய கடனுக்கு இரண்டு மடங்கு கொடுத்திருப்பார்களேயானால், அந்தக் கடன் பூராவுமே ரத்து பண்ணப்படவேண்டும் என்பது தான். மூன்றாவதாக, அவர்களுக்கு எந்த ரேட் ஆஃப் இண்டரெஸ்டு நிச்சயத்திருக்கிறோமோ அதற்கு மேல் ரேட் ஆஃப் இண்டரெஸ்டு போட்டு வாங்கியிருப்பார்களே யானால், அதை ஸ்கேல் டவுன் பண்ணவேண்டும். அப்படி ஸ்கேல் டவுன் பண்ணுவதற்கு சன்ஸிலியேஷன் போர்டு போன்றவைகளைப் போட்டு செய்ய வேண்டும். இப்படி மூன்று அம்சங்களின் அடிப்படையில் ராஜாஜி அவர்கள் அந்த மசோதாவைக் கொண்டுவந்தார்கள். ஜனங்கள் அதை ரொம்பவும் வரவேற்றார்கள். ஓரளவுக்கு அதனால் பலனும் கிடைத்தது. அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, அந்தக் கருத்தே குளோஸ் ஆகிவிட்டது, அந்தக் கருத்துக்கும் அப்பால் போய் இருக்கவேண்டும், அப்படியும் போகாத நிலைமையில்

I am very much pained to see that it has been considerably watered down. மூன்று விஷயங்களை நான் உடனே சொல்ல விரும்புகிறேன்.

நாம் இங்கிருந்து அனுப்புகிறபொழுது rate of interest should be 6¼ %. என்று சொன்னோம். பொறுக்குக் குழுவில் நடந்த விவாதம் இந்த ரிப்போர்ட்டில் இருக்கிறது. நான் யாரையும் குறைத்துச் சொல்ல விரும்ப வில்லை. பொறுக்குக் குழுவில் இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு விவரம் தெரிந்தவர்கள். ஆனால், அவர்கள் 6¼ சதவிகிதம் என்று இருந்ததை 9 சதவிகிதம் ஆக உயர்த்திவிட்டார்கள். குழுவின் முன்வந்து சாட்சியம் சொன்னவர்கள் ஏற்கனவே 12 சதவிகிதம் ஆக இருக்கிறது, அதை 24 சதவிகிதம் ஆக்கவேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தியிருக்கிறார்கள். சாட்சி சொன்னவர்களெல்லாம் பார்த்தால் 24 சதவிகிதம் வேண்டும் என்றும்,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 21

The burden of debt on labourers, wage-earners and Government servants and other poor classes of people in the low income groups, in this State, is as heavy as the indebtedness of an agriculturist.

அக்ரிகல்சரிஸ்ட்ஸ்-க்கு இம்மாதிரி இண்டெடெட்நெஸ் இருந்த நிலைமையிலே அவர்களுக்கு 1938-ல் என்ன நிவாரணம் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தார்களோ அந்த நிவாரணம் கூடக் கொண்டு வருவதற்கு இன்றைக்குத் தயாராக இல்லாத முறையில் செலக்ட் கமிட்டியின் ரிபோர்ட் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று சொன்னால், நாம் செலக்ட் கமிட்டிக்கு செய்யக்கூடிய மரியாதை அதைத் திரும்பவும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி ஏற்கனவே சொல்லியிருக்கக்கூடிய எந்தவிதமான நிவாரணத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதை மனத்தில் கொண்டு, அம்மாதிரியான கருத்துக்குத் தகுந்த முறையில் மசோதாவை மாற்றவேண்டும் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. இன்கம்டாக்ஸ் கட்டுகிறவர்கள், மாதம் ரூ. 450 சம்பளம் வாங்குபவர்களுக்கு நிவாரணம் கிடையாது என்ற நிலைமை ஏற்படுகிறது. ரூ. 450 சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு இன்கம்டாக்ஸ் இருக்கிறது என்று சொன்னால், இன்கம்டாக்சையும் கட்டி ரூ. 450 சம்பளம் வாங்கக்கூடிய ஆபத்தின் காரணமாக, சர்க்கார் கொடுக்கிற நிவாரணத்தில் அவர்களுக்குப் பங்கு இல்லை என்ற பரிதாபகரமான நிலைமையை நாம் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள முடியாது.

These classes of people pay usurious rates of interest to the professtional money-lenders and fall victim to their dishonest dealings.

என்று ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸில் இருக்கிறது. டிஸ்ஆனஸ்டு டீலிங்ஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் சாட்சியம் சொல்லக்கூடிய காலத்தில் 'எங்களை டிஸ்ஆனஸ்டு என்று சொல்லாதீர்கள்' என்று கூறியிருக்கிறார். சட்ட வரைவிலே இருந்தாலும், நோக்கம் வருகிறபொழுது 'டிஸ்ஆனஸ்டு டீலிங்ஸ்' என்று சொல்வதற்குக் காரணம், 100 ரூபாய் கடன் கொடுத்துவிட்டு ரூ. 200-க்கு புரோநோட்டு எழுதுவது ரொம்பவும் சர்வ சாதாரணமாக இருக்கிறது. அவர்கள் திருப்பிப் பணத்தைக் கொடுத்தாலும் கூட அதை வரவு வைக்காமல் இருப்பது சாதாரணம். இப்படி நேரடியாகப் பல அனுபவங்கள் உண்டு. ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினால் 500 ரூபாய் ப்ரோநோட்டில் எழுதி அதிலே 12 சதவிகிதம் போட்டு அதற்கு 24 சதவிகிதம் வட்டி வாங்கி, மீதி 500 ரூபாய் தனியாகக் கொடுத்து அதற்கு 24 சதவிகிதம் வட்டி வாங்கி, இப்படி ஆயிரம் ரூபாய் கொடுத்து, ஆயிரம் ரூபாயில் மூன்றில் ஒரு பங்கை ஒரு வருஷ முடிவிலேயே வட்டியாக வாங்கக் கூடிய சாதாரண தொகையை வட்டிக்கு



1972 ஆகஸ்ட் 21] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொடுக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். பெரிய தொகையை வட்டிக்குக் கொடுக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரணமானவர்கள் மட்டுமல்ல, மத்திய தர மக்கள், கீழ்த்தட்டில் இருக்கிறவர்கள், அதற்கு மேலே இருக்கக் கூடியவர்கள், இப்படி பலர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடன் கொடுப்பவர்களுக்கு ஏதோ அவர்களுக்கு லைசென்ஸ் தொகையை 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் ஆக்கினால் போதாது. ரிலீஃப் கொடுக்கும்போது அதையுரியன் இவ்ட பண்டு வாங்கும் மணிலெண்டர்ஸ், இவர்களை இனியேல் தலைதூக்குவதற்கு விடக்கூடாது. வாங்கினவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது.

மதுரை நகரத்தில் முன்பு வட்டிக்குப் பணம் கொடுக்கக் கூடியவர்கள் சந்தில் அழைத்துச் சென்று கொடுப்பார்கள். இப்போது அவர்கள் பெரிய போர்டுகளைப் போட்டு, வட்டிக்குப் பணம் கொடுக்கப்படும் என்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் பெரிய வட்டிக் கடைக்காரர்களாக, அவர்களுக்குப் பெரிய மரியாதை ஏற்படக் கூடிய அளவிற்கு புதிய சமுதாயம் இருக்கிறது. நாம் சோஷலிசத்தை நோக்கிப் போகிறோமென்றால் வட்டி கொடுப்பது என்பது சட்ட விரோதமாக்கப்பட வேண்டும். பணம் வைத்துக் கொண்டு பணம் பெருக்குவதென்பது எப்படிச் சரியாகும். பணத்தை வைத்து சரக்கு வாங்கி அதை விற்று லாபம் சம்பாதிக்கலாம். பணம் பணத்தைக் கூட்டுகிறது என்பது சரியல்ல. இதனால் உழைப்பிற்கே மதிப்பு இல்லாத நிலையை ஏற்படுத்தக் கூடிய காரணத்தினால் சோஷலிச நாடுகளிலேயெல்லாம் பணம் கொடுத்து ஏதாவது வட்டி வாங்கக் கூடியவர்களுக்கு குறைந்த தண்டனை 10 வருஷம் என்று இருக்கிறது. இங்கு பார்த்தால் பணத்தை வைத்துக் கொண்டு பணத்தை பெருக்கக் கூடிய நிலை இருக்கிறது. சாதாரண ஏழை மக்களாக இருக்கக் கூடியவர்களை சுரண்டக் கூடிய அளவிற்கு பணத்தைக் கொடுக்கக் கூடியவர்கள் பெரிய மனிதர்களாக காட்சியளிக்கக் கூடிய காரணமாக பணம் கொடுப்பது என்பது வளருகிறது. பணம் கொடுப்பதென்பது அரசாகத்தான் இருக்க வேண்டும். பணம் கொடுப்பதென்பது வங்கிகளாகத்தான் இருக்க வேண்டும். பணம் கொடுப்பதென்பது கூட்டுறவு வங்கிகளாகத்தான் இருக்க வேண்டும். ஏதாவது தொழிற்சாலை இருக்குமென்று சொன்னால் கிரெடிட் சொசைட்டிகளின் மூலம், அல்லது முதலாளிகள் ஏற்பாடு செய்து கடன் கொடுக்க வேண்டும். தனியார் கடன் கொடுத்து அந்தக் கடன் மூலமாக பணம் வாங்கியவர்களை பணியவைத்து அடிமையாக்கக் கூடிய போக்கு நிறுத்தப்பட வேண்டும்.

The burden of debt of labourers, wage-earners and Government Servants and other poor classes of people in the low income groups, is heavy.

சர்க்காரில் பணியாற்றக் கூடியவர்கள், தொழிற்சாலையில்

பணியாற்றக்கூடியவர்கள் மாதச் சம்பளம் வாங்கினவுடனே கடன்காரனுக்குக்
கொடுக்க வேண்டிய நிலைமை. ஆப்ஜக்ட்ஸ் ஆண்டு ரீசன்ஸ்-ல் சொல்லப்பட்
டிருக்கிறது.

The burden goes on accumulating, impairing also their efficiency. It has been felt necessary to undertake legislation to afford relief to these low-income classes of people and protect them from exploitation by money-lenders. இந்த ஆப்ஜக்டைப் பார்த்
தால் ஒரு தீவிரமான ஒரு கம்யூனிஸ்டு அரசாங்கத்தில் கொடுக்கக் கூடிய மாதிரி
இருக்கிறது. எக்ஸ்ப்ளாயிடேஷனைப் பற்றி, ஹை்சூரியஸ் இண்டரஸ்டு மாங்கும்
மணிலெண்டர்களைப் பற்றி, டிஸ் ஆனஸடு டீலிங்ஸ் பற்றி சொல்லப்பட்டது.
ஆனால் செலக்ட்கமிட்டி ரிப்போர்ட்டு வருகிறபோது நாம் அனுப்பிய மசோதா
தான் திரும்பிவருகிறதா, அல்லது வேறு ஒரு மசோதா திரும்பி வருகிறதா
என்ற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. காரணம், அமைச்சரவர்கள் கூட
இந்த மசோதாவைக் கொண்டு வரப்போகிறோமென்று பல இடங்களில் பேசி
னார்கள். கடன் கொடுப்பவர்கள் ஜாக்கிரதையாக இருங்கள் என்று பேசப்பட்
டது. காசேதான் கடவுளடா என்ற சினிமாவில் பாட்டு வருகிறது. அதிலே
கொடுத்தவன் விழிப்பான், எடுத்தவன் முடிப்பான், அதைப் பார்த்தவன்
சிரிப்பானடா, அப்படி புதிய காலம் வரப்போகிறது என்றுநினைத்தோம்.
பணத்தைக் கொடுத்தவன் பணத்தைக் கொடுத்துவிட்டு விழிப்பான், காரணம்,
பணம் திருப்பிக் கிடைக்காது, பணம் வாங்கியவன் முழிப்பான், அதைப்
பார்த்தவன் சிரிப்பானடா என்ற அப்பேர்ப்பட்ட காலம் வரப்போகிறது
என்று பார்த்தோம். ஆனால் இங்கே என்ன நிலைமை என்றால், கொடுத்தவன்
சிரிப்பான், எடுத்தவன் முழிப்பான், அதைப் பார்த்தவனெல்லாம் பயந்து
ஓடுவான் என்ற நிலைமையில்தான் இந்த மசோதா வந்திருக்கிறது.

நான் ஒவ்வொரு ஷரத்துக்கும் போக விரும்பவில்லையென்றாலும் இது
எவ்வளவு ஊனமாக, பரிதாபகரமாக இருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.
சாதாரணமாக செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் அதை இம்ப்ரூவ் பண்ணு
வார்கள். இன்னும் சரியாகச் செய்வார்கள். 6¼ சதவிகிதம் வட்டியை 9 சத
விகிதம் ஆக்குவதற்குக் காரணத்தை காட்டியிருக்கிறார்கள். நாங்கள் ரிசர்வ்
வங்கிக்கு கட்டக் கூடிய கடனுக்கு 2 சதவிகிதம் வட்டி கூடியிருக்கிறது என்று
சொல்கிறார்கள். ரிசர்வ் பாங்கு, கூட்டுறவு வங்கிகளெல்லாம் 9 சதவிகிதம் என்ற
அளவில் வட்டி விகிதம் வைத்திருப்பதனால் 6¼ சதவிகிதம் வட்டியை 9 சத
விகிதம் ஆக்கிவிட்டோமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்படக்
கூடிய பலன் என்ன? ஏற்கனவே 6¼ சதவிகிதம் வட்டி அதிகமாக ஆகி



விட்டது. அவன் ஏற்கெனவே கடனைத் திருப்பி விட்டானென்று இருப்பதற்குப்
பதிலாக 9 சதவிகிதம் ஆக்கினால் இன்னும் அதிகமாகப் பணத்தைக் கட்ட
வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

It defeats the very purpose of the bill.
இதனால் ரிலீஃப் என்பது இல்லாமல் போய்விடுகிறது. 600 ரூபாயை 200 ரூபாய்
ஆக்கியதும், 6¼ சதவிகிதத்தை 9 சதவிகிதம் ஆக்கியதும், கடைசியில் எந்த
விதமான டெட்லைன் போட்டு கம்ப்ளீட் நிவாரணம் கிடைக்கும் என்ற மூன்று
அம்சமும் இல்லாத நிலைமையில் இது பரிதாபகரமாக இருக்கிறது. இந்த
மசோதாவினுடைய நோக்கம் ராஜாஜி கொண்டுவருகிறபோது எந்த நோக்கத்
தோடு கொண்டுவந்தார் என்பதை கருத்தில் கொண்டு செய்யப்பட்டது
என்பதை சட்ட அமைச்சரவர்கள் விசேஷமாக அழைக்கப்பட்டபோது
செலக்ட் கமிட்டியில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நல்ல கருத்தைத்தான்
சொன்னார்கள். ஆனால் வந்த பலனைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கிறது.
நான் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களைக் குறைத்துச் சொல்லவில்லை. காரணம்
என்னை குறைத்துச் சொல்வதாக அர்த்தம். இந்த செலக்ட் கமிட்டி
ரிப்போர்ட்டில் இருக்கிறவர்கள் தமிழ்நாட்டில் வாழக்கூடியவர்கள்தானா,
என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய சாட்சியங்களை
தமிழ் மக்கள் முன்னால் வைத்தால் தமிழக மக்கள் அவர்களை விரட்டியடிப்
பார்கள். இன்றைக்கு இந்த மசோதாவை வாபஸ் வாங்கி விடுங்கள். கடன்
கொடுக்கிறோம் என்றால் எப்படி கடன் கொடுக்கிறோம் தெரியுமா,
நாங்கள் ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறோமென்றால் அன்னிய
ரிடத்தில் 2,000 கடன் வாங்கி ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறோம், இந்த
மாதிரி பிஸினஸ் செய்கிறோம், இதை என்கரோஜ் பண்ணுவதாக இருக்கிறோம்,
நாங்கள் வட்டிக்குப் பணம் வாங்கி அதிக வட்டிக்குக் கொடுத்து லாபம்
சம்பாதிக்கிறோம், நாங்கள் வங்கிகளில் குறைந்த வட்டிக்குப் பணம் வாங்கி
அதிக வட்டிக்குக் கொடுக்கிறோம் என்கிறார்கள். வங்கியில் இருக்கிற நிலைமை
என்னவென்றால், ஒருவர் கையில் பணம் இல்லாமல் இருந்து அவருக்கு மட்டும்
ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து அவர் அதை வட்டிக்குக் கொடுத்து 10 லட்சம்
ரூபாய் அளவிற்கு பணக்காரனாகி விட முடியும். ஒரு லட்சம் ரூபாய் ஒவர்
டிராஃப்ட் அவர் வங்கியில் வாங்கி, அதை அவர் 10 ஆயிரம் ரூபாய் வீதம் 10
பேருக்கு வட்டிக்குக் கொடுத்து, அந்த 10 உண்டிகளை மறுபடியும் வங்கியில்
வைத்துக் கேட்டால் 90 ஆயிரம் ரூபாய் மறுபடி வாங்கி, அதை 10 ஆயிரம்
ரூபாய் வீதம் 9 பேருக்கு கொடுத்து, மறுபடியும் வங்கியில் உண்டிகளை வைத்து
80 ஆயிரம் வாங்கி 8 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம், கடன்கொடுக்க

கூடிய அளவிற்கு பிசினஸ் பண்ணக் கூடிய முறையில் இன்றைக்கு உலவரியல் வட்டி வாங்கும் மணிலெண்டர்கள் நிலை வந்திருக்கிறது.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு கூட்டுறவு வங்கிகள் தவிர, தனி யாருக்குக் கொண்டு போய் கடன் கொடுப்பது என்ற முறை மாறவேண்டும். சர்க்கார் ஊழியர்கள், குறைந்த சம்பளத்தில் இருப்பவர்களுக்கு அவர்கள் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்கவேண்டு மென்று சொல்கிறபோது இப்படிப்பட்ட மசோதா வந்திருக்கிறது. மசோதா வில் திருத்தப்பட்ட அம்சங்களுக்குள் நான் முழுமையாகப் போகவில்லை. இது செலக்ட் கமிட்டிக்கு திருப்பிப் போகவில்லையென்று சொன்னால், திருத்தங்கள் கொடுக்காமல் போனாலும் ஒவ்வொரு க்ளாசிலும் என் கருத்தை வற்புறுத்திச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை இதே செலக்ட் கமிட்டி உறுப்பினர்களைக் கொண்டு இன்னும் சாட்சியங்களை எடுக்கலாம். ஏனையோருடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம். விசேஷமாகப் பார்த்தால் நாம் போய் அதிகம் விசாரித்ததாகத் தெரியவில்லை. 5, 6 தடவை தான் கூடியிருக்கிறார்கள். எப்படியாவது சட்டமாகக் கொண்டு வரவேண்டு மென்று சீக்கிரமாகக் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றி சந்தோஷம். இப்படி வந்ததால் நமக்கு வேதனையாக இருக்கிறது. செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி வந்த ரிப்போர்ட் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் அந்தக் காரணத்தினால் திருப்பி செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப நமது விதிகளில் இடமிருக்கிறது. அதே செலக்ட் கமிட்டியில் இருப்பவர்கள் இன்னும் வேறு சில பாதிக்கப்பட்டவர்களை விசாரித்து, தேவையானால் ஒரு சில இடங்களில் தொழிற்சாலைகளில், சர்க்கார் அலுவலகங்களில் உள்ள கஷ்டப்படக் கூடியவர் களை விசாரித்து அந்த விசாரணையின் அடிப்படையிலும் மற்றவர்களை மகஜர் கொடுக்கச் செய்து இப்படி கவனித்து சரியான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 38-ம் வருஷத்தில் வந்ததைவிட சிறந்த சட்டம் என்ற முறையில் கொண்டு வரவேண்டும். ஆகவே இதை திருப்பி செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய கனம் உறுப்பினர் தங்கமணி அவர்கள் நல்ல பல யோசனை களைத் தெரிவித்தார்கள். அதேநேரத்தில் அவர்கள் சமதர்மத்தில் வளர்ச்சி யடைந்த பெரிய நாடுகளை மனதிலே வைத்துப் பேசுகின்றாரோ என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது.



கடன் கொடுப்பவர்களிடம்தான் தவறு இருக்கிறது என்று சொல்ல முடியாது. கடன் கொடுப்பவர்களிடமும் தவறு இருக்கிறது; கடன் வாங்கு கிறவர்களிடமும் தவறு இருக்கிறது. அதிலே நாம் பார்க்கவேண்டியது எப்படிக் கொடுக்கிறார்கள், எப்படி வாங்குகிறார்கள் என்பதுதான். அதைப்பற்றி இந்த மசோதாவில் எதுவும் சொல்லவில்லை. இன்றைக்கு கடன் வாங்குபவர்களில் நல்ல காரியங்களுக்கு கடன் வாங்குபவர்களும் இருக்கிறார்கள்; கெட்ட காரியங் களுக்காக கடன் வாங்குபவர்களும் இருக்கிறார்கள். கெட்ட காரியங்கள் என்றால்—இப்போது நீங்கள் வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்திருக்கிறீர்களே, அங்கே போய் சிலர் கள், சாராயம் குடிப்பதற்கு கையிலே பணம் தட்டுப்படும்போதும் கடன் வாங்குகிறார்கள். அந்த வகையிலே நீங்கள் கடன்காரர்களை வளர்த்து விட்டிருக்கிறீர்களே தவிர வேறு எந்தப் பலனும் இல்லை.

வேலை செய்து சம்பளம் வாங்கி வரும்போது வழியிலே குடித்துவிட்டு வீட்டுக்குச் செல்கிறான், கையிலே காசு இல்லாமல். பின் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது எங்கு பார்த்தாலும், எங்கும் காலி இடமே இல்லாதபடி, கலைக் கண்காட்சி என்று நடத்துகிறீர்கள். அங்கே சூதாட்டமும் மற்ற விரும்பத்தகாத காட்சி களும்தான் நடைபெறுகின்றன. கள்ளுக்கடை, சாராயக்கடை இரண்டையும் விட்டால் கலைக் கண்காட்சி என்ற முறையில் சூதாடும் இடத்திற்குச் செல்கிறார் கள்; அதற்காகவும் கடன் வாங்குகிறார்கள்.

அடுத்து, விலைவாசி ஏற்றத்தினாலும் கடன் வாங்கவேண்டிய நிலை ஏற்படு கிறது. பெரும்பாலோருக்கு வாங்கக்கூடிய சம்பளம் மாதத்தில் 15, 20, நாட்க ளுக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. அதற்குப்பின்னால் குடும்பத்திற்கு சோறு போடுவதற்குக் கூட கஷ்டப்படுகிறார்கள். உடனே யாரிடமாவது போய், ரூபாய்க்கு 2 அணா, 4 அணா என்று வட்டிக்கு கடன் வாங்குகிறார்கள். சம்பளம் வாங்கி அந்தக் கடனைக் கொடுத்துவிடலாம் என்று வாங்குகிறார்கள். சம்பளம் வாங்கிய பின்னால் வாங்கிய கடனுக்கு வட்டியைத்தான் கொடுக்க முடிகிறதே தவிர, அசலைக் கொடுக்கமுடியவில்லை. அதையெல்லாம் யோசனை செய்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதினால், இப்படிப்பட்ட சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களின் நிலையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தச் சட்டத்தினால் அப்படிப்பட்டவர்களுக்கு இனி கடன் கொடுப்பவர்களும் கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் இந்த ஆண்டு இந்த கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அடுத்தாண்டு என்ன சட்டம் கொண்டு வரப்போகிறீர்களோ என்ற பயத்தில் யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் கடன் கிடைக்காமல், வட்டிக்கும் கடன் கிடைக்காமல், சோறு போடுவதற்குக் கூட வழியில்லாமல், திண்டாடி, மனைவி மக்களுடன் தெருவிலே திண்டாடி இறுதியில் தூக்கிலே தொங்கக்கூடிய பரிதாப நிலைதான் ஏற்படும்.

சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு இப்படிப்பட்ட தொல்லைகளிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு தனி நபர் ஜாமீனில் கடன் கொடுக்கப்படுவது போன்று குறைந்த வருமானக்காரர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அல்லது வேறு வழிகளில் தனி நபர் ஜாமீனில் கடன் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்திலே அதற்கு வழி செய்யப்படாவிட்டால் இந்த கடன் நிவாரணச் சட்டத்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, கடன் கொடுப்பவர்கள் எல்லாம் அதிகமான லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு கொடுப்பது கிடையாது. ஒருசாரார் இருந்த இடத்திலிருந்தே—கடன் கொடுத்து அதிக வட்டி வாங்கி சம்பாதிக்க வேண்டுமென்று சோம்பேறி வாழ்க்கையில் சுகம் காணவேண்டுமென்று—நிம்மதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பணம் கடன் கொடுக்கும்போதே இரண்டு வருடம் மூன்று வருடத்திற்குள்ள வட்டியைப் பிடித்துக்கொண்டுதான் கொடுக்கிறார்கள். இன்னொரு சாரார் ஏதோ கஷ்டப்பட்டு வருகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்துவருகிறார்கள். ஒரு ஏழைத் தொழிலாளியின் பிள்ளை பள்ளிக்கூடத்தில் படிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். பரீட்சைக்கட்டணம் செலுத்த அந்த நேரத்தில் பணம் இல்லாமல் அவன் திண்டாடிக்கொண்டு இருக்கும்போது இப்படிப்பட்டவர்கள் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து உதவுகிறார்கள். ஆகவே, கடன் கொடுப்பவர்கள் எல்லாம் 'டிஸ் ஆனஸ்ட்' ஆனவர்கள் என்று சொல்ல முடியாது.

அதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். யார் யார், எந்தெந்த இடத்தில்-எப்படி எப்படி கடன் கொடுக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதற்கு தனியாக ஒரு கமிஷன் போட்டு செயல்படுத்த வேண்டும் to find out the indebtedness of the low strata of society. அடித்தளத்திலே இருக்கிறவர்கள் எப்படி கடன் பெறுகிறார்கள், அவர்களுக்கு எப்படிக் கடன் கொடுக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, அதற்கு தக்க முறையில் கடன் நிவாரணச் சட்டம் இல்லையானால் அதனால் என்ன பிரயோஜனம் ஏற்படப்போகிறது என்பதை யோசித்துப்





பார்க்க வேண்டும். இல்லையானால் அவசர காரியங்களுக்கு கடன் வாங்குகிற வர்களுக்கு, யாரும் கடன் கொடுக்காமல், அதனால் மிகவும் கஷ்டப்படுவார்கள். அரசாங்கமே இன்றைக்கு கடன் வாங்கித்தான் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறபோது சாதாரண மக்களுக்கு கடன் வாங்காமல் இருக்க முடியாது. இனி கடன் கொடுப்பவர்களைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லாம் டாட்டா, பிர்லா போன்றவர்கள் அல்ல. ஏதோ ஒரு சிறு தொகையை வைத்து, பிழைக்கக்கூடியவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் வாழ்க்கையும் பாதிக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அடுத்து, இன்கம்-டாக்ஸ் செலுத்துபவர்களும், ப்ரொஃபஷனல் டாக்ஸ் செலுத்துபவர்களும் இந்தச் சட்டத்தில் வரமாட்டார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்களோடு ப்ராப்பர்ட்டி டாக்ஸ் செலுத்துபவர் களையும் சேர்த்திருக்கலாம். ஏனென்றால் அவர்கள் பெரிய பெரிய வீடுகளைக் கட்டி வைத்துக்கொண்டு அதன் மூலம் வாடகைபெற்று பணம் சம்பாதிக் கிறார்கள். மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் இந்த டாக்ஸ் கட்டுவதில் இருந்து தப்பிக்க முடியாது. எப்படியாவது சம்பளத்தில் பிடித்துவிடுவார்கள். ஆனால் மாதச் சம்பளம் வாங்காமல் சொத்துக்கள் மூலம் வருமானம் பெறக் கூடியவர்கள் சில சமயங்களில் விட்டுவிட்டு விடுகிறார்கள். ஆகவே, அப்படிப் பட்டவர்களையும் இன்கம் டாக்ஸ், ப்ரொபஷனல் டாக்ஸ் செலுத்துபவர்களுடன் சேர்த்திருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கிளாஸ் 2 உட்பிரிவில் 3-ஐப் பாருங்கள், தெரியும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: But in Clause 2, it has been stated that 'The committee decided that all income-tax assessees and those who are assessed to profession tax on a half-yearly income of more than Rs. 1,200......'. There there is no mention of property tax.........

THE HON. THIRU S. MADHAVAN: Please read the Bill.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அது போகட்டும். அடுத்து, பெண்களுக்கு ஒரு சலுகை கொடுத்திருந்தார்கள். இப்போது அதை எடுத்துவிட்டார்கள். பெண்கள் 6,000 ரூபாய் வரை கடன் கொடுத்திருந்தால், அவர்களுடைய

கடனை இந்தச் சட்டம் பாதிக்காது என்று சொல்லப்பட்டிருந்தது திடீரென்று ரத்து செய்யப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தக் காலத்தில் எல்லாம் இப்படி பெண்கள் பெயரில் எழுதி வைத்துவிட்டு, தப்பித்து வந்தார்கள். அதனால்தான் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அந்தச் சலுகை ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அது உங்கள் ஊர் பழக்கம் போல் இருக்கிறது. எங்கள் பக்கத்தில் அப்படி யாரும் செய்வது கிடையாது. ஏனென்றால் கடன்பட்டவர்கள் கோர்ட்டுக்குப்போனால், கடன்கொடுத்த பெண்கள்தான் கோர்ட்டுக்குப் போகவேண்டும். பெண்கள் கோர்ட்டில் போய் நிற்பது அவமானமாகக் கருதப்படுகிறது. அதனால் பெண்கள் பெயரில் கடன் கொடுத்ததாக யாரும் எழுதி வைப்பதில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெண்களுக்கும் ஆண்களுக்கும் அது பொருந்தும். 'ஹஸ்பண்ட் அண்டு ஒய்ஃப்' அசசில் என்ற பத்தியிலே முடிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அது மாவட்டத்திற்கு அல்ல, மாநிலத்திற்கு அல்ல, நாடு முழுவதுமாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதைக்கூட பெண்கள் எதிர்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். எங்களுடைய வருமானம் எங்களுக்கே உரிமையானதாக இருக்கவேண்டும். சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பணம் தேவை என்றால் நாங்களும் ஆண்களைப்போல தனியாக வரி கட்டுகிறோம். கணவன்மார்களது வருமானத்தோடு இணைத்துப்போடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் கூட இதுபோல அளிக்கப்பட்டிருந்த விலக்கைக் கூட ரத்து செய்திருப்பது இதையே நம்பி வாழ்கிற விதவைப் பெண்களை வெகுவாகப் பாதிக்கும். அவர்களோ வேறு தொழில் செய்வதற்குத் தகுதி இல்லாதவர்கள்—சக்தி இல்லாதவர்கள். தனியாகப் பிரிக்க முடியாது என்றாலும்—ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் இத்தனை வயதிற்குமேல் தொழில் செய்கிறவர்களுக்காவது விலக்கு என்று அளித்திருக்கலாம்.

கூட்டுறவுக் கடன்களுக்கு பாதுகாப்பு செய்துகொண்டிருப்பதோடு இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் கடன்களுக்கும் பாதுகாப்பு இந்த மசோதாவில் தேடிக்கொண்டுவிட்டார்கள். விவசாயிகள் கிளர்ச்சி செய்தபோது கூட கூட்டுறவுக் கடன்களுக்கும் ஒரு நிவாரணம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தனியார் பெரும் அளவுக்கு பாதிக்கப்படுவதை நாம் கவனிக்காத



நிலையில் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதில் அரசாங்கமும் ஒரு பங்கினை ஏற்றிருக்கலாம். அது இல்லாத காரணத்தினால்தான் இவர்களது நோக்கத்தையே சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது.

இந்தமாதிரி சட்டங்களுக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பது சரியாக இராது. முன்பு போட்டிருந்த தேதியை மாற்றி இப்பொழுது மார்ச் 1972 என்று போட்டிருக்கிறார்கள். இது கூடச் சரியில்லை, சட்டம் அமுலுக்கு வருகிற தேதியில் இருந்து இதைச் செயல்படுத்துவதுதான் சரியாக இருக்கும்.

உண்மையில் இது போன்ற சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் அடித்தளத்தில் இருக்கிறவர்களுக்கு கடன்பெறக்கூடிய வசதியை கூட்டுறவுத் துறையின் மூலம் கொண்டுவந்துவிட்டு இதைக் கொண்டுவந்திருந்தால் சமுதாயச் சீரழிவு ஏற்படாது என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற கடன் நிவாரண மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னதாக தலைவர் திரு. தங்கமணி கூறியதுபோல இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குச் சென்று வந்த பிறகு யாருக்கு எந்த அளவு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்று நினைத்தோமோ அந்த அளவுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாக அமையவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். செலக்ட் கமிட்டியில் கூட டிஸ்ஹொனஸ்ட் டீலிங் என்கிற வார்த்தையை மணிலெண்டர்கள் எதிர்த்ததாகத் தெரிகிறது. பொதுவாக ஆயிரம் ரூபாய்க்கு 2 ஆயிரத்திற்கு எழுதி வாங்குவதும், 12 சதவிகிதம் என்று போட்டுவிட்டு 24 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதம் வரை வட்டி வாங்குவதும், இன்னும் வெள்ளைத் தாள்களில் கையெழுத்து முன்பாகவே எழுதி வாங்கிக் கொள்வதும் நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. செலக்ட் கமிட்டி பணம் கடன் கொடுக்கிறவர்களை மட்டும் சாட்சியமாக விசாரித்து அறிந்திருப்பதாகத் தெரிகிறதே தவிர கடன் வாங்கியவர்களை சாட்சியமாக அழைத்து விசாரித்திருப்பதாகத் தெரியவில்லை. கடன் பெற்றவர்களை அழைத்து விசாரிக்க விரும்பவில்லை என்று கருதுகிறேன். இவர்களை அழைத்து விசாரித்திருந்தால்தான் உண்மையில் இவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்கள் எல்லாம் தெரிந்திருக்கும்.

இன்றைக்கு ப்ரோ நோட்டுகள், மற்ற டாக்குமெண்டுகள் ரிஜிஸ்தர் செய்யப்படுவதுபோல ரிஜிஸ்தர் செய்யப்படாத நிலைதான் இருக்கிறது. ப்ரோ

[திரு. ஜெ. ஜேம்ஸ்] [1972 ஆகஸ்ட் 21

நோட்டுகளும் ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும் என்று செய்திருந்தால் அதி பலவிதமான தவறுகளுக்கு இடம் கொடுக்காமல் இருந்திருக்கும். இன்றைய தினம் பல கோடி ரூபாய் ப்ளாக் மணி ப்ரோ நோட்டு வழியாகத்தான் உலவிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ப்ளாக் மணி புகுத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குக் கிடைக்காமல் இருக்கின்றன. ஆகவே இந்த மசோதாவில் ப்ரோ நோட்டுகளை ரிஜிஸ்தர் செய்தாக வேண்டும் என்று செய்திருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்னால் வட்டி விதம் 6¼ சதவிகிதம் என்று இருந்தது. இப்போது அதை 9 சதவிகிதம் என்று திருத்திவிட்டார்கள். அரசாங்கம் கூட்டுறவுத்துறையின் மூலம் பீனல் இண்டரஸ்ட் எல்லாம் போட்டு 18 சதவிகிதத்திற்கு வசூல் செய்வதால் அதை ஜஸ்டிபிகேஷன் செய்வதுபோல இதற்கும் 9 சதவிகித வட்டி என்று செய்திருப்பதானது இவர்களது நோக்கத்தை ஐயப்படவேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையில் இத்தோடு இன்னொன்று கூற விரும்புகிறேன். சாதாரணமாக, தனியாரிடத்தில் கடன் கொண்டவர்கள் எந்த அளவுக்குத் துன்புறுகிறார்களோ, அதுபோல, சில வேளைகளில் இந்த கூட்டுறவுத் துறையில் கடன்கொண்டவர்கள் துன்பப்படுகிறார்கள் என்றும் கூற விரும்புகிறேன். 18 சதவிகிதம் வட்டியை பீனல் இன்டரஸ்டை, கூட்டுறவுத்துறை வசூலிக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக அதை ஒத்துக்கொள்ள இயலாது.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் இந்தக் கடனை வசூலிக்கின்ற முறைகளைப் பார்க்கும்போது ஏழை எளியவர்களுடைய வீடுகளில் இருக்கின்ற ஜன்னல் கதவுகள், மரச் சாமான்கள், நாற்காலிகள் போன்றவற்றையெல்லாம் அட்டாச் செய்து எடுத்துக்கொள்கிற நிகழ்ச்சியைப் பார்க்கும்பொழுது, இந்த ஜனநாயகநாட்டில் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிற சர்க்கார் இம்மாதிரி செயலாற்றுகின்றது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதையும் காரணம் காட்டித்தான் கடந்த மாதம் விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது. இந்த நிலையை மாற்றவேண்டும். கம்யூனிஸ்ட் தலைவர் தங்கமணி அவர்கள் கூறியதுபோல இந்த மசோதாவில் இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த மசோதாவை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.

DR. H. V. HANDE: Mr. Chairman, Sir, I would like to add a few remarks to the number of points raised by the members of various parties.



1972 ஆகஸ்ட் 21] [Dr. H. V. Hande]

I am afraid most of the politicians to-day want to vie with each other, to show as to how much they are radical or their parties are. In this competition for radicalism, one tries to suggest reforms which are much more radical than the other and then finally we find that a Bill of this type has come before this House. Probably even the D.M.K. is also helpless, I know, because they are forced to bring in some legislation which will be considered as radical and also they want to impress on the public that they also believe in radical ideology and that they are not lagging behind others. Thus they have brought forward this legislation.

Sir, I do not say that there are no good points in this legislation. There are some good points but how far those good points could be put into actual practice, is the question, every hon. Member has to ask oneself. Now I am going to illustrate how impractical this legislation is going to be in practice.

In this connection, I want to refer to clauses 11 and 12 and especially clause 12 which says—

'In any proceeding for recovery of a debt, the court shall scale down all interest whether paid or payable on any debt incurred by any debtor on or after the 1st March 1972, so as not to exceed a sum calculated at nine per cent per annum simple interest......'

In other words, no money lender can charge an interest of more than nine per cent. In actual practice, what exactly a money lender charges? He will charge more than 9 per cent. Now there are thousands of money lenders who have formed an association called 'Tamil Nadu Money Lenders' Federation'. Recently in Tiruchirappalli they held a conference and I could not attend it because I had a party programme here. In that conference they have pointed out that this limit of 9 per cent will be a sort of thorn for them because they are borrowing money by paying an interest of more than 10 per cent. Sir, most of the money lenders who belong to Tamil Nadu are small money lenders and they are not big shots. It is only the Pathans and others who have got a lot of money and the interest charged by them is something shocking and horrible.

In fact this legislation has been brought forward to curb their activities and the point is whether we will be able to curb their

activities effectively through this legislation. Now what happens is that members of the Secretariat staff and other N.G.Os. when they come out of their office compound, are accosted by these money lenders and they try to create a scene and introduce an element of fright in the minds of these innocent and poor persons. These N.G.Os., in order to keep their self-respect have to pay a higher rate of interest to meet their needs. Practically in the course of two or three years they pay more than the principal. Sometimes they pay interest 1 to $1\frac{1}{2}$ times the principal. To curb their activities this legislation is good. But what about thousands of small money lenders who borrow huge sums of money by paying a fabulous rate of interest and lend it to the persons who want Rs. 5 or Rs. 10. They cannot charge only 9 per cent and so they will be affected by this legislation. I would like the Government to consider this aspect of the matter.

Also, these people keep proper accounts and board. On the other hand, the persons who do not keep accounts and who exploit their customers will escape because they resort to underhand dealings by taking the rate of interest in advance before they lend the actual amount. For instance, if one wants Rs. 100 they will give only Rs. 90 and take away the interest of Rs. 10 in advance. I do not know how the Hon. Minister for Electricity is going to solve this problem. So, we have to view the whole thing from a social angle. We are not able to control these persons but we are trying to control and destroy thousands of small money lenders who lend Rs. 5 or Rs. 10 after borrowing money at a higher rate of interest. Thus, we are indirectly or directly helping the big money lenders. I am not blaming the ruling party and they are helpless. Sir, we have been pushed or forced by somebody to bring forward this kind of legislation and so, I request the Government to consider this aspect of the matter.

Another aspect of the matter is that the Government themselves lend money and they want protection for the money that they lend, under this Bill.

Of course no Government worth its name can write it away. This question was discussed while benami loans were being discussed so far as agriculturists were concerned. Even yesterday when I was in Tirupattur, so many people met me. They have



nothing to do with this loan. But they are ignorant. In the places they were shown they signed and finally they are asked to pay. What is the solution to this problem? Let us be frank.

I can only suggest one thing. It is said that money lenders could only charge 9 per cent rate of interest. But when he can lend only at 9 per cent, he must be in a position to get money at 6 per cent or 7 per cent. Then only with a margin of 2 per cent on which he can live, he can charge 9 per cent. I would like the Hon. Minister to take note of this and try to find out how the money lenders could be provided with necessary money for them to lend and that too at the rates I have indicated. He can see how best this could be done. I have also a feeling that the Select Committee (I am not casting any aspersions) could have devoted more thought on this. Of course Thiru K. T. K. Thangamani was giving one point of view. But I think we are all agreed that the Select Committee could have given more thought to this subject. More discussions could have taken place so that the whole legislation would have been practicable. It does not satisfy bothways. It does not satisfy the radicals nor conservatives. All these 10 or 15 years, the legislations have not satisfied the radicals. This legislation also will be only on paper. Two or three years later I will put a question to the Hon. Minister as to how this legislation was working and the Hon. Minister would answer, I am quite sure, like this: 'The whole thing is on paper. It has not become practicable.' I hope and trust that Government would give consideration to the misgivings I have expressed during the discussion and try to do the needful. Thank you.

• THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, I am one of those who is for radicalism as opposed to what was pointed out by the hon. Member Dr. Hande. It is easy for reactionary parties to attack progressive radical measures. We are not speaking out our minds because we find nothing progressive has so far been made in our society. Considering the monetary principles and credit policies I think a more radical measure is necessary in Tamil Nadu. I support the hon. Member Thiru K. T. K. Thangamani in this particular respect because many things have to be done.

There is always a tendency to deduct interest in the first instance. That is not debarred under law. Interest accrues only

after a period is over. Before the period is over, how can it be deducted. Nothing is mentioned about that in this Bill at all.

Secondly Dr. Hande has pointed out that when it is that money lenders should not lend at more than 9 per cent, Government should try to explore means and ways of providing them with money so that they in turn could lend to their clients at lower interests. I can quote instances wherein Rs 1 lakh is deposited in nationalised banks and the money lenders can do business in several lakhs, and get 14 per cent as brokerage. He lends at 24 per cent and gets 13 to 14 per cent as brokerage by sitting idle. So he is making good profit. Money is only a medium of exchange and what is important is not so much as provision of money to money lenders at reasonable rate of interest but a change in credit policy of Government.

Prices go on increasing. Rice was selling at Rs. 9 per bag several years ago, say 1930, and it is selling at Rs. 130 per bag now. It is because of the credit policy pursued by Governments. I do not blame this Government alone. Even with nationalisation of banks, the credit policy has not changed. But take China. No private money lending is allowed at all. Private money lending is banned there. Nobody can privately lend in China. It is said that 8,000 crores of rupees are floating in black market. Such circulation of black money is harmful to the economy of the country. Particularly in Tamil Nadu, money is lent at a higher rate of interest, since Tamil Nadu is poor and the people here are poor. Money is got in Rajasthan at 6 to 8 per cent. They bring it here and get 24 per cent interest and at times even 36 per cent. Those in Punjab are able to get money at 12 per cent there. But they do business here at 24 per cent. So we must bring in a comprehensive Bill, as Mr. K. T. K. Thangamani said.

There was a distinction made by some speakers regarding lending by co-operative societies. Those societies have got various means of lending at rates specified by Government rules. There is difference in co-operative society and private money lender. The whole credit policy has to change, as I have said before.



Coming to prices, let me quote an example from textile industry. After cotton is bought it takes 5 months to come out from the mill, after the process of manufacture. First it is 5 per cent and since it remains for four to five months, there is 1 per cent interest. For wholesale dealers it is 7 per cent. They do not immediately get market to sell. It remains with them for some time. They sell it to retailers after 3 months and then it is 11½ per cent. The retailer has to wait for 6 months before he sells. It comes then to 24 per cent to 25 per cent. With this sort of thing, how can you reduce prices? This is how credit is operating in this country. So, unless something concrete is done, it is no use. Credit policy may be changed in consultation with the Centre. Unless the credit policy is changed, there is no hope. I think the Bill may be referred back to the Select Committee. Let them consider the various points we have raised. Thank you.

*** மணலி திரு. சி. கந்தசாமி:** தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பற்றி மாண்புமிகு தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை வலியுறுத்திச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

பொறுக்குக் கமிட்டிக்கு ஏற்கனவே விடப்பட்ட ஒரு விஷயத்தை மீண்டும் விட வேண்டுமென்ற ஒரு பழக்கமும் உண்டு என்ற அடிப்படையில்தான் இப்பொழுது வந்திருக்கும் மசோதா எந்த அளவிற்குச் சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கும் நிலைமையில் உதவி செய்யும் என்று பார்க்கும்பொழுது நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். இங்கு பேசிய நண்பர்கள், குறிப்பாக ஹாண்டே அவர்கள், கே. எம். சுப்பிரமணியம் அவர்களெல்லாம் தீவிரவாதிகளாகப் போட்டி போடுகிறார்கள் என்று கூறினார்கள். நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒருகாலம்வரையில் வாய்ப்பூட்டு போட்டு, புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லிக்கொண்டிருந்து, கடைசியில் புலியே வரப்போகிறது என்ற நிலை இந்த நாட்டிலே வரப்போகிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தத் தீவிரவாதப் போட்டி நீண்ட நாட்களுக்கு நடக்கத்தான் போகிறது. (குறுக்கீடு) இன்னும் வரப்போகிறது. இது அசல் புலி அல்ல. இந்தச் சட்டத்திலே வந்திருக்கும் விஷயம் என்னவென்றால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட மசோதாவிற்கும் திருத்தப்பட்டிருக்கும் மசோதாவிற்கும் என்ன வேறுபாடு என்று பார்த்தால் 6¼ சதவிகிதம் என்பது 9 சதவிகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஏழை மணிலெண்டர்கள், திரு. கே. எம் சுப்பிரமணியம் அவர்கள் பூர் மணிலெண்டர்ஸ் என்று சொன்னார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : No. I did not say that. Some other member must have said it.

THIRU MANALI C. KANDASWAMY : I heard it, Sir. That is why I am referring to it.

THIRU K. M. SUBRAMANIAM : I did not say it.

**மணலி திரு. சி. கந்தசாமி:** 6¼ சதவிகிதத்தை 9 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறது. பெரிய சேவை செய்திருக்கிறது அரசாங்கம். நான் இதற்காக வருத்தப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அம்மையார் அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். பெண்களுக்கு விதிவிலக்கு அளித்திருப்பதை எதிர்த்தார்கள். பெண்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. எங்கள் ஜில்லாவில் நிலப்பிரபுக்களின் வீட்டுப் பெண்களெல்லாம் மணிலெண்டர்ஸ்தான். தெருப்பக்கம் குடியானவனுக்குக் கடன் கொடுப்பார்கள் நிலப்பிரபுக்கள், கொல்லைப்பக்கத்தில் நிலப்பிரபுக்களின் வீட்டுப் பெண்கள் ரூபாய்க்கு 4 காசு, 5 காசு என்ற விதத்தில் கடன் கொடுக்கும் விஷயத்தை எங்கள் ஜில்லாவில் பார்க்கலாம். இன்றைக்கும் அப்படி நடந்து வருகிறது. புருஷனிடத்தில் 10 இலட்சம் ரூபாய் இருந்தால் மனைவியினிடத்தில் 2 இலட்சத்திற்கு இருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில் விதிவிலக்கு அளித்திருப்பது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அது சரியல்ல என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

அடுத்தபடியாக, 2,400 ரூபாய் வருஷ வருமானம் இருந்தால் விதிவிலக்கு. ஏற்கனவே கொடுத்த விதிவிலக்கு 7,200 ரூபாய். அதை 6,000 ஆக, அல்லது 5,000 ஆகக் குறைக்கக்கூடாதா? இப்படி 3 மடங்கு கீழே குறைத்திருப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். இந்தச் சர்க்கார் ஒரு பயத்தில் இருக்கிறது என்று கருதுகிறேன். தயவு செய்து யாரும் வருத்தப்படக்கூடாது. எல்லோரும் சேர்ந்து எதிர்க்கக்கூடிய நிலை உருவாகிவிடுமோ என்ற நிலையில் சொத்துப் படைத்தவர்களுக்கும் பயப்படுவது சரியல்ல என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில்தான் தைரியம் காட்ட வேண்டும். இந்த நேரத்தில்தான் ஏழைகளின் பக்கம் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பயம் ஒன்றும் ஏற்படவில்லை. எங்களுக்கு ஏற்பட்டிருப்பது பயம் அல்ல, ஐயம். அந்த ஐயத்திற்குக் காரணம், இதுபோன்ற தீவிரத் திட்டங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் பணக்காரர்கள்



ஆர்த்தெழும்பொழுது அவர்கள்பக்கம் தீவிரவாதிகள் சேர்ந்து விடுவார்களோ என்ற ஐயம்தான் ஏற்பட்டிருக்கிறதே தவிர பயம் அல்ல.

**மணலி திரு. சி. கந்தசாமி:** நீங்கள் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்காகத்தான் சொன்னேன். நீங்கள் நினைப்பதுமாதிரி நடக்காது என்று உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். பிற்போக்குவாதிகளோடு சேர்ந்தால் பிறகு தீவிரவாதிகளாக இருக்க முடியாது. பிறகு அவர்களும் பிற்போக்குவாதிகளாகத்தான் ஆகிவிடுவார்கள்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்குமுன்னால் குறிப்பிட்ட துறையினர், நான் ஏற்கனவே பேசிய நேரத்தில் சொல்லியிருக்கிறேன், சர்வே செய்ய வேண்டும். இன்றுள்ள புதிய சூழ்நிலையில் எப்படி எப்படிக் கடன் கொடுக்கப்படுகிறது, கடன் வாங்கியவர்கள் எப்படி எப்படி அவதிப்படுகிறார்கள் என்ற விவரங்களைச் சேகரித்தால் தவிர நல்ல சட்டங்களைக் கொண்டு வர முடியாது. எகனாமிக்ஸ் படிக்கும் மாணவர்களிடத்தில் அல்லது ரிசர்ச் கவுன்சில் போன்ற இவர்களிடம் கேட்டு, கிராமப்புறங்களுக்குச் சென்று, நகர்ப்புறங்களுக்குச் சென்று இதுவரையில் பணம் எப்படிக் கொடுக்கப்படுகிறது, என்னென்ன கொடுமைகள் நடக்கின்றன என்பதுபோன்ற விஷயங்களைச் சேகரித்து அந்த அடிப்படையில் சட்டங்களைக் கொண்டுவந்தால்தான் நல்லது. அரைகுறையாக இறங்குவது ஆபத்து. ஒருவர் சொல்கிறார், இவர்கள் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கி அதைக் கொண்டு தொழில் செய்கிறார்கள் என்று சொல்கிறார். ஐயாயிரம் ரூபாய் கடன்வாங்கி பத்து பத்து ரூபாயாக கொடுக்கும் வணிகர் என்று சொல்வார்களே அது போல் பணத்தை வட்டிக்கு வாங்கி அரை அரை வட்டி, முக்கால் வட்டி என்று கொடுக்கிறார்கள். 10,000 ரூபாய் கடன் வாங்கி அதை ஒருவட்டி, இரண்டு வட்டிக்குக் கொடுத்து சம்பாதிப்பது, இது சட்டவிரோதமானது, பாவம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுத்தால்தான் எல்லாப் பணமும் பாங்குக்கு வரும். கொடுப்பது வாங்குவது எல்லாம் பாங்கின் மூலம்தான் என்பதை முதலாளித்துவ சமுதாயத்தில் கூட கொண்டுவரமுடியும். கொள்ளையடிக்கக்கூடிய இந்த வட்டிக்கு விடும் தொழில்கள் சட்டவிரோதமாக்கப்பட்டால்கூடப் பாவாயில்லை. 5,000 மெம்பர்கள் என்று சொல்லியே அவர்கள் பயமுறுத்துகிறார்கள். அந்தச் சங்கத்தில் 5,000 மெம்பர்கள்தான், கடன் கொடுப்பவர்கள், வட்டிக்கு விடுபவர்கள் 5,000 பேர்கள்தான், ஆனால் அவர்களை 50 லட்சம் பேர்கள் எதிர்க்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 5,000 பேர்கள் இருந்தால் என்ன கொம்பா? 5,000 பேர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை வைத்திருந்தால் அந்தச்

சங்கத்தின் நோக்கம் என்ன? அது புனிதமான தொழிலா? உழைக்கிறார்களா? மக்களைச் சுரண்டி வட்டிக்குக் கொடுப்பது ஒரு தொழிலா? எனவே, வட்டிக்குக் கொடுப்பதைச் சட்டவிரோதமாக ஆக்க வேண்டுமென்றுகூட வாதாட விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் பணம் பேங்கிற்கு வர முடியும். அப்படிச் செய்தால் பேங்கில் டெபாசிட் தொகை உயரும். பேங்குகள் தாராளமாகக் கொடுக்க முடியும். இப்படிப்பட்ட நிலையைக் கொண்டுவர வேண்டும். முதலாளித்துவ சமுதாயத்திற்குள்ளேயே இந்த மசோதாவில் வழிவகை செய்தால், "இருக்கும் குஷ்டப்புண்ணுக்கு பத்து போடுவது" என்பதுபோல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அவர்கள் மீண்டும் மக்களைச் சுரண்டத்தான் போகிறார்கள். இந்த மசோதா இந்தப் பிரச்னையைத் தொடக்கூடிய நிலையில்கூட இல்லை. யாருக்கும் இதனால் நன்மையில்லை. உஷார்படுத்தக்கூடிய அளவில், கடன் கொடுத்தவர்கள், 5.000 பேர்கள் உள்ள சங்கம், பல்வேறு விதங்களில் கடன் வாங்குபவர்களின்மீது நிர்ப்பந்தத்தை அதிகமாகத் திணிக்கும் சட்டவிரோதமான செயலில் ஈடுபடும் வகையில் இது ஊக்குவிக்கப் போகிறது என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கனவே நான் சொன்னேன். கடன் கொடுத்து ஒரு தொழிலைச் செய்பவர்கள் டெபாசிட் கட்டாயம் கட்ட வேண்டுமென்று வைக்க வேண்டும். பணத்தை வட்டிக்குக் கொடுப்பவர்கள் அத்தனைபேரும் 2,000 அல்லது 1,000 ரூபாய் போட்டு லேவாதேவி செய்யக்கூடியவர்கள் 500 ரூபாயை டெபாசிட்டாகக் கட்ட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட தீவிரமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. அதனால் வரும் தீமைகளை சமுதாயத்தில் நீக்க முடியாது. கடன் கொடுப்பது, வாங்குவது என்ற விஷயத்தில் சட்ட விரோதமாக நடந்துகொண்டால் தண்டனை அல்லது அபராதம் கொடுக்க வேண்டும், அவர்கள் கட்டாயமாக டெபாசிட் செலுத்த வேண்டும் என்று செய்ய வேண்டும்.

கிராமங்களில் லேவாதேவி செய்யக்கூடியவர்களில் செல்வாக்கு பெற்றவர்கள் கூட்டுறவு சொசைட்டிகளிலிருந்து பணத்தை பினாமி என்ற முறையில் ஆயிரம், இரண்டாயிரம் என்று கடனைப் பெற்று, அதை 2 வட்டி 3 வட்டிக்குக் கொடுக்கக்கூடிய ஒரு கேவலமான சூழ்நிலையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட பிற்போக்கான சூழ்நிலை, மாறுதல் ஏற்படக்கூடிய சூழ்நிலையைப் பாழடிக்கும் விதத்தில் சமுதாயச் சீரழிவு ஏற்படுவதால் இந்த மசோதா திருத்தப்பட வேண்டுமென்பது கவனிக்கத் தக்கது. திருத்தம் கொண்டுவந்து தோற்கடிப்பதற்காகவோ அல்லது உங்களுடைய பலத்தைச் சோதிப்பதற்காகவோ இதை நாங்கள் கூறவில்லை. நீங்கள் யோசித்துப் பார்த்தால் இதே சட்டம் இன்றைக்கிருக்கும் சூழ்நிலையில் எந்தவிதத்திலும் பயன்படாது என்பதை அறிந்து



கொள்வீர்கள். ஒரேயொரு காரியம் செய்திருக்கிறார்கள். இப்பொழுது 2 மடங்கு என்றால் பின்னாலே கேன்சலாகி விட்டது என்று போட்டிருக்கிறார்கள். என்னென்ன வித்தைகளை பணம் கொடுப்பவர்கள் கற்றிருப்பார்கள் தெரியுமா?

கடன் கொடுப்பவர்கள் வித்தைக்காரர்கள். எவ்வளவு சட்டங்களைக் கொண்டுவந்தாலும் அவர்கள் தப்பித்துக்கொண்டு இலட்சாதிபதிகளாகக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். எனவே இவைகளைப்பற்றிக் கணக்கெடுக்க ஒரு சர்வே செய்து பார்க்க வேண்டும். இதில் ஒரு சாட்சியாவது கடன் வாங்கிய சாட்சி இல்லை. காரணம் என்னவென்றால் அவ்வளவு அலட்சியம். இம்மாதிரியான ஒரு ரிலீஃப் சட்டத்திலே, கடன் வாங்கியவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று அறிய முயற்சி எடுக்கப்படவில்லை. கலெக்டர்கள் அல்லது தாலுக்கா அளவில் தாசில்தார்கள் தண்டோரா போடச் செய்து சாட்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அதற்கு ஆளானவர்கள் வந்து தங்களது சோகக் கதைகளைச் சொல்லி இருப்பார்கள். அவர்களைச் சாட்சியம் எடுக்காமல், கடன் கொடுக்கக்கூடியவர்களை மட்டும் சாட்சியாகக் கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து 6¼%ஐ 9% ஆகவும், 7,200 ரூபாயை 2,400 ரூபாயாக 3 மடங்கு குறைத்தும் ஆக்கியிருப்பது அநீதியானது. விஷயம் புரியாமல் செய்யப்பட்டிருக்கிறது என்று கூடக் குறிப்பிட விரும்புகிறேன்.

நிச்சயமாக இதைப் பொறுக்குக் குழுவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற கருத்தைத் தெரியப்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு கட்சியும் முற்போக்குக் கட்சியா, பிற்போக்குக் கட்சியா என்பது தோல் உரித்துக் காட்டப்படும், ஒவ்வொரு கட்சியும், யார் யார் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளும் காலம் வரும் என்று கூறி இந்த மசோதாவைப் பின் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கடன் நிவாரண மசோதாக்கள் கூட்டுப் பொறுக்குக் குழுவுக்குச் சென்று அவர்கள் பரிந்துரையோடு இந்த மன்றத்தின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. இதிலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் தங்களுடைய கட்சிக் கொள்கைக்கு ஏற்றவாறு தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள் என்றுதான் எடுத்துக் கொள்கிறேன். பொதுவாக, கூட்டுப் பொறுக்குக் குழுவில் உள்ள அங்கத்தினர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னது அவ்வளவு பொருத்தமுடையதல்ல என்று குறிப்பிட்டுச் சுட்டிக்காண்பிக்க ஆசைப்படுகிறேன். இந்தக் குழுவில் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்திருக்கிறார்கள். எல்லாக்

கட்சியினரும் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். யாருமே டிஸென்டிங் மினிட் கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. பொறுக்குக் குழுவை மொத்தமாகக் குறை சொல்லும் முறையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பற்றி விவாதம் நடத்தும்போது பெரும்பாலும் இது கடன் கொடுப்போர்—மணி லெண்டர்ஸ் சட்டம் என்று நினைத்துக் கொண்டு கருத்துக்கள் சொல்லப்பட்டன. மணி லெண்டர்ஸ் ஆக்டை எப்படி எப்படி மாற்றியமைக்க வேண்டுமென்பது வேறு கொள்கை. இப்போது கொண்டு வந்திருப்பதெல்லாம் கடன் வாங்கி அல்லல்படுகின்ற ஒரு பிரிவினருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருப்பதுதான். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கம் அல்லவே அல்ல. இந்த ஆட்சி ஏதோ கொள்கையை மாற்றிக் கொண்டு திவிரவாதத் தன்மையில் இருந்து இறங்குவது போன்று பேசுவது முற்றிலும் தவறாகும்.

இந்தச் சட்டத்தின் நோக்கம் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள்—யார் அடித்தளத்தில் உள்ளவர்கள் என்ற பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தயார்—கடன் வாங்கிக் கஷ்டப்படுகின்ற நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த நோக்கத்தைவிட வேறு எதுவும் இருக்க வாய்ப்பு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தம் கொடுத்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அவர்கள் 'நோக்கமே மாறி விட்டது, ஜாயின்ட் செலக்ட் கமிட்டி அடிப்படைத் தத்துவத்தையே மாற்றிவிட்டது; பழைய சட்டத்திற்கும் இதற்கும் முரண்பாடு இருக்கிறது' என்று சொன்னார்கள். அவர்கள் இரண்டு கருத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்று வட்டியைப் பற்றியது. இன்னொன்று 1938-ம் ஆண்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில பிரிவுகள் இல்லை என்பதாகும். இன்னொரு கருத்து இது சில பெருக்களுக்குத்தான் பயன் கிடைக்கிறது என்பதாகும். வேறு எந்தக் கருத்தும் சொன்னதாகத் தெரியவில்லை. இதைப் பற்றிப் பொறுக்குக் குழு பரிசீலித்தது.

1938-ம் ஆண்டுச் சட்டம் கொண்டு வந்தபோது அப்போது இருந்த சூழ்நிலையில் அன்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். 1932-ம் ஆண்டுக்கு முன்னால் பயங்கரமான வறட்சிச் சூழ்நிலை ஏற்பட்டு அந்த ஆண்டுக்கு முன்னால் வாங்கப்பட்ட கடன்களுக்குச் சில சலுகைகளைக் கொடுத்தார்கள். இப்போது 1972-ம் ஆண்டு அப்படி ஒரு ஆண்டு போட வாய்ப்பு இல்லை. அப்படி ஒரு ஆண்டு போட்டு அதற்கு முன்னால் உள்ள கடன்களுக்கு என்ன என்று ஆராய்வதை



விட 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் இந்தக் கொள்கையை இந்த மன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த தேதியைக் குறிப்பிட்டு அந்தத் தேதிக்கு முன்னால் உள்ள எல்லாக் கடன்களுக்கும் ஒரு சலுகை என்ற முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ராஜாஜி கொண்டு வந்ததை எப்படி விட்டு விட்டார்கள் என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பொறுக்குக் குழுவைப் பொறுத்தவரை சிக்கல் இல்லாத அளவுக்கு எல்லாக் கடன்களுக்கும் சலுகை தரப்பட வேண்டுமென்ற வகையில்தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, வட்டிப் பிரச்சினை. இதில் எல்லோரும் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி (ஓ)வும் சேர்ந்து சொன்னார்கள். வட்டிப் பிரச்சினையைப் பற்றி 6¼ சதவிகிதம் என்று 1938-ம் ஆண்டு சட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பரிசீலித்தபோது இரண்டு கருத்துக்கள் குழுவின் முன்னால் வைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் மத்திய அரசாங்க அனுமதியைப் பெற்றாக வேண்டும். மத்திய அரசாங்கம் ஒரு வாதத்தை வைத்தது. சட்டப்படி மத்திய அரசாங்கம் அவர்களுடைய ரிசர்வ் வங்கி மூலம் கூட்டுறவுத் துறையானாலும் சரி, வேறு வகையானாலும் சரி, குறிப்பிட்ட வட்டி விகிதம் என்று போட்டுவிட்ட பிறகு தனிப்பட்ட நபரிடத்தில் சென்று 6¼ சதவிகிதம் தான் வாங்க வேண்டுமென்று சொல்லுவது தவறாகும் என்ற கருத்தை மத்திய அரசாங்கத்திலிருந்து எழுதினார்கள்.

"The rate of interest payable by a debtor on a new loan has been prescribed at $6\frac{1}{4}$ per cent per annum. This rate will be very low and unrealistic in the present context when it is not unusual for the commercial banks to charge 10 per cent and above. It may give room for malpractices and it may not be administratively possible to detect. A suitable rate of interest may be provided in old sections 12 and 13 of the Act."

இது மத்திய அரசாங்கத்தால் நமக்குப் பரிந்துரை செய்யப்பட்ட கருத்தாகும். அங்கிருந்து இன்னொரு பரிந்துரையும் செய்யப்பட்டிருக்கிறது.

The interest rate prescribed in clauses 10 and 11 seems unrealistic in present context and it can lead to malpractices. This and allied questions are proposed to be discussed என்ற அளவில் மத்திய அரசாங்கம் தங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசிய காரணத்தால் ஒரு கருத்தைச் சொல்ல

வேண்டியவனாக இருக்கிறேன். 1957-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டப் படியால் கொண்டு வரப்பட்டது என்பது தெரியும். அன்றைக்கு. . . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் 6½ சதவிகித வட்டியை 9 சதவிகிதமாக உயர்த்தியது சரியல்ல என்று செலக்ட் கமிட்டியில் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அதைப் பற்றி அமைச்சர் அபிப்பிராயம் என்ன?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கமிட்டியில் எல்லோரும் சேர்ந்துதான் முடிவு எடுத்தார்கள். இப்போது இருக்கிற சட்டத்தில் 9 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று இரண்டு வகைகளில் வட்டி வசூலிக்கலாம் என்ற பிரிவு போடப் பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் தெரிவித்த யோசனையில் 10 சதவிகிதம் போட வேண்டுமென்று சொன்னார்கள். சட்டத்தில் 9 சதவிகிதம் 12 சதவிகிதம் என்று போட்டிருந்தாலும் 9 சதவிகிதம் என்று போடலாம் என்ற முடிவு இந்தக் குழு எடுத்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வட்டியைப் பொறுத்த அளவில் இப்படிக் கொண்டு வந்தது. யாருக்கும் சலுகை காட்ட அல்லது ஏழைகளுக்குப் பாதகமாகக் கொண்டு வந்தது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்ற கொள்கை இருக்கிறதோ அதே போல் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குக் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்ற கொள்கையில் இது கொண்டு வரப்பட்டிருக் கிறது. 2,400 ரூபாய் அதற்குக் கீழ் உள்ளவர்களுக்குச் சலுகை கொடுக்கலாம் என்ற முறையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதை 200 ஆக்கலாமா, 300 என்று ஆக்கலாமா என்பது வாதத்திற்குரிய பிரச்னை. ஏகமனதாக எடுத்த முடிவு ரூ. 2,400 ஆண்டு வருமானம் என்று வைத்து விட்டால் திர்ணயமான ஒரு எல்லைக்குள் வர முடியும் என்ற முடிவை பொறுக்குக் குழு எடுத்திருக்கிறது. கடன்காரர்களுக்கு சலுகை கொடுக்கும் போது யார் யாருக்கு இந்தச் சலுகை இருக்கவேண்டாம் என்று இருக்கிறது. விவசாயிகளுக்குள்ள பிரிவு வருமான வரி கட்டுகிறவராகயிருந்தால் அவர் களுக்கு இந்தச் சலுகை கிடையாது என்பது ஒரு கொள்கை. அது தவறு என்று சொல்லிவிட முடியாது.



THIRUMATHI T. N. ANANDANAYAKI: In the Agriculturists Income-tax Act, compounding facilities have been given to the agriculturists. There is a decision of the Court also that compounding will not amount to assessment of income-tax. Under this many agriculturists would escape. How is the provision going to be amended?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் இன்கம் டாக்ஸ் பற்றி சொல்லிக் கொண்டிருந்தேன். வருமான வரி பொறுத்தவரையில் கட்டினால் போதும் என்ற நிலை விவசாய வருமான வரிச் சட்டத்தில் இருந்தது. மற்றவர்களுக்குக் கொண்டு வரும்போது இதை எப்படிப் போடலாம் என்று ரூ. 200 என்று போடப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிப் பரிசீலிக்கும்போது ரூ. 7,200 என்று ஒரு தொகையைப் போட்டால், அப்படிக் குறிப்பிட்டுப் போட்டால் என்ன பாதகம் ஏற்படும் என்று ஆராய்ந்து பார்த்தோம். யார் யார் இன்கம் டாக்ஸ் அஸெஸ்மென்டிலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறதோ அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கும். நிரந்தரமான வருமானம் உள்ளவர்கள் கொடுக்க வேண்டிவரும். அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிவரும். ஆகவே 7,200, 5,000 என்று போடாமல் வருமான வரி கட்டினால் சட்டத்தில் சலுகை கிடையாது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 7,200 என்று போட்டு இன்கம் டாக்ஸ் கட்டு கிறவர்கள் என்றிருந்தால் 2,200 ரூபாய் வரையில் கொடுத்ததாக அர்த்தம் வராதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இன்கம் டாக்ஸ் அஸெஸியாக இருந்தால் இந்தச் சலுகை கூடாது என்பதுதான் கொள்கை. மாதச் சம்பளம் வாங்கு கிறவர்களுக்கு கட்டாயம் இந்தச் சலுகை கிடைக்காது என்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே பொதுவாக அஸெஸ்மெண்ட் என்று போட்டு விட்டால் போதும் என்று கொண்டுவரப்பட்டது. இதில் சலுகை இல்லை என்று சொல்லும்போது ஏற்கனவே உள்ள சட்டத்தில் ப்ரொஃபெஷனல் டாக்ஸ், ப்ராபர்டி டாக்ஸ் இருந்தால் இந்தச் சலுகை கூடாது என்று இருக்கிறது. அதை பொறுக்குக் குழு பரிசீலித்தது. அன்று ரூ. 600 என்று போடப்பட்டிருக்கிறது. எவ்வளவோ நாட்களுக்குமுன் போடப்பட்டது. இப்போது சலுகைகள் இன்னும் அதிகப்படியான பேர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் ரூ. 600 என்பதை உயர்த்த வேண்டும் என்று திருத்தம் போட்டிருக்கிறோம். அதனால் இன்னும் பலபேர்களுக்கு சலுகை கிடைக்க வழி ஏற்படும். ஏற்கனவே உள்ளவர்களுக்கு எடுக்கப்படமாட்டாது.

பெண்கள் பற்றிச் சொன்னார்கள். அதற்கு மற்ற உறுப்பினர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இன்றுள்ள சமுதாயத்தில் பெண்களும் கொடுத்து வாங்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் அலெலீல்—ஆக இருக்கிறார்கள். மத்திய அரசும் இதைப் பரிசீலித்து வருகிறது. 1938-ம் ஆண்டு கொடுத்தால் இப்போது அது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. என்றைக்கு இந்த மன்றத்தில் அறிவித்தோமோ அதற்கு முன்னால் இருந்து இல்லை.

கூட்டுறவுச் சங்கங்கள், நம் அரசுக்குச் சொந்தமான வாரியங்கள் இவைகள் கடன் கொடுப்பதுபற்றி ஒரு கருத்து சொல்லப்பட்டது. அரசுக்குச் சாதகமாக கொண்டு வந்தோம் என்று சொல்கிற கருத்து பொருத்தமுடையதல்ல. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் கூட்டுறவுக் கடன்களையெல்லாம் சட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அதே கட்சியைச் சார்ந்த மற்றொரு உறுப்பினர் அதற்கு அழகாகப் பதில் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் வட்டிக் கடைக்காரர்களைப் போன்றவர்கள் அல்ல. சட்டத்திற்கு உட்பட்டுத்தான் வட்டி வாங்க முடியும் என்று அவரது கட்சி உறுப்பினரே பதில் சொல்லிவிட்டார்கள். போட்டிருப்பது ஒரு வட்டி, உண்மையில் வாங்குவது ஒரு வட்டி என்பது கூட்டுறவுச் சங்கங்களில் இல்லை. அரசாங்க வாரியங்களிலும் இல்லை. அப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால் அரசின் கவனத்திற்கு கொண்டு வரலாம். ஆகவே கூட்டுறவுத் துறையையும் அரசாங்க வாரியங்களையும் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. எங்கெங்கு கூட்டுறவாளர்கள் இப்படிப்பட்ட சங்கடத்திற்கு உள்ளாகிறார்களோ, வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்களோ அவர்களுக்கு அவர்கள் திட்டத்தில் வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின் மூலம் பயனே இருக்காது என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதைக் கேட்கவே வேடிக்கையாக இருந்தது. அது எப்படி என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 1972-க்கு முன்னால் வாங்கிய கடன்கள், அதற்குப் பின்னால் வாங்கிய கடன்கள். இவற்றில், பின்னால் வாங்கிய கடன்களுக்கு வட்டி குறைவு. முன்னால் வாங்கிய கடன்களுக்கு இரண்டு மடங்கு அசலை விட வட்டி கொடுத்திருந்தால் முழுக் கடனும் ரத்தாகும். அது ஒரு பலன்.

ஒத்தி வைத்திருக்கிறார்கள். ஒத்தி வைத்ததை அனுபவிக்கிறார்கள். அப்படி அனுபவிக்கிறவர்கள் 30 ஆண்டுகள் அனுபவித்து விட்டால் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டாம். முப்பது ஆண்டுகளுக்குக் குறைவாக அனுப-



வித்திருந்தால் எவ்வளவு ஆண்டுகள் அனுபவித்திருக்கிறார்களோ அவ்வளவு ஆண்டுகளுக்கு ப்ரப்போர்ஷனேட்டாக அசலைக் கொடுக்க வேண்டாம். எதிர் காலத்தில் இந்த நிலையில் வட்டிக் கொடுக்கும் நிலை இருந்தால் அதைக் குறைக்கக் கூடியது ஒரு பலன்.

ஏற்கவே அதிக வட்டி வாங்கியிருந்தால்—ஏற்கெனவே இருந்த சட்டத்தில் ஒரு வழி இல்லை என்ற நிலை இருந்ததால் இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவில் ஒரு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே நாம் சொல்லியிருக்கிற 9 சதவீதத்திற்கு மேல் வட்டி கொடுக்கப்பட்டிருந்தால் கொடுத்திருந்தாலும் கூட மீண்டும் அதை ரீ ஓப்பன் செய்ய ஒரு புதுப் பிரிவைச் சேர்த்திருக்கிறோம். இது எப்படிப் பிற்போக்கானதாகும்?

வேறு நாடுகளில் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். சைனா பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் அங்கெல்லாம் போக விரும்பவில்லை. நம் தமிழ்நாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ்ப் பண்பாடு இவற்றிற்கு ஒட்டியமுறையில் சட்டத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறோம். வேறு நாடுகளில் வேறு வேறு கொள்கைகளின் அடிப்படையில் ஏதாவது செய்திருந்தால் அதற்குப் பதில் சொல்ல நான் தயாராயில்லை.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் க்ரெடிட் பாலிஸி மாறவேண்டும், ஆகவே மசோதாவை திருப்பியனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். இந்த மசோதாவிற்கும் அந்தக் கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை. நாம் அப்படி நம் நாட்டின் க்ரெடிட் பாலிஸி பற்றி தீர்மானித்துவிட முடியாது. அதை தீர்மானிப்பவர்கள் டெல்லியில் இருக்கிறார்கள். அந்த பாலிஸி மாற்றப்பட இதைத் திருப்பியனுப்ப வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

தீவிர வாதிகளுக்கு திருப்தி ஏற்படவில்லை. பிற்போக்குவாதிகள் என்று சொல்லமாட்டோம். அவர்கள் கட்சியில் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு தீவிரவாதி. டாக்டர் ஹாண்டே போன்றவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என்று சொன்னால் இரண்டு பேர்களுக்கும் திருப்தி ஏற்படாது. ஆனால் நான்கு கோடி தமிழ்ச் சமுதாயத்திற்கு திருப்தி ஏற்படும். கடன் சுமையினால் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். நகர்ப் புறங்களில் உள்ள ஏழைகளுக்கு திருப்தி ஏற்படும். நகர்ப்புறங்களில் வீட்டை ஈடு வைத்திருந்தால் அவர்களுக்கும் சலுகை கொண்டு வந்திருக்கிறோம். 1938 சட்டத்தில் இல்லை. இவ்வளவு புதிய அம்சங்களோடு நிறைவேற்றுகிற ஒரு சட்டத்தை, வட்டி விகிதம் என்னை வைக்க. 39-க்கு முன்னால் உள்ள கடன்களுக்கு தனிப் பிரிவு

போடப்படவில்லை என்ற காரணத்தால் இந்தச் சட்டம் மோசமானது, திருப்பி அனுப்ப வேண்டுமென்று சொல்வது பொருத்தமானதாகாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, we have given facilities to the agricultural income-tax assessees to compound the tax upto 30 standard acres. If they are not taxed, they would not be called "assessees" and that was the representation made before the Committee. Now an agriculturist owning upto 30 standard acres can escape from the provisions of this Bill.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அக்ரிகல்சரல் ரிலீப் ஆக்டைப் படித்துப் பார்த்தால் அதிலே இன்கம் டாக்ஸை சேர்த்துப் போட்டிருக்கும். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் பற்றிப் போடவில்லை.

இந்த மசோதாவிலே இப்படிப்பட்ட நல்ல கருத்துக்கள் இருப்பதால் இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: Is the hon. Member, Thiru Thangamani, pressing his amendment?

THIRU K. T. K. THANGAMANI: Sir, I am pressing my amendment.

The amendment was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) as amended by the Joint Select Committee be taken into consideration.'

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was taken into consideration clause by clause.

Clauses 2 to 11 were put and carried.

*Clause* 12.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 12 do stand part of the Bill.'



THE HON. THIRU O. P. RAMAN: Sir, I move the following amendment:—

For Explanation I, the following shall be substituted, namely:—

*Explanation I.*—For the purposes of this Section, the definition of "debtor" in section 2 (3) shall be read as if in the first proviso to the said Section—

(i) in clause (i), for the expression "31st March 1972", the expression "31st March immediately preceding the date on which the debt is incurred" were substituted;

(ii) in clauses (ii) and (iii) for the expression "the four half years immediately preceding the 1st March 1972", the expression "the four half years ending on the 31st March or the 30th September (whichever is later) immediately preceding the date on which the debt is incurred" were substituted.

The Government amendment was put and carried

Clause 12, as amended, was put and carried.

Clauses 13 to 28 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 21/72) நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த மசோதாவின் தேர்ட் ரீடிங்கில் பேசவேண்டுமென்று நினைத்தேன். நான் ஆரம்பத்தில் எழுப்பிய பிரச்னைகள், பதில் சொல்கிறபோது சரியாக வரவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டியின் ரிப்போர்டின் அடிப்படையில் இந்தமசோதா நிறைவேற்றப்படுவதாக இருக்கிறது. அப்படி நிறைவேற்றப்பட்டாலும் கூட இதற்குப் பின்னாலாவது இம்மாதிரியாக கடன் கொடுப்பது சம்பந்தமாக உள்ள சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரும் போதாவது, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் சிக்கல்கள் வருகிறபோது, அதையெல்லாம் ஒரு கன்சிலியேஷன் போர்ட் மூலமாக தீர்த்து வைக்க வேண்டுமென்ற ஆலோசனையை செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் கொடுத்து

இருக்கிறார்கள். அதைத் திருத்தமாக கொண்டுவர வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களெல்லாம் வற்புறுத்தப்பட்டார்கள்.

Members of the Select Committee, in their wisdom, had been persuaded not to give dissenting note.

அந்த மாதிரி 'டிசன்டிங் நோட்' வந்திருந்தால் ரொம்ப பலமாக இருந்து இருக்கும். கடைசியில் இந்த செலக்ட் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது, அரசாங்கத்தை இம்மாதிரியான ஒரு கன்சிலியேஷன் போர்டு போடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. கன்சிலியேஷன் போர்டு போட்டு 600 ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கு ஏற்கனவே கொடுத்ததற்கும் குறைந்த அளவுக்கு பாதுகாப்பு என்று வைத்திருக்கும் போது, அந்த அளவுக்கு பாதுகாப்பையாவது நடைமுறைக்கு அமலுக்குக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்படிப் போட்டால் தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்து, பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, அதை திருத்தி நிறைவேற்றியதன் பலன் ஏற்படும் என்பதைச் சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதும் பொறுக்குக் குழுவில் நடந்ததைத் தவறுதலாக எடுத்துக்கொள்கிறார்கள். நான் வருத்தப்படுகிறேன். இந்தச் சட்டத்திற்கும் கன்சிலியேஷன் போர்டுக்கும் சம்பந்தம் இல்லை. டிசன்டிங் நோட் என்பது வேறு. கன்சிலியேஷன் போர்ட் வேண்டுமென்று சொல்வது ஒரு கோரிக்கை. ஒரு வேண்டுகோள். டிசன்டிங் மினிட் எந்த ஸ்பிரிட்டில் சொல்லப்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. 1938-ம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னாலேயே 1932-ம் ஆண்டில் டெட் கன்சிலியேஷன் போர்ட் உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கிற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, அந்தச் சட்டம் ஒன்று சட்டப்புத்தகத்தில் இருக்கிறது. இதற்கும் இந்த மசோதாவிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. டிசன்டிங் மினிட் கொடுக்கக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டது என்று சொல்வது பொருத்தமற்ற வாதமாகும்.

புதிதாகச் சொல்லவேண்டாம். புதிதாகச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்பதில்லை. ஏற்கனவே 1932-ம் ஆண்டு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தைக் கொண்டு அரசாங்கம் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் ஒரு டெட் கன்சிலியேஷன் போர்டு உருவாக்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. அதை சிபார்சு செய்தால் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சொன்னோம். அவர்களும் சிபார்சு செய்து இருக்கிறார்கள். அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்-



கிறது. இப்போது கூட டெட் கன்சிலியேஷன் போர்டு வேண்டுமானால் போடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி அந்த போர்டு போட்டாலும் உண்மை நிலை என்னவென்றால், கோர்ட்டுக்கு போய் என்னுடைய கடன் எவ்வளவு என்று கணக்கு பார்த்து, எவ்வளவு கட்டினேன் என்று வாதிட்டுக் கொண்டிருக்காமல், இந்த போர்டில் போய் சொல்லி, எளிதான முறையில் வாதம் செய்து நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கு ஒரு அதிகாரம் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. யாராவது கடன் வாங்கியிருந்தால் 9 சதவிகித வட்டிக்கு மேல் வாங்கக்கூடாது என்று தீர்மானம் செய்து இருக்கிறோம். அசலும் வட்டியுமாக அசலுக்கு மேல் இரண்டு மடங்கு கட்டியிருந்தால் பாக்கியும் செலுத்த வேண்டிய தேவையில்லை. இதற்கும் டெட் கன்சிலியேஷனுக்கும் என்ன பொருத்தம் என்று புரியவில்லை. நாம் சிபார்சு செய்து இருக்கிறோம். ஏற்கனவே அந்தச் சட்டம் தமிழ் நாட்டில் இருக்கிறது. சட்டப்படி அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டில் இருந்து, டெட் கன்சிலியேஷன் போர்டு வேண்டுமென்று அரசாங்கம் கருதுமானால், அதைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயங்காது என்ற உறுதியை அந்தப் பொறுக்குக் குழுவிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே உறுதியை இதே மன்றத்திலும் கொடுக்க ஆசைப்படுகிறேன். அதற்கும் இந்த நிவாரணச் சட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நானும் அந்த ரிப்போர்ட்டை கூர்மையாகப் படித்தேன். அதிலே ஜெயராம செட்டியார் அவர்கள் இப்படி ஒரு கன்சிலியேஷன் போர்டு ஏற்கனவே இருந்தது. அதே மாதிரியாக ஒரு கன்சிலியேஷன் போர்டு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

The demand for a Conciliation Board could not be the subject-matter of a dissenting minute.

இங்கே செலக்ட் கமிட்டிக்கும் போவதற்கு என்னென்ன அதிகாரங்கள் என்று வருகிறதோ அதையெல்லாம் அன்றைக்கு செலக்ட் கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்து இருக்கிறோம். 'The Conciliation Board will be set up for this purpose.' நம்முடைய விதி 105-ல் சொல்லியிருக்கிறது. அம்மாதிரியான விஷயங்களை கவனிக்காமல் விட்டு விட்டார்கள். ஆகவே செலக்ட் கமிட்டிக்கு திரும்பி அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினேன். சரிய strict legislative interpretation என்ற முறையில் [illegible] அமைச்சர் போவது எனக்கு வருத்தமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் கன்சிலியேஷன் போர்டு பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி ஒரு சிறு விளக்கம் சொல்ல விரும்பு கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம், சரியானபடி அந்தக் கடன் வாங்கியவர் களுக்கு பலன் அளிக்க வேண்டுமென்றால், கடன் பல மாதிரியாக எழுதி வாங்கப் பட்டிருக்கிறது. அப்படி எழுதி வாங்கியது சரியல்ல என்பதை ஆராய்ந்து பார்க்க, ஒரு போர்டு இல்லாமல் இருந்தால் அது கஷ்டம். ஆகவே, கன்சிலி யேஷன் போர்டு போடுவதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா, சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா இல்லை என்பது அல்ல பிரச்னை. இந்தச் சட்டம் எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டதோ அது சரியாக யாருக்கு பயன்பட வேண்டுமோ அவர்களுக்கு பயன்பட வேண்டுமானால், ஏற்கனவே 38-ம் வருஷத்திலே ஏற்பட்ட சட்டத்திற்குப் பின்னால் கடன் தருகிறவர்களெல்லாம் பல்வேறு விதமான முறையில் சட்டத்திற்கு உட்படாத முறையில் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அதை மாற்றிக்கொடுப்பதற்கு இம்மாதிரியாக ஒன்று இருந்தால் தான் சரியாக இருக்கும் என்று செலக்ட் கமிட்டியினுடைய சிபார்சை எடுத்துக் கொண்டு, அந்த போர்டு அமைத்துத் தருவது தான் நல்லது என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் ஏற்கனவே பொறுக்குக் குழுவில் நீண்ட நேரம் விவாதித்த பிறகு விளக்கி கூறியிருக்கிறேன். இப்பொழுதும் அதைத் தான் சொல்கிறேன். இந்த சட்டம் கொண்டு வந்ததற்குப் பின்னாலே கன்சிலியேஷன் போர்டு வந்தது என்ற வாதமே தவறு. சட்டம் கொண்டு வந்தது 1938-ல். கன்சிலியேஷன் போர்டு ஏற்படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கும் சட்டம் ஏற்பட்டது 1936-ல். அந்த சட்டத்திற்கும், இந்த சட்டத்திற்கும் சம்பந்தமே கிடையாது. கன்சிலியேஷன் போர்டு போடுவது என்பது நாட்டிலே இன்டெப்டெட்னெஸ், கடன் சுமையை அனுசரித்து ஒரு முடிவு எடுக்கவேண்டிய விஷயமாகும்.

அது மட்டுமல்ல. இந்த போர்டு போட்டால் தான் இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கும் என்ற வாதமும் தவறான வாதம். ஏற்கனவே நான் இதைப் பல முறை விளக்கியிருக்கிறேன். சட்டப்படி எந்தக் கோர்ட்டுக்கும் போகலாம். கன்சிலியேஷன் போர்டு போட்டால் தான் செல்லும் என்பது அல்ல. இந்தச் சட்டத்தின் வாயிலாக இருக்கிற நீதிமன்றங்கள் மூலமாக இந்தச் சட்டத்தின் பலன் அத்தனையையும் நாட்டு மக்கள் பெற முடியும். நாடு முழுவதும் அதிக மாக கடன்காரர்களாக மாறி, நீதிமன்றங்களுக்கு போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, அப்பொழுது கடன் சுமை அதிகமாக இருக்கிறது என்றால், உடனே கன்சிலியேஷன் போர்டு ஏற்படுத்தக்கூடிய நிலைமை வரும். அதற்கான



அதிகாரம் அடங்கி இருக்கிறது. அவர்கள் சொன்னதை வெறும் சிபார்சு என்ற அளவில் மட்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கூறி னார்கள். உண்மையிலேயே கொள்கை அளவிலே இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் நிச்சயம் கன்சிலியேஷன் போர்டு உருவாக்குவதற்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை அரசாங்கம் பயன்படுத்தத் தவறாது என்ற உறுதியை இப்பொழுதும் சொல்லிக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

**(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/72) (கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு).**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இணை ஆய்வுக்குழுவால் மாற்றம் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1938-ம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1938) விதித்துறைகளில் பல, காலத்திற்கு ஒவ்வாதவை யாகிவிட்டன. இச்சட்டத்தை இன்றைய நிலைமைக்கேற்ப மாற்றியமைக்கவும் இம்மாநிலத்தின் கடன்பட்டுள்ள விவசாயிகளுக்குத் துயர்தணிப்பு அளிக்கவும் இச்சட்ட வரைவு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையினர் அறிவர்.

இச்சட்டவரைவு குறித்து வந்த மனுக்களைப் பரிசீலித்தும், நேரில் சான்று பகர வந்தவர்களை விசாரணை செய்தும், இணை ஆய்வுக்குழு இச்சட்ட வரைவில் சில மாற்றங்களைச் செய்துள்ளது. அவ்வாறு செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்களில் சிலவற்றை நான் கூற விழைகிறேன்.

---

* 19—8—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டது.

(1) மூலச்சட்டத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 6¼ சதவீத வட்டி வரையறுக்கப்பட்டிருந்தது. கூட்டுறவுத் துறையிலும், வங்கிகளிலும் நிலவிவரும் வட்டி விதங்களைக் கருத்திற்கொண்டு, மேற்படி வட்டி விதம் ஆண்டுக்கு 9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(2) மூலச்சட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்குச் சொந்தமான கட்டிடங் களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் அவருக்குக் கிடைக்கும் மொத்த ஆண்டு குத்தகை மதிப்பு ரூ. 600-க்கு மேற்பட்டாலும் அல்லது ரூ. 600-க்கு மேற்பட்ட அரை ஆண்டு வருமானத்தின்மீது அவருக்குத் தொழில்வரி விதிக்கப்பட்டிருந் தாலும் அச்சட்டத்தின் பயனை அவர் பெற முடியாது. இன்றைய நிலையைக் கருத்திற்கொண்டு, இந்த வருமான வரம்பு ரூ. 600-லிருந்து ரூ. 1,200 ஆக உயர்த்தப்படவிருக்கிறது.

(3) இச்சட்டவரைவில் குறிப்பிட்டுள்ளவாறு, 1966 அக்டோபர் 1 ஆம் நாளுக்கு முன்பு வாங்கிய கடன்கள் அனைத்திற்கும் 1971 அக்டோபர் 1-ஆம் நாளன்று நிலுவையாயுள்ள வட்டித் தொகையைத் தள்ளி விடவேண்டுமென முன்னர் இச்சட்டவரைவில் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைய நிலையில் தேவையற்றதாகுமென குழு கருதியது. எனவே, மூலச்சட்டத்தின் 8-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு நீக்கப்பட வேண்டும்.

(4) மூலச்சட்டத்தின் 9-A (10) (ii) (a) பிரிவின் கீழ் அடமான மீட்புரிமை 1937 செப்டம்பர் 30-ஆம் நாளுக்கும் 1948 ஜனவரி 30-ஆம் நாளுக்கும் இடையேயுள்ள கால அளவில் ஏற்பட்டிருந்தால், முதல் கொதுவை தாரரிடமிருந்து மாற்றல் பெற்றவருக்கும், முதல் கொதுவைதாரரின் வாரிசு களிடமிருந்து மாற்றல் பெற்றவருக்கும் அச்சட்டத்தின் 9-(A) (3) முதல் (9) வரையிலுள்ள பிரிவு பயன்படாத நிலை இருந்தது. இத்தகைய ஒரு விதித்துறை தேவையில்லையென்று குழு முடிவு செய்தது.

(5) "1971 அக்டோபர் 1 ஆம் நாள்" என்றிருப்பதற்குப் பதிலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இச்சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கத்தை அறிவித்த தேதியை, அதாவது "1972 மார்ச் 1-ஆம் நாள்" என்று அமைத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

(6) 1972 மார்ச் 1 ஆம் நாளுக்குப் பின்னர், ஒரு நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள நடவடிக்கை எதுவும், ஒரு விவசாயி இச்சட்டத்தின் பயனைப்பெற முடியாதவாறு அவரைத் தடுக்கும் வகையில் அமையக்கூடா தென்பது குழுவின் கருத்து. எனவே, சில நேர்வுகளில் இயங்காச் சொத்து



விற்பனைகளை ரத்து செய்வதற்கு நீதி மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் 23-C பிரிவை அமைத்துக் கொள்கிற புதிய பகுதி ஒன்று இச்சட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது.

இணை ஆய்வுக்கு குழுவால் மாற்றம் செய்யப்பட்டுள்ள இச்சட்டவரைவினை இப்பேரவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள் கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I am moving my amendment—

"The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) as reported by the Joint Select Committee be recommitted as a whole to make amendments relevant to the subject matter, namely to wipe off prior debts, reduce rate of interest, scale down debts, create conciliation Boards, etc."

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி: இதே மாதிரி இருக்கக்கூடிய தமிழ் நாடு டெட் ரிலீஃப் மசோதாவின் பேரில் நான் சொன்ன கருத்துக்களையேதான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த மசோதா விவாதிக்கப் பட்டு பொறுக்குக் கமிட்டியின் ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுக்குக் கமிட்டியில் உள்ளவர்கள் டிசெண்டிங் மினிட் கொடுக்க வில்லை என்பதை பெரிய ஆதாரமாக வைத்து இங்கே வாதிடுவது பொறுக்குக் கமிட்டிக்கு அவர்கள் செய்யக்கூடிய நியாயம் இல்லை என்று நான் இப்பொழுது கருதுகிறேன். காரணம், இந்தப் பொறுக்குக் கமிட்டி ரிப்போர்ட்டில் நான் பார்த்ததிலே ஆங்காங்கு பேசக்கூடிய விவாதத்தின் போது உறுப்பினர் களெல்லாம் தங்கள் தங்கள் கருத்துக்களை வற்புறுத்தியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வலியுறுத்தியிருக்கக்கூடிய விஷயங்களை கமிட்டி பூராவும் ஏற்றுக் கொள்ளாத நிலை இருந்தால், அவர்கள் அந்த விஷயங்களைத் தொகுத்து டிசெண்டிங் மினிட் கொடுத்திருக்கவேண்டும். அப்படிக் கொடுக்காதது உண் மையிலேயே தவறு. சாதாரணமாக பொறுக்குக் கமிட்டியில் கிளப்பியிருக்கக் கூடிய சிறு விஷயங்கள் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், அதை ஒரு டிசெண்டிங் நோட்டாக கொடுப்பது வழக்கம். இதில் கட்சிப் பிரச்னை ஒன்றும் இல்லை. டிசெண்டிங் நோட் கொடுக்கிறபொழுது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படியெல்லாம் சேர்ந்து டிசெண்டிங் மினிட் கொடுப்பது உண்டு. அப்படிச் செய்யாமல் இருந்து

விட்டார்கள். அப்படி ஒரு தவறு ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலேயே பொறுக்குக் கமிட்டி பூராவுமே அவற்றை ஏற்றுக்கொண்டது என்ற முறையிலே இங்கே விவாதிப்பது எந்த அளவுக்குப் பொருத்தம் என்று தெரியவில்லை.

பொறுக்குக்கமிட்டியைப் பற்றிய விதிகளில் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விதியின் முறைப்படி மீண்டும் அது பொறுக்குக் கமிட்டிக்குப் போனால், இம்மாதிரியான கருத்துக்கள் சபையிலே வந்திருக்கின்றன. கிளப்பிய சந்தேகத்தைப் பூராவுமே இனிமேலாவது டிரெண்டிங் ரிவிட்டாக கொடுத்துவிடலாம். அப்பொழுது அரசாங்கம் எந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறதோ அந்தக் கொள்கையை முறையாக நிறைவேற்றுவதற்கு உகந்ததாக இருக்கும் என்ற முறையில் தான் இதைத் திரும்பவும் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னேன். ஆகவே, மீண்டும் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று சொல்கிற பொழுது, அதை சபை ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக இந்த மசோதாவைப் பற்றி சொல்கிறபொழுது, கடன்பட்டவர்கள் சம்பந்தமாக ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ் ரொம்ப கடுமையாக இருந்தது. அந்தக் கடுமையெல்லாம் போய்விட்ட நிலையில் நாம் சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

It is stated in the Objects and Reasons—

"The Tamil Nadu Agriculturists Relief Act, 1938 (Tamil Nadu Act IV of 1938) was enacted with a view to prov.de for the relief of indebted agriculturists in this State. Many of the provisions of the said Act are exhausted provisions and are not up-to-date. The agriculturists in this State are still feeing very much distressed in view of the heavy burden of debts."

இது ஒரு புதிய கருத்து. சென்ற மசோதாவில் கூட இம்மாதிரி சர்க்கார் ஊழியர்கள், சாதாரண தொழிலாளர்கள் இவர்கள் கடன் படக்கூடிய காரணத்தினால் அவர்களுடைய செயல் திறமைகள் குறைந்து விட்டன. அவர்களுக்கு இந்தக் கடனை எப்படி திருப்பிக் கொடுப்பது என்ற கவலை இருக்கிறதென்று நல்ல அம்சத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த வரக்கூடிய அம்சமென்னவென்றால், உற்பத்தி பெருக வேண்டும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் அதிகமானால்தான் சுபிட்சம் ஏற்படும் என்று சொல்லக்கூடிய அத்தகைய முறையில் கடன்படக்கூடிய விவசாயிகள், அவர்களுக்குக் கடன் தொல்லை இருக்குமானால் நம் நாட்டில் விவசாயிகள் உற்பத்தி செய்யும்பொருள்களின் அபிவிருத்தி பாதிக்கப்படுமென்று நல்ல முறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



As a result of heavy burden of debts, the agricultural development in this State is very much affected. In order to remove the distress caused to agriculturists by the heavy burden of debts, it is felt necessary to amend the said Act suitably for the purpose.

நான் இதுவரையிலும் அறிந்து வந்த முறை சட்டத்தை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பிய பிறகு அது சில மாறுதல்களைச் செய்து தரும். அந்த மாறுதல்கள் ஏற்கனவே இருந்ததை விட இன்னும் நிவாரண தன்மையில் இருக்கவேண்டும். அமைச்சரவர்கள் இந்த மசோதாவை அறிமுகப்படுத்திய காலத்தில் பொறுக்குக்கமிட்டிக்கு நல்ல காரியங்களைச் செய்து விட்டோம் என்பதைப் போன்று சொல்லியிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய விஷயம். இந்த பொறுக்குக் கமிட்டி ரிபோர்ட்டின் ஒரு பகுதியை வாசிக்கலாம் என்று நினைக்கிறேன்.

Thiru S. Alagarswamy emphasised that the malpractices of obtaining promissory note for double the amount actually advanced in order to circumvent the law should be put an end to and some suitable method to determine the actual amount advanced in such cases should be evolved.

அதைத்தான் திரு. சுரேந்திரன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். மணி லெண்டர்ஸ் ஆக்டில் வரவேண்டிய விஷயம் இது. ஆயிரம் ரூபாய் கடன் பட்டிருப்பதை 2,000 ரூபாய் என்று எழுதி வைத்திருந்தால் அதை நிரூபிக்க எந்த வழி இருக்கிறது. இதைக் கோர்ட்டில் போய் சொல்லி நிரூபிக்க முடியுமா?

The Hon. Minister for Law said that they were contemplating amendment of Money-Lenders Act so as to place the burden of proof on the lender instead of on the borrower that the amount mentioned in the promisery note was actually advanced by him. Further they were also considering constitution of Village Courts. He told Thiru R. Ponnappa Nadar as the Negotiable Instruments Act applied to all kinds of negotiable instruments and not only to promissory notes, they had to write about it to the Government of India.

Thiru Sowdi S. Sundara Bharathi expressed the view that the Tahsildar be empowered to register the promissory notes under the Act with a view to provide an opportunity to the borrower to dispute the amount mentioned in the document on the ground that the actual amount advanced was less. The Hon. Minister for

Law remarked that the matter would not come under the purview of the Bill.

ஆகவேதான் நான் இந்த விவாதத்திலே அதைப் பற்றிச் சொன்னேன். சட்ட அமைச்சரவர்கள் He was giving a lengthiest view

அதற்காக இந்த விதியைச் சொன்னேன். சட்ட மன்றத்தில் இருக்கக் கூடிய விதியின் அடிப்படையில் ஒரு மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் அதை விரிவுபடுத்துவதற்கு அதற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில்தான் கைப்பொறுப்பு மசோதா சட்டமாக வந்துவிட்டது. கைப்பொறுப்பு சம்பந்தமாக தனி மசோதா கொண்டு வரவேண்டும் என்ற அளவிற்கு பொறுக்குக் கமிட்டி சொன்னதால் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த மாதிரியாக சென்ற கால அனுபவங்கள் இருக்கின்றன. அந்த முறையில் தான் இன்றைக்கு நான் சொல்வது. நான் சொல்வது கொஞ்சம் கடுமையாக இருக்கலாம். Money-lenders' lobby has been very active. அந்த ரிப்போர்ட்டுக்கு டிஸ்ஸென்ட் கொடுக்காதவர்கள் என்ற குற்றச் சாட்டை நான் சாட்டுகிறேன். நாம் ஒரு சிறு வசதியாவது விவசாயிகளுக்குச் செய்ய வேண்டுமென்று மசோதாவைக் கொண்டு வரக்கூடிய சமயத்தில் அதை எப்படியாவது வாபஸ் செய்ய வேண்டுமென்பதற்காக மறைமுகமாக லாபி வேலை செய்திருக்கிறது. செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் சாட்சி சொல்லியிருக்கக் கூடியவர்களைப் பாருங்கள். கஷ்டப்படக் கூடிய விவசாயிகள் இல்லையா? இவர்கள் எல்லாம் வந்து சாட்சி சொல்லாததன் காரணம் என்ன? பல விவசாய ஸ்தாபனங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்காக தனியாக ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அந்த ஸ்தாபனங்கள் எதுவும் வந்து சாட்சி சொன்னதாகத் தெரியவில்லை. என்ன அவசரத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது? ரிப்போர்ட்டிலே 3, 4 தினங்கள் சென்னையில் உட்கார்ந்து இந்த செலக்ட் கமிட்டிக் கூட்டம் நடந்திருக்கிறது. பல முக்கியமானவர்கள் சாட்சியம் சொல்ல முடியவில்லை. இரண்டு மசோதாவிற்கும் ஒரே 14 பேர்தான் கொடுத்த வாக்குமூலம் இருக்கக் கூடியவர்கள். சேம்பர் ஆஃப் காமர்ஸில் உள்ளவர்கள் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். மணலி கந்தசாமி அவர்கள் சொன்ன மாதிரி நினைத்திருக்கிறார்கள் என்று விவசாயிகளுக்கோ அல்லது ஏழை மக்களுக்கோ உதவி செய்ய வேண்டுமென்று சட்டம் கொண்டு வருகிற போதெல்லாம் அதை எதிர்க்கும் பிரசாரம் செய்கிறார்கள். எதிர்த்து எப்படியாவது அதை வாபஸ் செய்யக் கூடிய சக்தி அவர்களுக்கு வலுவாக இருக்கிறது. அந்த காரணத்தினால் முதல் சட்டம் அப்படியே வந்திருந்தாலும் திருப்திகரமாக இருந்து இருக்கும்.



செலக்ட் கமிட்டிக்குப் போகாத முறையில் வந்த மசோதா எல்.ஏ., பில் 22 ஆஃப் 72 சபைக்கு முன்னால் வந்து நிறைவேற்றப்பட்டிருந்தாலும் பரவாயில்லையென்று வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். நல்ல மசோதா, இதற்கான நோக்கத்தை தெளிவுபடுத்தச் சொல்லி, இந்த மசோதாவிற்கு நல்ல கருத்துக்கள் வேண்டுமென்று பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் அந்தப் பொறுக்குக் கமிட்டி அந்த மசோதாவினுடைய கூர்மையான தன்மைகளை கூர் மழுங்கடித்துவிட்டது. It has been considerably watered down. இதனால் விவசாயிகளுக்கு ஏதாவது பயன் கிடைக்கலாம். அது வேறு விஷயம். In spite of detective legislation some benefit may come to the agriculturists. எப்படியாவது அதிகமானவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற தன்மையில் காரியங்கள் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்கிறேன்.

ரிப்போர்ட்டினுடைய அம்சங்களைப் பார்த்தால் இன்னொரு இடத்தில் இந்த மார்ட்கேஜ் சம்பந்தமாக உள்ள பிரச்சினையையெல்லாம் சட்டம் தெரியாத ஒருவர் கிளப்பியிருக்கிறார். சட்டத்தினுடைய திறமையை வைத்துக் கொண்டு அமைச்சரவர்கள் பதில் சொல்லி அடக்கி விட்டார். இந்த முறையில் செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டு வருமென்று சொன்னால் அந்த அளவிற்குச் சரியாகப் படவில்லை. இதிலே இம்மாதிரி மணிலெண்டர்ஸ் ஆக்ட் பற்றி கூறுவது சரியாக இல்லை. ரிலீஃப் ஆக்ட் 1936-ல் சட்டமாக வந்த காலத்தில் இருந்த சிலருடைய கருத்துக்களையாவது கேட்டிருக்கலாம்.

* திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, பொறுக்குக் குழுவில் நடந்த விவாதங்களில் சிலவற்றைப் படித்துக் காட்டியதன் மூலம் யாரோ சிலர் சில கருத்துக்களைச் சொன்னதாகவும் அதை அமைச்சர் மறுத்ததாகவும் அங்கத்தினர் அவர்கள் சொல்வது பொறுக்குக் குழுவிற்கு நல்லதல்ல. இது முறையில்லை. இதில் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன். குறிப்பாக ஒரே பிரச்சினையை திரும்பத் திரும்ப திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் முன்னாலே வந்த மசோதாவிலும், இந்த மசோதாவிலும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். பொறுக்குக் குழுவில் அங்கத்தினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். பின்னாலே மினிட் ஆஃப் டிசென்டில் தராமல் விட்டு விட்டார்கள். எனினும், அந்தக் கருத்தை உடையவர்களே அவர்கள் என்கிறார். இந்த முடிவு தவறானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொறுக்குக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கிற காலத்தில் பல கருத்துக்களைச் சொல்லலாம். பொறுக்குக் குழு விவாதிக்கிற நேரத்தில் கருத்துக்களைச் சொன்னவர்கள் தாங்களாகவே வேறு சில விவரங்கள் தெரிந்ததற்குப் பின்னால்

தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கலாம். அதை விட்டு யாராக பூசித்துக் கொண்டு மினிட் ஆஃப் டிஸென்ட் கொடுக்காத நிலையில் அவர்கள் இந்த எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் மினிட் ஆஃப் டிஸென்ட் கொடுக்கவில்லை என்று நாம் யூகம் செய்வதும், அமைச்சரவர்கள் மீது அவதூறு ஏற்படுத்துவதும் தகுந்த முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, திரு. கந்தப்பன் அவர்கள் வருத்தப்படவேண்டாம். அவரே, மெம்பருக்கு சட்டம் தெரியாது என்று சொல்லிவிட்டார். தங்கள் கட்சியைச் சேர்ந்தவர் அப்படி சொன்னார் என்று அவர் பெருமைப்படவேண்டும். அதற்காக திரு. கந்தப்பன் அவர்கள் வருத்தப்படவேண்டாம். பொதுக்குக் குழுவில் என்ன கேட்கப்பட்டதோ அதற்குப் பதில் சொன்னேன். சட்டம் தெரிந்த மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதாகத் தெரியவில்லை. அப்படி அவர் சொன்னால் அதற்கும் நான் நன்றாகப் பதில் சொல்வேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது தனிப்பட்ட பிரச்னையல்ல. சட்டம் தெரிந்திருந்தும் சட்ட பிராக்டீஸ் செய்து பொய் காலம் ஆகி விட்டது. நான் சட்டப் படிப்பு படித்த, எனக்கு கடைசியில் சன்னத் கொடுக்கிற போது மாஸ்டர் என்னை சொன்னார் என்றால் The lawyer is not one who knows the law, but who finds it out. இம்மீடியட்டாக நான் சட்டத்திலே இயங்கக் கூடிய சட்ட அமைச்சருக்கு இருக்கக் கூடிய அளவிற்கு எனக்கு சட்டம் தெரிய வழியில்லை. அவர் சட்ட அமைச்சர் அவருக்கு லா டிபார்ட்மெண்டு உதவி செய்கிறது. ஆக, அவர் சில விஷயங்களை தெளிவிக்க முடியும். ஏன்னலே குறிப்பிட்ட சட்ட பிரச்னையை எடுத்து அதன் மேல் சட்ட விஷயங்களைப் பற்றி அவர் விவாதிக்கிறார் அவர் எந்தெந்த சட்ட புத்தகங்களைப் பார்க்க முடியுமோ, அந்தப் புத்தகங்களைப் பார்த்து எனக்குத் தெரிந்த சட்டத் திறமையை வைத்து நான் வாதாட முடியும். சட்ட விஷயத்திலே வெற்றியா, தோல்வியா என் விஷயமல்ல. நான் இந்த எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட இந்த ரிப்போர்ட் அண்டு ப்ரொசீடிங்ஸ் ஆஃப் தி ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி மீது பேசுகிறேன். அப்படி நான் சொல்லக் கூடிய வார்த்தைகளில் தவறிருந்தால் கூடிய வரையில் I generally confine myself to parliamentary procedure. என்னுடைய வார்த்தைகள் பார்லிமெண்டரி ப்ரொசீஜருக்கு உட்பட்டே பேசுவதற்கு முயற்சி செய்வேன். அப்படி ஏதாவது தவறிருந்தால் If you pull me up, I shall be grateful to you.



நான் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களை குறை சொல்லவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் தவறு செய்துவிட்டார் என்று சொன்னால் அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் இந்தச் சட்டத்திலே கருத்து வேறுபாடு இருந்தால் 'டிசன்டின் மினிட்' கொடுத்திருக்க வேண்டும். அப்படி கொடுக்காதது தவறு. அதற்காக எங்கள் கட்சி உறுப்பினர்மேல் தவறு என்றால் அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அது வேறு விஷயம்.

எப்படி இருந்தாலும் நான் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களை குறை சொல்லவில்லை; அவர்களை மாற்றவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களே இருக்கட்டும். அவர்களே இருந்தால்தான் இங்கே நடைபெறுகின்ற விவாதங்களை சிந்தித்துப் பார்த்து, மீண்டும் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியும். மக்கள் கருத்துக்களுக்கு ஏற்ப இந்தச் சட்டத்திலே இருக்கிற ஒவ்வொரு ஷரத்தையும் கூட புதிதாக மாற்றியமைத்தாலும் தவறில்லை. நாம் எந்த நோக்கத்திற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோமோ, அந்த நோக்கத்தின் அடிப்படையிலே இந்த மசோதாவிற்குத் தலைப்பு கொடுத்து பல நல்ல அம்சங்களை சேர்த்துக்கொள்வதற்கு நமது செலக்ட் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தலைப்பையே கூட மாற்றி அமைக்கலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரம் பெற்றதாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் இன்னும் நல்லமுறையில் திருத்தங்கள் செய்து இந்தச் சட்டத்தை கொண்டுவந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அது மட்டுமல்ல. செலக்ட் கமிட்டியிலிருந்து வந்த சட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நம்முடைய விதிகளும் சொல்லவில்லை. பார்லிமெண்ட் நடவடிக்கைகளும் அப்படி சொல்லவில்லை. அவசரம் அவசரமாக கொண்டு வந்தால் குறைகள் ஏற்பட்டிருக்கலாம். அதனால் திரும்ப அனுப்புவதில் தவறில்லை. விதிகளிலும் The House in its wisdom may refer it back to the same Select Committee என்பதாகத்தான் இருக்கிறது. ஆகவே அவசரத்திற்கு இடமில்லாமல், இதை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்யவேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசும்போது ஒன்றை விளக்கமாகச் சொன்னார்கள். ஒருவன் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால், பத்திரத்தில் இரண்டாயிரம் ரூபாய் எழுதிக் கொடுக்கிறார்கள். கடன் வாங்கியவன் நான்

ஆயிரம் ரூபாய்தான் வாங்கினேன் என்று எங்கே போய் சொல்வது? கோர்ட்டுக்குப்போனால் பத்திரத்திலே என்ன இருக்கிறதோ அதைத்தான் ஏற்றுக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இம்மாதிரியான குறைபாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு 'கன்சிலியேஷன் போர்டு' ஒன்று அமைக்கவேண்டும். **கன்சிலியேஷன் போர்டு என்பது டெக்னிக்கலாக சரியில்லை என்றால்** அதைப்போன்று ஏதாவது ஒரு போர்டு அல்லது ஒரு கமிஷன் அல்லது 'அக்ரிகல்சரிஸ்ட் புரொடெக்ஷன் போர்டு' என்று ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

'மணி லெண்டர்ஸ்' ஆக்டில் கூட 12 சதவிகிதத்திற்குமேல் வட்டி வாங்கக் கூடாது என்றுதான் இருக்கிறது. ஆனால் 24 சதவிகிதம் வட்டி வாங்குகிறார்கள். ஒரு லட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் என்றால் 12,000 ரூபாய் முதலிலேயே வட்டியாக பிடித்துவிடுகிறார்கள். அதன்பிறகு ஒரு வருஷம் ஆனவுடன் ஒரு 12,000 ரூபாய் வாங்கி விடுகிறார்கள். அதற்கு அடுத்த வருடத்தில் மூன்று மாதத்திற்குள் பணத்தைக் கொடுத்துவிட்டால் கூட மீண்டும் 12,000 ரூபாய் வட்டி வாங்கி விடுகிறார்கள். இப்படி 24 சதவிகிதம், 36 சதவிகிதம் வட்டி வாங்கி விடுகிறார்கள். கோர்ட்டிலே போனால் 12 சதவிகிதம்தான் வட்டி என்று சொல்லி விடுகிறார்கள். முதலிலேயே 12,000 ரூபாய் வட்டி பிடித்து விட்டார்கள் என்றோ அல்லது 88,000 ரூபாய்தான் வாங்கினேன் என்றோ கடன் வாங்கியவன் எப்படி நிரூபிக்க முடியும்? எங்கு போய் சொல்லமுடியும்? பிராமிசரி நோட்டில் என்ன இருக்கிறதோ அதைத்தான் எடுத்துக்கொள்வார்கள். கோர்ட்டிலே இந்த புகார் போவதாக இருந்தால் 6 சதவிகிதத்திற்குமேல் கொடுக்கமாட்டார்கள். தொகை அதிகமாக இருந்தால் சில தவணைகளில் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். இந்த வசதியைத் தவிர கோர்ட்டில் வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு நான் முன்பே சொன்ன மாதிரி ஒரு ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும். அந்த ஸ்தாபனத்தின் முன்னால் கடன் கொடுத்தவர்களையும், கடன் வாங்கியவர்களையும், ஆஜராகச் செய்து விசாரித்து முடிவு செய்வதற்கு இந்தச் சட்டத்திலே வகைசெய்ய வேண்டும். அப்படிச் செய்வதில் தவறு இல்லை.

இந்தச் சட்டத்தின் அமைப்பைப்பற்றி நான் சொல்வதை விட அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் இப்போது வந்திருக்கிற இந்தச் சட்டம் 1938-ம் ஆண்டுச் சட்டத்திற்கான திருத்தம் தான்.



"The Hon. Minister for Law explained that under the original Act the agriculturists were entitled to three kinds of benefits. Firstly, in respect of debts incurred before October 1932, all interest outstanding on October 1937 was deemed to be discharged, as there was economic depression all over the world during the period 1929–33. Secondly, where the repayment whether by way of principal or interest or both amounted to twice the amount of the principal, the debt was deemed to be wholly discharged. To the extent the repayment fell short of twice the amount of the principal, the amount would be deemed outstanding. Thirdly, there was the benefit of scaling down of interest by the Court in respect of new debts incurred after the Act came into force. He invited the views of the members as to whether all the three kinds of benefits should be given to the agriculturists in the present context. He also desiderd to know from them whether the principle underlying the first category of benefit, namely, wiping out of the entire interest during a particular period, might not be considered harsh from the point of view of creditors."

ஆனால் இன்றைக்கு நடக்கக்கூடிய விவசாய இயக்கம், தங்களுக்கு அளிக்கப்பட்ட கடனை வசூல்செய்வதை கொஞ்சம் தள்ளிவைக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். ஒரு 10 ஆண்டு காலத்திற்கு கடன் வசூலிப்பை நிறுத்தி வைக்கக்கூடாதா என்றுதான் கேட்கிறார்கள். 1938-ம் சட்டத்தில் மூன்று முக்கிய விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அம்சங்கள் இன்றைக்கு இல்லையா? விவசாயிகளுக்கு விளைபொருள் சரியாக கிடைக்கவில்லை என்பது உண்மை இல்லையா? 'ட்ரவுட்' வந்து பயிர்தொழில் சரியாக நடைபெறவில்லை என்பது உண்மை இல்லையா? இப்படிப்பட்ட நேரத்தில் தனியார் கடன்களுக்கு மட்டும் நிவாரணம் அளித்து விட்டால் போதுமா? அரசாங்க கடனுக்கு இது பொருந்தாதா? இவைகளை எல்லாம் யோசனை செய்து பார்க்கவேண்டும். கடன் நிவாரணம் என்றால் எல்லாக் கடன்களுக்கும் நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். நியாயமான காரணத்தை அறிந்து, அதற்கு தகுந்த பரிகாரம் காணவேண்டும்.

இந்த விஷயத்தில் விதவைகளுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்று திரு. வைத்தியநாதன் சொல்லி இருக்கிறார். நியாயமான முறையில் ஆப் சென்ட்-லான்ட் லார்டுகளும் அந்த மாதிரி சலுகையில் வரலாம். ஆனால் இன்றைக்கு கடன் கொடுத்தவர்கள் எவ்வளவு அதிகமான வட்டி வாங்கி வரு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 21

கிறார்கள் என்பதை நாம் அறியாததல்ல. ஆகவே, கடன் வாங்கி இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு சரியான நிவாரணம் கிடைக்கவேண்டுமென்ற ஒரு கருத்திலே நான் இவைகளையெல்லாம் யோசனை செய்யவேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன்.

[திரு. நா. வீராசாமி தலைமை]

'ரேட் ஆஃப் இண்டரஸ்ட்' பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மத்திய சர்க்கார்தான் அதிகமாக்கி கொடுக்க சொன்னார்கள் என்றால் 12 சதவிகிதம் ஆக்கி இருக்கலாம். இரு சாராருக்கும் நியாயம் வழங்கப்படவேண்டும். ஆகவே, திருப்பிக்கொடுத்தது என்று பார்க்கும்போது 6¼ சதவிகித அடிப்படையிலே பார்க்கவேண்டும். அப்படிச் செய்வது இரண்டு பேருக்கும் நியாயம் வழங்குவதாகத்தான் இருக்கிறது. 6¼ சதவிகித அடிப்படையில் வாங்கியதற்கு இருமடங்கு கொடுக்கப்பட்டிருந்தால் போதும் என்று வந்திருப்பது பொருத்தமானது.

"where any agriculturist has paid to any creditor any interest at a rate more than the rate specified in this section, the amount of interest so paid shall be calculated by the court at the rate specified in this section and the excess of the amount so paid shall be credited towards the principal"

என்பதாக அந்த 3 அம்சங்களில் ஒரு அம்சம் வந்திருக்கிறது. மற்ற இரண்டு அம்சங்களும் வந்திருக்கவேண்டும். அது இல்லாது 6¼ சதவிகிதம் உயர்த்தியிருப்பதும், 600 ஐ 1,200 ஆக உயர்த்தியிருப்பதும் நாங்கள் தெரிந்த பொருளாதாரத்தில் சரியில்லை. அன்றைக்கு இருந்த விலைவாசி ஒரு மடங்குதானா உயர்ந்திருக்கிறது? எத்தனையோ மடங்கு உயர்ந்திருக்கிறபோது இப்படிச் செய்திருப்பது சரியல்ல. ஆகவே, This Bill may be referred back to the Select Committee".

என்பதாக என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தி, இதை மீண்டும் நல்லமுறையில் பரிசீலிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேச வேண்டியவர்கள் நிறைய இருக்கிறார்கள். இது அல்லாமல் வேறு ஒரு சட்ட முன்வடிவும் இருக்கிறது. ஆகவே, இனி பேசுகின்றவர்கள் புதிய கருத்து இருந்தால் அதைமட்டும் சொல்லி குறுகிய நேரத்தில் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.



1972 ஆகஸ்ட் 21 ]

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, விவசாயக் கடன் நிவாரண மசோதாபற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகள் கடன் தொல்லையினால் பெரிதும் அவதிப்படுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்று பார்க்கவேண்டும். அதை ஆராய்ந்து அவர்களுக்கு எந்த வகையிலும் உதவி செய்ய வழிவகைகளைத் தேட வேண்டும். விவசாயத்திற்கு தண்ணீர் வசதிதான் மிகமிக முக்கியமானது. ஆடி மாதம் மழை பெய்யும் காலம். அந்தக் காலத்திலேயே கோவையில் மழை கிடையாது. சிறுவாணித் திட்டத்தில் ஒரு நாள் விட்டு ஒருநாள் தான் குடிதண்ணீருக்கே தண்ணீர் கிடைக்கிறது. விவசாயம் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் அவதிப்படுகிறபோது கடன் பாக்கிக்காக அவர்களை நெருக்கினால் என்ன செய்வார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த மசோதாவைப்பற்றிப் பேசினால் நன்றாக இருக்கும். ஏற்கனவே பல நாட்கள் அவையை நீட்டித்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். உங்கள் தலைவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். நீங்கள் புதிய கருத்து ஏதாவது இருந்தால் சொல்லவும்.

**திரு. என். மருதாசலம்:** இது புதிய கருத்துதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** மசோதா சம்பந்தப்பட்டதாகச் சொல்லுங்கள். கோயம்புத்தூர் சிறுவாணி என்பதாக ஒவ்வொரு ஊரையும் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால் நேரம் இல்லை.

**திரு. என். மருதாசலம்:** என்னுடைய கருத்து 5 ஏக்காருக்கு உட்பட்ட எல்லா விவசாயிகளுக்கும் எந்தவிதமான கடனும் இல்லாமல் நிவாரணம் ஏற்படும்படியாக இந்த மசோதாவில் செய்யவேண்டும். அது எந்தக் கடனாக இருந்தாலும் அதைத் தள்ளுபடி செய்யவேண்டும். இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிற விவசாயம் நசித்துப்போகாதபடிக்கு விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு தண்ணீர் வசதி செய்யவேண்டும். அது இல்லாத காரணத்தினால் விவசாயிகளின் கடன் தொல்லை அதிகரித்துக்கொண்டே போகிறது. சிறுநிலக்காரர்களும் சரி, பெரிய நிலக்காரர்களும் சரி நிலத்தை விற்று விட்டுப்போகக் கூடிய நிலைதான் இருக்கிறது. மின்சார ரேட்டு மேல் நாடுகளில் அதிகமாக இருப்பதைக் காட்டுகிறார்கள். இங்கே கோவையை எடுத்துக்கொண்டால் 200 அடிக்குக் கீழே இருந்து தண்ணீர் இறைக்க வேண்டும் என்கிறபோது கீழே ஒரு

## மாநகர் போக்குவரத்து

* 225 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்த்துவிட்டு அங்கே பாதாள ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தவும், துரித போக்குவரத்தினை துவக்கவும், திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழு ஆலோசனை ஏதும் கூறியுள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினிடத்திலே இதுபோன்ற பாதாளரயில் விடும் திட்டம் பரிசீலனையில் இருப்பதைப் பத்திரிகையில் பார்த்ததாக எனக்குக் கவனம். எனவே இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழுவினிடத்திலே இதற்கு ஆலோசனை இல்லை என்று சொன்னேன். மாநில அரசினிடத்திலே அப்படிப்பட்ட ஆராய்ச்சி இருக்கிறது. டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அவர்களும் சிப் எஞ்சினியர், ஹைவேஸ் அவர்களும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பரிசீலனை செய்து இருக்கிறார்கள். அதைப்பற்றி டவுன் பிளானிங் டைரக்டர் அவர்கள், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் சர்குலர் ரயில்வே ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலனை செய்து அதைப்பற்றி ரயில்வே இலாகாவோடு தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் இன்னும் நடைமுறைக்கு வர நீண்டகாலம் ஆகும். ஆகவே அதுவரையிலும் காத்திராமல் எப்படி நம்முடைய அரசாங்கம் கூவத்தைச் சீரமைத்ததோ அதைப்போன்று பக்கிங்ஹாம் கால்வாயையும் சீரமைத்துப் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர் எடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்டர்கிரவுண்ட் ரயில் விடுவதுபற்றி



1972 ஆகஸ்ட் 21]

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற விவசாயிகள் கடன் நிவாரண மசோதா சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களையும் சொல்வதற்கு விரும்புகிறேன்.

1938-ம் வருடம் ராஜாஜி அவர்கள் கடன் நிவாரண சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்பிறகு, நம்முடைய அரசாங்கம், 34 வருடங்களுக்குப் பிறகு ஒரு நிவாரண திருத்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்டத்தின்படி, பார்த்தோமானால், 34 ஆண்டுகளுக்குப் பிறகும் விவசாயிகளுடைய வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கிறது, விவசாயிகள் எவ்வாறு கடன்பட்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள், கூட்டுறவு நிவாரணச் சங்கங்கள் மூலமாக எத்தனை கோடி ரூபாயை வாங்கி, தங்களுடைய குடும்பத்தை நடத்துகிறார்கள், விவசாயம் செய்கிறார்கள் என்பதை எல்லாம் விரிவாக பரிசீலனை செய்து அதற்குரியவாறு விவசாயிகளுக்கு எந்த எந்த வகையிலே உதவி செய்யவேண்டும், எப்படி விவசாயிகள் லேவாதேவிக்காரர்களிடம் ஒன்றுக்கு 10 சதவிகிதமாக வட்டிக்கு வாங்கி தங்களுடைய வாழ்க்கையை கடனிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து அதற்குரிய முறையிலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் சொல்லத்தோன்றுகிறது.

இந்த விவசாயிகள் சம்பந்தமாக, முன்னாலே ஒரு நிபுணர், விவசாயிகள் கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு கடன் பெற்று தங்களுடைய வாழ்க்கையை நடத்தக் கூடிய நிலையிலே இருக்கக் கூடிய இந்த விவசாயிகளுக்கு இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் இன்றையதினம் அவர்கள் வாங்கியிருக்கக் கூடிய கடனுக்கு 6¼ சதவிகிதம் முதல் 9 சதவிகிதம் வரையிலே வட்டி கொடுக்கலாம் என்று உயர்த்தி இருப்பதுதான் நிவாரணம் என்று சொல்லாமேயொழிய, விவசாயிகளுக்கு கடன் பெற்றிருப்பவர்களுக்கு எந்தவிதமான சாதகமும் இல்லை விவசாயம் செய்வதற்கோ, குடும்பம் நடத்துவதற்கோ கிராமங்களிலே ரூ. 100 வாங்கினால் இரண்டு மூட்டை நெல் வட்டியாக கொடுக்கவேண்டும். அதைப் போல், குறைவாக வாங்குபவர்கள், ரூபாய்க்கு 2 மரக்கால் என்று வாங்கி வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

லேவாதேவிக்காரர்கள் மூலமாக, கடன் சுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். கடன் சுமையை தாங்கமுடியாத அளவிற்கு அவர்கள் இருக்கிறார்கள். வாங்கியிருக்கக்கூடிய கடன்களை கணக்கில் எடுத்து அவர்கள் செலுத்தியிருக்கக்கூடிய வட்டி சதவிகிதத்தைப் பார்த்து, அவர்கள் வாங்கியிருக்கக்கூடிய கடனைப்போல் ஒரு மடங்கு வட்டி கொடுத்திருந்தால் அந்தக் கடனை ரத்து

பப்ளிக் டிரஸ்டாக இருந்தாலும்கூட பெரும்பகுதி தனிப்பட்டவர்களுக்குப் போகும் என்று தெரிந்தால் அதை முழுவதும் ரத்து செய்து பிரைவேட் டிரஸ்டாகக் கருதப்படும் என்று சொல்லியிருக்கிறோம். பப்ளிக் டிரஸ்ட், சாரிடபிள் நேச்சராக இருந்தால் உச்சவரம்பு 5 ஏக்கர் இருக்க வேண்டுமென்று வைக்க சட்டத்திலே சிபாரிசு செய்திருக்கிறோம். எனவே அறக்கட்டளைகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு தூரம் இதிலே தலையிட்டுச் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடசாலைகள், கல்லூரிகளுக்கு நிலம் எதற்கு என்று கேட்டார்கள் 'பெரியவர் மணலி. அவர்கள். கொடுத்திருக்கும் நிலம் போதாது, அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் தெரிவிப்பது கல்லூரிகளுக்கு கட்டிடங்களை விரிவாக்கவோ அல்லது கல்லூரிகளின் நடவடிக்கைகளை விரிவாக்கவோ இந்த இடத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. கல்லூரிகளுக்குப் பயிரிடும் பூமி எவ்வளவு கொடுக்கலாம் என்று தந்திருக்கிறோம். 40 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வரையில் தந்திருக்கிறோம். இது போதும் என்று கருதி இந்த யோசனை தரப்பட்டிருக்கிறது. தேவையில்லை என்பது இன்னொரு கருத்து. அதன் மூலம் பல கல்லூரிகளுக்கு, உயர்தர பாடசாலைகளுக்கு வரும் வருமானத்தைத் தடை செய்து நிறுத்தப்படுவது சரியல்ல. இவைகளையெல்லாம் அரசாங்கமே ஏன் கொடுக்கக்கூடாது, நிலத்தை உழுபவனுக்கே ஏன் நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நான் துவக்கத்திலேயே சொன்னேன். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையில் பின்வாங்கிய அரசு அல்ல இது, அந்தக் கொள்கையை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால், அதை அடைவதற்கான வழிமுறைகள் உண்டு. நாங்கள் எடுத்திருக்கும் வழிமுறை அவைகளிலே ஒன்று. இந்த முறை சரி என்று மனத்தில் கருதியதால் இந்த முறைக்கு வந்தோம்.

இந்தச் சட்டம் பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சட்டம். யாருக்கோ பயந்து கொண்டு இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது என்பது சரியல்ல. இன்றைய





சமுதாயத்திற்கேற்ப இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இந்தக் காலத்திற்கேற்ற முறையில் திருத்தியிருக்கிறோம், ஆனால் காலப்போக்கில் மேற்கொண்டு இந்தச் சட்டம் திருத்தப்படலாம் என்று கூறிக்கொண்டு இந்தக் குழுவின் சிபாரிசுகளை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவையின் முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 19/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## பிரிவு 3

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—

In sub-clause (4) of clause 3, the following items, viz., (ii), (a) and (b) shall be deleted :

"(ii) Notwithstanding anything contained in sub-clause (i) no such institution as is referred to in that sub-clause; and

(a) holding land, on the date of the commencement of this Act, less than the extent specified in the corresponding entry in column (2) of the Table under sub-clause (i), shall acquire by any means whatsoever, after that date, any land in excess of the extent so held; and

[திரு. செ. மாதவன்] [1972 ஆகஸ்ட் 21

நிரூபிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அப் பொறுப்பை நிரூபிப்பதற்கே வாய்ப்பில்லையென்று இவர்கள் சொல்வது வியப்பாக இருக்கிறது. ஏதாவது ஒரு கோர்ட்டில்தான் அதை நிரூபிக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர் முன்னால் அதை நிரூபிக்கமுடியாது. அதை சாதாரண நீதிமன்றங்கள் முன்னால் நிரூபிக்கவேண்டுமா, டெட் ரிகன்சிலியேஷன் போர்ட் முன்னால் நிரூபிக்க வேண்டுமா, அல்லது இப்பொழுது கொண்டு வருகிறோமே, விலேஜ் கோர்ட்ஸ் அவை முன்னாலே அதை நிரூபிக்கவேண்டுமா என்பது விவாதத் திற்குரியது. ஆக, நேரடியாக வாய்ப்பே இல்லையென்றுசொல்வது முற்றிலும் தவறான கருத்தாகும்.

ஆனால் நிரூபிக்கும்போது சங்கடங்கள் இருக்கின்றன. அதைத்தான் மணலி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கடன் கொடுத்தவனுக்கும் பொறுப்பு இருக்கவேண்டுமென்ற காலம் வரவேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் ஏற்றுக்கொண்டு மணி லெண்டர்ஸ் ஆக்டிலே திருத்தம் கொண்டு வருகிறோம். நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் ஆக்டை திருத்த மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். இதிலே சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. புதிதாக, மன்றங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். இந்த சட்டத்திற்காக அல்லவே அல்ல. சட்டம் வருவதற்கு முன்னாலேயே அதிகாரம் ஏற்கனவே இருக்கும்பொழுது இந்த ஆக்டிலே ஏன் போடவேண்டுமென்றுதான் எனக்குப் புரியவில்லை. அதற்கும் இந்தச் சட்டத்திற்கும் என்ன சம்பந்தம்? அது ஏற்கனவே இருக்கிற அதிகாரம்.

புதிதாக ஒன்றைச் சொன்னார்கள். அதைப் பாராட்டுகின்றேன். அதுவும் பொறுக்குக் குழுவிலே வந்தது. அதற்குப் பதில் சொன்னேன். 1932-ம் ஆண்டு என்று ஒரு ஆண்டைப் போட்டு, அந்த ஆண்டிற்கு முன்னாலே உள்ள கடன்களை wiping out of the entire interest என்று கொடுத்தார்கள். இது இப்பொழுது தேவையா என்ற பிரச்னை வந்தது. இப்பொழுது எந்த ஆண்டு என்று குறிப்பிட வேண்டும். 1972-ம் ஆண்டிற்கு முன்னாலேயுள்ள எல்லா புரோநோட்டுகளுக்கும் Scaling down benefits கொடுத்தால் தான் நல்லது. 1932-க்கு முன்னால் இருந்ததை வைப்பிங் அவுட் செய்யவேண்டுமென்ற அந்த முறையை ஏற்கனவே அறிவித்தேன். ஆனால் அந்த கொள்கை தேவையில்லையென்று இப்பொழுது அரசாங்கம் கருதுகிறது. பொறுக்குக் குழுவும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த மசோதா மீது எவ்வளவு ஆத்திரம், எவ்வளவு ஆத்திரம் என்று கே. டி. கே. அவர்கள் நிரூபித்தார்கள். ரூ. 600 என்று போட்டதை



1972 ஆகஸ்ட் 21] [திரு. செ. மாதவன்]

ஏன் ரூ. 1,600 என்று போட்டீர்கள் என்று கேட்டார்கள். என் மீது உள்ள வெறுப்பிலே இப்படி ஒரு கருத்தை எப்படி சொன்னார்கள் என்றுதான் புரிய வில்லை. இந்த நாட்டிலே உள்ள ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு உள்ள சாதாரணமான ஒரு. . .

திரு. கே. டி. கே. தங்கமணி: ரூ. 600-ஐ ரூ. 1600 என்று ஏன் போட்டீர் கள் என்று நான் கேட்டேன் என்பது சரியல்ல. இன்றைக்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. விலைவாசிகள் எல்லாம் 5 மடங்கு, 10 மடங்கு உயர்ந்தி ருக்கிறது. என்னுடைய வாதம். ரூ. 6,000 ஆக்கிவிடவேண்டுமென்பதுதான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது அவர்கள் புதிய வாதத்தைச் சொல்லியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர் கள் முன்னாலே சொன்னது 600-ஐ 1,200 ஆக்கிவிட்டீர்களே என்பதுதான். ப்ராப்பர்டி டாக்ஸ், ப்ரொபஷனல் டாக்ஸ் இவற்றிற்காக 600 ரூபாய் அளவுக்கு விதிவிலக்குக் கொடுத்திருந்தோம். அதை இப்பொழுது 1,200 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்படிக் கூட்டியிருப்பதால் அதிகமான பேர் களுக்கு நன்மைகள்தான் கிடைக்கும். அதை மறந்துவிட்டு அவர்கள் பேசு கிறார்கள்.

இப்பொழுது சொல்கிறார்கள் 600-ஐ 6,000 ஆக்கவேண்டுமென்று. ப்ராப்பர்ட்டி டாக்சுக்காகவும் சொல்வதும் சரியாக இருக்கவேண்டும். புரொபஷனல் டாக்சுக்காகவும் 6,000 ரூபாய் விலக்கு என்றால் கேட்பவர்கள் சிரிப்பார்கள். அதை அந்த அளவுக்கு வருமா என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே மக்களுக்கு அதிகமான நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற முறையிலேதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்த பில்லிலே சொல்லப்பட்ட நோக்கங்கள் பொறுக்குக் குழுவிலே போனதனால் என்ன என்ன விடப்பட்டு விட்டன, எது எதிலே நாம் தீவிரம் காட்டாமல் குறைத்துவிட்டோம் என்று விளக்கமாக அவர்கள் சொன்னால் அதற்கு நாம் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

அவர்கள் சொன்னது எல்லாம் வட்டி பற்றி. மத்திய சர்க்கார் சொன்னது, மத்திய சர்க்கார் நியாயத்தைச் சொன்னால்—மத்திய சர்க்கார் சொன்னதால் ஏற்றுக்கொள்ளவேண்டுமா என்பது அல்ல—அதை ஏற்றுக்கொள்ளலாம். வைப்பிங் அவுட் பற்றிச் சொன்னார்கள். அதற்கும் நான் பதில் சொல்லிவிட் டேன். புதிதாக நாங்கள் என்ன லிவரத்தைக் குறைத்துவிட்டோம், எந்த எந்த நன்மைகளை நாங்கள் எதிர்த்துவிட்டோம். ஏழை மக்களுக்கு வாக்கூடிய

நன்மையை நாங்கள் எங்கே தடுத்துவிட்டோம் என்று அவர்கள் விளக்கமாக எடுத்துக்காட்டவில்லை. அப்படி அவர்கள் சொல்லாத நிலையில் நாமே யூகித்துக் கொண்டு பதில் சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன்.

சட்ட மன்றம் ஒரு பொறுக்குக் குழுவைப் போடுகிறது. பொறுக்குக் குழுவிலே இத்தனை நாட்கள் என்று நாட்களை நிர்ணயித்து அந்த நாட்களுக்குள் யார் வேண்டுமானாலும் சாட்சியங்கள் சொல்லலாம் என்று விதிக்கிறோம். ஒரு வேளை நாட்டு மக்களுக்கு பொறுக்குக் குழு நன்மையைத்தான் செய்யும் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தால் இங்கே எதிர்த்துத் தெரிவிக்கலாம். அதை விட்டுவிட்டு அவர்கள் பொறுக்குக் குழுவைப்பற்றிச் சொல்லும், அதற்கு அவமதிப்பை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு ஏதாவது சொல்ல வேண்டுமென்ற முறையிலேதான் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன்.

பொறுக்குக் குழு கூட்டத்தைப்பற்றி பத்திரிகைகளிலே எல்லாம் போட்டோம், எல்லோரும் சாட்சியம் சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் இங்கே சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே விட்டுப்போன கருத்துக்கள் என்ன என்ன என்பதைச் சொல்ல முடியுமானால் சொல்லுங்கள், இந்தக் கருத்து விடப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படியில்லாத முறையில் ஏதாவது அபாண்டமாய் சொல்லி, ஏதாவது அவதூறு சொல்லி பொறுக்குக் குழுவில் உள்ளவர்களுக்கு ஏதாவது கற்பித்துக் கூறவேண்டுமென்ற முறையிலே கற்பனையாக கூறவேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் கூறியது இருந்ததே தவிர, நியாயத்தின் அடிப்படையிலே, சட்டத்தின் அடிப்படையிலே ஏழை மக்களின் சார்பிலே எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டம் ஏழை மக்களுக்கு நன்மை தரக்கூடிய சட்டமாக அமைந்திருக்கிறது. உறுப்பினர்கள் எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : (Thiru N. Veerasami) : Now I will put the amendment of the hon. Member, Thiru K. T. K. Thangamani, to the vote of the House.

The question is—

'That the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) as reported by the Joint Select Committee be recommitted as a whole to make amendments relevant to the subject-matter, namely to wipe of prior debts, reduce rate of interest, scale down debts, create conciliation Boards etc.,'



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

Clauses 2 to 25 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

'That the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) (as amended by the Joint Select Committee) be passed.'

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was passed into law.

**(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) (கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு).**

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, *தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) (கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாமென நான் முன்மொழிகிறேன்.

தொழிலாளர்கள் நலனையும் அவர்களைச் சார்ந்துள்ளோர் நலனையும் ஊக்குவிப்பதற்காகத் தொழிலாளர் நல நிதி ஒன்றினை நிறுவுவதன் அவசியம் பல ஆண்டுகளாக உணரப்பட்டு வந்திருக்கிறது. இந்திய அரசு நியமித்த தொழிலாளர் நலக்குழு எல்லா மாநிலங்களிலும் தொழிலாளர் நல நிதியினை ஏற்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. தொழிலாளர் நல நிதி ஒன்றைச் சட்ட வரைவில் அமைக்க வேண்டுமென்று தொழிலாளர் நல தேசிய ஆணைக் குழுவும் ஆலோசித்துப் பார்த்து, ஆலோசனை வழங்கியது. இதனை இந்த அரசு ஆலோசித்து தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்துவதென இம்மாநிலத்திற்கெனத் தொழிலாளர் நல நிதி சட்ட மன்றத்தின் கடந்த கூட்டத் தொடரில் முடிவு செய்தது. அதற்கிணங்க தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டவரைவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) கொண்டுவரப்பட்டது. சட்டமன்றப் பேரவையின்

* 17—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

14 உறுப்பினர்கள், சட்ட மன்ற மேலவையின் 7 உறுப்பினர்கள் கொண்ட இணை ஆய்வுக் குழுவின் ஆய்வுக்காக இச் சட்ட வரைவு அனுப்பி வைக்கப்பட்டது.

தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலதிபர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தனிப்பட்ட நபர்கள், நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் ஆகியவர்களைக் குறிப்புரைகள் அனுப்புமாறு இந்த இணை ஆய்வுக்குழு கேட்டுக் கொண்டது. பற்றுள்ளவர்கள் அளித்த வாய்மொழி சாட்சியத்தையும் இக்குழு பதிந்து கொண்டது. பற்றுள்ளவர்கள் பணிந்தனுப்பிய குறிப்புரைகளிலும் குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியத்திலும் உள்ள பல்வேறு கருத்துரைகளை இக்குழு பரிசீலனை செய்தது. இந்த ஆய்வுக்குழு ஏழு முறை கூடி சட்ட வரைவின் ஒவ்வொரு பிரிவையும் ஆராய்ந்து சட்ட வரைவில் சில மாறுதல்களைச் செய்தது. குழுவின் அறிக்கையும் திருத்தப்பட்டுள்ள சட்ட வரைவும் உறுப்பினர்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டுள்ளன. சட்ட வரைவில் குழு சேர்த்துள்ள, முக்கியமான சில மாறுதல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) இரண்டாவது பகுதியின்கீழ் "தொழிலாளர்" என்னும் சொல்லின் பொருள் விளக்கம் திருத்தப்பட்டுள்ளது. பெரிதும் நிர்வாக அல்லது மேற்பார்வைப் பொறுப்புள்ளவர்களாய் ரூ. 750-க்கு மேல் ஊதியம் வாங்குபவர்கள் நீங்கலாக 12 திங்கள் கால அளவில் முப்பது நாட்களுக்கு ஒரு நிறுவனத்தில் பணி புரியும் அனைவரையும் உட்படுத்தும் வகையில் இப்பொருள் விளக்கம் திருத்தப்பட்டுள்ளது.

(2) "நிறுவனம்" என்னும் சொல்லின் பொருள் விளக்கம் உணவகங்களும் (ஓட்டல்கள்) அடங்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(3) மாதிரி நிலை ஆணைகளின் 20-வது ஆணையின் கீழும் 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின் 9 (2) பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையின் கீழும் பிடித்துக் கொள்ளப்படும் தொகைகளைத் தொழிலாளர் நல நிதிக் கணக்கில் சேர்ப்பதற்காக 3-வது பகுதியின் கீழ் விதித்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் சட்டங்களை மீறியதற்காகத் தொழிலதிபர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற அபராதத் தொகைகளை இந்த நிதியில் சேர்ப்பதற்கும் இப்பகுதியின் கீழ் தக்க மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(4) தொகை கொடுக்கப்படாமல் சேர்ந்து வந்திருக்கும் விவரத்தைச் செய்தித் தாள்களில் வெளியிட வேண்டும் என்ற கட்டாயமும் 13-வது பிரிவின் கீழ் நீக்கப்பட்டுள்ளது.



(5) 17-வது பகுதியின் கீழ் வாரியம் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் கீழ்க்கண்ட இனங்களை சேரும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன:—

(க) சமுதாய சமூகக் கல்வி நிலையங்கள்;

(ங) வாழ்க்கைத் தொழிற்பயிற்சி;

(ச) சமுதாயத் தேவைகள்;

(ஞ) பொழுது போக்கும் ஏனைய மனமகிழ் நடவடிக்கைகள்;

(ட) காச நோயாளி நலம் பேணும் மனைகள்;

(ண) நல வாழ்வு விழைவிடங்களில் விடுமுறை இல்லங்கள்;

(த) தொழிலாளரின் வீட்டுப் பெண்டிருக்குப் பகுதி நேர வேலை;

(ந) பாலர் பள்ளிகள்;

(ப) சிறுவர்களுக்கு ஊட்டச் சத்துணவு;

(ம) உடல்வலிமையற்ற தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகள்;

(ய) இச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட பணியாளர்களின் ஊதியப் படிகள் உட்பட இச்சட்ட நிர்வாகச் செலவு;

(ர) தொழிலாளரின் வாழ்க்கைத்தரத்தை வசதிப்படுத்தவும் தொழிலாளரின் சமூக நிலையை மேம்படுத்தவும் உகந்தவையென வாரியம் கருதும் பிற நோக்கங்கள்.

(6) வாரியத்தின் தணிக்கையிடப்பட்ட கணக்கு விவரத்தை சட்ட மன்றத்தின் இரண்டு அவைகளிலும் வைப்பதற்கு வகை செய்யும் முறையில் 19-வது பகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(7) பல்வேறு நிறுவனங்கள் செய்யும் தொழிலாளர் நலச்சார்பு செலவுகளை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்த 33-வது புதிய பகுதி வாரியத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. தொழிலாளரின் நலனை ஊக்கி வளர்ப்பதற்கேற்ற வகையில் நிதியைப் பயன்படுத்துவதில் நிறுவன அதிபர்களைக் கட்டளையிடுவதற்கும் வாரியத்துக்கு இது அதிகாரம் அளிக்கிறது.

(8) 33-வது புதிய பகுதியின்கீழ் வாரியம் பிறப்பிக்கும் கட்டளைகளை நிறைவேற்றத் தவறுவதற்கு 34-வது புதிய பகுதி தண்டனைகளை விதிக்கிறது.

(9) வாரியத்தின் ஆண்டு நிர்வாக அறிக்கை சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கப்பட வேண்டுமென 35-வது புதிய பகுதி விதிக்கிறது.

[திரு. என். வி. நடராசன்] [1972 ஆகஸ்ட் 21

(10) வாரியத்தைக் கலைத்து நிர்வாகத்தை அரசு மேற்கொள்ளும் கால அளவு முதற்கண் ஆறு திங்கள் எனவும் அவ்வாறு கலைத்திருப்பதை நீட்டிப்பது மேலும் ஆறு திங்களுக்கு மேற்படலாகாது எனவும் விதிக்கும் வகையில் 3-வது பழைய பகுதி அதாவது 36-வது புதிய பகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு செய்துள்ள மாறுதல்கள் இச்சட்ட வரைவின் நோக்கங்களையும் பரப்பெல்லையையும் விரிவுபடுத்தியுள்ளன என்பதை சுட்டி குறிப்பிட விழை கிறேன். இணை ஆய்வுக்குழு திருத்தியவாறுள்ள இச்சட்ட வரைவினை ஆலோ சனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இந்த அவையினரைக் கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, தொழிலாளர் நலனுக்காக, அவர் களுடைய வெல்ஃபேருக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு மாநிலத்திலே ஏற்பட்டுக்கொண்டுவரும் தொழிற்சாலைகளும், தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டுவரும் நிலையில் அவரவர்கள் வாழுகின்ற பகுதிகளிலே அவர்களுக்கு வசதியான வீடுகளோ, ஓய்வு இடங் களோ இல்லாமல் அது ஒரு பிரச்னையாக வளர்ந்துகொண்டு வருகின்ற நேரத்திலே இம்மாதிரியான ஒரு சட்டம் வருவதும், அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் சரியாக நிறைவேற்றப்படுவதும் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆனால் இப்பொழுதேகூட பல தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களின் நலனுக்கென்று பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக் கான ரூபாய்கள் செலவிடப்படுவதாக நாம் கணக்குகளிலே பார்க்கிறோம். ஆனால் ஆங்காங்கே பார்த்தால் அது தொழிலாளர்களின் நலன்களுக்கு என்பதைவிட அங்குள்ள நிர்வாகிகளின் விருப்பத்தை அனுசரித்து அந்தப் பணம் செலவிடப் படுகிறது என்பதுதான் உண்மை. பல தொழிற்சாலைகளிலே தொழிலாளர் களின் கவனத்திற்கு வராத நாடகங்கள், மதபோதனைகள் போன்றவற்றிலே இருப்பினும் காரியங்களிலேகூட நடக்கிறது, அம்மாதிரியான காரியங்களுக்கு இந்தப் பணம் தான் செலவிடப்படுகிறது. மற்றும் தொழிலாளர்களின் நலன்களுக்கு விரோத மான பல காரியங்கள் செய்யப்படுவதற்கும் இந்தப் பணத்திலே கணக்கு எழுதப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இப்பொழுதுகூட பல தொழிற்சாலைகளிலே லேபர் வெல்ஃபேர் ஆபீசர் என்று ஒரு ஆபீசரை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் அந்த நிர்வாகத்தின் கையாட்களாக காரியங்களைச் செய்கிறார்களே தவிர லேபர் வெல்ஃபேர் என்ற அளவிலே ஒரு தொழிற்சாலையில்கூட காரியம் செய்வதில்லை



1972 ஆகஸ்ட் 21] [திரு. எம். சுரேந்திரன்]

என்று எனக்குத் தெரிகிறது. இம்மாதிரியான நிலைகளை மாற்றி நாம் காரியங் களைச் செய்யும்பொழுது இந்த [illegible] தொழிலாளர்களிடம் பணம் கோரிப்பெறுவது என்று [illegible] குறிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் களிடம் அப்படி அந்தப் [illegible] கோரிப்பெற வேண்டுமா என்பது யோசிக்கப்பட வேண்டும் [illegible] தெரிவித்துக் கொள்கிறேன். தொகை சிறிதுதான் என்றாலும் அந்தச் சிறு தொகையையும் அவர்களிடம் [illegible] தொழிற்சாலைகளில் [illegible] தொழிலாளர்களும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். [illegible] நல்லமுறையில் உற்பத்தியில் [illegible] தொழிற்சாலை கூடிய வேண்டும் என்று [illegible] நிர்வகிப்பவர்கள். தொழிற்சாலை களிலே [illegible] அந்தப் பொறுப்பையும் ஏற்று அவர்களே [illegible] தலைக்குத் தேவையானதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு [illegible] ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வருகிறது. [illegible] மதிப்பு குறைவதாலும், விலையின் ஏற்றம் [illegible] ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டிருக்கும் [illegible] குறைந்து கொண்டிருக்கும் வருகிறது. அப்படி [illegible] அது ஒரு 'கேப்' ஆக, அது நிலையில் அதிலிருந்து [illegible] ஆகவே இந்த வெல்ஃபேர் ஒரு துண்டாக [illegible] கவனத்தையும் செலுத்தி நடவடிக்கைகளிலேயே தொழிலாளர்கள் [illegible] முன்னேற்றத்திற்காகப் உற்பத்தியைப் பெருக்கி [illegible] முன்னேற்றத்திற்காகவும் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் [illegible] இந்தக் காரியங்கள் நடை பயன்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் [illegible] காசையும் பெறுகின்றன. [illegible] அந்தக் காரியத்தைச் எதிர்பார்க்காமல் [illegible] சட்டம் அமைய வேண்டும். செய்ய வேண்டுமென்று [illegible]

அதோடு தொழிற்சாலை என்று சொல்லும்பொழுது ஏதோ பஞ்சாலைகள், [illegible] போன்ற இம்மாதிரியான [illegible] மற்றும் கெமிகல் தொழிற்சாலைகள் [illegible] தொழிற்சாலைகளில், கெமிகல் தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் அந்தத் தொழிற்சாலைகளில், கெமிகல் தொழிற்சாலைகள் போன்றவைகளிலே ஆரோக்கியத்திற்கு மிகவும் கெடுதலாக அதிலிருந்து வரும் வாயு, அதிலிருந்து வரும் தண்ணீர், அதிலிருந்து வரும் மற்ற அம்சங்களெல்லாம் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை மிகவும் கெடுக் கிறது. அப்படிப்பட்ட இடங்களில் இந்த வெல்ஃபேர் அமைப்பு அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

அதுமட்டுமல்லாமல் எங்கெங்கு லாபத்திற்காகத் தொழிற்சாலைகள் நடத்தப் படுகின்றனவோ அங்கெல்லாம் இந்த ஃபண்டின் அதிகாரம் பரவ வேண்டும். குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் இதிலே சேர்க்கப்பட வேண்டிய அம்சமாக எடுத்துக்கொள்ள வேண்டும். யார் யாருக்கு சரியாக உற்பத்தியாக வேண்டுமென்று விரும்புகிறார்களோ, யார் யார் காரியங்கள் சரியாக நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் முழுவதும் இதிலே சேர வேண்டியவர்களாகக் கருதப்பட வேண்டும். இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு நாம் அமைக்கும் போர்டு அவைகள் சரியாகச் செயல்பட்டால்தான் நம்முடைய நோக்கம் நிறைவேறும். பல சட்டங்களைச் செய்கிறோம், நல்ல நல்ல அம்சங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அவைகளைச் செயல்படுத்தும் பொழுது அந்த நல்ல அம்சங்களெல்லாம் செயல்பட முடியாமல் வேறுபல தடைகள், வேறுபல நெருக்கடிகள், வேறுபல செல்வாக்குகள் இவைகளெல்லாம் வந்து சேர்கின்றன. இவைகளை நினைவில்கொண்டு, தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதை நிறைவேற்றி, போர்டை அமைத்து, என்ன நல்ல நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறதோ அந்த நல்ல நோக்கம் சரியாக நிறைவேறுகிறதா என்பதைக் கண்காணித்து சரியாக நிறைவேற்றப்படுவதற்கான காரியங்கள் நடைபெற வேண்டும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், பொதுவாக சில மசோதாக்கள் வரும்பொழுது அந்த மசோதாக்களில் இருக்கும் ஷரத்துகளைப் பார்ப்பதும், அவைகளில் குறை என்ன என்று பார்ப்பதும் தான் என்னுடைய நோக்கமாக இருக்கும் என்று தாங்கள் நினைத்துவிடக்கூடாது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே மகாராஷ்டிரத்திலே இம்மாதிரியான ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு நல்லமுறையிலே ஒரு ஃபண்ட் அமைத்து அங்கே அதற்கான பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், சொந்தமான இடங்கள் போன்றவைகளை வைத்திருக்கிறார்கள். அதேமாதிரிதான் குஜராத்திலேயும் இருக்கிறது. அந்த அளவிற்கு தமிழகத்திலும் ஒரு அமைப்பு ஏற்பட வேண்டும். லேபர் வெல்ஃபேர் ஃபண்ட் என்று உருவாக்கி, அதன்மூலம் தொழிலாளர்களுக்கு ஓய்வு போன்றவைகளுக்கு வகை செய்ய அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்திருக்கிறது. உதாரணமாக இந்த ஃபண்டிலிருந்து செலவழிக்கக்கூடிய

Community and social education centres, vocational training, community necessities, entertainment and other forms of recreation, convalescent homes for tuberculosis patients, holiday homes





in health resorts, part-time employment for housewives of employees, pre-schools, nutritious food to children of employees, etc.,

இம்மாதிரி பல காரியங்களை தொழிலாளர்களுக்குச் செய்து வைக்க, சில தொழிற்சாலைகளிலும், சில எஸ்டாபிளிஷ்மெண்டிலும் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அமைக்கக்கூடிய போர்டிலேகூட தொழிலாளர்களுக்கு எத்தனை பிரதிநிதிகளோ அம்மாதிரி முதலாளிகளின் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்றும், அமைச்சரவர்களே தலைவராக இருக்க வேண்டுமென்றும், சட்டமன்றத்திலே இருப்பவர்கள்கூடப் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்ற அம்சங்கள் இதில் வந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் நான் ஆலோசனையாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் இங்கு பலபேர்கள் கொடுத்திருக்கும் அவர்களுடைய சாட்சியத்திலிருந்து பார்த்தால் தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அமைப்பிற்குள் வருவதற்கு எவ்வளவு தயக்கம் காட்டுகிறார்கள் என்பது அவர்களுடைய சாட்சியத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இந்தச் சட்ட அமைப்பு, எஸ்டாபிளிஷ்மெண்ட் என்று சொல்லும்பொழுது

establishment which government may by notification declare to be establishment for the purpose of this Act.

என்று பிளான்டேஷனையும் அங்கே சேர்த்திருக்கிறது. ஆகவே நமக்கு அதிகாரம் இருக்கிறது.

Plantation as defined in clause (f) of Plantation Labour Act 1951.

இதுவும் ரொம்பவும் அருமையான கருத்துதான். சாதாரணமாக நான்கூடத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். சினிமா தியேட்டர் அல்லது ஃபேக்டரி ஆக்டில் வராமலிருக்கும் எஸ்டாபிளிஷ்மெண்ட் யாவையும் கொண்டு வர வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

ஆனால் 'Establishment' which Government may by notification declare to be establishment for the purpose of this Act.

என்பது ரொம்ப பொருத்தமான விஷயம். அதேநேரத்தில் ஏற்கனவே சில தொழில் கேந்திரங்களிலே. சில தொழிற்சாலைகளிலே இம்மாதிரியான ஃபண்ட் அமைத்து உதவி செய்கிறார்கள்.

அந்த உதவி சரியாகச் செய்யப்படுகிறதா என்பதைப்பற்றிக் கண்காணிக்க வேண்டும். குறிப்பாக, ஹார்வி நிர்வாகத்தில் பணியாற்றுகிற

தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சாட்சியம் சொல்லியிருப்பதைப் பார்க்கும் போது அவர்கள் 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பது தொழிலாளர்களுக்கு எந்த முறையில் பயன்படுகிறது என்று பார்த்தால் ஒரு பள்ளிக்கூடம் நடத்துவது தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த அளவுக்கு லிமிட் பண்ணு மல் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை இந்த ஃபண்டில் சேர்க்க வேண்டும். பொதுவாக ஒரு கொள்கையை ஏ.ஐ.டி.யு.சி. ல் வைத்திருக்கிறார்கள். the social security schemes and all the welfare schemes must be non-contributory. All

இன்றைக்கு தொழிலாளர்களுக்கான எந்தத் திட்டங்களாக இருந் தாலும் அந்தத் திட்டத்தில் ஈடுபடுகிற தொழிலாளர்களும் பணம் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது என்ற கருத்தை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு திட்டத்திற்கு ஒரு தொழிலாளி ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், முதலாளி இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும். அரசு அதற்குத் தக்கவாறு மூன்றோ, பின்னுமோ பணம் கொடுக்கவேண்டுமென்ற முறை இருக்கிறது. முதலாளி மூன்று ரூபாய் என்றும் தொழிலாளர்களுக்கு ஒரு ரூபாய் கூட இல்லையென்ற நிலை ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஏற்படும். வெல்ஃபேர் பண்டில் தொழி லாளர்கள் கட்டும் பணத்திற்கு ஈடாக முதலாளியும் கட்டி விடுவார் ஆகும் போது அந்தப் பணத்தைப் பெறக்கூடிய நிலை இருக்கிறது

எங்களுக்கு தொழில் அதிபர்கள் பேரில் பிரியம் இல்லாமல் இருக்கலாம். ராஜபாளையம் மில்ஸ், ஆலுக்கம்பாட்டியில் இருக்கும் பிஸ்கட் பாக்டரி இரண்டும் சேர்ந்த ராம்கோவில் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். வருடத் திற்கு ஒரு முறை கோடைக்கானலில் ஓய்வு பெற தொழிலாளர்களை அழைத்துச் செல்லுகிறார்கள். தொழிலாளர்கள் பணம் கொடுக்க வேண்டியதில்லை. குற்றாலத்திற்கும் அழைத்துச் செல்லுகிறார்கள். இப்படிச் செய்யக்கூடிய இந்த முதலாளிகளை இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்ல வேண்டும்.

ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியில் கோட்ட முதலாளிகளைப் பார்த்து 'ஏன் இந்த மாதிரி செய்யக்கூடாது?' என்று கேட்டவுடன் ஏற்கனவே ப்ளாண்டேஷன் ஆக்ட்படி செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன; இதையெல்லாம் செய்ய முடியாது என்று சொன்னார்கள். இந்தமாதிரி ப்ளாண்டேஷன் தொழிலாளர்களுக்கெல்லாம் ஓய்வு வசதி கிடைக்கக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டும். பி. & சி. மில்லில் செய்யச் சொல்ல



வேண்டும். மேட்டூர் பாக்டரியில் செய்யச் சொல்ல வேண்டும். இதிலே அரசியலோ, தொழிற்சங்கப் போட்டியோ இல்லாத அளவுக்கு எப்படிச் செயல்பட வேண்டுமென்பதைப் பொறுத்து இந்த போர்டின் வெற்றி இருக் கிறது. இந்த போர்டை சீக்கிரமாக அமைக்க வேண்டும். இதற்கான திறுவனங்களை உண்டாக்கி, ஸ்டாஃப் முதலியவைகளை எல்லாம் ஏற்பாடு செய்து தீவிரமான முறையில் காரியமாற்றக் கூடிய அளவுக்கு செய்ய வேண்டு மென்று கூறி பொதுவாக இந்த மசோதாவை தொழிலாளர்கள் வரவேற் பார்கள்; இதைத் துரிதமாக அமல் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கா. வேழவேந்தன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதாவை நெஞ்சார, மனமார வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொழிலாளர்களுக்காகக் கொண்டு வந்திருக்கின்ற பல்வேறு நலச் சட்டங்களில் தலையான சட்டமாக இந்த நல நிதிச் சட்டம் புதிய மைல் கல்லாக வந்திருக்கிறது. மாநிலயம் போன்ற மாநிலங்களில் இதுபோன்ற சட்டங்கள் இருந்தாலும் அவற்றில் இருந்தெல்லாம் மிகச் சிறப்பான அம்சங்களை எடுத்து புதிதாக, விரிவுபடுத்தப் பட்ட வகையில் நல நிதிச் சட்டம் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு அக் கறை காட்டி பல புதிய பகுதிகளைச் சேர்த்தார்கள் என்பதை நான் சொல்லித் தான் ஆக வேண்டும். இந்த அமைப்பில் முதலாளிகள் தரப்பில் இருந்து சிலபேர், தொழிலாளிகள் தரப்பில் இருந்து சிலபேர் இடம் பெறுவதோடு கூட சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறப் போகிறார்கள். ஆண்டுக் காண்டு அதனுடைய அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்து எதிர் காலத்திலே தொழிலாளர்களுக்கான சலுகைகள் எவை எவை விட்டுப் போய் விட்டன, மேலும் என்னென்ன சலுகைகள் தரப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விவாதித்து முடிவு எடுக்க இந்த மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் புதிய சூழ்நிலையில், சிறப்பான வகை யில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னது மாதிரி முதலாளிகள் பணம் இருந்தாலும் மனம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். பாலன்ஷீட்டில் இருக் வருமான வரிக் கணக்குக்காகச் செய்யப்பட்ட காரியங்களாகத்தான்

இதுவே தவிர, உண்மையாகப் பார்த்தால் அந்தப் பணிகள் நிறைவேறவில்லை. நீண்டகாலமாகத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சொல்லி வந்தார்கள். அவற்றை எல்லாம் பட்டியல் போட்டு அமைச்சர் அவர்கள் கொடுத்து விட்டார்கள். திரு. தங்கமணி அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். பல்வேறு திட்டங்களில் நர்சரி ஸ்கூல்கள் தொழிலாளர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும்.... பணக்கார வீட்டுக் குழந்தைகள்பாதிரி அவர்கள் குழந்தைகளும் நர்சரி பள்ளிகளில் படிக்கும் நிலை ஏற்பட வேண்டும். உடல் அடிபட்டு, இளைத்துப் போய்விட்டவர்கள் ஓய்வு பெற ஓய்வு விடுதிகள் அமைக்கப்பட வேண்டும். இப்படி பல புதிய அமைப்புகளை ஏற்படுத்துவதுபற்றி இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது மகிழ்ச்சியான ஒன்றாகும்.

இதற்கு ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்... தொழிலாளர்கள் தரப்பில் இருந்து ஒரு ரூபாய் கூட நிதி வாங்கக்கூடாது என்று சொன்னார்கள். நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவன், நான் பதில் சொன்னாலும் ஆளும் கட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னாலும் ஒன்றுதான். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தங்கமணி அவர்கள் இதற்குப் பதில் சொன்னார்கள். முதலாளிகள் இரண்டு ரூபாய் கொடுக்கும்போது தொழிலாளர்கள் ஒரு ரூபாய் கொடுத்தால்தான் அதில் அவர்களுக்கு அக்கறை இருக்க முடியும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இரண்டு ரூபாயை மூன்று ரூபாயாக மாற்ற வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. ஏற்கனவே பராவிடன்ட் பண்ட் நிதிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாரமாக வருகிறது என்று சொன்னார்கள். அவற்றையெல்லாம் பார்க்கும்போது இரண்டு ரூபாய் என்று அமைக்கப்பட்டிருப்பது பொருத்தமானதாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக நல்ல எதிர்காலத்தை, ஒளிமயமான எதிர்காலத்தை காண வழியில் பெரிக் கொண்டுபோகும் நடைமுறையில் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. ஜெர்மன் போன்ற நாடுகளில் எப்படி தொழிலாளர்கள் ஐந்து நாட்கள் பணி புரிந்து பின்னர் மீதி இரண்டு நாட்களுக்கும் தங்களுக்கு புதிய சொர்க்கத்தை உண்டாக்கிக் கொள்ளுகிறார்களோ அந்த முறையில் இங்கும் புதிய ஓய்வு விடுதிகள், வண்ண வண்ண விடுதிகள் எல்லாம் அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் ஓய்வு பெற வழி வகுக்கப்பட்டிருக்கிறது. பல நல விதிமுறைகள் பட்டியல் மூலம் தொழிலாளர் மத்தியில் மதிப்பைப் பெற்றோம். இப்போது இந்தச் சிறப்பான சட்டத்தைக் கொண்டு வந்த அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல் வெகு விரைவாக இந்த





வாரியம் அமைக்கப்பட்டு செயல்படத் துவங்க வேண்டும், பல்வேறு ஆக்கப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை நெஞ்சார வரவேற்று பாராட்டுதலைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அவையின்முன் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தொழிலாளர் நல மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைப் பொறுக்குக் குழு பரிசிலனை செய்து கொண்டிருக்கும்போது சொல்லியிருக்கிறார்கள் 'நமது மாநிலம் குஜராத் போன்ற மற்ற பல்வேறு மாநிலங்களை விட தொழிலாளர்கள் நலத்தைப் பொறுத்தமட்டில் மிகப் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறோம்' என்று கூறியிருக்கிறார்கள். உண்மையை ஏற்றுக்கொண்டமைக்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை நாம் பின்தங்கியிருந்தாலும் கூட நிச்சயமாக மற்ற மாநிலங்களைப் போல் எந்த அளவுக்கு தொழிலாளர்களுக்கு நன்மை புரிகின்ற சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமோ அவற்றை எல்லாம் நிச்சயமாக நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு அவற்றையெல்லாம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தக் கருத்தின் ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு முற்போக்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கூட இது ஒரு முற்போக்கான சட்டமாக இருந்தாலும் கூட, நிறைவேற்றப்பட்ட முற்போக்கான சட்டங்கள் எல்லாம் அமல் நடத்துகின்ற முறையைப் பார்க்கும்போது நிச்சயமாக தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டங்களால் நன்மை வரக்கூடிய அளவுக்கு அமல் நடத்தப்படவில்லை என்ற குறையைத் தெரிவிக்க விரும்புகிறேன். பல்வேறு சட்டங்கள் தனியார் துறைக்கும் அரசு நிறுவனங்களுக்கும் இடையே அமல் நடத்தும்போது அரசு நிறுவனங்களுக்கு ஒரு முறையைக் கையாள்கிறோம். தனியார் துறைக்கு இன்னொரு முறையைக் கையாள்கிறோம்.

எந்த அளவிற்கு தனியார் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு நன்மை வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அந்த அளவிற்கு அரசாங்க நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் நன்மை வரவேண்டும் என்ற சட்டத்தை அமல் நடத்தும்போது அரசாங்கம் அதை நன்கு கண்காணிப்பதில்லை, அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று கூற விரும்புகிறேன். அடுத்தபடியாக, இந்த மசோதா வாயிலாக ஏற்படுத்தியிருக்கிற நிதியானது

எந்த வகையில் செலவிடப்படவேண்டும் என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு இன்னும் நேரடியாக நன்மை பயக்கும் அளவில் இந்தப் பணத்தைச் செலவு செய்தால் நல்லதாகயிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல்கள் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கப்படுகிறது.

THIRU K. T. K. THANGAMANI : This is the first reading of the Bill. There are some amendments also. This can be taken up tomorrow. Why should we be asked to sit till 2'0 Clock.

THIRUMATHI. T. N. ANANDANAYAKI : It can be taken up tomorrow.

MR. DEPUTY SPEAKER : It seems that every Member is unanimously accepting this Bill. There are only one or two amendments. Can we not continue for some time? Tomorrow we are having Supplementary Budget.

THIRU K. T. K. THANGAMANI : After supplementary budget, this can be taken up.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாளை துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பிறகு இந்த மசோதாவை எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

255. Notification issued with G.O. Ms. No. 187, Excise and Prohibition, dated the 10th July 1972, making a rule under section 18 (1) of the Tamil Nadu Excise Act, 1971 to prohibit employment of children or young persons. (Laid on the Table of the





House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).

256. Notification issued with G.O. Ms. No. 186, Excise and Prohibition, dated the 10th July 1972, making a rule relating to the arrest of persons and seizure or search of vehicles by Excise officers with reference to section 39 of the Tamil Nadu Excise Act, 1971. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

257. Notification issued with Roc. No. 110671/72-E5, dated the 6th June 1972, in regard to extension of section 286 and other relevant provisions relating to vital statistics under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the area within the jurisdiction of the Dharapadavelu Town Panchayat of North Arcot District. (Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

258. Notification issued with G.O. Ms. No. 3097, Home, dated the 15th November 1971, in regard to certain amendments the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

259. Notification issued with G.O. Ms. No. 185, Excise and Prohibition, dated the 10th July 1972, in regard to authorisation of officers other than Commissioner of Excise to enquire into cases for confiscation of articles. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

B. Reports, Notifications and Other Papers.

85. Notification issued with G.O. Ms. No. 713, Health, dated the 24th March 1972, making the Tamil Nadu Medical Termination of Pregnancy Regulations, 1972.

## இணைப்பு

[413-ம் பக்கத்தில் 233-ம் எண்ணுடன் [illegible] வெளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1971–72-ஆம் ஆண்டில் [illegible] போக்குவரத்துத் துறை 17 புதிய வழித்தடங்களைத் தொடங்கியது. இவ்வழிகளில் 40 பேருந்துகள் [illegible]. இவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண். (1) | வழித்தட எண். (2) | வழித்தடம். (3) | இந்த வழித்தடத்தில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை. (4) | இந்த வழித்தடம் தொடங்கப்பட்ட நாள். (5) |
|---|---|---|---|---|
| 1 | 512 | [illegible]-மண்டபம் | 1 | 1971 டிசம்பர் முதல் தேதி. |
| 2 | 516-அ | [illegible] | 1 | 1971 [illegible] 22-ந் தேதி. |
| 3 | 521 | [illegible]செங்கோட்டை | 2 | 1971 நவம்பர் 30-ந் தேதி. |
| 4 | 537-அ | [illegible] | 1 | 1971 [illegible] 25-ந் தேதி. |
| 5 | 565 | கோயம்புத்தூர்–திருநெல்வேலி | 4 | 1971 நவம்பர் 12-ந் தேதி. |
| 6 | 566 | [illegible]–கோயம்புத்தூர் | 2 | 1972 மார்ச் 13-ந் தேதி. |
| 7 | 567 | [illegible]–சிதம்பரம் (வழி) தஞ்சாவூர் | 1 | 1971 டிசம்பர் 5-ந் தேதி. |
| 8 | 568 | [illegible]–சிதம்பரம் (வழி) அரியலூர் | 1 | 1971 [illegible] 5-ந் தேதி. |
| 9 | 569 | [illegible]–புதுச்சேரி | 2 | 1971 [illegible] 5-ந் தேதி. |
| 10 | 570 | [illegible]–பொள்ளாச்சி | 2 | 1971 [illegible] 5-ந் தேதி. |
| 11 | 571 | [illegible]–இராமநாதபுரம் | 2 | 1971 [illegible] 5-ந் தேதி. |
| 12 | 572 | [illegible]–இராமேசுவரம் | 2 | 1971 [illegible] 30-ந் தேதி. |
| 13 | 573 | [illegible]–குமிளி | 1 | 1971 [illegible] 30-ந் தேதி. |
| 14 | 574 | [illegible]–பழனி | 2 | 1971 [illegible] 22-ந் தேதி. |
| 15 | 575 | [illegible]–மண்டபம் | 2 | 1971 [illegible] 22-ந் தேதி. |
| 16 | 576 | [illegible]–திருநெல்வேலி | 4 | 1971 டிசம்பர் 22-ந் தேதி. |
| 17 | 555-அ | [illegible]–சேலம் | 10 | 1971 [illegible] 22-ந் தேதி. |







In the year 1971–72 the Tamil Nadu State Transport Department opened the following seventeen new routes with forty buses.

| *Serial number.* (1) | *Route number.* (2) | *Route.* (3) | *Number of buses introduced on the route.* (4) | *Date of introduction of route.* (5) |
|---|---|---|---|---|
| 1 | 512 | NAGERCOIL-MANDAPAM | 1 | 1st December 1971. |
| 2 | 516A | MADRAS-TIRUVANNAMALAI | 1 | 22nd December 1971. |
| 3 | 521 | MADURAI-SHENCOTTAH | 2 | 30th November 1971. |
| 4 | 537A | MADRAS-TIRUTHANI | 1 | 25th December 1971. |
| 5 | 565 | COIMBATORE-TIRUNELVELI | 4 | 12th November 1971. |
| 6 | 566 | MADRAS-COIMBATORE | 2 | 13th March 1972. |
| 7 | 567 | TIRUCHIRAPALLI-CHIDAMBARAM *via* Thanjavur. | 1 | 5th December 1971. |
| 8 | 568 | TIRUCHIRAPALLI-CHIDAMBARAM *via* Ariyalur. | 1 | 5th December [illegible] |
| 9 | 569 | TIRUCHIRAPALLI-PONDICHERRY | 2 | 5th December 1971. |
| 10 | 570 | TIRUCHIRAPALLI-POLLACHI | 2 | 5th December 1971. |
| 11 | 571 | TIRUCHIRAPALLI-RAMANATHAPURAM | 2 | 5th December 1971. |
| 12 | 572 | MADURAI-RAMESWARAM | 2 | 30th November 1971. |
| 13 | 573 | MADURAI-KUMILI | 1 | 30th November 1971. |
| 14 | 574 | MADRAS-PALANI | 2 | 22nd December 1971. |
| 15 | 575 | MADRAS-MANDAPAM | 2 | 22nd December 1971. |
| 16 | 576 | MADRAS-TIRUNELVELI | 4 | 22nd Dece[illegible] |
| 17 | 555A | TIRUCHIRAPALLI-SALEM | 10 | 22nd December [illegible] |

61572